# கலைஞரின்
# கடிதங்கள்



40

13.11.2006 - முதல்
24.11.2007 - வரை

சீதை பதிப்பகம்

# கலைஞரின் கடிதங்கள்

## தொகுதி - 40

## 13.11.2006 - 24.11.2007

கி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகன் நூலகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
ஆய்வுக்கான அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

**GOWRA PUTHAGA MAIYAM**

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

**கௌரா ஏஜென்ஸீஸ்**

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

**GOWRA AGENCIES**

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

# கலைஞரின் கடிதங்கள்

# KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**


எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
**ISBN** :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
**ISBN** :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூலக
நிலையம்
சென்னை-118
அண்ணா அறிவாலயம்



# அம்மாவுக்கு....

## கௌரா பதிப்பகக் குழுமம்

**மு.க. ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

# அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா – கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன – மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

# பதிப்புரை

## அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

**பதிப்பகத்தார்**

# உள்ளே...


| தலைப்பு | ஆண்டு | பக்கம் |
|---|---|---|
| 3244. மண்ணில் புதைந்த மரகத மணிச்சுடர்! | 13-11-2006 | 23 |
| 3245. பிறவிப் பயன் பெற்றேன்! | 15-11-2006 | 27 |
| 3246. கொள்கை மறவர் குருதி குழைத்துக் கட்டிய கோட்டை! | 17-11-2006 | 32 |
| 3247. “கிஷன்” வாயிலாகக் கிடைத்த நிகழ்வு! | 18-11-2006 | 38 |
| 3248. பொய்யுரைத்துப் புலம்புவோர் புலம்பட்டும்! | 27-12-2006 | 43 |
| 3249. சிங்கக் கூட்டமெனச் சிலிர்த்தெழுவீர்! | 3-1-2007 | 48 |
| 3250. “ஒற்றைக்கலம்” எனினும் உளமார்ந்த வாழ்த்து என்பேன்! | 15-1-2007 | 52 |
| 3251. ஆண்டுதோறும் காண்போம்; இந்த இன்பம்! | 17-1-2007 | 55 |
| 3252. பாய்வோம் வாரீர்; பந்தயக் குதிரைகளாக! | 4.2.2007 | 58 |

| | | |
|---|---|---|
| 3253. அண்ணா தீட்டிய “நீதி தேவன் மயக்கமும்”; அந்நாள் நிகழ்வுகளும்! | 18-2-2007 | 66 |
| 3254. சங்கே முழங்கு! | 22-2-2007 | 75 |
| 3255. துணையின்றி வந்த துன்பம்! | 13-3-2007 | 78 |
| 3256. பன்னீர்செல்வம் தந்த பல் உடைக்கும் பதில்! | 17-3-2007 | 83 |
| விளக்கக் கூட்டங்கள்; விரிவாக - விரைவாக! | 26-3-2007 | 88 |
| 3258. பொய்யர்கள்; எச்சரிக்கை! | 27-3-2007 | 92 |
| 3259. நிலம் என்னும் நல்லாள் நகும்! | 28-3-2007 | 97 |
| 3260. இலவு காத்த கிளியாக மாட்டோம்! | 31-3-2007 | 103 |
| 3261. எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தது! | 1-4-2007 | 108 |
| 3262. முருக்க மரம் ஏறுகிறார்; முன்னாள் முதல்வர்! | 9-4-2007 | 113 |
| 3263. நியாயந்தானா; நீங்களே சிந்தியுங்கள்! | 14-05-2007 | 121 |
| 3264. வராதா? வரக் கூடாதா? | 25-05-2007 | 129 |
| 3265. கருத்துக் கணிப்பா? கருத்துக் கடுப்பா? | 27-5-2007 | 134 |
| 3266. கோட நாடு எஸ்டேட்டில் கோணிப் புளுகு ராணி! | 6-6-2007 | 139 |

| | | |
|---|---|---|
| 3267. விகடனின் வேதனையும், விளக்கமும்! | 9-6-2007 | 144 |
| 3268. “ஜோக்கர்” அணி ஆக்குவதா? | 20-6-2007 | 150 |
| 3269. அன்று சொன்னதும் - இன்று நடப்பதும்! | 22-6-2007 | 154 |
| 3270. வெற்றி நமதே! வெற்றி நமதே! | 27-6-2007 | 158 |
| 3271. சொன்னதைச் செய்திடும் நன்னெறி அரசு! | 29-6-2007 | 161 |
| 3272. மூடி மறைக்க முடியாத முரண்பாடுகள்! | 2-7-2007 | 166 |
| 3273. வெற்றி மலர்ப் பூங்கொத்து வழங்குவோம்! | 3-7-2007 | 173 |
| 3274. ஆகும் வழி எது? ஆகா வழி எது? அறிந்து செயல்படுவோம்! | 15-7-2007 | 178 |
| 3275. பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழனல்ல - இந்த அரசு! | 18-7-2007 | 186 |
| 3276. நிலமற்ற ஏழை விவசாயிக்கு நிலம் வழங்கும் நலமிகு திட்டம்! | 25-7-2007 | 190 |
| 3277. வங்கம்; கேரள சாதனைகளின் வழிதொடருவோம்! | 30-07-2007 | 195 |
| 3278. நிலை ஒன்று தான்; ஆனால் நினைவுகள்? | 08-08-2007 | 203 |
| 3279. அமர்த்தியா சென் ஆய்ந்து அறிவிப்பது என்ன? | 10-8-2007 | 209 |

| | | |
|---|---|---|
| 3280. காலம் நெருக்குகிறது! | 15-8-2007 | 215 |
| 3281. போராட்டமா? பொம்மலாட்டமா? | 24-8-2007 | 218 |
| 3282. பூத்துக் குலுங்கும்;<br>பார்த்து மகிழ்வோம்? | 25.08.2007 | 224 |
| 3283. “குருகுல”த்தில் கோலாகல<br>விழா? | 13-09-2007 | 229 |
| 3284. “சுந்தர காண்டம்” சொல்வது<br>என்ன? | 28-9-2007 | 233 |
| 3285. என்றும் வளம் தரும் திட்டம்;<br>அன்றும் இன்றும்! (1) | 8-10-2007 | 239 |
| 3286. செந்தமிழ் நாடு சீரழிவதா? | 9-10-2007 | 246 |
| 3287. வாஜ்பாய் அரசு<br>வகுத்திட்ட வழியே தான்! | 10-10-2007 | 254 |
| 3288. திட்டம் நிறைவேற ஒன்றுபட்டு<br>உழைப்போம்! | 11-10-2007 | 263 |
| 3289. இளைஞர்களுக்கு வழி<br>விடுவோம்! (1) | 7-11-2007 | 273 |
| 3290. இளைஞர்களுக்கு வழி<br>விடுவோம்! (2)<br>பண்பாடும் வைராக்கியமும்! | 8-11-2007 | 276 |
| 3291. இளைஞர்களுக்கு வழி<br>விடுவோம்! (3)<br>சிங்கத்தின் குகையில் சிலந்தி<br>கூடுகட்டுவதா? | 10-11-2007 | 282 |

| | | |
|---|---|---|
| 3292. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (4) மறையாத வடுக்களும்; மரத்தின் நிலையான வளர்ச்சியும்! | 11-11-2007 | 288 |
| 3293. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (5) அண்ணா பேச்சு, குற்றால அருவி! கொஞ்சு தமிழ்ச் சிந்து! | 12-11-2007 | 296 |
| 3294. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (6) இளமை முழக்கிய பொதுமை முரசம்! | 13-11-2007 | 303 |
| 3295. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (7) இளைஞர்கள் - புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகள்! | 14-11-2007 | 309 |
| 3296. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (8) கரும்பு வெட்டும் தொழிலாளி; இரும்பு நெஞ்சப் போராளி! | 15-11-2007 | 317 |
| 3297. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (9) வெள்ளை இருட்டை விலக்க வந்த கறுப்பு நிலா! | 16-11-2007 | 325 |
| 3298. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (10) சாக்ரடீஸ் சாகாத சரித்திரம் | 17-11-2007 | 332 |

| | | |
|---|---|---|
| 3299. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (11) “சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்” (2) | 18-11-2007 | 340 |
| 3300. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (12) பூக்கள் நூறு பூக்கட்டுமே! | 19-11-2007 | 350 |
| 3301. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (13) வரலாறு காட்டும் வானவில் வண்ணங்கள்! | 20-11-2007 | 359 |
| 3302. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (14) உள்ளம் உலைக்களம்; உறுதி போர்க் கருவி! | 21-11-2007 | 367 |
| 3303. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (15) தன்னை வென்றவன்; தரணியை வென்றவன்! | 22-11-2007 | 375 |
| 3304. வரலாறு படைப்போம்; வாரீர் நெல்லைக்கு! | 23-11-2007 | 386 |
| 3305. இலட்சியக் கொடி ஏந்தி இளம் பிறைகளின் அணிவகுப்பு! | 24-11-2007 | 393 |

# 3244. மண்ணில் புதைந்த மரகத மணிச்சுடர்!

**உடன்பிறப்பே,**

வற்றாத கற்பனையும் - வளமான தமிழ்ப் புலமையும் கொண்ட தம்பி காளிமுத்து மறைந்து விட்டார். நமக்கு எதிர்வரிசைக்குச் சென்றார். இயற்கை எய்தினார் என்பதற்காக, மனித நேயம் மறந்தோமில்லை - மறுகணமே இரங்கற் செய்தி வெளியிட்டோம். அரசியல் கட்சிகளிடையே இந்தப் பண்பாடு நிலைத்திட வேண்டுமென்று தான் நடுநிலையாளர்கள், நல்லோர் அனை வருமே தமிழகத்தில் விரும்புகின்றனர். நிலைத்திருக்கிறது நம்மிடையே அந்தப் பண்பாடு என்பதினால்தான் நினைத்திருக்கிறோம் இன்னமும், அவர்களுக்கும் நமக்குமிடையே இருந்த நட்புணர்வை! தோழமையை, அதன் விளைவு தான், தம்பி காளிமுத்துவின் மறைவுக்காக நான் விடுத்த இரங்கல் அறிக்கை!

நாற்பது ஆண்டின் முன்னர், மதுரையில்,

ஒருநாள் மாலைப் பொழுதில் நடந்த புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சியில், காளிமுத்து, காமராசன் இருவரையும் எனக்கு அறிமுகப்படுத்தினார், நண்பர் முத்து! அதுமுதல் இருவரும் என்னை அணுப்பொழுதும் பிரியாதவராயினர் - அவர்களின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியும் கண்டு அக மகிழ்ந்தவன் நான் - அதற்குப் பின் இயக்கத்தில் வீசிய புயலில் அந்த இருவரும் என்னைப் பிரிந்தனர். ஆனால், "அண்ணன் தம்பி" உறவு எமை விட்டு அகலவில்லை. மனங் கேட்காமல்தான் மருத்துவமனைக்கே சென்று அவரைப் பார்த்து வந்தேன்.

என்னிடமும், என் எழுத்துகளின் மீதும் காளிமுத்து கொண்டிருந்த "காதல்" அளவிட முடியாதது என்பேன். அதெப்படிச் சொல்லுகிறாய்? எனக் கேட்கலாம்! ஆம்! நான் சொல்வது எழுத் துக்கு எழுத்து உண்மை என்பதை உணர்ந்து கொள்ள இதோ ஓர் எடுத்துக்காட்டு!

2001ல் ஜெயலலிதா ஆட்சிக்கு வருகிறார் - அப்போது சபாநாயகராகப் பதவிப் பொறுப்பு தம்பி காளிமுத்துக்கு வழங்கப்படுகிறது. உடன்பிறப்பே! உனக்குத் தெரியும்! தி.மு.க. ஆட்சி தொடங்கிய பிறகு ஒவ்வொரு நாளும் காலையில் பேரவை கூடும்பொழுது, சபாநாயகர், ஒரு திருக்குறளைப் படித்து அவையில் அதற்குப் பொருளும் கூறுவார். என்னைப் பொறுத்த வரையில், நான் அப்போது சட்டப் பேரவைக்குப் போவதில்லை என்பது உனக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு ஆசை - ஒவ்வொரு நாளும் அவைத் தலைவர் காளிமுத்து, எந்தக் குறள் உரையைப் படிக்கிறார் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்பதுதான் அந்த ஆசை! அதைத் தெரிந்து கொள்வதற்காக, அவையில் நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சிகள் பற்றிய விபரக் குறிப்புகளை நமது சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் கொண்டு வரச் சொல்லிப் படிக்கத் தொடங்கினேன்.

அவைத் தலைவராக காளிமுத்து வீற்றிருந்த அந்த ஐந்தாண்டு காலத்தில் - மிகப்பெரும்பகுதி நாட்களில் - அவர் என் குறள் உரையை (திருக்குறள் கலைஞர் உரை) படித்துத்தான் - அவையில் பொருள் விளக்கம் தந்திருக்கிறார். என் "குறள் உரை" பரிமேலழகர் உரையைப் போலப் பழைமை வாய்ந்ததும் அல்ல! வலிந்து தமது கருத்தைக் குறளில் திணிக்கும் சில தமிழ் அறிஞர்களின் உரை போன்றதுமல்ல!

"ஓ! இது பொருத்தமான பொருள்தான்" என்று பொதுவில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையது என்று பெரும் புலவர்கள் பலரும் பாராட்டிய உரையாகும் என்னுரை!

அந்த உரையைத்தான், அவையில் ஒவ்வொரு நாளும் அவைத் தலைவர் காளிமுத்து, படித்துப் பொருள் விளக்கம் கூறியிருக்கிறார்.

கருணாநிதி குறளுக்கு எழுதிய உரையைத்தான் பேரவையில் நாள்தோறும் சபாநாயகர் காளிமுத்து படிக்கிறார் என்பது எப்படியோ ஜெயலலிதாவுக்குத் தெரிந்து, அவர் காளிமுத்துவை அழைத்து மிரட்டிய பிறகு, ஜெயலலிதா, ஆட்சி முடிவடைவதற்கு சில மாதங்களுக்கு முன்பு வரையில், அதாவது 2005ஆம் ஆண்டு வரையில், காளிமுத்து, "கலைஞர் உரை"யாம் என்னுரையை

பயன்படுத்துவதைச் சில மாதங்கள் மட்டுமே நிறுத்திக் கொண்டார். இதுதான் நடந்த உண்மை. ஆதாரம் தேவை எனக் கருதுகிறவர்கள், கடந்த ஐந்தாண்டு காலச் சட்டப் பேரவை நடவடிக்கைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நாளும், குறளையும், குறள் உரையையும் சபாநாயகர் காளிமுத்து, எந்தப் புத்தகத்தை வைத்துப் பொருள் கூறினார் என்று பார்த்தால் ஆதாரம் கிடைத்து விடும்.

இதோ அழுத்தமான ஆதாரம்...

*“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து”*

என்ற குறளுக்கு டாக்டர் மு.வ. அவர்கள் எழுதியுள்ள உரை:-

“ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்புக்கு மட்டுமல்லாமல் ஒருவனுக்கு எழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும்”

( இது மு.வ. உரை )

நான் எழுதிய உரை வருமாறு :-

“ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்”

என்பதாகும்.

தம்பி காளிமுத்து, சபாநாயகராக இருந்து பேரவையில் விளக்கமளித்தது இந்த உரைதான்! அதனால்தான், என் தமிழ் மீதும், இலக்கிய ஆய்வின் மீதும் காதல் கொண்டவர் காளிமுத்து என்று சொன்னேன் - இப்போதும் சொல்கிறேன்.

மறைந்தவர்களின் குறை தவிர்த்து, நிறையைப் போற்றுவதே மனித நேயப் பண்பு - அந்தப் பண்பினை நமது பண்பாளர் பழனிவேல்ராஜன் மறைந்த போதும், கண்மணி முரசொலி மாறன் மறைந்த போதும் ஒரு வரி அனுதாபச் செய்திகூட வெளியிட மறந்த அ.தி.மு.க. நண்பர்களிடம் நாம் எதிர்பார்க்க முடியாதுதான்.

நாம் கட்டிக் காக்கும் அந்தப் பண்பை உணர்த்திட, தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் உள்ள வேறுபாட்டை

வெளிப்படுத்த, தம்பி காளிமுத்துவின் மூச்சல்லவா அடங்கியிருக்கிறது!

அந்தோ! அந்தத் தமிழ் மூச்சு, நின்று விட்டதே! மானசீகமாக என்னை அண்ணனாக ஏற்று, மறைமுக அன்பு செலுத்திய அந்த மரகத மணிச்சுடர் மண்ணில் புதைந்து போனதே!

அன்புள்ள,
மு.க.

13-11-2006

# 3245. பிறவிப் பயன் பெற்றேன்!

உடன்பிறப்பே,

“படித்துவிட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் கூட, எவ்வித வேலை வாய்ப்பும் பெற்றிடாத இளைஞர்களில், பத்தாம் வகுப்பு படித்து முடித்தவர்களுக்கு, மாதம் 150 ரூபாயும், மேல் நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு, மாதம் 200 ரூபாயும், பட்டதாரிகளுக்கு, மாதம் 300 ரூபாயும் உதவித் தொகையாக வழங்குவோம்”

என்று 2006ஆம் ஆண்டு தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததை, நாம் தேர்தலுக்குப்பிறகு நிறைவேற்றமாட்டோம் என்றும், இதெல்லாம் வெறும் காற்றில் கலக்கும் கீதம் என்றும் எதிர்த்தரப்பினர் எக்காளக் குரல் எழுப்பி வந்ததை நீயும் கேட்டிருப்பாய், நானும் கேட்டிருக்கிறேன்.

இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி, கிலோ அரிசி இரண்டு ரூபாய், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் ரத்து, சத்துணவு சாப்பிடும் சிறுவர்களுக்கு வாரம் இரண்டு முட்டைகள் என்றெல்லாம் வாக்குறுதி அளித்தது எப்படி மக்களை ஏமாற்றும் செயலோ, அதைப் போலத்தான் இந்த உதவித் தொகை வழங்குகின்ற அறிவிப்பும் ஆகும் என்று மேடை அதிர, வானம் அதிர கூச்சல் எழுப்பியவர்களை நீயும் அறிவாய்; நானும் அறிவேன்.

உறுதி மொழிகள் ஒவ்வொன்றையும் கல்லில் செதுக்கிய எழுத்தாகக் கருதி, கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு, படிப்படியாக நாம் நிறைவேற்றி வருவதை நாடு போற்றுகின்றது; நல்லோர் வாழ்த்துகின்றனர்.

அறிவித்த வாக்குறுதிகளை அன்னியில், மக்கள் தொடர்புடைய மற்றும் பல வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற நிலையில், வாக்களித்த மக்களின் மனமுவந்த பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உள்ளாகியிருக்கின்ற இந்த அரசின் சார்பில், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தைத்

தமிழகத்தில் பல பகுதிகளில் நமது அமைச்சர் பெருமக்களைக் கொண்டு நிறைவேற்றி வைத்த பட்டியலை நீ படித்தறிவாய்; பார்த்தும் அறிவாய்!

திருச்சியில் கடந்த 11ஆம் தேதி கடலெனத் திரண்டு இளைஞர்கள், தாய்மார்கள், பெரியோர், ஆன்றோர், சான்றோர் கூடிய மாபெரும் விழாவில், நான் முன்னின்று உதவி நிதி 14,089 பேருக்கு வழங்கப்பட்டது.

திருவள்ளூரில் நமது பேராசிரியர் அவர்களும், மீன்வளத் துறை அமைச்சர் தம்பி கே.பி.பி. சாமி அவர்களும் கலந்து கொண்ட விழாவில், 5,218 பேர், கிருஷ்ணகிரியில் மின்துறை அமைச்சர் ஆர்க்காட்டார் கலந்து கொண்ட விழாவில், 4,496 பேர் இந்த நிதி உதவியைப் பெற்றனர்.

மதுரை மாநகரில் உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் வாயிலாக நிதி உதவி பெற்றோர் 11,684 பேர்.

தென் சென்னையிலும், வட சென்னையிலுமாக மத்திய அமைச்சர்கள் தம்பி டி.ஆர். பாலு, தம்பி தயாநிதி மாறன், தமிழக அமைச்சர் தம்பி பரிதி இளம்வழுதி ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் உதவி நிதி பெற்றவர் எண்ணிக்கை 5,528 பேர்.

பெரம்பலூர் விழாவில் மத்திய அமைச்சர் தம்பி ஆ. இராஜா வாயிலாக 7,548 பேர், தஞ்சை விழாவில் கூட்டுறவு அமைச்சர் தம்பி கோ.சி. மணி மூலமாக 6,039 பேர், சேலம் விழாவில் வேளாண்மைத் துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி மூலமாக 8,293 பேர், வேலூர் விழாவில் பொதுப்பணித் துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் வாயிலாக 9,783 பேர் இந்த நிதியைப் பெற்றுள்ளார்கள்.

உயர் கல்வித்துறை அமைச்சர் தம்பி பொன்முடி, விழுப்புரத்தில் 9,661 பேருக்கு நிதி உதவி வழங்கியுள்ளார். கடலூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கியது 8,824 பேருக்கு! கோவையில் ஊரகத் தொழிற் துறை அமைச்சர் தம்பி பொங்கலூர் பழனிச்சாமி வழங்கியது 2,774 பேருக்கு. திண்டுக்கல்லில் அமைச்சர் தம்பி இ. பெரியசாமி, 6,317 பேருக்கு வழங்கியுள்ளார். சுற்றுலா அமைச்சர் தம்பி சுரேஷ் ராஜன், 10,080 பேருக்கு கன்னியாகுமரியில் உதவித் தொகை தந்துள்ளார்.

உணவு அமைச்சர் தம்பி எ.வ. வேலு, திருவண்ணாமலையில் 9,242 பேருக்கும், வீட்டு வசதித் துறை அமைச்சர் தம்பி சுப. தங்கவேலன், இராமனாதபுரத்தில் 5,956 பேருக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்., 6,342 பேருக்கும், காஞ்சிபுரத்தில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தம்பி அன்பரசன், 5,407 பேருக்கும் உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டுள்ளனர்.

அறநிலையத்துறை அமைச்சர் தம்பி கே.ஆர். பெரியகருப்பன், சிவகங்கை விழாவில் 5,690 பேருக்கும், கைத்தறி அமைச்சர் தம்பி என்.கே.கே.பி. இராஜா, ஈரோடு விழாவில் 4,230 பேருக்கும், இந்த இடைக்கால நிதியினை வழங்கியுள்ளார்கள்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தம்பி தங்கம் தென்னரசு, 3,629 பேருக்கு நிதி வழங்கும் கரூர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளார். வணிக வரித் துறை அமைச்சர் தம்பி உபயதுல்லா, நாகையில் 6,074 பேருக்கு நிதி வழங்கியிருக்கிறார். நெல்லையில் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் தம்பி மைதீன் கான், 8,923 பேருக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் தம்பி வெள்ளக்கோவில் சாமிநாதன், நாமக்கல் விழாவில் 8,527 பேருக்கும், தர்மபுரி விழாவில் சமூக நலத் துறை அமைச்சர் தங்கை டாக்டர் பூங்கோதை, 6,732 பேருக்கும், தூத்துக்குடியில் கால்நடைத் துறை அமைச்சர் தங்கை கீதா ஜீவன், 5,018 பேருக்கும், தேனியில் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் தங்கை தமிழரசி, 6,893 பேருக்கும், திருவாரூரில் பால் வளத் துறை அமைச்சர் தம்பி மதிவாணன், 4,080 பேருக்கும், நீலகிரியில் கதர்த் துறை அமைச்சர் தம்பி ராமச் சந்திரன், 4,540 பேருக்கும், புதுக்கோட்டையில் பேரவைத் துணைத் தலைவர் தம்பி வி.பி. துரைசாமி, 7,169 பேருக்குமாக மொத்தம் அன்று ஒரே நாளில் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 766 பேருக்கு நிதி உதவி வழங்கி - தேர்தல் அறிவிப்பை, நமது அரசு, வெறும் வாய்ச் சொல்லாக இல்லாமல் வாய்மைச் சொல்லாக ஆக்கி, சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற பொன்மொழி, பொய் மொழி அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

"சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலை யற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள், அரசே அதுதான் காலக் குறி" என்று நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்,

எழுதிக் காட்டிய அந்த ஈட்டி முனை வாசகத்திற்கு உண்மை யான பொருள் புரிந்த உழவர்கள், உழைப்பாளிகள், படித்து வேலையற்றோர், பட்டம் பெற்றும் பார்ப்பதற்கு பணியற்றோர் எனும் பெரிய பட்டியலில் இடம் பெற்றோருக்கு, நம்மாலான இந்தச் சிறிய தொண்டினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முக மலர்ச்சியோடு ஆற்றுவதற்குக் கிடைத்த அற்புதமான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறோமே என்ற பசுமை நிறைந்த மகிழ்ச்சி, உள்ளத்தின் ஒரு ஓரத்தில் பாலையில் தோன்றும் கானல் நீர் போல காட்சி தர, அந்தக் கரை காணா இன்பத்துடன் 11ஆம் தேதி காலை நிகழ்ச்சி ஒன்றுக்குக் கிளம்பினேன், என் மகள் கனிமொழி என்னுடன் வர!

பனிமொழி பகர்ந்து, தனி அன்பினைக் கலந்து, என்றும் எனை வரவேற்கத் தவறாத என் ஆருயிர் இளவல், இன்று தன்மானத் தோழர்களால் தமிழர்க்கு தலைவரென அழைக்கப்படும் வீரமணியாரின் தீரமிகுத் திறனால் போற்றிப் பாதுகாக்கப்படும் தந்தை பெரியார் தந்து விட்டுச் சென்ற மாட மாளிகை அல்ல! கூடக் கோபுரம் அல்ல! அவற்றையும் மிஞ்சும் வண்ண மிகு எண்ணங்கள் தவழ் வசீகர வளாகத்தைக் கண்டேன். ஆங்கமைந்த "கலைவாணர் அரங்கம்" ஒன்றில், ஓங்கதிர் சூரியனாம், உண்மை ஒளிர் தலைவனாம், உலகம் போற்றும் பெரியாரை, ஒவ்வொரு இளங்கலைஞர்களின் இசையில், நடனத்தில், ஆட்டத்தில், அனைத்திலும் அடியேன் கண்டு ஆனந்தப் பரவசமுற்றேன். அருவியில் குளித்தோர்க்கும் அந்த இன்பம் கிடைப்பதில்லை. அடாத அரசியல் கொடும் வெயிலில் காய்ந்திடும் எனக்கு, அந்த அருவிச் சோலையில் கிடைத்த புத்துணர்ச்சியைத்தான் என்னென்று புகழ்வேன்?

இருபது ஆண்டின் முன்னே இளவல் வீரமணி எனையழைத்து, ஆங்கு சோலை நடுவே அய்யாவின் சிலையை நாட்டச் சொன்னார். அந்தச் சிலை, இன்றைக்கும் அங்கேயிருந்து என்னை அரு கணைத்து உச்சி முகர்ந்தது போல் கண்ட உணர்வு எத்துணை மகிழ்ச்சியானது! எப்படி என் உடலைச் சிலிர்க்க வைத்தது?

அய்யாவுக்குப் பிறகு, அவர் ஆரம்ப காலந் தொட்டு சேர்த்து வைத்த ஆஸ்தி, பாஸ்தி, கட்டி வைத்த கட்டிடங்கள், அறிவுக் கூடங்கள், விட்டுச் சென்றுள்ள கொள்கைகள், வீரமிக்க அறை கூவல்கள் இத்தனையும் கட்டிக் காக்க யாருளர் என்று

நமக்கெல்லாம் எழுந்த ஐயப்பாட்டை இதோ, நானிருக்கிறேன் என்று எடுத்துக் காட்டி, ஏறு போல் நம்மை நிமிர்ந்து பார்க்கின்ற என்னரும் இளவல், பெரியாரின் பெருந் தொண்டர், சுயமரியாதைச் சுடர், தன்மான முரசு, வீரமணியார் - என் கண்ணிலும், அவர் கண்ணிலும் நீர் துளிர்க்க - அது ஆனந்தப் பன்னீராக இருக்க - ஒருவரையொருவர் தழுவிக் கொண்டோம். உமது முயற்சிகள் வெல்க - இங்கு வளரும் பூங்கொடிகள், பூஞ்செடிகள், புதுமை மணம் பெறுக! இன்று போல் என்றென்றும் இது பகுத்தறிவு பண்ணையாகத் திகழ்க என்று வாழ்த்தினேன்; அவரும் வாழ்த்தினார்.

அறிவுப் பணி, அதற்குத் தேவையான அமைப்புப் பணி, அதிலும் ஓர் கட்டுப்பாட்டுப் பணி என இப்படி கடமைப் பணியாற்றுகிற, சுயமரியாதை இயக்கக் கண்மணியாம் வீரமணியாரின் நிர்வாகப் பணியை நேரிலே காணும் வாய்ப்பு! இனியும் பல முறை இந்த வாய்ப்பு எனக்குக் கிட்ட வேண்டும் என பேராவலுடன் விடை பெற்றுக் கொண்டேன்.

ஆங்கொரு நூலகத்திற்கு, விழா மேடையில் இறுதிக் கட்டமாக ஓர் அறிவிப்பு! "கலைஞர் கருணாநிதி நூலகம்" என்று அது அழைக்கப்படும் என்று!

திணறிப் போனேன்! தேன் குடத்தில் தூக்கிப் போட்டு விட்டார்களேயென்று! பெரியாருக்குக் காலணியாய் இருப்பது போல், பெரியார் பெயரில் அமைந்துள்ள அந்தப் பூங்காவில், நூலகம் என்ற ஒரு நுண்ணிய கொடியாக இருந்து விட்டுப் போகிறேன்! அது எனக்குப் பிறவிப் பெரும் பயன்தான்!

அன்புள்ள,

**மு.க.**

15-11-2006

# 3246. கொள்கை மறவர் குருதி குழைத்துக் கட்டிய கோட்டை!

**உடன்பிறப்பே,**

ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு திட்டம் தொடக்கம் - ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு சாதனை - நேற்று ஒரு நாள் மட்டும் முதல் அமைச்சர் அலுவலகத்திலிருந்து ஒன்பது அரசுச் செய்தி வெளியீடுகள் - 22 ஏழை மாணவர்களுக்குக் கல்விச் செலவுக்காக தலா 25 ஆயிரம் ரூபாய் - 2002ஆம் ஆண்டு மதுரையில் பெற்றோரை இழந்த கேரள மாநில இளம்பெண் படிப்பு - பராமரிப்புக்காக ஒரு லட்சம் ரூபாய் - முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காக மத்திய அமைச்சருக்குக் கடிதம் - வடலூர் வள்ளலார் சத்ய ஞான சபை குறித்த விளக்கம் - அரசு மருத்துவமனைகளைத் தொடர்பு கொள்ள இலவசத் தொலைபேசி வசதி - மறைமலை அடிகளார் பெயர்த்திக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் - அரசு அலுவலர்களுக்கு விடுமுறை அதிகரிப்பு - பரிதிமாற் கலைஞர் அவர்களின் இல்லம் அரசுடைமை - முல்லைப் பெரியாறு அணையை நேரில் பார்வையிட தம்பி துரைமுருகனை அனுப்பி வைத்தல் போன்ற செய்தி வெளியீடுகள் - நல்லாட்சி நடக்கிறது என்று பாராட்டு - புகழ் மாலை - இதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை சில பேருக்கு!

நாம் நேரடியாக எதிர்த்தால் “பரம்பரை யுத்தத்தில் ஒரு பகுதி” என்பது பச்சை உண்மை ஆகிவிடுமேயென்று, விபீஷண, சுக்ரீவர்களை விட்டுவிடக் கூடாதென்று பிடித்துக் கொண்டார்கள்.

அவர்களை அழைத்து “ஐஸ்” வைத்து, அவைக் களத்தில் நிறுத்தி - பட்டுப் பரிவட்டங்கள் சாத்தி, “அட்டாக்” பண்ணுங்கள்! தி.மு.க.வையென்று உசுப்பிவிடுகிறார்கள். அப்படி ஜோடிக்கப்பட்ட ஒரு காட்சியை, அண்மையில், மைலாப்பூர் மண்டபம் ஒன்றில் காண நேரிட்டது.

விபீஷண, சுக்ரீவர்கள் என்று, யார் யாரைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், அய்யோ பாவம்! பட்டுக்கோட்டை நமது பழைய சீனுவாசன்! ஆம்! அண்ணாவை ஒட்டிக் கொண்டு, அவரைக் கொட்டிக்கொண்டேயிருந்த 'செந்தேள்'! - அண்ணா இருக்கும் வரையில், பட்டம், பதவி, பணம், பாராளுமன்றம் என்று பல தடவை அனைத்தையும் பெற்றுக் கொண்டு, அண்ணா மறைந்த பிறகு, இதுவரை அவர் நினைவு நாளைக்குக் கூட அந்தக் கல்லறை பக்கம் செல்லாத - பல "கட்சித் தாவி"யாம் - பரம யோக்கிய சிகாமணி - அவர், ஜனநாயகம் பற்றி அளந்திருக்கிறார் படிப்படியாக! மரக்கால் மரக்காலாக! - கலம், கலமாக! - மூட்டை மூட்டையாக!

ஒரு முறை இவர், தென் சென்னை எம்.பி. தேர்தலில் நின்றார் - அவருக்காகப் பிரச்சாரம் செய்ய வெளியூரிலிருந்து காரில் வேக வேகமாக வந்து பெருங்கூட்டத்தில் நுழைகிறேன், அப்போது மேடையிலிருந்து ஒலி பெருக்கியில் இவர் என்னை வரவேற்கிறார் - எப்படித் தெரியுமா?

"இதோ! தென்றல் வந்து விட்டது - தீயோர் தீட்டும் திட்டங்களைத் தவிடு பொடியாக்கும் தீர மிகு நமது தானைத் தலைவர் வந்துவிட்டார் - ஜனநாயகக் காவலர் - மதவாதத்தின் மண்டையில் அடிக்கும் மாவீரர் வந்துவிட்டார்!"

இப்படி முழங்கிக் கொண்டிருந்தவரைக் கையமர்த்தி நிறுத்தச் சொல்லிவிட்டு, நான் மேடையேறிப் பேசுவதற்குள் பெரும்பாடாகிவிட்டது. இப்போது அவர்தான் மயிலாப்பூர் சென்று - மேடையில் நின்று - எனக்கு ஜனநாயகம் கற்றுக் கொடுக்கிறார் - அய்யோ, பாவம்! அவரென்ன செய்வார்! அவாள் வைத்துள்ள 'ஐஸ்' அவரை இந்த ஆட்டம் ஆட வைக்கிறது.

வேடிக்கை பார் உடன்பிறப்பே! அவாள் எல்லாம் சேர்ந்து அவாளே விளம்பரம் செய்வாளாம்! ஆட்சியை "அட்டாக்" பண்ண ஒரு கூட்டமென்று! முறைப்படி அனுமதி பெற்றுக் கூட்டம் நடத்த முன் வராமல், பிறகு அவாளே அந்தக் கூட்டத்தை நடத்தாமல் நிறுத்தி விட்டு, பழியை அரசின்மீது போடுவாளாம்! "பர்மிஷன்" கொடுக்கவில்லையென்று!

பொய் சொல்லாதீர் - இதோ அனுமதி! எப்போது வேண்டுமானாலும் கூட்டத்தை நடத்துக என்று கூப்பாடு

போட்டுச் சொன்ன பிறகும், ஒரு வாரத்தில் மீண்டும் நடத்துவோம் என்று சொன்னவர்கள், அப்படி நடத்தாமல் மூன்று வாரம் கழித்து, முதலில் கலந்து கொள்வதாக விளம்பரம் செய்யப் பட்டவர்களில் பாதிப் பேர் இல்லாமலேயே, இப்போது குண்டு சட்டிக்குள் குதிரையோட்டுகிறோம் பார் என்று பத்து நாளைக்கு சேர்ந்தாற்போல் ஒரு நிறுவனத்தில் பணியாற்றாதவர்கள் - நன்றி யென்றால் எந்தக் கடையில் விற்குமென்று கேட் பவர்கள் - எந்தக் கட்சியிலாவது இடம் பிடித்து அந்தக் கட்சித் தலைமையையே ஆக்ரமிக்கத் திட்டமிடுபவர்கள் - ஒரு அமைப்பில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டே, அங்கே முடிந்த வரை சம்பாதித்துக் கொண்டே - அந்த அமைப்பு பற்றி அயலாரிடம் அவதூறு பேசுகிறவர்கள் - யாராவது நம்மை அழைத்து பேசச் சொல்ல மாட்டார்களா என்று ஏங்கித் தவிப்பவர்கள் என்று இப்படியொரு கும்பலை கூட்டி வைத்துக் கொண்டு -

கொள்கை மறவர் கொட்டிய குருதியை குழைத்துக் கட்டிய இந்தக் கோட்டையை இடித்திடக் கிளம்பியுள்ளனர்.

உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்து, அந்த மன்றங்களில் மண்டலக் குழுக்கள், நிலைக் குழுக்கள்கூட அமைந்து விட்டன.

ஆனால் இந்தக் கும்பலுக்கு, வயிறு எரிவதை அடக்கிக் கொள்ள முடியவில்லை - அதிகாரப் பொறுப்புக்கு, ஆட்சிப் பொறுப்புக்கு நடைபெறும் எல்லாத் தேர்தல் முறைகளும் அப்பழுக்கற்றவையல்ல! ஏதேனும் ஓரிரு குறைகள் எழலாம் - எழக் கூடும் - அதனையும் எச்சரிக்கையுடன் கவனித்து, இனி திருத்திக் கொள்ள வழி காண இயலும்.

இப்போது நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் மொத்தம் 155 வார்டுகளிலுமா வன்முறை? குறைபாடு? தவறு? இல்லை! சில வார்டுகளில் மட்டுமே! அதிலும் சில "பூத்"களில் மட்டுமே! (ஆனால் அந்தக் கூட்டத்தில், ஒட்டு மொத்த தமிழகத்தில் நடந்தது உள்ளாட்சித் தேர்தலே கிடையாது என்று முழங்கியிருக்கிறார்கள்.)

அப்படி நடந்ததாக புகார் தரப்பட்ட சில இடங் களில்கூட, மறு தேர்தலுக்கு ஆணையிடப்பட்டு நடந்து முடிந்திருக்கிறது.

"ஆகா! வன்முறை! ஆபத்து ஜனநாயகத்துக்கு! என்றலறும் பழைய பட்டுக்கோட்டை சீனுவாசன்களும் -

அவர்களின் மருங்கிருந்து கலகமூட்டும் மாலன், பாலன்களும், தமிழ்நாட்டிலேயே பணியாற்றாத ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரும், மடித்து வைத்துள்ள தின ஏடுகளை எடுத்துப் படித்துக் காட்டுகிறார்கள்.

அடடா! என்ன இது? என்ன ஏடு இது? இந்த ஆண்டு (2006) ஏடு என நினைத்து, பாரியாள் பழைய (2001) ஏட்டையல்லவா எடுத்துக் கொடுத்திருக்கிறாள்! என் செய்வது? அந்த ஏடுகளை இவர்கள் படிக்காவிடினும், நாம் படித்துப் பார்ப்போம்!

இரண்டு ஏடுகள் :-

ஒன்று, "இந்து" - மற்றொன்று, இன்று அவர்களின் பேச்சை பக்கம் பக்கமாக வெளியிட்டுள்ள "தினமலர்".

**"இந்து"** 17.10.2001

"சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் கவுன்சிலர்கள் தேர்தலின்போது ஆயுதம் தாங்கிய கும்பல், பூத்துகளைக் கைப்பற்றியதோடு, நகரின் சில பகுதிகளில் வாக்காளர் களை அதிக அளவில் பயமுறுத்தி, கொசப் பேட்டையில் உள்ள தி.மு.கழகத் தேர்தல் அலுவலகத்திற்கும் தீ வைத்தனர். இந்தக் கூட்டம் வாக்குச் சீட்டுகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அ.தி.மு.க. மற்றும் ஒரு சில சுயேச்சைகளின் ஏஜெண்டுகளைத் தவிர, மற்ற கட்சிகளின் ஏஜெண்டுகளை யெல்லாம் விரட்டிவிட்டு, ஓட்டுப் பெட்டிகளுக்குள் அந்த வாக்குச் சீட்டுகளைத் திணித்துக் கொண்டனர். இது ஒரு திட்டமிட்ட செயலாகும். காவல் துறையினர் அங்கே இருந்தபோதிலும், ஆயுதம் தாங்கிய இரண்டு கும்பல்கள் சுதந்திரமாக பல வாகனங்களில் ஏறிக் கொண்டு பூத்துகளுக்குள் நுழைந்து கட்சிகளின் ஏஜெண்டு களையும், தேர்தல் அதிகாரிகளையும் பயமுறுத்திவிட்டு கள்ளவாக்குகளைப் போட்டதையும் தடுக்க முடியவில்லை. திருவான்மியூர் பகுதியிலே 8 மணி அளவிலேயே வன்முறை தொடங்கி விட்டது. ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வின் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் ஆயுதம் தாங்கிய கூட்டம், மாநகராட்சிக் கட்டிடத்திலே உள்ள வாக்குச் சாவடிக்குள்

ஊடுருவியது. அவர்கள் மற்ற வேட்பாளர்களின் ஏஜெண்டுகளை வெளியே தள்ளி விட்டு, வாக்குப் பதிவு அதிகாரியிடமிருந்து பேலட் பேப்பர்களைப் பிடுங்கினர். மேயர் பதவிக்கான வாக்குகளை அவர்கள் முக்கியமாக பதிவு செய்து, வாக்குப் பதிவு அதிகாரி தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்த போதிலும், அதைப்பற்றி கவலைப்படாமல் வாக்குப் பெட்டிக்குள் அவைகளையெல்லாம் திணித்துவிட்டு ஓடிவிட்டனர்."

"தினமலர்" நாளேட்டில் வெளிவந்த செய்தியின் சுருக்கம் வருமாறு :-

"சைதாப்பேட்டை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், தென் சென்னை மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் தலைமையில், அ.தி.மு.க. வேட்பாளர் சங்கர் உட்பட 200 பேர் கொண்ட கும்பல், பள்ளியில் உள்ள அனைத்துப் பூத்துகளையும் இழுத்து மூடினர். பெண் தேர்தல் அதிகாரி உட்பட அனைவரையும் பார்த்து, இங்கு நடப்பதை வெளியே சொன்னா அட்ரஸ் கண்டுபிடிச்சு வந்து குடலை உருவுவோம் என்று கத்தியைக் காட்டி குண்டர் படை மிரட்டியது. இதை அடுத்து, தேர்தல் அதிகாரிகள் கை கட்டி, வாயை மூடிக் கொண்டனர். பின்னர் சாவகாசமாக கள்ள வாக்குகளை போஸ்ட் ஆபீசில் முத்திரை குத்துவது போல குத்தோ குத்து என்று 15 நிமிடத்தில் அனைத்து வாக்குகளையும் குத்தி முடித்தனர். பாதுகாப்புக்கு இருந்த ஐந்து போலீசாரும் கடைசி வரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்."

★★

உடன்பிறப்பே!

படித்தோம் - பழையபடி மடித்தோம்! இதை வீட்டுக்குக் கொண்டு போகவேண்டியதுதான்! இல்லையேல், நாட்டுக்கு நமது வண்டவாளம் வெளிச்சமாகிவிடும்! அது நம் - அம்மா ஆட்சி - அப்போது எதுவும் நடக்கலாம் - அது நம்மவா ஜனநாயகம்!

"தமிழக தி.மு.க. அரசை 'போஸ்ட்மார்ட்டம்' செய்ய வேண்டும்"

என்று பட்டுக்கோட்டையார் கத்தினாராம் -

உடனே ஓர் நொடியில் கூட்டம் திரும்பிப் பார்த்து, பட்டுக்கோட்டையாரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு, "படும் அய்யா! பட்டுக்கோட்டையாரே! உமது மூளையை இப்போது பரிசோதித்துப் பார்க்கிறோம்" என்றதாம்.

அதற்குள் எப்படியோ அந்த மூளைப் பரிசோதனையை மானசீகமாக முடித்து விட்ட ஒரு பகுத்தறிவு மருத்துவர்,

"உண்மைதான் - இந்த மூளையில் பெருங்கோளாறு! ஏறிய ஏணியை எட்டி உதைப்பது - வாழ்ந்த இடத்தை வஞ்சனையால் அழிக்கப் பார்ப்பது - இப்படிப் பல கோளாறுகள் இருப்பதால், இந்த மூளையை கிண்டிக் கிளறி இனியும் பரிசோதிக்காமல், இப்படியே நடமாடிப் பிழைத்துக் கொள்ள விட்டுவிடலாம்"

என்று உரத்த குரலில் கூறிவிட்டு, அங்கிருந்து அகன்றார்!

உடன்பிறப்பே! இன்றைய கடிதமும், இதன் இறுதியில் இணைந்த கற்பனையும் எதை வைத்து அமைந்தது என்பதை நீ அறிவாய்! எனவே அறிந்து கொள்ள வேண்டியவர்கள் அறிந்து கொள்ளவும், எச்சரிக்கை பெறவும் இவை பயன்படுமென்று நம்புகிறேன். கொள்கை மறவர் குருதி குழைத்துக் கட்டிய கோட்டை இது என்பதை, அந்தக் கும்பல் உணர்ந்து கொள்ளட்டும்! அதற்கேற்ப உன் பணி அமையட்டும்!

அன்புள்ள,

**மு.க.**

17-11-2006

# 3247. “கிஷன்” வாயிலாகக் கிடைத்த நிகழ்வு!

**உடன்பிறப்பே,**

கடந்த ஜனவரியில் தான் கர்நாடக மாநிலத்தில், கலையுலகில் ஒரு துருவ நட்சத்திரமாக வளர்ந்து வரும் இளஞ்சிறுவன் ‘கிஷன்’ என்னும் இயக்குநரின் திறமை பற்றியும், திரையில் 20க்கு மேற்பட்ட படங்களில் அந்த ஒன்பது வயதுச் சிறுவன் நடித்திருப்பதோடு, ஓரிரு படங்களை டைரக்ட் செய்வதையும் பற்றி எழுதிப் பாராட்டி யிருந்தேன்.

நேற்று அந்த இளம் பயிர் - ஆம், நாற்று - கிஷனும் அவர் தந்தையும் மற்றும் நண்பர்கள் சிலரும் என்னைக் காண்பதற்காகவும், அண்மையில் கிடைத்த “கின்னஸ்” விருதை என்னிடம் காட்டுவதற்காகவும் சென்னைக்கு வந்தனர். வாழ்த்து வழங்கினேன். படப்பிடிப்பு எப்படி நடத்துகிறாய் என்று வினவி, பதில் கேட்டு பரவசமுற்றேன். பாடியும் காட்டி, என் மீது பாசமும் காட்டி - “என்னை ஆசிர்வதியுங்கள்” என்று குனிந்து வணங்கிய கிஷனைக் கட்டியணைத்து, முத்தமீந்து நான் வாழ்த்து மழை பொழிந்த போது - அந்தச் சிறுவனுடன் வந்திருந்தோர் - கிஷனின் “பட டைரக்ஷன்” நிகழ்வு ஒன்றைச் சொல்லி வியந்தார்கள்!

> “படப்பிடிப்பு, ஸ்டுடியோவில் தொடங்குகிறது - கேமரா லைட் - நடிகர் - மைக் - எல்லாம் ரெடி! - “ஸ்டார்ட்” என்கிறார் இளம் டைரக்டர்! கேமரா ஓடுகிறது! அந்தக் காட்சியை,
>
> “கேமரா” முழுதும் பிடிப்பதற்குள் - இளம் டைரக்டர் “கட் கட்” என்கிறார். நடித்துக் கொண்டிருந்த பிரபல நடிகர் “ஜாக்கி ஷராப்” கிஷனைப் பார்த்து, ஏன்? என்ன தப்பு? ஏன் “கட்” சொல்லப் பட்டது?” என்கிறார்.
>
> டைரக்டர் கிஷன் சொல்கிறார் - “அய்யா! மன்னிக்கணும்- கதையில் நீங்கள் ஒரு முக்கிய மந்திரி - உங்களிடம் ஒரு கோப்பு, உங்கள் கையெழுத்துக்காக உங்கள் செயலர்

மூலம் கொடுக்கப்படுகிறது. நீங்கள் அதை வாங்கி - கோப்பில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்க்காமலே கையெழுத்து போடலாமா? அதனால்தான் நீங்கள் உடனே கையெழுத்து போட்டதால், "காட்சி சரியாக வராது" என்று "கட்" சொன்னேன்."

படப்பிடிப்பு அரங்கில் இருந்தோர் - அந்த பிரபல நடிகர் உட்பட அனைவரும் - ஆச்சரியத்தில் மூழ்கினார்களாம்.

இதை என்னிடம் அச்சிறுவனுடன் வந்தவர்கள் சொன்ன போது, நான் நினைத்துக் கொண்டது என்ன தெரியுமா?

பரவாயில்லையே! அந்த முக்கிய மந்திரி, படப்பிடிப்பில் கோப்பில் படிக்காமல் கையெழுத்துப் போடுகிறார். இங்கே நமது ஊரில் இருந்த முக்கிய மந்திரி, முக்கிய கோப்பு ஒன்றையே பார்க்காமல், மூன்று கோடி ரூபாய் கோட்டை விட்டிருக்கிறாரே என்று எண்ணிக் கொண்டேன்.

உடன்பிறப்பே! அது என்ன விஷயம் என்று கேட்கிறாயா? இதோ சொல்லுகிறேன் கேள் - கடந்த ஐந்தாண்டு கால அம்மையார் ஆட்சியில், ஆயிரக்கணக்கான கோப்புகள் முதலமைச்சர் கையெழுத்தில்லாமலே, நடக்க வேண்டிய காரியங்கள் முடங்கிப் போயின என்பதற்கு வரிசையாக ஆதாரங்களை எழுதிக் காட்டியுள்ளேன் அல்லவா? அந்த வரிசையிலே இப்போது "கிஷன்" வருகையை முன்னிட்டு, அந்தக் "கோப்பு" விவகாரத்தில் இன்னொரு ஆதாரத்தையும் இதோ தருகிறேன் :-

மத்திய அரசின் புதிய கல்வி தொழில் நுட்பத் திட்டத்தின்கீழ், ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளிகளுக்கு ஒலிநாடாவுடன் கூடிய வானொலிப் பெட்டிகளை வாங்குவதற்கும் மற்றும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை வாங்குவதற்கும் மைய அரசால் ஒதுக்கப்பட்ட தொகை, 3 கோடியே 10 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய். இதுகுறித்த கோப்புக்கு ஒரு நீண்ட கதை உள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 17-8-2000 அன்று நான் கையெழுத்திட்ட கோப்பின்படி, 85 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு 6100 வானொலி பெட்டியுடன் கூடிய ஒலி நாடாக் கருவிகளையும், மூன்று கோடி ரூபாய்க்கு 2000 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளையும் வாங்கி ஊராட்சி ஒன்றிய தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கிட பள்ளிக் கல்வித்

துறையின் சார்பில், 4-9-2000 அன்று ஆணைகள் வெளியிடப் பட்டன. மேலும், இதில் மாநில அரசின் பங்காகிய 75 இலட்சம் ரூபாய், பயனடையும் 2000 பள்ளிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து பெற்று, ஈடு செய்யப்பட வேண்டும் எனவும், மேற்படி வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் பகிரங்க ஒப்பந்தப் புள்ளி மூலம் வழக்கமான நிதி நடைமுறைகளைப் பின்பற்றி வாங்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

இந்த அரசாணையை 2001-2002ஆம் ஆண்டில் செலவழிக்கத் தக்க வகையில், மறு செல்லுபடி யாக்கம் (Revalidation) ஆணையும் வெளியிடப்பட்டது. 2001ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி மாறி, அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது.

தொடக்கக் கல்வி இயக்குநர், தனது 18-4-2002 நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்தப் புள்ளி மூலம் தொலைக்காட்சி பெட்டிகள் வாங்குவதில் ஏற்பட்ட சிரமத்தினைச் சுட்டிக் காட்டி, வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கும் பணியினைச் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரிடம் ஒப்படைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பி ஆணை வேண்டினார்.

இக்கருத்துரு பள்ளிக் கல்வித் துறையால் பரிசீலிக்கப்பட்டு, முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா அலுவலகத்திற்கு நான்கு முறை கையெழுத்திற்காகச் சுற்றனுப்பப்பட்டது. முதன் முதலாக 7.10.2002 அன்று சுற்றனுப்புக்கு அனுப்பப்பட்ட கோப்பில் கல்வி அமைச்சர் தம்பிதுரையும், நிதியமைச்சர் பொன்னையனும் முறையே 30.9.2002 மற்றும் 3.10.2002 அன்றும் கையெழுத்திட்டு, முதலமைச்சர் ஜெயலலிதா அலுவலகத்திற்கு அனுப்பினார்கள்.

முதலமைச்சர் கையெழுத்து இல்லாமலேயே, அவரது செயலாளர் 11.10.2002 அன்று கோப்பிலே ஒரு கேள்வியைக் கேட்டு, பள்ளிக் கல்வித் துறைச் செயலாளருக்குத் திரும்ப அனுப்பி விட்டார்.

முதலமைச்சர் அலுவலகம் கேட்ட கேள்விக்கு விவரமான பதிலை, துறையின் சார்பில் எழுதி, கோப்பு தயாரித்து கல்வி அமைச்சர் தம்பிதுரையும், நிதியமைச்சர் பொன்னையனும் 5.12.2002 மற்றும் 6.12.2002 ஆகிய நாட்களில் கையெழுத்திட்டு, 9.12.2002 அன்று முதல் அமைச்சருக்கு ஒப்புதலுக்காகக் கோப்பு

அனுப்பப்பட்டது. ஆனால், முதல் அமைச்சர் ஜெயலலிதா கையெழுத்திடவில்லை. 25.2.2003 வரை முதல் அமைச்சர் அலுவலகத்தில் ஓய்வு எடுத்துக் கொண்ட இந்தக் கோப்பு, துறைக்குத் திரும்ப அனுப்பப்பட்டது.

மறுபடியும் துறையிலே இந்தக் கோப்பு தயாரிக்கப்பட்டு, அதிகாரிகள் எல்லாம் வரிசையாக கையெழுத்திட்டு, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் செம்மலையும், நிதி அமைச்சர் பொன்னையனும் கையெழுத்திட்டு, 18.3.2003 அன்று முதல் அமைச்சரின் ஒப்புதலுக்காக அனுப்பினார்கள். 12.1.2004 வரை முதல் அமைச்சர் இந்தக் கோப்பில் கையெழுத்திடவில்லை. 12.1.2004 அன்று முதல்வரின் செயலாளர், மீண்டும் ஒரு கேள்வியை எழுப்பிக் கோப்பினை துறைக்கே திருப்பி விடுகிறார்.

அதன் பின்னர், நான்காவது முறையாக கோப்பு தயாரிக்கப்படுகின்றது. முதல் அமைச்சர் அலுவலகம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் எழுதப்படுகிறது. முறையே அத்தனை அதிகாரிகளும் கோப்பினை பார்த்து கையெழுத்திடுகிறார்கள். கல்வி அமைச்சர் செம்மலை அவர்கள், பத்திகள் 5, 6, 7 மற்றும் 8ல் உள்ள கருத்துருவினை ஏற்கலாம் என்று பரிந்துரை செய்து கையெழுத்திடுகிறார். நிதியமைச்சர் பொன்னையன், 25.1.2004 அன்று கையெழுத்திடுகிறார். அன்றையதினமே முதல் அமைச்சர் அலுவலகத்திற்குக் கோப்பு சென்றது. 21.9.2004ந்தேதி வரை முதல் அமைச்சர் அலுவலகத்திலே தூங்கிய கோப்பில் முதல்வர் கையெழுத்திடவே இல்லை. மாறாக, முதல்வரின் செயலாளர் 21.9.2004 அன்று அந்தக் கோப்பினை புதிய கல்வி அமைச்சர் சி.வி. சண்முகம் பார்த்த பிறகு, மீண்டும் முதல்வருக்கு அனுப்ப வேண்டுமென்று எழுதி திருப்பி அனுப்புகிறார்.

பின்பு முன்னாள் கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் ஆணையினைப் பெற்று, அவசரம் கருதித் திட்டத்தினை நிறைவேற்றலாம் என்று குறிப்பு எழுதி கல்வி அமைச்சர் சி.வி. சண்முகத்திற்கு 24.9.2004இல் அனுப்பப்பட்ட கோப்பில் அ.தி.மு.க. ஆட்சி மாறுகின்ற வரை முதல் அமைச்சர் ஜெயலலிதா கையெழுத்து போடவே இல்லை.

இதற்கிடையே மத்திய அரசு, அந்த அரசின் சார்பில் அளித்த நிதியினை பயன்படுத்தியதற்கான சான்றினை கேட்டும், பயன்படுத்தாவிட்டால், திரும்ப மத்திய அரசுக்கு நிதியை

ஒப்பளிக்கக் கோரியும், அல்லது நிதி அமைச்சகத்தின் வழி, மற்ற திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்கும் தொகையில் கழித்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்தது.

10.2.2006 அன்று மத்திய அரசு பிறப்பித்த ஆணையில், இந்தத் தொகையினை (3கோடியே 10 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயை) மற்றொரு திட்டமான Information and Communication Technology ICT திட்டத்திற்காக மத்திய அரசு அளிக்க வேண்டிய பங்குத் தொகையில் சேர்த்து அதனை ஈடுகட்டியுள்ளது.

எனவே மத்திய அரசு சார்பில் தமிழக அரசுக்கு ஒரு நல்ல திட்டத்திற்காக வழங்கப்பட்ட மூன்று கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை, அ.தி.மு.க. அரசின் அலட்சியம், தாமதம் காரணமாக குறிப்பிட்ட கிராமப்புற - மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவர் நலனுக்காகப் பயன்படுத்தப்படாத நிலைக்கு உள்ளாகித் திசை மாறிப் போனது தான் நமது மாநிலம் கண்ட பலன்!

★★

உடன்பிறப்பே,

கோப்புகளைப் படித்து விட்டுக் கையெழுத்துப் போட வேண்டும் என்று சின்னஞ்சிறு இளம் இயக்குநர் "கர்நாடகத்து கிஷன்" சுட்டிக்காட்டி, அவர் எடுத்த காட்சியையே மாற்றுகிறார் - தமிழக மக்களோ, கோப்பில் கையெழுத்துப் போடாத ஆட்சியையே மாற்றியுள்ளனர்.

சிறிய நிகழ்வு போல் தெரியும்! ஆனால், சிந்திக்க வைக்கும் நிகழ்வு! இளஞ்சிறுவன் இயக்குநர் "கிஷன்" வாயிலாகக் கிடைத்த நிகழ்வு!

அன்புள்ள,

மு.க.

18-11-2006

# 3248. பொய்யுரைத்துப் புலம்புவோர் புலம்பட்டும்!

**உடன்பிறப்பே,**

“மாறன்தான் மாநிலங்களவையில் எனக்கு ஆசான் என்று ஒவ்வொரு மேடையிலும் புகழ்ந்து பேசிவிட்டு, அந்த மாறன் மறைந்தபோது ஓடி வந்து குடம், குடமாய்க் கண்ணீர் வடித்துவிட்டு, இப்பொழுது முப்பது ஆண்டுகளுக்கு மேல் பாராளுமன்றப் பணி புரிந்த அந்த மாறனுக்கு டெல்லியில் சிலை அமைத்து, அதை திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் பிரதமர் திறக்கிறார் என்றதும், மாறனுக்குச் சிலை எடுக்க அவருக்கு என்ன தகுதி? அவர் சிறைச் சாலைக்குச் சென்றது உண்டா?”

- என்று உங்கள் பொதுச் செயலாளர் பேசி வருகிறாரே- மறைந்துவிட்ட ஒருவரைப் பற்றி இப்படிப் பேசுவது என்ன பண்பாடு?” என்று ம.தி.மு.க.வின் முன்னோடித் தலைவர் ஒருவரைக் கேட்டபோது, அவர் - நாத்தழுதழுக்க என்னிடம் சொன்னார், “நீங்கள் கேட்பது நியாயந்தான். நானே இதை அவரிடம் கேட்டு வருத்தப்பட்டேன் - மாறனுக்குச் சிலை வைப்பது பிடிக்கவில்லையென்றால் சும்மா இருந்துவிடலாமே - இதையெல்லாம் பேச வேண்டாமே என்றுகூடச் சொன்னேன். ஆனால் அவர் கேட்கவில்லை! அந்த “அம்மா” சொன்னதை அப்படியே சொல்ல வேண்டுமென்று நினைத்துச் செயல்படுகிறார்!”

இப்படி அவர் பதில் அளித்ததும் - “பாவம்! இவர் ஏதோ நாகரிகமாகவும் - நியாயமாகவும் - மனித நேயத்தோடும் அரசியல் நடத்த விரும்புகிறார்” என்று அந்த முன்னோடித் தலைவரைப் பற்றி எண்ணிக்கொண்டு திருப்தி அடைந்தேன்.

உடன்பிறப்பே! ம.தி.மு.க.வில் அண்மையில் ஏற்பட்ட குழப்பம் - அதற்கு தி.மு.க. மீதும் - இந்த அரசின் மீதும் பழிபோட முயன்று, அந்த முயற்சியில் படு தோல்வி அடைந்த படலம்,

இவற்றைப் பற்றியெல்லாம் சில விளக்கங்களை; சிந்திக்கத் தெரிந்தவர்களுக்காகவும், சிந்திக்க முடிந்தவர்களுக்காகவும் எழுதிக்காட்ட விரும்புகிறேன்.

ம.தி.மு.க. என்று புதுக்கட்சியை ஆரம்பிக்கும் முயற்சியில் முதல் வேலையாக, தி.மு.க.வின் தலைமை அலுவலகமான, அரும்பாடுபட்டுக் கட்டிய அண்ணா அறிவாலயத்தையும் - தி.மு.க. என்ற பெயரையும் - தி.மு.க. கொடியையும் - தி.மு.க. தேர்தல் சின்னமாம் 'உதய சூரியன்' சின்னத்தையும் கைப்பற்றுவோம் என்று எழுதியும், பேசியும், அறிக்கை விடுத்தும், இறுதியாகத் தலைமைத் தேர்தல் கமிஷன் வரையில் வழக்காடியும் பார்த்து - நீதியும், நியாயமும், ஜனநாயக முறைப்படி பெரும்பான்மை ஆதரவும் நம் பக்கம் இருந்ததால், கண்ணீரும் செந்நீரும் சிந்தி, களப்பலி பல கொடுத்துக் காத்திட்ட இந்தக் கழகத்தைக் காத்திட்டோம்.

அந்தக் காலகட்டத்தில் ஆட்சியிலிருந்த ஜெயலலிதா அம்மையாரை ஆட்சியிலிருந்து இறக்குவதே குறிக்கோள் எனக் கூறி, குமரி முனையிலிருந்து சென்னை வரையில் நடைப் பயணம் தொடங்கினார்கள். பயணம் சென்னையில் முடிந்த போது தமது முதல் எதிரி ஜெயலலிதாதான் என்றும், அவர் ஆட்சியை அகற்றுவோம் என்றும் சங்கற்பம் செய்தார்கள்.

அதற்குப்பிறகு ஆண்டு சில உருண்டோடி, தேர்தல்கள், அரசியல் திருப்பங்கள், அணி மாற்றங்கள் - அந்த விபரங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை.

காரணம், நமக்கும் ம.தி.மு.க.வுக்கும் இடையே உறவு நிலையே எழாது என்றிருந்த காலம் மாறி - அதற்கு மாறாக, உறவு நிலை அரும்பிய அந்தக் காலம் இருக்கிறதே! அதாவது 'பொடா' என்ற பயங்கர சட்டத்தின் பிடியில் ம.தி.மு.க. பொதுச் செயலாளரும், ம.தி.மு.க. முன்னோடி நண்பர்களும் ஜெயலலிதாவினால் சிக்க வைக்கப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்களே! அதற்குப் பிறகுதான் அந்தக் கொடிய அடக்குமுறையைக் கொள்கை ரீதியாக எதிர்த்து குரல் எழுப்பியும், 'தானாடாவிடினும் தன் தசை ஆடும்' என்ற மொழிக்கேற்ப, வேலூர் சிறைக்குத் தம்பி துரைமுருகனை அனுப்பி, ஆறுதல் கூறிடச் செய்தும் - அதற்குப் பிறகு நானே இரண்டு முறை வேலூர் சென்று காராக்கிரகத்துக்கு வெளியே இரண்டு நாள் காத்திருந்து, பின்னர்

நேர் காணலில் சந்தித்ததும், ஆறுதல் கூறியதும் - அப்போது சிறை அலுவலகத்தில் வடிக்கப்பட்ட கண்ணீரும் பற்றி, அந்தச் சிறை அதிகாரிகளைத்தான் கேட்க வேண்டும்.

'பொடா'வில் கைது செய்யப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு கோடி கையெழுத்துகள் திரட்ட முயற்சித்து, முதல் கையெழுத்தாக என்னுடைய கையெழுத்துத்தான் இடம் பெற வேண்டுமென்று, தன் கட்சியின் பொதுச் செயலாளருக்காக, அந்தக் கட்சியின் அவைத் தலைவரான எல்.ஜி.யும், அந்தக் கட்சியின் மற்றொரு துணைப் பொதுச் செயலாளருமான மல்லை சத்யாவும் தான் என்னிடம் நேரில் வந்து பெற்றுச் சென்றார்கள்.

அதைத் தொடர்ந்துதான் செஞ்சி ராமச்சந்திரன் இல்லத்தில் திருமணம். அவரது ஊரிலேயே மாநாடு போல நடந்த அந்த மணவிழாவில் நான் தலைமை வகித்துப் பேசும்போது என்ன குறிப்பிட்டேன் தெரியுமா?

> "தி.மு.க. - ம.தி.மு.க. இரண்டும் தனித் தனிக் கட்சிகள் - இரண்டும் ஒன்றாக இணைய முடியாவிடினும், ஏறத்தாழ கொள்கை அடிப்படையில் முரண்பாடு இல்லாத - கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் என்றும் - இந்தியக் கம்யூனிஸ்ட் என்றும் இரு கட்சிகளாக இருந்தாலும் அவை இரண்டும் பல பிரச்சினைகளில் பொதுவாக ஒன்றுபட்டு குரல் கொடுப்பது போல -நாமும் அவ்வாறு செயல்பட முடியும் - செயல்படலாம்"

இந்தக் கருத்தை நான் செஞ்சி வீட்டுத் திருமணத்தில் மட்டுமல்ல, சென்னை மாங்கொல்லையில் ம.தி.மு.க.வினர் நடத்திய "பொடா" கண்டனக் கூட்டத்திலும் வெளியிட்டேன். அப்போது வேலூர் சிறையில் இருந்தபடியே, இந்த என் கருத்தை ஆதரித்தும், வரவேற்றும் - ம.தி.மு.க. பொதுச் செயலாளரும் அவர் கட்சி ஏட்டில் கருத்து வெளியிட்டார்.

ஆனால் நான் வெளியிட்ட இந்தக் கருத்தினை, முழு மனத்துடன் ஆதரிக்க முடியாத ஒரு சிலர் ம.தி.மு.க.வில் இருந்த காரணத்தால், அக்கருத்து மெல்ல மெல்ல இருட்டடிப்பு செய்யப்பட்டு, ஏதாவது காரணங்கள், நொண்டிச் சாக்குகள் கூறப்பட்டு பகையே திட்டமிட்டு வளர்க்கப்பட்டது. இதில் சில

பத்திரிகைகளின் பங்கும், உபயமும் மிகவும் உண்டு.

அதன் விளைவாகத்தான் - திண்டுக்கல் தி.மு.க. மாநாட்டில் ஆறாகப் பெருகிய அவரது கண்ணீர் - விருதுநகர் மாநாட்டில் வீராவேசமாக "வீழ்த்துவோம் ஜெயலலிதா ஆட்சியை" என்று எழுந்த அவரது முழக்கம் - ஐந்தாறு மாத இடைவெளியில், திருச்சி மாநில மாநாட்டின் போது திசை திருப்பப்பட்டு விட்டது. திரும்பவும் ஜெயலலிதாவை ஆராதிப்பது - அர்ச்சித்துப் போற்றுவது - என்றும் வெட்டும் மின்னல் போல வேடம் மாற்றப்பட்டு விட்டது. அதுவரையில், அதாவது மாநில மாநாடு தொடங்கப்படும் வரையில், திருச்சி மாநாட்டு முகப்பில் அவரது 'கட் அவுட்' உருவங்கள் அகற்றப்படாமல் இருந்தன என்பதையும் கண்ணுள்ளோர் கண்டனர். ஒரே நாளில், ஒரே நேரத்தில் தி.மு.க. தலைமையுடனும் - அ.தி.மு.க. தலைமையுடனும் தொகுதி பேரம் பேசிய சாமர்த்தியம் வேறு யாருக்கு வரும்! அடடா! என்னே - அரசியலில் நேர்மை! பொது வாழ்வில் தூய்மை! இலட்சியத்தில் உறுதி! (அவரது கட்சியின் மூலக்கோஷங்கள்தான் இவை!)

1993 ஆம் ஆண்டு தி.மு.க.வில் என்ன குழப்பம் விளைவித்து அண்ணா உருவாக்கிய இந்த இயக்கத்தைச் சீர்குலைக்க எண்ணினாரோ, இப்போது அவருக்கே 'சரித்திரம் திரும்பும்' என்ற பொன்மொழியை, நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகள் நினைவூட்டியிருக்கத் தவறியிருக்க முடியாது!

இப்போது நடந்தது என்ன? எல்லாமே ம.தி.மு.க.வை அழித்திட கருணாநிதியின் சதியென்றும் - கூலிப்படைகளை அனுப்பி இவர்களின் கூடாரத்தில் அமளி நடத்த முயன்றேன் என்றும் - நேரத்துக்கு ஒன்றாகப் பேசுகிறார்! நிமிடத்துக்கு ஒன்றாகப் பொய்யுரைக்கிறார்.

ஆனால் நடந்தது என்ன? பாராளுமன்றத்தில் இட ஒதுக்கீடு மசோதாவில் எல்.ஜி. (எல்.கணேசன்) 14.12.2006 அன்று பேசினார். பேசும்போது சமூக நீதியின் சரித்திரத்தைச் சொன்னார். 55 ஆண்டுகளுக்கு முன்பு, சமூக நீதிக்காகப் பெரியார், அண்ணா, காமராசர் பாடுபட்டதையும், பண்டித நேரு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்ததையும் குறிப்பிட்டார். மிகவும் பின்தங்கிய மக்களான வன்னியர், பிரமலைக் கள்ளர் போன்றவர்களுக்கு (எம்.பி.சி) இட ஒதுக்கீடு இருபது சதவிகிதம் வேண்டுமென

டாக்டர் அய்யா ராமதாஸ் அவர்கள் போராடி, கருணாநிதி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் அந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையைச் சொன்னார். அதற்காக அவர் மீது கோபம் - புறக்கணிப்பு - நடை பயணத்துக்கு வர வேண்டாம் என்று தடை - கடைசியாக நடவடிக்கை! அதுவும் விளக்கம் கேட்காமல், விபரம் சொல்லாமல்!

அடப்பாவமே! ஆரம்ப காலம் முதல் திராவிட இயக்கத் தோழர் - அண்ணாவின் தம்பி - ஆட்சிக்கு தி.மு.க. வந்த பிறகு, சுதந்திராவிலிருந்து வந்தவரல்ல! மொழிப் போர் தளபதிகளில் முக்கியமான ஒருவர் - அவர் அவைத் தலைவர் என்ற முறையில் கூட்டத்திற்கு வந்து விடுவாரோ என்ற ஐயப்பாட்டில், வந்தால் விபரீதம் விளைவிக்கப் போடப்பட்ட திட்டத்தைத் தடுத்து நிறுத்திட எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தவிர, வேறு ஏதும் அறியாத என்னையும் - தி.மு.க.வையும் வீண்பழி போட்டு விளம்பரம் தேடுவதில் என்ன பயன்?

இந்த விளம்பரங்களும், விஷப் பொய்களும் விளக்கில் மாட்டிய விட்டில் பூச்சிகளாக ஆகுமே தவிர, ஆழ வேர் விட்டு விரிந்து பரந்து நிற்கும் தி.மு.கழகமெனும் ஆலமரத்தை அசைக்க முடியாது என்ற அறிவிப்பை அறைகூவலாக விடுக்கிறேன்.

உடன்பிறப்பே, பொய்யுரைத்துப் புலம்புபவர்கள் புலம்பட்டும்! புழுதி வாரித் தூற்றி அலைபவர்கள் அலையட்டும் - அவர்களை மறப்போம்! அவர்தம் சகவாசம் அறவே துறப்போம் - நமக்கு வேலை, நிரம்ப இருக்கிறது - ஆட்சிப் பொறுப்பைத் தந்துள்ள மக்களுக்கு நாம் அளித்துள்ள வாக்குறுதிகளை அடுத்தடுத்து ஒவ்வொன்றாக நிறைவேற்றுவோம்! அதில் மகிழ்ச்சி காண்போம் - தமிழ் நிலத்தின் மக்கள் முகத்தில் மலர்ச்சி காண்போம்! வா! வா! பணி பல உண்டு நமக்கு! ஆக்கப்பணிகளை மேலும் தொடருவோம்! ஆருயிரே, அண்ணன் அழைக்கிறேன், வா!

அன்புள்ள,

**மு.க.**

27-12-2006

# 3249. சிங்கக் கூட்டமெனச் சிலிர்த்தெழுவீர்!

**உடன்பிறப்பே,**

அண்ணாவின் கொள்கைக்குக் குழி பறிப்பதற்காகவும் - பெரியாரின் இலட்சியங்களை மழுங்கச் செய்வதற்காகவும் பாடுபடுவது என்றே - அவற்றுக்குப் பாதாளப் படுகுழி தோண்டுவதென்றே, சில வேதாளங்கள், 'அண்ணா', 'பெரியார்', 'திராவிடர்' என்ற பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டு, பட்டுக்கொடிகள் பறக்க விட்டும் - பை, பையாய் துட்டுக்களை வாரி இறைத்தும் - பச்சைக் கொடியில் பின்னிக்கொண்டு பளபளப்பிலும், வண்ணத்திலும் மனம் பறிகொடுக்கும் பாமரர்களை ஏமாற்றுவதற்குப் படை திரட்டிக்கொண்டு புறப்பட்டிருப்பதையும் - அவற்றின் படாடோபங்களையே அவற்றின் பலம் என்று சிலர் பதாகை பிடித்து அலைவதையும் காணும் போது, நமக்குப் பரிதாபமும் ஏற்படுகிறது! 'பளீர்' என்று சிரிப்பும் வருகிறது!

ஏற்கனவே துரோகத்தின் சின்னங்களாக - நன்றி மறந்திட்ட பிறவிகளாக - ஏறிய ஏணியை எட்டி உதைக்கும் தன்னல வடிவங்களாக - சாப்பிட்ட கை காய்வதற்குள் சாப்பாடு போட்ட வீட்டிலேயே சதி வேலை நடத்தும் சண்டாளர்களாக - திரிந்து கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினர், ஏதோ தாங்கள் அமைத்துள்ள பாசறைக்குள், தி.மு.கழகம், புகுந்து குழப்பம் விளைவித்து - இராம லட்சுமணர்களைப் போன்ற உத்தம சகோதரர்களையும் - பஞ்ச பாண்டவர்களையொத்த பண்பான உடன்பிறப்புகளையும் கொண்டிருந்த மாண்பு (?) நிறைந்த அவ்தம் மாளிகையை மண்மேடாக்க தி.மு.க. திட்டம் போட்டிருப்பதாக ஒரு திடீர்த் தகவல் வெளியிட்டு, "அய்யோ உறுய்யோ!" என்று அலறித் தவித்தார்கள்.

ஆனால், நமது முயற்சி எதுவுமில்லாமலே -

அப்படியொரு முயற்சி செய்ய வேண்டுமென்று நாம் எண்ணிடாமலே -

“நானூறு பொதுக்குழு உறுப்பினர்களுடன் நாங்கள் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி விட்டோம்” என்று கறாராகக் கணக்கு காட்டியுள்ளார்கள்! எல். கணேசன் அவர்களும், செஞ்சி இராமச்சந்திரன் அவர்களும் - இருவரும் ஏற்கனவே தி.மு.க. வில் அண்ணாவின் தம்பிகளாய் - அழுத்தம் குலையா அடலேறுகளாய் இருந்தவர்கள் - அவர்களின் பிரிவால் அவர்கள் தோற்றுவித்த கட்சி இரு பிளவாக ஆகிவிட்ட நிலை! சேலத்தில் அந்தக் கோலத்தை அனை வரும் காண முடிந்திருக்கிறது.

இந்தச் சேலத்துப் பிளவுக்கு முன்பே கடந்த காலத்தில், மிகப்பல முன்னோடிகளும், உறுப்பினர்களும் அக்கட்சியின் பொதுக்குழுவிலிருந்தும், நிர்வாகக் குழுக்களில் இருந்தும் விலகி, தாய்க் கழகமாம் தி.மு.கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டோர் மிகப் பலர் என்பதை மறந்து விடவும் முடியாது - மறைத்து விடவும் முடியாது!

எனவே உடன்பிறப்பே, நமது அணியில் மற்றொரு தோழமைக் கட்சி இடம்பெறும் வாய்ப்பு ஏற்படுவது மட்டுமல்ல! நமது கழகத்தின் வலிமையும் தனிப்பட்ட முறையில் பெருகிடும் வண்ணம், எதிரெதிர் அணியிலேயிருந்து ஏராளமானோர் உறுப்பினர்களாகச் சேர்ந்திடவும் அணி அணியாக வந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், கழக முறைப்படியும் - சட்ட விதிப்படியும் - நமது பேராசிரியர் அவர்கள், பொதுச் செயலாளர் என்ற நிலையில், கழக உறுப்பினர்களைச் சேர்த்தல், புதுப்பித்தல் எனும் செயல்பாடு தொடங்கட்டும் என்று அழைப்பு விடுத்து, அவ்வாறு உறுப்பினர் சேர்க்கும் பணிக்கு இந்த ஆண்டு ஜனவரித் திங்கள் 18ஆம் நாள் முதல் ஏப்ரல் திங்கள் 17ஆம் தேதி வரையில் கெடு வழங்கி, அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

நமது கழகம் அண்ணா காலத்திலிருந்து - காலம் குறிப்பிட்டு உறுப்பினர்களைச் சேர்த்து - கிளைகளை உருவாக்கி - ஒன்றியங்களை அமைத்து - மாவட்ட அமைப்புகளின் தேர்தலை நடத்தி - தலைவர், பொதுச் செயலாளர், தலைமைப் பொதுக்குழு, தலைமைச் செயற்குழு எனும் தலைமைக் கழகத் தேர்தல் வரையில் ஜனநாயக விதிப்படி தேர்தல் நடத்தி வருவதை நாடறியும்! நல்லோர் அறிவர்.

உடன்பிறப்பே! நீ மறந்திருக்கமாட்டாய் - 1993 ஆம் ஆண்டு, கழகத்தையே கைப்பற்ற முனைந்து - நம் இரு வண்ணக் கொடியை - அண்ணா தந்த உதயசூரியன் சின்னத்தை - தி.மு.க. என்ற பெயரை - ஏன்! அண்ணா அறிவாலயத்தையே பறித்துக்கொள்ளத் துடித்து - முழக்கமிட்டு - டெல்லி தலைமைத் தேர்தல் ஆணையம் வரை சென்று 'குடிலர்கள்' வழக்காடியபோது, தேர்தல் ஆணையத்தில் திரு. சேஷன் முன்னிலையில், பொதுச் செயலாளர் பேராசிரியர் சார்பில் தரப்பட்ட நமது கழக ஆவணங்களைப் பார்த்து விட்டு, நமக்காக வாதாடிய மூத்த வழக்கறிஞர் திரு. கபில்சிபல் அவர்கள், "ஆகா! இதுவரை ஒரு கட்சியின் ஆவணங்களை நான் இவ்வளவு விரிவாகவும், விளக்கமாகவும் பார்த்ததில்லை" என்று பாராட்டினார் என்று அப்போதே சொல்லப்பட்டது.

அந்தத் தீர்ப்பு வருகிற நாளில் நான் எங்கிருந்தேன் தெரியுமா?

இன்று இவர்களின் கட்சியைப் பிளந்து கொண்டு வெளியேறியவர்கள், எங்கே கூடி பொதுக்குழு நடத்தினார்களோ! அதே சேலத்தில் தானிருந்து டெல்லி தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆம்! தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் அழைப்பின் பேரில் சென்றிருந்த நான், டெல்லி செய்தி வரும் வரையில் சேலத்தில்தான் இருந்தேன்.

அப்போது - அந்தச் சில நிமிடம் - நான் டெல்லியிலிருந்த பேராசிரியர், முரசொலிமாறன், ஆர்க்காடு வீராசாமி ஆகியவர்களிடம் என்ன சொன்னேன் தெரியுமா?

> "தேர்தல் ஆணையத்தில் 'குடிலர்களுடன்' நடத்தும் வழக்கில் வெற்றி பெற்றால், சேலத்திலோ, சென்னையிலோ நீங்கள் வந்து என்னைப் பார்க்கலாம் - இல்லையேல், இப்போது நான் பேசுவதுதான் என் கடைசிப் பேச்சு! பிறகு என்னைப் பார்க்க முடியாது"

என்று கூறித் தொலைபேசியை வைத்து விட்டேன்.

எத்தனை நாள் அண்ணாவும், நாங்களும் விழித்திருந்து சிந்தித்து வைத்த பெயர் திராவிட முன்னேற்றக் கழகம் -

எத்தனை இரவுகள் அண்ணாவும் நாங்களும் வண்ணங்களை இணைத்துப் பார்த்து வடிவமைத்த இரு வண்ணக் கொடி -

எத்தனை நாட்கள் - வெயில் என்றும் - மழையென்றும் பாராமல், தொண்டர்கள் தந்த நன்கொடையாம் அண்ணா அறிவாலயம் -

குடிலர்கள்; அதைப் பறித்துக் கொண்ட பிறகு, கொடியில்லாமல் - குலத்தின் அடையாளப் பெயராம் தி.மு.க. இல்லாமல் - பாடுபட்டு வியர்வை கொட்டி எழுப்பிய அண்ணா அறிவாலயம் இல்லாமல் - நினைக்க முடியும்?

ஆனால், இலட்சக்கணக்கான உடன்பிறப்புகளின் இதய தாகத்துக்கு - நெஞ்சப் புண்ணுக்கு - வெற்றி கிடைத்தது.

அதன் பிறகு தொடர் வெற்றிதான்!

அந்த வெற்றியின் சின்னம்,

ஆட்சிப் பொறுப்பு மட்டுமல்ல!

ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தல் என்பதை மறந்து விடாமல்

அய்யா - அண்ணா - குறிக்கோள் நிறைவேற,

கழகத்தை மேலும் மேலும் வலுப்படுத்திடவே,

பொதுச் செயலாளர் பேராசிரியர் புதிய உறுப்பினர்கள் சேர்க்க அழைப்பு விடுத்துள்ளார் -

அந்த அழைப்பில் என் குரலும் இணைந்து ஒலிப்பதை நீ அறிவாய்! எனவே, தோளில் இருவண்ணக் கொடி தவழ, நம் குலக்கொடிகளுடன் பட்டி தொட்டியெங்கும் பவனி புறப்படு! வாழ்நாளில் நாம் ஏற்கும் திருத்தொண்டு இதுவெனப் பல்லாயிரவரை - பல லட்சம் பேரை - கழக உறுப்பினர்களாக இணைத்திடக் கையெழுத்துகளைப் பெற்றிடு! கிளைகள் முதல் தலைமைக்கழகம் வரையிலான ஜனநாயக முறைத் தேர்தல் நடத்திட இன்றே செயல்படச் சிங்கக் கூட்டமெனச் சிலிர்த்தெழுவோம், வா!

அன்புள்ள,

**மு.க.**

3-1-2007

# 3250. "ஒற்றைக்கலம்" எனினும் உளமார்ந்த வாழ்த்து என்பேன்!

உடன்பிறப்பே,

சென்னை கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள், பேசியது இன்னமும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

திராவிட இயக்கத்தையும், அதன் தலைவர்கள் பேச்சையும், எழுத்தையும் - இருட்டடிப்பு செய்தே அவற்றை அழித்து விடலாமென்றும், அதே மாதிரி திராவிட இயக்க எதிரிகளையும், துரோகிகளையும் அளவுக்கு மீறிய விளம்பரம் தந்து ஆகாயமளாவிட வளர்த்துவிடலாமென்றும் எண்ணிக்கொண்டு ஏடுகள் நடத்தப்பட்ட காலம் அது!

அந்த சதித் திட்டங்களையெல்லாம் மீறி, இந்த இயக்கம் வளர்ந்து விட்டபோதுதான், அண்ணா, அந்தக் கடற்கரை கூட்டத்தில் சொன்னார்,

"இன்றைக்கு என்னைச் சுற்றி பத்திரிகை நிருபர்கள் படையெடுத்த வண்ணமுள்ளனர், செய்தி சேகரிக்க! ஆனால், இவர்களது ஏடுகளில் ஒரு காலத்தில் - "அண்ணாதுரையும் அந்தக் கூட்டத்தில் பேசினார்" என்று என்னைப் பற்றி ஒரு வரிதான் வரும்! அப்படித் தான் பெரியாரைப் பற்றியும் செய்தி வெளியிடுவார்கள்! ஒற்றைக் கலம் கூட இருக்காது அது! அதுவும் அவரைக் கேலி செய்து! அல்லது கண்டித்து! அவற்றையெல்லாம் தாண்டித்தான் இப்பொழுது நாம் தமிழ்நாட்டு மக்களின் மனத்தில் இடம்பெற்று, அவர்களின் மகத்தான ஆதரவையும் பெற்றிருக்கிறோம்"

இவ்வாறு அண்ணா பூரிப்பு தவழ்ந்திடப் பேசினார்!

உடன்பிறப்பே, சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பத்திரிகை அலுவலர்கள் நடத்திய விழாவிலே, அந்தப் பத்திரிகை

உரிமையாளர்களை மேடையிலே வைத்துக் கொண்டே சொன்னேன்.

> “எங்கள் கழகச் செய்திகள், உங்கள் பத்திரிகையில் வருவதைப் படிப்பது, கடல் மணலில் கை விரலிலிருந்து நழுவித் தொலைந்துவிட்ட வைர மோதிரத்தைத் தேடி எடுத்து, மகிழ்வது போல! அத்தனை விரிந்து பரந்த கடல் மணல் வெளியில் இத்தனை சிறிய வைரக் கணையாழி யைக் கண்டுபிடிப்பதுபோல், எங்கள் செய்திகளை உங்கள் ஏட்டிலே தேடிப் பிடித்து மகிழ்கிறோம்” என்று!

அன்றைய ஏடுகளில், நமது செய்திகள் - ஒற்றைக் கலமாக மட்டுமே வெளிவந்த கால கட்டத்திலே, நமது திராவிட இயக்கத்தின் இலட்சியப் பயணம்கூட இன்றுபோல இரு வழிப்பாதை - நாலு வழிப்பதை - ஆறு வழிப்பாதை என்றல்லாமல் ஒற்றையடிப் பாதையிலேதான் நடைபெற்றது.

ஆனால், இன்று நமது இயக்கத்தின் நிகழ்ச்சிகள், செய்திகளில் சேராவிடினும், ஏடுகளில் அரைப்பக்க முழுப் பக்க விளம்பரங்களாகவே வரத் தலைப் பட்டுவிட்டன.

விளம்பரமாகத்தான் தந்து விட்டார்களே! பின்னர் செய்தி வேறு எதற்காக வெளியிட வேண்டும் என்று ஏடுகள் சில செய்திகளையே மறைத்து விடுகின்றன. அல்லது சிற்றெறும்பு அளவினதாக குறுக்கிவிடுகின்றன.

இந்தச் சூழலில், மக்களுக்காகக் கழக அரசு நிறைவேற்றுகிற திட்டங்களை - புதிய சாதனைகளை - தேர்தல் நேரத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை, வாய்மையுடன் நிறைவேற்றும் செயலினை - வாக்களித்த மக்கள் உணர்ந்திடவும், வாக்களிக் காதவர்களாக இருப்பினும், அவர்கள் அறிந்திடவும் - அதற்கேற்ப அவரவர் வாழ்க்கை முறையினையும் பணிகளையும் வகுத்துக் கொள்ளவும் பயன்பட வேண்டுமென்று கருதுகிற அரசானாலும் - அல்லது ஓர் அமைப்பானாலும், செய்திகளாக வெளியிடப்பட்டு பொது மக்களை அடைய முடியாமல் ஆகிவிடுகின்ற அரிய விஷயங்களை, பணச் செலவு ஆனாலும் பரவாயில்லையென்று விளம்பரங்களாகவே வெளியிட நேரிடுகிறது. அந்த நிலைமை தி.மு.க.வின் செய்திகளுக்கும், சில ஏடுகளின் திட்டமிட்ட செயலின் காரணமாக ஏற்படுவதால், செய்தியாக வெளியிடுவதற்கு

பதில் விளம்பரமாகவே வெளியிடுவது சிறந்தது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

அதனால்தான் தமிழனின் குருதியோட்டத்துடன் கலந்துள்ள தமிழ் உணர்வுக்கும், உழைப்பின் மதிப்புக்கும் சிகரம் வைத்தாற்போல், ஆண்டு தோறும் கொண்டாடும் தமிழர் திருநாளுக்குக்கூட, செய்தியளவில் என் எழுத்துப் பணியினை ஆற்றிடாமல், அவ்வாறு முனைந்திடில் எங்கே அதுவும் ஒற்றைக்கலச் செய்தியாகிவிடுமோ - என நினைத்துக் கவலை கொண்டுதான் - செய்தியாக வேண்டியதில்லை, செலவானாலும் ஆகட்டும் என்று,

*புதுப் புது வண்ணங்கள் மிளிர்ந்திட*
*புவியில் உயர் எண்ணங்கள் ஒளிர்ந்திட*
*ஆடுவோமே! பாடுவோமே!*
*ஆதவனைத் தொழுது*
*ஆனந்தப் பொங்கல் கொண்டாடி*
*ஆடுவோமே! ஆனந்தப் பள்ளுப் பாடுவோமே!*
*என்று*
*ஒற்றைக்கல வாழ்த்து*
*எனினும்*
*உளம் கனிந்த வாழ்த்து!*
*வளமார் தமிழகம் வாழ்வதற்கு*
*வழங்குகிறேன்.*

அன்புள்ள,
மு.க.
15-1-2007

# 3251. ஆண்டுதோறும் காண்போம்; இந்த இன்பம்!

**உடன்பிறப்பே,**

அரசின் சார்பில் அன்பான வேண்டுகோள்தான் பணிவோடு விடுத்தேன். அதுவும் “தமிழ் அரசு” முத்திரையோடு அல்ல! “ஆணை” எனும் அறிவிப்பாக அல்ல! தமிழன் எனும் உணர்வுடனே தமிழ் மக்களின் செவிக்கோர் செய்தியாக! சிற்றூர், பட்டி தொட்டி, பேரூர், நகரம், மாநகர்கள் என்று எங்கணும் கனிவான என் கோரிக்கை, தனியாக நின்று விடாமல் - தமிழர்கள், நாங்கள் இருக்கின்றோம்; நீயும் நினைப்பதையெல்லாம் சொல்லமாட்டாய் - நின்று நிலைப்பதை, நிலைக்க வேண்டியதை மட்டும்தான் சொல்வாய் - அப்படிச் சொல்வதை,

நீ மட்டுமே நிறைவேற்ற வேண்டுமென்றில்லாமல், நாம் ஒன்றுகூடி நிறைவேற்ற வேண்டும் என்பதிலே இளமை முதலே அக்கறையும் ஆர்வமும் கொண்டவன் என்பதால், இப்போது இந்த ஆண்டு பொங்கல் திருநாளையும் தமிழர் திருநாளாக - தமிழர் திரு விழாவாக - ஆக்கி விட்டோம் என்று நீயும், நானும் அல்ல! அல்ல! நாங்களும், ஆம்! நாமனைவருமே பெருமிதம் கொள்கிறோம் என நீ கூறுவது என் செவியில் புகுந்து, என் சிந்தை அணுவெலாம் சிலிர்த்திடச் செய்கிறது!

ஆன்றோரும், சான்றோரும், தமிழ் அறிஞர் பெருமக்களும் கண்ட கனவல்லவா? ஆண்டுதோறும் தமிழர்க்கு விழா எடுக்கும் வாய்ப்பு பல வரினும், ஈடும் இணையுமற்ற வாய்ப்பல்லவோ, தைத் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடும் வாய்ப்பு!

அந்த வாய்ப்பு, வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குப் பொசியும் நிலையில்லாமல், நெல்லுக்கே நிறைவாகப் பாய்கின்ற நிலை போன்று இனி தைத் திங்கள் முதல் நாள் - தமிழர் வாழ்வுக்கு, வளத்துக்கு, உணர்வுக்கு - உயிரோட்டமான உலகு தழுவிய

முன்னேற்றத்துக்கு, என்றைக்கும், எக் காலத்துக்கும் ஏற்றமிகு பயன் விளைக்கும் நாளாக நடை போடத் தொடங்க வேண்டும் என்பதற்காகவே, மார்கழி உச்சியில் மலர்ந்திடும் தைத் திங்கள் எனும் மழலைக்கு, மங்கல நீராட்டுவோம் - மாணிக்க நெற்கதிர் மாலை சூட்டுவோம் - மாநில முழுதும் மணி விளக்குச் சரங்கள் தொங்க விடுவோம் - இரவைப் பகலாக்கும் மின்னொளியை எங்கணும் பாய்ச்சுவோம் - வீதி தோறும் வெளிச்சத் தொங்கல்கள் - பார்க்கப் பார்க்கக் கண் பறிக்கும் சுடர் தீபங்கள் - வண்ணக் கொடி தோரணங்கள் - வனிதையர் தீட்டும் கோலங்கள் - குழந்தைகளின் கும்மாளம் - குமரிகளின் கும்மி, கோலாட்டம் - இவையெல்லாம் பழசு தான் - இனி இவற்றையெல்லாம் மீண்டும் புதிதாக்கி, ஒவ்வொரு ஆண்டும் ஒன்றை யொன்று வென்றிடும் வண்ணம் இந்த விழாவினை எடுத்திடுவோம்.

கோலாகலம் - குதூகலம் - இவை மட்டும் விழா எடுப்பதின் குறிக்கோள் அல்ல! தமிழர் பண்பாடு மெலிந்திடவோ - நலிந்திடவோ - வழிகாண ஊசி நுனியளவு ஓட்டை விழுந்தாலே போதுமானது - எனவே, அந்த ஊசி வழி புகுந்தோ, பழைய பாசியில் பாதம் பதித்து விழுந்தோ - பண்பாட்டைத் தொலைத்து விடாமல் தமிழர்கள் தம்மையுணர்ந்து, தன்மானம் பேணி வாழ்வதற்கும், தரணி ஆள்வதற்கும், பண்பாட்டினைப் பாதுகாப்பதுதான் இன்றியமையாதது!

அதனைச் சுட்டிக் காட்டிட, இந்த ஆண்டு பொங்கல் நாளில் தமிழர்க்கு வாய்ப்பாக அமைந்த வண்ணக் கோலங்களும் - எண்ணக் குவியல் தாங்கி வந்த எழிலார் ஏடுகளும் - நம் இதயங்களில் தேனருவிகளாகப் பாய்ந்தன என்றே கூறலாம்.

ஆங்காங்கு, பொங்கல் கொண்டாடிய மகளிர், "இந்த ஆண்டு முதல் நாங்கள் சமத்துவப் பொங்கல் கொண்டாடுகிறோம்" என்கிறபோது, அடடா! எத்துணைப் பொருள் பொதிந்த வாக்கியமாக அதனைக் காணுகிறோம்.

எம்மதமும் சம்மதமேயென்று எல்லா மதங்களையும் இணைத்து நடந்த பொங்கல்!

மத வேறுபாடுகளுக்குத் துளியும் இடம் தராத பொங்கல்!

"உழைப்பு! உழைப்பு!" எல்லா மதத்தினருக்கும் பொது!

அதன் வெற்றியில் கிட்டும் உவகை!

அதுவும் அனைத்து மதத்தினர்க்கும் பொது!

அந்தப் "பொது"வில் நடமிட்ட புதுமையை, பூரிப்பை இந்த ஆண்டுப் பொங்கலன்று அனுபவித்தோம்.

இனி,

ஆண்டுதோறும் இந்தப் பொங்கலில் கண்ட இன்பத்தைக் காண்போம்.

அன்புள்ள,

**மு.க.**

17-1-2007

# 3252. பாய்வோம் வாரீர்;
# பந்தயக் குதிரைகளாக!

**உடன்பிறப்பே,**

இத்துடன் இணைத்துள்ள என்னுடைய "நிழற்படம்"; தி.மு. கழக உறுப்பினர் புதுப்பித்தல் படிவத்தில் நான் கையெழுத்திடும் படம் ஆகும். 2.2.2007 தேதியில் என்னிடம் தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி ஜெ. அன்பழகன், பகுதிக் கழகச் செயலாளர் தம்பி எம்.டி.ஆர். நாதன், வட்டக் கழகச் செயலாளர் தம்பி மெ. சரவணன் ஆகியோர் கையெழுத்து பெற்றார்கள்.

கையெழுத்திடும் போதும், கையெழுத்திட்ட பிறகும் என் நினைவில் அசைந்தாடியவற்றை இந்தக் கடிதத்தில் நான் குறிப்பிடுவது, அறிஞர் அண்ணா மறைந்த 38வது நினைவு நாளைக் கொண்டாடும் இந்த நாளில், என் இதயத்தில் விதையாக விழுந்து, செடியாக முளைத்து, தருவாக தழைத்திடும் எத்தனையோ எண்ணங்கள்! எத்தனையோ நினைவுகள்! எத்தனையோ கனவுகள்!

இப்போது என் எதிரில் இரண்டு புத்தகங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று நானே எழுதிய "பேசும் கலை வளர்ப்போம்" என்பதாகும். 1981ஆம் ஆண்டு வெளி வந்தது. அந்தப் புத்தகத்தில் இன்றைய தமிழர் தலைவர் வீரமணியைப் பற்றி நான் எழுதியுள்ளது வருமாறு:-

> "இப்போது வயது நாற்பத்தி ஆறு. தோற்றம் வயதைத் தெரிவிக்காது என்றாலும், நன்கு முதிர்ச்சி பெற்ற கருத்துகளை மேடைகளில் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். சற்றுக் குனிந்து வளைந்து, ஆனால், யாருக்கும் வளையாத கொள்கைகளை அள்ளித்

தருகிறார். கறுப்புச் சட்டை மேனியை அலங்கரிக்கிறது. கையிலே சொற்பொழிவுக்கான குறிப்புகள். அருகேயுள்ள மேஜையிலே அன்றைய பேச்சுக்கான ஆதாரங்களை அவர் எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பான பெரிய பெரிய புத்தகங்கள். "இங்கேதான் நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அது தான் முக்கியமானது; மிக முக்கியமானது" என்ற சொற்றொடர், அடிக்கடி பேச்சினிடையே வந்து கொண்டிருக்கிறது. மணிக் கணக்கில் பேசுகிறார். யார் இவர்?

வேறு யாருமல்ல! தனது பத்தாவது வயதிலேயே திராவிடர் இயக்க மேடைகளில் பேச ஆரம்பித்தவர். இன்றைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் - விடுதலை நாளிதழின் ஆசிரியர் - வீரமணி அவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

பத்து வயது முதற்கொண்டே பெரியாருடன் பணி புரிந்து கொண்டு - பள்ளியிலும் பயின்று - கல்லூரியிலும் பட்டம் பெற்று - திராவிடர் கழகத்தின் ஓய்வறியாத் தொண்டராகவும், பெரியாரின் பேரன்பையும், நம்பிக்கையையும் பெற்றவராகவும் விளங்கிய வீரமணி, இளந் தளிர்ப் பருவத்திலே மேடையில் பேசுகிற வியப்புமிகு நிகழ்ச்சியைக் காணப் பெருங்கூட்டம் திரளும்."

அவரைவிடச் சற்று மூத்த இளைஞனாக நானும் இருந்த அந்தக் காலத்தில்தான், பெரியாரின் ஆணைப்படி நானும், அவரும், இன்னும் சில மாணவ நண்பர்களும் மாவட்டந்தோறும் சுற்றுப் பயணம் செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும், ஐந்து நாட்கள், ஆறு நாட்கள் தங்கி இயக்கக் கொள்கைகளைப் பொதுக் கூட்டங்களில் - தெரு முனைக் கூட்டங்களில் மக்களிடம் எடுத்துரைப் போம்.

"பேசும் கலை வளர்ப்போம்" புத்தகத்தில் இந்தக் குறிப்புகளை படித்து விட்டு, அதன் தொடர்ச்சியாக எனது அருமை நண்பரும், தந்தை பெரியாரின் செல்லப்

பிள்ளைகளில் ஒருவரைப் போன்றவரும், மரபுக் கவிஞருமான மாயவரம் கருணானந்தம் அவர்கள் 1979ஆம் ஆண்டு வெளியிட்ட "தந்தை பெரியார்" என்ற 850 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகமும் என் முன்னால் இருந்ததை மீண்டும் படிக்க வேண்டுமென்று தோன்றியது. அப்படி படித்த பக்கங்கள், அந்தக் கால நிகழ்வுகளை நினைவூட்டத் தவறவில்லை. அந்தப் புத்தகத்தில் இதோ கவிஞர் கருணானந்தம் எழுதுகிறார். அதில் என்னைப் பற்றிய குறிப்புகளும் வருகின்ற காரணத்தால், இயக்க வரலாற்றோடு அதனையும் இணைத்து உன் போன்றோருக்குத் தருகின்றேன். நண்பர் கருணானந்தம் "தந்தை பெரியார்" புத்தகத்தில் 171, 172, 173வது பக்கங்களில் பின்வருமாறு எழுதுகிறார் :-

"1945 செப்டம்பர் 29ஆம் நாள், திருச்சி புத்தூர் மைதானத்தில் 17வது நீதிக் கட்சி மாநாடு பெரியார் தலைமையில் நடைபெற்றது. என். அர்ச்சுனன் திறந்து வைத்தார். தராசுக் கொடி (இங்குதான் கடைசி) மிராண்டா கஜேந்திரன் அம்மையாரால் ஏற்றி வைக்கப்பட்டது. தி.பொ. வேதாசலம் வரவேற்புக் குழுத் தலைவர். அடுத்த நாள் டி. சண்முகம் தலைமையில் 4வது சு.ம. இயக்க மாநில மாநாடு. கே.கே. நீலமேகம் திறந்து வைக்க, கனகம்மையார் இராமசாமி கொடி யேற்றினார். அண்ணாதான் வரவேற்புக் குழுவின் தலைவர். அழகர்சாமியின் சிறப்புரையும், எம்.ஆர். ராதாவின் நாடகமும் மாநாட்டில் பாராட்டுப் பெற்றன. இந்த மாநாட்டை ஒட்டி நடைபெற்ற ஊர்வலம், திட்டமிட்ட பாதையில் செல்லாதவாறு தடை செய்து, அரசு சிறுமதியைக் காட்டிக் கொண்டது. தொண்டர்கள் உணர்ச்சி மயமாய்த் தடை மீறத் துடித்தனர். பெரியாரோ தமது இயல்புக்கேற்ப, அரசு அனுமதிக்கும் வழியிலேயே செல்வோம் என்று அமைதிப்படுத்தினார். இதேபோல் தான் கடந்த ஜூலை 22ஆம் நாள், புதுச்சேரியில்

பாரதிதாசனால் துவக்கப்பட்ட திராவிடர் கழக விழாவுக்குப் பெரியார் சென்ற போது, அவர் உரை நிகழ்த்திய பின்னர், உள்ளூர்க் கயவர்கள் சிலர் கொடி மரத்தை வீழ்த்திக் கலவரம் செய்தனர். பெரியாரை ஒரு ரிக்ஷாவில் ஏற்றிப் பாதுகாப்பாக அன்பர் ராமலிங்கம் இல்லத்திற்குத் தோழர்கள் அனுப்பினார்கள். தனியே அகப்பட்டுக் கொண்ட மு. கருணாநிதி நையப் புடைக்கப்பட்டார். அங்கு "தொழிலாளர் மித்திரன்" இதழ் நடத்தி வந்த காஞ்சி கல்யாண சுந்தரம் தாக்கப்பட்டார். அப்போதும் பெரியார் அமைதி காத்து, அனைவரையும் ஆறுதல் பெறச் செய்து, அடுத்த நாள் வரை தங்கியிருந்து, பின்னர் ஈரோடு திரும்பினார்.

தராசுக் கொடி தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தந்த கொடி, அது புரட்சியின் சின்னமல்ல! மாற்ற வேண்டும் - என்பதாக ஒரு கருத்து திருச்சியில் உதயமாயிற்று. பின்னர் பெரியார் கேட்டுக் கொண்ட வண்ணம், பலரும் டிசைன் அமைக்க முயன்றனர். "குடி அரசு" உதவி ஆசிரியராக அப்போது ஈரோடு வந்திருந்த மு. கருணாநிதி, கருப்பு மையும், தன் விரலின் நுனியிலிருந்து எடுத்த இரத்தமும் கொண்டு, இப்போதுள்ள திராவிடர் கழகக் கொடிக்கு வடிவமைப்பு எழுதித் தந்தார். அதுதான் பின்னர் 27.4.1946ல் பெரியாரால் அங்கீகாரம் பெற்றது.

இனி திராவிடர் கழகத்துக்குப் பெரியார் தான் நிரந்தரத் தலைவர் எனத் திருச்சி மாநாடு தீர்மானம் இயற்றியது.

விடுதலைப் படை என்பதாக ஒரு தொண்டர் படை திராவிடர் கழகத்துக்குத் தேவை என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெரியார் ஈரோடு திரும்பியதும், இதைப் பற்றி மேலும் சிந்தித்து, 1945 செப்டம்பர் 29ஆம் நாள் "குடி அரசு" இதழில், கருப்புச் சட்டைப் படை அமைப்பு என்பதாக ஓர் அறிவிப்பு வெளியிட்டார். ஈ.வி.கே. சம்பத், எஸ். கருணானந்தம் ஆகிய இருவரும் இதன் தற்காலிக அமைப்பாளர்கள் என்று கூறும் இத்தகைய அறிவிப்பு, 22.12.1945 "குடி அரசு" இதழ்

வரையில் தொடர்ந்து வெளியாயிற்று. கருப்புச் சட்டைப் படையின் முதல் தொண்டராக, மு. கருணாநிதி தம்மைப் பதிவு செய்து கொண்டார் ஈரோட்டில்”

உடன்பிறப்பே,

ஈரோடு “குடி அரசு” அலுவலகத்தில் சம்பத், கருணானந்தம் ஆகிய இருவரின் முன்னிலையில், கருப்புச் சட்டைப் படையின் முதல் தொண்டனாக என்னைப் பதிவு செய்து கொண்ட அந்த நிகழ்ச்சியையும் அதைக் கவிஞர் கருணானந்தம், அவர் எழுதிய “தந்தை பெரியார்” புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதையும், நேற்று (2.2.2007) தி.மு. கழகத்தில் உறுப்பினராகப் புதுப்பித்துக் கொண்டதையும் ஒருசேர என் நெஞ்சில் அசை போட்ட போது, கருணானந்தம் அவர்கள் அந்தப் புத்தகத்தை எழுதி வெளியிட்ட சமயம், இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கை, 1945 ஆகஸ்ட் 18ஆம் நாள் வரை 33,867 என்றும், உறுப்பினர்களின் கட்டணத் தொகை வருவாய் 3,367 ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது கடந்த ஆண்டே தி.மு.கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை 79 இலட்சம் என்பதைத் தாண்டியிருந்தது.

இப்போது தமிழகத்தில் எழுந்துள்ள எழுச்சியும், வேகமும், விறுவிறுப்பும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டிருக்கும் நிலையில், தி.மு. கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை இன்னும் பல இலட்சங்கள் அதிகம் ஆகும் என்பதில் ஐயம் இல்லை.

நாம் செல்லும் இடம் எல்லாம், நமது கழகப் பேச்சாளர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் எல்லாம், என்றும் இல்லாத உற்சாகப் பெரு வெள்ளம், வாழ்த்து முழக்கம், வரவேற்பு எனும்விதத்தில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் விழா காண்கிறோம்.

அண்மையில் ஒரு சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். திருச்சி, மதுரை, பரமக்குடி, நாகப்பட்டினம் என்ற நகரங்களில் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபோது, மொத்தம் நான்கு நாட்களில், ஒன்பது மாவட்டங்களில் தமிழ்ப் பெருமக்களையும், உன்போன்ற உயிரினும் மேலான உடன்பிறப்புகளையும் சந்திக்கும் பேறு பெற்றேன்.

ஓர் ஊர் நிகழ்ச்சியை மற்றொரு ஊர் வெற்றி கொள்வதாகத்தான் அமைந்திருந்தது. நான் எதைச் சொல்வது? எதை விடுவது?

திருச்சி செல்வராஜ் இல்லத் திருமண நிகழ்ச்சி ஒரு மண்டல மாநாடு. அதனை வென்று காட்டியது அன்று மாலை நடைபெற்ற திருச்சி ரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி. மறு நாளே மதுரை வேலுச்சாமி இல்ல மண விழா நிகழ்ச்சி. அதுவும் மலைக்க வைத்தது. அதே நாள் மாலை கருமுத்து தியாகராசர் பொறியியல் கல்லூரியின் பொன் விழா நிகழ்ச்சி. கரை காண முடியாத உற்சாகம். கடல் போலக் கூட்டம் வழியெங்கும்.

அதற்கு அடுத்த நாள் மாபெரும் குடிநீர் திட்டத்தை, ஏறத்தாழ 600 கோடி ரூபாயில் தொடங்கி வைத்த பரமக்குடி நிகழ்ச்சி. அன்றே மக்களின் தாகம் தணிந்தது போன்று மனதில் ஓர் புத்துணர்ச்சி. விழா முடிந்து 300 கிலோ மீட்டர் காரிலேயே பயணம் செய்து, வழி நெடுக விழியெலாம் ஒளி பாய, வீசும் தென்றலாய், பேசும் யாழாய் என் இனிய தமிழ் மக்களின் வாழ்த்தொலிகள் வழி நெடுகிலும்.

அடுத்த நாள், நான் பிறந்த மாவட்டம் நாகையிலும், படித்து வளர்ந்த மாவட்டம் திருவாரூரிலும் ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு கழகக் கொடிகளாலேயே கட்டியிருந்த அந்த இணைப்புப் பாலம், பூண்டிச் செல்வம், விஜயன், மதிவாணன் ஆகியோரின் கைவண்ணம் கண்டு பூரித்துப் போனோம். வாகனத்தில் இருந்தவாறே வானத்தை நோக்க முயற்சித்தேன். முடியவில்லை. வண்ண வண்ணக் கொடிகளே எங்கள் கண்களை மறைத்து விட்டன. அப்படி ஒரு எழில்மிகு ஏற்பாடு, எழுச்சிமிகு வரவேற்பு.

ஆழிப் பேரலையால் அவதியுற்ற மக்களுக்கு, ஆறுதல் அளிக்க, நிலையான வீடுகளைக் கட்டித் தந்து, அதைத் திறந்து வைக்கும் பணியை எனக்கு வழங்கியது, மாதா அமிர்தானந்தமயி மடம். அரசுத் துறைகள் போல ஆற்றல் காட்டி அமைத்துள்ள நிலையான வீடுகளையும், அதற்கான ஏற்பாடுகளையும் கண்ட போது, அரசுத் துறையினர் சிலர் அவர்களிடம் பாடம் கற்க வேண்டும் போல எனக்குத் தோன்றியது. அப்படி ஒரு பற்று, பாசம், அவற்றோடு கூடிய நலிந்தவர்களுக்கான நல்ல சமூகத்

தொண்டு! இந்த நிகழ்ச்சிகளில் கண்ட எழுச்சி, எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி இத்தனையும் கடந்த எட்டு மாதங் களில் வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஆட்சிக்குக் கிடைத்துள்ள மாட்சியன்றோ?

அதனால் நல்லோர் ஆடுகின்றார்;

பாடுகின்றார்;

பொல்லாதோர் வாடுகின்றார்;

வதங்குகின்றார்!

வள்ளலார் கூறியது போல் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் நாம் வாடி, அவர்கள் வாட்டம் போக்க வழி என்னவென்று பார்ப்போம்.

ஆட்டம் போட்டு அடக்குமுறைகளை அவிழ்த்து விட்டு, கண் விரித்து கெஞ்சிய போதெல்லாம் இல்லையென கை விரித்து, முடியாதென முகம் சுளித்து, ஏமாற்றத்தில் மக்களைத் தள்ளியவர்கள் - ஏறிய ஏணியை எட்டி உதைத்தவர்கள் - நமது வளர்ச்சி கண்டு - நம் ஆட்சி வழங்கும் வளம் கண்டு - வாடிய பயிரென ஆகிறார்கள் என்றால், அதற்கென நாம் வருந்துவோம். அவர்கள் திருந்துவர் என கருதுவோம். காத்திருப்போம் அவர்கள் வருகைக்காக! கை நீட்டி அழைத்திடுவோம்! அவர்கள் மனக் கசப்பினை போக்கிடுவோம்!

எளிமை நம்மை ஆட்கொள்ள, ஆட்கொள்ள - அதனால் வலிமை நமக்குச் சேரச் சேர -

இனி வறண்ட காலம் தமிழருக்கு இல்லை -

தமிழர் பண்பாட்டுக்கு இல்லை -

தமிழர் தம் வரலாற்றுக்கு இல்லை -

தன்மான உணர்வுக்கு இல்லை -

தமிழர் நாம் என்று தலை நிமிரும் நம் வீரத்துக்கு இல்லை -

அந்த உறுதியோடு ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, பல கோடி கழக உறுப்பினர் பெயர்களைப் பதிய வைப்போம் படிவங்களில்!

பறப்பீர் செயல்வீரர்களே சிட்டுக்களாக!

பாய்வீர் செயல்வீரர்களே பந்தயக் குதிரைகளாக!

படிவங்கள் நிரம்பட்டும் -

பகுத்தறிவுப் பகலவன் பெரியார் பாதையில் - அறிவின் சிகரம் அண்ணா வழியில் நம் பயணம் தொடரட்டும்.

அன்புள்ள,

**மு.க.**

4.2.2007

# 3253. அண்ணா தீட்டிய “நீதி தேவன் மயக்கமும்”; அந்நாள் நிகழ்வுகளும்!

உடன்பிறப்பே,

இன்றைய நாளேடுகளில் “வானத்திலிருந்து குதித்தல்”-“சுனாமி போல வன்முறை” என்று இரு வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணும் போது, எனக்கு ஒரு நினைவு - நம்முடைய மக்களுக்கு மறதி அதிகமாயிற்றே - அதனால் இப்போது இந்த ஆட்சி வந்த பிறகு நடைபெற்ற 2006ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் நடந்த நிகழ்வுகளைப் பூதாகாரமாக வர்ணிக்கும் இதழாளர்களும், இதயமுள்ளவர்களும், தங்கள் இதயத்தையும், இரு விழிகளையும் 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நடத்திய சென்னை மாநகராட்சித் தேர்தலின் பக்கம் சற்று திருப்பி, சத்தியத்துக்கும், நீதிக்கும், நேர்மைக்கும்; தாங்கள் கட்டுப்பட்டவர்களா என்பதைத் தங்களுக்குத் தாங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக, நான் 20.1.2007 தேதி முரசொலியில் “அண்ணா தீட்டிய நீதி தேவன் மயக்கம்” என்ற தலைப்பில் எழுதிய கேள்வி பதில்களை இதோ மீண்டும் நினைவூட்டுகிறேன்.

★

கேள்வி :- அண்ணா எழுதி, அவரே “இராவணன்” வேடத்தில் நடித்த “நீதி தேவன் மயக்கம்” என்ற நாடகத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்ட கருத்து என்ன?

கலைஞர் :- இராவணனை இரக்கமற்ற அரக்கன் என்று கம்பர் கூறியது தவறு என்றும் - கம்பராமாயணக் கதையின்படி, இராவணன் சீதையை தூக்கிக் கொண்டு போனபோதுகூட,

தொட்டுத் தூக்காமல் "பர்ண சாலை"யுடன்தான் தூக்கிச் சென்றான் என்றும் - சீதையிடம் தவறாக நடந்து கொள்ளவில்லை என்றும், நீதி தேவனிடம் இராவணன் வாதாடுகிற காட்சிகளும் - அகல்யாவிடம் இந்திரன் நடத்திய காமச் சேட்டையும் - குரு பத்தினி தாரையிடம் அவர்கள் சிஷ்யன் சந்திரன் நடத்திய காதல் லீலைகளும் - விளக்கப்பட்டு, இறுதியாக, இராவணன் வேடத்தில் உள்ள அண்ணா நீதி தேவனைப் பார்த்துக் கேட்பார்;

*"இப்போது சொல்லுங்கள் நீதி தேவா!*
*இராவணன் இரக்கமற்றவனா? அல்லது இந்த*
*தேவாதிதேவர்கள் இரக்கமற்றவர்களா?"*

என்று! தீர்ப்பு சொல்ல முடியாமல், அதாவது உண்மையை ஒப்புக்கொள்ள முடியாமல், "நீதி தேவன்" நீதி மன்றத்திலேயே மயங்கி விழுவார் - அதுதான், அண்ணா எழுதி, நடித்த நீதி தேவன் மயக்கம் நாடகமாகும்.

கேள்வி :- அ.தி.மு.க. ஆட்சியில் மாநிலத் தேர்தல் ஆணையர் பற்றி?

கலைஞர் :- அவரைப் பற்றி இப்போது எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை - ஆனால், அவரை அ.தி.மு.க. ஆட்சியில், பல முறை பதவி நீடிப்பு கொடுத்து, இறுதியாக ஆயுள் முடியும் வரையில், அவர்தான் மாநிலத் தேர்தல் ஆணையர் என்று ஆணை பிறப்பித்திருந்தார்கள் - என்னே ஜனநாயக மாண்பு!

கேள்வி :- நீங்களே முன்வந்து சென்னை மாநகராட்சித் தேர்தலில், மீண்டும் 99 இடங்களில் நிற்கிறோம் என்றது உங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகத்தானே அர்த்தம்?

கலைஞர் :- கம்பீரமாகத் தூக்குமேடைக்கு நடந்து வந்து, தூக்குக் கயிறை முத்தமிட்டு மாண்டு மடிந்தானே கட்டபொம்மன் - "என் முகத்தை மூடாதே - வீண் பழியேற்று விழிமூடத் தயாராகவே இருக்கிறேன்" என்று தூக்குமேடையில் தொங்கினானே சதாம் உசேன் - அவர்கள் எல்லாம் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக அர்த்தமா?

கேள்வி :- 2006ல் நடைபெற்ற சென்னை மாநகராட்சி

மன்றத்திற்கானத் தேர்தலில் நடைபெற்ற வன்முறை, மையங்கொண்ட புயலாக இருந்தது என்றும் காவல் துறை நடவடிக்கையால் கரையைக் கடந்தது என்றும் ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறிய நீங்கள், அதே பேட்டியில் 2001 உள்ளாட்சித் தேர்தலில், வன்முறை "சுனாமியாகக் கொந்தளித்தது" என்று கூறியிருக்கிறீர்களே?

கலைஞர் :- ஆம்! இதில் நான் சொல்வதை மட்டுமல்ல, இதோ 2001 மாநகராட்சித் தேர்தலில் அ.தி.மு.க.வினர் நடத்திய அராஜகங்களை அப்போது வெளிவந்த பத்திரிகைகள் விரிவாக விவரித்திருக்கின்றன. கண்ணுள்ளோர் படித்து, அன்று நடந்ததும், இன்று நடந்ததும் ஒரே அளவானதா என்பதை நீதி நெறி தவறாமல் நினைத்துப் பார்த்து நல்ல தீர்ப்பை அவர்களே கூறிக் கொள்ளட்டும்.

இதோ, அந்த ஏடுகளில் அன்று வெளிவந்த செய்திகள் :-

"இந்து" 17.10.2001

VIOLENCE MARS CIVIC POLL

"Booth capturing, stuffing of ballot boxes, road blockades, group clashes and police firing marred the first phase of the local bodies poll in the State today.

Gangs came to the booths in several auto rickshaws and vans, threatened the election agents, chased away the waiting voters and "stuffed" the boxes. In the forefront of the AIADMK manoeuvres were its local leaders, Mr. P.K. Sekar Babu, an MLA, and Mr. Karate Thiagarajan, a contestant in one of the Corporation Wards.

★

மேலும் அதே நாளில் "இந்து" நாளிதழில் வெளி வந்த செய்திகள் வருமாறு :-

"சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் கவுன்சிலர்கள் தேர்தலின்போது, ஆயுதம் தாங்கிய கும்பல் பூத்துகளைக் கைப்பற்றியதோடு, நகரின் சில பகுதிகளில் வாக்காளர்களை அதிக அளவில் பயமுறுத்தியதோடு, கொசப்பேட்டையில் உள்ள தி.மு.கழகத் தேர்தல் அலுவலகத்திற்கும் தீ வைத்தனர். இந்தக்

கூட்டம் வாக்குச் சீட்டுகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அ.தி.மு.க. மற்றும் ஒரு சில சுயேச்சைகளின் ஏஜெண்டுகளைத் தவிர, மற்ற கட்சிகளின் ஏஜெண்டுகளையெல்லாம் விரட்டி விட்டு ஓட்டுப் பெட்டிகளுக்குள் அந்த வாக்குச் சீட்டுகளைத் திணித்துக் கொண்டனர். இது ஒரு திட்டமிட்ட செயலாகும். காவல் துறையினர் அங்கே இருந்த போதிலும், ஆயுதம் தாங்கிய இரண்டு கும்பல்கள், சுதந்திரமாக பல வாகனங்களில் ஏறிக் கொண்டு பூத்துகளுக்குள் நுழைந்து, கட்சிகளின் ஏஜெண்டுகளையும், தேர்தல் அதிகாரிகளையும் பயமுறுத்தி விட்டுக் கள்ள வாக்குகளை போட்டதையும் தடுக்க முடியவில்லை. திருவான்மியூர் பகுதியிலே 8 மணி அளவிலேயே வன்முறை தொடங்கிவிட்டது."

★

17.10.2001 தேதிய "எக்ஸ்பிரஸ்" நாளேட்டில் வெளி வந்த செய்திகளுக்கான தலைப்பு மட்டும் வருமாறு :-

"Polling turns nasty on Day one, chaos reigns"

Unprecedented booth capturing, voter apathy, deletion of names from electoral rolls and Police lathicharge marked the elections to the Chennai Corporation.

★

16.10.2001 தேதிய "மாலைமுரசு" இந்த வன்முறை குறித்து எழுதியிருந்ததில் ஒரு பகுதி மட்டும் வருமாறு :-

முதல் பக்கத் தலைப்பு -

"சென்னையில் பல இடங்களில் ரகளை!

ஓட்டுப் பதிவில் வன்முறை - கோபாலபுரம் ஓட்டுச்சாவடியை குண்டர்கள் கைப்பற்றினர்"

சென்னையில் நடந்த ஓட்டுப் பதிவில் பல இடங்களில் வன்முறை நடந்தது. கோபாலபுரம் ஓட்டுச் சாவடிக்குள் குண்டர்கள் ஆயுதங்களுடன் புகுந்தனர். அதிகாரிகளை அடித்து விரட்டி விட்டு ஓட்டுச் சீட்டுகளைப் பறித்தனர். பின்பு அவர்கள் அங்கிருந்து கார்களில் தப்பிவிட்டனர். போலீசார் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். யாரையும் கைது செய்யவில்லை.

“பீகாரில் நடப்பது போல சென்னையிலும் ஓட்டுச் சாவடியை கைப்பற்றும் சம்பவம் நடந்தது. பட்டாக் கத்தி மற்றும் உருட்டுக் கட்டைகளுடன் ஓட்டுச் சாவடிக்குள் புகுந்த ரவுடிகள், அங்கிருந்த தேர்தல் அதிகாரியை அடித்து மிரட்டிவிட்டு ஓட்டு போட்டனர்.

கான்ரான்ஸ்மித் சாலையில் இருந்த வாக்குச் சாவடியின் அதிகாரி வெங்கடேஷ் கூறியதாவது :-

“காலையில் வாக்குப் பதிவு சுமுகமாகத் தொடங்கியது. நான் உடல் நலமில்லாதவன், இங்கு நல்ல முறையில் வாக்குப் பதிவு நடக்க வேண்டும் என்பதால் நேற்று முதலே ஏற்பாடுகளைக் கவனித்து வந்தேன். என் வாழ்நாளில் இதுவரை பார்க்காத ஒரு வன்முறை காட்சியைப் பார்க்க வேண்டியதாகி விட்டது. திடீரென்று இந்த வாக்குச் சாவடிக்குப் பத்து பேர் வந்தனர். ரொம்பவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசினர். என்னால் வேதனை தாங்க முடியவில்லை. கூனிக் குறுகி விட்டேன். வந்தவர்களைப் பார்த்த பிறகு, வாக்காளர்கள், அலுவலர்கள் பதறி விட்டனர். அதில் ஒருவன், எத்தனை ஓட்டு போட முடியுமோ, அத்தனை ஓட்டு போடுங்கடா! என்று கூறினான். ஒருவனோ எத்தனை குத்து குத்த முடியுமோ! அத்தனை குத்து குத்துங்க, என்று கூறினான். ஓட்டு சீட்டுகளைப் பிடுங்கி இஷ்டம்போல குத்தினர். போலீசாரையும் வாக்காளர்களையும் தள்ளி விட்டுச் சென்றனர்.

சென்னை நந்தனத்தில், டி.ஏ.வி. மெட்ரிகுலேஷன் பள்ளி வாக்குச் சாவடியில் ஓட்டுப் பதிவு நடந்து கொண்டிருந்தது. அப்போது பெண்கள் பூத்தில் ஒரு கும்பல் புகுந்தது. வாக்குச்சாவடி அதிகாரிகளை மிரட்டி இரண்டு கட்டு சீட்டுகளை அள்ளிக் கொண்டு அந்தக் கும்பல் ஓடிவிட்டது.

சென்னை வேளச்சேரியில், 153வது வார்டு உள்ளது. இங்கு உள்ள கணேசன் மெட்ரிகுலேஷன் பள்ளி வாக்குச்சாவடியில் இன்று காலை வாக்குப் பதிவு நடைபெறும்போது, திடீரென்று ரகளை ஏற்பட்டது. இதனால் வாக்குச் சாவடி இழுத்து மூடப்பட்டது. மக்கள் ஓட்டுப்போட முடியாமல் குமுறலுடன் வெளியேறினர்.”

இதே “மாலை முரசு” ஏட்டில், “பொன்னேரி அருகே ஓட்டுச் சாவடியில் துப்பாக்கிச் சூடு” என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி வருமாறு :-

"பொன்னேரி அருகே ஓட்டுச் சாவடியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. முன்னதாக நடந்த கல் வீச்சில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர்.

தமிழ்நாட்டில் இன்று முதல்கட்டமாக உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்தது. பல்வேறு இடங்களில் வன்முறை தலை தூக்கியது. கல்வீச்சு ரகளையில் ஈடுபட்டனர். பல இடங்களில் மோதல் ஏற்பட்டு, அடிதடியும் நடந்தது. கலவரத்தை அடக்க போலீசார் தடியடி நடத்தி விரட்டி அடித்தனர்."

"நெல்லையில் கலவரம்" என்ற தலைப்பில் ஒரு செய்தி.

"ஓட்டுப் பதிவில் மோதல், அருப்புக்கோட்டை அருகே துப்பாக்கிச் சூடு" என்ற தலைப்பில் மற்றொரு செய்தி.

"வாக்குச் சாவடிகள் சூறையாடல்" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில், "பரவலாக வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவதற்கு ரவுடிகள் முயற்சி செய்தனர். புரசைவாக்கம், ஜாபர்கான் பேட்டை, திருவான்மியூர், கோபாலபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகள் சூறையாடப் பட்டன. இதனால் பெரும்பாலான வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை"

"தேர்தல் வன்முறை - ஓட்டுப்பெட்டிகள் கொளுத்தப்பட்டன - அரியலூர், முசிறியில் சம்பவம்" என்ற தலைப்பில் அரிவாள் வெட்டு, தீ வைப்பு போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

★

18.10.2001 தேதிய மாலை முரசு, இரண்டாவது கட்ட வாக்குப் பதிவின்போது வெளியிட்ட செய்திகளில் சில வருமாறு :-

"சென்னை புறநகர் பகுதியில் தொடர்ந்து கள்ள ஓட்டு - தர்மபுரி அருகே மோதல், துப்பாக்கிச் சூடு" என்ற தலைப்பில் வெளிவந்தவை வருமாறு :-

"ஆலந்தூர் நகரசபை தேர்தலில் இன்று கள்ள ஓட்டுக்கள் தாராளமாக போடப்பட்டன. அமைச்சர் ஒருவரே கள்ள ஓட்டுப் போட ஆட்களை அழைத்துச் சென்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தர்மபுரி அருகே கள்ள ஓட்டுப் போட முயன்ற போது, போலீசுக்கும், பொது மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதையொட்டி நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

நங்கநல்லூரில் 29வது தெருவில் உள்ள முபரிஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 2 வாக்குச்சாவடிகள், 44வது தெருவில் உள்ள ராஜ்குமார் பள்ளியில்

2 வாக்குச்சாவடிகளை முற்றிலும் அ.தி.மு.க.வினர் தங்கள் வசம் கொண்டுவந்தனர். காலை 8 மணிக்கெல்லாம் இந்த வாக்குச்சாவடிகள் முற்றுகையிடப்பட்டன. அதில் இருந்த அதிகாரிகளை மிரட்டி அ.தி.மு.க.வினர் கள்ள ஓட்டு போடத் தொடங்கினர். இந்த வாக்குச்சாவடிகள் பக்கமே பொதுமக்கள் போக முடியாத நிலை இருந்தது. திகைப்புடன் அங்கு நடந்தவற்றை அவர்கள் நிருபர்களிடம் விவரித்தனர். செய்தி சேகரித்த பத்திரிகையாளர்களையும் குண்டர்கள் மிரட்டினர். புகைப்படக்காரர்களும் படம் எடுக்க முடியாமல் திரும்பினர்.

அமைச்சர் முன்னிலையிலேயே இந்த அராஜகம் நடந்ததை பொது மக்கள் வன்மையாகக் கண்டித்தனர். மறு தேர்தல் நடத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர்.

★

தினமலர் நாளேட்டில் வெளிவந்த செய்தியின் சுருக்கம் வருமாறு -

தலைப்பு - "ஓட்டா போடுறே? ஓடு" - சென்னையில் பட்டப் பகல் தர்பார் -

எங்கெங்கு காணினும் ஆறாய் கள்ள ஓட்டு வெள்ளம்!

வன்முறை பெட்ரோல் குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு!

"வன்முறைச் சம்பவங்களால் சென்னை ஓட்டுச் சாவடிகளில் பதட்டமும், பரபரப்பும்தான் காணப்பட்டது. சென்னையில் கள்ள ஓட்டு போடும் விவகாரத்தில் பட்டப்பகல் தர்பாரே நடந்தது என்று சொல்லலாம். திருவான்மியூரில் தொடங்கி பல இடங்களில் போலீசார், அதிகாரிகள் கண் எதிரிலேயே பகிரங்கமாகக் கள்ள

ஓட்டுப் போடுவதும், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவதும் சகஜமாக நடந்தது. திருவான்மியூர், சைதாப்பேட்டை, புரசை வாக்கம் உட்பட பல இடங்களில் கள்ள ஓட்டுக் கும்பல் பகிரங்கமாக நடமாடியது. ஆளுங்கட்சியினர் முன் போலீசார் எந்தவிதக் கெடுபிடிக்கும் தயார் இல்லை.

கத்தியைக் காட்டி மிரட்டல் - சரியாக 12.15 மணிக்கு தென் சென்னை மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் 200 பேர் அடங்கிய கும்பலுடன் பள்ளி வளாகத்திற்குள் ஆவேசமாக நுழைந்தார். 200 பேரும் இளைஞர்கள். முதலில் ஆண்கள் ஓட்டுச் சாவடியை குண்டர் படை இழுத்து மூடியது. குண்டர் படையினர் வாக்குச் சீட்டுகளை எடுத்து மேயர் வாக்குச் சீட்டுகளையும், கவுன்சிலர் சீட்டுகளையும் தனித்தனியாக பிரித்து ஆளுக்கொரு கத்தையாக எடுத்துக் கொண்டனர். பின்னர், போஸ்ட் ஆபீசில் முத்திரை குத்துவது போல் ஓட்டுகளை குத்தோ, குத்து என்று 15 நிமிடத்தில் அனைத்து ஓட்டுகளையும் குத்தி முடித்தனர்."

இவை உதாரணத்திற்காக எழுதப்பட்ட ஒரு சில வாசகங்கள்தான். இதுபோலவே வேறு பல இதழ்களும் இந்த வன்முறைச் சம்பவங்களைப் பற்றி பக்கம் பக்கமாக அப்போதே எழுதியிருக்கின்றன. தமிழகம் முழுவதும் 255 வாக்குச் சாவடி களில் மறு வாக்குப் பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

★

வாக்கு எண்ணிக்கை நடந்ததைப் பற்றிக் கூட "இந்து" நாளிதழ் எழுதும்போது, "வாக்குப் பதிவு நாளின்போது நடந்த சம்பவங்களைப் போலவே மீண்டும் வாக்கு எண்ணிக்கையின்போது பயங்கர சம்பவங்கள் நடந்தன. எதிர்க்கட்சிகளின் ஏஜெண்டுகளும், சுயேச்சைகளின் ஏஜெண்டுகளும் விரட்டி அடிக்கப்பட்டனர். மேலும் சில தேர்தல் அதிகாரிகளும் பயந்து போய் தடுமாறி, விட்டால் போதும் என்று அங்கிருந்து தப்பியோடி உள்ளனர். நள்ளிரவு 1 மணியளவில் இந்த வன்முறை வெறியாட்டம் துவங்கியது. இதைத் தொடர்ந்து வாக்கு எண்ணும் பணி நிறுத்தப்பட்டது. அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் அத்துமீறி ஆயுதம் ஏந்திய ஆளுங்கட்சியின் ஆதரவு வன்முறைக் கும்பலிடமிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று அங்கிருந்த

அதிகாரிகளே சுமார் ஒரு மணி நேரத்திற்குத் தர்ணா போராட்டம் நடத்தினர். அ.தி.மு.க. விற்கு சாதகமாக இல்லாத வாக்குகள் அனைத்தையும், அவர்கள் தங்கள் இஷ்டம்போல் 'மை பேடை' பயன்படுத்தி விரல்களில் முத்திரைகளைப் பதித்து, அவைகளைச் செல்லாதவைகளாக ஆக்கியுள்ளனர்."

"அன்று நடந்தது சரி! இன்று அதில் ஒரு
துளி நடந்தாலும் அது தவறுதானே! - ?"

"துளியைப் பெரிதுபடுத்துவோர்,
பேரலைச் சுனாமியைப்
பெரிதுபடுத்தாமல் மறைத்தனரே -
அது என்ன நியாயம்?"

என்பதே நமது கேள்வி!

அன்புள்ள,
மு.க.

18-2-2007

# 3254. சங்கே முழங்கு!

உடன்பிறப்பே,

*“கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்,*
*பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்,*
*நனிபசு பொழியும் பாலும் – தென்னை*
*நல்கிய குளிரள நீரும்*
*இனியன என்பேன் எனினும் – தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!”*

இக்கவிதை, யாரின் கை வண்ணம்? யாருடைய கற்பனை வளத்தில் கனிந்து குலுங்கும் எண்ணம்?

“தமிழுக்கு அமுதென்று பேர்” - என்று தலை நிமிர்ந்து முழங்கிய அந்தப் புரட்சிக் கவிஞன் பாரதி தாசனைத் தவிர, வேறு யார்? ஆவி நிகர்த்த நம் அன்னைத் தமிழுக்கு இத்தகைய புகழ்மிக்க ஒளியுமிழும் மணிமுடியை அணிவித்திட முடியும்?

அருந்தமிழுக்கு அவர் சொன்ன அத்தனை சிறப்புகளையும், தகுதிமிக்க எத்தனையோ நிகழ்ச்சிகளில், கவிதை வடிவத்தில் - கவின் கலை வடிவத்தில் - கவரும் இசை வடிவத்தில் - நாடக வடிவத்தில் - நாட்டிய வடிவத்தில் - தனித்தனியாகவும், அணி அணியாகவும் நுகர்ந்து மகிழ்ந்திருக்கிறோம்.

ஆனால், அவையனைத்தையும் வெல்லும் திறன் வாய்ந்ததாக - வெல்லச் சுவையையே இரண்டாம் இடத்துக்குத் தள்ளும் இனிமை நிறைந்ததாக, ஒரு இலக்கியக் கலை விழாவைக் காணும் வாய்ப்பு - கண்டு களித்திடும் வாய்ப்பு - சென்னை மக்களுக்குக் கிடைத்துள்ளது. அந்த வாய்ப்பினை வழங்கியோர், இந்த வாரம் முடிய வழங்கிட இருப்போர், தமிழக அரசின் சுற்றுலாத் துறை மற்றும் பண்பாட்டுத் துறை - தமிழக மையத்தைச் சேர்ந்தோர் ஆவர் -

ஆம்! சென்னைச் சங்கமம் அமைப்பின் சார்பில் “சங்கே முழங்கு” கலை நிகழ்ச்சி நடத்தி, நம்மைக் களிப்பிலாழ்த்தியவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

நானும், நமது அமைச்சர் பெருமக்களாம் என் தம்பிமார்கள் சிலரும் - அந்த விழா நடைபெற்ற ஐ.ஐ.டி. திறந்த வெளி அரங்கில் நுழைந்தபோது, சிற்றாறுகள் கடலில் கலந்தது போலத்தான் அந்த அரங்கில் குழுமியிருந்த மக்களிடையே கலந்தோம்.

கடந்த ஒரு திங்களுக்கு மேலாகவே என் மகள் கனிமொழி, பகலிரவு என்று பாராமல் - படிப்பு, படிப்பு என்று எப்போதுமே புத்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கும் பழக்கத்திற்கும் ஓய்வு கொடுத்து விட்டு, வீட்டிலேயே தங்காமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தமைக்கு, முதலில் எனக்குக் காரணம் புரியவில்லைதான்.

சென்னைச் சங்கமம் கலை இலக்கிய விழா கண்ட பிறகுதான், மாநாடு என்றாலும் - பொதுக் கூட்டம் என்றாலும் - தமிழ் விழா என்றாலும், என்னைப் போலவே பணியாற்றும் வழித் தோன்றலாகக் கனிமொழி விளங்குவதை என்னால் உணர முடிந்தது.

கனிமொழி மட்டுமா? நிகரற்ற அந்த நிகழ்ச்சியை இயக்கி, வெற்றி கண்டுள்ள இயக்குநர் தம்பி வசந்த் -

இசை ஏணி அமைத்து, நமை இன்ப வானில் ஏற்றி மகிழ்ந்த திரு. பால் ஜேக்கப் -

கலை நிர்மாணம் என்ற பெயரால், “தாஜ்மகால்” நிர்மாணித்தவர்களே வியப்புறும் வண்ணம், தலை சிறந்த மாளிகை மேடை அமைத்த திரு. தோட்டா தரணி -

மற்றும் சிவகுமார் - குமாரவேல் -

சிறப்பு விருந்தினராக வருகை தந்து, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய “புறநானூற்றுத் தாய்” கவிதையை, புலியின் முழக்கமென ஒலித்திட்ட திரைக் கலைஞர் பிரகாஷ் ராஜ் -

அனைத்துச் சிறப்பும் ஒருங்கிணைப்பாளருக்கே யென்று கீர்த்தி பெற்றவரும், கூர்த்த மதியாளருமான அருள்திரு ஜேக்கப் கஸ்பார் -

இத்தனை பேருடைய உணர்வுகளும், தமிழ் உணர்வாக ஒன்றிப்போய் விட்டதால் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பால் முழங்குவதே "சங்கே முழங்கு" நிகழ்ச்சி!

அந்த இனிய விழாவில் நான் ஆற்றிய உரையில் இந்த அமைப்பின் வருங்காலம், தமிழை, தமிழரை, தமிழ்ப் பண்பாட்டை, வாழ்விக்கும் காலமாக - வளப்படுத்தும் காலமாக அமைவதற்கு வழிகாண வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருப்பதை,

இப்போது இந்த அமைப்புக்கு ஆதரவு தந்துள்ள - இதழாளர்களும் - இதயமுள்ள தமிழர் அனைவரும் ஏற்று வாழ்த்திட வேண்டுகிறேன்.

இதோ! புரட்சிக் கவிஞராம் பாவேந்தரின் சங்க நாதம் கேட்போம்; வாரீர்!

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!*
*எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,*
*இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!*
*திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்*
*விண்ணோடும் உடுக்க ளோடும்*
*மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்*
*பிறந்தோம் நாங்கள், ஆண்மைச்*
*சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு*
*ஞாபகம் செய், முழங்கு சங்கே!"*

அன்புள்ள,

**மு.க.**

22-2-2007

# 3255. துணையின்றி வந்த துன்பம்!

**உடன்பிறப்பே,**

பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இல்லற வாழ்வில் கிடைக்கும் நிம்மதிதான், அவரது தொண்டு தொடர்வதற்கான ஊக்க சக்தி யென்பதை நான் அனுபவ ரீதியாக உணர்ந்தவன். என்னைப் போலவே என் உடன்பிறப்புகளாகிய நீங்களும் என்பதை, கழகக் குடும்பத்தின் பொறுப்பைச் சுமப்பவன் என்ற முறையில் அறிந்தே இருக்கிறேன். எந்தவொரு கட்சியையும் நான் குறைத்து மதிப்பிட்டு, நமது இயக்கத்தின் சிறப்பை, இயக்கத் தோழர்களிடம் இரண்டறக் கலந்துள்ள குடும்பப் பாச உணர்வை உயர்த்திப் புகழ்ந்து ஒப்பீடு செய்பவனல்லன்! என்றபோதிலும், நமது கழகத்தினரிடையே ஒரு மாற்று அதிகமாகவே அந்த உணர்வு, குடும்ப உணர்வாகவே மலர்ந்து, அன்பு மணம் வீசுகிறது என்பதை நான் நினைத்து நினைத்து மகிழ்ந்து கொண்டிருப்பவன்.

மாநாடுகளுக்கு, மற்றும் கழக விழாக்களுக்கு, உன்போன்ற உடன்பிறப்புகளை அழைக்கும் போது - அந்த மடல்களில் மறக்காமல் எழுதுவேனே? துணை மயிலுடன் வா என்று! நீயும் அதனை ஒரு அரசியல் கட்சித் தலைவனின் அழைப்பாகக் கருதாமல், நம் குடும்பத்து அண்ணனின் அன்பழைப்பாகவன்றோ எண்ணிக் கொண்டு, உறவினர் வீட்டு மண விழாவுக்கு வருவது போன்று - புத்தாடையுடுத்திய குடும்பத்தாருடன் - புன்னகை சிந்தும் குழந்தை குட்டிகளுடன் - "வணக்கம் அண்ணே!" என்று சொல்லிக் கொண்டு வந்திடுவாய் - என் வாழ்த்து பெற்றிடுவாய் - அப்படி இணை இணையாகப் பார்த்துக் களித்து, வரவேற்று மகிழ்ந்து, வாழ்த்துப் பெற்ற இணைகள் எத்தனையோ இந்த இயக்கத்தில் எனினும், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இணைகளில் ஒன்றாக இருந்ததுதானே தம்பி கோ.சி.மணி - கிருஷ்ணவேணி இணையாகும்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலாக கோ.சி. மணியின் வாழ்க்கைத் துணைவியாக வாய்த்த அந்தக் குடும்ப விளக்காம் கிருஷ்ண வேணியை நான் அறிவேன். ஆனால், அவருடன் நான் பேசியது, அவர் உணவு பரிமாற நான் அருந்தியது. இப்படி அரிதான நிகழ்ச்சிகள், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இரண்டொரு முறைதான் இருக்கும். அப்படியொரு மரியாதை - பழைய பண்பாடு.

இதை நான் சொல்வதால், சரியான பட்டிக்காடு, கட்டுப்பெட்டியென்று கருதிவிடக்கூடாது - தம்பியின் துணைவி, எல்லா வீடுகளிலும் கணவனின் அண்ணனிடம் காட்டும் மரியாதை - மதிப்பு - இதைத்தான் அந்தத் தங்கை கிருஷ்ண வேணியிடமும் நான் கண்டிருக்கிறேன்.

காடு மேடுகள் அலைந்து திரிந்து கடமையாற்றி, இந்தக் கழகம் வளர்த்த தம்பி மணியின் கால்களில் தைத்திருக்கும் முட்களை மட்டுமல்ல, அவர் நெஞ்சிலே பிறாண்டியிருக்கும் பகைக் கழுகுகளால் விளைந்த காயங்களையும், ஆறிட வைக்கும் கடமையுணர்வுடன் குடும்பப் பொறுப்பில் பங்கேற்றவர் கிருஷ்ணவேணி.

தஞ்சைத் தரணியில் மன்னை நாராயணசாமி அவர்களின் வழிநின்று, ஏன் - அவரது வாரிசாகவே விளங்கி இயக்கம் வளர்த்திடும் தம்பி மணிக்கு, வாழ்க்கைத் துணைவியாக - வழித் துணையாக - வலிமை மிகு துணையாக - வாழ்வில் கணவனும், மனைவியும் பகிர்ந்து கொள்வது வசந்தத்தை மட்டுமல்ல! வறண்ட பாலைவனக் கொடுமையைக் கூட என்பதை இருவரும் வாழ்க்கை இலக்கணமாகக் கடைப்பிடித்தனர். அந்த இலக்கண நூலின் ஒரு பகுதியை - ஆம்! கிருஷ்ணவேணி என்ற அத்தியாயத்தைக் காலமெனும் கறையான் அரித்து விட்டது. அவர் மணிக்குத் துணையாக இல்லை, இப்போது! நாமெல்லாம் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில், நமது அன்பு சகோதரியை - மணியின் ஆருயிர்த் துணைவியை இழந்து, ஆடுதுறையென்ற அழகான சிற்றூரே அழுது புலம்பிக் கொண்டிருக்கிறது.

அந்த உடன்பிறப்பு கிருஷ்ணவேணி மறைந்து விட்டார் என்ற சேதி, என் செவிகளில் வீழ்ந்ததும் என் சிந்தையில் ஓடியது பின்வரும் காட்சிதான்!

இந்தியத் திருநாட்டில் நெருக்கடி நிலைப் பிரகடனம்!

அதை எதிர்த்து கழகச் சார்பில் நான் தீர்மானம் எழுதுகிறேன்.

மிக நீண்ட தீர்மானம் -

இந்தியப் பிரதமரிடமிருந்து தூதர் வருகிறார் -

“தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு -

நெருக்கடியை ஆதரிப்பதாக அறிக்கை விடு”

என்கிறார் அந்தத் தூதுவர் -

இல்லையேல் ஆட்சியும் இல்லை என்பது தெரிந்தும்,

எழுதியதைத் திரும்பப் பெறுவது,

அதுவும் ஜனநாயகம் காத்திடும் போராட்டத்துக்காக

எழுதிய தீர்மானத்தை திரும்பப் பெறுவது

இயலாது என நான் அறிவித்து விட்டதால்-

தொடர் இடர்கள் தொடர்ந்தன -

ஆட்சி கலைக்கப்பட்டது -

வழக்குகள் எம்மை மொய்த்துக் கொண்டன -

ஆயிரக்கணக்கானக் கழக முன்னோடிகள்,

உடன்பிறப்புகள் சிறையில் ஓராண்டு காலம்

அடைபட நேர்ந்தது.

கோ.சி.மணி திருச்சி சிறையில்! ஒரு திருமண விழாத் தலைமைக்கு அழைப்பு - சென்னையிலிருந்து புறப்படுகிறேன் - புறப்படுவதற்கு முன், ஆடுதுறைக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது - தொலைபேசி மூலம்!

காரில் நாலைந்து பேர் தஞ்சை திருமணத்துக்காகச் செல்கிறோம். இரவு ஆடுதுறை வருவோம். இரவு உணவு பலகாரம் போதுமானது என அறிவித்திருந்தோம்.

சென்னையிலிருந்து காரில் கிளம்பி, இரவு 12 மணிக்கு

ஆடுதுறை அடைந்தோம். வீட்டில் சகோதரி கிருஷ்ணவேணி இருந்து வரவேற்றார் - பழம், பால் வழங்கப்பட்டது. அதுதான் இரவு உணவு போலும் என ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு, பழங்களைச் சாப்பிட்டு, பாலருந்தி, படுத்துத் தூங்கி விட்டோம்.

விடியற்காலை 5 மணிக்கு எழுந்தோம். தஞ்சையில் போய்ச் சாப்பிடலாம் எனக் கூறிவிட்டு, காரில் தஞ்சை புறப்பட்டோம் நல்ல பசியோடு!

காலையில் சகோதரி எழுந்து வாயிற்புறம் பார்த்தால், நாங்கள் இல்லை - காரில் கிளம்பி விட்டோம். இரவு பலகாரம் வழங்கினால் போதுமென சொன்னதை, காலைப் பலகாரம் என்று கருதிக் கொண்டார் - அதனால் காலையில் தயாரித்த இட்லி, தோசை போன்ற பத்து பேருக்குத் தயாரித்த பண்டம் பலகாரம் வீணாயிற்று!

நாங்கள் சாப்பிடாமல் புறப்பட்டுவிட்டதற்காக, அவர் ஒவ்வொரு நாளும் வருந்தியிருக்கிறார். அந்தச் சகோதரிக்கு என்னால் சமாதானம் கூறவே முடியவில்லை.

சரியாகக் கேட்டுக் கொள்ளாததால், கட்சித் தலைவரையும், முன்னோடிகளையும் இரவு முழுவதும் பட்டினி போட நேரிட்டுவிட்டதே என்று அவர் கவலைப்பட்டுக் கொள்ளாத நேரமே இல்லை.

அப்படியொரு

அன்பு !

பாசம் !

பரிவு !

பற்று !

கூடப் பிறந்த அண்ணன் தம்பிகளைவிட, கொள்கைக் கூடாரத்து உடன்பிறப்புகளுடன் அப்படியொரு ஒட்டிக் கொண்ட பிணைப்பு.

அந்தச் சகோதரியின் பிரிவை என்னாலேயே தாங்க முடியவில்லை.

என் தம்பியினால் எப்படி தாங்க முடியும்?

இன்பம் தனியாக வரும்!

துன்பம் துணையோடு வரும் என்பர்.

இந்தத் துன்பம் என் தம்பிக்கு,

துணையின்றியன்றோ வந்திருக்கிறது!

நாமெல்லாம் அவருக்கு துணையிருக்கிறோம் என்பதால்!

அன்புள்ள,

**மு.க.**

13-3-2007

# 3256. பன்னீர்செல்வம் தந்த பல் உடைக்கும் பதில்!

**உடன்பிறப்பே,**

"தடார்! படார்! டாம்! டூம்!" என்று எகிறிக் குதித்து "உன்னை விட்டேனா பார்! நான் யார் தெரியுமா? ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜ குல தீர - ஈரேழு பதினாலு உலகத்தையும் ஆட்டிப் படைத்து - கம்பர், வம்பர், கிம்பர் அத்தனை பேரும் கால் தொழுது கை கூப்பிட - அஷ்ட, இஷ்ட, கிஷ்டமா தேவதைகள் அடிபணிந்து நிற்க - சகல புவனங்களையும் - புவனங்கள் மிதக்கின்ற சமுத்திரங்களையும் - கட்டியாளும் கஜமுக புஜபல பராக்கிரம பூபதி - சூரிய சந்திர - சுக்கிர கிரகங்கள் - சுற்றிவரச் சுழலும் சூர பத்மனையே பந்தாடியவள் - மேஷ, ரிஷப, சுக்ல சுரோனித - அட்சய - அபூர்வ விநோத - அகிலாண்ட பரமேஸ்வரி - அட்டமா சித்துக்காரி - அடியேனை ஏற்றுக்கொள்க எனக் கெஞ்சிட, நான் மிஞ்சிட, தத்தோம் - ததிங்கிணத்தோம் என்று - தவசிகள் நடனமாட - தாதிகள் சதுர் ஆட - தபோதனர், கின்னரர், கிம்புருடர், அட்டதிக்குப் பாலகர் அடிவருட - ஆனையின் வயிற்றைக் கிழித்து வெளிப்பட்ட ஆங்காரக் காளியடா காளி!"

என்று கூச்சலிட்டவாறு தெருக் கூத்துத் திரையைக் கிழித்துக் கொண்டு பத்ரகாளி - பாடிக் கொண்டும், பயங்கரமாய் ஆடிக் கொண்டும், படுதாவுக்கு வெளியே வருவார்! கையில் பெரிய வேப்பிலைக் கொத்து! இன்னொரு கையில் உடுக்கு! எதிரே ஒருவன் பம்பை அடிக்க, ஒருவர் பறைகொட்ட, பெண்கள் குலவை வானைப் பிளக்க,

"வந்தாளய்யா காளி!

தந்தாளய்யா வரத்தை!"

என்று கூத்து மேடையை விட்டுக் காளி வேடதாரி, ரசிகர் அரங்கத்துக்கே வந்து விடுவார் - பையன்கள், "பாபு தாசர் வந்து விட்டார் தேக்கோ தேக்கோ" என்று குதியாட்டம் போட்டுக் கொக்கரிப்பார்கள்.

எங்களூருக்குப் பக்கத்து ஊரில் ஆண்டு தோறும் நடைபெறும் "அல்லி அர்ச்சுனா" "பவளக்கொடி" தெருக் கூத்துகளில் இப்படித்தான் "காளி வேடதாரி" காட்சி கொடுப்பார். கிராமப்புறங்களில் அநேகமாகப் பெரும்பாலும் காளி வேடம் கட்டுபவர் ஆணாகத்தான் இருப்பார். (காளி. என். ரத்தினம்- நினைவுப்படுத்திக்கொள்க) அது, தெருக்கூத்துக் காளியாக இருந்தாலும், தெருவில் மேளதாளத்துடன் குதித்தாடும் கோரக் காளியாக இருந்தாலும் அந்தத் திருவிழாக் காளியாகவும் ஒரு நடுத்தர வாலிபர்தான் வேடம் கட்டி வருவார். சிறு வயதில் நண்பர்களுடன் தெருக் கூத்துகளிலும் - திருவிழா மேடைகளிலும் - அந்த உக்கிரக் காளியம்மனின் உத்வேகத்தையும், அவர்கள் உரத்த குரலெடுத்து ஓங்காரக் கூச்சலிடுவதையும் கண்டு ரசித்திருக்கிறேன். இப்பொழுதுகூட தூங்கும்போது கனவுகளில் அந்தக் காளி, கூளிகள் வரத் தவறுவதில்லை. ஆம்! வேடம் கட்டப்படப் பயன்பட்ட உருவங்கள்தான்.

அவ்வாறு அவை கனவில் தோன்றுவதற்குக் காரணமே, காலை முதல் மாலை வரையில், நாம் காணும் காட்சிகளின் மறு பிரதிபலிப்பாகக் கூட இருக்குமென்று நான் இப்போதெல்லாம் எண்ணிக்கொள்வதுண்டு! காளி, கூளி இதெல்லாம் கற்பனை என்கிறோம். பிறகு எப்படி அந்த உருவங்கள் கனவில் தோன்று கின்றன? அவை உண்மையில் காளிகள் அல்ல! கனவில் தோன்றும் கற்பனை வடிவங்கள்!

நேற்றைய தினம் இப்படித்தான் காலை மலர்ந்து மாலைக்குள் நான் கண்ட காட்சிகளின் தொகுப்பாக இருக்கும்போலும்! இரவு தூக்கத்தில் அந்தக் கனவே வந்து என்னைக் கண்விழிக்கச் செய்து, கலவரத்திலும் ஈடுபட்டது.

அப்படியென்ன காலையிலோ - அல்லது மாலையிலோ என் கவனத்தைக் கவர்ந்த காட்சியினை நான் கண்டேன்? அதைக் கனவாகக் கண்டிட!

மாலையிலும் நாளேடுகள் வருகின்றன அல்லவா? - அவற்றில் ஒரு ஏட்டில் கொட்டை எழுத்துத் தலைப்பு! அந்தத் தலைப்பை

படித்துக் கொண்டிருக்கும்போதே, அதைத் தொடர்ந்து கனவு உருவங்களின் காட்சி!

அது என்ன, கொட்டை எழுத்துத் தலைப்பு?

**"தி.மு.க. அரசு இலவச சைக்கிள் திட்டத்தில் முறைகேடு!**
**அரசுக்கு 20 கோடி ரூபாய் இழப்பு!**
**டெண்டரை ரத்து செய்யாவிட்டால்**
**அ.தி.மு.க. சும்மா இருக்காது.**
**ஜெயலலிதா சவால்!"**

என்ன டெண்டர்?

எதற்கு சவால்?

டெண்டரை ரத்து செய்யாவிட்டால் அ.தி.மு.க. சும்மா இருக்காதாமே?

அடடா! என்னே ரோஷம்! என்னே வீரம்?

ரத்து செய்! இல்லையேல் செத்து மடி!

என்பது போல "கார சார வீர தீர சூராதி சூர ரண ரங்க மார்த்தாண்ட உப்பில்லாமல் கலக் கஞ்சி குடிக்கும் ஓர் வில்லாதி வில்ல" அறிக்கை - அந்த அறிக்கை இந்த அம்மையாரின் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின் திருக்கூத்துக்கு போடப்பட்ட திரை! அந்தத் திட்டத்தைக் கை விடாமல், நமது அரசும் நிறைவேற்றியதால் இவருக்குக் கோபம் - அதனால் காளி வேடம் கட்டிக் கொண்டு கர்ச்சிக்கிறார் - இலவச சைக்கிள் வாங்கியது - வழங்கியது - எல்லாவற்றையும் பற்றி, பல் உடைக்கும் பதில் ஒன்றை மிக விளக்கமாக, விலாவாரியாக, நமது பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் தம்பி பன்னீர்செல்வம் அளித்துள்ளார். அந்தப் பதில் முழுமையாக "தினத்தந்தி" போன்ற ஏடுகளில் வந்துள்ளதால், நானும் திரும்ப அவற்றையே சொல்லிக் கொண்டிராமல், இந்த ஊழல் தேவதை ஆட்சியில், இலவச சைக்கிள்கள் திட்டமிடப்படாமல் வழங்கியதில் ரூபாய் 17 கோடிக்கு மேல் முறைகேடாகச் செலவழிக்கப் பட்டதைச் சுட்டிக்காட்டி அனுப்பப்பட்ட "ஆடிட்டர் ரிப்போர்ட்"டை இத்துடன் இணைத்துள்ளேன்.

அந்த தணிக்கை அதிகாரியின் கடிதத்தில் உள்ள முக்கிய பகுதிகள் வருமாறு :-

SHANKAR NARAYAN

PRINCIPAL ACCOUNTANT GENERAL (CIVIL AUDIT)

"I am enclosing in duplicate a draft paragraph on "Unfruitful expenditure of Rs. 17.79 crore due to improper planning" proposed for inclusion in the Report of the Comptroller and Auditor General of India for the year 2005-2006 - Civil - Government of Tamil Nadu."

"The supply of bicycles costing

Rs. 17.79 crore to XII Standard students after the examinations defeated the intended purpose and thus the expenditure was unfruitful"

(12ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தேர்வுகள் முடிந்த பிறகு, அடிப்படை நோக்கத்தையே குலைக்கின்ற வகையில், 17.79 கோடி ரூபாய் மதிப்புள்ள மிதி வண்டிகளை வழங்கிய காரணத்தால், அந்தச் செலவே பயனற்றதாகி விட்டது)

இவ்வாறு அம்மையாரின் நிர்வாகம் பற்றி தணிக்கை அதிகாரி அளித்துள்ள சான்றிதழுக்கு, இந்த "தடாலடித் தங்க மங்கை" தரப்போகும் பதில் என்ன? சொல்ல மாட்டார் - திடீரென்று இதை விட்டு விட்டு அடுத்த நிலைக்குத் தாவி விடுவார் - அங்கே தாவி, அங்கிருந்து சவால் விட்டு விட்டு, நம்முடைய பதிலுக்கு முன்பே வேறிடம் பாய்ந்து விடுவார்.

இந்த நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சியில் இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டபோது, எத்தகைய ஊழல் நடைபெற்றது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சைக்கிள் வழங்க டெண்டர் கோரப்பட்டது. நான்கு கம்பெனிகள் ஒரே விலையைக் குறிப்பிட்டு ஒப்பந்தப் புள்ளிகளைத் தாக்கல் செய்தன. ஆனால், நான்கு பேருக்கும் ஆணை வழங்காமல், ஒரேயொரு நிறுவனத்திற்கு மட்டும் கொடுக்க முடிவு செய்து ஆணை வழங்கியது உண்டா இல்லையா?

இவ்வாறு ஒரு கம்பெனிக்கு வழங்குவதற்கு ஏதுவாக, அவசர அவசரமாக நிதித் துறை சார்பில், 17.1.2005 அன்று அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது உண்டா இல்லையா?

டெண்டர் பற்றி பேச்சுவார்த்தை நடத்திய போது, ஒரே விலையைக் குறிப்பிட்ட நான்கு நிறுவனத்தையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்காமல், ஒரு நிறுவனத்தை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, அவர்களுக்கே ஆணை பிறப்பிக்கப்பட்டதா இல்லையா?

நாணயமிருந்தால் -
நெஞ்சில் தூய்மையிருந்தால் -
முதலில் இவரது இலவச சைக்கிள்
திட்டத்துக்கு "ஆடிட்டர்" கொடுத்த
மதிப்புரையை வெளியிடட்டும் -
பிறகு "சவால் சண்டியராக" மாறட்டும்!

அன்புள்ள,
**மு.க.**
17-3-2007

# விளக்கக் கூட்டங்கள்; விரிவாக - விரைவாக!

**உடன்பிறப்பே,**

தேன்பாகு பெய்து இலையிலிட்ட தெள்ளமுதை இல்லத்தில் உள்ளோரும், இனியவனாம் கணவனும், இளமைச் செல்வங்களாம் குழந்தைகளும், உண்டு மகிழ்வதைக் கண்டு மகிழும் குடும்ப விளக்காம் கோல மயில் அடைகின்ற இன்பத்துக்கு அளவுதான் உளதோ? அந்த இன்பத்தை அனுபவத்தில் உணர்ந்து பூரிக்க ஓர் வாய்ப்பு - இதோ, நேற்று எனக்குக் கிடைத்துளது.

ஆம்! திடீரென வீடுகள் நிறைந்துள்ள வீதியில் வெடிச்சப்தம்! சரவெடிகள் பளீர் பளீர் எனும் மின்னல், பூத்திரி மத்தாப்புகளாக பூமிக்கும், வானுக்கும் புது விளையாட்டு காட்டிக்கொண்டிருந்தது.

பலகணி வழியே எட்டிப்பார்த்தால், "பட்ஜெட்" வந்த மகிழ்ச்சியில் பட்டாசு கொளுத்துகிறார்கள்" என்ற விளக்கத்தை அளித்துவிட்டுக் கொளுத்துவதை வேடிக்கை பார்த்து கை கொட்டி மகிழ்கிறவர்கள் - வாழ்த்து முழக்கமிட்டுக்கொண்டிருந்தவர்கள் -

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, "முன்னோக்கி நடைபோடும் சிங்கம், சற்று நின்று, சுற்று முற்றும் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்து முன்னோக்கி நடைபோடும் என்பர். அதுவே "அரிமா நோக்கு" எனப்படும். கடந்து வந்த பாதையைச் சிங்கம் திரும்பிப் பார்த்துவிட்டு நடப்பதைப்போல, கடந்த ஓராண்டு காலச் சாதனைகளையும், திட்டங்களையும், நடைமுறைச் செயல்பாடுகளையும், நிலைமைகளையும் நினைவு படுத்திக்கொண்டு பயணத்தைத் தொடர்வதற்குப் பாதையைச் சீர்படுத்திக்கொள்ள,

*"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்*
*தாழா துஞற்று பவர்"*

எனும் அய்யன் திருவள்ளுவரின் குறள் வழங்கிய உறுதியை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு, 2007-2008 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்த அரசு இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றது.

தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் இலட்சிய ஒற்றுமைக்குச் சான்றாக விளங்கும் இந்த அரசு, மத நல்லிணக்கம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கி, மதச்சார்பற்ற முறையில் நிர்வாகத்தை இன்று போல் என்றும் நடத்தும் என்ற உறுதியை அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அறிவிப்பதில் பெருமை அடைகிறது.

திராவிட இயக்க முன்னோடிகளால் தொடங்கப் பெற்று, எண்பதாண்டு காலத்திற்கு மேலாக நடைபெறுகின்ற இட ஒதுக்கீடு- சமூக நீதிப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, களங்கள் சிலவற்றில் வெற்றி கண்டிருப்பினும், சமூக நீதிப் போரின் முழு வெற்றியை அடையாத நிலைமை இன்னமும் இருப்பதை வருத்தம் தோய்ந்திடச் சுட்டிக் காட்டுவதுடன், வருங்காலத் தலைமுறையினர் சமூகநீதி வாயிலாகப் பெறக்கூடிய அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு, தீவிர முயற்சிகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஈடுபடும்.

- இவ்வாறு தொடங்கி,

தேர்தல் வாக்குறுதிகளாயினும், இந்த அவையில் நிறைவேற்றிடும் சட்டங்களாயினும்,

பல இடையூறுகளுக்கிடையிலேயும் நிறைவேற்றி முடித்திட முனைந்திடும் திட்டங்களாயினும் - "நம்மால் முடியுமா?" என்ற நம்பிக்கையைக் குலைக்கும் கேள்விக்குறி எழுமேயானால், எவ்வளவுதான் வலிமை உடையவராயிருந்தாலும், 'அவர் மேற்கொள்ளும் செயலில் உறுதியில்லாதவராக இருந்தால் அவரை உலகம் மதிக்காது'

*"எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்*
*வேண்டாரை வேண்டா துலகு"*

எனும் குறள் வழங்கும் அறிவுரையை எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு, இந்த அரசு ஆற்றியுள்ள கடமைகளையும், ஆற்ற இருக்கின்ற அருஞ்செயல்களையும் இந்த நிதிநிலை அறிக்கை

மிகவும் பொறுப்புடன் பட்டியலிட்டுள்ளது. இத்தனையும் தமிழ் மாநிலத்திலுள்ள ஒரு சாதாரண, சாமானிய, நடுத்தரக் குடும்பத்து மனிதரை - அவர் விவசாயியாகவோ, நெசவாளியாகவோ, மீனவராகவோ, தொழிலாளியாகவோ, வணிகராகவோ, அரசு அலுவலராகவோ எந்த வகையிலேனும் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருப்பவர் என்ற முறையில், அவரும், அவரைச் சார்ந்தோர் அனை வரும் வாழ்வில் வளம் பெற்றுத் திகழ்ந்திட ஏற்ற வழிமுறைகளைக் காண்பதற்காகவே இந்த அரசு, எந்நாளும், எந்தச் சூழ்நிலையிலும் கடமையாற்றும் என்ற உறுதியை வழங்கி, - அந்த அறவழிக் கடமையாற்றிட ஓர் கருவியாக அமைந்துள்ளது"

- என்பதாக நிறைவுற்றுள்ளது.

இடையிலே உள்ள பக்கங்கள் சுமார் எழுபத்து ஐந்து - அவை வெறும் தாள்களல்ல - தமிழகம், தலை நிமிரும்போதெல்லாம் அதைத் தட்டி, தலை தாழ வைக்கும் தன்னலக்காரர்களின் முரட்டுப் பிடியிலிருந்து இந்த நிலத்தை விடுவித்து, வளங்கொழிக்கும் வண்ணம் செய்திடவும் - "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அண்ணாவின் பொன்மொழியை நிலை நாட்டவும் நாம் பாடுபட்டுப் பணியாற்றி - இடையறாது உழைத்து இயற்றியதை - வகுத்தளித்து எல்லார்க்கும் நல்வாழ்வளிக்கச் செயலாற்றும் நாடி நரம்புகள்!

அவற்றின் துடிப்புகளே - ஒவ்வொரு பக்கத்திலும் காணுகின்ற வாக்கியங்கள், வார்த்தைகள், எழுத்துகள் -

வெறும் எழுத்துகள் மட்டுமல்ல! எண்ணக் குவியல் - ஏக்கப் பெருமூச்சில் விளைந்த ஏற்றமிகு எதிர்காலக் கனவுகள் - ஆம்! நிச்சயம் நிறைவேறப் போகும் கனவுகள் -

உடன்பிறப்பே!

உன்னால் அமர்த்தப்பட்ட ஆட்சிப் பொறுப்பில், உற்ற தோழமைக் கட்சிகளின் துணை கொண்டு அமர்ந்திருக்கும் - என் போன்றோர், இந்தத் தமிழகத்தை தரணியில் தலைநிமிரச் செய்ய இயற்றுகின்ற ஆக்கப் பணிகள் எனும் நீண்ட தவம் பலித்திட, நிதிநிலை அறிக்கை எனும் ஏடுகொள்ளாச் செயல்முறைகளை தொகுத்தளித்துள்ளோம்.

இவைதமை ஏட்டளவில் எழுதிக்காட்டிப் பயனில்லை - நாட்டளவில், நாட்டில் ஒவ்வொரு வீட்டளவிலும் பயன் விளைத்திட வேண்டும் -

பலரிடம் நீட்டிய பனிக்கட்டிபோல கரையாமல், அனைவருக்கும் அனைத்தும் கிடைத்திட, ஆவன செய்வது உன் போன்றோரின் கடமை -

**அந்தக் கடமையை நிறைவேற்ற**
**ஊர் ஊராகச் சென்றிடுக! -**
**ஊராரிடம் உரைத்திடுக! -**
**முதலில் நிதிநிலை அறிக்கையில்**
**எவை எவை உண்டு என்பதைச் சொல்!**
**அவை ஏழையின் துயர் போக்கும்**
**கற்கண்டு என்பதை எடுத்துக்காட்டு!**
**எதிரிகளேயாயினும் அவர்கட்கும் - நாம்**
**நடத்திட இருப்பதை படித்துக் காட்டு!**
**'பட்ஜெட்' விளக்கக் கூட்டங்கள்-**
**பட்டி தொட்டி, பட்டினக்கரைகளிலெல்லாம்**
**நடக்கட்டும்!**

விளக்கக் கூட்டங்கள், விரிவாக, விரைவாக-

விழித்தெழுந்துள்ள தமிழகம் வீறுநடை போடும் விதமாக, தொடரட்டும்!

அன்புள்ள,
**மு.க.**
26-3-2007

# 3258. பொய்யர்கள்; எச்சரிக்கை!

**உடன்பிறப்பே,**

அனைத்துப் பிரிவு மக்களும் ஆறுதல் பெறக் கூடிய ஒரு நிதி நிலை அறிக்கையை, இந்த அரசு, வழங்கியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்ற ஒரு சில எதிர்க்கட்சிப் பத்திரிகையாளர்கள், நிதி நிலை அறிக்கையில் அச்சியற்றப்பட்டு, நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களால் பேரவையில் எடுத்து வைக்கப்பட்டு, வானொலி, தொலைக்காட்சிகள் வாயிலாக நேரடியாகவே ஒலி, ஒளிபரப்பப்பட்ட உண்மைகளைக்கூட, மறைத்து விடுகிற மாய்மாலத்தை எப்படியோ கற்றுக் கொண்டு கதையளக்கின்றனர்.

ஓர் உதாரணம் சொல்கிறேன் கேள்! "கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்த முக்கியப் பிரச்சினை குறித்து, இந்தப் பட்ஜெட்டில் குறிப்பு ஏதும் இல்லை. இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி வழங்கியபோது அதனை, அப்போதைய அ.தி.மு.க. அரசு ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்ததாக, தி.மு.க. குற்றம் சாட்டியது. தற்போது மத்திய கூட்டணி ஆட்சியில் தி.மு.க. பங்கு பெற்றிருந்தும் இந்தத் திட்டம் குறித்து எவ்விதத் தகவலும் இடம் பெறாதது ஏமாற்றம் அளிக்கிறது"

என்று அந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது. பத்திரிகையின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. "காற்றில் பறக்கும் தி.மு.க. வாக்குறுதிகள்" என்று தலைப்பிட்டு எழுதியிருக்கிறதே, அந்தப் பத்திரிகைதான்! திராவிட இயக்கத்தை ஜென்ம விரோதியாகக்

கருதும் அந்த ஏட்டில் இப்படி ஒரு பொய்யை எழுதியிருப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை. எதிர்பார்த்ததுதான்.

பொய்யிலும் பொய் கடைந்தெடுத்த பொய்! கண்ணை மூடிக்கொண்டு மக்களையும் கண்ணற்ற கபோதிகள் என்று கருதிக்கொண்டு புளுகியிருக்கிறது அந்த ஏடு!

உடன்பிறப்பே! இதோ நன்றாகப் பார் - நான் உன் கையில் அளித்திருப்பது இந்த அரசின் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை! இந்த அறிக்கையில் தான் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றி குறிப்பு ஏதும் இல்லையாம் - பாவம்! அந்தப் பத்திரிகையாளருக்கு நாம் குறிப்பாக மட்டும் உணர்த்தவில்லை. குண்டு குண்டான தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துகளால் அச்சியற்றி எடுப்பான வாக்கியங்களாகவே உணர்த்தியிருக்கிறோம்.

இதோ நிதி நிலை அறிக்கை 2007-2008 -

பக்கம் 33: பத்தி எண் 84 -

"சென்னை மாநகரின் நீண்ட காலக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான பணிகள் 25.2.2007 அன்று தொடங்கப்பட்டுள்ளன. மேலும், நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடி நீராக்கும் மற்றுமொரு திட்டத்தை மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்துவதற்கு, சென்னை மாமல்லபுரம் சாலையில் நிலம் கண்டறியப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது".

"With a view to achieving a permanent solution to the drinking water problem in Chennai, works for setting up a desalination plant with a capacity of 100 million litres per day, have commenced on 25.2.2007. In addition, the Government proposes to set up another desalination plant with 100 million litres per day capacity with Central assistance and land has been identified for the same on Chennai-Mamallapuram road. The preparation of the detailed project report for the same is currently underway"

இந்தப் பக்கத்தைப் புரட்டாமலே, புரட்டு வேலையில் ஈடுபட்டு "பட்ஜெட்"டில் அந்தத் திட்டத்தையே காணோம் என்று புளுகு மூட்டையை அவிழ்ப்பது எப்படியிருக்கிறதென்றால் - மறைந்த தோழர் கழகத்தின் படைக் கலன் எனப்படும் டி.எம். பார்த்தசாரதி அவர்கள் எழுதிய "தி.மு.க. வரலாறு" ஏட்டில் "அண்ணா தொடங்கிய தி.மு.க. வில் - கருணாநிதியே அப்போது இடம்பெறவில்லை" என்று பண்ருட்டி பேச்சைக் கேட்டு உளறுகிற பைத்தியக்காரத்தனம் போல இருக்கிறது.

உடன்பிறப்பே, தோழர் டி.எம். பார்த்தசாரதி எழுதிய "தி.மு.க. வரலாறு" ஏட்டில், கழகம் தொடங்கிய நிகழ்ச்சியைப் பற்றி எழுதும்போது, 17.9.1949 அன்று காலை 7 மணிக்கு சென்னை, பவழக்காரத் தெரு, 7ஆம் எண் இல்லத்தில் கூடிய அமைப்புக் குழுவின் கூட்டத்தில், கழகத்தின் பெயர், கொடி பற்றிய அறிவிப்புகளும் செய்யப்பட்டு, கழகப் பொதுக்குழுவும் அறிவிக்கப்பட்டது. அந்தப் புத்தகத்தில் பக்கம் 109இல் பொதுக்குழு உறுப்பினர்கள் பெயர்கள் எல்லாம் வெளியிடப் பட்டுள்ளது. அந்தப் பொதுக்குழுவில் :-

"சி.என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், கே.ஏ. மதியழகன், மு.கருணாநிதி, என்.வி. நடராசன், ஈ.வெ.கி. சம்பத், டி.எம். பார்த்தசாரதி" என்று பட்டியல் தொடருகிறது.

இது மாத்திரமல்ல! "வாழ்வில் நான் கண்டதும், கேட்டதும்" என்ற தலைப்பில் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எழுதிய புத்தகத்தின் பக்கம் 177 வருமாறு :-

> "அறிஞர் அண்ணாவின் அழைப்பை யேற்று 150க்கு மேற்பட்ட முக்கிய முன்னணியினர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களில் அமைப்புக் கூட்டத்தில் பங்கு கொண்ட மிக முக்கியமானவர்கள் மட்டும் வருமாறு : அறிஞர் அண்ணா, நான், கே.ஏ. மதியழகன், கலைஞர் கருணாநிதி, சம்பத், என்.வி. நடராசன்"
>
> என்று நாவலர் பட்டியலிட்டிருக்கிறார்.

இந்த வரலாறெல்லாம் அப்போது இளைஞனாக மின்வாரியத்தில் பொறியாளராக இருந்தவருக்கு தெரியாது!

அவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு மற்றொரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், 1969ஆம் ஆண்டு கலைவாணர் சிலை திறப்பு விழா, சென்னையில் என் தலைமையில் தியாகராயநகரில் நடைபெற்றபோது, அந்த விழாவில் பேரறிஞர் அண்ணா, அருமை நண்பர் எம்.ஜி.ஆர்., ஏ.எல்.எஸ்., எஸ்.எஸ். வாசன், ஏ.வி.எம்., நடிகர் திலிப்குமார் போன்றவர்கள் எல்லாம் கலந்து கொண்டோம். அந்தச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட புகைப்படமும் அப்போது எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. ஆனால், அதன் பின்னர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் ஒரு விழா மலர் வெளியீட்டு விழா நடைபெற்ற போது, கலைவாணர் சிலை திறப்பு விழாவின் புகைப்படம் அந்த மலரில் இடம் பெற்றது. அந்த மலரில் வெளியிடப்பட்ட புகைப்படத்தில் இடையிலே இருந்த விழாத் தலைவராகிய என்னுடைய புகைப்படத்தை மட்டும் அதிலேயிருந்து நீக்கி விட்டு வெளியிட்டவர்தான் அந்த நபர்.

அப்படிப்பட்ட வரலாற்றுப் பிழைகளின் “வல்லுநராக”த் திகழும் ஒருவரை “வாத்தியாராக”க் கொண்டு - வாய் நீளம் காட்டி வம்பிலே சிக்கிக் கொள்வது நல்லதல்ல என்பதற்காகவே,

அவசரப்படும் பத்திரிகை ஆசிரியருக்குச் சொல்லும் சரித்திரக் குறிப்பை - ஆவேசப்படும் நண்பருக்கும் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

உடன்பிறப்பே, எவ்வாறு நமது கழகத்தைப் பற்றிய உண்மைகள் மறைக்கப்படுகின்றன, எவ்வாறு அனைவரும் போற்றுகின்ற அற்புதமான நிதி நிலை அறிக்கையை வேண்டுமென்றே திருத்தியும் மறைத்தும், இல்லாதது பொல்லாதது களைக் கூறி, ஏச்சுப்பேச்சுக்களால் இந்த இயக்கத்தையே அழித்துவிடப் படைத்திரட்டுகிறார்கள், பதுங்கிப் பாய்கிறார்கள், பச்சைப் பொய்களைத் தங்கள் போர்க்கணைகளாக ஆக்குகிறார்கள் என்பதையெல்லாம் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்களில் நீ மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

அதற்குப் பயன்படக் கூடிய ஆதாரபூர்வமான எடுத்துக் காட்டாகத்தான் “கடல் நீரைக் குடிநீர் ஆக்குவது பற்றி” இந்த வரவு

செலவுத் திட்டத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்று, ஒரு பத்திரிகையில் வெளியிட்டுள்ள செய்தி பயங்கரப் பொய் என்பதைத் தோல் உரித்துக் காட்ட வேண்டுமென்பதற்காகவே, இந்த இரு செய்திகளையும் உன் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

27-3-2007

# 3259. நிலம் என்னும் நல்லாள் நகும்!

உடன்பிறப்பே,

*“இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்.”*

நிலத்தை ஒரு பெண்ணுக்கு ஒப்பிடுகிற வள்ளுவர், அவளை உலகில் பயணம் செய்ய வைத்து, கேலிச் சிரிப்பு சிரிக்கவும் வைக்கிறார். ஏன்? எதற்காக அந்தக் கேலிச் சிரிப்பு? அவள் பயணிக்கும் பாதையில் உழவன் ஒருவன் முகவாட்டத்துடன் முழங்காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருக்கிறான்.

அவனைப் பார்த்து நில மடந்தை கேட்கிறாள் - “ஏன் உன் முகத்தில் கவலை ரேகை?” என்று! சட்டென அவன் பதில் அளிக்கிறான், “வாழ்வதற்கு ஏதும் வகையில்லையே!” என்று! அப்போதுதான் நிலமகளுக்கு சிரிப்பு வருகிறது.

“வாடிக் கிடக்கும் உனது குடும்பத்துக்கே வாழ்வாதாரமாக நான் வாய்த்திருக்கும்போது, உன் சோம்பலால் உனக்கு உலகில் எதுவுமில்லை யென்று வீணாகக் கலங்குகிறாய்! அதனால்தான் நிலமகளேகூட சிரிக்கிறாள்” என்று வள்ளுவர் கூறிவிட்டு, வழியோடு போகிறார்.

அப்போதுதான் உழவனுக்கு உணர முடிகிறது. “அடடா! இதோ என் எதிரே வயல் இருக்கிறதே! இந்த வயலில் நீர் பாய்ச்சி வகைப்படுத்தி நெற் பயிர் விளைக்கலாமே! அப்படி விளைத்தால் குடும்பத்தினர் வாழ முடியுமே!” என எண்ணுகிறான். உழவனின் முகத்தில் புன்னகை.

அடுத்தொரு கேள்வி! அது அவனுக்குரிய நிலமா? அப்படியிருந்தால்தானே அவன், அவளை நெருங்க முடியும். அடைய முடியும்.

“என்ன இது? மீண்டும் குறளோவியம் ஆரம்பமா?” என்று உடன்பிறப்பே, உனக்குக் கேட்டிடத் தோன்றும்! ஆம்! குறளுக்கு

ஓவியம் தீட்டிய காலமும் உண்டு, இப்போது அந்த ஓவியத்தின் உயர் பொருளைச் செயல்படுத்தும் காலம் வாய்த்திருக்கிறதே - அதைப் பயன்படுத்திக்கொள்ள அந்தப் பாமரனாம் உழவனுக்குப் பாடம் சொல்லித் தர வேண்டாமா? - அதற்குத்தான் அவனுக்கு உரிமையாகாமலிருந்த நிலத்தை உரிமையாக்கி, வளமையாகாமல் கிடந்த நிலையை மாற்றி - வளப்படுத்தி, அவனுக்கே அதனை வழங்கும் பணியினையோ - அல்லது வரண்டு கிடக்கும் பூமியை, அரசு பெற்று அதனைப் பண்படுத்தி, அவனுக்கே ஒப்படை செய்யும் ஒழுங்குமுறை காரியத்தைச் செய்ய வேண்டுமே என்ற கனவு நீண்ட காலமாக எனக்கு உண்டு.

அதற்கேற்றாற்போல, ஒரு புத்தகம் என் கைக்கு வந்தது, ஆட்சி கை விட்டுச் சென்றிருந்த கால கட்டத்தில்! வந்த புத்தகத்தை ஆர்வத்துடன் புரட்டினேன் - அது 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் நிதி நிலை அறிக்கை.

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையில், அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் அவர்களுடைய முதல் நிதி நிலை அறிக்கையில், பக்கம் 8, பத்தி 18இல் “பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு (சுமார் 50 லட்சம் ஏக்கர்) நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எனும் மிகப் பெரிய அளவிலான தொலை நோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கனவே அறிவித்துள்ளார்” என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

சரி! 2001இல் குறிப்பிட்டார்களே, அப்படிக் குறிப்பிட்டவர்கள் அதனைச் செயல்படுத்தினார்களா? இல்லை என்பதுதான் பதில்! அந்தத் தேர்தல் வாக்குறுதியின் பக்கமே அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியின் அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? என்று ஆராயப் புகுந்தபோதுதான் - அது வாக்குறுதியல்ல, வாக்காளர்களை ஏமாற்றும் கூத்து என்பது தெளிவாயிற்று!

என் செய்வது! எவ்வளவுதான் உண்மையாக நிலம் இருக்கிறது என்பதை முதலில் ஆய்வு செய்தோம் - அ.தி.மு.க. நிதி நிலை அறிக்கையிலே 55 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாக ஆதார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்ததை நம்பி,

"அ.தி.மு.க. ஆட்சியில், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதாக அறிவித்தும், அப்படி வழங்காமல், பல இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்த்துள்ளதை மீட்டு, தமிழகத்தில் மொத்தம் உள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஒவ்வொரு ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் குறைந்த பட்சம் இரண்டு ஏக்கர் அளவு நிலம் வீதம் வழங்குவோம்" என்று தெரிவித்தோம்.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்கள் எவ்வளவு என்பது குறித்து வருவாய்த் துறை மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர்கள் ஒத்துழைப்புடன் கணக்கெடுக்கச் சொன்ன போதுதான், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் தெரிவித்ததைப் போல 50 லட்சம் ஏக்கரா அளவிற்கு இல்லை என்பதும்,

ஆக்கிரமிப்பு இல்லாத ஒப்படை செய்யக் கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் 1 லட்சத்து 95 ஆயிரம் ஏக்கர்,

சிறுகுறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலம் 67 ஆயிரம் ஏக்கர்,

சிறு குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் 7 லட்சம் ஏக்கர் இருப்பதும் கண்டறியப்பட்டது.

எனவே, அ.தி.மு.க. அரசின் நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்திருந்த 50 லட்சம் ஏக்கர் என்பதை மனதிலே கொண்டு குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 2 ஏக்கர் வீதம் வழங்கலாம் என்ற முடிவிற்கு மாறாக, இருப்பிலே உள்ள நிலத்தின் மதிப்பு, மொத்தமுள்ள நிலத்தின் பரப்பளவு ஆகியவற்றை கணக்கிட்டு, அதிகப்பட்சமாக எவ்வளவு பேருக்கு இலவசமாகப் பிரித்து வழங்க முடியுமோ அந்த அளவிற்கு வழங்கத் திட்டமிட்டு, ஒரு ஏக்கர் என்றும், அரை ஏக்கர் என்றும், சில இடங்களில் இரண்டு ஏக்கர் என்றும் தற்போது இலவசமாக நிலங்களை வழங்கி வருகிறோம்.

மேலும், அரசு கைவசம் உள்ள புறம்போக்கு நிலங்களை அன்னியில், சிறு குறு விவசாயிகள் விரும்புவார்களேயானால்,

அவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலங்களையும், அவர்களுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலங்களையும் அரசு செலவில் மேம்படுத்தி, பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கும் திட்டத்தையும் இத்துடன் சேர்ந்து நிறைவேற்றலாம் என்று அரசு முடிவெடுத்து அவ்வாறே தற்போது வழங்கி வருகிறது.

17-9-2006 அன்று இத்திட்டம் முதற்கட்டமாகத் தொடங்கப்பட்டபோது, தமிழகம் முழுவதிலும் 25,282 ஏக்கர் நிலம், 24,358 குடும்பங்களுக்கும்,

17-12-2006 அன்று இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக நிலம் வழங்கப்பட்ட போது, தமிழகம் முழுவதிலும் 25,806 ஏக்கர் நிலம், 26,749 குடும்பங்களுக்கும்,

17-3-2007 அன்று இத்திட்டத்தின் கீழ் மூன்றாவது கட்டமாக நிலம் வழங்கப்பட்டபோது, தமிழகம் முழுவதிலும் 26,030 ஏக்கர் நிலம், 20,648 குடும்பங்களுக்கும்,

ஆக மொத்தம் இந்த மூன்று கட்டங்களிலும் 77,118 ஏக்கர் நிலம், 71,755 குடும்பங்களுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் தங்களது முதல் நிதி நிலை அறிக்கையிலே தவறான தகவலைத் தெரிவித்து, அதை ஐந்தாண்டு காலமும் நடைமுறைக்கே கொண்டு வராதவர்கள், தற்போது தி.மு.கழக அரசு தேர்தல் அறிக்கையிலே தெரிவித்ததை தனது முதல் நிதி நிலை அறிக்கையிலேயே அறிவித்து, அதிலே மூன்று கட்டங்களை இந்த ஓராண்டு காலத்திற்குள் நிறைவேற்றியதைச் சகித்துக் கொள்ள முடியாமல் அதைப்பற்றி அன்றாடம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

சிறு குறு விவசாயிகளின் நிலங்களை அரசே எடுத்துக் கொள்ளப் போவதாகக் கூறி, அதற்காக ஒரு போராட்டமே நடத்தப்போவதாகக்கூட எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுத்தார். 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் எங்கேயிருக்கிறது என்று இதே அவையில் கேள்வி கேட்கப்பட்டபோது கூட, அ.தி.மு.க. நிதி நிலை அறிக்கையிலே உள்ள வாசகங்களை எடுத்துக் காட்டினோம்.

அ.தி.மு.க. வின் நிதி நிலை அறிக்கையில் உள்ளவற்றை நாங்கள் நம்பியது மாத்திரமல்ல, அ.தி.மு.க. வின் தோழமைக் கட்சியான ம.தி.மு.க.வும் நம்பி அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலும் நாங்கள் குறிப்பிட்ட வாசகங்களையே குறிப்பிட்டிருந்ததையும் நான் பேரவையிலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். அதற்கு மேலும் பிரச்சினை எழுப்பியபோதுதான், "கை அகலம்"தான் தமிழகத்திலே தரிசு நிலம் இருக்கிறது என்றாலும், அதை ஒரு ஏழை விவசாயிக்குத்தான் தருவேனே அல்லாமல், சீமான்கள் யாருக்கும் தர மாட்டேன் என்று கூறினேன்.

எனவே, இந்தப் பிரச்சினை குறித்து எத்தனை முறை திருப்பித் திருப்பிக் கேட்டாலும் அதற்குப் பதில், இந்த அரசு நல்ல எண்ணத்தோடு நடைமுறைப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை வேண்டுமென்றே தாங்கிக் கொள்ள முடியாமல் காழ்ப்புணர்வோடு பழி சுமத்த எண்ணுகிறார்கள் என்பதுதான்.

இந்த நிலத்தைப் பொறுத்து இன்னொரு முக்கிய விஷயம் - வழங்கப்படும் நிலத்தின் அளவு எவ்வளவு என்பதை விட - அதன் விலை மதிப்பு எவ்வளவு என்பதுதான் பிரச்சினை!

மாவட்டத்திற்கு மாவட்டம் - ஏன்? வட்டங்களுக்கு வட்டம் நிலத்தின் தன்மையைப் பொறுத்து விலை மதிப்பு மாறுபடுகிறது.

உதாரணமாக, ராமனாதபுரம் மாவட்டத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தின் மதிப்பு, திருவள்ளூர் மாவட்டத்திலோ, கன்னியாகுமரி மாவட்டத்திலோ அரை ஏக்கர் நிலத்தின் மதிப்புக்கு சமமாக இருக்கும்.

நீர் வசதி - நிலத்தின் வாகு - அனைத்தையும் கணக்கிட்டு நிலத்தின் மதிப்பு வேறுபடுகிறது என்பதையும் மறந்து விடக் கூடாது - மறந்து விடவும் முடியாது.

என்னதான் கிண்டல், கேலி, எதிர்ப்பு வரினும் அறிவித்தவாறு நிலம் வழங்கும் திட்டத்தால் ஏழை உழவர்களை மகிழ்விப்போம் - முடிந்த வரையில் - இறுதி வரையில்!

எனவே, பயன்தரும் வகையில் பகிர்ந்தளிப்போம் - இத்தனை விளக்கத்திற்குப் பிறகும் வேண்டுமென்றே

எதிர்க்கிறவர்கள், பேசுகிறவர்கள், என்றைக்கும் நம் திட்டங்களைக் குறைகூறுபவர்கள் கூட - அவர்களாக "அம்மா, நீங்கதான் கொடுக்கலே - "பணக்காரன்தான் நிலத்தைப் பண்படுத்த முடியும்னு - அவனுக்குத்தான் நிலம் கொடுப்போம்" என்று கொடுத்திட்டீங்க! ஆனால், தி.மு.க. ஆட்சியிலே பணமில்லாத ஏழை விவசாயிக்கு நிலத்தைப் பண்படுத்த பணமும் கொடுத்து - அந்த நிலத்தையும் அவனுக்கே கொடுக்கிறாங்க"ன்னு ஏழை விவசாயி சிரிக்கிறானே! அந்த நேரம் நிலமடந்தை அ.தி.மு.க.வைப் பார்த்து நகுகிறாள் - அப்போது அந்த உழவன் முகத்தில், ஏழையின் சிரிப்பில் இறைவனையும் காண முடிகிறது!

அன்புள்ள,

**மு. க.**

28-3-2007

# 3260. இலவு காத்த கிளியாக மாட்டோம்!

**உடன்பிறப்பே,**

“எண்பது ஆண்டு காலத்திற்கு மேலாக நடைபெறுகிற இட ஒதுக்கீடு - சமூக நீதிப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, களங்கள் சிலவற்றில் வெற்றி கண்டிருப்பினும், சமூக நீதிப் போரின் முழு வெற்றியை அடையாத நிலை இன்னமும் இருப்பதை வருத்தம் தோய்ந்திட சுட்டிக் காட்டுவதுடன், வருங்காலத் தலைமுறையினர் சமூக நீதி வாயிலாகப் பெறக்கூடிய அனைத்து உரிமைகளையும் பெறுவதற்குத் தீவிர முயற்சிகளில் இந்த அரசு ஈடுபடும்” என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விடுத்துள்ள அறைகூவலை செயல்படுத்தும் வாய்ப்பு, இப்போதே சமூக நீதிப் போர் வீரர்களுக்குக் கிட்டியுள்ளது. இந்த சமூக நீதி கேட்கும் போராட்டத்தில் அறப்போர் ஆயுதங்களை ஏந்தி, அடித்தளத்து மக்களின் பிரதிநிதிகள் புற்றீசல் போலப் புறப்படப் போகின்றனர். அவர்களின் எண்ணிக்கையைத்தான் குறிப்பிடுகிறேன். குமரி முனையில் மட்டும் குமுறல் வெடிக்கும் என்று யாரும் கருதிடத் தேவையில்லை. இந்த உரிமைக் குரலின் எதிரொலி, இமயத்தின் பிடரியையும் உலுக்கும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக - இந்திய மண்ணில், குறிப்பாகத் தமிழ் நிலத்தில் கண்ணீரும் செந்நீரும் காணிக்கையாக்கி, அதனால் நாம் பெற்ற பேறு இந்தச் சமூக நீதியென்ற உரிமைக் கேடயம். அதனை நொறுக்கித் தள்ளி, நம்மையும், நமது குழந்தை குட்டிகளின், பேரன் பேத்திகளின் எதிர்காலக் கனவுகளையும் சிதைத்துச் சீரழிக்கும் செயல் இதோ நம் கண் எதிரே நடைபெறுகிறது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமா என்ற கேள்வி துளைத்தெடுக்கிறது நமது நெஞ்சகத்தை!

கையில் கிடைத்த கனியைத் தட்டிப் பறித்த கதையாகவன்றோ முடிந்துவிட்டது - கிடைத்தது சமூக நீதியென்று மகிழ்ந்து கொண்டிருந்த நேரத்தில் சட்டத்தின் நீதி கொட்டிக்

கவிழ்த்து விட்டதே! அந்தோ! அரும்பாடுபட்டு ஆன்றோர், சான்றோர் - அடித்தளத்து மக்களுக்காக - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக - மற்றும் ஆதிதிராவிட மக்களுக்காக - கண் எரிய விழித்திருந்து, நற்காலம் பிறக்கு மென்று காத்திருந்து - இன்று இலவு காத்த கிளியின் நிலைக்கு ஆளாகி விட்டதே இந்தச் சமுதாயம் என எண்ணிடும் பொழுது நாடி நரம்புகள் எல்லாம் துடிக்கின்றனவே!

"அரசின் உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்க அரசுக்கு வழிவகை செய்யும் அரசிய லமைப்புச் சட்டத்திருத்தம் நாடாளு மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப் பட்டதின் விளைவாக ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எம். உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிடும் சமூக நீதிச் சட்டத்திற்கு உச்சநீதி மன்றம் நேற்று (29.3.2007) இடைக்காலத் தடை விதித்துள்ளது" என்ற செய்தி

சமூக நீதிப் போராளிகளின் இதயத்தில் ஈட்டியென இறங்கியுள்ளது.

செய்தி கிடைத்தவுடன் ஒரு மணி நேர இடைவெளியில் தி.மு.க. தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடினர்.

நமது சமுதாயத்தின் எதிர்காலமே பாதிப்புக்குள்ளாகும் இந்த நிலையிலிருந்து மீள்வது எப்படியென்று சிந்தித்தனர்.

இதோ அந்தச் சிந்தனையின் விளைவாகச் செதுக்கிய தீர்மானம் -

"நாடாளுமன்ற உரிமை புறக்கணிக்கப்பட்டு சமூக நீதிக்கு ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் பின்னடைவிலிருந்து இந்திய நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்கு, உடனடியாக நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் மத்திய அரசு கூட்டுவதற்கு ஏற்பாடு செய்து, அதிலே இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்து

ஒரு நல்ல முடிவினை எடுக்குமாறு இந்தக் கூட்டம் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. மேலும், சமூக நீதியின் பிறப்பிடமான தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மக்களின் ஏகோபித்த எதிர்ப்பு உணர்வினைக் காட்டிடும் வகையில், வரும் 31.3.2007 சனிக்கிழமை அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் தமிழகம் முழுவதிலும் பொது வேலை நிறுத்தம் (பந்த்) கடைப் பிடிப்பதென்று இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது. தமிழகத்தின் ஒன்றுபட்ட உணர்வுகளை வெளிப்படுத்திடும் வகையில், இந்த வேலை நிறுத்தத்தில் அ.தி.மு.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் பங்கேற்று, ஆதரவு தந்து ஒத்துழைக்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது"

உடன்பிறப்பே,

மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத் தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கான சட்டம், அரசியல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. எனவே, இந்தச் சட்டத்திற்கு இந்திய நாட்டு மக்களின் ஏகோபித்த உணர்வு பின்புலமாக அமைந்துள்ளது. இந்தச் சட்டத்தை மறுப்பது இந்திய நாட்டு மக்களின் உணர்வுகளை காயப்படுத்துகின்ற செயலாகும். இதுபோன்ற கருத்தைத்தான் சமூக நீதிக் காவலரும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மூலக்காரணமாக இருந்தவருமான திரு. வி.பி. சிங் அவர்களும் தெரிவித்திருக்கிறார்.

மேலும், மண்டல் கமிஷன் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் கொண்ட "பெஞ்ச்" தீர்ப்பளித்தபோது, மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் 27 சதவிகித இட ஒதுக்கீடு செய்தது சரியானதே என்று ஏற்கனவே தெரிவித்திருக்கின்றனர். ஆனால், தற்போது மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்குத் தடை விதித்திருப்பது உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள். ஒன்பது நீதிபதிகள் கொண்ட "பெஞ்ச்" அளித்த தீர்ப்புக்கு, இரண்டு நீதிபதிகள் தற்போது அதே போன்றதொரு வழக்கில் நேரடியாகத் தடை

விதித்திருப்பது முரண்பாடானதாக இருக்கிறது. அத்துடன் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அரசியல் சட்ட "பெஞ்ச்" அளித்த தீர்ப்பு உறுதியானதாகவும், இறுதியானதாகவும் இருந்திடும் நிலையில், தற்போது இரண்டு நீதிபதிகள் அளித்துள்ள இந்த இடைக்காலத் தடையாணை எந்த அளவிற்கு அரசியல் சட்டப்படி செல்லுபடியாகத் தக்கது என்பதைச் சட்ட நிபுணர்களும், மத்திய அரசும் உடனடியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதே கருத்தின் அடிப்படையிலேதான் அருமை நண்பரும், கர்நாடக மாநில முன்னாள் முதல்வரும், மத்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் தலைவருமான திரு. வீரப்பமொய்லி அவர்கள், இந்தத் தடையாணை அரசியல் சட்டத்தின் அடிப்படை உணர்வுகளுக்கு இணக்கமானதாக இல்லை என்றும், இந்தத் தடையாணை உண்மைகளைத் தவறான முறையில் அணுகியதின் காரணமாக வந்துள்ளதாகவும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். (not in consonance with the letter and spirit of the Constitution).

எனது அருமை நண்பரும், மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சருமான மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்கள், நேற்றிரவு என்னிடம் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசியதோடு, "இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை மதிப்புடையதாக ஆக்கிட, மத்திய அரசு, அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும், அருமை நண்பருமான திரு. சீத்தாராம் எச்சூரி அவர்கள், இந்தத் தீர்ப்பு முரண்பாடானது, வேலை வாய்ப்புக்குப் பொருந்தும் இட ஒதுக்கீடு, கல்விக்கும் பொருந்தும் என்று கூறியிருக்கிறார். அருமை நண்பரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. டி.ராஜா அவர்கள், பிற்போக்கான தீர்ப்பு இது, அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை தீர்மானிக்கப்பட்டபடி தொடர வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

பா.ம.க. நிறுவனத் தலைவர், டாக்டர் ராமதாஸ் அவர்கள், உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை இந்திய ஜனநாயகத்திற்கும், நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் ஒரு கருப்பு நாள் என்றே தெரிவித்திருக்கிறார்.

தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் சட்ட நுணுக்கங்களைத் துல்லியமாக ஆய்வு செய்து, இந்தத் தீர்ப்பைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இப்படி அனைத்துக் கட்சியினரும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடி நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, நாளை (31.3.2007) காலை 6 மணி முதல், மாலை 6 மணி வரை தமிழகத்திலே

விமானங்கள் பறக்காது!
ரெயில்கள் ஓடாது!
பேருந்துகள் இயங்காது!
ஆட்டோக்கள், டாக்சிகள் எதுவும் இருக்காது!
கடைகள் திறக்கப்பட மாட்டாது!
அலுவலகங்கள் இயங்காது!
திரையரங்குகள் நடக்காது!

இப்படி தமிழகமே ஸ்தம்பித்தது என்று சொல்லும் அளவிற்கு வேலை நிறுத்தம் முழுமையானதாகவும், முறையானதாகவும், அமைதியானதாகவும் இருக்கும்.

உடன்பிறப்பே, உடலினால் பலராய்க் காண்போம் - உள்ளத்தால் ஒருவரேயென்ற உண்மையை நிலைநாட்ட இதோ மற்றொரு வாய்ப்பு!

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோம்!
அமைதிப் படை திரளுவோம்!
அவனிக்கு நாம் யாரென உணர்த்துவோம்!

அன்புள்ள,
**மு.க.**
31-3-2007

# 3261. எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தது!

**உடன்பிறப்பே,**

மார்ச் 29 அன்று உச்ச நீதி மன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக ஒடுக்கப்பட்ட - அடக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் நம்பிக்கை நட்சத்திரத்தின் வெளிச்சத்தைக் காணவே முடியாத அளவுக்கு, கண்ணிருந்தும் குருடர்களாய் - ஆக்கப்பட்டு விட்டார்கள் என்ற "அபாய அறிவிப்பு" பிற்பகல் 1 மணி அளவுக்கு எனக்குக் கிடைத்தது.

அந்த நேரம் சட்டப்பேரவை கூட, தனது முற்பகல் நிகழ்ச்சியை நிறைவு செய்யவில்லை. அப்பொழுதுதான் பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவைத் தலைவர் திரு. கோ.க. மணி அவர்கள், தனது பேச்சை முடித்து விட்டு, பேரவையிலிருந்து திரும்பியவர் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார். எதிர்பாராத செய்தி வந்து விட்டதே என்று வேதனைப்பட்டார். இந்தச் செய்தி, எதிர்பார்க்கப்பட்டது தான் என்று நான் சொன்னேன்.

அடுத்து என்ன செய்வது என்று யோசித்தோம். எனக்கு மாலை 4 மணி அளவில் "மகேந்திரா தொழில் நகரில்" ஒரு கார் தொழிற்சாலை நிகழ்ச்சி இருக்கிறது, அதற்குச் சென்று விட்டு விரைவில் திரும்பி விடுகிறேன், வந்தவுடன் ஆகவேண்டியதைப் பேசுவோம் எனக் கூறிவிட்டு, அவரிடம் விடைபெற்று நான் கார் தொழிற்சாலை நிகழ்ச்சிக்குப் புறப்பட்டேன். அந்த நிகழ்ச்சியை விரைவில் முடித்து விட்டு, திரும்பும் வழியில் கைத் தொலைபேசி மூலமாகவே காரில் இருந்தவாறே, நானும், பொருளாளர் வீராசாமியும், தம்பி துரைமுருகனும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களைத் தொடர்பு கொண்டோம். அவசரத்தையும், அவசியத்தையும் உணர்ந்து கொண்ட அவர்களும், உடனே நடைபெறுவதாகச் சொல்லப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு நிச்சயம் வந்துவிடுவதாகச் சொன்னார்கள்.

உறுதியளித்தவாறே வந்து விட்டார்கள், அண்ணா அறிவாலயத்துக்கு! அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு!

குறிப்பிட்டபடி 29ந்தேதி இரவு 8 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தோழமைக் கட்சி அணித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்று அந்தக் கூட்டத்தின் வேண்டுகோளாக அ.தி.மு.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., கட்சிகளின் ஆதரவு கோரப்பட்டு, அதற்கான கடிதங்கள் அந்தக் கட்சிகளுக்கு அன்றிரவே அனுப்பி வைக்கப்பட்டன. மூன்று கட்சிகளில் ஒரே ஒரு கட்சி தே.மு.தி.க., மாத்திரம், ஆதரவு தருவதாக அறிவித்து அறிக்கை வெளியிட்டது. மற்ற இரண்டு கட்சிகளான அ.தி.மு.க.வும் - ம.தி.மு.க.வும் - ஆதரவு தர முன்வரவில்லை. அதற்கு மாறாக, 30ந்தேதி காலையில் அ.தி.மு.க. கொறடாவும், முன்னோடித் தலைவருமான திரு. செங்கோட்டையன் அவர்கள் "அனைத்துக் கட்சி கருத்து கேட்காதது ஏன்?" என்று தி.மு.க. தோழமைக் கட்சி அணியைக் குற்றம்சாட்டி, அதனால்தான் ஆதரவு தரவில்லை என்பது போல பேசிய செய்தி, 'தினகரன்' ஏட்டில் பெரிய அளவில் வந்திருந்தது. இதுவும் எதிர்பார்த்தபடி நடந்ததுதான் -

திராவிட இயக்கத்தின் ஆரம்ப காலக் கொள்கையாக இருந்து வருகிற இட ஒதுக்கீடு கொள்கைக்காக, ஒரு அமைதிக் கிளர்ச்சியாக வேலை நிறுத்தம் செய்வதாக வேண்டுகோள் விடுத்து, அறிவிப்பு செய்துள்ளது வெறும் 'கண் துடைப்பு' என்று ஜெயலலிதா கடும் கண்டனம் தெரிவித்து, அது, 'இட ஒதுக்கீடு எதிர்ப்பு ஏடு'களில் முதல் பக்கத்தை அலங்கரித்திருக்கிறது.

என் செய்வது! எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

1989ஆம் ஆண்டு நான் முதல்வராக இருந்த போது, காவேரிப் பிரச்சினைக்காக நான் கையெழுத்திட்டு அனுப்பி இந்த அம்மையாரை ஒருமுறை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைத்தபோது, அவர் விடுத்த அறிக்கையில், காவேரி நீர்ப் பிரச்சினை இந்த அளவு முற்றுவதற்கும், தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகள் இன்று தண்ணீர் இல்லாமல் கண்ணீர் வடிப்பதற்கும் மூல காரணமே முதல்வர் கருணாநிதிதான் என்றும், மத்திய அரசுடன் சுமுகமான முறையில் பேச்சு நடத்தி 1974ஆம் ஆண்டிலேயே காவேரி நீர் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க

கருணாநிதி தவறிவிட்டார் என்றும், எம்.ஜி.ஆர். ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தபோது அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைப் பல முறை கூட்டிய நேரத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக புறக்கணித்தார் என்றும் தெரிவித்தார். அதற்கு அப்போதே பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த சாதிக்பாட்சா அவர்கள், ஜெயலலிதா விடுத்த அறிக்கை பொய் ஆனது என்றும், எந்தெந்த தேதிகளில் எம்.ஜி.ஆர். கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், தி.மு.க. சார்பில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற விவரத்தையும் பதிலாக அளித்தார்.

அந்த நேரத்தில் ஜெயலலிதா முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு எழுதிய கடிதத்தில், இப்போது இதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் எதையும் கூட்டுவதற்கான புதிய சூழ்நிலை எதுவும் உருவாகவில்லை என்று எழுதினார்.

அதுபோலவே, 1998ஆம் ஆண்டு காவேரிப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோது, ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், ஏற்கனவே முதல்வர் கருணாநிதி டெல்லி செல்ல முடிவெடுத்து விட்டு, அனைத்துக் கட்சிக் கூட்டம் என்று கண் துடைப்பு நாடகம் நடத்துவதாகக் குறிப்பிட்டார். இதெல்லாம் பழைய கதைகள்!

இப்போது, தமிழகத்தில் பொது வேலை நிறுத்தம் என்று அறிவித்திருப்பது கேலிக் கூத்தாக மட்டுமல்ல, நகைப்புக்குரிய விஷயமாகவும் இருக்கிறது என்றும் ஜெயலலிதா அறிக்கையிலே கூறியிருக்கிறார். காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்ய 90 நாட்கள் வரை அவகாசம் இருக்கிறது என்றபோதிலும், அதற்குள்ளாகவே அவசர அவசரமாக உண்ணாவிரதம் இருப்பவருக்கு தமிழக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எதிர்கால வாழ்க்கைக்காக "பந்த்" நடத்துவது கேலிக்குரியதாகவும், நகைப்புக்குரியதாகவும் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் என்ன என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே புரிந்து கொள்ளச் செய்வார்கள்.

ஜெயலலிதாவின் வழியிலேயே அவரது சகோதரர் விடுத்துள்ள அறிக்கையிலே பொது வேலை நிறுத்தத்தை வேலை நாளில் அறிவிக்காமல் விடுமுறை நாளான சனிக்கிழமையிலே நடத்துவது ஏமாற்று வேலை என்கிறார். சேராத இடம் தனில் சேர்ந்ததால் எப்படிப்பட்ட நிலைக்கு அவர் ஆளாகிவிட்டார்? சமூக நீதி

உணர்வு குருதியோடு ஓடுபவர்களுக்கு, எதிர்ப்பினை எவ்வளவு விரைவிலே காட்ட வேண்டும் என்பதில்தான் எண்ணம் செல்லும். சனிக்கிழமைகளில் ரெயில்கள் ஓடுவதில்லையா? கடைகள் திறக்கப்படுவதில்லையா? பேருந்துகள் ஓடுவதில்லையா? அலுவலகங்கள் இயங்குவதில்லையா? அவைகள் எல்லாம் இன்று இயங்காதல்லவா?

எனவே, எப்படி அவர்கள் நம்மை அவமானப்படுத்தினாலும், நாட்டு நலனுக்காக மானத்தைக் கூட பெரிதுபடுத்தாமல் ஒத்துப் போவது நல்லது என்ற அடிப்படையில் நாம் அனுப்பிய அழைப்பைக் கூட லட்சியம் செய்யாதவர்களுக்கு,

இந்தியாவில் உள்ள நம் மக்கள் கல்வி, வேலை வாய்ப்புகளில் எக்கேடு கெட்டால் என்ன ?

ஆதிக்க புரியினர், அமோக வாழ்வு பெற்றால் அது ஒன்றே நமக்கு சொர்க்கம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு வாழுபவர் ஒன்று கூடி நடத்தும் சதியில் வெற்றி பெறலாம் எனக் கனவு காண்கிறார்கள்.

கண் துடைப்பாம்! கண் துடைப்பு!
உடன்பிறப்பே!
இது கண் துடைப்பு அல்ல; கண்ணீர் உடைப்பு!
இந்தக் கண்ணீர், அடக்க முடியாமல் –
அடித்தட்டு மக்கள் புழுக்களாய்த்
தேரைகளாய்,
பொட்டுப் பூச்சிகளாய்
மடிந்து போகாமல் –

புரட்சிக் குரல் எழுப்ப எழுந்திடும் உரிமைப் போர்ப்படையின் மீது,

காறி உமிழ்வது போல இந்தப் பெண்மணியார்

“கண் துடைப்பு” என்கிறாரே!

இதுவும் நாம் எதிர்பார்த்ததுதான் –

நாகத்திடம் நச்சுப் பல்லையும் –

இவர் போன்றாரிடம் நாசகாலச் சொல்லையும் தானே

எதிர்பார்க்க முடியும்?

ஆனால், நாம் எதிர்பார்த்தபடியே இவர்கள் எல்லாம் கலந்து கொள்ளாமலேயே - நாம் எதிர்பார்த்தபடி மிகவும் வெற்றிகரமாக தமிழ்நாடே சமூக நீதிக்கு ஆதரவாக இன்று ஒரு நாள் அசைவற்றுப் போனது என்கிற அளவிற்கு, இந்த வேலை நிறுத்தம் வெற்றிபெற ஒத்துழைத்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், உடன்பிறப்புகளுக்கும் - இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தந்து கலந்து கொண்டு இதனை வெற்றிகரமாக ஆக்கித் தந்த வணிகப் பெருமக்களுக்கும், பல்வேறு தொழிற் சங்கங்களுக்கும், தொழிலாளர்களுக்கும், சிறு வணிகர்களுக்கும், தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், அனைத்துத் தரப்பினருக்கும், பொது மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைக் குவிக்கின்றேன்.

அன்புள்ள,

**மு.க.**

1-4-2007

# 3262. முருக்க மரம் ஏறுகிறார்; முன்னாள் முதல்வர்!

**உடன்பிறப்பே,**

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவினால் பதவி இல்லாமல் சும்மா இருக்க முடியவில்லை! படாதபாடுபடுகிறார். அபாண்டமான அறிக்கைகளை விடுத்தே ஆட்சியை மாற்றி விடலாமா என்று கனவு காணுகிறார். திண்டிவனம் அருகில் நடந்த வெடி விபத்தைக்காரணமாக வைத்து, சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டதாகப்பழி போட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை தமிழ்நாட்டிற்கு கொண்டு வரவேண்டுமாம்! 1991ஆம் ஆண்டு பழி போட்டு ஆட்சியைக் கலைத்த மாதிரி, தற்போதும் செய்து விடமுடியாதா என்று அங்கலாய்க்கிறார். அறிக்கையிலே எதையெதையோ எழுதுகிறார். ஆனால், தற்போதெல்லாம் இதழாளர்களே அவரது அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டு, அதை போட வேண்டிய இடத்திலே போட்டு விடுகிறார்கள். ஒருசிலர் பச்சாத்தாபம் கருதி ஏழெட்டுப் பக்க அறிக்கையில் இரண்டு மூன்று பத்திகளை மட்டும் போடுகிறார்கள். வெடி விபத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியை நேரில் பார்வையிட அம்மையார் விரைகிறார் என்று ஒரு செய்தி.

சென்னைக்குத் திரும்பி, தூங்கினாரோ இல்லையோ, நீண்ட அறிக்கை வெளியிட்டுவிட்டார். அதிலே தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது- கொண்டு வா குடியரசுத் தலைவர் ஆட்சியை என்று முழங்கியிருக்கிறார்.

அந்த நீண்ட அறிக்கையில் முதல் குற்றச்சாட்டு, இந்தச் சம்பவத்திற்கு நான் பதில் சொல்லாமல், அதிகாரிகளை விட்டுப் பதில் சொன்னதாகக் கூறுகிறார். மேலும், ஒவ்வொரு சம்பவத்திற்கும் நான் பதில் கூறாமல், தலைமைச் செயலாளரை விட்டு அறிக்கை விடச் சொல்வதாகவும் தெரிவித்திருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு, குமரி மாவட்டத்தில் மீனவர்கள்

கொல்லப்பட்ட சம்பவம் குறித்து, பேரவையில் பிரச்சினைகள் எழுந்த போது, முதலமைச்சர் என்ற முறையில் அதற்கு நான்தான் பதிலளித்தேன். நேற்று நடைபெற்ற சம்பவம் குறித்து, காவல் துறை தலைமை இயக்குநர், சம்பவ இடத்திற்குச் சென்றபோது செய்தியாளர்கள் அவரைச் சந்தித்து விவரம் கேட்டதற்கான பதிலை அவர் கூறியிருக்கிறார். அதுபோலவே, சம்பவ இடத்திற்குச் சென்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் ஸ்டாலினும் செய்தியாளர்களிடம் விவரம் கூறியிருக்கிறார். இவற்றை அப்படியே மறைத்து விட்டு, பல பிரச்சினைகளுக்கு நான் பதில் சொல்லாமல் அதிகாரிகளை விட்டுப் பதில் சொல்வதாக அம்மையார் சொல்லியிருப்பது முழுப் பொய்த் தகவல்களாகும்.

அது மாத்திரமல்ல, அம்மையார் தனது அறிக்கையிலே பெரும் பகுதியில் காவல்துறை தலைமை இயக்குநரைப் பற்றி, ஒரு மூத்த ஐ.பி.எஸ். அதிகாரியைப் பற்றி வாய்க் கூசும் வார்த்தைகளால் அர்ச்சனை செய்திருப்பது காவல்துறையினரையே தலைகுனியச் செய்கின்ற, அவமானப்படுத்துகின்ற காரியமாகும். காவல் துறை தலைமை இயக்குநரின் வயதுக்கோ, தகுதிக்கோ, நேர்மைக்கோ, அந்தஸ்துக்கோ மதிப்பு கொடுக்காமல் “ஆமாம் சாமி” என்றும், “தகுதியற்றவர்” என்றும், “ அவர் பதவியில் இருப்பது மிகப் பெரிய துர்பாக்கியம்” என்றும் ஒரு முன்னாள் முதலமைச்சர் தனது அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது அவர் எந்த அளவிற்கு அந்தத் துறையை மதிக்கிறார் என்பதற்குத் தக்க உதாரணமாகும். காவல்துறை தலைமை இயக்குநரை ஏன் இன்னும் மாற்றாமல் வைத்திருக்கிறீர்கள் என்று ஜெயலலிதா கேட்கிறார். அவர் ஆட்சியில், முதல் மாதம் ஒருவரைப் புதிதாகக் காவல்துறை தலைமை இயக்குநராக நியமிப்பார். அடுத்த மாதமே அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்வார். ஐந்தாண்டு கால ஆட்சியில் ஐந்து காவல்துறை தலைமை இயக்குநரை நியமனம் செய்த நினைப்பில், இப்போது நம்மையும் அவ்வாறே கருதிக் கொண்டு, ஏன் காவல்துறை தலைமை இயக்குநரை மாற்றவில்லை என்கிறார்.

ஜெயலலிதாவினால் இன்றையதினம் இழிவான வார்த்தைகளால் அவமானப்படுத்தப்பட்டுள்ள காவல் துறை தலைமை இயக்குநர் திரு.டி.முகர்ஜி அவர்கள், பதினைந்து ஆண்டுகள் மத்திய புலனாய்வுத் துறையில் பல்வேறு நிலைகளில் திறம்பட பணியாற்றி, இந்தியன் வங்கி ஊழல் உள்ளிட்ட

பல்வேறு முக்கிய வழக்குகளைத் திறம்பட விசாரித்து வழக்கினை நடத்தியவர்.

குறிப்பாக, அவர் மீது அம்மையாருக்குத் தனிப்பட்ட அளவில் இவ்வளவு கோபம் வருவதற்கு முக்கிய காரணம் உண்டு. அதாவது, மத்திய குற்றப் புலனாய்வுத்துறையில் இவர் பணி புரிந்த போது, ஜெயலலிதாவிற்கு "சேனல் தீவு" என்ற இடத்தி லிருந்து அனுப்பப்பட்ட மூன்று இலட்சம் டாலர் பரிசு மற்றும் தொடர்ந்து அவரது மூன்று பிறந்த நாட்களுக்கு பல்வேறு இடங்களிலிருந்து வந்த உயர்ந்த பரிசுகளைப் பற்றியும் விசாரித்து வழக்கு தொடர்ந்தார் என்பதுதான் முக்கியமான காரணமாகும்.

ஏப்ரல் 7 ஆம் தேதியன்று திண்டிவனம் அருகே நடைபெற்ற சம்பவம் சரி என்று எவரும் கூறவில்லை. யாரும் கூறமாட்டார்கள். ஆனால், இப்படிப்பட்ட சம்பவம் எதுவும் தனது ஆட்சியில் நடைபெற வில்லை என்றும், இப்போதுதான் நடைபெறுவ தாகவும் ஜெயலலிதா கூறுவது உண்மைதானா? அதே ஜெயலலிதா, அதே அறிக்கையில், அவரது ஆட்சிக் காலத்தில் தானேதான் பொறுப்பேற்று பதிலளிப்பார் என்றும், தற்போது, நான் காவல் துறை தலைமை இயக்குநரை விட்டுப் பதில் சொல்லி யிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், 12.3.1995 அன்று திருப்பெரும்புதூர் காவல் நிலைய சரகத்தில், சேந்தமங்கலம் அருகில் சென்னையை நோக்கி இரசாயனப் பொருள் ஏற்றி வந்து கொண்டிருந்த டாங்கர் லாரி ஒன்று அரசு விரைவுப் பேருந்துடன் மோதி, இரசாயனப் பொருள் ஏற்றி வந்த டாங்கர் லாரி வெடித்துச் சிதறி தீ பிடித்தது. தீ வேகமாக விரைவுப் பேருந்து மற்றும் டிராக்டர் ஒன்றுக்கும் பரவியதால், அதில் பயணம் செய்த 47 பேர் சம்பவ இடத்திலேயே கருகி இறந்தார்கள். 37 பேர் காயமடைந்தார்கள். இந்தச் சம்பவம் குறித்து அப்போது ஜெயலலிதா பதிலளிக்கவில்லை. அரசு சார்பில்தான் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. இந்தச் சம்பவத்தின் போது இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா 25 ஆயிரம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில், அதே மாதத்தில் 2ந் தேதியன்று தனியார் பேருந்து ஒன்றும், மணல் லாரியும் மோதிக்

கொண்டதில் கோவை மாவட்டத்தில் பல்லடம் அருகே 19 பேர் பலியானார்கள்.

அதற்கடுத்த நாளே, சேலம் மாவட்டம், ராசிபுரம் அருகே டெம்போ வேன் ஒன்றும், தனியார் பேருந்து ஒன்றும் மோதிக் கொண்ட விபத்தில் 20 பேர் இறந்தார்கள். இந்தச் சம்பவங்கள் குறித்து முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, எந்தத் தகவலும் அப்போது கூறவில்லை.

11.7.1995 அன்று அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலே, சேலம் மாவட்டம், வாழப்பாடி துணை சார்பதிவாளர் அலுவலகத்தின் முன்பு வெடி பொருள் வெடித்ததில், 8 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். 16 பேர் காயம் அடைந்தனர்.

1993ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் ஆட்சியிலே, ஆகஸ்ட் 8ஆம் தேதி சென்னை ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில், 11 பேர் உயிரிழந்தனர்.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதி, சென்னை இந்து முன்னணி தலைமை அலுவலகத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் இந்து முன்னணி அமைப்பாளர் பைபிள் சண்முகம் என்பவர் உயிரிழந்தார்.

1995ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 3ஆம் தேதி, நாகூரில் இந்து முன்னணி மாவட்ட அமைப்பாளர் தங்கமுத்து கிருஷ்ணன் என்பவரின் மனைவி தங்கம், தபால் பார்சலில் வந்த குண்டுக்குப் பலியானதும் ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலேதான்.

திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் அவர்களை நோக்கி வெடி குண்டு வீசப்பட்டதும் அம்மையாரின் ஆட்சிக் காலத்திலேதான்.

24.2.1996 அன்று, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட காட்டூர் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ள சரவணம்பட்டி என்ற இடத்தில், மாருதி கார் ஒன்றில் குண்டு வெடித்து ஒருவர் மரணமடைந்தார்.

16.9.2002 அன்று ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், சேலம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள ஒரு வீட்டில் வைத்திருந்த வெடிகள் வெடித்ததில் 17 பேர் இறந்தார்கள், 31 பேர் காயமடைந்தார்கள்.

23.1.2004 அன்று ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், திருவரங்கத்தில் பத்மபிரியா திருமண மண்டபத்தில் ஏற்பட்ட

தீ விபத்தில் மணமகன் உட்பட 60 பேர் கருகியதும் மறக்க முடியாத சம்பவம் ஆகும்.

இவ்வளவு சம்பவங்களும் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் நடைபெற்றவைதான். இதைத்தான் ஜெயலலிதா தனது அறிக்கையில், அவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருந்தது என்று சொல்லிக் கொள்கிறார்.

எனவே, விபத்துகள் எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் தவிர்க்க முடியாதவை. எந்த ஆட்சிக் காலத்திலும் நடக்கக் கூடியவை. அதற்காக குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வர வேண்டுமென்று கூறுவது காழ்ப்புணர்ச்சியினால் தானே தவிர வேறல்ல.

அடுத்து ஜெயலலிதா, தனது அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டு அவர் அடிக்கடி கூறுகின்ற ஒன்றாகும். அவருக்கு "இசட் பிளஸ்" பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும் என்றும், ஆனால் அது வழங்கப்படவில்லை என்றும், அவருக்கு தற்போதுள்ள பாதுகாப்பு 3 காவலர்கள்தான் என்றும், ஒரு வேளைக்கு அவருக்கு குறைந்த பட்சம் 55 பேராவது பாதுகாப்புக்கு இருக்க வேண்டும் என்றும், தற்போதுள்ள மூன்று காவலர்களும் காவல் நிலையங்களில் எழுத்து வேலை பணி செய்து கொண்டிருந்த வயதான காவலர்கள் என்றும், துப்பாக்கியை பிடித்து எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டது என்று அவர்களே சொல்கிறார்கள் என்றும் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதா "இசட் பிளஸ்" பிரிவைச் சேர்ந்தவர் என்ற முறையில், அவருக்கு எத்தனை பேர் பாதுகாப்புக்காக வழங்கப்பட வேண்டுமோ, அதில் ஒருவர் கூட குறைக்கப்படவில்லை. நானும் "இசட் பிளஸ்" பிரிவைச் சேர்ந்தவன்தான். அம்மையார் ஆட்சிக் காலத்திலே எனக்கு என்ன பாதுகாப்பு தரப்பட்டதோ, அதில் ஒருவர் கூடக் குறைக்காமல்தான் தற்போது அவருக்கு பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. அதன் முழு விவரமும் வருமாறு :-

1) ஜெயலலிதாவின் மெய்ப்பாதுகாப்புக்காக ஆய்வாளர் தகுதியில் மூன்று அதிகாரிகள் 9 எம்.எம். பிஸ்டல் வகை துப்பாக்கிகளுடன் பாதுகாப்புப் பணியில் உள்ளனர். எனவே மூன்று காவலர்கள் என்று ஜெயலலிதா அறிக்கையிலே கூறியிருப்பது

பொய். மூன்று இன்ஸ்பெக்டர்கள் என்.விஜயகுமார், ஜி.முத்து மாணிக்கம் மற்றும் வி.குப்புராஜ் ஆகியோர் உள்ளனர். இவர்கள் கடந்த ஜெயலலிதா ஆட்சியின் போது அவரிடம் பாதுகாப்புப் பணியிலே இருந்தவர்களாவர்.

மேலும் தற்போது அவரது பாதுகாப்பில் உள்ள மூன்று பேரும் வயதான காவலர்கள் என்றும் கூறியுள்ளார். தற்போது அவரது பாதுகாப்பில் உள்ள விஜயகுமாருக்கு 44 வயது. முத்து மாணிக்கத்திற்கு 37 வயது. குப்புராஜுக்கு 48 வயது. இவர்களைத்தான் அம்மையார் வயதானவர்கள் என்கிறார். எழுத்துப் பணியிலே இருந்தவர்கள் என்று கூறுவதும் தவறான தகவலாகும்.

2. இந்த மூன்று பேரைத் தவிர, கூடுதல் மெய்ப் பாதுகாவலுக்கு என்று 3 காவலர்கள் ஏ.கே.47 வகை துப்பாக்கிகளுடன் பணியில் உள்ளனர்.

3. இது தவிர, ஜெயலலிதாவின் இல்லப் பாதுகாப்புக்குப் 10 பேர் அடங்கிய காவல் துறையினர், எஸ்.எல்.ஆர். வகை தானியங்கி துப்பாக்கிகளுடன் பாதுகாப்புப் பணியிலே உள்ளார்கள்.

4. வழிக் காவல் பாதுகாப்புக்காக இரண்டு வாகனங்களுடன் 24 பேர் அடங்கிய காவல் அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

5. பாதுகாப்புக் கவனிப்பு பணியில் மூன்று காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

6. பார்வையாளர்களை திரேக பரிசோதனை செய்வதற்காக, பகலில் இரண்டு காவலர்களும் இரவில் ஒரு காவலரும் உள்ளனர்.

7. 12 பேர் அடங்கிய தேசிய பாதுகாப்புப் படையினர் இரண்டு வாகனங்களில் எம்.பி.5 நவீன ரக துப்பாக்கியுடன் வழிக் காவல் பணியிலே உள்ளனர்.

ஆனால், இவ்வளவு பேரையும் மறைத்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலே உள்ளவர், மூன்றே மூன்று காவலர்கள்தான் தனக்கு பாதுகாப்பு என்று கூறுவது எவ்வளவு பெரிய பொய் என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையிலேயே இத்தனை பேரை அவருக்குப் பாதுகாப்புப் பணிக்கு அனுப்பியுள்ள காவல் துறையிலே உள்ளவர்கள்தான் அவரைப் பற்றி என்ன எண்ணிக் கொள்வார்கள் என்ற நினைப்பு கூடவா அவருக்கு இருக்காது?

அடுத்து ஜெயலலிதா, தற்போது சென்டூரில் நடைபெற்றது குண்டு வெடித்த சம்பவம் என்றும், அதை மூடி மறைக்க முயற்சிப்பதாகவும் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். இத்தகைய சம்பவங்கள் ஈராக்கிலும், இலங்கையிலும், ஜம்மு காஷ்மீரிலும்தான் நடைபெறுவதாக ஜெயலலிதா அறிக்கையில் தெரிவித்திருப்பதைப் பார்க்கும் போது, அவருக்கு என்னவோ ஆகிவிட்டது என்று தான் எண்ண வேண்டி இருக்கின்றது. கல் உடைப்பதற்காக வெடி பொருள் கொண்டு சென்றார்கள் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்கிறார் ஜெயலலிதா. இதைப் பற்றி முழுமையாக விசாரணை முடிவுற்றதும் உண்மை தெரிந்துவிடும்.

நெடுஞ்சாலை ரோந்து பணி அவரது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தியிருந்ததாகவும், அது இப்போது கை விடப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை என்றும் ஜெயலலிதா அறிக்கையில் கேட்டிருக்கிறார். தற்போதும் ரோந்து பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நிறுத்தப்படவில்லை.

நடைபெறும் சம்பவங்களுக்கு முதலமைச்சராக இருந்தபோது தான்தான் பதில் சொன்னதாகவும், தற்போது அதிகாரிகளை விட்டு பதில் சொல்லச் செய்வதாகவும் ஜெயலலிதா ஒரு குற்றச்சாட்டினை தெரிவித்திருக்கிறார். சேலம் ஆத்தூர் வெடி விபத்தின்போது கூடுதல் டி.ஜி.பி.யாக இருந்த நடராஜன் தான் விசாரணை நடத்தி பேட்டி கொடுத்தார்.

ஏன் என்னைக் கைது செய்த சம்பவம் நடந்தபோது கூட, அதைப்பற்றிக் காவல்துறை தலைமை இயக்குநரும், சி.பி., சி.ஐ.டி., டி.ஐ.ஜி.யாக இருந்தவரும்தான் விளக்கம் அளித்தனர்.

23.1.2004 அன்று திருவரங்கத்தில் திருமண மண்டபம் தீக்கிரையானது பற்றியும் முதலமைச்சர் எந்தவித பதிலும் அளிக்கவில்லை. அமைச்சரைத்தான் அங்கே அனுப்பி வைத்தார்.

1995ஆம் ஆண்டு ஏப்ரலில் சிந்தாதிரிப் பேட்டையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் குறித்து ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது பதில் உரையில்,

**“இத்தகைய ஒரு பொதுப் பிரச்சினை ஏற்படும்போது, அனைத்துக் கட்சிகளும் தங்கள் மனமாச்சரியங்களை மறந்து, பொது அமைதி நிலவுவதற்கும், பொது மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதை விடுத்து, இருக்கின்ற பிரச்சினைகளை அதிகப்படுத்துகின்ற வண்ணம், சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், விடுக்கின்ற அறை கூவல்களும் மிகவும் தவறான முன்னோடிகளாக அமைந்து விடும்”**

என்று அன்றைக்கு ஜெயலலிதா கூறியதைத்தான், தற்போது அவருக்கு மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அன்புள்ள,

**மு.க.**

9-4-2007

## 3263. நியாயந்தானா; நீங்களே சிந்தியுங்கள்!

**உடன்பிறப்பே,**

பெரியார் படத்தில் ஒரு காட்சி! பெரியாராகவே மாறிவிட்ட என் தம்பி இனமுரசு சத்யராஜ்; பெரியார் பேசும் மொழியையும் அப்படியே உரித்து வைக்கிறார், 'வெங்காயத்தை உரித்து வைப்பதைப் போல!'

பிரச்சாரக் கூட்டமொன்றில் பெரியாரைப் பார்த்து ஓர் ஆன்மீகவாதி பல கேள்விகளைக் கேட்கிறார். அவற்றுக்கு அய்யா பெரியார் சொல்லும் பதில்களை ஒரு தாளில் அந்த ஆன்மீகவாதி எழுதிக்கொண்டே இருக்கிறார். எழுதும்போது எழுதுகோல் மையின்றி நின்று விடுகிறது. அதைக் கண்ணுற்ற பெரியார் - தன்னிடம் இருந்த எழுதுகோலைத் தந்து, ஆன்மீகவாதியை மீதியை எழுதிக்கொள்ளச் சொல்கிறார்.

ஆன்மீகவாதி கேட்கிறார்; "அய்யா! கடவுள் இல்லை என்கிறீரே; அந்தக் கடவுளே நேரில் வந்துவிட்டால் என்ன சொல்வீர்?" என்பது கேள்வி -

"கடவுள் உண்டு என்று சொல்லிவிட்டுப் போகிறேன் - அது என்ன பிரமாதம்; வெங்காயம்!" என்று கூறிப் பெரியார் சிரிக்கிறார்.

அந்தப் பெரியாரே; இவ்வாறு ஒப்புக்கொள்கிற கடவுள் என்ற ஒருவன்; அவனது குணாதிசயங்களில் ஒன்றாக விளங்குவதாகச் சொல்லப்படுகிற பாரபட்சமற்ற நேர்மைப்பண்பு என்பதிலேயிருந்து சற்று விலகினாலும் விலகிவிடக்கூடும்; உடன்பிறப்பே, நான் தலைமையேற்று நடத்துகிற இந்த ஆட்சியில் அந்தப் பாரபட்சமற்ற நிலையிலிருந்து கடுகளவும் விலகமாட்டான் இந்தக் கருணாநிதி என்பதை என்னை உணர்ந்தவன் என்ற முறையில் நீ நன்றாக அறிவாய்.

சான்றாக ஒன்று சொல்லுகிறேன்- சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் லீலாவதி என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அம்மையார் - ஒரு நாள் வெட்டிக் கொல்லப்பட்டார் என்ற செய்தி; அப்போதும் முதலமைச்சராக இருந்த எனக்கு சட்டமன்றத்தில் நான் பேசிக்கொண்டிருக்கும் போதே வருகிறது. அந்தச் சேதியை தொலைபேசியில் தெரிவித்தவர் மதுரை மாநகர மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆவார். லீலாவதியை கொலை செய்தவர் அவருக்குத் தெரிந்த வரையில் தி.மு.க. தோழர் என்றே என்னிடம் அவர் கூறிய காரணத்தால்;

நான் அவையிலேயே அறிவித்தேன் - "லீலாவதி கொலைக்குக் காரணம் தி.மு.க. தோழர் என்கிறார்கள். அவர் உடனே கைது செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்தேன். அன்று உடனடியாக முறைப்படி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

கொலை வழக்கு தீவிரமாக நடைபெற்றது - குற்றம் சாட்டப்பெற்றோர் - முறைப்படி கைதாகி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மார்க்சிஸ்ட் கட்சி சார்பாக என்னிடம் ஒரு முறையீடு தரப்பட்டது; அதாவது அரசின் பிராசிக்யூஷன் வக்கீல் அக்கொலை வழக்கில் ஆஜராக வேண்டாம் - தங்கள் கட்சியின் சார்பில் ஒரு பிரபலமான வழக்கறிஞர்தான் ஆஜராக வேண்டும் என்றனர். அதற்கும் ஒப்புக்கொண்டு அவ்வாறே அவர்கள் சார்பில் வழக்கறிஞர் வாதாடினார்.

குற்றவாளிகளுக்கு; ஆம், கழகத்தினருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பத்தாண்டுகளுக்குமேல் சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும்போதே பிரதான குற்றவாளியான நமது கழக நிர்வாகி நோயுற்று இப்போது தான் சில மாதங்களுக்கு முன்பு மரணமடைந்தார் மதுரைச் சிறையில்!

அதே மதுரையில் அண்மையில் "தினகரன்" பத்திரிகை அலுவலகத்தில் நடத்தப்பட்ட வன்முறை - பரவிய தீ - சூழ்ந்த புகைக்குள் உயிர்விட்ட மூன்று வாலிபத் தங்கங்கள் - இந்தப் பரிதாப சம்பவம் குறித்து நான் சட்டப்பேரவையிலே

மூல காரணத்துடன் முழு விளக்கம் அளித்ததுடன்; சி.பி.ஐ. விசாரணையும் கோரியிருக்கிறேன்.

இதற்குப் பிறகும் சில அரசியல் கட்சியினர்; நான் நடுநிலையுடன் செயல்பட வேண்டும் என்று அறிவுரை கூறுவதும்; நேர்மையுடன் செயல்பட வேண்டும் என்று சில பத்திரிகையாளர்கள் பதாகை ஏந்தி "பவனி" நடத்துவதும் - உண்மையிலேயே என்னை வேண்டுமென்றே திட்டமிட்டுப் புண்படுத்துவதற்காக என்றே அமைவதாக நான் கருதுகிறேன்.

இல்லாவிட்டால்; தர்மபுரியிலே பேருந்துகளை எரித்து பல்கலைக்கழக மாணவியர் மூன்று பேரை பஸ்மமாக்கினார்களே; அப்போது "இவர்தான் மூலகாரணம்" என்று யாரைக் குறிவைத்து நடவடிக்கை எடுக்கச் சொன்னார்கள்? உணர்ச்சிக் கொந்தளிப்பால் ஏற்பட்ட வியாத விளைவு என்றுதானே அப்போது வியாக்யானம் செய்தார்கள்.

நான் கேட்கிறேன்; இந்த அரசு பத்திரிகையாளருக்கு விரோதமான அரசா?

தி.மு.க. அரசு பத்திரிகையாளர்களுக்கு நலன் விளைவிக்கத் திட்டங்கள் - வழங்கிய நிதிகள் - கட்டித் தந்த குடியிருப்புகள் - இவைகளை யெல்லாம் கணக்கிட்டால் கழக அரசின் 'பத்திரிகா தர்மம்' புரியுமே!

ஆசிரியர் 'சாவி' கைது செய்யப்பட்டபோது அவர் அடைக்கப்பட்ட காவல் நிலையத்திற்கே ஓடிச்சென்று அவரை ஜாமீனில் அழைத்து வந்தவன்தான் நான் -

விகடன் ஆசிரியர் கைது செய்யப்பட்டபோது அடுத்த கணமே கண்டன அறிக்கை விடுத்து; அவரது ஏட்டுக்காக வாதாடியது நான்தான்!

இன்னும் பார்; கழக ஆட்சியில் பத்திரிகையாளர்கள் நலம்பெற வேண்டும் என்பதற்காக எத்தனையோ திட்டங்கள்!

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை

எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதி திட்டத்தின்கீழ் நிதி வழங்குவதற்கு முதன் முதலாக இந்த ஆட்சியிலே 1997ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரம் வீதம் உதவி நிதி வழங்கப்பட்டது. 1999ல் இத்தொகை ரூ.40 ஆயிரமாகவும், 1.4.2000 முதல் ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. 1997 முதல் 2001 வரை 16 பத்திரிகையாளர்களுக்கும், 2001 முதல் 2006 வரை 9 பத்திரிகையாளர்களுக்கும் இந்த உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.2 இலட்சம்; 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூபாய் ஒன்றரை இலட்சம்; 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூபாய் ஒரு இலட்சம்; 5 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.50 ஆயிரம்; குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் வழங்க 19.2006ல் ஆணை வழங்கப்பட்டது.

ஆனந்த விகடன், கல்கி, தினமணிகதிர், குங்குமம், சாவி ஆகிய இதழ்களில் பணியாற்றி, 9.2.2001 அன்று மறைந்த மூத்த பத்திரிகையாளர் சாவி என்னும் சா.விசுவநாதன் அவர்களது துணைவியாருக்கு சிறப்பு நிகழ்வாக 50 ஆயிரம் ரூபாய் அனுமதித்து 3.8.2006 அன்றும், மீண்டும் தனி நேர்வாக மேலும் ஒன்றரை இலட்சம் ரூபாய் அனுமதித்தும்;

"வண்ணத் திரை" வார இதழில் பணியாற்றி 6.11.2001 அன்று மறைந்த திரு.தி.தேசிங்கு அவர்களின் துணைவியார் திருமதி.தே.ஆர்த்தி அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் அனுமதித்து 4.8.2006 அன்றும்;

மாலை முரசு மதுரை பதிப்பு நாளிதழில் பணியாற்றி மறைந்த பத்திரிகையாளர் எம்.இன்பராஜ் அவர்களின் துணைவியார் திருமதி.இ. வேல்தங்கம் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் அனுமதித்து 4.8.2006 அன்றும்;

மதுரை மணி மற்றும் குமரி முரசு நாளிதழில் பணியாற்றி மறைந்த பத்திரிகையாளர் எஸ். தாமோதரன் அவர்களின்

துணைவியார் திருமதி.ஆர்.புனிதா அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் அனுமதித்து 4.8.2006 அன்றும்;

"தினகரன்" திருச்சி பதிப்பு நாளிதழில் பணியாற்றி 13.4.2001 அன்று மறைந்த எம்.சுப்புக் குட்டி அவர்களின் துணைவியார் திருமதி. சு. சுப்புலெட்சுமி அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் அனுமதித்து 7.8.2006 அன்றும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின்கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டன.

சென்னை நக்கீரன் இதழ் முதன்மைச் செய்தியாளர் எம்.என்.உதயகுமார் 14.1.2004 இல் மறைவு. மனைவி திருமதி.உ.வள்ளிக்கு ரூ.1 இலட்சம் குடும்ப நல நிதி அனுமதித்து 14.2.2007 அன்று ஆணை வழங்கப்பட்டது.

மதுரை-மாலைமுரசு புகைப்படக்காரர் திரு.எ. கண்ணன், 20 ஆண்டு பணியாற்றி 2.6.2005இல் மறைவு. மனைவி முனீஸ்வரிக்கு ரூ.2 இலட்சம் குடும்ப நல நிதி அனுமதித்து 16.2.2007 அன்று ஆணை வழங்கப்பட்டது.

மதுரை-மாலைமுரசு மறைந்த பத்திரிகையாளர் பி. செல்வராஜ் அவர்களின் துணைவியார் திருமதி எஸ்.செல்லம்மாள் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் அனுமதித்து 14.3.2007 அன்று ஆணை வழங்கப்பட்டது.

சென்னை - தினகரன் மறைந்த பத்திரிகையாளர் து. பால்ராஜ் அவர்களின் துணைவியார் திருமதி காஞ்சனமாலா அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் குடும்ப நல நிதி அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

திருநெல்வேலி மக்கள் செய்தி மறைந்த பத்திரிகையாளர் எஸ். மாரியப்பன் அவர்களின் துணைவியார் திருமதி.எம்.தனலெட்சுமி அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் குடும்ப நல நிதி அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

வேலூர்-மணிச்சுடர் மறைந்த பத்திரிகையாளர் சையது அகமது அவர்களின் துணைவியார் திருமதி பிபி.ஜான் அவர்களுக்கு குடும்ப நல நிதி ஒரு இலட்ச ரூபாய் அனுமதித்து ஆணை வழங்கப் பட்டது.

சேலம்-மாலைமலர், தினத்தந்தி மறைந்த பத்திரிகையாளர் ஏ.ஜக்கையன் அவர்களின் துணைவியார் திருமதி ஜெ. அந்தோணியம்மாள் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் குடும்ப நல நிதி அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

தினபூமி நாளிதழ் புகைப்படக்காரர் திரு.ஜான் சுரேஷ்குமார் மருத்துவ செலவிற்கு ரூ.1.50 இலட்சம் நிதியுதவி; 28.3.2007 அன்று ஆணை வழங்கப்பட்டது.

இன்றுகூட ஒரு இதழில் வெளியிடப்பட்டுள்ள ஒரு பட்டியலில் கருணாநிதி ஆட்சியில் தாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட பத்திரிகைகள் யாரால் - எந்த நடிகர் நடிகையைப் பற்றி எழுதப்பட்டதற்காக; அவர்கள் ஏவிய ஆட்களால் தாக்கப்பட்டது என்பதுதான் உண்மை!

அந்த ஏடு வரிசைப்படுத்தி வெளியிட்டுள்ள பத்திரிகைகள் மீது தாக்குதல் பட்டியல் இதோ :

"23.7.1981ல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் கோவையில் உள்ள தினகரன் அலுவலகம் தாக்குதலுக்குள்ளானது.

1983 பிப்ரவரியில் 'வணிக ஒற்றுமை' என்கிற மாத இதழில் எம்.எல்.ஏ.க்களைக் கேவலமாக விமர்சித்ததாக அந்த இதழின் ஆசிரியர் பால்ராஜுக்கு ஒரு வாரம் சிறைத் தண்டனையை சட்டப் பேரவை விதித்தது.

ஆனந்த விகடன் வார இதழில் எம்.எல்.ஏ.க்களை விமர்சித்து வெளியான கேலிச் சித்திரம் தொடர்பாக அப்பத்திரிகையின் ஆசிரியர் பாலசுப்பிரமணியத்துக்கு 3 மாத கடுங்காவல் தண்டனை 4.4.1987ல் பேரவையில் விதிக்கப்பட்டது. பாலசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார்.

ஆனால், 6.4.1987ல் பேரவை கூடியதும், பாலசுப்பிரமணியத்தை விடுதலை செய்யும் அறிவிப்பு வெளியானது. எனினும், தன் மீதான நடவடிக்கையைக் கண்டித்து, உச்ச நீதிமன்றம் வரை பாலசுப்பிரமணியம் சென்றார். அங்கு அரசின் பொதுத் துறைக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்பட்டது.

21.5.1991 மே மாதத்தில் திருப்பெரும்புதூரில் ராஜீவ்

காந்தி படுகொலை செய்யப்பட்டார். மறுநாள் சென்னையில் கோடம்பாக்கம் அருகே உள்ள முரசொலி அலுவலகம் கடுமையான தாக்குதலுக்குள்ளானது.

1991ல் அ.தி.மு.க. 4வது முறையாக ஆட்சிக்கு வந்தது. மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பில் உயர் பதவியை வகித்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை கடுமையாக விமர்சித்து, 'தராசு' பத்திரிகையில் கட்டுரை வெளியாகியது. அதற்கடுத்த ஓரிரு நாள்களில் சென்னை எழும்பூர் சேட் காலனியில் இருந்த அப்பத்திரிகையின் அலுவலகத்தை குண்டர் படை புகுந்து தாக்கியது.

இத்தாக்குதலின்போது அந்த அலுவலகத்தின் மாடியில் இருந்து விழுந்தவர் இறந்தார். பலர் படுகாயம் அடைந்தனர்.

பேரவையில் நடக்காத செய்தியைப் பத்திரிகையில் வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. முரசொலி பத்திரிகையின் ஆசிரியர் எஸ். செல்வம் பேரவையில் 21.9.1992ல் கூண்டில் ஏற்றப்பட்டு கண்டிக்கப்பட்டார்.

பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட பகுதியைப் பத்திரிகையில் வெளியிட்டதற்காக 1993 பிப்ரவரியில் தினகரன் பத்திரிகை ஆசிரியர் முத்துப்பாண்டியனுக்கு ஒரு வார சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

2001ல் அ.தி.மு.க. 5வது முறையாக ஆட்சி வந்தது. 'தி ஹிந்து' நாளிதழில் வெளியான தலையங்கம், செய்திகள் சட்டப் பேரவையின் உரிமையை மீறியதாகக் கூறி, அப்பத்திரிகையின் ஆசிரியர் உள்ளிட்ட 5 பேரையும், முரசொலி ஆசிரியரையும் கைது செய்து, 15 நாள் சிறையில் அடைக்க 7.11.2003ல் சட்டப்பேரவை உத்தரவிட்டது.

2001ல் இரவு நேரத்தில் கருணாநிதியை செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னையில் தி.மு.க. பேரணி நடத்தியது. பேரணியில் சென்றவர்களைத் தாக்கியவர்களைப் படம் எடுத்த பத்திரிகையாளர்கள் காவல் துறைத் தலைமை இயக்குனர் (டி.ஜி.பி.) அலுவலகம் அருகிலேயே கொடூரமாக தாக்கப்பட்டனர்.

1.3.1998ல் மதுரையிலும் 30.7.2002ல் தஞ்சையிலும் உள்ள தினமலர் அலுவலகங்கள் தாக்கப்பட்டன.

நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால் "பொடா" சட்டத்தின் கீழ் 11.4.2003ல் கைது செய்யப்பட்டார்

உடன்பிறப்பே,

பட்டியலைப் பார்த்தாயா! பத்திரிகையாளர்கள் பழிவாங்கப்பட்ட போதெல்லாம் எதிர்த்து ஒரு சொல் உதிர்க்காதவர்கள் இன்று நான் சி.பி.ஐ. விசாரனைக் கோரிய பிறகும் என் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியை கொட்டுகிறார்களே; நியாயந்தானா? நீங்களே சிந்தியுங்கள் என்று அவர்களைக் கேட்கிறேன்.

அன்புள்ள

**மு.க.**

14-05-2007

# 3264. வராதா? வரக் கூடாதா?

உடன்பிறப்பே;

(நீண்ட காலமாக எனக்கு ஆசை; பிராமணர் ஒருவர் ஆசிரியராக இருக்கும் வகுப்பில், மாணவர்கள் சிலர் அவரைக் கேள்விகள் கேட்டு; அவர் தனது மொழியில் பதில் அளிக்கும் விதமாக; "ஒரு கேள்வி பதில் தொகுப்பு" எழுத வேண்டும் நன்று! அதுதான் இது!)

**மாணவன்** :- அய்யா! இராமர் பாலம் என்றால் என்ன? சேது கால்வாய்த் திட்டத்துக்கு இது எப்படி இடைஞ்சலாகும்?

**ஆசிரியர்** :- இது தெரியாதோ; மண்டூ! மண்டு! சமுத்திரத்திலே திட்டு திட்டா மணல் மேடு உருவாகி, அது ரொம்ப நீளத்துக்கு பாலம் போல - இருக்குடா மண்டு; அதைத்தான் இராமர் பாலம்னு பெரியவா சொல்றா! அந்தப் பாலம் குறுக்கே இருந்தா சேதுக் கால்வாயிலே கப்பல் எப்படிப் போக முடியும்? அதனாலதான் அந்த மணலை எல்லாம் அகற்றி, அப்பறம் கப்பலை விடப் போறாளாம்.

**மாணவன்** :- அப்படின்னா ..... ராமர் பாலத்தை இடிச்சே ஆகணுமா?

**ஆசிரியர்** :- அப்படித்தான் - - மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும், பொறியாளர்களும் சொல்றாங்க!

**மாணவன்** :- ஓ! அதாவது மணல் குவிஞ்சு வரிசையா திட்டுத் திட்டா நீளமா இருக்கு - இதைப் பார்க்க பாலம் மாதிரி இருக்கு -

**ஆசிரியர்** :- ஸ்பஷ்டமா சொன்னேடா - அதான் இராமர் பாலம் - சாட்சாத் இராம பிரான் கட்டின பாலம்.

**மாணவன்** :- ஏன் சார்? அந்தப் பாலத்திலே அடிக்கல் நாட்டு விழா கல்லு - பாலத் திறப்பு விழா கல்லுனு எல்லாம் இப்பவும் இருக்குதா ?..... அதாவது; அனுமார் தலைமையிலே இராமன் திறந்து வச்ச பாலமா?

**ஆசிரியர்** :- ஆமாம் - பதினேழு லட்சம் வருஷத்துக்கு முன்னாடி திறப்பு விழா நடந்த பாலம்! - முப்பத்து முக்கோடி தேவர்களும் விழாவுக்கு வந்து மலர் மாரி பொழிந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

**மாணவன்** :- நான் கேள்விப்பட்டேன் சார்;

முப்பது முக்கோடி தேவர்களும் அந்தப் பாலத்திலே ஏறி நின்னு பூமாரி பொழிஞ்ச போது - அவ்வளவு ஜனக்கூட்டத்துக் கனம் தாங்காம அந்தப் பாலம் இடிஞ்சு விழுந்ததாமே? - ஏன் சார்; பாலம் இடிஞ்சா பக்கத்திலே புதுப் பாலம் கட்டுறாங்களே; இப்பகூடப் பாருங்க; நம்ப சென்னை அடையாறுல; ஒரு பழைய பாலத்தை; கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சரா இருந்தப்ப இடிச்சுட்டு புதுசா "திரு.வி.க. பாலம்" என்று ஒரு பாலம் கட்டியிருக்காரே?

**ஆசிரியர்** :- டேய் - குறும்பா! குதர்க்கமெல்லாம் பேசாதே - சேது கால்வாய்த் தோண்டுறேன் - தமிழ்நாட்டை வாணிபத்திலே பொருளாதாரத்திலே வளமாக்கிறேன்னு; வீண் கதை பேசிகிட்டு; ராமனோட சாபத்துக்கு ஆளாகப் போகுது ஒரு கூட்டம்!

**மாணவன்** :- ஆசிரியர் அய்யா; அப்படின்னா சேது திட்டம் வராதுன்னு சொல்லுங்க!

**ஆசிரியர்** :- வராதுன்னு சொல்லலேப்பா; வரக் கூடாதுன்னு சொல்றேன் - சேலம் இரும்பாலைத் திட்டம்ன்னா இவாளே கொண்டு வர்ரா - நெய்வேலி இரண்டாவது சுரங்கமும் இவா கோரிக்கையேதான் - தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்கும் இவாளே உரிமை கொண்டாடுரா - வெளிநாட்டு முதலீடுகளுக்கும் இவாளே காரணம்கிரா! செம்மொழின்னா இவா தான் - இப்ப சேது கால்வாயும் சேந்துட்டா தலை கீழா நிப்பா! கையில புடிக்க முடியாது..... - அதனாலதான் இராமர் பாலமோ - இராவணன் பாலமோ ஏதோ ஒன்னைச் சொல்லி; தடுத்து நிறுத்துறது நம்மவா தர்மம்!

**மாணவன்** :- ராமாயணம் என்பது உண்மையில் நடந்ததுதானே சார்?

**ஆசிரியர்** :- ஏண்டா, அம்பீ! நம்ப ராஜாஜி எழுதிய புத்தகத்துக்கு அவரே முன்னுரை எழுதும்போது "The Ramayana is not history or biography. It is a part of Hindu mythology" - அதாவது

ராமாயணம் என்பது சரித்திரமோ வாழ்க்கை வரலாறோ அல்ல. அது இந்து இதிகாசத்தின் ஒரு பகுதி என்று சொல்லியிருக்கிறார்னு நான் போன வாரம் சொல்லிக் கொடுத்ததை மறந்துட்டியா?

**மாணவன் :-** அய்யா; திராவிடர் கழகத்தினர் சார்பில் தயாரிக்கப்பட்ட "பெரியார்" திரைப்படத்துல கூட இதப் பற்றி ஒரு காட்சி வருது அய்யா?

**ஆசிரியர் :-** ஆமாம், ஆமாம்! சரியா கவனிச்சிருக்கே, ராமர் பாலம் கட்ட அணில் உதவி செஞ்சுது, அத ராமர் பாராட்டி தடவிக் கொடுத்ததாலத்தான் அணில் முதுகிலே மூன்று கோடு இருக்கிறதா ஒரு கதை சொல்லிக்கிட்டிருந்தோம். அதை கெடுக்கிற மாதிரி, அந்தப் படத்துல, சீதை முதுகில ராமர் கை படவே இல்லையான்னு ஒரு கேள்வி கேட்டு எல்லோரையும் சிந்திக்க வச்சுட்டா!

**மாணவன் :-** ராமாயணத்தை பத்தி நேருஜி அவர்களேகூட அவருடைய புத்தகத்திலே ஏதோ எழுதினதா சொல்வாங்களே அய்யா?

**ஆசிரியர் :-** "ராமாயணம் என்பது ஒரு காவியமல்ல, அது திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தைப் பற்றி மிகைப்படுத்தி, பல அறிவிற்குப் பொருந்தாத கதைகளைப் புகுத்தி எழுதப்பட்ட ஒரு கற்பனைக் கதை" என்று நேருஜி அவர்கள் தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்களிலே குறிப்பிட்டதாக அவருடைய "டிஸ்கவரி ஆப் இண்டியா" புத்தகத்திலே இருப்பது உண்மைதான்.

**மாணவன் :-** சார், இன்னைக்கு "தமிழ் ஓசை" பத்திரிகையிலே கூட "ராமர் பாலம்" பற்றி அ. முதுகுன்றன் என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறாரய்யா?

**ஆசிரியர் :-** சமத்து, அதக்கூட படிச்சிருக்கியே? அந்தக் கட்டுரையாளர், "இராமர் பாலம்" என்பது மணல் கயிறு என்றே வர்ணித்திருக்கிறாரே? சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் மக்களுக்காகக் கடவுளா? கடவுளுக்காக மக்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூட எழுதியிருக்கிறாரே! மேலும் அந்தக் கட்டுரையிலே "வேதங்களோ, உபநிஷதங்களோ இராமாவதாரத்தைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை, மகாவிஷ்ணு ராமனாகப் பிறந்தது உண்மை என்றால், மகாவீரரும், புத்தரும்

தோன்றி நடமாடியிருக்க முடியாது என்றே குறிப்பிட்டிருக்காரு! நம்மவா சொல்றதுக்கு எதிர்ப் படையா வந்ததையெல்லாம் நீ படிச்சிருக்கே!

**மாணவன்** :- அய்யா! நீங்க சொன்ன மணல் திட்டுகளைப் பற்றி நேற்று கலைஞர் கருணாநிதி எழுதுன ஒரு கேள்வி பதிலிலே கூட கடலியலாளர் ஒருவர் எழுதியதைச் சுட்டிக்காட்டி, தெற்கே உள்ள மணல் திட்டுக்களை ராமர் கட்டியிருந்தா, வடக்கே உள்ள மணல் திட்டுக்களை யார் கட்டியது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் அய்யா?

**ஆசிரியர்** :- டேய்! நீ வேண்டும்னே இந்தக் கேள்வியையெல்லாம் யாரோ சொல்லி கேக்குறியா? முதல்ல சரித்திர ரீதியா கேட்டே, பிறகு இதிகாச புராண ரீதியா கேட்டே, இப்ப என்னடான்னா கடல் விஞ்ஞான ரீதியா கேக்குறியே?

**மாணவன்** :- சார், சார், தப்பா நினைச்சுக்காதிங்க! வகுப்புல உள்ள ஒரு சில பசங்க இதுபோல கேக்குற கேள்விகளுக்கு என்னால பதில் சொல்ல முடியாமத்தான் உங்களைக் கேட்டு தெரிஞ்சுக்க முயற்சி செய்தேன், ஆனால் நீங்ககூட அவுங்களுக்கு ஆதரவாதானே எல்லாத்தையும் சொல்றீங்க!

**ஆசிரியர்** :- ஆமாண்டா சாமி! இன்னும் சொல்லப்போனா, நம்மவா ஆட்சியிலேயே, வாஜ்பயி பிரதமரா இருந்த போதே சேது கால்வாய்த் திட்டத்துக்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறோம், அதைத்தான் நாடாளுமன்றத்திலேயே அந்தத் துறை அமைச்சர் ஆதாரபூர்வமா புட்டு புட்டு வச்சிட்டான்!

**மாணவன்** :- சார்! சார்! அப்படின்னா ராமர் பாலம் என்கிறது ஒரு தடைக்கல்; அவ்வளவுதானா?

**ஆசிரியர்** :- எத்தனை தடைக்கல் போட்டா என்ன! அந்த மத்திய அமைச்சர் பாலு கேக்கப் போறானா? - மகா கெட்டிக்காரனாச்சே - மறுப்புக்கு மேல மறுப்பு சொல்லி - இந்த மாதிரி திட்டங்களையெல்லாம் சாதிக்கிறவனாச்சே...

**மாணவன்** :- ஆசிரியரய்யா அப்படின்னா; நான் சொல்றதை கேளுங்க.....

**ஆசிரியர்** :- என்ன?

**மாணவன் :-** எப்படியும் சேது கால்வாய் வரப் போகுது - கப்பல் அந்த வழியா போகப் போகுது - அதனால் இப்பவே அவுங்களோட நாமும் சேர்ந்து கூட்டத்தோடு கோவிந்தா போட்டுட்டு போகலாமே...

**ஆசிரியர் :-** ஆமாண்டா - அதுவும் சரி தான் - சேதுக் கால்வாய்த் திட்டம்; நிறைவேற்றியே தீருவோம்.

(எல்லோரும்; "நிறைவேற்றியே தீருவோம்" என்று முழக்கமிடுதல்)

அன்புள்ள,

**மு.க.**

25-05-2007

# 3265. கருத்துக் கணிப்பா? கருத்துக் கடுப்பா?

"கருத்துக் கடுப்பு" மீண்டும் வெளியாகியிருக்கிறது, "கருத்துக் கணிப்பு" என்ற பெயரால்! அதற்கு பிரமாதமான தலைப்பு - "விரைந்து முடிவெடுப்பதில் சிறந்தவர்" என்று ஜெயலலிதாவுக்கு மக்களின் ஆதரவு, 53.3 சதவிகிதமாம் - கருணாநிதிக்கு 45.6 சதவிகிதமாம் - இதை முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டு முக மலர்ச்சியுடன் (ஒண்டிக்கு ஒண்டி) முண்டா தட்டிக் கொள்கிறது ஒரு மாலை ஏடு -

இதோ, கலைஞர் எழுதி "கோப்புகள் இங்கே! கோடிகள் எங்கே" என்ற தலைப்பில் வெளி வந்துள்ள ஒரு புத்தகத்தில் "கதைகளல்ல! கண்ணீர் அருவிகள்" என்று மகுடமிட்டு 33ஆம் பக்கத்தில் காணப்படும் ஒரு கட்டுரையைப் படித்தால், "விரைந்து முடிவெடுக்கும் குணத்துக்கு" இந்த ஜெயலலிதாவுக்கு எந்த அறிவாளி (?) யாவது 53 சதவீதம் தருவானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதோ தொடர்கிறது கலைஞரின் கட்டுரை! ஆம்; கடிதம் - முரசொலியில்! அது வருமாறு :-

**கதைகளல்ல; கண்ணீர் அருவிகள்!**

**உடன்பிறப்பே,**

விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தில் ஏறி அமர்வதற்கு அதன் ஒவ்வொரு படியாகக் கடக்கும் போது, ஒவ்வொரு படியிலும் ஒரு பதுமை ஒரு கதை சொன்னது என்றும்,

அந்தக் கதைகள் அனைத்தையும் காது கொடுத்துக் கேட்ட பின்னரே, "போஜ மகாராஜன்" எனப்பட்டவன் இறுதியாகச் சிம்மாசனத்தில் அமர முடிந்தது என்றும்,

அப்படியே அமர்ந்தான் என்றும் - சிறிய வயதில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையில் படித்த நினைவு இருக்கிறது.

அந்த நினைவைச் சுமந்து கொண்டுதான் கடந்த 13-5-2006 அன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டு ஆட்சி நடத்தத்

தொடங்கிய நாளிலிருந்து, ஒவ்வொரு நாளும் நிர்வாகத்தில் மிக முக்கியமான இரத்த ஓட்டமாக இருக்கின்ற கோப்புகள் படித்து ஆணைகள் பிறப்பிக்கின்ற அவசியமான பணியை ஆற்றி வருகிறேன்.

ஐந்தாண்டு 2001 முதல் 2006 என ஆட்சி புரிந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், கோட்டையில் அமர்ந்து கோலோச்சிய விதம் எவ்வாறு இருந்தது என்பதற்கு, தேங்கிக் கிடந்து, பொந்துகளில் இருந்து எட்டிப் பார்த்து என்னிடம் சிக்கிக் கொண்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட தூசு படிந்த கோப்புகள் அசைக்க முடியாத சான்றுகளாக அமைந்துள்ளன.

அந்தக் கோப்புகளில் மிக முக்கியமானவைகளாக உள்ள சில; விக்கிரமாதித்தன் சிம்மாசனத்துப் பதுமைகள் போல என்னிடம் சொல்லியுள்ள கதைகளைத்தான் உனக்கும், ஊராருக்கும் தெரிவித்து வருகிறேன்.

ஊரார் என்றதும் இன்று நான் பிறந்த ஊர்ப் பக்கம் ஒருநாள் பயணமாக விவசாயத் தொழிலாளிகள் மாநாட்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களாம் தோழர் நல்லகண்ணு, தோழர் தா.பாண்டியன் ஆகியோரின் அழைப்புக்கிணங்க திருவாரூருக்குச் செல்வது ஞாபகத்திற்கு வந்துவிட்டது.

பயணத்திற்குத் தயாராகிறேன்; பதுமை பேசுவது போல பழைய கோப்பு ஒன்று என் எதிரே வந்து பேசுகிறது.

வணிக வரி மற்றும் பதிவுத்துறை சம்பந்தப்பட்ட கோப்பு தான் அது.

டாக்டர் அம்பேத்கர் மக்கள் சங்கம் ( டாப்சி ) சார்பாக ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 550 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு,

மயிலாடுதுறை
சீர்காழி
தரங்கம்பாடி
நன்னிலம்

வட்டங்களில் உள்ள 564.67 ஏக்கர் நிலங்களை, ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் என்ற திட்டத்தின் கீழ் வழங்கி, அதற்கான கொடை ஆவணங்களைப் (Gift Deed) பதிவு செய்யும்

போதுமுத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துக்கு விலக்களிக்குமாறு கோரப்பட்டது. அந்தக் கோரிக்கை, தி.மு. கழக ஆட்சியில் 29-4-1998 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் 12-3-2001இல், தி.மு.க. ஆட்சி மாறுவதற்கு இரண்டு மாதத்துக்கு முன்பு அம்பேத்கர் மக்கள் சங்கம், தனது முதல் கோரிக்கையையொட்டிய மற்றொரு கோரிக்கையை வைத்தது. அதாவது, அந்த நிலங்களை விற்பனை ஆவணங்கள் (Sale Deed) மூலமாக வழங்க உத்தேசித்துள்ளதாகவும், எனவே அரசின் ஆணையில் "கொடை ஆவணம்" என்று இருப்பதற்குப் பதிலாக "விற்பனை ஆவணம்" என்று திருத்தம் செய்து அரசாணை வெளியிட வேண்டும் என்ற சிறியதோர் கோரிக்கைதான் அந்த ஆதி திராவிட மக்களின் கோரிக்கையாகும்.

அந்தக் கோரிக்கையை நாகை மாவட்ட ஆட்சியர் அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கிறார்.

அதற்கிடையே 2001இல் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் ஆட்சி மாறி விடுகிறது. அம்மையார் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்து விடுகிறது.

அம்பேத்கர் மக்கள் சங்கத்தின் சார்பில் வைக்கப்பட்ட அந்த "திருத்தக் கோரிக்கை" அ.தி.மு.க. அரசின் சட்டத் துறையினால் பரிந்துரை செய்யப் பெற்று, அடுத்து வணிக வரித் துறையும் ஏற்றுக் கொண்டு, நிதித் துறையும் மறுப்பு சொல்லாமல் ஒப்புதல் தந்து, முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்களின் ஒப்புதல் கையெழுத்துக் காகக் கோப்பு 18-6-2003 அன்று அவரிடம் போய்ச் சேருகிறது. அம்மையாரின் செயலாளர், அந்தக் கோப்பு அமைச்சரவையில் வைக்கப்படலாமா? என்று அதிலே எழுதி, அதற்கான பதிலை மீண்டும் சுற்றுக்கு அனுப்புமாறு தெரிவித்து, கோப்பினை துறைக்கே திருப்பி அனுப்பி வைக்கிறார்.

("அமைச்சரவையில் விவாதித்து முடிவு எடுக்கலாம்" என்று முதல் அமைச்சரே அந்தக் கோப்பில் எழுதி அனுப்புவதற்குப் பதிலாக, இந்தச் சுற்று வேலை நடைபெறுகிறது.)

எனவே, முதலமைச்சர் ஜெயலலிதாவின் செயலாளர் எழுப்பிய கேள்வியையொட்டி கோப்பு மீண்டும், ஊர்வலமாக அனுப்பப் பெற்று -

25-6-2003 அன்று தொடங்கி, 16-11-2004 வரையில் பழனி முருகன் பரமசிவன் பார்வதியைச் சுற்றி வர மயில் வாகனத்தில் பறந்தான் என்பார்களே! அது போலப் பயணம் செய்து, ஆக மொத்தம் அந்தக் கோப்பு ஒரு வருடம், ஐந்து மாதங்களுக்குப் பிறகு, முதல் அமைச்சர் அலுவலகத்தை மீண்டும் எட்டிப் பார்க்கிறது! முதல்வரின் கையெழுத்துக்காகத் தவியாய்த் தவிக்கிறது! கையெழுத்தாவது! கால் எழுத்தாவது! அதன் தலை யெழுத்தை மாற்றி எழுத முடியுமா? இத்தனைக்கும் முடிவு செய்ய வேண்டியது! பெரிய பிரச்சினை ஒன்றுமில்லை! ஏற்கனவே அம்பேத்கர் மக்கள் சங்கத்தினர் 550 ஏழை விவசாயிகளுக்கு, குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்குவதை பதிவு செய்யும்போது "கொடை ஆவணம்" (Gift Deed) என்பதை, விற்பனை ஆவணம் (Sale Deed) என்று திருத்தம் செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்ற இந்தக் கோரிக்கைக்குத்தான் - இத்தனை ஆண்டு - அம்மையார் ஆட்சியில் - அந்தக் கோப்புக்கு இந்தப் படாதபாடு!

அப்படியும் அம்மையாரின் அருள்மிகு ஒப்புதல் கையெழுத்து அந்த அரசாணைக்கு அந்தக் கோப்பில் கிடைத்ததா? இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

கோப்பு பாவம்! கொட்டாவி விட்டுக் கொண்டிருந்து விட்டு, அம்மையார் கோட்டையைக் காலி செய்யும் வரையில், கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருந்து விட்டு - "அப்பாடா! ஐந்தாண்டு முடிந்து விட்டது, இனி நமக்கு அபயம் கொடுப்பார் யார்?" என்று தேடியலுத்து நேற்று (11-9-2006) என்னிடம் வந்து சேர்ந்தது!

எப்படி வேடிக்கை! வேதனையான வேடிக்கை யென்று எண்ணிப் பார் உடன்பிறப்பே! 1997 ஆம் ஆண்டு இறுதியில் தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிட மக்களுக்காகக் கொடுக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்து, அப்போதே ஒரு முறை அமைச்சரவையில் வைத்து முடிவெடுத்து, 1998 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. ஆனால், அந்த ஆணையில் இருந்த "கொடை ஆவணம்" என்பதை "விற்பனை ஆவணம்" என்று ஒரு சிறிய திருத்தம் செய்து ஆணை பிறப்பிக்க, அதுவும் ஆதி திராவிட ஏழை மக்களுக்காக

அந்த அனுகூலத்தைச் செய்திட, அம்மையார் ஆட்சிக்கு அருளே சுரக்காமல் - 2001 முதல் 2006 வரையில், கருணை பிறந்து கையெழுத்தே போடாமல் - முதலமைச்சர் ஜெயலலிதாவின் அலுவலகத்தில் மூலையில் கிடந்த அந்தக் கோப்பு, 11-9-2006 அன்று பரிதாபமாக என்னைப் பார்த்துக் கொண்டு வந்து நின்றது, நான் அதிலே கையெழுத்து போட்டு விட்டுத்தான் திருவாரூர் நிகழ்ச்சிக்குப் புறப்பட்டேன்.

பயணப்படும் பகுதிக்குத் தொடர்புடைய பிரச்சினை என்பதால் அதிகப்படியான ஆர்வத்துடன், பதுமை சொன்ன கதைகளை போஜராஜன் கேட்டது போல நானும் கேட்டேன் -

கேட்டதை உனக்குக் கடிதமாக எழுதினேன்! இன்னும் எத்தனை பதுமைகளோ? எத்தனை கதைகளோ! கதைகளல்ல! கண்ணீர் அருவிகள்!

அன்புள்ள,

**மு.க.**

27-5-2007

.....

இந்தக் கடிதத்தின் மூலம் கலைஞர் அவர்கள் சான்றாக எடுத்துக் காட்டியுள்ள ஜெயலலிதாவின் சுறுசுறுப்புக்கு 53 சதவீதமென்ன! 103 சதவீதம் கூட கொடுக்கலாம் அல்லவா? எல்லாம் கொடுப்பதைப் பொறுத்துத்தானே இருக்கிறது.....

பி.கு.;- ஜெயலலிதாவின் புகழ்பாடும் அந்தக் கருத்துக் கடுப்பை மகிழ்ச்சியோடு வெளியிட்டுள்ள அந்த மாலை ஏடு, அதே கருத்துக் கணிப்பில் "கம்பி வடத் தொலைக்காட்சியை (கேபிள் டி.வி.) அரசுடைமையாக்க 62.6 சதவிகித மக்கள் ஆதரவு" தெரிவித்துள்ளதை மட்டும் ஏனோ மறைத்து விட்டது!

# 3266. கோட நாடு எஸ்டேட்டில் கோணிப் புளுகு ராணி!

**உடன்பிறப்பே,**

ஒரு சிறு கதை - வேடிக்கைக் கதை - வேதனையளிக்கும் கதையுங்கூட - கிராமத்து "டூரிங்" கொட்டகையில் "நாடோடி மன்னன்" படத்தைப் பார்த்து விட்டு, உள்ளூர், வெளியூர் ரசிகர்கள் எல்லாம் தெருவில் போய்க் கொண்டிருந்தார்கள். கிராமப் பஞ்சாயத்து அலுவலக வாசலில் இருந்த சிறிய மணிக் கூண்டு கடிகாரம் - மணி பனிரெண்டு அடித்து ஓய்ந்திருந்தது. தெருவில் அழுது வடிந்து கொண்டிருந்த விளக்குகளின் வெளிச்சத்தில் - யார் முகத்தையும் உற்றுப் பார்த்தால்தான் அடையாளம் தெரியும் - நடந்து செல்வோரில் ஒருவனாகத்தான் சுந்தர் வந்து கொண்டிருந்தான். அவன் விழிகள், அந்தத் தெருவில் உள்ள வீட்டுக் கதவுகளையே விழுங்குவதுபோல் பார்த்துப் பார்த்துச் சுழன்று கொண்டிருந்தன.

படம் பார்த்து விட்டு வருகிற கூட்டத்தோடு கூட்டமாக வருகிற அவனை, யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதிலே அவன் வெகு எச்சரிக்கையாக இருந்தான். அவன் குறிபார்த்து வந்து கொண்டிருந்த வீட்டின் கதவு, சற்று லேசாகத் திறந்திருந்ததை அவன் பார்த்துவிட்டான். அவனைக் கேட்காமலே அவன் கால்கள் அங்கே நின்று விடுகின்றன.

அளவோடு திறந்திருந்த அந்தக் கதவு இடுக்கில் இரண்டு விழிகள், அவனையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. அந்தப் பார்வை அவனை ஏதோ ஒரு மயக்கத்தில் ஆழ்த்துகிறது. கண் பார்வையை அடுத்து கை அசைவு - "வா! வா! வந்து விடு!" என்ற மௌன அழைப்பு - அவனுக்கோ மேனி நடுங்குகிறது - அப்போதுதானா அந்தக் கிழவி அந்த வீட்டின் கதவு ஓரமாக

இருமிக்கொண்டு வரவேண்டும் - சுந்தர், கிழவியையும் நோக்குகிறான் - கதவிடுக்கில் சுழலும் குமரியின் கண்களையும் நோக்குகிறான் - சமாளித்துக் கொண்டு அந்த வீட்டின் அருகே போகிறான் - கதவு மேலும் சிறிது திறக்கிறது. அந்தக் கை அவனை மெல்ல இழுக்கிறது.

அந்த எழுபது வயதுக் கிழவிக்கு எப்படித்தான் இவ்வளவு கூரிய பார்வையோ தெரியவில்லை. குமரி இழுப்பதையும் - குமரன் சுந்தர் உள்ளே போவதையும், கூனல் கிழவி கண்டு விடுகிறாள். அவளும் அந்த வீட்டின் கதவருகே வந்து விடுகிறாள். ஆசையில், அவசரத்தில், அடங்காத உணர்ச்சியில் - குமரன் குமரி தழுவிக் கொள்கிறார்கள் - அந்த நேரம் பார்த்து, கூன் கிழவி உள்ளே நுழைந்து விடுகிறாள். கிழவி வந்தது அறியாத குமரி, கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு கூடத்துக்கு வந்துவிடுகிறாள்.

"ஏண்டி பாப்பா! யாரோ நடக்கிற மாதிரி அரவம் கேக்குதே யாரது?"

குமரிக்கு அவளது மாமியார் குரல் புரிந்து விட்டது. நடுங்கிக் கொண்டே பதில் சொல்கிறாள்.

"அத்தே! அது யாருமில்லை! யாரும் வரவுமில்லை!

"சரி! சரி! கதவைத் தாழ்ப்பாள் போடு! வீட்டுலே ஆம்பளை யாரும் இல்லாத நேரம்! - யாராவது காலிப் பசங்க நுழையப் போறானுங்க!"

"யாரும் வரமுடியாது அத்தை! கதவை முன்னாடியே தாழ்ப்பாள் போட்டுட்டேன்"

கிழவி, சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே அறையின் பக்கம் கழுத்தை நீட்ட அங்கே அரைகுறை வெளிச்சத்தில் சுந்தர் கூனிக் குறுகிப் படுத்திருப்பதைப் பார்த்து விடுகிறாள்.

"யாரடி அது? உன் புருஷனா? - அவன் புதுக்கோட்டைக்குப் போனவன், அதுக்குள்ளே திரும்பி வந்துட்டானா?"

கிழவி இப்படிக் கேட்டுக்கொண்டே அறைக்குள்ளே போய் ; மங்கலான விளக்கைத் தூண்டி விட்டு, அதைக் கையில் தூக்கிப் பார்க்கவே,

சுந்தர் எழுந்து "சே! சே! ஒரே கொசுக்கடி!" என்று ஏதோ கூறிக்கொண்டே தெருவுக்கு ஓடினான்.

(ஆத்திரம் பொங்கிட கிழவி கேட்டாள்)

"ஏண்டி பாப்பா - அவனை உள்ளே விட்டு கதவைத் தாழ்ப்பாள் போட்டுகிட்டு, என் கண்ணுக்கும் திரை போட்டு, புருஷனுக்குத் துரோகம் பண்றியா?"

"பாட்டி! இல்லை பாட்டி இல்லை! அந்த ஆள் எப்படி உள்ளே வந்தான்னே எனக்குத் தெரியாது - யாரும் வரமுடியாம நான் கதவைத் தாப்பா போட்டு வச்சேனே!"

" போடி! ஒண்ணும் தெரியாத பாப்பா!

போட்டு கிட்டாளாம் தாப்பாள்!"

என்று கடுமையாகத் திட்டிக் கொண்டே கிழவி வெளியே போகிறாள்.

உடன்பிறப்பே, அந்தக் கிழவியை ஏமாற்ற குமரி முயன்றிடுவதைப் போலவே,

இதோ நமது முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், கோடநாடு அரண்மனையில் தனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அறிக்கை விட்டு அடித்துக் கூறுகிறார். யார் சொத்தோ அது என்று பம்மாத்து பாடுகிறார்.

கடந்த 1-6-2007 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில்-

"தனியாருக்குச் சொந்தமான இடங்களில் நான் சென்று தங்கினால்கூட, நான் தங்கின பாவத்திற்காக அந்த இடத்தின் சொந்தக்காரர்களை இந்த அரசாங்கம் படாதபாடு படுத்துகிறது" என்றார். அதாவது, ஜெயலலிதா கோடநாடு எஸ்டேட்டில் தங்கிய மாளிகை தனியாருக்குச் சொந்தமான இடம் என்று முன்னாள் முதலமைச்சரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஜெயலலிதா தன் கைப்பட விடுத்த அறிக்கையிலே குறிப்பிட் டிருக்கிறார் என்றால், அதிலே எந்த அளவிற்கு உண்மை உள்ளது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?

அதற்கு இதோ ஒரு ஆதாரம் : -

THE KODANAAD ESTATES COMPANY, KODANAAD,
KOTAGIRI, NILGIRIS.

PARTNERS CAPITAL ACCOUNT.

**N. Sassikala's Capital A/c**

| To | By |
|---|---|
| Closing Balance | Opening Balance |
| (31.3.2006) 1,80,00,000 | (1.4.2005) 1,80,00,000 |

**J. Jayalalithaa's Capital A/c**

| To | By |
|---|---|
| Closing Balance | Opening Balance |
| (31.3.2006) 1,80,00,000 | (1.4.2005) 1,80,00,000 |

**PARTNERS CURRENT ACCOUNT.**

**N. Sassikala's Current A/c**

| To | By |
|---|---|
| Opening Balance | Share of Profit 15,34,726 |
| (1.4.2005) 50,89,226 | Closing Balance |
| | (31.3.2006) 35,54,500 |

**J. Jayalalithaa's Current A/c**

| To | By |
|---|---|
| Opening Balance | Share of Profit 15,34,726 |
| (1.4.2005) 41,38,456 | Closing Balance |
| | (31.3.2006) 26,03,730 |

இந்த ஆதாரங்களுக்குப் பிறகு கோடநாடு எஸ்டேட் ஜெயலலிதா அறிக்கையிலே தெரிவித்ததைப் போல, தனியாருக்குச் சொந்தமானதா? அல்லது அவருக்குச் சொந்தமானதா என்ற உண்மை பட்டவர்த்தனமாகத் தெரிகிறதா, இல்லையா?

ஜெயலலிதாவும், சசிகலாவும் சேர்ந்து மூன்று கோடியே அறுபது இலட்ச ரூபாய் முதலீடு செய்துள்ளதற்கு - சான்று இது! இன்னும் எத்தனை சான்றுகளோ?

"கோட நாடு மாளிகைக்கும், எஸ்டேட்டுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை" என்கிறார் ஜெயலலிதா.

இப்போது, நமக்கு சிறுகதையில் வரும் கிழவி சொல்லுகிற

"ஒண்ணும் தெரியாத பாப்பா

போட்டுக் கிட்டாளாம் தாப்பாள்"

என்ற பழமொழி நினைவுக்கு வருகிறதல்லவா?

அன்புள்ள,

**மு.க.**

6-6-2007

# 3267. விகடனின் வேதனையும், விளக்கமும்!

**உடன்பிறப்பே,**

"அ (ரசியல்) நாகரிகம்" என்று தலைப்பிட்டு "ஆனந்த விகடன்" ஒரு தலையங்கம் எழுதியுள்ளது. அந்தத் தலையங்கத்தில் அது எழுப்பியுள்ள "அச்சம் கலந்த கேள்வி" என்பது நியாயமான கேள்விதான்.

ஆளுங்கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் - மக்களால் பிரதான கட்சிகளாகக் கருதப்பட்டு வாக்குகளைப் பெற்றிடுகிற தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளை மனத்தில் வைத்து "விகடன்" தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது.

அந்தத் தலையங்கம் இதோ; வருமாறு :-

"ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியும், எதிர்க்கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவும் அரசியல் ரீதியாகக் கட்டிப் புரண்டு சண்டை போடாத குறைதான். என்றாலும், அந்த மாநிலத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகக் கடந்த வாரம் நடத்தப்பட்ட கருத்தரங்கில், இரு தலைவர்களும் அடுத்தடுத்த இருக்கைகளில், புன்னகை முகத்தோடு அமர்ந்து பேசிக் கொண்டார்கள். விவசாய நிலங்களைக் கையகப்படுத்தி தொழிற் சாலைகள் அமைக்கக் கூடாது என்று, மேற்கு வங்கத்தை ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராகப் பெரும் புயலையே கிளப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி. "வாருங்கள்..... இது குறித்து மனம்விட்டுப் பேசுவோம்!" என்று கம்யூனிஸ்ட் தலைவர் ஜோதிபாசு தொலைபேசியில் அழைக்க.... மம்தாவும் முகம் சுளிக்காமல் போய் அவரோடு ஆரோக்கியமாக விவாதம் நடத்துகிறார். இப்படி, அரசியல் மோதல்களைத் தாண்டி நல்ல விஷயங்களுக்கு நட்பு பாராட்டுகிற

காட்சிகளை நாடெங்கிலும் காண முடிகிறது. தமிழ்நாட்டு மக்களுக்குத்தான் சாபக்கேடு! இங்கே முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும் சட்டசபையில் எதிரெதிரே அமர்வதே கூட அத்தி பூத்தாற் போன்ற அபூர்வ காட்சிதான்! சுதந்திர தினம், குடியரசு தினம், மறைந்த தலைவர்களின் பிறந்த தினங்கள் என எதற்குமே இவர்களை ஒருசேரப் பார்ப்பது, என்றைக்குமே நிறைவேறாத பெரும் கனவு! இதையெல்லாம் தாண்டி, "துச்சாதனன், சகுனி, இட்லர், இடிஅமீன்" என்றெல்லாம் ஒரு தலைவர் அடுத்தவருக்குப் "பிறந்த நாள் வாழ்த்து" சொல்வதையும், பதிலுக்கு மற்றவர், "நேற்று கொஞ்சம் 'அதிகமாகி' விட்டது போலும்" என்று சிலேடை மொழியில், "சீராட்டு"வதையும் பார்க்கும் போது அச்சம் கலந்த கேள்வி ஒன்று எழுகிறது....

தமிழக அரசியல் நாகரிகம் இன்னும் எவ்வளவுதான் கீழ் நோக்கிப் பாயுமோ....?"

உடன்பிறப்பே, விகடன் எழுப்பியுள்ள இந்த வினாக்களுக்கு விடை தேடுவதற்கு முன்பு, "அரசியலில் தேவைப்படுகிற நாகரிகம்" என்று அழுத்தமாக "விகடன்" கருதுகிற அந்த நாகரிகத்தை இன்று நேற்றல்ல! அந்தக் காலத்திலிருந்தே கடைப்பிடித்து வருவதுதான் தமிழ் நாட்டுப் பிரதான கட்சிகளின் பண்பாடாக இருந்திருந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் சத்தியமூர்த்தியும், அவரை எதிர்த்து நீதிக் கட்சியின் சார்பில் சர். ஏ.ராமசாமி முதலியாரும் மேடைகளில், ஏடுகளில் கடுமையாகத் தாக்கிக் கொண்டு தேர்தலில் நின்றபோதும், ஒருவரை யொருவர் பொது இடத்தில் காணும்பொழுது, கட்டித் தழுவிக் கொண்டனர் என்றே 1932ஆம் ஆண்டின் வரலாறுகள் பகருகின்றன. அந்த நீதிக்கட்சிதான், பெரியார் தலைமையில் திராவிடர் கழகமாகி, பின்னர் அண்ணா தலைமையில் தி.மு. கழகமெனும் அரசியல் கட்சியாக உருவெடுத் துள்ளது. அண்ணா தலைமையில் தி.மு. கழகம் எதிர்க்கட்சியாக விளங்கியபோதுதான் - தனது தொகுதியில் உள்ள தண்டலம் எனும் இடத்துக்கு அன்றைய முதலமைச்சர் காமராஜர் அவர்களை அழைத்து விழா நடத்தி, மக்கள் பிரச்சினைக்கான கோரிக்கைகளை வைத்தார். அதற்கிணங்க காமராஜரும் அவ்விழாவுக்குச் சென்றார்.

காங்கிரஸ் ஆட்சியில், முதல்வர் பக்தவத்சலம் அவர்களை (என்னைப் பாளைச் சிறையில் வைத்தவர்) அழைத்துத்தான் அப்போது எதிர்க் கட்சியில் இருந்த நான், திருக்குவளையில் என் தாயின் பெயரால், அஞ்சுகம் முத்துவேலர் தாய் சேய் நல விடுதியை திறந்து வைக்கச் செய்தேன். அவரும் மறுக்காமல் வந்து கலந்து கொண்டார்.

கழகம், ஆளுங்கட்சியாகவோ - எதிர்க்கட்சியாகவோ இருந்த போதும்கூட - அதே போல காங்கிரஸ் கட்சி ஆளுந்தரப்பிலோ அல்லது எதிர்த் தரப்பிலோ இருந்த போதும் கூட நாட்டிலே, வீட்டிலே நடைபெறும் நல்லது கெட்டதுகளில் நட்புணர்வுடன் கலந்து கொள்கிற நாகரிகத்தை மறந்ததில்லை - கண்டிப்பாகவே கடைப் பிடித்திருக்கிறோம்.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க. தலைவராகி, தி.மு.க. வுக்கு எதிராக எழுதியும் பேசியும் செயல்பட்டு வந்தும்கூட, கட்சிக்கு அப்பாற்பட்டு இருவரும் நண்பர்களாகவே இருந்து வந்தோம். அதனால்தான் அவர் மறைவுச் செய்தி கேட்டதும், ராமாவரம் தோட்டத்துக்கு முதல் ஆளாக மாலையுடன் நான்தான் சென்று மரியாதை செலுத்தினேன்.

காமராஜர், இராஜாஜி ஆகியோருக்கு அரசு மரியாதையுடன் நானே முன்னின்று இறுதிக் கடன்கள் ஆற்றினேன் - நினைவு மண்டபங்கள், நினைவுச் சின்னங்கள் அமைத்தேன்.

எம்.ஜி.ஆர். ஆட்சி அமைந்து, நான் எதிர்க் கட்சித் தலைவரானபோது, ஆகஸ்ட் 15 - சுதந்திர தினத்தன்று கோட்டை கொத்தளத்தில் எம்.ஜி.ஆர். தேசியக் கொடியேற்றிய விழாவிலும் கலந்து கொண்டேன். அந்த விழாவில், தேசியக் கொடியேற்றும் உரிமையை மாநில முதல்வர்களுக்குப் பெற்றுத் தந்தவன் என்று எம்.ஜி.ஆர். என்னைப் பாராட்டிப் பேசினார்.

2001ல் அ.தி.மு.க. அம்மையார் தலைமையில் ஆட்சிக்கு வந்தபோது, அந்தப் பதவியேற்பு விழாவுக்கு நூற்றாண்டு விழா மண்டபத்துக்குச் சென்று கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியரையும், சென்னை மேயர் ஸ்டாலினையும் கேட்டுக் கொண்டேன். என் கருத்தையேற்று விழாவுக்குச் சென்ற இருவருக்கும், ஏழாவது, எட்டாவது வரிசையில் தான் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது அந்த விழா மண்டபத்தில்! அதாவது

எதிர்க்கட்சித் தலைவருக்கும் - மேயருக்கும் அப்படியொரு மரியாதை தரப்பட்டது!

அடுத்த சில நாட்களில், சென்னை மேயர் பதவியிலிருந்து ஸ்டாலினை அகற்ற ஒரு தனிச் சட்டமே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதை, ஜனநாயகவாதிகள் மறந்திருக்க முடியாது என்று நம்புகிறேன்.

பெரியார் தலைமையில் தி.க. வும், அண்ணா தலைமையில் தி.மு.க.வும் இயங்கிய நிலையில்தான் விஞ்ஞானி ஜி.டி. நாயுடு நடத்திய விழாவில், பெரியாரும், அண்ணாவும் கலந்து கொண்டார்கள்.

அப்போதுதான் ஒரு மொழிப் போராட்டத்தில் - ஒரே நாளில் - பெரியார் திருச்சி ரயிலடியில் ஒரு பகுதியில் இந்தி எழுத்துகளை அழித்திடவும் - நான் இன்னொரு பகுதியில் இந்தி எழுத்துகளை அழித்திடவுமான போராட்டம் - அஞ்சல் நிலையமொன்றில் இந்தி எழுத்துகளை அழித்து விட்டு நான் திரும்பிய போது எதிரே வழியில் பெரியாரைக் கண்டு, அவர் வேனுக்குச் சென்று அவரை வணங்கி, வாழ்த்துப் பெற்ற நினைவு நெஞ்சை விட்டகலவில்லை.

1967 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க.வும், காங்கிரசும் எதிரெதிராக நின்று போட்டியிட்டு கழகம் வெற்றி பெற்றவுடன், அந்தத் தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவாக இருந்த தந்தை பெரியார் அவர்களைத் திருச்சிக்குச் சென்று அண்ணா அவர்கள் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றார். அதைப்போலவே காமராஜர், பக்தவத்சலம் ஆகியோரின் வீடுகளுக்கும் சென்று அவர்களைப் பார்த்து வாழ்த்துகளைப் பெற்றார்.

அதன் பின்னர், நான் முதலமைச்சராக இருந்த போது, காவேரி போன்ற பொதுப் பிரச்சினைகளில் மத்திய அரசுடனும், மற்ற மாநிலங்களுடனும் பேச்சுவார்த்தைக்குச் சென்றபோது, காமராஜர் அவர்களையும், பக்தவத்சலம் அவர்களையும் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றுத்தான் சென்றேன்.

அதைப்போலவே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசின் சார்பில் தமிழக அரசு மூலமாக தாமிரப் பட்டயம் விருது வழங்கப்பட்ட போது, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் அவருடைய விருதை அதிகாரிகள் மூலமாக அனுப்பக் கோரிய போது, மாறாக

நானே அதனை எடுத்துச் சென்று அவரிடம் அவரது இல்லத்தில் அளித்தேன்.

பரந்த நோக்கமுடன், விரிந்த பார்வையுடன், "விகடன்" விசாரித்தறிந்தால் இதுபோன்ற பண்பாடு போற்றும் நாகரிகமான அரசியல் நிகழ்வுகள் பலவற்றை நடத்திக் காட்ட தி.மு.க. வும் முக்கிய காரணமாக இருந்திருக்கிறது என்பதை உணர்ந்திட முடியும்.

அத்துடன், விகடனுக்கு நடந்த பொன் விழாவையும் மறந்துவிடாமல், சிந்திக்க வேண்டும்.

விகடன் தலையங்கம் தீட்டியவருக்கு இப்போது விளங்குமெனக் கருதுகிறேன் - அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய நாகரிகத்தைத் தி.மு.க. 2001 வரையிலும்கூட எப்படி விடாப்பிடியாகக் கடைப்பிடித்துள்ளது என்ற உண்மை!

விகடன், இப்போதுகூட இரு கட்சிகளின் போக்கையும், இரண்டையும் சமமாக ஒரே நிலையில் வைத்துத்தான் பார்த்து, அறிவுரை கூறுகிறதே தவிர,

பதிலாகச் சொல்லப்பட்ட "சிலேடை மொழி" என்று விகடன் வருந்துவதை விட, இடி அமீன், இட்லர், சகுனி, துச்சாதனன் என்று பட்டவர்த்தனமாகக் கொட்டப்பட்ட வசைமொழிகளுக்கல்லவா "ஆனந்த விகடன்" அதிகமாக வருந்தியிருக்க வேண்டும். ஆனால், இந்த விமர்சனத்தை என் பிறந்த நாள் வாழ்த்தாக முதலில் தொடங்கி வைத்தவரையும், அதைப்பற்றி வினா எழுப்பப்பட்ட போது, விடையளித்த என்னையும் ஒரே நிலையாகக் கருதுவது எந்த வகையில் நியாயம் என்பதை விகடன்தான் சிந்திக்க வேண்டும்.

பரவாயில்லை! இந்தத் தலையங்கத்தின் வாயிலாகப் பண்பாடும், நாகரிகமும் பாராட்டி வரும் கட்சிதான் தி.மு.க. என்பதை வரலாற்று ரீதியாக நினைவூட்ட வாய்ப்பளித்த விகடனுக்கு நன்றி! நன்றி! நன்றி!

1967 பொதுத்தேர்தலின்போது, அண்ணா, ராஜாஜி, காயிதே மில்லத், பி. ராமமூர்த்தி, ம.பொ.சி., ஆகியோர் ஒரு கழுதை மீது ஏறி கோட்டையைப் பிடிப்பதுபோல "விகடன்" கார்ட்டூன்

வெளியிட்டது. அதைப் பார்த்து விட்டு அவ்வளவு "பெரிய மகான்" ராஜாஜியேகூட, "இந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தக் கழுதை போதும்" என்றார். அதனால் அரசியலில் வசை மொழிக்கோ, கேலிக்கோ பதில் சொல்வது என்பது "அநாகரிகம்" என்றோ, பண்பாடல்ல என்றோ கூறிவிட முடியாதல்லவா?

அன்புள்ள,

**மு.க.**

9-6-2007

# 3268. "ஜோக்கர்" அணி ஆக்குவதா?

**உடன்பிறப்பே,**

அவர் ஒரு பெண்மணி -

கல்வித் தகுதி எம்.ஏ., எல்.எல்.பி. -

சமூக சேவகி, வழக்கறிஞராகத் தொழில் புரிந்தவர் -

1967 முதல் 1985 வரையில், மராட்டிய மாநிலத்துச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்-

1967 முதல் 1972 வரையில், மராட்டிய மாநில அரசாங்கத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை, மதுவிலக்குத் துறை, சுற்றுலாத் துறை, வீட்டு வசதித் துறை ஆகியவற்றின் துணை அமைச்சராகப் பணியாற்றியவர் -

1972 முதல் 1974 வரையில், மராட்டிய மாநில அரசின் சமூக நலத் துறை அமைச்சர் -

1974 முதல் 1975 வரையில், மராட்டிய மாநில அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் -

1975 முதல் 1976 வரையில், மராட்டிய மாநிலத்தில் மதுவிலக்கு, கலை பண்பாட்டுத் துறைகளின் அமைச்சர் -

1977 முதல் 1978 வரையில், மராட்டிய மாநிலத்தின் கல்வி அமைச்சர் -

1979-1980இல், மராட்டிய மாநில சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் -

1982 முதல் 1985 வரையில், மராட்டிய மாநில வீட்டு வசதித் துறை அமைச்சர் -

1983 முதல் 1985 வரையில், மராட்டிய மாநில சமூக நலத் துறை அமைச்சர் -

1985 - 1990 மாநிலங்களவை உறுப்பினர் -

1986 முதல் 1988 வரை மாநிலங்களவைத் துணைத் தலைவர் -

2004 நவம்பரில் ராஜஸ்தான் மாநிலத்தின் ஆளுநர்

இத்தனை பதவிகளில் அமர்ந்து பணியாற்றியவர் என்பதுடன், மும்பையிலும், டெல்லியிலும் பெண்களுக்கென தனியே விடுதிகளை ஏற்படுத்தியவர்.

கிராமப்புற இளைஞர்களுக்காக ஜல்கோனில் பொறியியல் கல்லூரி ஒன்றினைத் தோற்றுவித்தவர்.

"ஷ்ரம் சாதனா" அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராக இருந்தவர்.

அரசு சார்புள்ள மகிள விகாஸ் மகாமண்டல் என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தவர்.

பார்வையற்றோருக்கென ஒரு தொழில் பயிற்சிப் பள்ளியையும், மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கென ஒரு பள்ளியையும் தோற்றுவித்து நடத்தி வருபவர்.

பெண்களுக்கென ஒரு கூட்டுறவு வங்கியையே உருவாக்கியவர்.

நைரோபியிலும், போர்ட்டோரிகோவிலும் நடைபெற்ற சர்வதேச சமூக நல மாநாடுகளில் கலந்து கொண்டவர்.

பெண்களின் நிலை பற்றி ஆஸ்திரியாவில் நடைபெற்ற மாநாட்டுக்கு பெண்களுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் சென்றவர். அதைப்போலவே பல்கேரியாவில் நடைபெற்ற மாநாட்டிற்கும் அழைத்துச் சென்றவர்.

பீஜிங்கில் நடைபெற்ற உலக மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டவர்.

பெண்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளும் ஊர்க்காவல் படையை அமைத்தவர்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மழலையர் பள்ளிகளை உருவாக்கியவர்.

ஆகிய இத்தனை பொது நலம் சார்ந்த பொறுப்புகளைச் சிறப்பாக நிறைவேற்றியவர் -அவரைத்தான் தியாகத் திருவிளக்கு திருமதி சோனியா அவர்களும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும், இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர்களும், இடதுசாரித் தலைவர்களும், தி.மு.கழகத்தின் தலைவராகிய நானும், மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் டெல்லியில் கூடிக் கூடி விவாதித்து, இந்தியாவின் குடியரசுத் தலைவராக இதுவரை ஒரு பெண்மணி அமையாத குறையை இந்த முறை நீக்க வேண்டுமென்று உறுதி செய்து கொண்டு, குடியரசுத் தலைவர் பொறுப்பு வகிப்பதற்கான வேட்பாளராகத் தேர்வு செய்துள்ளோம்.

அவரைத் தேர்ந்தெடுத்து, இந்திய சுதந்திரத்தில் மகளிர்க்குரிய சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று, இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை படைத்தவர்கள் அனைவரையும் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிற நேரத்தில், தேர்தல் களத்தில் நிற்கிற திருமிகு ஷெகாவத் அவர்கள் மீது நமக்குள்ள மரியாதையையும், மதிப்பையும் நினைவிற் கொள்கிறோம். போட்டி வேட்பாளர் என்பதற்காக, அவரது அறிவாற்றலை அலட்சியப்படுத்தி விமர்சிக்க மாட்டோம்.

ஆனால், சென்னையில் மூன்றாவது அணி என்ற பெயரால் ஒரு அணி கூடியது - அப்படிக் கூடுவது அவர்கள் உரிமை - அந்த அணி, ஒரு வேட்பாளரை அறிவிப்பதும் அதன் உரிமை - ஆனால் அதை விடுத்து,

திருமதி பிரதிபா பட்டீல் அம்மையார் அவர்களைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவித்திருப்பது, "நல்ல நகைச்சுவை" - "ஜோக்" என்று அந்த மூன்றாவது அணியினர் கேலி செய்திருப்பது, அந்த அணியிலே உள்ள மூலவர்களின் தரத்தையும், தகுதியையும் குறைக்கக் கூடியதாகும்.

பெரியவர்கள் கூடி "பிள்ளையார் பிடிப்பார்கள்" என்று எதிர்பார்த்தால், அவர்கள் பிடித்தது பிள்ளையாராக இல்லையே?

என்பதுதான் ஏமாற்றம் தரும் செய்தியாகும்.

பிரதிபா தேவி வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது "நகைச்சுவை" என்றால், அப்படிச் சொன்னவர்கள், ஒன்பான் சுவைகளில் ஒரு சுவையும் அறியாதவர்கள் என்றே கருத

வேண்டியுள்ளது, இலையிலிட்ட உண்டியின் அறு சுவை மட்டும் அறிந்தவர்கள் போலும்! என வருந்திடவும் வேண்டியுள்ளது. குடியரசுத் தலைவர் வேட்பாளர் அறிவிப்பை "ஜோக்" என மொழிந்து, மூன்றாம் அணிக்கே "ஜோக்கர்" அணி என்ற பெயர் சூட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை என்பது நமது தாழ்மையான கருத்து!

அன்புள்ள,

**மு.க.**

20-6-2007

# 3269. அன்று சொன்னதும் - இன்று நடப்பதும்!

**உடன்பிறப்பே,**

குடியரசுத் தலைவர் தேர்தலில், பெண் வேட்பாளர் ஒருவரை அறிவித்து, அவருக்கு ஆதரவு திரட்டிட ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினர் தொடங்கியுள்ள முயற்சியை, ஆதிக்கவெறி கொண்டவர்கள், ஆதரித்துத்தான் தீர வேண்டுமென்று, நம்மவர் எவரும் கட்டாயப்படுத்திடவில்லை. ஆனால், மூத்த தலைவர்கள் கூடியெடுத்து அறிவித்துள்ள முடிவை மிகக் கேவலமாக விமர்சிக்கவும், கேலி செய்யவும் முனைந்துள்ளவர்களின் போக்கினைக் கண்டு சிரிப்பும் வருகிறது. சீற்றமும் பிறக்கிறது. சிரிப்பை அடக்கிக் கொண்டு - சீற்றத்தையும் தவிர்த்து, சிந்தனைக்கு இடமளித்தால் சில உண்மைகள் பேருரு எடுக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருமதி பிரதிபா பட்டீல் அம்மையார், வேட்பாளர் என்று நமது அணி அறிவித்துள்ளதை "ஜோக்" என்று ஆணவத்துடன் விமர் சிக்க, ஐந்தாறு பிரபல தலைவர்கள் சென்னையில் மூன்றாவது அணியாகக் கூடினார்கள் என்றால், அடடா! என்னே நாகரிகம் - எத்தகைய அரசியல் பண்பாடு?- எப்படிப்பட்ட ஜனநாயக மேம்பாடு? நமது கூட்டணியை "ஹியூமர் கிளப்" என்றே ஒருவர் வர்ணித்து எழுதியிருக்கிறார்!

பல பெயர்கள், குடியரசுத் தலைவர் தேர்தல் வேட்பாளருக்கென தேர்வு செய்யப்பட்டு, கடைசியாகத்தான் திருமதி பிரதிபா அம்மையார் பெயர் அறிவிக்கப்பட்டதாக ஏதோ அதிசயத்தைக் கண்டுபிடித்தது போலவும் எழுதுகிறார்கள் - செய்தி வெளியிடுகிறார்கள். எந்தவொரு தேர்தல் என்றாலும், வேட்பாளர் யார் என்பதை, ஒரு முறைக்குப் பலமுறை பரிசீலிப்பது என்பது பொறுப்புடையோர் செயலாகத்தான் பல காலமாக

இருந்து வருகிறது. அந்தப் பரிசீலனை இப்போதும் நடைபெற்று, 60 ஆண்டுக்கால சுதந்திர இந்தியாவில், முதன் முதலாக ஒரு பெண்மணி குடியரசுத் தலைவராக வரக்கூடிய வாய்ப்பை நழுவ விடக்கூடாது என்பதும், அவரை வேட்பாளராகத் தேர்வு செய்வதும், எந்த வகையில் "ஜோக்" வரிசையில் வைக்கப்படக் கூடியது என்பதை, அந்த "வசவாளர்கள்" விளக்கிட முன் வருவார்களா?

சரி! இரண்டாவது முறையாக, குடியரசுத் தலைவர் பதவியில் அமர்ந்திட தனக்கு விருப்பமே இல்லை என்றும், மீண்டும் கல்விப் பணியாற்றுவதில் தான் அக்கறையோடு இருப்பதாகவும் கூறி, மறுத்துரைத்த மாமனிதர் அப்துல் கலாம் அவர்களை, இப்போது மூன்றாவது அணியினர் வேட்பாளராக அறிவிக்கிறோம் என்று கூறி, அவர் ஒப்புதலுக்காக டெல்லியில் படையெடுத்துள்ளனர். அவரோ, "வெற்றி உறுதி" என்றால் பரிசீலிப்பேன் என்று கூறி, அவர்களை அனுப்பி வைத்துள்ளார்.

இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக பணியிலே இருப்பவரை, தங்கள் அணியின் வேட்பாளர் என்று அறிவிப்பதற்கு முன்பே, அவருடைய சம்மதத்தை மறைமுகமாகவாவது பெற்றுக் கொள்ளாமல், ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு அவரை ஆளாக்கி, அவரை அதற்குப் பதில் சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்தியதன் மூலம், அந்த அணியினர், இந்திய நாட்டு மாணவ சமுதாயத்தின் பேரன்பிற்குரியவரான அந்த மாமனிதரை அவமானத்திற்கு ஆட்படுத்தியிருக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கின்றது. அவரை வேட்பாளர் என்று செய்தியாளர்களிடம் அறிவித்தவரே, அவரை அதற்குச் சம்மதிக்க வைப்பதற்கு நேரடியாகச் செல்லாமல் புறக்கணித்தது எல்லாவற்றையும் விட அநாகரிகமான செயலாகும்.

இடையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் - 8-12-2006 அன்று நான் டெல்லி சென்றிருந்த போது, தமிழகத்தில் உயர்நீதி மன்றத்தில் தமிழ் மொழியை வழக்கு மொழியாகக் கொண்டுவர தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் நகலை, குடியரசுத் தலைவர் மேதகு அப்துல் கலாம் அவர்களிடம் நேரில் அளித்திட வேண்டுமென்பதற்காக, அவரிடம் சந்திப்பு நேரம் வகுத்துக் கொண்டு - நானும் மத்திய அமைச்சர் தம்பி ராஜாவும் குடியரசுத் தலைவர் மாளிகையில் அவரைச் சந்தித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது நான் அவரை குடியரசுத் தலைவர் தேர்தலில் நிற்குமாறு நேரில் கேட்டுக் கொண்டேன். அவர், மீண்டும் அந்தப் பதவியை விரும்பவில்லை என்றும், பழையபடி மாணவர்கள், கல்வி நிலையங்கள் போன்ற அறிவியல் வளர்ச்சிப் பணிகளிலேயே வாழ் நாளைக் கழிக்க விரும்புவதாகவும் - திட்டவட்டமாக என்னிடம் தெரிவித்துவிட்டார். தான் வகித்த அந்தப் பெரும் பதவியில் தொடர்ந்து நீடித்திட, அவருக்கு அறவே பற்றுப் பாசமில்லை என்பதை உணர்ந்து, பலரிடமும் அந்தப் பெருந்தன்மையைப் பாராட்டி, மகிழ்ந்து, புகழ்ந்துமிருக்கிறேன்.

ஆனால், இப்பொழுது இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற - அதுவும் திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்றிருக்கிற - ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தேர்வு செய்து அறிவித்துள்ள வேட்பாளரை, எப்படியும் தோற்கடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு, எந்த வேட்பாளரை அப்துல் கலாம் அவர்கள், அற்புதமான வேட்பாளர் என்று அக மகிழ்ந்து புகழ்ந்துரைத்தாரோ, அந்த அம்மையாருக்குப் போட்டியாக அதே அப்துல் கலாம் அவர்களையே நிறுத்த முயற்சிக்கிறோம் எனப் படை திரட்டுவது பகை தீர்க்கும் மனப் பாங்கினைக் காட்டுகிறதேயல்லாமல், அப்துல் கலாம் அவர்களின் அறிவுச் செழுமைக்கும், விஞ்ஞான வித்தகத்திற்கும், மூன்றாம் அணியினர் காட்டுகிற மரியாதை ஆகாது!

இவர்களைப் புரிந்து கொண்டிருக்கிற மேதை அப்துல் கலாம் அவர்கள், இந்த உண்மையையும் புரிந்து கொண்டிருப்பார் என்றே நம்புகிறேன்.

அவரைப் பற்றி, அவர் குடியரசுத் தலைவராக 2002 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது, அவரை வாழ்த்தி நான் எழுதிய கவிதையில் சில வரிகளை நினைவுகூர்ந்து நினைவூட்டுகிறேன்.

*“இராமேசுவரம் கடற்கரையில் மோதுகின்ற*
*அலைகள்கூட இன்று மலையளவு உயர்கின்றன!*

*மகிழ்ந்து கூத்தடிக்கின்றன!*
*நடுக்கடலில் காற்றழுத்தத்தின் விளைவு என,*

நானும் நீயும் கருதினால், அது தவறு!
நாள்தோறும் கேட்கும் கடல்பாட்டல்ல இது!

அலைகள் நடனம் அனுதினமும் கண்டுள்ளோம்.
அற்புதமாய் இன்று மட்டும் இந்த

ஆனந்தக்கூத்து ஏன்?
மன்பதை ஆளும் விஞ்ஞானம் - இந்திய
மாநாட்டையும் ஆளப்போகிற தென்ற

மகிழ்ச்சியின் துள்ளலே; இதோ
மணல்மீது அலையின் நடனம்!"

அன்புள்ள,
**மு.க.**
22-6-2007

# 3270. வெற்றி நமதே! வெற்றி நமதே!

**உடன்பிறப்பே,**

“தம்பியர்க்கு” நம் அண்ணன், “காஞ்சி” இதழில் கிழமைதோறும் கடிதம் எழுதியபோது, அதைப் பின்பற்றி நானும், தங்கையர்க்கும், தமக்கையர்க்கும் என் கருத்துகளும், கடிதங்களும் சென்று சேர்ந்திட வேண்டுமென்று, இருவர்க்கும் பொதுவாக “உடன்பிறப்பே” என விளித்து விளக்கங்கள் எழுதத் தொடங்கினேன். அந்தத் தொடர்ச்சியில் இந்தக் கடிதம் பெரும்பாலும் என் உடன்பிறப்புகளான சகோதரிகளுக்கு ஆம்! என்னிலும் இளையோர், முதியோர், செல்விகளனையர் அனைவருக்கும் எழுதப்படும் அன்பு மடலாகும்.

இந்தியத் திருநாட்டின் மிகப் பெரிய பொறுப்பு வாய்ந்த குடியரசுத் தலைவர் பதவிக்கு, வேட்பாளர் யார் என்பதை அறிவிக்கும் கட்டமே தலைநகர் டெல்லி முதல் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பெரும் பரபரப்பை உருவாக்கி, அறுபது ஆண்டுக் காலச் சுதந்திர பூமியில் அடைய முடியாத அக மகிழ்ச்சியை ஆண், பெண் அனைவரும் அனுபவிக்கும் வாய்ப்பாக, திருமதி. பிரதிபா பாட்டீல் அம்மையார் அவர்கள் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

சூடு கண்ட பூனைகளாய் ஆகிவிட்ட அரசியல்வாதிகள் சில பேருக்கும் - ஆதிக்க வெறியர்களுக்கும் அந்தப் பெண் வேட்பாளர் அறிவிப்பே ஒரு “ஜோக்” என்று கிண்டல் செய்யும் அளவுக்குக் கேலிக் கூத்தாகத் தெரிந்தது. தரக் குறைவாக விமர்சித்துத் தங்கள் தகுதியை வெளிப்படுத்தினார்கள். சேறு வாரி இறைத்தார்கள்.

வானத்தைக் கீறி வழிகாட்டப் போகிறோம் என்று, கூரையேறிக் குருவி பிடிக்க முடியாதவர்கள் கூக்குரலிட்டுக் குப்புற வீழ்ந்த கதையாயிற்று அவர்களின் கதை!

பாவம்! அவர்கள் எப்படியோ போகட்டும்! நாம் எடுத்த முடிவை நிறைவேற்றிடத் தொடங்குவோம் - தொடக்கத்தையே

ஒரு விழாவாக எடுத்திடுவோம் - டெல்லியில் முடிவெடுத்தபோது, திருமதி. சோனியாகாந்தி அம்மையார் அவர்கள் - வீர முழக்கமிட்டார்களே! "வெற்றி நமதே", "வெற்றி நமதே" என்று - அந்த வெற்றி முரசம் எட்டுத் திக்குமெட்டிட விளைவிக்கும் நம் ஆற்றலின் பயனாக, அணியின் பெருமிதமாக விரிகடல்கள் தாண்டியும் உயரட்டும். உணரட்டும் பெண்ணின் பெருமையை இவ்வுலகம்! முதல் மரியாதையைத் தமிழகம் தெரிவிக்கிறது.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்*
*இளைப்பில்லை காண் என்று கும்மியடி!"*

என முண்டாசுக் கவிஞன் பாரதி மொழிந்த பாடல் வரிகளாக பாவையர் பெருஞ்சேனை, சென்னை வீதிகளில் பேரணியாகப் பெருகிட இருக்கிறது.

தொட்டிலில் ஆடும் பெண் குழந்தைக்கே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தாலாட்டுப் பாடினார்!

*"மின்னல் ஒளியே, விலை மதியா ரத்தினமே!*
*கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே!*
*முடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற*
*காடு, மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே!*
*வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்*
*தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி!*
*புண்ணிற் சரம்விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தைக்*
*கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே!"*

அந்த இரு பெரும் கவிஞர்களின் வீர எழுத்துகள் ஒவ்வொன்றும் வெற்றிப் பெண்ணுருக் கொண்டு தலைநகர் வீதியிலே அணிவகுத்து வரும் காட்சியைக் காணக் கண்கள் துடிக்கின்றன.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து நடக்கும் அப்பேரணி கண்டு, "நடந்தாய் வாழி காவேரி" எனும் சிலப்பதிகாரச் செய்யுள்; செவிப்பறை மோதி - சிந்தையில் உணர்வினை ஏற்றும்!

ஆண் பாதி, பெண் பாதி என ஆண்டவன் உருவமே கூறுகிறது - ஆனால் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்கிறது, சாத்திர சம்பிரதாயம்!

**மகளிர் உரிமைகளைத் தூக்கிலிடும்**
**ஆதிக்க வெறியைத் தூக்கி எறிந்து**
**தூள் தூளாக்கும் தூய நாளின் விடியல்**
**காணப் போகிறது! இந்தத் தொன்மை நிறைப்**
**பண்புடைய நாடு - பெண் துயரம் நீக்கிடவே**
**மண் மீது நாம் ஏற்றும் கொடியே -**
**தமிழகத் தலை நகரில் ஜூலை முதல் நாள்**
**பேரணி!**
**அனைத்துக் கட்சி அருமைச் சகோதரிகாள்**
**வாரீர்! வாரீர்!**
**அணி அணியாக வாரீர்! -**
**அன்னை நாடு காத்திட என்றுமே**
**அழியா ஜனநாயகம் பூத்திட**
**அன்னையொருவர் ஏறுகிறார்**
**அரியாசனம்!**
**அதற்கு வாழ்த்தளிக்க -**
**வரவேற்று மகிழ**
**வாரீர்! வாரீர்!**

அன்புள்ள,
**மு.க.**
27-6-2007

# 3271. சொன்னதைச் செய்திடும் நன்னெறி அரசு!

**உடன்பிறப்பே,**

2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வைத்த தேர்தல் அறிக்கையில், தமிழகத்தில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு, இலவசமாக நிலம் வழங்குவோம் என்ற ஒரு வாக்குறுதியும் வழங்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைக் கண்டதும், அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா அவர்கள், இந்தத் திட்டம் செயல்படுத்த முடியாத திட்டம் என்று அறிக்கை விடுத்தார். இவ்வாறு இலவசமாக நிலம் வழங்க தமிழ்நாட்டில் எங்கே இருக்கிறது நிலம் என்று கேட்டார்.

அதற்கு உடனடியாக பதிலளித்த நான், ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் 55 லட்சம் ஏக்கரா தரிசு நிலங்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக 2001-2002ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்ட புள்ளி விவரத்தைத்தான் தி.மு. கழகம் தனது தேர்தல் அறிக்கையிலே தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டேன்.

அதற்குப் பின்னர், தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்ததும், இந்தத் திட்டத்தை அறிவித்தபோது, அ.தி.மு.க. தலைவி அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியாத திட்டம் என்றும், மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட அறிவிப்பு என்றும், தமிழ்நாட்டில் இந்த அளவிற்கு தரிசு நிலமே இல்லை என்றும் கூறினார். அதாவது, அவர் ஆட்சியில் வெளியிட்ட நிதி நிலை அறிக்கையையே அவர் மறுத்தார்.

இத்தனைக்கும் பிறகு அண்மையில், மதுரை இடைத் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்ற ஜெயலலிதா அங்கே பேசும்போது,

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம் என்னவாயிற்று என்று ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். அந்தக் கேள்விக்கும் நான் உடனடியாக பதிலளித்து அது வெளிவந்துள்ளது.

ஆனால் ஒரு கிழமை ஏடு, இன்று தனது கட்டுரை ஒன்றில், இரண்டு ரூபாய் அரிசி தொடங்கி, இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி வரை, சொன்ன வாக்குறுதிகளைக் கில்லியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் தி.மு.க. அரசால், இரண்டு ஏக்கர் நிலம் திட்டத்தை மட்டும் சரியாக செயல்படுத்த முடியவில்லை என்று எழுதியுள்ளது. அந்த இதழாளர் தெரிந்து கொள்ள சில விபரங்கள் வருமாறு :-

1967 முதல் 1975ஆம் ஆண்டு வரை, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, 7 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை 3 லட்சத்து 69 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கினோம்.

1989 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, வடபாதிமங்கலம், தமிழ்நாடு கரும்பு பண்ணைக்குச் சொந்தமான நிலத்தினை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு விற்பனை செய்திட அரசு முடிவு செய்து, அதன்படி, முக்கால் ஏக்கர் நஞ்செய் நிலம் 2000 ரூபாய் வீதமும், ஒன்றரை ஏக்கர் புஞ்செய் நிலம் 700 ரூபாய் வீதமும் மிக மிகக் குறைவாக விலை நிர்ணயம் செய்து, 27-5-1990 அன்று நடைபெற்ற விழாவில், 4,970 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கினோம்.

1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ், 52 ஆயிரத்து 792 விவசாயிகளுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட நிலம் 35 ஆயிரத்து 696 ஏக்கர். இந்த நிலப்பட்டாக்களைப் பெற்றவர்களில், ஆதி திராவிடர்கள் 13 ஆயிரத்து 753 பேர். பழங்குடியினர் 529 பேர். இதர பிரிவினர் 38 ஆயிரத்து 510 பேர்.

ஐந்தாவது முறையாக, 2006ஆம் ஆண்டு மே திங்களில் தி.மு.கழகம் பதவியேற்ற பிறகு, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, நிலமற்ற ஏழை விவசாயக்

குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த திருநாளாகிய 17-9-2006 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதன்முதலாக என்னால் தொடங்கி வைக்கப்பட்டது.

அந்த விழாவில் நான் பேசும்போது, இவ்வாறு ஏழைகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் மூன்று மாதங்களுக்கொரு முறை தொடர்ந்து நிலம் கிடைக்கும் வரை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அந்த வகையில், இரண்டாவது கட்டமாக 17-12-2006 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற விழாவிலும், மூன்றாவது கட்டமாக 17-3-2007 அன்று திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியிலும் நடைபெற்ற விழாக்களில் கலந்து கொண்டு, அரசு செலவிலே பண்படுத்தப்பட்ட நிலங்களை வழங்கினேன்.

அண்மையில், நான்காவது கட்டமாக திருநெல்வேலியில் நடைபெற்ற மிகப் பெரிய விழாவில் 17-6-2007 அன்று நானும், ஏனைய மாவட்டங்களில் மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பண்படுத்தப்பட்ட நிலங்களை வழங்கினோம்.

அந்த வகையில், இந்த நான்கு கட்டத்திலும் சேர்த்து தி.மு. கழக அரசு, ஒரு இலட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலத்தை, 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஓராண்டு காலத்தில் இலவசமாக வழங்கியுள்ளது. இதுவரை வழங்கப்பட்ட நிலங்களைப் பெற்றவர்கள் என்று பார்த்தால், 24 ஆயிரத்து 774 தாழ்த்தப் பட்டவர்களும், 2 ஆயிரத்து 89 பேர் மலைவாழ் பழங்குடியினரும், 28 ஆயிரத்து 880 பிற்படுத்தப்பட்டவர்களும், 32 ஆயிரத்து 48 மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், 3 ஆயிரத்து 785 இதர வகுப்பினரும் இந்தப் பயனைப் பெற்றுள்ளார்கள்.

ஆனால் அ.தி.மு.க. தலைவியும், அவருக்கு ஆதரவளிக்க விரும்பிடும் சில ஏடுகளும், இத்திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்றே குற்றஞ்சாட்டி வருகின்றன. அந்த வரிசைப் பட்டியலில் இந்த வார ஏடும் எப்படிச் சேர்ந்தது என்பதே எனக்கேற்பட்ட வியப்பாகும்!

நிலங்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் கழக அரசு அமையும் ஒவ்வொரு முறையும் வீடில்லாத ஏழைகளுக்கு இலவச

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதையும் முக்கிய கடமையாகக் கொண்டு நிறைவேற்றி வருகிறது. 1967-1975 வரை கழக அரசு நடைபெற்ற காலத்தில் 5 இலட்சத்து 3 ஆயிரத்து 697 ஏழைகளுக்கும், 1989-1990ஆம் ஆண்டுகளில் 4 லட்சத்து 78 ஆயிரத்து 95 ஏழைகளுக்கும், 1996-2001ஆம் ஆண்டுகளில் 7 லட்சத்து 51 ஆயிரத்து 235 ஏழைகளுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டில் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது, அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில், வீடுகள் கட்டிக் குடி இருந்து வருபவர்களுக்கு வீட்டு மனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்துப் பரிந்துரை செய்ய 5-2-2000 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள், தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருந்து, அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவை இல்லையென்றால், அத்தகைய குடியிருப்புகளைப் பட்டா வழங்கி முறைப்படுத்தலாம் என 27-3-2000 அன்று தி.மு.கழக அரசினால் ஆணையிடப்பட்டது.

அந்த ஆணைப்படி, அப்போது ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 348 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. தற்போது 2006இல் மீண்டும் பதவிப் பொறுப்புக்கு வந்த பின்னர், இடையில் நின்று போன அந்தத் திட்டத்தை மீண்டும் ஆறு மாத காலத்திற்கு நடைமுறைப்படுத்திட 30-12-2006 அன்று ஆணையிடப்பட்டது. அவ்வாறு ஆணையிடப்பட்ட பிறகு, இந்த ஆறு மாத காலத்தில் மட்டும், இத்திட்டத்தின்படி 50 ஆயிரத்து 878 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ஏழை மக்களிடையே இருந்த வரவேற்பினை கருத்திலே கொண்டு, அண்மையில், மேலும் ஆறு மாதங்களுக்கு இத்திட்டத்தினை நீட்டித்திட ஆணை பிறப்பித்துக் கோப்பிலே கையெழுத்திட்டுள்ளேன்.

இந்த அளவிற்கு நாம் பணியாற்றி வந்தபோதிலும், நான் குறிப்பிட்டுள்ள அந்த வார ஏடு, “சீர் கொடுக்கிறேன்னு சொன்ன

மச்சான், சீக்கு கொடுத்த கதையாகத்தான் தி.மு.க. அரசு இலவச நிலம் வழங்குகிறது" என்று எழுதுகிறது என்கிறபோது, அடுக்குச் சொல் அழகாக இருக்கிறது என்பதற்காக, அந்தத் துடுக்குச் சொல்லை ஏற்றிட இயலுமா?

மேலும் அந்த ஏடு, பயன்பாட்டுக்கே வழியில்லாத நிலங்களை வழங்குவதாகவும் ஒரு குற்றச்சாட்டினை சுமத்தியுள்ளது. அரசின் கொள்கையே, பயன்பாட்டிற்கு உதவாத நிலத்தினை அரசின் செலவிலே பண்படுத்தி, அதன் பிறகு வழங்குவது தான். அதைப் புரிந்து கொள்ளாமல் அந்த ஏடு விஷத்தைக் கக்கியிருக்கிறது.

மேலும், அமைச்சர் தம்பி கோ.சி. மணி, ஏதோ கோயில் நிலத்தை இந்தத் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக்கிறார் என்று எழுதிவிட்டு, அதற்கு அடுத்த பத்தியிலே அந்தச் செய்தியினை அமைச்சர் மறுத்துவிட்டார் என்று எழுதியிருக்கின்றது. ஒரு செய்தியினை அமைச்சர் மறுத்த பிறகும், அவர் கூறியதாக குறை கூறுவது என்பது, வேண்டுமென்றே பழிகூற வேண்டுமென்பதற்காகவே எழுதியிருப்பதாகத் தானே பொருள்.

எனவே, இத்தகைய எரிச்சல்மிகு எதிர்ப்புகளையெல்லாம் தாண்டித்தான் நாம் ஆட்சி நடத்த வேண்டியிருக்கின்றது! என் செய்வது! ஏழை பாழைகளுக்காகவும், நலிந்த பிரிவினருக்காகவும், நாலாந்தர வகுப்பினருக்காகவும் நடக்கும் ஆட்சி, ஆதிக்க வெறித் திமிங்கலங்களைக் கடக்கத்தானே வேண்டியிருக்கிறது!

அன்புள்ள,

**மு.க.**

29-6-2007

## 3272. மூடி மறைக்க முடியாத முரண்பாடுகள்!

**உடன்பிறப்பே,**

கோட நாடு எஸ்டேட் பற்றி எதிர்க்கட்சிகள் எல்லாம் கேள்வி கேட்டு, நீண்ட நாட்களுக்குப் பிறகு, திடீரென்று இன்று ஜெயலலிதா, ஆறு பக்கத்தில் ஒரு நீண்ட அறிக்கையினை ஏடுகளுக்கு அனுப்பியிருக்கிறார். இத்தனை நாள் தாமதத்திற்கு அவரே அறிக்கையில் தெரிவித்துள்ள காரணம், "தேவையான ஆவணங்களையும், ஆதாரங்களையும் சேகரிக்க சில நாட்கள் தேவைப்பட்டது" என்கிறார். இதிலிருந்தே ஆதாரங்களையெல்லாம் சேகரித்துக் கொடுக்க வேண்டிய நிலையிலே அவர் இருக்கிறார் என்பது நன்றாகத் தெரிகிறது.

"கருணாநிதி, மு.க. ஸ்டாலின், ஆர்க்காடு வீராசாமி, சுப்பிரமணியன் சுவாமி போன்றவர்களும், பத்திரிகைகளும் திரும்பத் திரும்ப எழுப்புகின்ற கேள்வி, இந்தக் கோடநாடு எஸ்டேட் என்னுடையதே அல்ல என்றும், அந்த எஸ்டேட் திருமதி சசிகலாவுக்குச் சொந்தமானது என்றும் நான் சொன்னதாக கேள்வி எழுப்புகிறார்கள்" இது ஜெயலலிதாவின் 30-6-2007 தேதியிட்ட அறிக்கை.

இவ்வாறு கூறும் ஜெயலலிதா அதற்கு அடுத்த பத்தியிலேயே, "1996ல் கருணாநிதி அரசு என் மீதும், இன்னும் சிலர் மீதும் சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்ந்தபோது, அதில் கோடநாடு எஸ்டேட்டும் சேர்க்கப்பட்டது. அப்போது, எனக்கும், எஸ்டேட்டுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அந்தக் காலகட்டத்தில் கோடநாடு எஸ்டேட் என்னுடையது அல்ல. அது திருமதி சசிகலா அவர்களுக்கும், வேறு சிலருக்கும் சொந்தமானது என்று கூறினேன்" என்று எழுதியிருக்கிறார். எனவே முதல் பத்தியிலே கோடநாடு மாளிகை பற்றி மற்றவர்கள் சொன்னதை, அவரே தனது அறிக்கையிலேயே வெளியிட்டிருப்பதும், அது சசிகலாவின் சொத்து என்று கூறியிருப்பதும் பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது என்பதைத்தானே காட்டுகின்றது.

இதே ஜெயலலிதாவின் 31-5-2007 தேதியிட்ட அறிக்கையின் முதல் பத்தியில் உள்ள வாசகம் என்ன?

"தனியாருக்குச் சொந்தமான இடங்களில் நான் சென்று தங்கினால் கூட, அந்த இடங்களைக் குறி வைத்து செயல்படுவது என்பது கருணாநிதியின் முழு நேர வேலையாக உள்ளது. நான் தங்கின பாவத்திற்காக அந்த இடத்தின் சொந்தக்காரர்களை இந்த மைனாரிட்டி திமுக அரசாங்கம் படாதபாடு படுத்துகின்றது"

இதிலிருந்து ஜெயலலிதா தங்கியிருந்த கோடநாடு எஸ்டேட் அவருக்குச் சொந்தமானது அல்ல என்பதும், வேறு யாரோ தனியாருக்குச் சொந்தமானது என்றும் சொல்லியிருக்கிறாரா? இல்லையா? அவ்வாறு வேறு யாருக்கோ சொந்தமான இடம் என்று கூறிய ஜெயலலிதா, இப்போது 30-6-2007 தேதியிட்ட அறிக்கையில் என்ன கூறுகிறார்? அவருடைய அந்த அறிக்கையிலேயே இந்தக் கேள்விக்கும் பதில் உள்ளது.

"2000ஆம் ஆண்டு தொடக்கத்தில் கோடநாடு எஸ்டேட் கம்பெனியில் நான் ஒரு பார்ட்னராக இணைந்தேன். அதன் பின்னர், அதாவது 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதில் எனக்கு பங்கு இல்லை என்று நான் சொன்னதே இல்லை" - இது ஜெயலலிதாவின் இப்போதைய அறிக்கை.

ஆனால் கடந்த மே மாதம் 31ஆம் தேதியிட்டு, அவரே வெளியிட்ட அறிக்கையில் தனியாருக்குச் சொந்தமான இடத்திலே சென்று தங்கியதாக ஒரு சமாளிப்புப் பொய்யைச் சொல்லிவிட்டு, இப்போது நான் அப்படி சொல்லவே இல்லை என்று கூறினால், மக்கள் என்ன செவிடு, குருடு, ஊமைகளா? அல்லது சிந்தனையற்ற ஜீவன்களா?

ஜெயலலிதா, மேலும் தனது அறிக்கையில், "1995 ஜூன் மாதத்தில் திருமதி சசிகலா, திருமதி இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் "பார்ட்னர்" களாக இந்த நிறுவனத்தில் இணைந்தார்கள்" என்று சொல்லியிருக்கிறார். 1995ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்தது யார்?

சாட்சாத் இந்த ஜெயலலிதா அம்மையார் தானே? அவரது ஆட்சிக் காலத்தில், சசிகலா இந்த கோடநாடு எஸ்டேட் நிறுவனத்தில் இணைந்தார் என்று ஜெயலலிதாவே இப்போது ஒப்புக்கொள்ளும் நிலையில், சசிகலா யார்? அவருடைய

உடன்பிறவா சகோதரிதானே? அவருடைய நெருங்கிய உறவினர்கள் தானே இளவரசியும், சுதாகரனும்! அன்றைய முதலமைச்சரான ஜெயலலிதாவின் வீட்டிலே அவருடன் 24 மணி நேரமும் இருக்கக் கூடியவரின் பெயரிலும், அவரது உறவினர்கள் பெயரிலும் இந்த கோடநாடு எஸ்டேட் பெறப்பட்டுள்ளது என்றால் அதற்கு என்ன பொருள்? திடீரென்று அவ்வளவு பெரிய எஸ்டேட்டில் பங்குதாரர்களாக சேருவதற்கு அவர்களுக்கெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய் எங்கிருந்து கிடைத்தது? முதலமைச்சர் வீட்டிலேயே இருக்கும் ஒருவர் பெயரில் இவ்வளவு பெரிய சொத்து சேர்க்கப்பட்டது என்றால், அதற்குப் பெயர் பினாமிதானே?

அதுமாத்திரம் அல்ல, அப்போது கோடநாடு எஸ்டேட் பலகோடி ரூபாய் நட்டத்தில் இயங்கி வந்ததாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். எந்தப் பைத்தியக்காரனாவது நட்டத்தில் தொடர்ந்து இயங்கி, கடனில் உள்ள கம்பெனியை பலகோடி ரூபாய் கொடுத்து வாங்குவானா? அளவுக்கு மீறி கையிலே கொள்ளைப் பணம் வைத்திருப்பவர்கள்தானே நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தை வாங்குவார்கள். அப்படி வாங்கப்பட்ட சொத்துத்தான் இது என்பதை அம்மையாரின் அறிக்கையே தெளிவாக நமக்கு விளக்குகிறதே!

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையில், “2000மாவது ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நான் (ஜெயலலிதா) இந்த நிறுவனத்தில் பார்ட்னராக இணைந்தேன்” என்கிறார். இது அறிக்கையின் 3வது பக்கத்தில் முதல் பத்தியிலே உள்ளது. அதே பக்கத்தில் நான்காவது பத்தியில், “இந்தச் சொத்தை நான் வாங்கினேன் என்று கூறுவது தவறான கூற்றாகும்” என்றும் சொல்லியிருக்கிறார். முதல் பத்தியில் பார்ட்னராக இணைந்தேன் என்று கூறிவிட்டு, நான்காவது பத்தியில் அது தவறான கூற்று என்று கூறுவது, எந்தவகையில் பொருந்துகிறது என்பதை அவருக்கு அறிக்கை எழுதிக் கொடுத்தவர்தான் விளக்க வேண்டும்.

அதுபோலவே ஜெயலலிதாவின் அறிக்கையில், 3வது பக்கத்தில் மூன்றாவது பத்தியில் “அவ்வப்போது கணக்குகள் காட்டப்பட்டு அனைத்தும் வருமான வரித்துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன” என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதே அறிக்கையில், அதே பக்கத்தில் 6வது பத்தியில், “அரசியல் தலையீட்டால் பழிவாங்கும் நடவடிக்கையாக வருமான வரித்

துறை இதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அப்பீல்களை தாக்கல் செய்திருக்கிறது. அவை இன்னும் நிலுவையில் உள்ளன" என்றும் முரண்பட்ட தகவல்கள் இதிலே உள்ளன என்பதையும் நாம் அறிய முடிகிறது.

இவ்வாறு 2000ஆம் ஆண்டு முதல் இந்த கோடநாடு எஸ்டேட் நிறுவனத்தில், ஜெயலலிதா பங்குதாராராக இருந்து வந்த விவரத்தை, 2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்த போது அந்த சொத்து விவரத்தை ஏன் குறிப்பிட்டுக் காட்டவில்லை என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, தற்போது ஜெயலலிதா விழித்துக் கொண்டு, 2006ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு அந்த நிறுவனத்திலிருந்து தான் விலகிக் கொண்டதாக இப்போது விடுத்துள்ள அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அந்த கோடநாடு எஸ்டேட் நிறுவனத்தின் பங்குதாரர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதாகக் கூறிவிட்டு, அதே அறிக்கையில் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மீண்டும் அதே நிறுவனத்தில் பார்ட்னராக தான் இணைந்ததாகவும், தொடர்ந்து பார்ட்னராக நீடிப்பதாகவும் இப்போது சொல்லிக் கொள்கிறார். கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிறுவனத்தில் 2006ஆம் ஆண்டு ஏப்ரலில் பங்குதாராராக இருந்து விலகியதாகவும், (அதாவது தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பு) மீண்டும் ஜூன் மாதம் அதில் பங்குதாராராக இணைந்ததாகவும் சொல்வது யாரை ஏமாற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்? திடீரென்று 2006ஆம் ஆண்டு ஏப்ரலில் ஏன் விலகினார்? பிறகு இரண்டு மாதங்கள் கழித்து மீண்டும் அதே நிறுவனத்தில் ஏன் பங்குதாராராகச் சேர்ந்தார்?

ஜெயலலிதா மேலும் தனது அறிக்கையில் 5வது பக்கத்தில், "பெருமளவில் இந்த எஸ்டேட்டில் நான் பண முதலீடு செய்திருக்கிறேன் என்று தவறான தகவல் இவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். அதே அறிக்கையில் 3வது பக்கத்தில், "கோடநாடு எஸ்டேட் நிறுவனத்தில் பார்ட்னராக நான் இணைந்தபோது என்னுடைய முதலீடு 1 கோடியே 80 லட்சம் ரூபாய் கணக்கில் காட்டப்பட்டு வருமான வரித் துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது" என்றும்

கூறியிருக்கிறார். அவரே முதலீடு செய்ததை மூன்றாம் பக்கத்தில் ஒப்புக்கொண்டு விட்டு, ஐந்தாம் பக்கத்தில் அதனைத் தவறான தகவல் என்று கூறுகிறார். யாராவது காதிலே பூ வைத்தவர்கள்தான் ஜெயலலிதாவின் அறிக்கையினை ஏற்றுக் கொள்ள முடியும்! இவ்வாறு ஜெயலலிதா செய்துள்ள முதலீடு பற்றி, நான் ஆதாரத்தோடு, ஆவணங்களோடு பத்திரிகையிலே வெளியிட்ட பிறகுதான் அதை இப்போது ஒப்புக்கொள்கிறாரே தவிர, அதற்கு முன்பு அது ஏதோ தனக்கு வேண்டியவருக்குச் சொந்தமான இடம் என்று தான் சொல்லியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஜெயலலிதா இந்தப் பிரச்சினை குறித்து, இதற்கு முன்பு வெளியிட்ட இரண்டு அறிக்கைகளையும் இணைத்திருக்கிறார். அவ்வாறு முதலில் வெளியிட்ட அறிக்கையில், நீலகிரி மாவட்டத்தில் கருணாநிதியின் குடும்பப் பெண் உறுப்பினர் எஸ்டேட் வாங்கியிருப்பதாகவும், அதற்குத் தேவையான பணியாளர்களைத் திரட்ட அதிகாரிகள் எல்லாம் முற்பட்டிருப்பதாகவும் கற்பனைக் கதைகளை அளந்து விட்டிருந்தாரே? அந்தக் கதைகள் எல்லாம் என்னவாயிற்று? அவருக்கே, கவைக்குதவாத கதைகளாகி விட்டனவா?

ஜெயலலிதா தனது அறிக்கையில், "அங்கே கட்டப்படுகின்ற புதிய வீட்டுக்காக அனுமதி பெறப்படவில்லை என கருணாநிதியும், அவரது கூட்டாளிகளும் பொய்யை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வீட்டிற்கு திருமதி ராதா வெங்கடாசலம் இந்த நிறுவனத்தில் பார்ட்னராக இருக்கும்போதே 1995ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே அனுமதி கோரப்பட்டு, அனுமதியும் வழங்கப்பட்டது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதிலே அங்கே கட்டப்படுவது புதிய வீடு என்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். தற்போது புதிதாகக் கட்டப்படும் வீட்டிற்கு, 1995ஆம் ஆண்டு அனுமதி பெறப்பட்டது என்கிறார். 1995ஆம் ஆண்டு அரசு கொடுத்த அனுமதி தற்போது எப்படி பொருந்தும்? ஓராண்டிற்கு மட்டுமே பொருந்தக் கூடிய பழைய அனுமதியை வைத்துக்கொண்டு 12 ஆண்டுகள் கழித்து, புதிய கட்டிடம் கட்டுவதை எந்தச் சட்டம் அனுமதிக்கிறது? 1995ஆம் ஆண்டு அனுமதி பெற்ற போது அந்தக் கட்டிடத்திற்கான பரப்பளவு எவ்வளவு? தற்போது கட்டப்படும் கட்டிடத்திற்கான பரப்பளவு அதே அளவுடையது தானா?

கோடநாடு எஸ்டேட் சொத்துக்கள் ஏற்கனவே நீதிமன்றத்தின் பொறுப்பிலே உள்ளவைகளாகும் (Properties attached by the Court). அந்தச் சொத்துக்களில் புதிதாக கட்டிடம் கட்டுவது என்றால், நீதி மன்றத்தின் அனுமதியினைப் பெற்றாக வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்பட்டிருக்கிறதா? அதுபோலவே, நீதி மன்றத்தின் பொறுப்பிலே ஒரு சொத்து இருக்கும்போது, அதிலிருந்து தன் இஷ்டம்போல் விலகிக் கொள்வதும், பிறகு அதிலே சேர்ந்து கொள்வதும் சரியா, அதற்கான அனுமதியும் நீதி மன்றத்திலே பெறப்பட்டிருக்கிறதா? இந்த விவரங்கள் நீதிமன்ற விசாரணையில் வரும்போது, அம்மாவின் அண்டப் புளுகுகள் எல்லாம் அம்பலத்திற்கு வந்தே தீரும்!

ஏற்கனவே ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் கோடநாடு எஸ்டேட்டைப் பற்றி கருணாநிதி பல கேள்விகளை எழுப்பி வருகிறார். இந்தக் கேள்விகளைக் கேட்க கருணாநிதிக்கு அதிகாரம் இல்லை. அவருக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை என்று எழுதியிருந்தார். ஆனால் தற்போது, இவ்வளவு நீண்ட அறிக்கையினை ஜெயலலிதா விடுக்கக் காரணம் கருணாநிதிக்கும் அந்த அதிகாரம் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டதால்தானா?

கோடநாடு எஸ்டேட் என்பது ஜெயலலிதாவுக்கு உரிமையுடையதா என்றெல்லாம் நாட்டிலே சிலர் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில், ஜெயலலிதாவே நேற்றைய அறிக்கையில் திட்டவட்டமாக அந்த எஸ்டேட்டில் அவர் பங்குதாரர்தான் என்று ஒப்புக்கொண்டு விட்டார். ஆனால், இந்த எஸ்டேட்டுகளை எல்லாம் கோடிக்கணக்கில் முதலீடு செய்து வாங்கிட எங்கிருந்து அந்தத் தொகை வந்தது என்பதைத்தான் இந்த நாடும், மக்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது கொள்ளை அடித்த பணம் என்பதை நிரூபிக்கும் வகையில்தான் மதுரை மேற்குத் தொகுதி இடைத் தேர்தல் முடிவில் நமது கூட்டணி பெற்ற வாக்குகளும், ஜெயலலிதாவின் கூட்டணி பெற்ற வாக்குகளும் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் என்பார்கள்! ஆனால் ஜெயலலிதாவின் புளுகு மூட்டைகளும், வண்டவாளங்களும்

தமிழ்நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியே இருக்கின்றன. அதற்குச் சரியான சான்று தான், முந்தைய தேர்தலில் வெற்றி பெற்ற மதுரை மேற்கு தொகுதியில், தற்போது முப்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிய விவகாரம்!

உடன்பிறப்பே, ஜெயலலிதா அம்மையாரின் அறிக்கைகளை வரிசைப்படுத்திப் படித்துப் பார்த்தாலே அவற்றில் காணப்படும் முரண்பாடுகள் - அவரது சுய ரூபத்தைக் காட்டிக் கொடுத்து விடும் என்கிற உண்மையை உணராத சில ஏடுகள், அரும்பாடுபட்டு அவற்றை மறைக்கும் முயற்சியில் ஈடுபடுவதைக் காணும்பொழுது, "பத்திரிகா தர்மம்" படும்பாடு குறித்து பதற்றமடையாமல் இருக்க முடியவில்லை! பாழாகிறதே அரசியல் பண்பாடு என வேதனைப்படாமலும் இருக்க முடியவில்லை.

அன்புள்ள,

**மு.க.**

2-7-2007

# 3273. வெற்றி மலர்ப் பூங்கொத்து வழங்குவோம்!

**உடன்பிறப்பே,**

"அதிகாரம் அனைத்தையும் கொண்ட ஆட்சிக் கோல் ஏந்துக" என்று அங்கிங் கெனாதபடி எங்கெங்குமிருந்து ஆதரவு பெருகிய நிலையில், "நாடாளும் பிரதமர் பொறுப்பை ஏற்பதற்கு எல்லாத் தகுதியும் கொண்டவர்" என்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாட்டு மக்களும் தக்க சான்றிதழ் வழங்கிய நிலையில், "வேண்டாம் அந்தப் பதவி எனக்கு!" என்று கூறி, அது ஏன் என்பதற்கான விளக்கமும் சொல்லி, தியாகச் சுடர் விளக்காக புகழ் ஒளி பரப்பும் திருமதி சோனியா காந்தி அவர்கள் - தில்லிப் பட்டணத்தில் - 14-6-2007 அன்று மாலை நடைபெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் மற்றும் இடதுசாரித் தலைவர்கள் கூட்டத்தில், முன்கூட்டியே எல்லோரையும் கலந்து கொண்டு எடுத்த முடிவாக - முக மலர்ச்சியுடன், குடியரசுத் தலைவர் வேட்பாளராக திருமதி பிரதிபா பட்டீல் அவர்களின் பெயரை முன்மொழிந்து, அது ஒரு மனதாக நிறைவேறியபோது, அம்மையார் அவர்கள் எழுந்து நின்று கரம் உயர்த்தி, "வெற்றி நமதே" என மும்முறை தமிழில் முழங்கிய போது, மெய்சிலிர்த்துப் போன நான் சொன்னேன்! "குடியரசுத் தலைவர் தேர்தலில் வேட்பாளர் அறிமுகத்தையும் - பிரச்சாரத் தொடக்கத்தையும் - முதன் முதலாகத் தமிழகத் தலைநகர் சென்னையில் நடத்துவோம்" என்று!

தலைவர்கள் அனைவரும் என் வேண்டுகோளை ஏற்றனர் - என் வேண்டுகோளின் விளைவு, வெற்றிகரமாக இருக்கும் என்ற நம்பிக்கை எப்போதும் எனக்கு உண்டு - உன்போன்ற உடன்பிறப்புகள் இருக்கும் போது நான் எதற்குக் கவலைப்பட வேண்டும்? ஏன் ஐயுற வேண்டும்? அதுவும் நமது கழகப் பாசறைகளில் இருந்து மட்டுமல்ல! நமது கூட்டணியில் அங்கம் வகிக்கும் தோழமைக் கட்சிகளின் தூய்மையும், வாய்மையும்

நிறைந்த உடன்பிறப்புகள் வேறு மடைதிறந்த வெள்ளம் போல் படைதிரண்டு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பும் உண்டல்லவா?

ஆம்! எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் வீண் போகாமல் -

*"ஒரு வலம்புரி தழங்கு ஒலி முழங்கி எழுவே,*
*உடன் முழங்கு பணிலம் பல முழங்கி எழுவே*
*பருவம் வந்து பல கொண்டல்கண் முழங்கி எழுவே*
*பல விதங்களொடு பல்லியம் முழங்கி எழுவே"*

என்ற கலிங்கத்துப் பரணி பாடலில், பல கருவிகளின் ஒலிகளுடன், படைகள் பலவும் அணி வகுத்தது போல எழுந்தது பார்! எம் மகளிர் சேனை!

அதாவது, ஒப்பற்ற வலம்புரி சங்குகள் ஒலிக்கும் ஓசை ஆரவாரித்து எழவும் - அந்த வலம்புரி சங்குகளுடன் ஒலிக்கின்ற வேறு பல சங்குகளின் ஒலி ஆரவாரித்து எழவும் - கார்காலம் வந்தவுடன் மேகங்கள் ஆரவாரித்து எழுவதுபோல, பலவகையான வாத்தியங்கள் பல ஒலிகளுடன் ஆரவாரித்து எழவும் என்பதைப் போல, நேற்றைய மகளிர் பேரணி அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது அல்லவா!

பேரணியின் தொடக்கமே குதிரைகளில் மகளிர் அணி வீராங்கனைகள் அமர்ந்து அதனை நடத்தி வந்த காட்சி தான்! இதுவரை வந்த பேரணிகளில் எல்லாம் வாத்தியக் கருவிகளை ஆடவர்தான் பயன்படுத்துவார்கள். ஆனால் முதன் முதலாக நேற்றைய பேரணியில்தான் வாத்தியக் கருவிகளையும் எங்களால் வாசித்துக் காட்ட முடியுமென்பதை மெய்ப்பிக்கும் வகையில், பல்வேறு இசைக் கருவிகளையும் மகளிரே ஒலித்த வண்ணம் வந்தனர். குறிப்பாக பறை அடிக்கும் பணியைக் கூட அந்த மகளிர் இசைத்தபடியும், அதற்கேற்ப ஆடியபடியும் வந்தது கண்கொள்ளா காட்சியாக அமைந்தது. ஒரு மாவட்ட மகளிர் அணியினரை மற்றொரு மாவட்ட மகளிர் அணியினர் மிஞ்சுகின்ற வகையில் சீருடை அணிந்து வரிசை வரிசையாக வந்த வண்ணம் இருந்தனர்.

இந்த அணிக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக எப்போதும் இல்லாத வகையில், இஸ்லாமிய சகோதரிகள் அணி திரண்டு முஸ்லிம் லீக் கட்சியின் பிறை கொடியினை கையிலே ஏந்தி ஊர்வலத்திலே பவனி வந்தார்கள். அதுபோலவே தோழமைக்

கட்சியினர் அவரவர் கட்சிகளின் கொடிகளை யேந்தியவாறு, இந்தப் பேரணிக்கு பெருமை சேர்த்ததும் பெரு மகிழ்ச்சிக்குரியது.

அம்மையார் பிரதிபா பட்டீல் அவர்கள், மேடையில் அமர்ந்திருந்த ஒன்றரை மணி நேரம் வரையில் அமைதியாக வந்த வண்ணம் இருந்த பேரணி, அம்மையார் சென்ற பிறகு காட்டாற்று வெள்ளம் போல் அண்ணா சாலைக்குள் கரைபுரண்டது.

பிரதிபா அம்மையார் ஊர்வலத்திலிருந்து புறப்பட்டதும், என்னிடமும் நண்பர்கள் சிலர், முழு ஊர்வலத்தையும் பார்க்க வேண்டுமென்றால் மேலும் இரண்டு மணி நேரம் ஆகுமென்றும், ஊர்வலத்தின் இறுதிப் பகுதி இன்னும் புறப்பட்ட இடத்திலேயே இருக்கிறதென்றும், நான் அவ்வளவு நேரம் இருக்கவியலாது என்றும் தெரிவித்தபோது, கடிதம் எழுதி அவர்களை வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டது நான், என் அழைப்பையேற்று வந்தவர்களைப் பார்க்காமல் நான் சென்றுவிடுவது உசிதமல்ல, அதனை என் உடன்பிறப்புகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறி, அதற்கு மேலும் ஒன்றரை மணி நேரம் காத்திருந்து ஊர்வலத்தின் கடைசிப் பகுதி வரை இருந்து அவர்களையெல்லாம் பார்த்து பரவசப்பட்டு விட்டுத்தான் வந்தேன்.

தென் சென்னை, மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி அன்பழகன் பேரணிக்கான பாதையை எத்துணை எழிலுடன் உருவாக்கியிருந்தார் - அவரும், அவரோடு அணி வகுத்துப் பேரணிக்குப் பொலிவும், வலிவும் மிகச் சேர்த்திட்ட ஒவ்வொரு மாவட்டத்துச் செயலாளர்களும், நிர்வாகிகளும், பொறுப்புகளில் உள்ள தம்பிமார்களும் பட்ட பாடும் - ஆற்றிய பணிகளும், அவர்கள் நமது கழகத்திற்கு மட்டுமல்ல! நமது தோழமைக் கட்சிகளுக்கும், கட்டாணி முத்துக்களாவர்! அவர்கள் வாழ்க என வாழ்த்துகிறேன் - வளர்க அவர் தம் ஆற்றலெனப் போற்றுகிறேன்.

டெல்லியிலிருந்து திரும்பியவுடன், தலைமைக் கழக நிர்வாகிகளுடனும், குறிப்பாக நமது பொருளாளர், மகளிர் அணி நிர்வாகிகள், துணைப் பொதுச் செயலாளர் திருமதி சற்குணப் பாண்டியன் போன்றோரிடமும், அகம் குளிர நான் கூறியதும் - அவர்கள் ஆற்றும் பணியின் மூலம் அறுபது ஆண்டு சுதந்திர இந்தியாவில் முதன் முதலாக ஒரு பெண்மணி, குடியரசுத்

தலைவராக வர இருக்கும் வாய்ப்பை நினைந்து, அதனை வாழ்த்தி வரவேற்று, தமிழகத் தாய்க்குலம் பூரித்தெழ வேண்டும் - புத்தெழுச்சி கொள்ள வேண்டும் - அதனை மிகப் பிரமாண்டமான பேரணி மூலம் உலகிற்கு உணர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

அவர்களும் அமைப்பு ரீதியாக நமது மாவட்டக் கழகச் செயலாளர்களிடமும் - மகளிர் அணிகளுடனும் - முறையாகத் தொடர்பு கொண்டு, தோழமைக் கட்சிகளின் மகளிர் அமைப்பு களுடனும் கலந்துரையாடி, இந்தியத் திருநாடே ஏற்றிப் புகழுமளவுக்குச் சென்னை மாநகரில் பேரணியை நடத்திக் காட்டிவிட்டனர். சென்னையில் பேரணியை ஒழுங்குபடுத்தவும் - உயர்வுபடுத்தவும் - ஒப்பற்ற எழுச்சிகொள் தாய்க்குலத்து அணியாக நடைபெறவும் தம்பிகள் பலராமன், அன்பழகன் இருவரின் தலைமையில் பம்பரமெனச் சுழன்ற இளைய உடன்பிறப்புகள் அனைவரையும் - இரு கரம் இணைத்து அரவணைத்து வாழ்த்தி மகிழ்கிறேன்.

இன்னொரு பாடலும் உண்டு, கலிங்கத்துப் பரணியில்!

*“பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ*
*படை பெருத்தலிற் பார் சிறுத்ததோ”*

என்ற அந்த அழகு வரிகள், இதோ ஜூலை முதல் நாள் சென்னைத் தலை நகரில் நாம் கண்ட பேரணிக்கும் பொருந்தும். ஆம்! அவ்வளவு மகத்தான பேரணி அது! முழுவதும் மகளிரே அணி வகுத்த பேரணி!

பச்சைக் கிளி பறந்து வந்து, உச்சிக் கிளையில் அமர்வதைப் பார்த்து, பொச்சரிப்புக் கொள்ளும் கோட்டான்கள், தமது பொல்லா அலகினால் குத்திட ஓரிடத்தில் நில்லாமல் புலம்புவதையும் காணும் பொழுது சிரிப்புத்தான் வருகிறது.

“திருமதி சோனியா காந்தி அவர்களின் தேர்வு இது! அதனால் பிரதிபா அம்மையாரை ஆதரிக்க முடியாது - தேர்வு செய்தவர் இந்தத் தேசத்தைச் சேர்ந்தவரே அல்ல! அதனால் தீண்டத் தகாதவர் - அவருடன் சேருவதே தீது!” என்பவர்கள், அன்று புதுடெல்லியில் அவரோடமர்ந்து தேநீர் விருந்தருந்தி, தேசப் பிரதமராக வேண்டுமெனக் கேட்ட போது - அவர் வெளி நாட்டவர்

என்பது அந்த ஒளியற்ற உள்ளத்திற்குத் தெரியாமல் போய்விட்டது தான் வியப்பிலும் பெரும் வியப்பு!

உடன்பிறப்பே! மதுரை மேற்குத் தொகுதி முடிவு கண்டு "மமதை" குறைத்துக் கொள்வர் என எதிர்பார்த்தால், அதனை மேலும் அதிகப்படுத்திக் கொண்டு ஆர்ப்பரித்து ஆட்டம் போடுகின்றனர். இதிலே ஒரு வேடிக்கை பார்த்தாயா? இவர்களின் மூன்றாவது அணியின் முடிவை தி.மு.க. ஏற்க வேண்டும் என்று நிருபர்களிடம் சொல்வார்களாம்! அதனை நாம் "நிரூபமாக" ஏற்று, ஆதரவு தருகிறோம் என்று அவர்கள் அலுவலகம் தேடி ஓடியிருக்க வேண்டுமாம் - மற்றொரு கட்சிக்கு வேண்டுகோள் அல்லது அழைப்பு விடுக்கிற மரியாதை கூட தெரியாதவர்கள் - பத்திரிகையில் செய்தி பார்த்துவிட்டு நாம் பதில்தர வேண்டு மென்கிறார்கள்! பைத்தியம் முற்றிவிட்டது போலும்!

என் பழக்கம் என்னவென்றால், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு அனுப்புவது என்றால்கூட நானே கையெழுத்திட்டுத்தான் கடிதம் அனுப்புவேன் - ஒரு சில தலைவர்களைப் போல, அவர்களின் செயலாளர்களை கையெழுத்திடச் சொல்லி கடிதம் அனுப்புவதில்லை - அரசின் வாயிலாக எழுதினாலும், கட்சி ரீதியாக எழுதினாலும் மற்ற தலைவர்களுக்கு அந்த மரியாதையை வழங்கும் பண்பாடு போற்றி வருபவன் என்பதை அந்தத் தலைவர்களே நன்கறிவார்கள்.

சரி! வைத்தியமில்லாத வியாதிகளை குணப்படுத்த முயற்சி எடுப்பது வீண் வேலை என்று விட்டு விட்டு வேறு வேலை பார்ப்பதே விவேகமென்போம்.

விரிந்து பரந்த இந்தியத் திருநாட்டுக் குடியரசுத் தலைவர் பீடத்தை அலங்கரிக்கவும் - எழுச்சியும், ஏற்றமும் கொள்ளச் செய்யவும் - தாய்க் குலத்தின் முதல் பிரதிநிதியாக திருமதி பிரதிபா பட்டீல் அவர்களுக்கு வெற்றி மலர்ப் பூங்கொத்து வழங்குவோம்.

அன்புள்ள,

**மு.க.**

3-7-2007

# 3274. ஆகும் வழி எது? ஆகா வழி எது? அறிந்து செயல்படுவோம்!

**உடன்பிறப்பே,**

பல ஆண்டுகளுக்கு முன்பு கூட்டுறவு இயக்க விழா ஒன்றில், நான் கலந்து கொண்டு உரையாற்றிய போது அந்த இயக்கங்களில் இருப்போர் கூடி உண்ணும் காகங்களைப்போல இல்லாமல், கூடிப் பொழியும் மேகங்களைப்போல இருக்க வேண்டுமென்று சொன்னது என் நினைவுக்கு வருகிறது.

உலகின் முதல் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கிய பெருமை இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த து. இங்கிலாந்தில் ராபர்ட் ஓவன் என்பவர் கூட்டுறவின் தந்தை என அழைக்கப்படுகிறார். அந்த நாட்டின் தொழிலாளர்களின் வறுமை நிலையைக் கண்ட அவர், அவர்களின் நலனுக்காக ஒரு மாற்று அமைப்பு தேவை என்பதை உணர்ந்து கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை 1844 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் தொடங்கினார்.

இங்கே, தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கங்களை வளர்த்த பெருமை பல பெரியோர்களுக்கும், குறிப்பாக காங்கிரஸ் கட்சிக்கும் உண்டு. கே. சந்தானம், டாக்டர் நடேசன், விருதுநகர் வி.வி. ராமசாமி, சேலம் சுப்பிரமணிய கவுண்டர், வேலூர் ராசகோபால் நாயுடு, சிதம்பரம் கனகசபை பிள்ளை, தஞ்சை என்.ஆர். சாமியப்பா முதலியார், நெல்லை ஏ.பி.சி. வீரபாகு, பக்தவத்சல நாயுடு, என்.ஆர்.எஸ். ராமலிங்கம், பேராசிரியர் எஸ்.கே. யக்ஞநாராயண அய்யர், திருவாரூர் ராஜ சந்தானம் பிள்ளை, கோவை டி.ஏ. ராமலிங்கம், கே.ஏ. நாச்சியப்ப கவுண்டர் போன்றவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக கூட்டுறவு இயக்கங்கள் கொடிகட்டிப் பறந்த காலம் உண்டு. அதேசமயம் வட்டிக்கடை வேந்தர்கள், குட்டிக் குபேரர்கள், மிட்டா மிராசுகள், பண்ணையார்களின் ஆதிக்கச் சக்கரம் சுழன்ற நிலையும் இருந்து, பின்னர் அந்த நிலை தேய்ந்ததும் உண்டு.

பொதுவாகத் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கமானது நூறு ஆண்டுகளுக்கு மேலாக, மக்களின், குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவு மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது. சிறப்பாக வேளாண்மைக் கடன் மற்றும் இடுபொருட்களை வழங்குதல், விளை பொருட்களை விற்பனை செய்தல், இன்றியமையாத நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் மக்களுக்குப் பெரிதும் துணையாக இருந்து வருகிறது.

கூட்டுறவுத் துறையின் பெருமையைப் பற்றி பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்,

*"நாடிய ஓர் தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால்*
*கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ?*
*சிறு முதலால் லாபம் சிறிதாகும், ஆயிரம் பேர்*
*உறு முதலால் லாபம் உயருமன்றோ?*
*ஒற்றைக் கைதட்டினால் ஓசை பெருகிடுமோ*
*மற்றும் பலரால் வளம் பெறுமோ?"*

என்று பாடியிருக்கின்றார்.

1955ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இருந்தன. 1956-57ஆம் ஆண்டு முதல்தான் சில வகையான சங்கங்கள் பிற துறைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றப்பட்டன.

தமிழ்நாடு கூட்டுறவு யூனியனில் 4-11-1967 அன்று நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில், தமிழக முதல்வராக வீற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது, "கூட்டுறவு முயற்சி, அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது - கட்சி வேறுபாடுகளுக்கு அதில் எவ்வித இடமும் இல்லை. கூட்டுறவில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுடைய சொந்த நலனை முன்வைக்காமல் பிறர் நலனைக் கருதிப் பாடுபடவேண்டும்" என்று திட்டவட்டமாக தெரிவித்ததற்கிணங்க, கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறும்போது, அங்கே கட்சி அடிப்படை வந்து தலைகாட்டி விடக் கூடாது என்று எண்ணுபவன் தான் நானும்! பயின்ற பாசறைப் பயிற்சி அப்படி!

"அரசியல் கட்சிகளின் செல்வாக்கைக் கூட்டுறவுத் துறை பெற்றால் அதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால், அரசியல் செல்வாக்கைக் கூட்டுறவாளர்கள் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்துவதுதான் கூடாது. கூட்டுறவில் தங்கள் தவறுகளை மறைக்க அரசியல் கட்சிச் செல்வாக்கை எவரும் பயன்படுத்தக் கூடாது. அரசியலுக்கு அப்பாற்பட்டதாகக் கூட்டுறவு இயக்கம் விளங்க வேண்டும்" என்றும் அண்ணா பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த அண்ணாவின் வழியிலே ஆட்சிப் பொறுப்பையேற்ற நான், 25-11-1997 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற 44வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் பேசும்போது, "கூட்டுறவு இயக்கத்திலே அரசியல்வாதிகள் இருக்கலாம். ஆனால், அரசியலைக் கலக்காமல் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை நடத்த வேண்டும்" என்று குறிப்பிட்டதை மனதிலே கொண்டால் இந்த அரசினைப் பொறுத்தவரையில், கூட்டுறவு இயக்கங்கள் அரசியல் அடிப்படையில் நடைபெற வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டதல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

1996-97ஆம் ஆண்டிலேயே கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களைத் தி.மு.க. அரசு நடத்த முன் வந்தபோது, "பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், மக்களால், மக்களுக்காகச் செயல் படுகின்ற இயக்கங்களாக இருக்க வேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கையாகும். இதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்களுக்கானத் தேர்தல்களை விரைவில் நடத்திட வேண்டுமென அரசு விரும்புகிறது" என்று தான் அறிவிக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில், கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்ட போது, மொத்தமுள்ள 23,625 சங்கங்களில் 23,125 சங்கங்களுக்கு 2 லட்சத்து 10 ஆயிரத்து 384 நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்த சமயம், எந்த விடத்திலும், எந்தவிதமான சச்சரவும் இல்லாமல் தான் அந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

இந்த அடிப்படையில்தான், பல ஆண்டுக் காலமாக நடைபெறாமல் இருந்த கூட்டுறவுத் தேர்தல்கள் தி.மு.கழகம்

ஆட்சிக்கு வந்தால் நடத்தப்படும் என்று தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்து, அதன்படியே இந்த ஆண்டு அதனை நடத்திட முன் வந்து, சட்டப் பேரவையிலும் அதனை அறிவித்து, கடந்த ஜூன் திங்களில் எந்தெந்த தேதிகளில், எந்தெந்த அமைப்புகளுக்குக் கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று ஏடுகள் வாயிலாக அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகள் செய்யப்பட்ட பிறகு, பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க.வும் , அந்தக் கட்சியை ஆதரிக்கும் கட்சிகளும் இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்தன. அதற்கு அவர்கள் கூறிய காரணம், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அதன் பிறகுதான் தேர்தல்கள் நடைபெறவேண்டுமென்பதாகும். அவர்கள் விரும்பியவாறு, புதிய உறுப்பினர்களைக் கூட்டுறவு அமைப்புகளுக்கு சேர்த்து அதன் பின்னர் தேர்தல் நடத்தலாமா என்றால், நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அவ்வாறு செய்ய இயலாது. (உயர்நீதிமன்ற தீர்ப்பு 20-12-2005) (It is declared that Section 89A of the Tamil Nadu Co-operative Societies Act is arbitrary, unreasonable, ultravires and unconstitutional as it would be determental to the democratic process and disturbance to the democratic set up affecting the democratic rights of the General Body of the Society, which would amount to the declaration by the Legislature making the earlier judicial declaration in Kuttappan's case ineffective and invalid) தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு நிர்வாகிகள் பொறுப்பிலே இருந்தால்தான் கூட்டுறவு அமைப்புகளுக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியும். தற்போது கூட்டுறவு அமைப்புகள் அனைத்தும் அதிகாரிகளின் பொறுப்பிலே உள்ள நிலையில், அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கும்போது புதிய உறுப்பினர்களைச் சேர்த்திட இயலாது. எனவேதான் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அதன் பிறகே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க. வைத்த கோரிக்கையினை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

இது பிரதான எதிர்க்கட்சியைப் பொறுத்த நிலை. இவ்வாறு இருக்க,

தோழமைக் கட்சிகளைப் பொறுத்தவரை, நாளேடுகளும், வார ஏடுகளும் தி.மு. கழகம் அவர்களை இந்தத் தேர்தலில்

கலந்து பேச வில்லை என்பதைப் போல தொடர்ந்து செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை நடைபெற்ற எந்தக் கூட்டுறவு அமைப்புக்கானத் தேர்தலிலும், கட்சிகளின் அடிப்படையில் கூட்டணி அமைத்துக் கொண்டு போட்டியிட்டதே கிடையாது. கூட்டுறவு அமைப்புகள் கட்சிகளின் அடிப்படையில் அமைக்கப்படுமேயானால், பின்னர் கூட்டுறவு தத்துவமே பொருளற்ற ஒன்றாக ஆகிவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான், உண்மையிலேயே கூட்டுறவுத் தத்துவத்திலே ஈடுபாடு உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு, தி.மு.கழகம் கூட்டுறவு அமைப்புக்கானத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பிறகு, கட்சிக்காரர்களையோ அல்லது கட்சியின் அடிப்படையிலேயோ அந்த அமைப்புக்களுக்கான நிர்வாகிகள் வரவேண்டுமென்று எண்ணி, அதற்கேற்பச் செயல்படவில்லை.

கூட்டுறவுத் தேர்தலுக்கான தேதிகள் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற அடிப்படையில், கடந்த ஜூன் 7ஆம் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர், தோழமைக் கட்சியினர் என்னை பல்வேறு தேதிகளில் தனித்தனியாகச் சந்தித்த போது, கூட்டுறவுத் தேர்தல்களில் கூட்டணி அடிப்படையிலேயே போட்டியிட வேண்டுமென்றோ, யார் யாருக்கு எந்தெந்த இடங்கள், எத்தனை இடங்கள் என்பது பற்றியோ ஒரு வார்த்தை கூட பேசிடவில்லை என்பது அந்தந்தக் கட்சிகளின் தலைமைக்கே நன்கு தெரியும். உதாரணமாக, கடந்த 4-ந்தேதியன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நண்பர்கள் திரு. என். வரதராசன், திரு. டி.கே. ரெங்கராஜன், திரு. கே. பாலகிருஷ்ணன், திரு. சவுந்திரராசன், திரு. ஜி. ராமகிருஷ்ணன் ஆகியோர், என்னை வீட்டிலே சந்தித்து, நீண்ட நேரம் உரையாடினார்கள். அப்போது கூட பல பிரச்சினைகள், பல கோரிக்கைகள் பற்றிப் பேசப்பட்டனவே தவிர, கூட்டுறவுத் தேர்தல்கள் பற்றி ஒரு வார்த்தையும் பேசிடவில்லை.

ஆனால் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு, ஜூலை 6-ந்தேதி நானும் ஓய்வுக்காகப் பெங்களூர் சென்ற பிறகு, வாக்குப் பதிவு நடைபெறப் போகின்ற நேரத்தில் தான் திடீரென்று தோழமைக் கட்சிகள் எங்களுக்கும் இடம் வேண்டும், கூட்டணி அடிப்படையிலே போட்டியிட வேண்டும் என்ற கருத்தினை தெரிவித்து, அவர்களாகவே ஆளுங்கட்சி எங்களைக் கலந்து

கொள்ளவே இல்லை, எங்களுக்கு இத்தனை இடங்கள் வேண்டுமென்றெல்லாம் அறிக்கை வெளியிட முற்பட்டார்கள். அவற்றில் சில மிகக் கடுமையானவை கூட!

இவ்வாறு அறிக்கைகள் வெளிவரத் தொடங்கியதும், அப்போது பெங்களூர் சென்றடைந்த நான், உடனடியாகத் தலைமைக் கழக நிர்வாகிகளையும், மாவட்டக் கழகச் செயலாளர்களையும் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, தோழமைக் கட்சிகளின் அறிக்கையிலே உள்ள தகவல்களைக் கருத்திலே கொண்டு அவர்களையும் இயன்ற வரையில் கூட்டுறவு அமைப்புகளிலே ஆங்காங்கு இடம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். இன்னும் சொல்லப்போனால், கழகப் பொருளாளர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள், ஐந்து நாட்கள் அரசின் தலைமைச் செயலகத்திற்குக் கூட செல்லாமல், அண்ணா அறிவாலயத்திலேயே நாள் முழுவதும் இருந்து, ஒவ்வொரு தோழமைக் கட்சியோடும் கலந்துபேசி அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து, அதற்கேற்பச் செயல்பட்டார். நானும் பெங்களூரில் இருந்தவாறு, காலையிலும், மாலையிலும் பொருளாளரிடம் தொடர்பு கொண்/ பேச்சுவார்த்தைகளைப் பற்றி கேட்டுக் கொண்டே இருந்தேன். அதுபோலவே கூட்டுறவுத் துறை அமைச்சர் தம்பி கோ.சி. மணி அவர்களும், கூட்டுறவுத் துறையின் செயலாளர் மற்றும் பதிவாளர் போன்ற அதிகாரிகளும் தலைமைச் செயலகத்தில் இருந்தவாறு கூட்டுறவுத் தேர்தல்களில் எந்தவித அசம்பாவிதங்களும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

இத்தனைக்கும் பிறகு, மொத்தம் சுமார் 23 ஆயிரம் அமைப்புகளுக்கானத் தேர்தல்கள் நடைபெற்றபோது, 25 இடங்களிலே பிரச்சினைகள் இருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த 25 இடங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை மிகவும் பெரிதாக ஊதிப் பெருகச் செய்து ஏடுகள் எல்லாம் கூட்டுறவு அமைப்புகளுக்கானத் தேர்தல்களிலே முறைகேடுகள், தவறுகள் என்றெல்லாம் செய்திகளை வெளியிட்டன. 23 ஆயிரம் அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறும்போது, பத்தாயிரம் இடங்களுக்குப் போட்டிகளே இல்லாமல் நிர்வாகிகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், 25 இடங்களில் பிரச்சினை என்பது பூதாகாரமாக பெரிதுபடுத்தப்பட்டு ஏடுகளிலே வந்ததும், நான் உடனடியாகத் தொலைபேசி வாயிலாகவே அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்து பேசி, பிரச்சினைகள் உருவான அந்த 25 இடங்களிலும், நடைபெற்ற தேர்தல்களை ரத்து செய்து விட்டு, புதிதாகத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கச் செய்தேன். ஆயிரத்திற்கு ஒரு இடத்தில்தான் பிரச்சினை. ஆனால் இந்தப் பிரச்சினை ஊதி பெரிதாக்கப் பட்டுவிட்டது. நமது தோழமைக் கட்சிகளுடன் நமக்குள்ள நல்லுறவைக் காயப்படுத்திட வேண்டு மென்ற திட்டத்துடன், நமது பிறவி எதிரிகள் நடத்திய பித்தலாட்ட நாடகம்தான் அது!

அந்த நாடகத்தில் தம்மை அறியாமலே நம்மவர் சிலர், பாத்திரங்களாகி விட்டதுதான் எனக்கு மிகவும் வேதனை!

அதற்கேற்றாற்போல, கூட்டுறவுத் தேர்தல் களத்தில் நின்றவர்களுக்கிடையே தோழமைக் கட்சிகள் என்றில்லாமல் - ஆளுங்கட்சியே கூட ஒரு சில மாவட்டங்களில் - கூட்டுறவு இயக்கத் தத்துவத்திற்கு மாறாக செயல்படக்கூடிய, விரும்பத்தகாத சில நிகழ்ச்சிகளுக்குத் துணை போய் விட்டது தான் துயரம் தரும் செய்தியாகும்.

அத்தகைய விளைவுகள் என் மனத்தைப் புண்படுத்திய காரணத்தினால்தான் கூட்டுறவுத் தேர்தலையே ரத்து செய்து ஆணை பிறப்பிக்க வேண்டியதாயிற்று. அதனை வரவேற்றுள்ள கூட்டணியில் உள்ள கட்சிகள், மீண்டும் கூட்டுறவுத் தேர்தலை நடத்திட என்னென்ன வழிமுறைகளை வகுக்கலாம் என்பனவற்றைத் தீர்மானங்களாகவும், திட்டவட்டமாகவும் அறிவித்துள்ளன.

அந்த அரிய யோசனைகளின்படி நடந்து, தேர்தலில் ஈடுபட நீதிமன்றத் தீர்ப்புகள் வழி காட்டுபவைகளாக இருக்கிறதா என்று சீர்தூக்கிப் பார்த்து, கலந்து பேசி முடிவு எடுத்து, கூட்டுறவுத் தேர்தலை நடத்திட, கட்சிகளை மறந்து விட்டு அனைவரும், மன நிறைவுடன் ஒருவருக்குக் கூட, கூட்டுறவுத் தத்துவத்தின் மீது நம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொண்டு, இப்போது நிலைவாசல்படி தலையில் இடித்து விடாமல் பாதுகாப்பாகக்

குனிந்து செல்வதுபோல குனிந்து கொடுத்து, ஜனநாயக நெறியைக் காயமுறாமல் காப்பாற்றிடுவோம்.

"சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்களை அழைத்துப் பேசி தேர்தலை முறையாக நடத்திட வழிமுறைகளை வகுப்போம்"

- என்று ஒரு சில கட்சிகள் அறிவித்துள்ளதை அலட்சியப்படுத்தாமல், ஆகும் வழி, ஆகா வழி இரண்டையும் பற்றி விவாதித்து நல்வழி காண, ஜன நாயக ரீதியில் முடிவெடுத்து கூட்டுறவுத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்திட அனைவரும் முன்வருவோம்.

அன்புள்ள,

**மு.க.**

15-7-2007

# 3275. பாலுக்கும் காவல்;
# பூனைக்கும் தோழனல்ல - இந்த அரசு!

**உடன்பிறப்பே,**

தோழமைக் கட்சிகள், அரசுக்கு அவ்வப்போது ஆலோசனைகளை எடுத்துக் கூறுகின்ற வகையில், அண்மைக்காலமாக சில கருத்துகளைப் போராட்ட வாயிலாகவும், அறிக்கைகள் வாயிலாகவும் எடுத்துத் தெரிவித்து வருகின்றன. அரசின் சார்பில், அதற்குத் தொடர்ந்து நானும், அமைச்சர்களும் விளக்கங்களை அளித்து வருகிறோம். ஏற்றுக் கொண்டவற்றுக்கு ஏற்றவாறு அவர்தம் எண்ணங்களையும் நிறைவேற்றி வருகிறோம்.

அந்த வரிசையில், திண்டுக்கல் மாவட்டத்தில் அருந்ததியருக்கு தனி உள் இட ஒதுக்கீடு கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தர்ணா போராட்டம் நடத்திய போது, அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. என். வரதராசன் அவர்கள், "உயர் கல்வித் துறையில் கல்விக் கட்டணம் ஒரு இலட்சம் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆனால் அதற்கு மேல் அதிகமாக வசூல் செய்கின்றனர். இதை அரசிற்கு எடுத்துரைத்தால் உயர் கல்வி அமைச்சர் பொன்முடியின் பதில் திருப்திகரமாக இல்லை. இதைத் தொடர்ந்து, பா.ம.க. மற்றும் சி.பி.ஐ.(எம்) கட்சிகளின் கனத்த குரலுக்கு பின்பு, "அதிக வசூல் செய்யும் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுப்போம்" என்று கூறுகிறார்" என்று அவர் பேசியிருக்கிறார்..

உயர் கல்வித் துறையில் கல்விக் கட்டணம் ஒரு இலட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று நண்பர் வரதராசன் குறிப்பிட்டிருப்பது எந்தப் படிப்புக்கான கட்டணம் என்று தெரியவில்லை. அரசுப் பொறியியல் கல்லூரிகளில் நிர்ணயிக்கப் பட்டிருந்த கல்விக் கட்டணம் ரூ. 12,550 என்பது 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் ரூ. 7,500 ஆக இந்த அரசு கடந்த ஆண்டு பதவிக்கு வந்த பிறகு குறைத்துள்ளது. சுயநிதிப்

பொறியியல் கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்விக் கட்டணம் நீதிமன்றத் தீர்ப்பின்படி நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கேற்ப ரூ. 32,500 என்றும், ரூ. 40,000 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொறியியல் கல்விக்கு மட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கல்விக் கட்டணத்தை ஒவ்வொரு படிப்புக்குமே அரசுக் கல்லூரிகளில் குறைத்துள்ளது. உதாரணமாக, பி.எஸ்ஸி., நர்சிங் படிப்பு, அரசுக் கல்லூரிகளில் சுயநிதிப் பிரிவில் படிக்க ஏற்கெனவே ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் கல்விக் கட்டணமாக செலுத்த வேண்டு மென்றிருந்ததை 1200 ரூபாய் என்ற அளவிற்கு குறைத்துள்ளோம்.

எம். பார்மசி படிக்க 7500 ரூபாய் என்றிருந்ததை 5000 ரூபாயாகவும்,

எம்.எஸ்ஸி., நர்சிங் படிக்க 7500 ரூபாய் என்றிருந்ததை 5000 ரூபாயாகவும்,

போஸ்ட் கிராஜூவேட் டிப்ளமா படிக்க 20 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை 15 ஆயிரம் ரூபாயாகவும்

எம்.டி.எஸ். படிப்புக்கு 30 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை 20 ஆயிரம் ரூபாயாகவும்,

பி.ஏ., படிப்புக்கு 1350 ரூபாய் என்பதை 500 ரூபாயாகவும், பி.எஸ்ஸி., பி.காம். படிப்புகளுக்கு 2850 ரூபாய் என்பதை 750 ரூபாயாகவும்; (இந்த ஆண்டு பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம் படிப்புகளுக்கு இந்தக் கட்டணமும் அனைவருக்கும் ரத்து செய்யப்பட்டு விட்டது)

எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம் போன்ற படிப்புகளுக்கு 7000 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை என்றிருந்த கல்விக் கட்டணத்தை, முறையே 500 ரூபாய், 750 ரூபாய், 750 ரூபாய் என்றும்,

கல்விக் கட்டணத்தைக் கடந்த ஆண்டு பொறுப்பேற்றவுடன் குறைத்த ஆட்சிதான் கழக ஆட்சி.

ஆனால், அதற்கு மேல் சில கல்லூரிகள் வசூல் செய்வதாகவும், அதற்கு உயர்கல்வித் துறை அமைச்சர் தருகின்ற பதில்கள் திருப்திகரமாக இல்லை என்றும் தோழர் வரதராசன் அவர்கள்

தெரிவித்திருக்கிறார். அவை அரசுக் கல்லூரிகள் அல்ல என்பதையும், ஆதாயம் தேடுவதற்காக மட்டுமே ஆரம்பித்து நடத்தப்படுகிற சுயநிதிக் கல்லூரிகள் என்பதையும் வரதராசன் போன்றோர் அறியாதவர்களல்ல!

13-7-2007 அன்று உயர் கல்வித் துறை அமைச்சர் தம்பி பொன்முடி செய்தியாளர்களிடம் கூறும்போது, நிர்ணயிக்கப் பட்ட தொகையை விட அதிகக் கட்டணத்தை மாணவர்களிடம் வசூலிக்கும் தனியார் பொறியியல் சுயநிதி கல்லூரி நிர்வாகிகள் மீது கிரிமினல் நடவடிக்கை உட்பட கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்தக் கல்லூரிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்யவும் பரிந்துரை செய்யப்படும் என்றும் கூறியிருப்பது இந்த அரசின் சார்பில் விடப்பட்டுள்ள அறைகூவலே தான்.

மேலும், இந்த ஆண்டு மாணவர் சேர்க்கையில் அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்காத வகையில் கண்காணிக்க இரண்டு குழுக்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளது என்றும், முன்னாள் நீதிபதி எம்.வி. பாலசுப்பிரமணியம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு, மாணவர்களின் கட்டணம் தொடர்பான புகார்களை விசாரிக்கும் என்றும், இந்தக் குழுவில் ஒரு ஆடிட்டர் மற்றும் இந்திய மருத்துவ கவுன்சிலின் பிரதிநிதி ஆகியோர் இருப்பர் என்றும், நீதிபதி தணிகாசலம் தலைமையிலான குழு, மாணவர் சேர்க்கையை கண்காணிக்கும் என்றும், இந்த ஆண்டு முதல் இந்தக் குழுக்கள் தங்கள் விசாரணையை தொடங்கும் என்றும் பொன்முடி அவர்கள் தெரிவித்திருப்பது, நடக்க இருப்பவைகளே தவிர, கண் துடைப்பு அல்ல!

சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, இந்த அரசு அவர்களின் நலனிலே அக்கறையோடு செயல்படுவதைப் போல ஒருசில அரசியல் கட்சிகள் எண்ணுகின்றன. ஆனால், இந்த அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து சுய நிதிக் கல்லூரிகள் நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்காடி வருவதையும், அதிலே அரசுக்கு எதிராகவே தீர்ப்புகள் வருவதையும், அதை எதிர்த்து அரசு மேல் முறையீடுகள் செய்து வருவதையும் நாட்டு மக்களும், மாணவர்களும் நன்றாகவே அறிவார்கள்.

சுயநிதிக் கல்லூரிகளை எதிர்ப்பது போல காட்டிக் கொண்டு, அக்கல்லூரிகளின் அதிபர்கள் மூலம் இலாபம் ஈட்டிக்கொண்டு, பாலுக்கும் காவல்! பூனைக்கும் தோழனாகவும் இருக்கிற அரசு அல்ல இந்த அரசு! என்பதை உறுதிபடக் கூற விரும்புவதோடு, செயலில் காட்டிட முடியும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கல்வி நீரோடையில் முதலைகளாக இருந்து கொண்டு இந்தச் சுயநிதிக் கல்லூரிகள் அதிக அளவிற்கு நன்கொடை பெறுவதைத் தடுக்கும் முயற்சியாகத்தான், அடுத்த ஆண்டு அரசு சார்பிலேயே அதிக அளவில் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான பணியிலே இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

எனவே இந்த அரசு, எந்த விதத்திலும் தனியார் சுய நிதிக் கல்லூரிகளுக்கு உதவி புரிந்திட முன்வராது. நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல மாணவர்களின் நலனுக்காகப் பாடுபடுவதில் யாருக்கும் சளைத்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அருமை நண்பர் என். வரதராசன் அவர்கள் எழுப்பிய ஐயத்திற்கு இந்த விளக்கம் உதவி புரிந்திடும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

**மு.க.**

18-7-2007

# 3276. நிலமற்ற ஏழை விவசாயிக்கு நிலம் வழங்கும் நலமிகு திட்டம்!

**உடன்பிறப்பே,**

2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், தமிழகத்தில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்குவோம் என்ற ஒரு வாக்குறுதியும் வழங்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைக் கண்டதும், அ.தி.மு.க. தலைவர், ஜெயலலிதா, இந்தத் திட்டம் செயல்படுத்த முடியாத திட்டம் என்று அறிக்கை விடுத்தார். இவ்வாறு இலவசமாக நிலம் வழங்க தமிழ்நாட்டில் எங்கே இருக்கிறது நிலம் என்று கேட்டார்.

அதற்கு உடனடியாக பதிலளித்த நான், ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் 55 லட்சம் ஏக்கரா தரிசு நிலங்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக 2001-2002ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்ட புள்ளி விவரத்தைத்தான் தி.மு. கழகமும் படித்துப் பார்த்துத் தனது தேர்தல் அறிக்கையிலே தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டேன்.

அதற்குப் பின்னர் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்ததும், இந்தத் திட்டத்தை அறிவித்தபோது, அ.தி.மு.க. தலைவி அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியாத திட்டம் என்றும், மக்களை ஏமாற்றுவதற்காக செய்யப்பட்ட அறிவிப்பு என்றும், தமிழ்நாட்டில் இந்த அளவிற்கு தரிசு நிலமே இல்லை என்றும் கூறினார். அதாவது, அவர் ஆட்சியில் வெளியிட்ட நிதி நிலை அறிக்கையையே அவரே மறுத்தார் என்றுதான் கூற வேண்டும்.

இத்தனைக்கும் பிறகு, அண்மையில் மதுரை இடைத் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்ற ஜெயலலிதா, அங்கே பேசும்போது நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம்

என்னவாயிற்று? என்று தி.மு.க.வைப் பார்த்து ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். அந்தக் கேள்விக்கும் நான் உடனடியாக பதிலளித்து அது அப்போதே வெளிவந்துள்ளது.

ஆனால், இன்னமும் நமது தோழமைக் கட்சியிலே உள்ள நண்பர்களே கூட, தோழர் டி.கே. ரெங்கராஜன் போன்றவர்கள் பேசும்போது நில விநியோகத் திட்டத்தை அமுலாக்க தி.மு.க. ஆட்சியின் அதிகார வர்க்கம் தயங்குகிறது என்பது போல பேசி அது "தீக்கதிர்" ஏட்டில் வெளிவந்துள்ளது. அதற்கு விளக்கம் அளிக்கும் வகையிலும், அதுபோலவே மற்றவர்களுக்குப் புள்ளி விவரங்கள் தரும் அளவிலும் சில நாட்களுக்கு முன்பு நான் "முரசொலி" கடிதத்தில் எழுதிய சிலவற்றை, மீண்டும் ஒருமுறை நினைவூட்டுவது என் கடமை எனக் கருதுகிறேன்.

1967 முதல் 1975ஆம் ஆண்டு வரை, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது 7 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை 3 லட்சத்து 69 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கினோம்.

1989 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, வடபாதி மங்கலம், தமிழ்நாடு கரும்பு பண்ணைக்குச் சொந்தமான நிலத்தினை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு விற்பனை செய்திட அரசு முடிவு செய்து, அதன்படி, முக்கால் ஏக்கர் நஞ்செய் நிலம் 2000 ரூபாய் வீதமும், ஒன்றரை ஏக்கர் புஞ்செய் நிலம் 700 ரூபாய் வீதமும் மிக மிகக் குறைவாக விலை நிர்ணயம் செய்து 27-5-1990 அன்று நடைபெற்ற விழாவில் 4,970 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கினோம்.

1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ், 52 ஆயிரத்து 792 விவசாயிகளுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட நிலம் 35 ஆயிரத்து 696 ஏக்கர். இந்த நிலப்பட்டாக்களைப் பெற்றவர்களில் ஆதி திராவிடர்கள் 13 ஆயிரத்து 753 பேர். பழங்குடியினர் 529 பேர். இதர பிரிவினர் 38 ஆயிரத்து 510 பேர்.

தி.மு. கழக ஆட்சியில்தான் 1970ஆம் ஆண்டு உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திடீரென்று அறிவித்துச் சட்டம்

இயற்றப்பட்டது. நில உச்ச வரம்புச் சட்டத்தின் விளைவாக, அதற்கு முன்னர் 19 ஆயிரத்து 20 ஏக்கர் நிலம் மட்டுமே உபரியாக அறிவிக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, கழக அரசு நிறைவேற்றிய சட்டத்தின் காரணமாகத்தான், ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் நிலம் உபரி என்று கைப்பற்றப்பட்டு தகுதியுள்ள, நிலமற்ற ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 236 ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதில் 61 ஆயிரத்து 985 பேர் ஆதி திராவிடர்கள், 204 பேர் பழங்குடியினர்.

ஐந்தாவது முறையாக 2006ஆம் ஆண்டு மே திங்களில் பதவியேற்ற பிறகு, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த திருநாளாகிய 17-9-2006 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதன்முதலாக தொடங்கி வைக்கப்பட்டது.

அந்த விழாவில் நான் பேசும்போது, இவ்வாறு ஏழைகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம், மூன்று மாதங்களுக்கொரு முறை தொடர்ந்து நிலம் கிடைக்கும் வரை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அந்த வகையில், இரண்டாவது கட்டமாக 17-12-2006 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற விழாவிலும், மூன்றாவது கட்டமாக 17-3-2007 அன்று திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியிலும் நடைபெற்ற விழாக்களில் கலந்து கொண்டு அரசு செலவிலே பண்படுத்தப்பட்ட நிலங்களை வழங்கினேன். மற்ற அமைச்சர்கள் இதர மாவட்டங்களிலே வழங்கினார்கள்.

அண்மையில், நான்காவது கட்டமாக திருநெல்வேலியில் நடைபெற்ற மிகப் பெரிய விழாவில் 17-6-2007 அன்று நானும், ஏனைய மாவட்டங்களில் மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பண்படுத்தப்பட்ட நிலங்களை வழங்கினோம்.

அந்த வகையில் இந்த நான்கு கட்டத்திலும் சேர்த்து, தி.மு. கழக அரசு ஒரு இலட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலத்தை, 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஓராண்டு காலத்தில் இலவசமாக வழங்கியுள்ளது. இதுவரை வழங்கப்பட்ட நிலங்களைப் பெற்றவர்கள் என்று

பார்த்தால், 24 ஆயிரத்து 774 பேர் தாழ்த்தப்பட்டவர்களும், 2 ஆயிரத்து 89 பேர் மலைவாழ் பழங்குடியினரும், 28 ஆயிரத்து 880 பிற்படுத்தப்பட்டவர்களும், 32 ஆயிரத்து 48 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், 3 ஆயிரத்து 785 இதர வகுப்பினரும் இந்தப் பயனைப் பெற்றுள்ளார்கள். ஆனால் அ.தி.மு.க. தலைவியும், அவருக்கு ஆதரவளிக்க விரும்பிடும் சில ஏடுகளும் இத்திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்றே குற்றஞ்சாட்டி வருகின்றன. அந்தப் பட்டியலில் ஒரு சில தோழமைக் கட்சிகளும் எப்படிச் சேர்ந்தன என்பதே எனக்கேற்பட்ட வியப்பாகும்!

நிலங்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் கழக அரசு அமையும் ஒவ்வொரு முறையும் வீடில்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதையும் முக்கிய கடமையாகக் கொண்டு அதனை நிறைவேற்றி வருகிறது. 1967-1975 வரை கழக அரசு நடைபெற்ற காலத்தில், 5 இலட்சத்து 3 ஆயிரத்து 697 ஏழைகளுக்கும், 1989-1990ஆம் ஆண்டுகளில் 4 லட்சத்து 78 ஆயிரத்து 95 ஏழைகளுக்கும், 1996-2001ஆம் ஆண்டுகளில் 7 லட்சத்து 51 ஆயிரத்து 235 ஏழைகளுக்கும் வீட்டு மனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டில் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடி இருந்து வருபவர்களுக்கு, வீட்டு மனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்துப் பரிந்துரை செய்ய 5-2-2000 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், நீர் வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள், தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருந்து, அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவை இல்லையென்றால், அத்தகைய குடியிருப்புகளைப் பட்டா வழங்கி முறைப்படுத்தலாம் என 27-3-2000 அன்று தி.மு.கழக அரசினால் ஆணையிடப்பட்டது.

அந்த ஆணைப்படி, அப்போது ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 348 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. தற்போது 2006இல் மீண்டும் பதவிப் பொறுப்புக்கு வந்த பின்னர், இடையில் நின்று போன அந்தத் திட்டத்தை மீண்டும் ஆறு மாத காலத்திற்கு

நடைமுறைப்படுத்திட 30-12-2006 அன்று ஆணையிடப்பட்டது. அவ்வாறு ஆணையிடப்பட்ட பிறகு, இந்த ஆறு மாத காலத்தில் மட்டும், இத் திட்டத்தின்படி 50 ஆயிரத்து 878 ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ஏழை மக்களிடையே இருந்த வரவேற்பினை கருத்திலே கொண்டு, அண்மையில் மேலும் ஆறு மாதங்களுக்கு இத்திட்டத்தினை நீட்டித்திட ஆணை பிறப்பித்துள்ளேன்.

ஆனால் நண்பர் டி.கே. ரெங்கராஜன் அவர்கள் பேசும்போது, ஏழைகளின் நீண்ட நாள் கோரிக்கையான வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் சிக்கல் நீடித்துக் கொண்டே இருக்கிறது என்று தெரிவித்து விட்டு, "இதில் முதல்வர் மற்றும் அமைச்சர்களைக் குறை கூற முடியாது, திட்டத்தை அமல்படுத்த அதிகார வர்க்கம் தயக்கம் காட்டுகிறது" என்று பேசியிருக்கிறார். எனவே இந்த விளக்கம் அனைவருக்கும் உதவிடும் என்ற நம்பிக்கை யோடு இதனைத் தொகுத்து தந்துள்ளேன். எனினும், 2006இல் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் - ஏழை எளியோர்க்கும் நிலம் மற்றும் மனைகள் வழங்குகிற இந்தத் திட்டம் மேற்கு வங்கத்தில் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதை அறிந்து அதனையும் வழிகாட்டியாக்கிக் கொள்ளலாமென்று இந்த அரசின் வருவாய்த் துறை அமைச்சர் தம்பி அய். பெரியசாமி அவர்களையும், அவருடன் அத்துறைத் தொடர்புடைய செயலாளர்கள் மற்றும் அதிகாரி களையும் அனுப்பி வைத்தேன். அவர்களும் மேற்கு வங்கம் சென்று அந்த அரசின் அதிகாரிகளிடமும், விவசாயிகளிடமும் விபரங்களைப் பெற்று வந்தார்கள். ஓரளவு உற்சாகம் தருவதாக அந்தத் தகவல்கள் அமைந்திருப்பினும், மேலும் விரிவான முறையில் நண்பர் ரெங்கராஜன் போன்றவர்களின் ஒத்துழைப்பையும் துணையையும் பெற்று, நிலமற்றவர்க்கும், மனையற்றவர்க்கும் அவற்றை வழங்கிட இந்த அரசு மேலும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அன்புள்ள,

**மு.க.**

25-7-2007

# 3277. வங்கம்; கேரள சாதனைகளின் வழிதொடருவோம்!

**உடன்பிறப்பே,**

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்க வேண்டும், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்திட வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தோடு தி.மு.கழக அரசின் சார்பில் திட்டம் அறிவிக்கப்பட்டு, அரசின் கையிருப்பில் உள்ள நிலங்களை, - அந்த நிலங்கள் பயன்படுத்துவதற்குரிய வகையில் இல்லாமல் இருந்தால் கூட அதனை அரசு செலவிலேயே பண்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கவும் முன்வந்து, அந்தத் திட்டம் ஒருமுறை நடைமுறைப்படுத்துவதோடு விட்டு விடாமல் தொடர் திட்டமாக அமைய வேண்டுமென்ற நிலையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, அப்படிப்பட்ட நிலங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைச்சர்களும் நானும் சென்று அந்த நிலங்களை வழங்கி வருகிறோம்.

உளப்பூர்வமாக நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இத்திட்டம் இதுவரை நான்கு கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளன. நான்கு கட்டங்களிலும் சேர்த்து 91 ஆயிரத்து 576 ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, 1 லட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள் 24,774 பேரும், பழங்குடியினர் 2089 பேரும், பிற்படுத்தப்பட்டோர் 28,880 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 32,048 பேரும் மற்றவர்கள் 3,785 பேரும் இந்த நிலத்தை இலவசமாகப் பெற்றுள்ளார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இந்தத் திட்டம் பற்றி குறை சொல்லி வருவதோடு மாத்திரமல்லாமல், அந்தக்

கட்சியின் மாநில செயலாளர் திரு. என். வரதராசன் அவர்கள் அளித்த பேட்டியில் "அ.தி.மு.க. ஆட்சியில் 55 லட்சம் தரிசு நிலங்கள் இருப்பதாக கூறினார்கள். தமிழக அரசு சட்ட மன்றத்தில் அறிவித்தபடி 1,70,000 ஏக்கர் நிலம் மட்டும்தான் இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஏக்கர் நிலம் எங்கே? சக்தி வாய்ந்த அரசியல்வாதிகள் கைகளில் சிக்கியுள்ளது. அதனை அரசு மீட்டுத்தர வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

மேலும் அந்தக் கட்சியின் விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர், குடிமனைப் பட்டா கிடைக்கும் வரை அரசு அலுவலகங்களில் குடியிருக்கும் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்.

வீட்டுமனைப் பட்டா, இதுவரை 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆனால் இதுவரை 25 ஆயிரம் பேருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தோழர் என். வரதராசன் பேட்டியில் கூறியிருக்கிறார்.

தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோதுதான், 2000வது ஆண்டில், அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடி இருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்து பரிந்துரை செய்ய 5-2-2000 அன்று ஒரு குழுவே அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீர் வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், மந்தைவெளி நிலங்கள், மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள், தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருக்குமேயானால், அதில் பத்தாண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு அந்த நிலங்கள் அரசுக்கு தேவையில்லாமல் இருக்கும்பட்சத்தில் அத்தகைய குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கி முறைப்படுத்தலாம் என்று ஒரு அரசாணையே 27-3-2000 அன்று தி.மு. கழக அரசினால் பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணைப்படி அப்போது ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 348 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

தற்போது 2006ஆம் ஆண்டு மீண்டும் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இடையில் நின்று போன வீட்டு மனைப்பட்டா வழங்கும் அந்தத் திட்டத்தை மீண்டும் ஆறுமாத

காலத்திற்கு நடைமுறைப்படுத்திட 30-12-2006 அன்று ஆணையிடப்பட்டது. அவ்வாறு ஆணையிடப்பட்ட பிறகு இந்த ஆறு மாத காலத்தில் மட்டும், இத்திட்டத்தின்படி 50 ஆயிரத்து 878 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையைத்தான் தோழர் வரதராசன் 25 ஆயிரம் பேர்களுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார். அரசின் சார்பில் யார் யாருக்கு இந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பதற்கு மாவட்ட வாரியாக பட்டியல் உள்ளன. ஆனால் வரதராசன் எந்தப் புள்ளி விவரத்தைக் கொண்டு 25 ஆயிரம் பேருக்குத்தான் வழங்கப்பட்டதாகக் கூறுகிறார் என்று தெரியவில்லை.

மேலே நான் எழுதியுள்ள திட்டத்திற்கான காலம் ஆறு மாதம் மட்டுமே என்றிருந்த நிலையில், அந்தக் காலம் முடிந்துவிட்ட பிறகும் இந்தத் திட்டத்திற்கு ஏழை மக்களிடையே இருந்த வரவேற்பினை மனதிலே கொண்டு அந்தத் திட்டத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடிப்பு செய்து ஆணையிடப் பட்டுள்ளது.

தமிழகத்திலே கழக அரசு அமையும் போதெல்லாம், ஒவ்வொரு முறையும் வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதை முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கருதி நிறைவேற்றி வருகிறது.

1967 முதல் 1975 வரை தி.மு. கழக அரசு நடைபெற்ற காலத்தில் 5 லட்சத்து 3 ஆயிரத்து 697 ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1989 முதல் 1990 வரை தி.மு.கழக அரசு நடைபெற்ற நேரத்தில் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 4 லட்சத்து 78 ஆயிரத்து 95 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 19 6 முதல் 2001ஆம் ஆண்டு வரை தி.மு.கழக அரசு காலத்தில் 7 இலட்சத்து 51 ஆயிரத்து 235 ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

எனவே தி.மு. கழக அரசு எப்போது ஆட்சிக்கு வந்தாலும் தன்னால் முடிந்த அளவிற்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கிக் கொண்டுதான் வருகிறது.

நிலம் வழங்கும் திட்டத்தைப் பற்றிக்கூட மீதமுள்ள நிலம் சக்தி வாய்ந்த அரசியல்வாதிகள் கைகளில் சிக்கியுள்ளது என்று

தோழர் வரதராசன் தெரிவித்திருக்கிறார். அது எந்தெந்த அரசியல் வாதிகள் என்பதை அவரே தெரிவித்தால், அந்த நிலங்களைக் கைப்பற்றக்கூட இந்த அரசு தயாராக உள்ளது. அதற்குச் சான்றுதான் 1970ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் 15 ஸ்டாண்டார்டு ஏக்கர் உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் கைப்பற்றி, அதனை ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 236 ஏழை விவசாயிகளுக்கு வழங்கினோம் என்பதை வரதராசன் அவர்களே நன்கறிவார்.

அதுபோலவே 1971ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலே இந்தியாவிலேயே முதன் முறையாக "குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தை" கொண்டு வந்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீட்டு மனைகளைச் சொந்தமாக்கும் விழா திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றபோது பொதுவுடைமைக் கட்சியின் மூத்த முன்னோடியான மணலி கந்தசாமி அவர்கள் அந்த விழாவிலே கலந்து கொண்டு, "பல ஆண்டுகாலமாக நாங்கள் ரத்தம் சிந்தியும் சாதிக்க முடியாததை ஒரு துளி மையினால் சாதித்துக் காட்டிவிட்டார் கலைஞர்" என்று பாராட்டியதை வரதராசன் வேண்டுமானால் மறந்திருக்கலாம். நான் இன்னும் மறக்கவில்லை. நாடும் மறக்கவில்லை.

தோழமைக் கட்சியின் தலைவர் ஒருவர் இந்த விவரங்களையெல்லாம் மறந்து விட்டு, அல்லது மறைத்து விட்டு இவ்வாறு குறை கூறியிருக்கிறாரே என்பதற்காக வருத்தப்பட்டு நான் இதனை எழுதவில்லை. கழக அரசு என்னென்ன சாதனைகளைச் செய்து வருகிறது என்பதை அவர் எழுப்பிய கேள்வியின் வாயிலாக பொதுமக்களுக்கு விளக்கிட ஒரு வாய்ப்பு என்ற முறையிலேதான் எடுத்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்று, நான் திருவாரூர்க்காரன் என்ற முறையில் ஒரு உதாரணம் கூறினால் பொருந்தும் என்று கருதுகிறேன். திருவாரூரில் தேர் இழுக்கும்போது ஒரு சில இடங்களில் "முட்டுக்கட்டை" போடுவார்கள். அது தேர் நேராகச் செல்வதற்கு உதவியாக அமைந்திடும். ஆனால் அதே முட்டுக்கட்டையை தேவையில்லாத இடங்களில் எல்லாம் போட்டால், தேர் ஒழுங்காக செல்ல உதவிடாது. தேர் முறையாகச் சென்று கொண்டிருக்கும்

போது, அதன் வேகத்தைக் கட்டுப்படுத்திடக் கூடிய அளவிற்கு தேவையற்ற "முட்டுக்கட்டைகள்'' அவசியம்தானா? நான் அண்மையில் டெல்லியில் பேட்டியளித்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய பூனைக்குட்டி, எலிக் குஞ்சு உவமையைக் கூட எடுத்துக் காட்டியிருக்கிறேன். பொதுமக்களுக்கும், ஏழையெளியவர்களுக்கும் எங்களால் முடிந்த அத்தனை நல்ல காரியங்களையும் செய்ய வேண்டுமென்ற முனைப்புடன்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அதில் எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் தேவையில்லை.

இந்தத் திட்டத்தை முறையாக நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான் வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் அதிகாரிகள் கொண்ட குழுவினை 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 10ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை மேற்கு வங்கத்திற்கு அனுப்பி அங்கே எப்படி இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்து வரச் செய்தேன். அந்தக் குழு அங்கே சென்று அந்த மாநிலத்தின் மாண்புமிகு நிலம் மற்றும் நிலச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களுடனும், அரசின் உயர் அதிகாரிகளுடனும் நில விநியோகத் திட்டம் குறித்து கலந்தாலோசனை செய்ததோடு, அந்த மாநிலத்தின் மேற்கு மிதினாப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்து, நேரிலும் ஆய்வுகள் நடத்தினார்கள்.

மேற்கு வங்காள மாநிலத்தைப் பொறுத்தவரை அங்கே உபரி நில விநியோகம் என்பது, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்களை எவ்வாறு விநியோகிப்பது என்பதை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. அந்த வகையான நிலங்கள் ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலங்களாக இருந்ததால் அவற்றைப் பண்படுத்த வேண்டிய அவசியம் அங்கே எழவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் நடை முறைப்படுத்தப்படும் திட்டத்தின்படி இதுவரை சாகுபடிக்கு வராத தரிசு நிலங்கள் பற்றியதாகும். இங்கே நில ஒப்படை செய்வதற்கு முன்பு, அரசு பணம் கணிசமாக செலவழிக்கப்பட்டு, அந்த இடங்களைப் பண்படுத்தி வழங்கப்படுவதாகும்.

ஆனால் இத்தகைய விமர்சனங்களுக்கு மத்தியில் ஒரு சில செய்திகள் எங்கள் மனதை மகிழ்ச்சியூட்டக் கூடிய அளவிற்கு வந்து கொண்டுதான் உள்ளன. அதற்கு உதாரணமாக 24-7-

2007 தேதிய "இந்து" நாளிதழில் புகைப்படத்துடன் "கிராம மகளிரின் பொருளாதார நிலையை இலவச நிலம் வழங்கும் திட்டம் உயர்த்தியுள்ளது'' என்ற தலைப்பில் ஒரு செய்தி வந்துள்ளது. அதன் தமிழ் மொழியாக்கம் வருமாறு :

"தற்பொழுது எனது மகள், அவளது மாமனார் வீட்டில் மரியாதையுடன் நடத்தப்படுகிறாள். எனது பேரக் குழந்தைகள் என் வீட்டிற்கு அடிக்கடி வருகிறார்கள். இது அரசு எனக்கு இலவசமாக வழங்கிய நிலத்தின் காரணமாக சாத்தியமாகி யுள்ளது'' என்று ஈரோட்டிற்கு அருகில் உள்ள குத்தம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கண்ணம்மாள் என்ற 42 வயதுடைய ஒரு பெண்மணி இந்து நாளிதழுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் கண்ணம்மாள் கூறும்போது, தான் ஒரு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளி என்றும், தானும் தனது குடும்பத்தாரும் சேர்ந்து வாரம் ஒன்றுக்கு 250 முதல் 300 ரூபாய் வரை கூலியாகப் பெற்றதால் திருமணமான தனது மகளுக்கு எந்த உதவியும் செய்ய இயலாத நிலையில் இருந்ததாகவும், அதனால் அவரது மாமனாரும், மாமியாரும் இதுவரை மரியாதையோடு நடத்த வில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இவரது நிலைமைகளைப் புரிந்த பக்கத்து வீட்டுக்காரர்கள், அரசு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தைப் பற்றி இவரிடம் கூறி மனு செய்து கொள்ளும்படி தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறே இவரும் மனு செய்ய ஒரு மாத காலத்திற்குள்ளாகவே இவரது சொந்த கிராமத்திலேயே நிலம் இலவசமாக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

- நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டத்தை 17-9-2006 அன்று தொடங்கிய பிறகு இதுவரை ஈரோடு மாவட்டத்தில் மட்டும் ஏழு கோடி ரூபாய் மதிப்புள்ள 1543 ஏக்கர் நிலம் 1509 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- வேளாண்மைத் துறை அலுவலர்கள் கண்ணம்மாளிடம் அரை ஏக்கர் நிலத்தில் நிலக் கடலை பயிரிடும்படி யோசனை தெரிவித்துள்ளார்கள். அதன்படி அவரும் பயிரிட்டு நல்ல விளைச்சலைக் கண்டுள்ளார். மீதமுள்ள

ஒன்றரை ஏக்கரில் சூரிய காந்தி சாகுபடி செய்து அதன் விதைகளை 12 ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனை செய்திருக்கிறார்.

- அவரது பொருளாதார நிலை உயர்ந்ததின் காரணமாக உறவினர்கள் மத்தியிலே செல்வாக்கு உயர்ந்துள்ளதோடு மட்டுமல்லாமல், இவருடைய மகளுக்கும் புகுந்த வீட்டில் மரியாதை கிடைக்கத் தொடங்கியுள்ளது.

- இம்மாதிரியே, கஸ்தூரிபாளையம் கிராமத்தில் பாவாயி அம்மாள் அரசிடமிருந்து பெற்ற நிலத்தில் எள் பயிர் செய்து, அதன் மூலம் 5000 ரூபாய் வருவாய் கிடைத்திருப்பதாகத் தெரிவித் திருக்கிறார். தொடர்ந்து அந்த நிலத்தில் நெல் பயிரிடப் போவதாகவும் கூறுகிறார்.

- ஞானபுரம் கிராமத்தில் ஷீலா என்பவருக்கு வழங்கப்பட்ட இரண்டு ஏக்கர் நிலத்தில் சோளம் பயிரிட்டு நல்ல வருவாய் அடைந்திருக்கிறார்.''

"இந்து" இதழில் வந்த இந்தச் செய்திகளை நான் படித்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியினை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்வதற்காகத்தான் எழுதியுள்ளேன்.

ஆனால் தோழமைக் கட்சிகளில் ஒன்றான மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழகத்து முன்னோடித் தலைவர், தோழர் வரதராசன் அவர்கள் மட்டும் என்றைக்கோ நடந்து முடிந்த சென்னை மாநகராட்சி, மற்றும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை மட்டும் மறக்காமல், உடனடியாக அரசு சார்பில் திருத்திக் கொள்ளப்பட்ட பிறகும் இப்போதும் அதற்காக இந்த அரசின் மீது தொடர்ந்து கண்டனங்களை எழுப்பி வருவதற்குக் காரணம்தான் புரியவில்லை. பாட்டாளி வர்க்கத்தின் அன்புக் கட்டளை எதுவாயினும் அது அந்த மக்களுக்குப் பயன்படுவதாயின் அவற்றைப் பரிவுடன் நிறைவேற்றிப் பழக்கமுடைய தி.மு.க. அரசு; இன்றைக்கும், என்றைக்கும் அந்த நிலையைத் தொடரத் தயாராகவே இருக்கிறது. கம்யூனிஸ்ட் ஆட்சிகள் நடைபெறுகிற மாநிலங்களில் தமிழகத்தைவிட ஏழை எளியோர்க்கான முற்போக்கு திட்டங்கள், சமத்துவ சமதர்மப் பணிகள் அதிகமாக

நடைபெறுமானால்; அவற்றைப் பின்பற்றி "பொன்" வைக்கும் இடத்தில் "பூ" வைப்பதுபோல, தமிழகத்திலும் முடிந்த அளவு அவற்றைத் தொடங்கி தொடர்ந்து நிறைவேற்ற தி.மு.க. தயங்காது என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். -

உடன்பிறப்பே, இந்த உறுதிமொழிக்கு ஏற்ப செயல்படுவதற்கு, மேற்கு வங்கம், கேரளா போன்ற மாநிலங்களுக்கு நமது அரசின் சார்பில் மீண்டும் ஒரு விரிவான குழுவை அனுப்பி வைத்து அந்த மாநில அரசுகளின் முற்போக்கு திட்டங்கள் எவ்வாறு அமைந்து, மக்களை முழுமையாகச் சென்றடைகின்றன என்பதை அறிந்து அவற்றைத் தமிழகத்தில் செயல்படுத்தவும் விரைவில் முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை அறிவித்திடுகின்றேன். வங்கம், கேரளம் இரு மாநில அரசுகளின் சாதனைகளை ஆய்வு செய்வோம்; பின்னர் ஓய்வு கொள்ளாமல் பெரியார், அண்ணா வழியில் உழைத்திடுவோம்; உயர்வு பெற்றிடுவோம்!

அன்புள்ள,

மு.க.

30-07-2007

# 3278. நிலை ஒன்று தான்; ஆனால் நினைவுகள்?

உடன்பிறப்பே ,

கை ரிக்ஷாவில் மனிதனை வைத்து மனிதன் முதுகெலும்பொடிய இழுத்துச் செல்கிற கொடுமை, சுதந்திர இந்தியாவில் இருக்கக் கூடாது என்றார் உத்தமர் காந்தி அடிகள். ஆனால் அத்தகைய கொடுமை நிறைந்த காட்சியை இந்தியா சுதந்திரமடைந்த அறுபது ஆண்டுகள் முடிகிற நிலையிலும் - மேற்கு வங்கத்தில் - குறிப்பாக "கொல்கொத்தா" தலைநகரில் கடந்த ஆண்டு வரையிலும் காண முடிந்தது. இப்போதும் அங்கே அந்தக் "கை ரிக்ஷா" இழுக்கும் நிலை ஒழிந்துவிட்டதாகச் சொல்ல முடியவில்லை. கொல்கொத்தா நகரில் கைரிக்ஷா ஒழிப்புச் சட்டம் கடந்த ஆண்டு கொண்டுவந்தபோதிலும், அவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புக்கும், மறுவாழ்வுக்குமான வகை செய்யப்படாததால், அங்கே கை ரிக்ஷா இழுப்போர் சங்கத்தின் சார்பில் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்று விட்டார்கள். அந்த வகையில் இப்போதும் அங்கே கைரிக்ஷா இருந்து கொண்டுதான் உள்ளது. ஆனால் 1967இல் ஆட்சிக்கு வந்த தி.மு.க.வின் "முதல் அமைச்சர்" என்ற பொறுப்பை 1969இல் ஏற்றுக் கொண்ட நான்; உடனடியாக கைரிக்ஷாக்களை ஒழித்து; அதனை இழுத்துப் பிழைத்துக் கொண்டிருந்த ஏழை எளியவர்களுக்கு மாற்றுத் திட்டமாக சைக்கிள் ரிக்ஷாக்களை இலவசமாக வழங்கி மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கை ரிக்ஷா கொடுமையை தமிழகம் முழுவதும் ஒழித்திடும் பணியை ஒரு சாதனையாகவே ஆற்றினேன். தற்போது தமிழகத்தில் கை ரிக்ஷா அரசு அருங்காட்சியகத்தில் மட்டுமே இடம்பெறும் ஒரு காட்சிப் பொருளாக இன்றளவும் உள்ளது.

கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சி நடைபெறுகிற மேற்கு வங்க மாநிலத்தில்; ஒரு உழைப்பாளி நாள் முழுதும் நரம்புகள் புடைத்திட - எலும்புகள் நொறுங்கிட - விழி பிதுங்கிட - விதியை

நொந்து கொண்டு - கதி வேறு இல்லையே எனக் கதறியழுது; கண்ணீர் வடியவும் - வியர்வை கொட்டவும் - நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் கை ரிக்ஷா இழுக்கிற கொடுமையை வங்கத்து கம்யூனிஸ்டு கூட்டணி அரசு வரவேற்றதா என்றால் இல்லை! ஆதரித்ததா என்றால் இல்லை! - ஆனால் 60 ஆண்டுக் காலம் தொடர்ந்து அதை அனுமதித்தே வந்துள்ளது என்பது அங்குள்ள சூழ்நிலையை விளக்குகிறதே அல்லாமல் - சமத்துவ, சமதர்மக் கொள்கையை அந்த அரசு நடத்தியோர் கை விட்டுவிட்டதாக அர்த்தமில்லை அல்லவா!

அந்த மாநிலத்திலும் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை - இதோ; அவை குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவு ஏடான "தமிழ் ஓசை" யில் வந்துள்ள இரு செய்திகளை எழுத்துப் பிசகாமல் அப்படியே இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன். அந்தச் செய்திகளின் தலைப்புகள் மாறாமல் வெளிவந்த தேதிகளுடன் தந்துள்ளேன்.

இரு மாநில ஆட்சிகள்
இரு நிலைகள் -
இவற்றை நீ மட்டுமல்ல
மற்றவர்களும் நடுநிலையுடன்
சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே
இக்கடிதம்; உனக்கும் மற்ற
உடன்பிறப்புகளுக்கும்
எழுதியுள்ளேன்.

**(1) டாடா நிறுவனச் சுற்றுச் சுவர்**
**இடிக்கப்படும் வரை போராட்டம்**
**மம்தா பானர்சி உறுதி.**

சிங்குர், ஆக.7

மேற்கு வங்க மாநிலம், சிங்குரில் டாடா நிறுவனம் அமைத்துள்ள சுற்றுச்சுவர் இடிக்கப்படும் வரை, அரசுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று திரிணமூல் காங்கிரசு தலைவர் மம்தா பானர்சி கூறியுள்ளார்.

இது தொடர்பாகச் சிங்குரில் டொபாரி சிற்றூரில் குழுமியிருந்த மக்களிடையே மம்தா பானர்சி

பேசியதாவது:

சிங்குரில் டாடா நிறுவனத்துக்காக வேளாண் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு எதிரான போராட்டம் தொடரும். டாடா நிறுவனம் கட்டியுள்ள சுற்றுச் சுவரை மாநில அரசே இடிக்கும் வரை இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்.

உழவர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி நிலங்களைக் கையகப்படுத்தி முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா தவறு செய்து விட்டார். எனவே, சுற்றுச் சுவரை இடிப்பதற்கு அவரே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலமில்லா உழவர்களின் வாழ்க்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான அரசு விளையாடி வருகிறது. எனவே, அவர்களின் உண்மையான முகத்தை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்நிலையில் மம்தா பானர்சியின் கருத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அனில் பாசு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், மம்தா பானர்சி மக்கள் மீது முதலைக் கண்ணீரை வடிக்கிறார். டாடா நிறுவனத்தின் எல்லைச் சுவரை இடிக்க வேண்டும் என்று அவர் கூறுவது கேலிக்குரியது.

அவரின் ஆதரவாளர்கள் சுற்றுச் சுவரை இடிக்கக் கோரி, கடந்த ஓராண்டாகத் தொலைக்காட்சிக்காகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்போது அவரின் வெற்று வேசம் வெளிவந்துவிட்டது. டாடா நிறுவனத்தின் திட்டம் மக்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்றார்.

(தமிழ் ஓசை - ஆக.7)

## (2) மேற்கு வங்கம் தொழில் மயமாவதைத் தடுக்கச் சதி; பாசு குற்றச்சாட்டு

கொல்கத்தா, ஆக. 7

மேற்கு வங்கத்தைத் தொழில் மயமாக்குவதற்கு இடதுசாரி முன்னணி மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தடை போடும் வகையில் நந்திகிராமில் வன்செயலுக்கு எதிர்க்கட்சிகள் தூபம் போடுகின்றன என்று மார்க்சிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் சோதிபாசு நேற்றுக் குற்றம் சாற்றினார்.

"நாட்டில் கம்யூனிச இயக்கத்தின் முன்னோடியான முசாபர் அகமதின் 119ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். முதல்வர் புத்ததேவ் பட்டாசார்ஜி மக்களிடம் எதையும் மூடி மறைக்கமாட்டார். உழவர்களிடமிருந்து நிலத்தைப் பறித்துச் செல்ல நாங்கள் என்ன பைத்தியமா? தொழில் மயமாவதால் வேளாண்மை அழிந்து விடாது என்றார் பாசு.

எந்தக் கட்சியின் பெயரையும் குறிப்பிடாமல் பேசிய பாசு, எதிர்க்கட்சிகளுக்கு மக்களின் பேராதரவு இல்லை. எனவே நந்தி கிராமில் வன்முறையைத் தூண்டிவிட்டு தொழில் மய நடைமுறைகளைத் தடுத்து நிறுத்தி விட முடியாது என்றார்.

டாடா மகிழுந்து ஆலை அமைக்க நிலம் கையகப்படுத்திய நந்திகிராமில் திரிணமூல் காங்கிரசு ஆதரவு பூமி பாதுகாப்புக் குழுவினருக்கும் மார்க்சிஸ்ட் தொண்டர்களுக்கும், இடையே நடைபெற்ற மோதல், அதைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் தொண்டர்கள் அங்கிருந்து வேறு இடத்துக்குச் சென்று தங்கியுள்ள சூழ்நிலையில் பாசு மேற்கண்டவாறு குற்றம் சாற்றியுள்ளார்.

வேளாண் நிலங்களில் தொழிற்சாலை - அமைப்பதற்குக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளே எதிர்ப்புத் தெரிவிப்பதை மறைமுகமாகச் சாடினார் முதல்வர் புத்ததேவ் பட்டாசார்ஜி. நிலச் சீர்திருத்தத்துக்காகவும், உழவர்கள் மற்றும் நிலமில்லாதவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், இடதுசாரி முன்னணி போராடியது. ஆனால், மாநிலத்தைத் தொழில் மயமாக்க அரசு முயற்சி செய்தால் பிற்போக்கு எண்ணம் கொண்ட சிலர் சீர்குலைக்க எண்ணுவது முற்போக்குத் திட்டங்களுக்குப்

பின்னடைவை ஏற்படுத்துகின்றது என்றார்.

தொழில் மயம் என்பது மாற்ற முடியாத ஒன்று. இது உழவர்களின் நலன்களை அடகு வைத்துச் செய்யப்படுகிறது என்ற தவறான எண்ணத்தை அனைவரும் கைவிட வேண்டும். தனியார் முதலீட்டை நாம் நம்பியிருக்க வேண்டியுள்ளது. தனியார் முதலீட்டால் மக்களுக்கு எத்தகைய சிக்கல்களும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

உடன்பிறப்பே,

இரண்டு செய்திகள் ஒரே பக்கத்தில் - ஒரே ஏட்டில் - ஆம்; தமிழ் ஓசையில்!

இந்த நேரத்தில், இதே நாளில் 'தினமணி' நாளிதழில் "உயிரை விடவும் தயார்'' என்ற தலைப்பில் தோழர் என். வரதராஜன் அவர்களின் உரையின் ஒரு பகுதி இதோ!

"தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டாகிறது. அரசுப் பணிகள் அனைத்தும் ஆமை வேகத்தில்தான் நடைபெறுகிறது. நகர்ப்புறங்களில் ஜூன் மாதத்திற்குள் பட்டா வழங்கப்பட்டுவிடும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இப்போது இன்னும் ஆறு மாதம் ஆகும் என்கின்றனர். நிர்வாகம் சரியாக நடக்கவில்லை. வீட்டு மனைப் பட்டா கேட்கும் மக்களை அரசு வெறும் வாய் ஜாலங்களால் ஏமாற்றாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடு சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் ஆகியும் 10 ஐந்தாண்டு திட்டங்கள் போடப்பட்டும் இன்னும் குடிசை நிலத்துக்கு ஏங்கி நிற்கும் நிலைதான் உள்ளது. குடிசைக்கு தகடு போட்டால் இலவச பட்டா இல்லை என்கிறார்கள். பட்டா வழங்க இந்த அதிகாரிகள் ஒத்துழைப்பு கொடுக்க மாட்டார்கள். அரசியல் கட்சிகளைக் கொண்ட குழுவை அமைக்க வேண்டும். 25 லட்சம் பேர் பட்டா கேட்டு மனு கொடுத்து ஏங்கி நிற்கின்றனர். உடனடியாகக் குறைந்தது 10 லட்சம் பேருக்கு பட்டா வழங்கப்பட வேண்டும். பட்டா வழங்கப்படும் வரை போராட்டம் ஓயாது. இந்தப் போராட்டத்தின் எழுச்சியைக் கண்டாவது மாநில அரசு துரிதமாக செயல்பட வேண்டும். உங்களுக்கு பட்டா கிடைப்பதற்காக உயிரை விடவும் தயாராக உள்ளேன் என்றார்.''

உடன்பிறப்பே,

இன்னமும் "கைரிஷா"வை அனுமதித்துக் கொண்டிருக்கின்ற மாநிலமாகவும் -

குடிமனைப்பட்டா அனைவருக்கும் வழங்காத நிலையில் உள்ள மாநிலமாகவும் இருக்கின்ற கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கின்ற மேற்கு வங்க,. கேரள மாநிலங்களுக்கு இந்த நிலைகள் பொருந்தாதா?

பொருந்தும் என்றாலும்,

இன்னும் சில காலம்

பொறுமையுடன் இருந்துதான்

தமிழ்நாடானாலும், மேற்கு வங்க, கேரள மாநிலங்களானாலும்

முழு வெற்றி காண முடியும்

எனவே தமிழ் ஓசைச் செய்திகளையும் படி!

தமிழ்நாட்டில் எழும் ஓசைகளையும் படி!!

நிலை ஒன்றுதான்

நினைப்புகள்தான் வேறு; வேறு!

அன்புள்ள,

**மு.க.**

08-08-2007

# 3279. அமர்த்தியா சென் ஆய்ந்து அறிவிப்பது என்ன?

**உடன்பிறப்பே,**

தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலை ஒன்றை 2300 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்க டாட்டா நிறுவனம் முன் வந்தது குறித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கருத்துத் தெரிவித்துள்ளன. அநேகமாக எல்லா கட்சிகளும், அங்கே சென்று மக்களிடம் கருத்துகளைக் கேட்பதாகக் கூறி அவ்வாறே செய்தும் வருகின்றன. அந்தக் கருத்துக் கேட்பின்போது, அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப தங்கள் தங்கள் அபிமானிகளை அழைத்து வந்து கருத்துகளைச் சொல்ல வைக்கும் ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் எதிர்ப்புக் கருத்துக்களும் சொல்லப்பட்டு, அதனை இந்து போன்ற நாளேடுகள் வெளியிடவும் தவறவில்லை.

இந்தத் தொழிற்சாலைக்கான மூலப் பொருள் கிடைக்கும் இடத்தை விட்டு விட்டு, வேறு எங்கேயோ தொழிற்சாலையை ஆரம்பித்தால் என்ன என்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன. அவர்கள் கருத்துப்படி அங்கே தொழிற்சாலை ஆரம்பித்தால் கூட, மூலப்பொருள் உள்ள தொலை தூரத்திலிருந்து அதனை எடுத்துத்தானே கொண்டுபோக வேண்டும். வேறு சிலர் அரசாங்கமே இந்தத் தொழிற்சாலையை நடத்தினால் என்ன என்று யோசனைகளையும் வழங்குகிறார்கள். 2300 கோடி ரூபாய் உடனடியாக முதலீடு செய்ய அரசாங்கத்திடம் நிதி வசதி உள்ளதா என்பதைப் பற்றி அவர்கள் யோசிக்கவில்லை. டாட்டா தொழிற்சாலையைப் பொறுத்த வரை, இந்தியாவிலே நேர்மையாக, எவ்வித ஊழலுக்கும் இடமின்றி, தொழில் நிறுவனங்களை நடத்துவோர் என்பது தொழில் துறை பற்றி அறிந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். வேறு சிலர் டாட்டா நிறுவனம் முதன் முதலாக இப்போதுதான் தமிழகத்திற்கு வருவதாகச் சொல்கிறார்கள்,

அவர்களுக்கு டாட்டா நிறுவனத்தின் சார்பில் தமிழகத்தில் ஏற்கெனவே பல நிறுவனங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன என்ற விவரம் கூடத் தெரியாத நிலை.

இதே டாட்டா நிறுவனம் மேற்கு வங்க மாநிலத்தில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவது குறித்து அங்கே பிரச்சினைகள் தோன்றி அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுகின்றன. நந்திகிராமம் என்ற பெயர் திடீரென நாடு முழுதும் பேசப்படுகிற ஒன்றாகி விட்டிருக்கிறது.

இந்த நிலையில், ரவீந்தரநாத் தாகூர் அவர்கள் கல்வி நிறுவனம் ஒன்றை தோற்றுவித்து நடத்திய "சாந்தினிகேதனில்" பிறந்தவரும், நோபல் பரிசு பெற்றவரும், உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணருமான அமர்த்தியா சென் அவர்கள், மேற்கு வங்கத்தில் தொடங்கப்படும் டாட்டா தொழிற்சாலை பற்றி கொல்கத்தாவில் இருந்து வெளியாகும் "டெலிகிராப்" இதழுக்கு ஒரு சிறப்புப் பேட்டியினை அளித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் உள்ள சில கருத்துகள் சிந்தனையைத் தூண்டுபவை என்பதால், அவற்றை இந்தக் கடிதத்தில் தொகுத்து தந்துள்ளேன். அது வருமாறு :-

**"கேள்வி** :- தொழில் துறைக்கு வேளாண் நிலங்களை கையகப் படுத்துவது குறித்தும், நந்திகிராமம் - சிங்கூர் விவகாரம் குறித்தும் தங்களுடைய கருத்து என்ன?

**அமர்த்தியா சென்** :- இது மிகவும் சிக்கலான கேள்வி. இதற்குப் பல பரிமாணங்கள் உண்டு. அவற்றைத் தனித்தனியாகப் பார்க்கலாம். முதலில் மேற்கு வங்கத்திற்குத் தேவையான தொழில் கொள்கை குறித்து ஆராய்வோம். இது ஒரு நீண்ட கால கேள்வி மட்டுமன்றி, அதி முக்கியத்துவம் வாய்ந்ததும்கூட. மேற்கு வங்கத்தில் தொழில் துறை எவ்வளவு தூரம் பின்னடைந்து இருக்கிறது என்பதை நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். இந்தியாவில் மட்டுமன்றி, உலகத்தில் உள்ள முக்கியமான தொழில் மையங்களில் ஒன்றாகவும் கொல்கத்தா இருந்தது. ஐரோப்பியர்கள் எழுதிய புத்தகங்களில் உலகத்திலுள்ள வளமான தொழில் மையங்களில் ஒன்றாக கொல்கத்தா

குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற ஒரு பெருமையை இத்தாலியின் சில பகுதிகள் பிற்காலத்தில் ஈட்டின. வரலாற்று ரீதியாகப் பார்த்தால் 300 ஆண்டுகளுக்கு முன்பாக ஜோப் சார்நோக் என்பவரால் கொல்காத்தா உருவாக்கப்பட்டது. அப்போது வேளாண்மையைத் தவிர தொழில் மற்றும் வர்த்தகத்தின் அடிப்படையிலும், நகர்ப் புறக் குடியிருப்புகளும் அங்கிருந்தன. இந்தியாவில் கிடைக்கும் ஆவணங்களில் மட்டுமன்றி டாலமி, பிளினி, எல்டர் போன்ற ஐரோப்பிய எழுத்தாளர்களின் எழுத்துகளிலும் இது குறித்த தகவல்கள் காணக் கிடைக்கின்றன. கொல்கத்தாவின் தொழில் வளத்தை ஐரோப்பியர்கள் நன்கறிந்திருந்தனர். கொல்கத்தாவிற்கு அருகிலேயே வளம்மிக்க தொழிற் பேட்டைகள் இருந்தன. கி.பி. 401ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து பத்தாண்டுகள் இங்கே தங்கியிருந்த பாஹியானின் பயணக் குறிப்புகளிலும் இது குறிப்பிடப் பட்டுள்ளது. கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள தம்ராலிப்தாவில் இருந்து படகு மூலம் அவர் புறப்பட்டுச் சென்றார். இவையெல்லாவற்றையும் பரந்து விரிந்து கிடந்த கொல்கத்தாவின் பகுதியாகத்தான் கருத வேண்டும். கொல்கத்தா ஒரு தொழில் வர்த்தக மையமாக வெகு காலத்திற்கு முன்பு இருந்ததை இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழில் கொள்கையானது நன்றாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஒன்றல்ல. தொழிற்சாலைகளில் நடைபெற்ற போராட்டங்கள், தொழிலாளர்களுக்குச் சில உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கலாம். ஆனால், கொல்கத்தாவிலிருந்து தொழிற்சாலைகள் வெளியேறியதன் காரணமாக, பல உரிமைகளை அவர்கள் இழக்க வேண்டியிருந்தது. ஜோதிபாசுவிற்கு இந்தப் பிரச்சினைகள் தெரியும். பெரிய தொழிற்சாலைகள் அமைய வேண்டியதன் அவசியத்தை புத்ததேவ் பட்டாச்சார்யாவும் உணர்ந்திருக்கிறார். இது மிகவும் அவசியமான ஒன்று. தொழில் உற்பத்தியானது ஹுக்லி நதிக்கரையிலும், கங்கை நதிக்கரையிலும் உள்ள வளமான நிலங்களில்தான் நடைபெற்றது என்பதை

நாமெல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, வளமான வேளாண் நிலங்களை தொழில் துறைக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கூறுவது மேற்கு வங்கத்தின் தொழில் கொள்கைக்கு விரோதமானது மட்டுமன்றி, வங்காளத்தின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றுக்கும் எதிரானது.

நிலங்கள் வளமானவைகளாக இருந்தாலும், அவற்றைத் தொழிற்சாலைகளுக்கு அளிக்கும் பட்சத்தில், அங்கு உற்பத்தி செய்யும் பொருட்களின் மதிப்பானது வேளாண் உற்பத்திப் பொருட்களை விட எத்தனையோ மடங்கு அதிக மதிப்புடையதாக இருக்கும். மான்செஸ்டரிலும், லங்காஷையரிலும் தொழிற்சாலைகள் வளமான வேளாண் நிலங்களில்தான் அமைக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:-** நிலம் கையகப்படுத்துவது குறித்து உங்களுடைய கருத்து என்ன?

**அமர்த்தியா சென்:-** இதில் சில தவறுகள் நடைபெற்றன. இதை அரசு ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். இதை ஓரளவுக்கு மேற்குவங்க அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

**கேள்வி:** - நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அரசு வழங்கிய இழப்பீடு குறித்து?

**அமர்த்தியா சென்:-** சந்தையில் கிடைக்கும் விலையைவிட அதிக அளவிலான தொகையை அரசு கொடுத்தது. அந்தக் கோணத்தில் பார்த்தால் அரசு சரியாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அரசு செய்த மிகப் பெரிய தவறு எது என்று யோசித்தால், நடைமுறைக்கு தக்கப்படி யோசிக்காமல் இழப்பீட்டை முடிவு செய்ததுதான். வேளாண் நிலங்களின் மதிப்பீட்டில் எடுத்துக் கொண்டால் வழங்கப்பட்ட இழப்பீடு நல்ல தொகைதான். ஆனால், தொழிற்சாலைக்கான நிலம் என மதிப்பீடு செய்தால் அரசு வழங்கிய தொகை மிகச் சொற்பமானது. சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக நாம் மாறும்போது, தொழிற்சாலைகளுக்கான நிலத்தின் மதிப்பீட்டையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இழப்பீடு வழங்க வேண்டும். இந்த

விஷயத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் அரசு செய்தது தவறு என்று கருதுகிறேன். இது ஒரு நேர்மையான தவறு. அதை எதிர்காலத்தில் சரி செய்து விட முடியும்.

**கேள்வி:-** உங்களைப் பொறுத்தவரை வேறு என்னென்ன பிரச்சினைகள் இருப்பதாகக் கருதுகிறீர்கள்?

**அமர்த்தியா சென்:-** பிரச்சினை எதுவானாலும் நாம் இப்போது தீர்ப்பு கூற முடியாது. ஒரு சுதந்திர நாட்டில் மக்கள் எங்கே வேண்டுமானாலும் முறைப்படி போகலாம். எங்கே வேண்டுமானாலும் வரலாம். இதை அரசாங்கமோ எதிர்க்கட்சிகளோ கட்டுப்படுத்த முடியாது. ஆனால், மேற்கு வங்கம் தொழில் மயமாவதைத் தடுப்பவர்கள் மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டும்.

ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வேளாண்மையில் வளம் கொழித்தாலும், அங்கெல்லாம் மிகச் சிறிய அளவிலான மக்களே வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலான மக்கள் தொழில் துறையில் நுழைந்து விட்டனர். தொழில் துறை தான் வசதியாக இருக்கிறது. எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் வேலை அளிக்கும்.

வேளாண்மையை மக்கள் கை விட்டதன் காரணமாக ஒட்டுமொத்த உற்பத்தி வீழ்ச்சி அடைவதில்லை. அதற்குப் பதிலாக, தனி நபர் வருமானம் உயர்கிறது. தொழில் துறை, வேளாண்மை, பொருளாதாரம் ஆகியவை வளர வேண்டுமானால் தொழில் மயமாக்குதல் வேண்டும். அரசியல் மூலமாக தொழிலதிபர்களுக்கு நெருக்கடியை உருவாக்குபவர்களும், அவர்கள் நிலங்களை வாங்குவதாகத் தடுப்பவர்களும் மக்களின் நலன்களை உதாசீனப்படுத்துகிறார்கள். உலகத்திலேயே செல்வம் கொழிக்கும் பகுதிகளில் ஒன்று என்ற பெயரை கொல்கத்தா மீட்டெடுக்க வேண்டுமானால் தொழில் மயமாதல் நடந்துதான் ஆக வேண்டும். தொழில்களைத் தொடங்க வேளாண்

நிலங்களை கொடுக்க மறுத்தால் அது மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தும்."

உடன்பிறப்பே, பொருளாதார மேதையான திரு. அமர்தியா சென் அவர்கள், மேற்கு வங்கத்திலே தொழிற்சாலை தொடங்குவது பற்றி தெரிவித்த கருத்துகள் தமிழகத்திற்கும் பல விதங்களிலே பொருந்தும் என்பதால்தான் இந்தக் கருத்துகளை நான் தொகுத்து தந்துள்ளேன்.

தென் மாநிலங்கள் முன்னேற வேண்டும், அந்தப் பகுதிகளிலே உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திட வேண்டும், பொருளாதாரத்திலே அங்குள்ளவர்கள் செழிப்படைய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுகின்ற அரசைப் பற்றியும், அரசு செய்கின்ற நல்ல காரியங்களுக்கு குந்தகம் விளைவிக்க எண்ணுவோரைப் பற்றியும், அரசு எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முயலுகிறது என்பதைப் பற்றியும் அந்தப் பகுதியிலே உள்ள மக்களே சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வரட்டும். அதே நேரத்தில் அரசின் சார்பில் எந்தக் காரியத்தைத் தொடங்க நினைத்தாலும், அதற்கு ஏதாவது குறை கூறித் திட்டங்களைத் தாமதம் செய்விக்க முயல்வோர் யார் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளட்டும்.

அன்புள்ள,

**மு.க.**

10-8-2007

# 3280. காலம் நெருக்குகிறது!

**உடன்பிறப்பே,**

இன்றைக்குச் சாத்தான்குளம் பகுதியில் டாட்டாவின் டைடானியம் தொழிற்சாலை என்றதும், ஏ, அப்பா! எத்தனை கட்சிகளின் குழுக்கள் - எத்தனை நெடிய பயணங்கள் - எத்தனை கொடிய விமர்சனங்கள் - எத்தனை எத்தனை மாற்று யோசனைகள் - மக்கள் கண்ணீரில் மாளிகை அமைக்காதீர் என்று எவ்வளவு அருமையான மாணிக்க வாசகங்கள் -

எங்களூர் திருக்குவளைக்கு மிக அருகில் உள்ள எட்டுகுடி முருகன் ஆலயத்துக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான காவடிகள் வருகிற மகத்தான திருவிழா நடைபெறுவது கண்டு சிறுவனாக இருந்த நான் ரசித்திருக்கிறேன்.

எட்டுகுடியைச் சுற்றியுள்ள எல்லா கிராமங்கள், நகரங்களிலுமிருந்தும் "வேண்டுதல்" செய்து கொண்ட பக்தர்கள் காவடிகள் எடுத்து வரும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சிறப்புக் காவடிகள் என்ற பெயரால் திருக்குவளையிலிருந்து சில கல் தொலைவில் உள்ள திருப்பூண்டி பகுதியிலிருந்து ஆண்டு தோறும் ஒரு காவடிக் குழு வரும். அந்தக் குழுவுக்கு முன்பகுதியில் சில பேர் கோலாட்டம் அடித்துப் பாடிக்கொண்டு வருவர்! காவடி வருவதோ கோயிலுக்கு! முருகன் சன்னதிக்கு! ஆனால், கோலாட்டம் அடித்துக் கொண்டு வருபவர்கள் பாடுகிற பாட்டோ பெரியாரைப் பற்றியதாக இருக்கும்.

"ஈரேழுலகம் புகழுகின்ற எட்டுகுடி முருகா!" என்ற பக்தி வரிகளைப் பாடியவாறு கோலாட்டம் அடித்து ஆடுவார்கள். காரப் பிடாகை பக்கிரிசாமி என்பவர் தலைமையில் வரும் அந்தக் காவடிக் கோஷ்டியினர் - கடவுள் பற்றியும் பாடிக் கொண்டு, "ஈரோடு தந்த வள்ளல் ஈ.வெ.ரா. வாழ்க! வாழ்க!" என்று பின்னர் கோலாட்டம்

அடித்து முழக்கும்போது, அந்தக் கிராமத்து இளைஞர்களாகிய எங்களை அந்த ஆட்டமும், பாட்டமும் கிறுகிறுக்க வைத்து விடும்.

இப்படிப் பல ஊர்களில் இருந்து காவடிகள் வந்து, திருக்குவளை குளத்தில் நீராடி விட்டு இறுதியாக எட்டுகுடி செல்லும். காலை முதல் பல ஊர்க் காவடிகள் வந்து போனாலும், இன்னும் நாகையிலிருந்து "வேணு காவடி" வரவில்லையே என்று நாங்கள் வழி மேல் விழி வைத்து காத்திருப்போம். கடைசியாக மாலை 6 மணிக்கு அந்த வேணு காவடி வரும். அப்போதிருந்த நாகை ரயில்வே தொழிலாளர்கள் சார்பில், வேணு நாயக்கர் எடுத்து வரும் காவடிதான், வேணுக்காவடி எனப்படுவதாகும்.

இப்படிக் காவடி கோஷ்டிகள் ஒவ்வொன்றாக வருவதைப் பார்த்துப் பார்த்து ரசித்த அதே உணர்வுடன், இன்றைக்கு சாத்தான்குளத்து மக்கள் தி.மு.க. உள்ளிட்ட எல்லா கட்சிகளும் அவர்களைச் சந்திக்கச் சாத்தான்குளத்துக்கு வந்து வந்து போவதைப் பார்த்து, "ஓ! இது இன்னைக்கு புதுக் காவடியா? இது என்ன சொல்லப் போவுது" என்று காவடியைக் கண்கொட்டாமல் பார்த்து, காதுகளை வளைத்துக் கொண்டு கவனிக்கிறார்கள்.

ஆனால், அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு சந்தேகம்! இதே டைடானியம் தொழிற்சாலையை, இதே பகுதியில் அமைத்திட - ஜெயலலிதா ஆட்சியில் இதே "டாட்டா"வுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதே! அப்போது எந்தக் கட்சியும் இங்கே வந்து இதுமாதிரி முகாம் அடித்து, முழக்கம் செய்யவில்லையே - இப்போது மட்டும் தி.மு.க. ஆட்சி என்றதும், இத்தனை கட்சிகள் இங்கே வந்து போர் முழக்கம் செய்கின்றனவே! என்ன காரணம்? என்று புரியாமல் சில கட்சிகள் மட்டுமல்ல, சாத்தான்குளம் பகுதி மக்களும் விழிக்கிறார்கள்.

இதிலே இன்னும் வேடிக்கை என்னவென்றால், டாட்டாவுடன் ஏற்கெனவே ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்தத் தொழிற்சாலை வருவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்தவர்களேகூட, இப்போது அங்கே அந்தத் தொழிற்சாலை வருவது பற்றி அங்கே சென்று கருத்துக் கேட்பு நடத்துவோம் என்று சென்றிருக்கிறார்கள்.

வன்முறையைத் தூண்டி விடும் பேச்சுக்கள் - "வரட்டும் பார்க்கலாம்" என்று தோளைத் தட்டும் போர் முழக்கங்கள் - தி.மு.க. ஒரு திட்டத்தை அறிவித்து அதனைச் செயல்படுத்த

முனைந்தாலே - இப்படிச் சில கட்சிகள் ( தோழமைக் கட்சிகள் உட்பட ) அறைகூவல் விடுத்து அரசை மிரட்டத் தொடங்குகின்றன.

16 ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையை அடுத்த சோளிங்கநல்லூரில் வீட்டு வசதி வாரியம் எடுத்துள்ள நிலத்தை, இப்போது திருப்பிக் கொடுக்கச் சொல்லும் ஒரு போராட்டத்தை அறிவித்து, அதாவது பல ஆண்டுகளுக்கு முன்பே அந்த இடத்தை வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்து, அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டவர்களே மீண்டும் அந்த இடத்தைத் தங்களிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு கோரிக்கை, அதற்கு ஆதரவாகப் போராட்டம் என்று கூறி, "சாவியைப் பிடுங்குங்கள் - பூட்டை உடையுங்கள்" என்று ஒரு தலைவர் பகிரங்கமாகச் சொல்லி, அது பத்திரிகையிலும் வெளிவருகிறது என்றால், என் செய்வது - தமிழகத்தின் அமைதி கருதி தலைகுனிந்து கொண்டுதான் இருக்க வேண்டியுள்ளது. சில அரசியல் கட்சிகள் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக எதையும் பேசலாம், எத்தகைய அராஜகப் போராட்டத்தையும் நடத்தலாம் என்று நிலைமை வளர்ந்துவிட்ட சூழலில்,

வன்முறையற்ற - அமைதி - நட்புறவு - தோழமை ஆகிய உணர்வுகளுக்கு நாம் மதிப்பு கொடுப்பதாலேயே,

நாட்டைக் காடாக்கும் நாகரிகமற்ற முறைகளுக்குக் கைலாகு கொடுப்பவர்கள் என்ற குற்றத்திற்கு நாமும் ஆளாகி விடுவதா?

இதனை யோசித்து முடிவெடுக்கும் காலம் நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறது!

அன்புள்ள,

**மு.க.**

15-8-2007

# 3281. போராட்டமா? பொம்மலாட்டமா?

**உடன்பிறப்பே,**

"இப்படியிருக்க வேண்டும் எதிர்க்கட்சி" யென்று பாராட்டுகிற அளவுக்கு ஒரு கட்சி, மக்களின் மதிப்பைப் பெற வேண்டுமேயல்லாமல் - "இப்படியும் ஒரு எதிர்க்கட்சியா? எல்லா வற்றையும் எதிர்ப்பேன்" என்று ஆளுங்கட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று அறிவிப்பதும் - அப்படி எதுவும் போராட்டத்துக்கான காரணம் கிடைக்காவிட்டால், அந்த எதிர்க் கட்சி, ஆளுங்கட்சியாக இருந்தபோது ஏற்க மறுத்த கோரிக்கைகளையே முன்வைத்து, அதை நிறைவேற்றப் போராடுவேன் என்பதும் சிரிக்கத்தக்க நிகழ்வுகளாக மாறிவிட்டிருக்கும் இந்தக் காலத்தில் - அ.தி.மு.க.வும், அந்தக் கட்சி அறிவிக்கும் போராட்டங்களும் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை.

திரும்பிய பக்கமெல்லாம், தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தி.மு.க. ஆட்சியினர் நிறைவேற்றி வருவதைக் கண்டு வயிற்றெரிச்சல் கொண்டு, "இனி இந்த ஆட்சிக்கு எதிரான எந்தக் கருத்தைக் கூறி, மக்களைத் திசை திருப்ப முடியும் என்று தெரியாமல் விழிக்கின்றனர். திட்டமிட்டோ, திட்டமிடாமலோ, திடீரென்றோ - தினம் ஒரு போராட்டம் அல்லது ஆர்ப்பாட்டம் என்று அறிவிக்கப்படுகிறது, அ.தி.மு.க. கட்சியினால்!

சேது சமுத்திரத் திட்டத்துக்காக அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த காலத்திலேயே எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது. அண்ணா மறைந்த பிறகு நடந்த அத்தனை தேர்தல்களிலும் - மாநாட்டுத் தீர்மானங்களிலும் - சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தி, வற்புறுத்தி அ.தி.மு.க.வும் குரல் எழுப்பத் தவறவில்லை.

ஆனால், அந்தக் குரல் இப்போது கம்மி விட்டது - சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராகவே ஜெயலலிதா போர்க்

குரல் எழுப்பி வருகிறார். அவரது கட்சியினர் சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக - இராமர் பாலத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டு பாடுகிறார்கள். சேது திட்டம் வேண்டுமென்று தங்கள் தேர்தல் அறிக்கையிலே கூறியவர்கள், இப்போது அதற்கு எதிராகப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள், போராடுவோம் என்கிறார்கள்.

இப்படி ஒன்றா இரண்டா? அம்மையார் அன்றாடம் அறிவித்திடும் போராட்டமெல்லாம், அ.தி.மு.க. ஆட்சியிலேயே அளித்த வாக்குறுதிகளை ஏற்க மறுத்ததை அல்லது கைவிட்டதை நினைவூட்டும் போராட்டங்கள்தான்!

இதோ இப்போது அவர் அறிவித்து நடத்தி வருகிற போராட்டங்கள் பற்றி - நமது கழக அமைச்சர்கள் அளித்துள்ள விளக்கங்களைப் படித்தாலே, அம்மையாரின் போர் அறிவிப்புகள் வெறும் "ஸ்டண்டு"கள் என்பதும், "பொய்யானவை", "போலியானவை" என்பதும் - மக்களை ஏமாற்ற நடைபெறும் "பொம்மலாட்டங்கள்" என்பதும் நன்றாகவே புரியும்!

1. டைட்டானியம் தொழிற்சாலை தூத்துக்குடி மாவட்டத்திலே வருவதற்கான முயற்சிகளில் கழக அரசு ஈடுபட்டவுடன், முதலமைச்சர் மீது வழக்கு தொடரப்போவதாகவும், சம்மன் அனுப்பப்படும் என்றும் ஜெயலலிதா போராட்ட அறிவிப்பு செய்தார். உடனடியாக மின் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில், இதே டைட்டானியம் தொழிற்சாலை குறித்து ஜெயலலிதா செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்தும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது குறித்தும் விவரமாக பதில் கூறி, ஜெயலலிதாவின் சம்மனைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும், அதைச் சந்திக்க ஜெயலலிதா தயாரா என்றும் பதில் கொடுத்த பிறகு, வழக்கு தொடரப் போவதாகக் கூறிய ஜெயலலிதாவிடமிருந்து பதிலே இல்லை.

2. இதே பிரச்சினை குறித்து நான் விடுத்த அறிக்கையிலும், ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும், அன்றைய தொழிற் துறை அமைச்சர் மேற்கொண்ட

நடவடிக்கை குறித்தும், பக்கம் பக்கமாக ஆதாரத்தோடு விளக்கங்களை அளித்து "பொய்யர்தம் வழக்கிற்கு அஞ்சோம்" என்று பதில் கொடுத்த பிறகு, அந்த வழக்கினை அப்படியே மறந்துவிட்டார் ஜெயலலிதா.

3. கோவை மாவட்டம், கவுண்டம்பாளையத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் தி.மு. கழக அரசு கிடப்பிலே போட்டுவிட்டதாகக் கூறி, ஜெயலலிதா, ஒரு ஆர்ப்பாட்டப் போரினை 22-8-2007 அன்று நடத்தப்போவதாக அறிவித்தார். அதற்கு உடனடியாக உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் விடுத்த பதில் அறிக்கையில், அ.தி.மு.க. ஆட்சியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றத் தகுதியில்லாத நபருக்கு அனுமதி கொடுக்கப்பட்டதால், உலக வங்கியே அதை நிராகரித்து விட்டதால் தி.மு.கழக அரசு, அதனை கைவிட்டு விடாமல் தொடர் நடவடிக்கை எடுத்து திட்டத்தை நிறைவேற்றிட முற்பட்டுள்ளதாகவும், அதைப் புரிந்து கொள்ளாமல் ஜெயலலிதா ஆர்ப்பாட்டம் அறிவித்திருப்பதாகவும் தெரிவித்த பிறகு, ஜெயலலிதா எதுவுமே அதைப்பற்றி கூறாமல் விட்டு விட்டார்.

4. கரும்பு விவசாயிகள் பிரச்சினை குறித்து ஜெயலலிதா, ஒரு நீண்ட அறிக்கை விடுத்து அதற்காகப் போராட்டம் நடத்தப்போவதாக ஒரு நாள் அறிவித்தார். உடனடியாக அந்தத் துறையின் அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம், ஜெயலலிதா ஆட்சியிலே கரும்பு விவசாயிகளுக்குச் செய்யப்பட்ட அநியாயங்கள் குறித்தும், துரோகங்கள் குறித்தும் அடுக்கடுக்கான விவரங்களை யெல்லாம் தெரிவித்த பிறகு, ஜெயலலிதா அந்தப் பிரச்சினையை "அம்போ" என்று அப்படியே விட்டு விட்டார்.

5. விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள் வழங்கப்படவில்லை என்றும், அதற்காக

நாகப்பட்டினத்திலே 14-8-2007 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் ஜெயலலிதா ஓர் அறிக்கையை விடுத்தார். கூட்டுறவுத் துறை அமைச்சர் தம்பி கோ.சி. மணி அவர்கள், ஜெயலலிதா ஆட்சியிலே பயிர்க் கடன்கள் வழங்கப்பட்ட லட்சணத்தையும் (?), தற்போது தி.மு.க. ஆட்சியிலே வழங்கப்பட்டுவரும் அடுக்கடுக்கான சலுகைகளையும் தொகுத்துப் பதில் அளித்தவுடன், ஜெயலலிதா, அந்தப் பிரச்சினை பற்றி வாயை மூடிக்கொண்டு விட்டார்.

6. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் விளையாட்டுப் பயிற்சி மையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கப்பட்டதாகவும், தற்போது அந்தத் திட்டத்தை கிடப்பிலே போட்டுவிட்டதாகவும் கூறி, அதற்காகப் போராட்டம் நடத்தப் போவதாகவும் ஓர் அறிவிப்பினை ஜெயலலிதா செய்தார். அதற்கு நானும், அந்தத் துறையின் அமைச்சர் தம்பி டி.பி.எம். மொய்தீன்கானும் விரிவான, விளக்கமான பதிலை அளித்தோம். அதன் பின்னர், அந்தப் பிரச்சினைக்கு எந்தவிதமான பதிலும் சொல்லாமல் கட்சியினரை விட்டு போராட்டம் நடத்தச் செய்தார் ஜெயலலிதா.

7. தேயிலைக்கு சரியான விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை குறித்து, தொடர்ந்து மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பில் கடிதங்கள் எழுதப்பட்டு வருவதைப் பற்றி தெரியாமல், நீலகிரி மாவட்டத்தில் 5-8-2007 அன்று போராட்டம் என்று அறிவித்தார்.

8. விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை நகரில் புகைவண்டி நிலையத்தை மீண்டும் இயக்கக் கோரி மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து 9-8-2007 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

9. இனாம்-கரூர் நகராட்சியில் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறி,

13-8-2007 அன்று உண்ணாவிரதம் நடத்தப்போவதாக அறிவிப்பு செய்தார்.

10. வாணியம்பாடி தொகுதியில் ஆம்பூர் நகராட்சியில் குடிநீர் பிரச்சினைக்காக 16-8-2007 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றார்.

11. திருவொற்றியூர் நகர மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வில்லை என்று கூறி, 20-8-2007 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் செய்யப்படும் என்று ஒரு அறிக்கை விடுத்தார்.

12. அதே நாளில் திண்டுக்கல் நகரில் குடிநீர் பிரச்சினை இருப்பதாகக் கூறி, கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் ஓர் அறிக்கை விடுத்தார்.

13. அதே நாளில் இந்தியத் தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்றும் ஓர் அறிக்கை விடுத்தார்.

14. நிலங்களுக்கான வழிகாட்டி மதிப்பு உயர்த்தப்பட்டு விட்டதாகக் கூறி, 24-8-2007 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிப்பு செய்தார். ஆனால், அவரே அவரது அறிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழிகாட்டி மதிப்பு திருத்தப் படவேண்டும் என்ற நடைமுறை இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்றும் சொல்லிக் கொண்டார்.

15. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இருந்த சலுகை ஒன்று ரத்து செய்யப்பட்டு விட்டதாகவும், அதற்காக 23-8-2007 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் ஒரு அறிக்கை விடுத்தவுடன், சட்ட அமைச்சரான தம்பி துரைமுருகன் அந்தச் சலுகை ரத்து செய்யப்படவில்லை எனத் தெரிவித்து ஓர் பதில் அறிக்கை விட முன்வந்தபோது, மாணவர்களே அந்த உண்மையை அறிவார்கள்

என்று கூறி பதில் அறிக்கை விடத் தேவையில்லை என்று தடுத்து விட்டேன்.

உடன்பிறப்பே,

இவ்வாறு நாள் தவறினாலும் அறிக்கை வெளியிடத் தவறாமல், ஏதாவது ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டு போராட்ட அறிக்கைகளை ஜெயலலிதா விடுவதைப் பார்த்து, அவர்கள் கட்சியினரே இந்த அம்மையாருக்கு வேறு வேலை இல்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிலைமை வந்து விட்டது. தன் கட்சியினர் சோர்வுற்று விடுவார்களோ என்பதற்காகவும், தன்னைப் பத்திரிகைகள் மறந்துவிடுமோ என்பதற்காகவும் ஜெயலலிதா கடைப்பிடித்து வரும் தந்திரங்கள் தான் இந்த அறிக்கைகளே தவிர, வேறொன்றுமில்லை. நம்மைப் பொறுத்தவரையில், அவர்களின் இந்த அறிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டு, நம்முடைய ஆட்சியின் சாதனைகளை மீண்டும் மக்களிடம் நினைவுபடுத்திட இதனை ஒரு வாய்ப்பாகக் கருதிக் கொள்ளலாம். கழகத்தின் அளப்பரிய சாதனைகளை அன்றாடம் அனுபவித்து வரும் பொதுமக்களுக்கு, எது போராட்டம், எது பொம்மலாட்டம் என்பது நன்றாகவே தெரியும் என்பதால், அ.தி.மு.க. வினர் நடத்தும் பொம்மலாட்டங்களை நம்பி ஏமாற மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

போராட்டம் என்றாலே புதர் தேடி ஒளிபவர்கள், இன்று இப்படி "புஸ்வாணம்" விடுகிறார்களே! போராட்டத்தையே பொழுதுபோக்கெனக் கருதும் புலிப் போத்துகளாகிய நாம் இந்தக் கோமாளிக் கூத்துகளை வேடிக்கை பார்ப்பதா என, என் உடன்பிறப்பாம் நீ என்னைக் கேட்பது புரிகிறது - பொறுத்திரு! போருக்கான ஓலை வரும் - காத்திரு! களம் காண கட்டளை வரும் -அப்போது வரத்தான் போகிறாய் - பதில் மொழி தரத்தான் போகிறாய்!

அன்புள்ள,

**மு.க.**

24-8-2007

# 3282. பூத்துக் குலுங்கும்; பார்த்து மகிழ்வோம்?

**உடன்பிறப்பே,**

தமிழர்களாகப் பிறந்து, தமிழர்களாகவே வாழுகின்ற ஒவ்வொருவரும் தாங்கொணா மகிழ்ச்சியில் திளைத்திடும் தேனினுமினிய தீர்ப்பு ஒன்றை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கி யுள்ளது.

தமிழ், கட்டாய பாடம் என்ற சட்டத்தையும் அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றோர் யார் எவர் என்பதையும், தமிழக அரசின் சார்பில் தமிழ் கட்டாய பாடம் சட்டத்திற்காக தலைமை வழக்கறிஞர் திரு.விடுதலை அவர்களும் சிறப்பு வழக்கறிஞர் திரு.சேகர் அவர்களும் எடுத்து வைத்த வாதங்களையும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பாராட்டி மகிழாதவர் இருக்க முடியாது. எனவே, தி.மு.க. ஆட்சியில் இந்தச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது முதல் இதுவரையில் நடைபெற்ற எதிர் நடவடிக்கைகளையும், அவற்றை எதிர்கொண்ட நடவடிக்கை களையும் - இன்று கிடைத்துள்ள ‘‘நல்ல தீர்ப்பு’’ பற்றிய விவரங்களையும்; அவற்றுக்குக் கிடைத்துள்ள பாராட்டுகளையும், இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழை, பயிற்று மொழி ஆக்கிடவே சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற பரிந்துரைகளையும் ஏடுகளில் வந்தவாறு அப்படியே வழங்கிட விரும்புகிறேன்.

அந்தச் செய்தித் தொகுப்பும் - செந்தேன் அனையத் தீர்ப்பும் விபரமாக இதோ:-

‘‘பள்ளிக்கூடங்களில் தமிழ் பாடத்தை கட்டாயமாக்கும் சட்டத்தை, தமிழக அரசு கடந்த ஆண்டு கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தின்படி 2006 - 2007 ஆம் கல்வி ஆண்டிலிருந்து 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிப்படியாக பள்ளிக்கூடங் களில் தமிழ் ஒரு பாடமாக கட்டாயமாக்கப் டும். இந்த சட்டத்தை

அமல்படுத்தவும் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

இந்தச் சட்டத்தை எதிர்த்து, கன்னியாகுமரி மாவட்ட நாயர் சர்வீஸ் சொசைட்டி மற்றும் டிராபிக் ராமசாமி சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அவர்கள் தாக்கல் செய்த மனுக்களில் கூறப்பட்டு இருப்பதாவது :-

‘‘தமிழ்நாட்டிலுள்ள மாநில அரசு மற்றும் உள்ளாட்சித் துறைக்கு சொந்தமான தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி ஆகியவற்றிலும் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடம், ஆங்கிலோ இந்தியன் பள்ளிக் கூடம் முதலான அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழை ஒரு பாடமாக கட்டாயமாக கற்றுத் தரப்படும் என்று தமிழக அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது.

இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக, 17.6.2006 அன்று எல்லா மாவட்டத் தலைமை கல்வி அதிகாரிகள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கும் அரசு சுற்றறிக்கை அனுப்பி யுள்ளது.

தமிழக அரசு இந்தச் சட்டத்தை உள்நோக்கத்துடன் கொண்டு வந்துள்ளது. இச்சட்டம் மொழியால் சிறுபான்மையினரின் உரிமைக்கு எதிராக உள்ளது. அரசியல் சட்டம் 29 மற்றும் 30 வது பிரிவுக்கு எதிராக உள்ளது.

சிறுபான்மையினர் தங்கள் தாய் மொழியை கற்கும் உரிமையை தடுக்கும் விதத்தில் உள்ளது. சிறுபான்மையினர் பள்ளிகளின் நிர்வாகத்தில் தலையிடும் வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்” இவ்வாறு அந்த மனுக்களில் கூறப்பட் டுள்ளது.

இந்த மனுக்களை, தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி. டி.முருகேசன் ஆகியோர் தள்ளுபடி செய்து நேற்று தீர்ப்பு வழங்கி னார்கள். தீர்ப்பில், நீதிபதிகள் கூறியிருப்பதாவது :-

‘‘இந்தச் சட்டமானது அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைக்கு எதிராக உள்ளது என்று கூற முடியாது. 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிப்படியாக தமிழ் பாடத்தை கட்டாயப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. 1 ஆம் வகுப்பில் ஒரு மாணவருக்கு தமிழ் பாடத்தை கற்றுத் தரும் போது அதனால்

அந்த மாணவருக்கு அதிக சுமையாக இருக்காது. மிகவும் எளிமையாக இருக்கும். குழந்தைகளின் ஆளுமைத் திறனை குழந்தை பருவத்திலிருந்தே வளர்க்கும் கடமை அரசுக்கு உள்ளது. அதன் அடிப்படையில் அரசு கொள்கை அளவில் முடிவெடுத்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இந்தச் சட்டத்தை நியாயமானதல்ல என்று கூற முடியாது.

குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டுதான் இந்தச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அன்றாட தினசரி நடவடிக்கைகளில் தமிழ் தான் முக்கியமாக விளங்கி வருகிறது. நடவடிக்கைகள் சுமுகமாக நடப்பதற்கும், அலுவல் தொடர்பு எல்லாமே தமிழ் மொழியில்தான் உள்ளது.

ஆகவே, தமிழ் மொழியை புரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு தான் தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. கல்வி குறித்து சட்டசபைதான் முடிவு எடுக்க வேண்டும். சட்டசபை மூலம் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தைத் தவறு என்று கூறி நீதிமன்றம் குறுக்கிட முடியாது. அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருந்தால் மட்டுமே நீதிமன்றம் தலையிட முடியும்.

சிறுபான்மையினர், தங்கள் தாய் மொழியை பயிற்று மொழியாக எடுக்க தடை ஏதும் இல்லை. இந்த உரிமையில் அரசும் தலையிடவில்லை. தமிழை ஒரு பாடமாக கட்டாயம் படிக்க வேண்டுமென்பது சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தன்மையிலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

ஆகவே, தமிழை ஒரு பாடமாக கட்டாயமாக படிக்க வேண்டுமென்றும், இதைப் படிப்படியாக நிறைவேற்றும் வகையிலும் தமிழக அரசு கொண்டு வந்த சட்டம், மொழியால் சிறுபான்மையினருக்கிடையே பாரபட்சத்தை ஏற்படுத்தும் வகையில் இல்லை. ஆகவே தமிழக அரசு கொண்டு வந்த இந்தச் சட்டம் செல்லும்.”

இவ்வாறு தீர்ப்பில் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

உடன்பிறப்பே, இந்தத் தீர்ப்பையொட்டி வெளி வந்துள்ள பாராட்டுரைகளைப் பற்றிச் சொன்னேன்.

பாராட்டுடன் பரிந்துரையையும் வலியுறுத்தி

யுள்ளார்; பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள். அவரது அந்த அறிக்கை வருமாறு:-

"தமிழ் கட்டாயப் பாடச் சட்டம் செல்லும் என்று நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. எனவே இதைத் தொடர்ந்து தமிழ் பயிற்சி மொழிச் சட்டத்தையும் உடனடியாகக் கொண்டு வந்து அமல்படுத்த வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ச.இராமதாசு வலியுறுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

"1 முதல் 10ஆம் வகுப்பு வரையில் மாணவர்களுக்குத் தமிழ் மொழிப் பாடம் கட்டாயம் என்ற தமிழக அரசின் சட்டம் செல்லும் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆறரைக் கோடித் தமிழர்களும் இந்தத் தீர்ப்பையும், சட்டத்தைக் கொண்டு வந்த தமிழக அரசையும் வரவேற்றுப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அரசியல் துணிவும், ஆர்வமும் இருந்தால், எத்தகைய கொள்கை முடிவையும், மேற்கொண்டு அதைச் செயல்படுத்தலாம் என்பதற்கு இந்தச் சட்டமும் அது செல்லும் என்று அறிவித்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பும் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. தமிழ் வெறும் பாட மொழியாக ஆவதுடன் நின்று விடக் கூடாது. பயிற்சி மொழியாகவும் தமிழ் மாற வேண்டும். அதற்கு இந்தச் சட்டமும், அது செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ள தீர்ப்பும் படிக்கற்களாய் அமைய வேண்டும்.

கருநாடக மாநிலத்தில் 1994ஆம் ஆண்டிற்குப் பிறகு செயல்படத் தொடங்கிய அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரையில், கன்னடமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அம்மாநில அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதைச் செயல்படுத்துவதற்கு மிகக் கடுமையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. அதைப் பின்பற்றித் தமிழகத்திலும் முதல் கட்டமாக 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலாவது தமிழே பயிற்று மொழி என்ற திட்டத்தைத் தமிழக அரசு அறிவிக்க வேண்டும். இப்போது கொண்டுவந்துள்ள தமிழ் மொழிப்பாடச் சட்டம் எப்படிப் படிப்படியாக நிறைவேற்றப் படுகிறதோ அதைப் போலத் தமிழ் பயிற்சி மொழிச் சட்டத்தையும்

படிப்படியாக நிறைவேற்றலாம். அரசின் கொள்கை முடிவுகளில் தலையிட விரும்பவில்லை என்று உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பைச் சாதகமாக எடுத்துக் கொண்டு தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கொள்கை முடிவினை தமிழக அரசு உடனடியாக எடுக்க வேண்டும். அதனை வரும் கல்வி ஆண்டிலிருந்து (2008 - 2009) செயல்படுத்துவதற்கும் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேணடும்."

"தமிழ்ப் பயிற்று மொழிச் சட்டம் கொண்டு வரப்படும்" என்று அன்றைய முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு; சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்றவர்களால் வலியுறுத்தப்பட்ட அந்தப் பயிற்று மொழி சட்டத்தை; அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பையேற்ற நான்; பேரவையில் நிறைவேற்றிக் கொண்டு வந்ததும் - அதற்கு வலுவான எதிர்ப்பு மாணவர்களி டையே கிளம்பியதும் - தமிழ்ச் சான்றோர் ஆன்றோர் பலரின் ஆலோசனைக்கிணங்க தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய இரு மொழி வழியாகவும் பயிற்றுவிக்கலாம் என்று மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ் மொழியிலே பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையும் வழங்கப்பட்டது. இன்றளவும் இது நடைமுறையில் உள்ளது.

தற்காலிகமாக அவ்வாறு செய்யப்பட்ட போதிலும், அத்துடன் மாண்டு விட்டது அந்த எண்ணம் என்றில்லாமல் மீண்டும் "தமிழே பயிற்று மொழி" என்ற திட்டத்தை உயிர்ப்பித்திட, உணர்வுள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பும் காலம் நெருங்கிக் கொண்டு தானிருக்கிறது.

அந்த நற்காலம், பொற்காலத் தமிழகத்தில் அமையுமானால்; அந்தச் சட்டத்தையும், அதன் பின்னர் தி.மு.கழக ஆட்சியில் 1999ஆம் ஆண்டு கழக அரசு அறிமுகப்படுத்திய தமிழ்ப் பயிற்று மொழி ஆணையையும் நிறைவேற்றுவதோடு; அதனை நடைமுறைப்படுத்துகிற நிலையும் பூத்துக் குலுங்கத்தான் போகிறது! அதனையும் பார்த்து மகிழத்தான் போகிறோம்!

அன்புள்ள,

மு.க.

25.08.2007

# 3283. "குருகுல"த்தில் கோலாகல விழா?

**உடன்பிறப்பே,**

மத்திய அரசின் தகவல் தொடர்பு அமைச்சர், தம்பி ராஜா நேற்று அதிகாலை வீட்டுக்கு வந்தார். இப்படி வைகறைப் பொழுதிலேயே அவர் வீடு தேடி வரும் வழக்கமில்லையே; என்ன அவசரமோ, அவசியமோ, தெரியவில்லையே என்று யோசித்தவாறு - "விடுதலை" இதழ் பெரியார் பிறந்த நாள் மலருக்காக எழுதிக் கொண்டிருந்த நான்; எழுதுகோலை அப்படியே வைத்து விட்டு அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் பார்வையிலேயே என் கேள்வி இருந்தது.

"என்ன ராஜா? இந்த நேரத்தில்? ஏதாவது அவசரமா?" என்று கேட்டதாக உணர்ந்து கொண்டு, அவரும்; "ஆம் - அம்மாவுக்கு இருதய அறுவை சிகிச்சை! அப்போலாவில் சேர்த்துள்ளேன்"

"அம்மாவுக்கு வயது?"

"எண்பதுக்கு மேலாகிறது"

"இந்த வயதில் அறுவை சிகிச்சை தாங்குமா?"

"அம்மா, துணிச்சலாகச் சொல்லுகிறார்கள். அடிக்கடி இப்படி நெஞ்சு வலியுடன் துடிப்பதை விட; என்ன ஆனாலும் ஆகட்டும் - அறுவை சிகிச்சை செய்துகொண்டு இரண்டில் ஒரு முடிவுக்கு வந்துவிடலாம் என்று அவர்களே அறுவை சிகிச்சைக்கு ஆயத்தமாகி விட்டார்கள். வேறு வழியின்றி அப்போலாவில் சேர்த்து விட்டு வந்திருக்கிறேன்"

தம்பி ராஜாவின் இந்தப் பதிலைக் கேட்டு

என் மனத்திலும் பதற்றம் ஏற்பட்டது.

"வீட்டில் எல்லோரும் மிகவும் கவலைப்படுவார்களே; உன் முகம்கூட சரியாக இல்லையே ராஜா?"

"நான் ஓரளவு தைரியமாக சமாளித்துக் கொள்கிறேன். ஆனால் என் சகோதரர்கள்தான் அம்மாவை ஆபரேஷன் அறைக்கு டாக்டர்கள் அழைத்துப் போகும்போது அழுது கதறி விட்டார்கள். என்ன இருந்தாலும் எங்களைப் பெற்று வளர்த்து இந்த அளவுக்கு ஆளாக்கி விட்ட தாய் அல்லவா?"

இப்படிச் சொல்லிக் கொண்டே, விழிகளில் கொப்பளித்த நீரைத் துடைக்க விரல்களைப் பயன்படுத்திப் பார்த்து, முடியாமல் வீட்டு மாடியிலிருந்து கீழே இறங்கி வேகமாகப் போய் விட்டார். நானும் என் கன்னங்களில் வழிந்த கண்ணீரை நிறுத்த வழியின்றித் தடுமாறி விட்டேன் - "என்ன இருந்தாலும் பெற்று வளர்த்து நம்மை ஆளாக்கிய தாயல்லவா?" - அந்தத் தாய் என்ற சொல்; உடன்பிறப்பே, தாய் என்ற ஒரு ஜீவனுக்கு மட்டுமல்ல; தாயாக இருந்து நமக்கு அறிவூட்டிய தாய்க் கழகமாம் தந்தை

பெரியாரின் திராவிடர் கழகத்துக்கும் - அத்தாய் பெற்ற பிள்ளையாம் தி.மு. கழகத்துக்கும் பொருந்துகிறதல்லவா? ''நீர் இடித்து நீர் விலகாது'' என்ற பழமொழிக்குச் சான்றாக நின்ற - நிற்கின்ற - நிற்கப் போகின்ற இந்தத் திராவிடர் இயக்கத்தின் வரலாறு; தீரர்கள் நடேசனார், நாயர், தியாகராயருடன் விளைந்து வாடிவிடும் காளான் செடி அல்லவே! - களங்கள் பலவற்றில் பகை உணர்வுகளைப் பந்தாடி - வென்றும் - வீழ்ந்தும் - உயர்ந்தும் - தாழ்ந்தும் - இன்று உச்சி முட்டக் கொடி பறக்க கோட்டையிலே அமர்ந்து கோலோச்சும் திராவிட இயக்கத்தின் வரலாறு; தீப்பொறியாகக் காற்றில் பறந்து மறைந்து விட்டதல்ல; தீபமாக ஒளிவிட்டவாறு தென்னக மக்களின் நம்பிக்கை மிகுந்த சோதிச் சுடராக; விண்ணுக்கும் மண்ணுக்குமாக எழுந்து நிற்கும் பேரொளியாக விளங்குகிறதென்றால்; அதற்குக் காரணம்; ஒரு தாயிடம் உருக்கமுடன் அன்பு செலுத்தும் மகனைப் போல - இந்த இயக்கத்தின் மூத்த பிள்ளைகளாகிய அண்ணா, அழகிரிசாமி போன்றவர்களும் - இளைய பிள்ளைகளாகிய நாமும் காட்டிய பாசம், பரிவு, கொண்டிருந்த பந்தம், கொண்டிருக்கும் சொந்தம்; இவைகள் அல்லவா தலையாய காரணங்கள்!.....

"தன்னை வெல்வான் தரணியை வெல்வான்" என்று இந்தத் தம்பியை பாளையங்கோட்டை தனிமைச் சிறைச்சாலையில் தங்கத் தமையன் அண்ணா வாழ்த்தினார் என்றால்; உன்

உழைப்புத் தான் இந்த இயக்கத்துக்கு உயிர் என்று உத்தமப் பெரியார் உரைத்தார் என்றால் - உன் போன்ற உடன்பிறப்புகள் என்னுடன் கொண்டுள்ள உறவும்; உதவிடும் ஒத்துழைப்பும் - அல்லவா என் உதிரத்துடன் கலந்து எனக்கோர் புத்துணர்ச்சியை வழங்கி; இந்தப் புவியில் மேலும் பல வெற்றிகளைப் பெற்றிட ஆர்த்தெழும் அறப்போர் ஆயுதங்களாக அணிவகுத்திருக்கின்றன.

தம்பி ராஜா தன் தாயின் அறுவை

சிகிச்சையால் உணர்ச்சிவசப்பட்டார் - அதையும் என்னிடம் காட்டிக் கொண்டார். இந்த அண்ணன் தாங்க மாட்டேனேயென்று மறைத்துக் கொண்டு, வேகமாக மாடியிலிருந்து கீழே இறங்கி விட்டார்.

மனக் கலக்கத்தில் ஒரு மணல் துளியளவு கூட தலைவனுக்கு வருதல் கூடாது என்று என் தம்பிமார்கள் எண்ணிடுவார்களேயானால்;

அண்ணா போல் புன்னகை தவழும்
முகத்துடன்

அய்யா போல் நெஞ்சு நிமிர்த்திய நடையுடன்

வயதான இந்தக் காலத்திலும் வாலிப முறுக்கு

எனக்கும் வந்தே தீரும் தம்பீ!

என்று திடம் கொள்கிறேன் - திசையெட்டுமிருந்து தீ பரவினாலும் - நன்றி மறந்திடும் தீயோர் வலை நாள்தோறும் விரிக்கப்பட்டாலும் - கணைகள் ஆயிரமாயிரம் கடுகிப் பறந்து வரினும் கவலைப்படாது;

கருமமே கண்ணாக -

கழகமே பாசறையாக -

பெரியாரே துணையாக -

பேரறிஞர் அண்ணாவே என் உயிரின் இணையாக -

இருக்கும்போது; இந்த முப்பெரும் விழா - என் குருகுலமாம் - ஈரோடு நகரில் நடைபெறுகிறது;

அதில் நான் கலந்து கொண்டு கழகத் தீரர்களுக்கு விருது வழங்கும் வாய்ப்பு பெறுகிறேன் என்பதை நினைத்தால்;

இதனை இரட்டிப்பு மகிழ்ச்சி என்பதா?

இடையறாத மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கப் போகிறேன் என்பதா?

வாழ்க திராவிடம்

வெல்க திராவிட உணர்வு -

வாழ்க தமிழ்

வெல்க தமிழர்!

அன்புள்ள,

மு.க.

13-09-2007

# 3284. "சுந்தர காண்டம்" சொல்வது என்ன?

**உடன்பிறப்பே,**

நாள் தவறினாலும் மக்களுக்குச் செய்யும் நன்மை ஒரு நாளும் தவறுவதில்லை என்ற கடமை உணர்வுடன் நடைபெற்று வருகிற கழக ஆட்சி கண்டு காந்தாரி மனம் படைத்தோருக்குக் கண் எரிகிறது. பொறாமை பூகம்பம் அவர்தம் இதயத்தில் கிளம்பி வெடிக்கிறது!

ஆம்! அன்றொரு நாள், மலையாள தேசத்தில் மாவலி என்ற மன்னன் மக்கள் மனம் மகிழ ஆட்சி நடத்தி மாப்புகழ் பெற்று வருகிறான் என்ற போது, அவனை இன்னமும் ஆள விட்டாலோ - அல்லது வாழ விட்டாலோ - தங்களுக்கு ஆள்வதற்கான வாய்ப்பே இல்லாமற் போகக் கூடுமென்று கருதிய கெடுமதியாளர்கள் மகாவிஷ்ணுவை நாடிச் சென்று, அவரது சூழ்ச்சியால் அந்த மன்னனை வீழ்த்தினார்கள் என்பதே "ஓணம்" பண்டிகையின் கருத்துரு என்று இன்றளவும் அந்தப் பண்டிகைக்கான கதை கேரளத்தில் கூறப்படுகிறது.

அந்தக் கதையை தமிழகத்திலே வரலாறாகவே வரைந்து காட்டிட இன்றைக்கு நடைபெறுகிற முயற்சிகளையும், தீட்டப்படுகிற சூழ்ச்சிகளையும், நீயும், நானும் அறிந்தே இருக்கிறோம்.

அன்றாடம் பசி தீர்க்கும் அரிசியின் விலையை கிலோ இரண்டு ரூபாய் என வரையறுத்து - அத்தியாவசிய பொருட்களான எண்ணெய் வகையறா - பருப்பு, உளுந்து ஆகியவை நியாய விலையில் கிடைக்கச் செய்து - விவசாயிகளின் கடன் தொகை ஏழாயிரம் கோடி ரூபாயை 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு ரத்து செய்து - 1 லட்சத்து 16 ஆயிரத்து 508 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 லட்சத்து 33 ஆயிரத்து 688 ஏக்கர் இலவச நிலம் வழங்கி - ஏழை விவசாயக் குடும்பங்கள் 1 லட்சத்து 60 ஆயிரத்து 531க்கு, விவசாயத் தொழிலாளர் சமூகப்

பாதுகாப்பு நல உதவித் திட்டத்தின் கீழ் 69 கோடியே 29 லட்சத்து 11 ஆயிரத்து 719 ரூபாய் உதவித்தொகை வழங்கி - 17 லட்சத்து 92 ஆயிரத்து 831 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கி - 11 லட்சம் எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகளை ஏழைத் தாய்மார்களுக்கு இந்த ஆண்டிற்குள் வழங்கத் திட்டமிட்டு, இதுவரை 3 லட்சம் குடும்பங்களுக்கு கொடுத்து - 1 லட்சத்து 30 ஆயிரத்து 968 பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி - 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 71 லட்சம் குழந்தைகள், மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கி - 73 ஆயிரத்து 665 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 110 கோடியே 49 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதி தந்து - 4 லட்சத்து 72 ஆயிரத்து 20 கர்ப்பிணிப் பெண்களுக்கு 206 கோடியே 14 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் நிதி உதவி அளித்து - 1 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்திடக் கூடிய 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டிலான 11 புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு - 3 லட்சத்து 38 ஆயிரத்து 818 படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 55 கோடியே 51 லட்சத்து 87 ஆயிரத்து 700 ரூபாய் உதவித் தொகை வழங்கி - ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 797 இளைஞர்களுக்கு அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்புகளைத் தந்து - ஆயிரத்து 15 கோடி ரூபாய் செலவில் 5 ஆயிரத்து 74 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றி - 70 கோடி ரூபாய்ச் செலவில் 140 பேரூராட்சிகளில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் நிறைவேற்றிட முனைந்து - ஜெயலலிதா ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 5600 பேருந்துகள் மட்டுமே புதிதாக வாங்கப்பட்டதற்கு மாறாக, கடந்த 15 மாத தி.மு.க. ஆட்சியில் மட்டும் 5730 பேருந்துகள் வாங்கப்பட்டு - மக்களை மன நிறைவு கொள்ளச் செய்திருக்கின்ற ஆட்சி இது என்பதை மனத்தைக் கல்லாக்கிக் கொண்டவர்களாலும் மறுத்துக் கூற முடியாது, கூற மாட்டார்கள்.

இந்த ஆட்சியைத்தான் ஒழித்து விடவும் - அழித்து விடவும் - கேரளத்தில் நல்லாட்சிக்குக் கேடு நினைத்தோர், திட்டமிட்டு செயல்பட்டது போலவே - இங்கும் மாவலி மன்னனை வீழ்த்தியது போல, வீழ்த்துவதற்கு விஷ்ணுவைத் தேடுவதற்கு

மாறாக, விஷ்ணுவைப் போன்று வேறொரு தேவனைத் தேடி அலைகிறார்கள்.

நேரடியாக அவர்களுக்கு விழி முன்னே விஷ்ணு தென்படாத காரணத்தால், விஷ்ணுவின் அவதாரம் தானே ராமன்! அந்த ராமனைப் பயன்படுத்தி இந்த ஆட்சியை விழுங்கிடுவோம் என்று வில்லை வளைக்கிறார்கள்.

எந்தவித உபாயத்தினால் அந்த மந்த மதியினர், நம் மீது மோதுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்திடுவதும் - நிதானமாக சிந்திப்பதும் - நமக்கும், நமது பாசறையினருக்கும் மிகத் தேவை எனினும், அதைவிட அதிகமாக நமக்கிருக்கும் பொறுப்பு, நம்மைப் பற்றி நச்சுக் கருத்துகளைப் பரப்பி நாம் ஏதோ மக்கள் மத்தியிலே நடமாடவே கூடாதவர்கள் என்ற தோரணையிலே, நாக்கறுப்போம் - தலையறுப்போம் என்கிற வன்முறை மிரட்டல்களை வாரியிறைத்துக் கொண்டிருக்கிறார்களே! அவர்களின் வஞ்சக சூழ்ச்சியை அறியாமல், அவர்களது பேச்சில், எழுத்தில் மயங்கித் தடுமாறி குழப்பமடைபவர்களைத் திருத்தித் தெளிவடையச் செய்ய வேண்டியது நமது நீங்காக் கடமையாவதால் இன்றைய இந்த நீட்டோலை தேவைப்பட்டது. அதனால் உனக்கும், உன் வாயிலாக உடன்பிறப்புகளுக்கும், அவர்கள் வாயிலாக, ஆத்திகர், நாத்திகர், பக்தசிரோமணிகள், பகுத்தறிவாதிகள் - அனைவருக்கும் ஓர் ஆரோக்கியமான விவாதத்திற்கான அழைப்பை இக்கடிதத வாயிலாகத் தருகிறேன்.

இராமனைக் கருணாநிதி இழித்துரைத்தார் - இராமன் மது அருந்தியதாகக் கூறுகிறார் - அதனால் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் - பதவி துறக்க வேண்டும் - என்று பதறித் துடிக்கிறார்கள். அய்யோ பாவம்! நான் அவர்களுக்கு விளக்கமாகக் கூறிவிட்டேன். "வால்மீகி" எழுதிய ராமாயணம் என்ன சொல்கிறது? மூதறிஞர் ராஜாஜி எழுதிய "சக்கரவர்த்தி திருமகன்" என்ற ராமாயண ஆய்வு நூல் என்ன சொல்கிறது?

அவற்றில் எல்லா பகுதிகளையும் நான் சாட்சியத்துக்காகப் பயன்படுத்த விரும்பவில்லை. இதோ -

"சீதையைத் தேடி வந்த அனுமான், அவளை அசோக வனத்தில் கண்டு, அவளைப் பிரிந்த இராமன் படும் துன்பத்தை

இதோ, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், சுந்தர காண்டம் ஸர்க்கம் 37 வர்ணிக்கிற விதத்தை மாத்திரம் கண்டால் போதும் -

> "தேவியாரைப் பிரிந்த நிலையில், இராமருக்குத் தூக்கமே கிடையாது. எப்போதாவது தேகம் அலுத்துத் தூங்கினாலும் "சீதே!" என்ற மதுரமான வார்த்தையைச் சொல்லிக் கொண்டே விழித்துக் கொள்கிறார். **தங்கள் நினைவால் மது, மாமிசம் அருந்துவதை விட்டு விட்டார். வானப் பிரஸ்தருக்கு உகந்த பழம், கிழங்குகளையே சாயங் காலத்தில் புசிக்கிறார்."**

உடன்பிறப்பே, தலையும், நாக்கும் வேண்டும் என்று துடியாய்த் துடிப்பவர்கள், அதைப் பிடித்துக் கொண்டு குதியாய்க் குதிப்பவர்கள் - அம்மையின் பிரிவால் அய்யன் துயருற்று, அதுவரை அருந்திவந்த மதுவையும், மாமிசத்தையும் விட்டு விட்டார் என்பதற்குப் பொருள் என்ன கூறுவரோ? யானறியேன்!

உடன்பிறப்பே, ராஜாஜி எழுதிய "சக்கரவர்த்தித் திருமகன்" புத்தகத்தில், இராமனைக் குறை கூறி வாலி வசை பாடியதைக் கூட, ராஜாஜி அவர்கள், மறுத்து எழுதியதாக எந்தக் குறிப்பும் இல்லை.

வாலி வதைப் படலத்தை வரைந்திட்ட ராஜாஜி அவர்கள், அந்தக் கட்டம் பற்றி "சக்கரவர்த்தித் திருமகன்" நூலில் அவர் எழுதியுள்ளதை அப்படியே தருகிறேன்.

> "ராமனே! நீ தசரத சக்கரவர்த்தியின் புத்திரனாவாய், உத்தம குலத்தில் பிறந்த நீ, பேரும் புகழும் அடைந்த நீ ஏன் இப்படிச் செய்தாய்? உன் நற்குணங்களும், ஒழுக்கமும் உலகம் அறிந்த விஷயம். இப்படியிருக்க, நான் வேறொருவனிடம் யுத்தம் செய்து கொண்டு அதில் மனம் முற்றிலும் செலுத்தி வந்த சமயத்தில், என் கண்களுக்குத் தென்படாமல் மறைந்து நின்று என்மேல் பாணம் விட்டு என்னைக் கொன்றாய். உன்னைப் பற்றி ஜனங்கள் சொல்லும் புகழ்மொழிகளுக்கு இது முற்றிலும் விரோதமாயிருக்கிறதே? தருமம், சத்திய பராக்கிரமம் முதலிய உத்தம குணங்களை எல்லாம் பெற்றவன் என்று கீர்த்தி பெற்றாயே! இப்போது அவையெல்லாம் என்னவாயின? என்னைக் கொன்று நீ என்ன லாபம் பெறுவாய்? யோசிக்காமல் இந்த அதரும காரியம்

செய்தாய். என் மனைவி உன்னைப் பற்றி என்னை எச்சரித்தாள்! அவள் பேச்சைத் தட்டி விட்டு வந்தேன். நீ வேஷதாரியென்றும், துன்மார்க்கன் என்றும், புல்லால் மூடப்பட்ட பாழுங்கிணறு போன்ற பாவி என்றும் தெரியாமல், மனைவியின் பேச்சைக் கேளாமல், நான் என் தம்பியை எதிர்த்து யுத்தத்துக்கு வந்தேன். உனக்கு என்ன தீமை நான் செய்தேன்? உன்னுடன் யுத்தம் செய்யவா நான் வந்தேன்? அதருமத்தில் இறங்கி, என்னை மறைந்துநின்று கொன்றாய். நல்ல அரச குலத்தில் பிறந்து பெரும் பாவத்தைச் செய்தாய். நிரபராதியைக் கொன்றாய். நீ அரச பதவிக்குத் தகுந்தவனல்ல. மோசக்காரனான உன்னைப் பூதேவி மணக்க விரும்ப மாட்டாள். நீ எப்படி தசரதனுக்கு மகனாகப் பிறந்தாய்? தருமத்தை விட்டு நீங்கின நீசனால் கொல்லப்பட்டேன். என் கண்ணுக்கு முன் நின்று நீ யுத்தம் செய்திருந்தாயேல் இன்றே நீ செத்திருப்பாய். என்னை நீ வேண்டிக் கொண்டிருந்தால் ஒரே நாளில் சீதையை உன்னிடம் அழைத்து வந்து விட்டிருப்பேனே? பிறந்தவர்கள் இறப்பது விதி. ஆயினும் நீ முறை தவறி என்னைக் கொன்றாய். உன் குற்றம் பெருங்குற்றம்!"

இவ்வாறு தேவேந்திர குமாரனான வாலி மரணாவஸ்தையில் ராமனைக் கண்டித்தான்.

வாலியின் இந்தக் குற்றச்சாட்டுக்கு ராமன் என்ன பதில் சொல்ல முடியும்? ஏதோ சொன்னதாகவும், அதைக் கேட்டு வாலி சமாதானப்பட்டதாகவும் வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படுகிறது. அதில் சாரம் இல்லை என்று விட்டு விட்டேன். பெரியோர்கள் மன்னிப்பார்கள். ராமாவதாரத்தில் ஆண்டவனும், தேவியும் சகிக்க வேண்டிய துக்கங்களில் இந்தத் தவறும், பழியும் ஒன்று."

இராமன் தவறு செய்ததாகவே ராஜாஜியும் கருதியதால், ராமனின் சமாதானம் வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டிருந்தாலும், அதில் சாரம் இல்லை என்று ராஜாஜி விட்டு விட்டதாக, ராஜாஜியே எழுதியுள்ளார்.

உடன்பிறப்பே,

ஆதாரங்கள் இல்லாமல் நான் எதையும் சொல்லவில்லை. யாரைப் பற்றியும் சொல்லவில்லை! உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை என்னவென்றால், பா.ஜ.க. ஆட்சியில் பிரதமர் வாஜ்பய் அவர்களால் அனுமதிக்கப்பட்ட சேதுசமுத்திரத் திட்டம், அந்த ஆட்சி தொடராத காரணத்தால், இடையில் நின்று போய், இப்போது இன்றுள்ள மத்திய ஆட்சியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியா காந்தி, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் ஆகியோரின் பெரு முயற்சியினால் தொடரப்பட்டு, அப்பணியில் தம்பி டி.ஆர். பாலுவின் அயரா முயற்சியால் அத்திட்டம் வளர்ந்து வரும் நிலையில், திடீரென இராமனையும், இராமர் பாலத்தையும் இடையிலே புகுத்தி திசை திருப்பியவர்கள் யார் என்பதையும் நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள இக்கடிதத்தில் காணப்படும் கருத்துகளும், எடுத்துக்காட்டுகளும் மெத்தவும் பயன்படும் என்று நம்புகின்றேன் - எனவே உடன்பிறப்பே! இதனை நீயும் படி! பிறரும் படித்து உண்மை உணர்ந்திட உதவிடு!

( இதில் நான் குறிப்பிட்டுள்ள ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - சுந்தர காண்டம் ஸ்ரீ உ.வே.சி.ஆர். சீனிவாச அய்யங்கார், பி.ஏ., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட நூல் ஆகும்.)

( 1962-ல் தியாகராயநகர் - தி லிட்டில் பிளவர் கம்பெனி பதிப்பித்தது.)

★

("மது" என்றால் கள்ளோ, சாராயமோ அல்ல! "தேன்" என்று பொருள்படும் என்கிறார் நண்பர் "சோ." அப்படியானால் "மது விலக்குச் சட்டம் என்பதற்கு "தேன்" விலக்கு சட்டம் என்று பொருளா என்பதை அவர்தான் விளக்க வேண்டும்.)

(சீதையைப் பிரிந்த வேதனையில், இராமன், "தேன்" அருந்துவதை நிறுத்தி விட்டான் என்று "வால்மீகி" எழுதியிருப்பதாக இவர்கள் சொல்கிறார்களா? )

அன்புள்ள,

**மு.க.**

28-9-2007

# 3285. என்றும் வளம் தரும் திட்டம்; அன்றும் இன்றும்! (1)

**உடன்பிறப்பே,**

இன்றைய (7.10.2007) நாளேட்டில் ஒரு செய்தி. அதன் தலைப்பு - "அரசியலுக்கே முழுக்குப் போட தயார்" - கருணாநிதிக்கு வைகோ சவால்! அதிலே இடம் பெற்றுள்ள செய்தி - "சேது சமுத்திர திட்டத்திற்காகக் கருணாநிதி, இதுவரை எந்தப் பிரதமரிடமாவது எழுத்து மூலமாக கோரிக்கை வைத்ததை நிரூபித்தால், நான் அரசியலை விட்டே விலகிக் கொள்கிறேன்" என்று அவர் பேசியதாக செய்தி வந்துள்ளது. இந்தச் செய்தி இன்று மாத்திரமல்ல, கடந்த மூன்று நாட்களாக இதே செய்தியை இவர் பேசி, அது தொடர்ந்து ஏடுகளில் இடம் பெற்றே வந்துள்ளது.

முதல் நாள் அந்தச் செய்தி வந்தபோதே அதனை மறுக்க நினைத்து, பின்னர் அவர் அரசியலை விட்டுப் போய்விட்டால் என்ன செய்வதென எண்ணி, மறுக்காமல் இருந்தேன். தொடர்ந்து அந்த "சவால்'' படலம் தொடருவதால், நான் சேது சமுத்திரத் திட்டத்திற்காக பிரதமருக்கு எழுதிய ஒரு கடிதத்தை மட்டுமல்ல, இரண்டு கடிதங்களை ஆதாரத்துடன் இங்கே வெளியிடுகிறேன். ஆனால் அவர் அரசியலை விட்டு விலக வேண்டும் என்ற எண்ணத்துடன் அல்ல, இதன் பின்னராவது அதனைத் திருத்திக் கொண்டு, சேது சமுத்திரத் திட்டம் எப்படியாவது நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டுமே தவிர, நுனிப் புல் மேய்வதைப்போல எதற்கெடுத்தாலும் சவால் விடுவதை நிறுத்திக் கொள்ள முன்வரவேண்டுமெனக் கோருகிறேன்.

இதோ முதல் ஆதாரம்! சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தி, 8-5-2002 அன்று அன்றைய பிரதமராக இருந்த திரு.

வாஜ்பாய் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தின் நகல் இந்தப் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ளது.

8-5-2002 அன்று நான் பிரதமருக்கு எழுதிய அந்தக் கடிதம் மொழியாக்கம் செய்யப்பட்டு, எல்லா ஏடுகளிலும் 9-5-2002 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் மொழியாக்கம் பின்வருமாறு :-

"அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு, வணக்கம். தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையான சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறைவேற்றக்கோரி, இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிறது. நான் பல சமயங்களில் பொறுப்பில் இருந்த பல பிரதமர்களிடம் இதைக் குறித்து வலியுறுத்தி உள்ளேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், 23.7.67 சேது சமுத்திரத்தின் ஒரு பிரிவாக உள்ள தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கோரி முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் "எழுச்சிநாளை" அறிவித்தார்.

இத்திட்டம் உலகளவில் உள்ள சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்று சிறப்பைப் பெறும் என்பதை அறிந்து, இத்திட்டத்தை ஆராய பல குழுக்கள் அமைக்கப்பட்டும் இத்திட்டம் நீண்ட நாளாக கிடப்பில் போடப்பட்டது என்பது கவலைக்குரிய செய்தியாகும்.

மத்தியில் ஆளும் நமது தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, இத்திட்டத்தை நிறைவேற்றிடவும், இத்திட்டத்தின் சாத்தியக்கூறினை ஆராய பண ஒதுக்கீடு செய்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், இந்தச் சேதுக் கால்வாய் திட்டம் விரைவாக செயல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இக்கடிதம் மூலமாக தங்களை வலியுறுத்துகிறேன்.

சேதுக் கால்வாய் பற்றிய விவரங்களையும், அதனால் பொதுவாக இந்தியாவிற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு ஏற்படும் பயன்களையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

சேதுக் கால்வாய் திட்டம் என்பது, பாக் ஜல சந்தியையும், மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தில் குறுக்கே வெட்டப்படவேண்டிய கால்வாயின் பெயராகும்.

இத்திட்டத்தை, ஆங்கில அரசாங்கத்தில் கப்பல் படையைச் சேர்ந்த கமாண்டர் டெயிலர் என்பவர், 1860-ஆம் ஆண்டு உருவாக்கினார். அன்றைக்கு அதனுடைய மதிப்பீடு ரூபாய் ஐம்பது இலட்சமாகும்.

பிரபு டவுண்ட்ஸ்டன் மற்றும் சர் ஜான்கூடே என்பவர்கள் இத்திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனப் பல வழிகள் வகுத்தனர். ஆனால், ஒருசாரார் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மறுபடியும் 1921-ஆம் ஆண்டு சென்னை மாநில அரசு இத்திட்டத்தை வகுத்தும், ஆங்கில ஆட்சியாளர்களின் உதவியின்மையால் நிறைவேற்றப்பட வில்லை.

1945-ஆம் ஆண்டு மறுபடியும் ஆங்கில அரசாங்கம், இத்திட்டத்தைப் பற்றி அறிய ஒரு குழுவை அமைத்தது. ஆனால், இந்தக் குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை.

இந்திய விடுதலைக்குப் பிறகு 1955-ஆம் ஆண்டு டாக்டர் சர்.ஏ.இராமசாமி முதலியார் தலைமையில், சேதுக்கால்வாய் திட்டத்தைப் பரிசீலிக்க ஒரு குழு இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது.

“சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால், இந்தியாவிற்கு அன்னியச் செலாவணியும், கிழக்கு கடற்கரையோரமாகக் கப்பல் போக்குவரத்தும் எளிதாக இருக்கும்” என இக்குழு தனது அறிக்கையில் கூறியதோடு, உடனே இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமெனவும் தெளிவாக இந்திய அரசுக்கு தெரிவித்தது. அதற்கு ரூ.9.98 கோடி திட்ட மதிப்பையும் அக்குழு வெளியிட்டது.

சர்.ஏ.இராமசாமி முதலியார் குழுவின் அறிக்கையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இந்திய அரசாங்கம் விட்டுவிட்டது. 1963-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் நான்காவது திட்டக் காலத்தில் இந்தச் சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டுமென முடிவு செய்தும், இத்திட்டம் செயல் வடிவம் பெறாமல் போய்விட்டது.

அதற்குப்பிறகு டாக்டர் நாகேந்திர சிங் குழுவும் (1963-) சி.வி.வெங்கடேஸ்வரன் குழுவும் (1965-ல்) அமைக்கப்பட்டது. 1965-ஆம் ஆண்டு சி.வி.வெங்கடேஸ்வரன் தலைமையில், ஒரு குழு இத்திட்டத்தை ஆராய? நியமிக்கப்பட்டது. இந்தக் குழு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சுமார் 37 கோடி ரூபாய் செலவாகும் என்றும், ஆனால், இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் வருவாய் உள்ளதெனவும் கூறியது.

அதன்பின்பு இறுதியாக, எச்.ஆர்.இலட்சுமி நாராயணன் தலைமையில், ஐவர் குழு ஒன்றும் மத்திய அரசால் 1981-82ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இக்குழு தமிழகமெங்கும் சென்று இத்திட்டத்திற்கான பல்வேறு தரப்பாளர்களின் கருத்துகளையும் கேட்டறிந்தது. இத்திட்டத்தின் பயனைப் பற்றி 1981-82ஆம் ஆண்டு மத்திய அரசின் குழு கீழ்க்குறிப்பிட்டவாறு ஆராய்ந்து மதிப்பிட்டது.

1. இந்தியாவில் கிழக்குக் கடற்கரையோரத்தில் தொடர்ச்சியான கடல்வழிப் போக்குவரத்திற்கு தற்போது வழியில்லை. இத்திட்டத்தை செயல்படுத்தினால் இந்து மகா சமுத்திரமும் வங்கக் கடலும் இணைய வாய்ப்புள்ளது. பாறைகளால் அமைந்த ஆடம்ஸ் பாலத்தை வெட்டி இணைத்தால் கடல்வழிப் போக்குவரத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

2. சேதுக் கால்வாய்த் திட்டமும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் ஒருங்கிணைந்தவைகளாகும். சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தினால், தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சியும் முழு அளவு அதிகரிக்கும். தூத்துக்குடியிலிருந்து கீழ்க்கண்ட துறைமுகங்களுக்குப் பயணம் செய்யும் நேரமும் குறையும்.

அ. தூத்துக்குடியிலிருந்து சென்னை - 434 மைல் (மிச்சப்படும் தூரம்)

ஆ. தூத்துக்குடியிலிருந்து விசாகப்பட்டினம் - 376 மைல் (மிச்சப்படும் தூரம்)

இ. தூத்துக்குடியிலிருந்து கல்கத்தா 340 மைல் (மிச்சப்படும் தூரம்)

3. இக்கால்வாயினால் பயணம் செய்யும் தூரம் குறைவதால் கப்பலில் எரிபொருள் மிச்சப்படும். இதனால் இந்தியாவில் அன்னியச் செலாவணி செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மிச்சப்படும்.

4. இந்தியாவிற்கு அன்னியச் செலாவணி கணிசமான அளவு உயரும். இந்தக் கால்வாயின் மூலம் தமிழகத்தில் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேசுவரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப்பட்டினம், கல்கத்தா வரையுள்ள கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும்.

5. இக்கால்வாய் வெட்டப்பட்டால், தூத்துக்குடித் துறைமுகத்தில் வளர்ச்சி ஏற்பட்டு, அதன்மூலம் பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப்பட்ட பகுதிகள் முழுதும் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறும்.

6. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால், இந்தியாவில் தென் பகுதியில் அன்னியச் சக்திகள் ஊடுருவாமல் அது ஓர் அரணாக விளங்கும்.

7. இக்கால்வாயின் மூலம் மீன்பிடித் தொழில் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெறும். மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பு வளையமாகத் திகழும்.

8. நிலம் வழியாகச் செல்லும் நிலக்கரி, சிமெண்ட், உப்பு, உரங்கள், கடல் உணவு வகைகள், பருப்பு வகைகள், பருத்தி போன்ற பொருட்களைக் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக இந்தியாவின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இக்கால்வாய் மிகவும் உதவியாக இருக்கும்.

9. தற்பொழுது கப்பல்கள் யாவும் இலங்கையைச் சுற்றிச் செல்கின்றன. இதனால் புயல் அபாயங்களில் சிக்கிக்கொள்ள நேர்கிறது. சேதுக் கால்வாய் மூலமாக கப்பல்கள் சென்றால், புயல் அபாயம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

10. இக்கால்வாய் ஒரு சுற்றுலா மையமாக அமைந்து உலகில் பல பகுதிகளிலிருந்து பயணிகளை ஈர்க்க வாய்ப்புள்ளது.

11. ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்கள் இக்கால்வாயினால் பெருகி, இந்தியாவில் வளர்ச்சியை அதிகரிக்கும்.

12. இக்கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால் ஏற்படும் செலவை, சுமார் பத்து அல்லது பனிரெண்டு ஆண்டுகளில் ஈடு செய்துவிடலாம்.

13. இத்திட்டம் பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் சாதகமானதாகும். இந்தியாவின் நலன் கருதி, உடனடியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் கப்பல் மற்றும் கடல்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தில் 1981-82ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

இத்திட்டத்தைத் துவக்கும் நடவடிக்கையாக ஆய்வு மேற்கொள்வதற்கு என்று குறிப்பிட்ட தொகையை ஏற்கெனவே மத்திய அரசு ஒதுக்கியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு இனியும் தாமதம் செய்யாமல், இத்திட்டத்தைத் தொடங்கி தொடர்ந்து அமல்படுத்த வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

மத்தியக் கப்பல் துறை அமைச்சகம், நாக்பூரிலுள்ள தேசியச் சுற்றுச் சூழல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சேதுக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அறிக்கை வழங்கிடும்படி அறிவுறுத்தியுள்ளது.

எனவே அந்நிறுவனம், உடனே தனது ஆய்வை தொடங்கி விரைவுபடுத்திட தாங்கள் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். பொருளாதார ரீதியாக எவ்வாறெல்லாம் இத்திட்ட தாமதத்தினால் இழப்பு ஏற்படுகிறது என்பதை என் கடிதம் மூலம் தாங்கள் அறிவீர்கள்.

எனவே பொருளாதார வளர்ச்சியுடன், வேலை வாய்ப்புகள் வழங்கிடும் இத்திட்டத்தை, நாட்டு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு தாங்கள் தலையிட்டு தாமதமில்லாமல் நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(ஒ-ம்) மு. கருணாநிதி.

இந்த ஒரு கடிதம் மாத்திரமல்ல! 15-10-2002 அன்று மீண்டும் பிரதமர் அவர்களுக்கு,

மே 8-ந் தேதி எழுதிய கடிதத்தை நினைவூட்டி, அந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த முன் வர வேண்டுமென்று

கேட்டுக் கொண்டு ஒரு கடிதமும் எழுதியிருக்கிறேன். அதன் நகலும் இந்த இதழில் அப்படியே வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பின்னராவது உண்மை என்ன, பொய் என்ன என்பதைச் சவால் விட்ட நண்பரும், அவருக்கு ஆதரவு தெரிவிப்போரும், நடுநிலையாளர்களும் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தச் சேது சமுத்திரத் திட்டம் பற்றியும், அதிலே எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் தொடர்ந்து எழுதவிருக்கிறேன்.

அன்புள்ள,

**மு.க.**

8-10-2007

# 3286. செந்தமிழ் நாடு சீரழிவதா?

உடன்பிறப்பே,

சேது சமுத்திரத் திட்டத்துக்காகக் குரல் கொடுத்தது யார்? நீயா? நானா? அவரா? இவரா? இந்தக் கட்சியா? அந்தக் கட்சியா? என்று வினாக்கணைகள் தொடுப்பதை விட, தமிழகத்திற்கு இன்றியமையாததாக நிலைபெறக் கூடிய ஒரு திட்டம் நிறைவேறுவதற்கு எல்லோரும் ஒத்துழைத்தோம் - எல்லோரும் வலியுறுத்தினோம் என்பதில் தான் அத்திட்டத்தின் முன்னேற்றமும், வளர்ச்சியும் இருக்கிறது எனலாம்.

இந்தத் திட்டத்துக்கு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கி, ஒரு நீண்ட கால முயற்சிக்கான வரலாறு உண்டென்பதை நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதன் தொடர்ச்சியாகத் தமிழகத்தில் ஆன்றோர்கள், சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் பலர், இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதில் தங்கள் ஆர்வத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தார்கள்.

குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, 1957ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் அறிஞர் அண்ணா தலைமையில் அமர்ந்திருந்த நான், 1958ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது,

> “எனக்கு முன்பு பேசிய உறுப்பினர், தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றிப் பேசினார். அந்தத் துறைமுகத் திட்டத்தை எடுத்து நடத்தினால், அது கொழும்புத் துறைமுகத்துடனும், பம்பாய் துறைமுகத்துடனும் போட்டி போடக் கூடிய ஆழ்கடல் துறைமுகமாக மாறும். 100 மைல் அளவுக்கு ஒரு கால்வாய் அமைத்தால்,

அந்தத் துறைமுகத்தை நல்ல முறையில் உருவாக்க முடியும். இலங்கையில் மேற்குக் கடற்கரைக்கும், இங்குள்ள தென்கோடி கீழ்க் கடற்கரைக்கும், இடையே உள்ள பாறைகளை அகற்றினால் இன்னும் பல நல்ல துறைமுகங்களை அமைக்கலாம். திரு. ஏ. இராமசாமி முதலியார் தலைமையில் ஒரு குழு இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்து, அது மத்திய சர்க்காருக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கையும் இன்னும் கவனிக்கப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது. ஏன் இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று கேட்கிறேன்.''

என்று குறிப்பிட்டது அவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெற்றுள்ளது.

அதன் பிறகு, 1960ஆம் ஆண்டு, தமிழகச் சட்டமன்றத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள், நீண்டதோர் உரை நிகழ்த்தியபோது, சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஆணித்தரமாக வாதிட்டார். அது வருமாறு :-

"நாம் திட்டவட்டமாக மத்திய அரசிடம் கேட்க வேண்டியது - மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு என்னென்ன திட்டங்களை, திட்டவட்டமாக நிறைவேற்றப் போகிறீர்கள்? சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா? இல்லையா? என்று திட்டவட்டமாகக் கேட்க வேண்டும். இந்த நேரத்தில் நான் தமிழ்நாடு அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இதில் நீங்கள் வெற்றி பெறுவதிலிருந்துதான், இனிமேல் உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். இதைப் பற்றி விசாரித்து அறிக்கை கொடுப்பதற்காக இந்திய சர்க்கார் நமது ராஜ்யத்தின் தலைசிறந்த அறிவாளி திரு. ராமசாமி முதலியார் அவர்களை நியமித்தார்கள். அவர்கள் ஆராய்ச்சி செய்து

கொடுத்த அறிக்கையை வைத்துக் கொண்டு அதில் ஏற்படுகின்ற சில்லறைத் தகராறை வைத்துக் கொண்டு, பத்து கோடியா, பதினைந்து கோடியா என்கின்ற புள்ளி விவரங்களால் ஏற்படும் தகராறை வைத்துக் கொண்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியுமோ என்னவோ தெரியவில்லை. நான் மீண்டும் இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா அல்லது நாங்கள் இதை விட்டு விலகவா என்று மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் துணிந்து கேட்க வேண்டும்."

இதன் பிறகும், 1961ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம், தி.மு.க. மாநாட்டிலும், அதைத் தொடர்ந்து பல மாநாடுகளிலும் சேது சமுத்திரத் திட்டம், முக்கியமான தீர்மானங்களில் ஒன்றாக அமைந்தது என்பது இத்திட்டத்தின் வரலாற்று அம்சமாகும்.

1963ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் நாள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, பண்டித நேரு அவர்களின் அமைச்சரவைக் கூட்டத்தில், சேதுத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் முன் நடவடிக்கைப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுக வேலைகள் சுணக்கமுற்று, மீன் பிடித் துறைமுகமாக மாற்ற முயற்சி நடந்தபோது, 1967ஆம் ஆண்டு சென்னை வந்த மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. வி.கே.ஆர்.வி. ராவ் அவர்களை அவர் தங்கியிருந்த இடத்திற்கே அண்ணா அவர்கள் தேடிச் சென்று சந்தித்தார். அப்போது முன்னாள் முதல்வராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களையும், முன்னாள் தொழில் அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்று, துறைமுகம் நஷ்டத்தில் இயங்கும் நிலை வந்தால், அந்த நஷ்டத்தை மாநில அரசே ஏற்கும் என்ற உறுதியையும் தந்து, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் வருவதற்கு பாடுபட்டார்.

1972ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலில் வ.உ.சி. சிலையை திருமதி இந்திரா காந்தி அம்மையார், முதல்வராக இருந்த என் தலைமையில் திறந்து வைத்தார். அப்போதும் நான் தூத்துக்குடி துறைமுகத்தின் பயன் மேலும் வளர, சேதுக் கால்வாய் திட்டம் மிக மிக அவசியம் என்று பேசினேன்.

1971ஆம் ஆண்டு, சேது சமுத்திரத் திட்ட மதிப்பீடு ஆய்வு செய்யப்பட்டு, 52 கோடி ரூபாய் ஆகும் என்று அறிவிக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு, மீண்டும் அது மறு ஆய்வு செய்யப்பட்டு 72 கோடி ரூபாய் செலவாகும் என்று அறிவிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு, பொருளாதார ரீதியாக சேதுத் திட்டத்துக்கு சாத்தியம் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்ததால், தூத்துக்குடி துறைமுகத்தின் முன்னாள் தலைமைப் பொறியாளர் ஜேம்ஸ் ஐசக் கோயில் பிள்ளை என்பவர், சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் பயன் உள்ளதாக அமையும் என்ற ரீதியில் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அறிக்கையைத் தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்தார்.

10-5-1986 அன்று, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கோரி, ஒரு தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

15-9-1998 அன்று, வைகோ நடத்திய ஒரு நிகழ்ச்சியில் சென்னையில் கலந்துகொண்ட பிரதமர் வாஜ்பாய், சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் அரசு நிறைவேற்றும் என்று அறிவித்தார்.

நான் கூறியுள்ள இந்தக் காலக் கட்டங்களில் "ஆடம்ஸ் பாலம்" என்றுதான் குறிப்பிடப் பட்டிருக்கிறதே தவிர, "ராமர் பாலம்" என்று எந்தக் குறிப்பும் கிடையாது. மேலும் அந்த "ஆடம்ஸ் பாலத்தை" அகற்றி விட்டு, சேதுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் வலியுறுத்தப் பட்டிருக்கிறதே தவிர, புதிய பிரச்சினை எதுவும் எழுப்பப் படவில்லை. அப்படி எழுப்பப்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாமல் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்கு, அ.தி.மு.க. 2001ஆம் ஆண்டு வெளியிட்ட தேர்தல் அறிக்கையைப் படித்துப் பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும். 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் வருமாறு :-

> "இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாகக் கிழக்கு நோக்கிக் கப்பல்கள் செல்லவேண்டுமானால், இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது.

இதற்குத் தீர்வாக அமைவதுதான், சேது சமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி ராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகளை அகற்றி ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பது சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்."

அதாவது 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில், ராமர் பாலம் என்று சொல்கிறார்களே இப்போது, அதே இடத்தில், அங்கேயுள்ள மணல் மேடுகள், பாறைகளையெல்லாம் அகற்றி விட்டுக் கால்வாய் அமைப்பதுதான் தலையாய நோக்கம் என்று ஜெயலலிதா சொல்லிவிட்டு, இப்போது அந்தப் பாதை வழியாக சேதுத் திட்டம் கூடாது என்று சொல்கிறார் என்றால் இதற்குப் பெயர் என்ன?

ராமர் பாலம் பகுதியில் அங்கேயுள்ள மணல் மேடுகளை அகற்றி விட்டு சேது சமுத்திரத் திட்டம் அமைக்க வேண்டுமென்று தேர்தல் அறிக்கையில் கூறிய ஜெயலலிதா, தற்போது 1-10-2007 அன்று வெளியிட்ட அறிக்கையில், ராமர் பாலத்தை இடிக்காமல் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அ.தி.மு.க. வின் நிலைப்பாடு என்று கூறுகிறார் என்றால் அது பா.ஜ.க. விற்காகச் சொல்லப்படும் வார்த்தைகள் என்றுதானே பொருள்?

சேது திட்டத்தினால் தமிழகத்திற்கு எந்தவிதமான பயனும் கிடைக்காது என்றும், யாருக்கும் பலன் இல்லை என்றும், கப்பல் போக்குவரத்துச் செலவு கூடும் என்றும் ஜெயலலிதா தற்போது தனது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். இதுவாவது உண்மையா? இதற்கான பதிலை நான் நேரடியாகத் தராமல், ஜெயலலிதாவே 2001ஆம் ஆண்டு வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இந்தக் கேள்விக்கான பதிலைத் தந்திருப்பதை அப்படியே எடுத்து வெளியிடுகிறேன். அது வருமாறு :-

> "சேது சமுத்திரத் திட்டத்தால் நம் நாடு மட்டும் அல்ல, தென் கிழக்கு ஆசிய நாடுகளும், கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் பயன் அடையும். வாணிபமும், தொழிலும் பெருகும். அந்நிய முதலீடு

அதிகரிக்கும். அன்னியச் செலாவணி அதிகம் கிடைக்கும். கப்பலின் பயணத் தூரம் வெகுவாகக் குறைவதால், எரி பொருளும், பயண நேரமும் மிச்சமாகும். ஏற்றுமதி, இறக்குமதி அதிகரிக்கும். குறிப்பாக, இராமநாதபுரம் போன்ற மிக மிகப் பிற்பட்ட தமிழகத் தென்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். வேலை வாய்ப்பு பெருகும். தூத்துக்குடித் துறைமுகம் சர்வதேச அளவில் விரிவடையும். சுற்றுலா வளர்ச்சியடையும்."

இவ்வளவு விவரங்களையும் ஜெயலலிதா தேர்தல் அறிக்கையிலே எழுதி விட்டு, தற்போது அதனால் யாருக்கும் பலன் இல்லை என்று அறிக்கை விடுகிறார் என்றால், மத்தியில் காங்கிரசும், மாநிலத்தில் தி.மு.க.வும் ஆட்சியில் இருக்கும்போது சேது சமுத்திரத் திட்டம் வரக்கூடாது என்ற ஒரே எண்ணம்தான் இவருக்கு இருக்கிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளாமலா போய்விடுவார்கள்?

இந்த சேதுக் கால்வாய் திட்டத்தை இப்போது கேள்விக் குறியாக ஆக்கியிருப்பது ராமர் பாலம் பிரச்சினைதான். 2005ஆம் ஆண்டு, ஜூலைத் திங்களில் அடிக்கல் நாட்டப்பட்டு, இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், சேதுக் கால்வாய் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு, அறுபது சதவிகிதப் பணிகள் முடிவுற்ற நிலையில், திடீரென்று ராமர் பாலம் என்ற பிரச்சினையைக் காட்டுகிறார்கள். கடந்த காலங்களில் இந்த ராமர் பாலம் பற்றி எந்தவொரு குறிப்பும் வெளிவந்ததில்லை என்பதையும், அப்படி ஒன்று இருந்தாலும் அதை அகற்ற வேண்டும் என்பதில் அ.தி.மு.க. எத்துணை அழுத்தந்திருத்தமான கருத்துக் கொண்டிருந்தது என்பதையும் அவர்களின் இந்தத் தேர்தல் அறிக்கையே திட்டவட்டமாக எடுத்துக்காட்டுகிறது.

நம்மைப் பொறுத்தவரையில், நமக்கென்று நாம் ஏற்றுக் கொண்ட பகுத்தறிவு கொள்கைகள் இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய பாரபட்சமற்ற பொது நிலையை நாம் என்றைக்கும் மறந்ததில்லை.

நாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகளை எப்படி பிறர் மீது திணித்திட நாம் முனைவதில்லையோ, அதுபோல பிறர்

பின்பற்றுகிற பழக்க வழக்கங்களை, கொள்கைக் கோட்பாடுகளை - அவை அறியாமையின்பாற்பட்டதாக இருந்தால் அவற்றை அவர்கள் நம் மீது திணிப்பதற்கும் நாம் உடன்படுவதில்லை.

ஆட்சியில் இருப்போர், கடமைகளையும், பொறுப்புகளையும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து செயல்படுவதுதான் நமது பண்பாடாகும். 25 ஆண்டுக் காலமாக ஓடாமல் கிடந்த திருவாரூர் ஆழித் தேரை ஓட்டியது தி.மு.கழக ஆட்சியில் நான் முதலமைச்சராக இருந்த போதுதான்.

எந்தவொரு ஆலயத்திலும் அவற்றின் பரம்பரை திருவிழாக்களுக்கோ, தீர்த்தமாடுதல் போன்ற வைபவங்களுக்கோ இந்த ஆட்சியில் தடை இல்லை. அண்மையில்தான் விநாயகர் சதுர்த்தி தமிழகம் முழுவதும் மிகத் தடபுடலாக நடைபெற்றிருக்கிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது. 2006ஆம் ஆண்டு, மே திங்களில் தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் 1493 கோவில்களுக்குத் திருப்பணி நிறைவுபெற்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. மேலும் 106 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், பழனி முருகன் கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில், திருச்செந்தூர் முருகன் கோவில் உள்பட 253 திருக்கோவில்களில் திருப்பணியும், மேம்பாட்டுப் பணிகளும் செய்ய ஆணை பிறப்பித்து, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 20 கோவில்களுக்கு தங்கத் தேர் செய்ய முடிவு செய்து, அவற்றில் 7 தேர்கள் முடிவுற்ற நிலையிலும், மீதமுள்ள 13 தேர்கள் செய்யப்பட்டு வருகின்ற நிலையிலும் உள்ளன.

சேதுக் கால்வாய் திட்டத்திற்கே கூட, ஆரம்ப காலத்தில் இருந்தே ஆடம்ஸ் பாலம் என்பதற்குப் பதிலாக ராமர் கால்வாய் திட்டம் என்றே பெயர் இருந்திருக்குமேயானால், அந்தப் பெயர் கூடாது என்று நாம் கூறப்போவதில்லை. ஏனென்றால், "ராமேஸ்வரம்" "இராமநாதபுரம்" என்ற பெயர்கள் இன்றைக்கும் இருக்கின்றன. வேதாரண்யம் கோடியக்கரையில் ஒரு மேட்டின் மீது கல்லில் செதுக்கப்பட்ட இராமர் பாதமே இருக்கிறது. இராமன் அங்கு நின்று கொண்டுதான் இலங்கையை தொலைநோக்கில் கண்டான் என்கிறார்கள். அதற்கு எந்தச் சேதாரமும் யாரும் விளைவிக்கவில்லை, இந்த ஆட்சிகளில்!

தற்போது கிருஷ்ணா நதி, சண்முகா நதி, பிரம்மபுத்ரா நதி போன்றவைகளில் திட்டங்கள் தீட்டப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றனவே, இந்த நதிகள் கடவுள் பெயரால் உள்ளன என்பதற்காக அந்தத் திட்டத்தை யாராவது எதிர்க்கிறார்களா? கிடையாதே! கிருஷ்ணா நதியிலிருந்துதானே சென்னைக்கே குடிநீர் வருகிறது. அது கடவுள் பெயரில் உள்ள நதி, அது வேண்டாமென்று சொல்லுகிறோமா?

எனவே, இப்போது பிரச்சினை என்னவென்றால், ராமர் பாலம் என்ற பெயரைச் சொல்லி செந்தமிழ் நாட்டுக்கு செழிப்பும், சிறப்பும் தரவல்ல ஒரு மாபெரும் திட்டத்தை மனம் போன போக்கில் சீரழிக்க நினைக்கிறார்களே, இது நியாயமா என்று கேட்பது தான்!

அன்புள்ள,

**மு.க.**

9-10-2007

# 3287. வாஜ்பாய் அரசு வகுத்திட்ட வழியே தான்!

**உடன்பிறப்பே,**

சேது சமுத்திரத் திட்டம் குறித்து, 1955ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நடத்தப்பட்ட எல்லா ஆய்வுகளும், தொழில் நுட்ப ரீதியாக திட்டம் சாத்தியமானது என்றே நிரூபித்திருக்கின்றன. இதில் எள்ளளவு ஐயம் கூட யாருக்கும் இருந்தது இல்லை.

1860ஆம் ஆண்டு, அதாவது, 145 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியக் கடற்படையின் கமாண்டர் டெய்லர் என்பவரின் மூளையில் உதித்து முன்மொழியப்பட்டு, தொடர்ந்து முயற்சிகள் பல முறை மேற்கொள்ளப்பட்டும், ஆய்வு நடத்தவும், ஆக்கப் பணிகளை வகுத்திடவும் பல்வேறு நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான பரிசீலனைகள் நடத்தப் பட்டதுமான நிலைமையிலே இருந்து, இடைக் காலத்தில் கிடப்பிலே போடப்பட்டுவிட்டது என்றாகி, அறிவிப்புடன் நின்றுவிட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் ஒன்றான சேது சமுத்திர திட்டம், மத்தியச் சுற்றுச் சூழல் துறையின் ஒப்புதலும், மத்திய அமைச்சரவையின் ஒப்புதலும் பெற்று, 2005ஆம் ஆண்டு ஜூலை 2-ந்தேதியன்று, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வழிகாட்டித் தலைவர் சோனியா காந்தியும் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டிய விழாவுக்கு, முறைப்படி அழைக்கப்பட்டும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா புறக்கணித்து விட்டது, வியப்புக்குரியதேயாகும். தமிழகத்திற்கு 2427 கோடி ரூபாயில் ஒரு திட்டம் கிடைத்திருக்கிறதே என்று விழாவில் கலந்து கொண்டு அதனை வாழ்த்தி வரவேற்கா விட்டாலும், இப்போது அந்தத் திட்டமே பயனற்றது என்று திட்டித் தீர்ப்பதுதான் வரலாற்று விந்தை!

ஆய்வு சரிவர நடத்தாமல், அவசரமாக அறிவிக்கப்பட்ட திட்டம் என்று தற்போது விமர்சனம் செய்யும் ஜெயலலிதாவிற்கு இதோ சில விளக்கங்கள்:-

1860இல் தொடங்கி, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை ஆய்வு செய்து தரப்பட்ட ஒன்பது அறிக்கைகள்

1. 1860 - கமாண்டர் ஏ.டி. டெய்லர் வகுத்த திட்டம்.
2. 1861 - டௌன்சண்ட் தயாரித்த திட்டம்.
3. 1862 - எல்ஃபின்ஸ்டன் வேண்டுகோளை ஏற்று அமைக்கப்பட்ட இங்கிலாந்து நாடாளுமன்றக் குழு தந்த ஆய்வு அறிக்கை.
4. 1863 - சென்னை மாகாண கவர்னர் வில்லியம் டென்சன் தந்த ஆய்வு அறிக்கை.
5. 1871 - ஜான் ஸ்டோர்டாட் தந்த ஆய்வு அறிக்கை.
6. 1872 - பொறியாளர் ஜார்ஜ் ராபர்ட்ஸ்டன் தந்த ஆய்வு அறிக்கை.
7. 1884 - அறிக்கையின் அடிப்படையில் கால்வாய் அமைக்கும் பணியை, ஜான் கோட் என்பவர் உதவியுடன், சௌத் இண்டியன் ஷிப் கேனால் அண்டு கோடிங் ஸ்டேஷன் லிமிடெட் என்ற நிறுவனம் தொடங்கினாலும், நிதிப் பற்றாக் குறையால் நிறுத்தப்பட்டது.
8. 1902 - சௌத் இண்டியன் ரயில்வே கம்பெனி தந்த திட்ட அறிக்கை.
9. 1922 - பொறியாளர் இராபர்ட் பிரிஸ்டோ தந்த ஆய்வு அறிக்கை.

சேதுசமுத்திரத் திட்டத்திற்கு இணைப்பு முகவராக (Nodal Agency) தூத்துக்குடித் துறைமுகக் கழகத்தை நியமித்திட 1996 ஆம் ஆண்டில் எடுத்த முடிவு.

தூத்துக்குடித் துறைமுகக் கழகம், இத்திட்டத்திற்கான-தொடக்க சுற்றுச் சூழல் ஆய்வுகளை (Initial Environmental Examination) மேற்கொள்ள 1998 மார்ச் மாதத்தில் "தேசியச்

சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வு நிறுவனத்தை" (National Environmental Engineering Research Institute (NEERI) நியமித்தது.

நீரி-நிறுவனம் கால்வாய் தோண்டுவதற்கு 5 மாற்றுப் பாதைகளைப் பரிசீலித்தது. அவற்றுள் பாதை எண் 1, 2, மற்றும் 3 ஆகியவை ஆரம்பத்திலேயே நிராகரிக்கப்பட்டன.

பாதை எண் 4 இராமேஸ்வரம் தீவின் குறுக்கே கந்தசாமி கோவிலுக்கும், தனுஷ்கோடிக்கும் இடையே செல்வதாகத் தயாரிக்கப்பட்டது.

பாதை எண் 5 தனுஷ்கோடியைச் சுற்றிச் செல்வதாகும். இந்தப் பாதைகள் குறித்து, கப்பல் போக்குவரத்துத் துறையின் துறைமுக வளர்ச்சி ஆலோசகர் தலைமையிலான குழு விவாதித்தது.

"மூன்று இருப்பு சத்திரத்"திற்கு அருகில் செல்லக்கூடிய பாதை எண் 4, சுற்றுச் சூழல், புவியியல், கடலியல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் சிறந்ததாக அமையும் எனத் தேர்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது.

1999 மார்ச் மாதத்தில் நீரி நிறுவனத்தினால் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான தொடக்கச் சுற்றுச் சூழல் ஆய்வுகள் குறித்து மத்தியச் சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகத்தின் முன்னிலையில் கருத்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் 1999 ஏப்ரல் மாதத்தில் எழுதிய கடிதத்தில், இத்திட்டம் இந்தப் பகுதியில் அமைந்துள்ள உயிரியல் வனங்களுக்கும், கடலோர இயற்கைச் சூழ்நிலைகளுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என ஆரம்ப நிலையிலேயே தெரியவருவதாகக் கூறி பாதை எண். நான்கிற்கு மறுப்புத் தெரிவித்தது.

சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் தெரிவித்த கருத்துகளைத் தொடர்ந்து, இத்திட்டம் குறித்த இறுதி முடிவினை மேற்கொள்வதற்கு முன்பாக சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் சுற்றுச் சூழல் விளைவுகள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வுகளை விரிவாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

தற்போது சேது சமுத்திரத் திட்டத்தை முழு மூச்சோடு எதிர்க்கும் கட்சிகளில் ஒன்றான பா.ஜ.க., மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது தான் இந்தப் புதிய ஆய்வுகளை

மேற்கொள்வதற்கு, அப்போதைய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. அருண் ஜேட்லி 9-3-2001 அன்று ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த ஆய்வுப் பொறுப்பு 2001 அக்டோபரில் 'நீரி' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

சேது சமுத்திரத் திட்டத்தின் "தீவிர சுற்றுச் சூழல் மதிப்பீடு விளைவு" (Rapid Environmental Impact Assessment) தொடர்பான ஆய்வு முன்னேற்ற அறிக்கை, 2002 அக்டோபரில் நீரி நிறுவனத்திட மிருந்து அரசுக்குக் கிடைத்தது.

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான தீவிர சுற்றுச் சூழல் விளைவு மதிப்பீட்டு முன்னேற்ற அறிக்கையில், "மாற்று வழிகள் குறித்த பகுப்பாய்வு" மீது பின்வருமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:

> "இவ்வாறு சுற்றுச் சூழல், புவியியல் உள்ளிட்ட அனைத்தையும் ஆராய்வதன் மூலம், கால்வாய் செல்லும் வழி தனுஷ்கோடி தீவிலிருந்து மிகவும் தொலைவில் இருப்பதே சிறந்ததாகும்.
>
> எனவே, மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடி புதிய துறைமுகத்திலிருந்து இந்தக் கால்வாய் தொடங்கப்பட்டு, கிழக்கு நோக்கியும், பின் பாம்பன் தீவு வரை வடகிழக்கு நோக்கியும், பின் ஆதாம் பாலத்தின் குறுக்காகவும் வெட்டப்பட்டு, அங்கிருந்து வங்காள விரிகுடாப் பகுதியில் அமையும் கால்வாயுடன் இறுதியாகச் சேரும் வரை "சர்வதேச மீடியல் லைன்க்கு" (International Medial Line) இணையாகச் செல்ல வேண்டும்."

இவ்வாறு கால்வாய் அமையும் வழி மற்றும் விரிவான வழிமுறைகள், அன்று வாஜ்பாய் அவர்கள் தலைமையிலான பாரதீய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணி அரசினால் பரிசீலிக்கப்பட்டு, தற்போதைய 6வது எண் பாதை முடிவு செய்யப்பட்டது.

எனவே, தற்போதுள்ள 6வது பாதை பா.ஜ.க. அரசினால்தான் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு அவர்களே இந்தப் பாதைக்கு ஒப்புதல் தந்து விட்டு, தற்போது ராமர் பாலம் என்று அவர்கள் ஒப்புக்

கொண்ட திட்டத்திற்கே எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அவர்களை நாம் கேட்க விரும்புவதெல்லாம் பா.ஜ.க. வின் மத்திய அரசு 2002ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியபோது, இது ராமர் பாலம் உள்ள இடம், இங்கே திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று ஏன் சொல்லவில்லை? அவர்கள் ஆட்சியில் பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டவாறே, அவர்கள் ஆட்சியிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் அப்போது மட்டும் ராமர் பாலம் என்று சொல்லமாட்டார்களா? காங்கிரசு ஆட்சியும், தி.மு.க. ஆட்சியும் சேர்ந்து சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் அப்போது மட்டும்தான் ராமர் பாலமா? பா.ஜ.க. வும், அ.தி.மு.க.வும் சேர்ந்து நிறைவேற்றினால், அப்போது மட்டும் ராமர் பாலம் என்பது கிடையாதா?

சேது சமுத்திரத் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுச் சூழல் ஒப்புதல் பெறுவதற்காக, 2004 செப்டம்பர் முதல் 2005 பிப்ரவரி வரை 6 கடலோர மாவட்டங்களில் பொது மக்கள் கருத்தறியும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்கள் 3 சுற்றுகளாக 14 இடங்களில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டங்கள் எதிலும், ஒரு முறைகூட ஒருவராலும் "ராமர் பாலம்" என்ற பெயர் உச்சரிக்கப்படவேயில்லை.

இறுதியாக, 31.3.2005 அன்று மத்தியச் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் தனது முறையான நடைமுறைகளுக்கும், விரிவான ஆய்வுகளுக்கும் பிறகு இத்திட்டத்திற்கானச் சுற்றுச் சூழல் ஒப்புதலை வழங்கியது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள், விசாரணைகள் ஆகியவற்றின்மூலம் இந்த கடல் பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு கட்டுமான அமைப்பும் இருப்பதற்கான உருப்படியான அறிவியல் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

தொல்பொருள் துறை ஆய்வுகள் கூறும் விவரங்களின்படி, இப்பகுதியில் தொல்லியல் துறை முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு கட்டுமான அமைப்பும் இல்லை என்பதும் தெரிகிறது.

உறுதியான ஆதாரம் எதுவும் இல்லாத காரணத்தால்தான், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு உட்பட அடுத்தடுத்து வந்த எந்த ஒரு அரசும், இத்திட்டப்

பகுதியைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கவும் இல்லை; அதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவும் இல்லை.

இக்கடல் பாதை வழியாகச் செல்லும் கப்பல்களிலிருந்து கழிவுப் பொருட்கள், பன்னாட்டுச் சட்டங்களின்படியும், இந்தியக் கடல் வணிகச் சட்டத்தின்படியும் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதால், கழிவுப் பொருட்கள், குறிப்பாக எண்ணெய் கசிவுகள் பவளப் பாறைகளைத் தாக்கும் வாய்ப்பும் ஒரு சிறிதும் இல்லை.

நிலத்தில் அமையப் போகும் கட்டமைப்புகள் தனுஷ்கோடி பகுதிகளில் 12.5 ஏக்கர் பரப்பளவிலும், கோடியக்கரை பகுதிகளில் 2.5 ஏக்கர் நிலப் பகுதியிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் நிலம் மட்டுமே இதற்குப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே கட்டமைப்புகள் ஏற்படுவதால், மீனவர்கள் இடமாற்றம் செய்யப்படும் வாய்ப்பும் இல்லை. சில மீனவர்கள் அரசு நிலங்களில் குடிசை அமைத்து வாழ்ந்தால்கூட அவர்களுடைய இடமாற்றத்திற்கான முழு செலவும் திட்ட நிறுவனமே ஏற்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

1964 ஆம் ஆண்டு புயலின்போது இழந்த கிட்டத்தட்ட 1875 ஏக்கர் நிலம் முன்பிருந்த நிலைக்கு மீட்டு, திரும்ப தமிழக அரசிடம் ஒப்படைக்க திட்ட நிறுவனம் அனுமதி கேட்டுள்ளது. அனுமதி கிடைத்தால் நிலம் முன்பிருந்த நிலைக்கு மேடாக்கப்பட்டு, தடுப்புச் சுவர் அமைத்து தமிழக அரசுக்கு திருப்பித் தரப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இது இராமேஸ்வரத்திற்கும், அங்குள்ள மக்களுக்கும், வரும் சுற்றுலா பயணிகளுக்கும், அங்கு வசிக்கும் மீனவர்களுக்கும் பல நன்மைகளை அளிக்கும்.

சேது சமுத்திரத் திட்டத்தின் மதிப்பீடு 2427 கோடி ரூபாய்.

இதில் அரசின் மூலதனம் 495 கோடி ரூபாய்.

இந்தியக் கப்பல் கழகம் 50 கோடி ரூபாய்.

தூத்துக்குடித் துறைமுகம் 50 கோடி ரூபாய்.

இந்திய தூர் வாரிக் கழகம் 30 கோடி ரூபாய்.

எண்ணூர் துறைமுகம் 30 கோடி ரூபாய்.

பாரதீப் துறைமுகம் 30 கோடி ரூபாய்.

சென்னை துறைமுகம் 30 கோடி ரூபாய்.

விசாகப்பட்டினம் துறைமுகம் 30 கோடி ரூபாய்.

பொது மக்களுடைய பங்கு 226 கோடி ரூபாய்.

அரசு உத்தரவாதம் தருகின்ற கடன் தொகை வகையில் 1456 கோடி ரூபாய்.

மொத்தம் 2,427 கோடி ரூபாய்.

'பனாமா கால்வாய்', 'சூயஸ் கால்வாய்' இந்த இரண்டு கால்வாய்களும் நிலத்தை அகழ்ந்து ஆழப்படுத்தி அதன் வழியாக கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால் சேதுக் கால்வாய்த் திட்டம், இந்த இரு கால்வாய்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது! வேறுபட்டது! வித்தியாசமானது!

வட அமெரிக்கா- தென் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்குமிடையில், நிலத்தில் வெட்டப்பட்டது பனாமா கால்வாய்! எகிப்துக்கும், ஐரோப்பாவுக்கும் இடையே நிலத்தில் வெட்டப்பட்டது சூயஸ் கால்வாய்! ஆனால் சேதுக் கால்வாய் முழுக்க முழுக்க இந்தியாவுக்குச் சொந்தமான கடற்பரப்பில், பாம்பனுக்கு அருகில், "ஆதம் பாலம்" எனப்படும் பாறைகளை 40 அடி ஆழப்படுத்திக் கப்பல்களை இயக்கிடத் திட்டமிடப்படுகிறது.

சேதுக் கால்வாய்த் திட்டம் செயல்பாட்டிற்கு வருவதன் மூலம் கடலோர மாவட்டங்களில் ஏற்படும் நன்மைகள் என்ன?

★ இராமேஸ்வரம், தொண்டி, சேதுபாவா சத்திரம், மல்லிப்பட்டினம், நாகை ஆகிய கடலோர நகரங்களில் மீன் பிடித் துறைமுகங்கள் உருவாக இருக்கின்றன. இதன் மூலம் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றப்படுகின்றது.

★ சுமார் 114 கி.மீ. தூரமுள்ள மதுரை - அருப்புக் கோட்டை - தூத்துக்குடி வரை நான்கு வழிச் சாலை ரூ. 650 கோடி செலவில் மத்திய அரசின் நெடுஞ்சாலைத் துறை நிறைவேற்றுகிறது.

★ ரூ.900 கோடி செலவிலான 186 கி.மீ. தூரமுள்ள மதுரை - இராமநாதபுரம் - தனுஷ்கோடி வரை நான்கு வழிச் சாலை அமைகிறது.

★ இராமேஸ்வரம் - முகுந்தராயர் சத்திரம் இடையே உள்ள சாலை ரூ. 2 கோடியில் இரு வழிச் சாலையாக மாற்றப்படுகிறது.

★ பாம்பன் - தனுஷ்கோடி இடையே இராமேஸ்வரம் செல்லாமல் நேரடியாகச் சாலை அமைப்பது குறித்துத் திட்டம் பரிசீலனை.

★ இராமநாதபுரம் அருகில் உள்ள மண்டபம் முகாமில், மதுரை - இராமேஸ்வரம் தேசிய நெடுஞ் சாலையையொட்டி, கலோனியர் பங்களா அருகே உள்ள காலியிடத்தில் சுமார் 10 ஆயிரம் சதுர அடியில் சேதுக் கால்வாய்த் திட்டத்திற்கான செயல் அலுவலகம் அமைகிறது.

★ சேதுக் கால்வாய் வழியாக வந்து செல்லும் கப்பல்களைப் பள்ளி மாணவர்கள், சிறுவர்கள் கண்டு மகிழ வசதியாக மண்டபம் அகதிகள் முகாம் வளாகத்தில் உள்ள தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அருங்காட்சியகம் ஏற்படுத்தப்படுகிறது.

★ இராமேஸ்வரத்தில் பல்நோக்குத் துறைமுகம் அமைப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படுகிறது.

★ தமிழகத்தின் கடலோர மாவட்டங்களையும் சேதுக் கால்வாய் திட்டத்தோடு இணைக்கும் வகையில், தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்திடும் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேது சமுத்திரத் திட்டம் குறித்து, ஜெயலலிதா, 2001ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே சொன்னது என்ன? அதற்கு மாறாக, தற்போது எடுத்து வைப்பதென்ன? என்பது பற்றியெல்லாம் நேற்று விளக்கமாக எழுதியிருந்தேன். 2001ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே மாத்திரமல்ல, 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது தி.மு.க. சார்பில் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில், "நீண்ட காலமாக வாக்குறுதி அளவிலேயே இருந்து வருகிற சேதுக் கால்வாய்த் திட்டப் பணியை விரைவில் தொடங்கிச் செயல்படுத்த உரிய நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை வலியுறுத்துவோம்" என்று குறிப்பிட்டிருந்தோம்.

நம்மைப் போலவே அ.தி.மு.க. சார்பில் அப்போது வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில்,

“தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியிலும், நாட்டின் ஒட்டுமொத்தத் தொழில் மேம்பாட்டிலும் முக்கிய பங்காற்றவிருக்கும் சேது சமுத்திரத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க, மைய ஆட்சியில், அமைச்சுப் பொறுப்பில் ஐந்து ஆண்டு காலம் இருந்த தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., கட்சிகள் தவறி விட்டதை இந்த நாடு நன்கறியும். இத்திட்டத்திற்குப் போதிய நிதியினை உடனடியாக ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று அமைய இருக்கும் மைய அரசை அ.தி.மு.க. வலியுறுத்தும்” என்று சொல்லியிருந்தார்கள்.

இதற்கெல்லாம் பிறகுதான், ஆட்சிக்கு வந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் சார்பில், சேது சமுத்திரத் திட்டம் அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்த தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் வேண்டுமென்று தேர்தல் அறிக்கையிலே வலியுறுத்திய ஜெயலலிதா, தி.மு.க.வும் இடம் பெற்றுள்ள இந்த மத்திய ஆட்சியில் சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அதனால் நமக்குப் பெயர் வந்து விடக் கூடும் என்று எண்ணி, தற்போது அதற்கு முட்டுக்கட்டைபோட படாத பாடு படுகிறார்.

அன்புள்ள,

**மு.க.**

10-10-2007

# 3288. திட்டம் நிறைவேற ஒன்றுபட்டு உழைப்போம்!

**உடன்பிறப்பே,**

ஒரு பயணத்தில் ஈடுபட்டிருக்கும்போது, இடையில் ஏதாவது சலசலப்பு ஒலி கேட்டால், சற்று நின்று நிதானித்து அதைச் சரிப்படுத்திவிட்டோ அல்லது வெறும் சலசலப்புதான் என்று தெளிவடைந்த பின்னரோ, நம் பயணத்தைத் தொடருவதுண்டல்லவா, அதுபோல, சேது சமுத்திரத் திட்டம் குறித்து தொடர் கட்டுரைகள் தீட்டத் தொடங்கியதும் திரு. வைகோ இடையில் குறுக்கிட்டு, "இந்தத் திட்டம் பற்றி இந்தியப் பிரதமர்களுக்கு கருணாநிதி கடிதம் எழுதியது உண்டா? அப்படி எழுதியதாக அவர் நிரூபித்தால் அரசியலை விட்டே விலகி விடத் தயார்'' என்று "சவால்" விட்டு அறிக்கை வெளியிட்டார்.

முதலில் சற்றுப் பொறுமையாக இருந்த நான், திரும்பத் திரும்ப அவர் சவால் விட்டு அழைத்ததும், பிரதமருக்கு நான் "சேது திட்டம்" குறித்து எழுதிய கடிதங்களை ஏடுகளில் வெளியிட்டு, இதற்காக அவர் அரசியலை விட்டு ஒதுங்கி விடாமல், சேது திட்டத்துக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொண்டேன்.

பிரச்சினையை அவர் அத்துடன் நிறுத்தாமல் என்னைப் பார்த்து, "நீர் தி.மு.க. தலைவராக இருந்து பிரதமருக்கு எழுதிய கடிதமல்ல! முதலமைச்சராக இருந்த நிலையில் பிரதமருக்கு கடிதம் எழுதியது உண்டா? உண்டு என்று நிரூபித்தால் அரசியலை விட்டு விலகுவதாகத்தான் சொன்னேன்" என்று இப்போது மீண்டும் சவாலைத் திருத்தி வெளியிடுகிறார். எனக்கு இவரோடு போராட்டமில்லை இப்போது! திட்டமே இல்லாமற் போக வழிவகுக்கிற வஞ்சக நெஞ்சத்தினருடன் தான் போராட்டம்!

அது போகட்டும்! இவரது திருத்தப்பட்ட இரண்டாம் "சவாலில்" ஆவது உண்மை இருக்கிறதா? இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

இப்போது என்ன அறிக்கை விடுக்கிறார்?

“அறிஞர் அண்ணா மறைந்த பின்பு, 69 முதல் 98 செப்டம்பர் வரை கலைஞர் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்த காலங்களில், எந்தப் பிரதமரிடமாவது தில்லியில் சேதுக் கால்வாய்த் திட்டம் தமிழ்நாட்டுக்குத் தேவை என்று எழுத்து மூலமாக வற்புறுத்தி, நேரடியாகப் பேசி இருக்கிறாரா? 69இல், 71இல், 89இல், 96இல் நான்கு முறை முதல்வரானபோது, இந்தத் திட்டத்தை வலியுறுத்தி எந்தப் பிரதமரிடமும் இவர் கோரிக்கை வைக்கவே இல்லை. அவர் இதற்காக வாதாடியதாக நிரூபித்தால், நான் அரசியலை விட்டே விலகிக் கொள்கிறேன் என்று அறிவித்தேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலில் அவர் பேசி ஏடுகளில் வெளிவந்த குற்றச்சாட்டிற்கு, நான், இரண்டு கடிதங்கள் மூலமாக ஆதாரத்துடன் பதில் அளித்தவுடன், தற்போது அறிக்கையில் 69 முதல் 98 செப்டம்பர் வரை முதல் அமைச்சராக இருந்த காலங்களில், பிரதமருக்குக் கருணாநிதி கடிதம் எழுதினாரா என்றுதான் கேட்டேன் என்று அறிக்கை விட்டுள்ளார் என்றால், வழுக்கி ஓடுவது யார் என்று புரிகிறதா இல்லையா?

இவரது அரசியல் எனக்குத் தெரியாதா? எப்படி பதில் அளிப்பார் என்று தெரியாதா? அதனால்தான், நான் முதலில் இரண்டு கடிதங்களை மட்டும் வெளியிட்டு விட்டு, ஒரு கடிதத்தை வெளியிடாமல் வைத்திருந்தேன். தற்போது அவரே வெளியிட்ட அறிக்கையில், 69 முதல் 98 செப்டம்பர் வரை கலைஞர் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்த காலங்களில், எந்தப் பிரதமருக்காவது சேது சமுத்திரத் திட்டம் குறித்து, எழுத்துப் பூர்வமாக வற்புறுத்தியிருக்கிறாரா என்று கேட்டுள்ளார். எனவே, இவர் குறிப்பிட்டுள்ள இடைக் காலமான 1989ஆம் ஆண்டு நான் முதல் அமைச்சராக இருந்த போது, அப்போது பிரதமராக இருந்த மறைந்த ராஜீவ் காந்தி அவர்களுக்கு, 17-4-1989 அன்று ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தின் சுருக்கத்தை மட்டும் இங்கே தருகிறேன்.

Dear Prime Minister,

Sub :- Sethusamudram Project – Implementation of.

The Project for forming a navigable canal linking the Bay of Bengal with the Gulf of Mannar has been under investigation for over a century. xxx xxx

As you know, the Techno-Economic Appraisal Committee set up by the Government of India in February 1981 has also recommended among others, that the project could be implemented in view of the considerations other than economic viability. xxx xxx

I would like to mention that the assured benefits of the project are many. The reduction in the distance traversed by the ships, the savings in the scarce resource of oil, secured and continuous passage within our own territorial waters for naval ships for effective surveillance of the border from the strategic point of view, employment generation, development of the backward hinterlands etc., are all of paramount importance when compared to the immediate economic returns of the Project.

I would also like to add that the estimated cost of this project which was around Rs. 37.46 crores in 1968 has now gone up to more than Rs. 110 crores. If this project is further delayed, I am afraid, the cost will escalate further.

I therefore request that the decision on the implementation of the Sethusamudram Project may be reconsidered and sanctioned so that it is implemented atleast in the Eighth Five Year Plan.

With kind regards,

Yours sincerely,

(M. Karunanidhi)

எனவே எதிர்க்கட்சியிலே இருந்தபோது மட்டுமல்ல, ஆளுங்கட்சியிலே முதல் அமைச்சராக இருந்த போதும் பிரதமர் ராஜீவுக்கு சேது சமுத்திரத் திட்டம் குறித்து கடிதம் எழுதியிருக்கிறேன். இதற்கு வைகோ என்ன பதில் சொல்லப் போகிறாரோ?

மேலும் அவரது அறிக்கையில் எனக்கு அரசியல் பெருந்தன்மை அணு அளவும் கிடையாது என்பதால் தான், நான் எழுதிய "முரசொலி" கடிதத்தில் 98ஆம் ஆண்டு செப்டம்பர் 15இல், ம.தி.மு.க. நடத்திய அண்ணா பெரியார் பிறந்த நாள் விழாப் பேரணியில், சென்னைக் கடற்கரையில் பிரதமர் வாஜ்பாய் சேதுக் கால்வாய்த் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றும் என்று உறுதி அளித்ததைக் குறிப்பிடவே இல்லை என்று தெரிவித்திருக்கிறார். இதிலும் அவர் நுனிப்புல்லைத்தான் மேய்ந்துள்ளார். அவர் தற்போது எதிரணியிலே இருக்கிறார். அவர் நடத்திய கூட்டத்தைப் பற்றி நான் தெரிவிக்க வேண்டியது அவசியம் இல்லைதான். ஆனாலும் அவரே எழுதியிருப்பதைப் போல, எனக்கு அரசியல் பெருந்தன்மை அணு அளவும் கிடையாது(?) என்பதால், நான் எழுதிய 9-10-2007 தேதியிட்ட உடன்பிறப்புக் கடிதத்தில், "15-9-1998 அன்று வைகோ நடத்திய ஒரு நிகழ்ச்சியில் சென்னையில் கலந்து கொண்ட பிரதமர் வாஜ்பாய் சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் அரசு நிறைவேற்றும் என்று அறிவித்தார்" என்று குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது புரிகிறதா அரசியல் பெருந்தன்மை யாருக்கு இருக்கிறது என்று?

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்று சாதிப்பவர்களுக்கு பதிலளிக்க விரும்பாமல் இருந்து பிறகு, அவர்களுடைய தொடர் கூற்றுகளைக் கேட்டு ஒருவேளை தமிழ் மக்கள் குழப்பமடைந்திருப்பார்களோ என்ற சந்தேகத்தில், அந்தக் குழப்பத்தைத் தவிர்க்க சேது சமுத்திரத் திட்டம் பற்றி தொடக்கம் முதல் இப்போது தொடரப்பட்டுள்ள பணிகள் வரையில் உள்ள உண்மை நிலவரங்களைத் தொடர் கட்டுரைகளாக வெளியிட விரும்பி, அவ்வாறு அதனை எழுதவும் முற்பட்டு, அந்தக் கட்டுரைகள் உடன்பிறப்புக் கடிதங்களோடு இணைந்து, இத்துடன் நான்கு கடிதங்கள் வெளிவந்திருக்கின்றன.

அதற்கிடையே மூக்கறுபட்ட ஒருவன், தன் மூக்கைப் பார்த்து ஊரார் பழிப்பார்களே என்று எண்ணி, மூக்கு அறுந்தால் கடவுளைப் பார்க்கலாம் என்று ஊரார் மத்தியில் பொய் சொல்லி, ஊர் மக்கள் எல்லோரையும் மூக்கறையர்களாக ஆக்க முனைந்தான் என்று ஒரு வேடிக்கைக் கதை உண்டு. அதைப் போலத்தான், நான் தமிழகத்திற்குத் தேவையான மிக முக்கியமான சேது சமுத்திரத் திட்டம் குறித்து ஒரு தொடர் எழுதிக் கொண்டிருக்கும்போது,

கருணாநிதி சேது சமுத்திரத் திட்டம் குறித்து இதுவரையில் எந்தப் பிரதமருக்காவது கடிதம் எழுதியது உண்டா, ஆமாம் என்று நிரூபித்தால் அரசியலை விட்டே விலகுகிறேன் என்றார். அய்யோ பாவம், அவர் இப்போது எங்கே அரசியலில் இருக்கிறார் என்ற அனுதாபத்தோடு, சேது சமுத்திரத் திட்டம் குறித்து நான் பிரதமர்களுக்கு எழுதிய வலியுறுத்தல் கடிதங்களை முதலில் வெளியிட்டேன். அப்படி வெளியிட்டபோது கூட, இதற்காக அஞ்ச வேண்டாம், அரசியலை விட்டு விலகவும் வேண்டாம், சேது திட்டத்திற்கு எங்களோடு சேர்ந்து ஒத்துழையுங்கள் என்றுதான் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அவர், அதோடு நிறுத்தவில்லை. மீண்டும் ஒரு சவால், 1969ஆம் ஆண்டுக்கும் 1998ஆம் ஆண்டுக்கும் இடையிலே முதல் அமைச்சர் என்ற முறையில் கடிதம் எழுதியிருக்கிறாரா என்று கேட்டதற்கான ஆதாரத்தையும் கொடுத்துள்ளேன்.

இப்போதும் நான், அவர் அரசியலை விட்டு விலக வேண்டுமென்று கேட்கப் போவதில்லை. அது அவர் எடுக்க வேண்டிய முடிவு, அவருடைய மனச்சாட்சி எடுக்க வேண்டிய முடிவு. எவ்வளவு தவறான விஷயங்களை தமிழகத்திலே அவர் பரப்புகிறார் என்பதற்கு இதுவே தக்க உதாரணம். எனவே, இதுபற்றி நடுநிலையாளர்களின் முடிவுக்கே விட்டு விட்டு, மீண்டும் சேது திட்டம் குறித்த விவரங்களுக்கு வருகிறேன்.

★ ★ ★

உடன்பிறப்பே, சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் மாத்திரமல்ல, தற்போது இந்தத் திட்டம் கூடாதென்றும், இங்கே ராமர் பாலம் இருப்பதாகவும் அறிக்கை மேல் அறிக்கை விட்ட ஜெயலலிதா அம்மையாரும் தமிழக முதலமைச்சராக இருந்த நிலையில், 22-8-1991 அன்று அப்போது பிரதமராக இருந்த பி.வி நரசிம்மராவ் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திலே உள்ள சில முக்கியமான பகுதிகள் இதோ :-

"It has long been felt that a navigable canal linking the Bay of Bengal with the Gulf of Mannar will give a tremendous fillip to trade and commerce. It is indeed unfortunate that though several Committees, over the last few decades, have advocated the technical feasibility and

economic viability of the Project, it has not received due consideration.
xxx xxx

Considering the importance of the Sethusamudram Project for the industrial development of Tamil Nadu, especially the backward regions of Chidambaranar and Ramanathapuram districts, I will be grateful if the Sethusamudram Project is also included in the 8th Plan."

இவ்வாறு இந்தியப் பிரதமருக்குச் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திகடிதம் எழுதிய ஜெயலலிதாதான் தற்போது, இந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போடுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுள்ளார். அதற்குக் காரணமாக இப்போது ராமர் பாலம் என்று சொல்கிறார். பிரதமருக்கு ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், எந்த இடத்திலாவது இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படும் வழியில் ராமர் பாலம் இருக்கிறது, எனவே, வேறு பாதையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று ஏதாவது வார்த்தை இருக்கிறதா என்பதைத் தமிழ்நாட்டு மக்கள்தான் கவனிக்க வேண்டும்.

ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய இந்தக் கடிதத்திற்கு 9-9-1991 அன்று சிறந்த ஆன்மீகவாதியும், இராம பக்தருமான பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் எழுதிய பதிலில்,

"We received your letter of August 22. I entirely agree with you that the Sethusamudram Canal Project is very important not just from the point of view of Tamil Nadu but for the entire country. It would provide a navigable canal link and result in savings in distance for ships leaving from the West Coast to the East Coast. Personally I feel in the context of the need to develop an integrated transport strategy, we should look at coastal shipping much more seriously than we have in the past. I am requesting the Deputy Chairman of the Planning Commission to discuss with you the suggestion on its inclusion in the eighth plan."

இதிலிருந்து சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில்தான் சிறந்த ராம பக்தரான நரசிம்மராவ் அவர்களே அக்கறையோடு இருந்திருக்கிறார் என்பதையும், அங்கே ராமர் பாலம் இருக்கிறது, எனவே, அந்தத் திட்டம் கூடாது என்று அவர் எழுதவில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

2004 ஆம் ஆண்டு சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைக்கு வரப் போகிறது என்ற நிலையில், காழ்ப்புணர்வு கொண்டோர் சிலர், அந்தத் திட்டத்தை எப்படியாவது முடக்கிட நினைத்து அதற்கான வழிகளில் ஈடுபட்டார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தில் ஓ. பொன்னாண்டஸ் என்பவர் தொடுத்த வழக்கில் 17-12-2004 அன்று சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ மற்றும் நீதிபதி வி. பாலசுப்பிரமணியம் அளித்த தீர்ப்பில் முக்கியப் பகுதி வருமாறு :-

"தேசிய நலனுக்காகக் கொண்டுவரப்படும் சேது சமுத்திரத் திட்டத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன், மனுதாரர் இந்த நீதி மன்றத்திற்கு விரைந்து வந்து வழக்கைத் தொடர்ந்துள்ளார். சேது சமுத்திரம் கால்வாய் திட்டம் நாட்டிற்கு மிகுந்த நற்பலனை கொடுக்கக் கூடியது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால், தற்போது கப்பல்கள் ஸ்ரீலங்கா நாட்டைச் சுற்றி வங்காள விரிகுடா கடலுக்கு வரவேண்டியுள்ளது. பாக் ஜலசந்தியில் குறுக்காகக் கப்பல் கால்வாய் அமைத்தால் பெருமளவு பணமும், நேரமும் சேமிக்கப்பட ஏதுவாகும். கப்பல் கம்பெனிகளின் எரிபொருள் செலவும் சேமிக்கப்பட்டு வியாபார விருத்திக்கு அவை பயன்பட வழிவகுக்கும். இத்திட்டத்தின் மூலம் தூத்துக்குடித் துறைமுகம் மற்றும் கரையோர நகரங்களிலும் போக்குவரத்து மேம்பாடு அடைந்து அபிவிருத்தி செய்ய ஏதுவாகும். இத்திட்டமானது சூயஸ் கால்வாய் திட்டத்தைப் போன்றது. அதாவது, ஐரோப்பா நாட்டிலிருந்து ஆசிய நாடு துறைமுகங்களை அடைய வேண்டிய கப்பல்கள் சூயஸ் கால்வாயை அமைப்பதற்கு முன் ஆப்பிரிக்கக் கண்டத்தை முழுவதும் சுற்றி வலம் வர வேண்டியதாய் இருந்தது. சூயஸ் கால்வாய்த் திட்டத்தின் மூலம் மேற்படி சுற்றுப் பாதை தவிர்க்கப்பட்டு கால நேரம் மற்றும் பணம் மிச்சப்படுத்தப்பட்டது. இதே மாதிரி மேற்படி கால்வாய்த் திட்டமும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டம் பற்றி அதிகாரபூர்வமாக, குறிப்பிட்ட நிகழ்வுகளில் பொது மக்களிடம் விசாரணை செய்து, 10-10-2004 தேதியிட்ட பொது விசாரணை அறிக்கையின் அடிப்படையில் முடிவு பெற்ற நிலையில் உள்ள பொது விசாரணை அறிக்கையை அனுப்பி வைக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி கோரிக்கை சரியானவை என்று எங்களுடைய அபிப்பிராயத்தில் தெரிகிறது.

ஆகையால், பொது மக்கள் விசாரணை முடிவு பெற்ற நிலையில், 27-1-1994, 4வது அட்டவணை அறிக்கையின் அடிப்படையில், மேற்படி அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிடப் படுகிறது. இச்செய்கையின் மூலம் சேது சமுத்திரம் கால்வாய் திட்டம் விரைவில் முடிவடைய ஏதுவாகும். நாட்டின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களைச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்ற கருத்தை வலியுறுத்துவதன்மூலம் தடை ஏற்படுத்தல் கூடாது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்."

சேதுசமுத்திரத் திட்டத்தைத் தடுப்பதற்காக தொடர்ந்து நீதிமன்றங்களைத் தேடி அலைந்து பல வழக்குகளைத் தொடுத்தனர். ஆனால், எதிலும் தடையாணையைப் பெறமுடியவில்லை அவர்களால்.

குறிப்பாக, 30.6.2005 இல் ஜார்ஜ் பொன்னாண்டஸ் அவர்களும், 15.2.2006இல் சாமி ஓம்காரனந்தா என்ற ஒரு சாமியாரை விட்டு இராமநாதபுரம் இந்துக்கள் சார்பாகவும், 6.11.2006 இல் சிவ்சாகர் திவாரி என்ற ஆதிக்க சாதியைச் சேர்ந்தவரும், 11.5.2007 இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்து முன்னணி இராமகோபாலன் அவர்களும், 13.5.2007 இல் சுப்ரமணியசுவாமி அவர்களும், 18.5.2007 இல் தண்டி சாமி விஜயானந்த பாரத்-ஜி என்பவரும், 31.5.2007இல் கிருஷ்ண சொரூப் பாண்டே என்பவரும் பல வழக்குகளைச் சேது சமுத்திரத் திட்டத்தைத் தடுப்பதற்காக தொடுத்தனர்.

ஆனால், எந்த வழக்கிலும் உச்சநீதிமன்றமோ சென்னை உயர்நீதிமன்றமோ தடையாணை பிறப்பித்திடவில்லை.

தொடக்கத்தில், மீன் பிடிப்புத் தொழில் பாதிக்கப்படும் என்று தூண்டிவிட்டு, புரளி கிளப்பினர் இந்த வழக்காடிகள்.

பிறகு, சுற்றுச்சூழலுக்குக் கேடு ஏற்படும் என்றனர்.

நாகபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் (NEERI) 'நீரி' என்ற சுற்றுச்சூழல் ஆய்வு மையம், அதனை ஆய்வு செய்து, எந்தக் கேடும் வராத, குறைந்த செலவில் பயணம் செய்ய ஏற்ற சிறந்த தடம் ஆறாம் வழித்தடமான, "ஆதாம் பாலம்" பகுதியில் அமைவதுதான் என்று கூறிவிட்டது.

பி.ஜே.பி. கட்சியினர், இன்று "ராமர் பாலம்" என்று கூச்சல் கிளப்பி, இத்திட்டத்தைக் கிடப்பில் போட முயற்சி செய்கின்றனர்.

இதே பி.ஜே.பி., ஆட்சியில் இருந்த கப்பல் துறை அமைச்சர்கள் கையொப்பமிட்டுத்தான், நன்கு ஆராய்ந்த பின்தான் மற்ற வழித் தடங்களைவிட இதுதான் எளிதானது, சிக்கனமானது, விரைந்து செய்யக் கூடியது என்று உறுதி செய்துள்ளனர். இதை பி.ஜே.பி.யினர் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

2008ஆம் ஆண்டிலோ, 2009ஆம் ஆண்டிலோ பொதுத் தேர்தல் வரவிருக்கும் முன்னர், இத்திட்டத்தை முடிக்கவிடாமல் செய்ய வேண்டும் என்பதுதான் பா.ஜ.க., அ.தி.மு.க.வின் நோக்கமாகும். தேர்தலுக்கு வேறு பிரச்சினை கிடைக்கவில்லை. அதற்கு இராமனைத் தேடிப் பிடித்துள்ளனர்!

நர்மதா நதி அணைக்கட்டுத் தொடர்பான ஒரு வழக்கில், உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, சேது சமுத்திரத் திட்டத்தைத் தடுக்க வேண்டும் என நினைப்பவர்களைச் சிந்திக்கச் செய்யும். அந்தத் தீர்ப்பில் உச்சநீதிமன்றம்,

> "இத்தகைய திட்டங்களை மேற்கொள்ளும்பொழுது பொது மக்களுடைய நூற்றுக்கணக்கான கோடி பணம் செலவிடப்பட்ட நிலையில், எந்த ஒரு தனி மனிதனும் அல்லது ஒரு அமைப்பும் பொது நல வழக்கு என்ற போர்வையில் அரசின் கொள்கை முடிவினை எதிர்த்து, காலம் கடந்த நிலையில் எதிர்த்து வழக்காடுவதென்பதை அனுமதிக்க முடியாது. இது தேசிய நலனுக்கு எதிரானது.
>
> திட்டத்தை நிறைவேற்றுவதில் பொது மக்களின் பணம் செலவழிக்கப்பட்டுள்ள நிலையில், பல ஆண்டுகளுக்குப் பிறகு, அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முடிவின்மீது அதனை எதிர்ப்பதற்கு அனுமதி வழங்குவது என்பது நடைமுறையில் உள்ள சட்ட விதிகளுக்கு முரணானதாகும்"

-என்று கூறியுள்ளது.

**சேது சமுத்திரத் திட்ட சுற்றுச் சூழல் கண்காணிப்புக் குழு தலைவர் டாக்டர் எஸ். கண்ணையன், 25-4-2007 அன்று செய்தியாளர்களுக்கு ஒரு பேட்டி அளித்துள்ளார். அந்தப் பேட்டியில்,**

“ராமர் பாலம் என்றழைக்கப்படும் ஆதாம் பாலத்தின் 70 இடங்களில் 20 மீட்டர் ஆழத்துக்கு பாறை மாதிரிகளை ஜியோ கெமிக்கல் முறையில் சோதனை செய்தோம். அதில், கடலில் உள்ள படிமங்கள்தான் உள்ளன. அறிவியல் ரீதியாக, ராமர் பாலத்தை மனிதர்கள் உருவாக்கியதற்கான எந்த அடையாளங்களும் இல்லை. பாலம் இருக்கும் இடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் கால்வாய் தோண்டினால், மன்னார் வளைகுடா பகுதியில் இருக்கும் 26 தீவுகளும் அழிந்து விடும் வாய்ப்பு அதிகம்” என்று தெரிவித்திருக்கிறார்.

எனவே, எந்தக் கட்சி வலியுறுத்தியிருந்தாலும், எந்தத் தலைவர்கள் வற்புறுத்தியிருந்தாலும், இந்தத் திட்டம் தமிழ் மக்கள் நலனுக்காக, இந்திய நாடு வளம் பெற்றிட, வலிவு பெற்றிட நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களில் ஒன்று என்பது திண்ணம். - இந்த எண்ணம் ஈடேற எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போம்! இந்தத் துறையின் அமைச்சர் தம்பி பாலுவுக்கு துணையாகத் தோள் கொடுப்போம்!

அன்புள்ள,

மு.க.

11-10-2007

# 3289. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (1)

உடன்பிறப்பே,

நாமெல்லாம் சேர்ந்து வளர்த்திடும் கழகம், வலிவும் பொலிவும் கொண்டதாக, "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" எழில் கூடி ஏற்றமுடன், தளர்ச்சியின்றி வளர்ச்சியுற்று வாழ்க என்பார்களே, வயது முதிர்ந்தோர் வாயார மனமார! அது போன்ற வாழ்த்துகளை ஒவ்வொரு நாளும் தமிழ் மக்களுக்கான சாதனைகளைச் செய்து இந்த அரசும் பெற்று வருகிறது. அரசினை நடத்தும் கழகமும் - அரசுக்குத் துணை நிற்கும் தோழமைக் கட்சிகளும் பெற்று வருவதை நாடறியும், நல்லோர் அறிவர் - வளம் பெருகுது! வயலிலே பயிர் தழைக்குது - என்றாலும்கூட, பெருகப் பெருகத்தான் - தழைக்கத் தழைக்கத் தான் - இன்னும் சற்று மேலும் பெருகிட, தழைத்திட வேண்டுமென்ற தணியாத ஆசை உரிமையுடைய உழவனுக்கு ஏற்படுகிறது! அதுபோல எனக்கு ஏற்படும் அவா மிகுதியின் அடையாளமாகவே இந்தக் கடிதம்!

இளைஞர் அணியின் செயலாளராகவும் இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின், அந்த அணியின் மாநில அமைப்பு, மாவட்ட அமைப்புகள், மற்றுமுள்ள அமைப்புகளை அணிவகுத்திடச் செய்து, ஆக்கபூர்வமானதொரு அருஞ்செயலை இளைஞர் அணி மாநில மாநாடு என்று, டிசம்பர் 15, 16 நாட்களில் நெல்லைச் சீமையில் நடத்திட தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெற்றுள்ளார். அதற்கானத் தொடக்கப் பணிகள் துவங்கிவிட்ட செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

இளைஞர்கள் ஓர் இயக்கத்தின் நாடி நரம்புகளாகவும் - அரிய தியாகங்களைச் செய்து அனுபவம் பெற்ற அகவை முதிர்ந்தோர், அந்த இயக்கத்தின் இரத்த நாளங்களாகவும் - அமைந்து, அந்த இயக்கத்திற்கு அளிக்கும் உயிரோட்டமே, அந்த இயக்கத்தைக் கொள்கைக் குன்றமாகவும் - என்றும் வற்றாத ஜீவ நதி உருவாகிப் பெருகி வரும் உச்சி முகடாகவும் விளங்க வைக்கக் கூடியதாகும்.

"கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்" என்றும் - அத்தகைய இளைஞர் கூட்டத்தைப் பார்த்து, "மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்!" என்று அறிவுறுத்தியும் நமது பாவேந்தர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், திருவாரூர் மாணவர், இளைஞர் மாநாட்டுக்கு 1942ஆம் ஆண்டு அறிவுரையும், அனல் கக்கும் வாழ்த்துரையும் அனுப்பி வைத்தாரே, அதற்குப் பிறகு அடிக்கடி இளைஞர்கள், மாணவர்கள் அணி வகுப்புகள், கூட்டங்கள், விழாக்கள், மாநாடுகள் நடை பெற்றிருந்தாலுங்கூட, அனைத்துமே மொழிப்போர் வெற்றியைக் கொண்டாடி முடித்து விட்டன - அஃதன்னியில், முழுப் போர் ஒன்று தமிழ்ச் சமுதாயத்துக்குத் தேவைப்படுவதை எண்ணிப் பார்த்து, சமுதாயத் துறையில், அரசியல் துறையில், பொருளாதாரத் துறையில் என எல்லாத் துறைகளிலும் எழுப்பிடும் போர்க்குரல், வெற்றி முரசாக ஒலித்திட, "எழுக இளைஞனே!" என்று அறவழி அழைப்பு விடுத்திடவே நெல்லையில் மாநில இளைஞர் அணி மாநாடு!

இளைஞனாக என் போன்றோர் இருந்தபோது தான் "நெருப்பின் பொறிகளே நீங்கள்தான் தேவை!" என்று ஈரோட்டுக் குரலும் - காஞ்சியின் முழக்கமும் கேட்டது, எங்களை நோக்கி! - அன்று கிளம்பிய இளைஞர் பட்டாளத்தின் ஒரு துளிதான் நீங்கள் தலைவன் என்று ஏற்றிப் போற்றுகின்ற இந்தக் கருணாநிதி! இந்த உண்மையை நான் ஒருக்கணமும் மறந்து விட மாட்டேன்-மறந்தோர் சிலர், பொது வாழ்விலேயே மதிப்பற்று, "புழுக்கை"களாக ஆகிவிட்ட காட்சியைக் கண்டு கொண்டுதானே இருக்கிறோம்.

அதனால், இன்றைக்கு ஒன்று - நாளைக்கு ஒன்று என இலட்சியங்களை மாற்றி மாற்றி அமைத்துக் கொண்டு, அதற்கேற்ப தனது பேச்சாற்றலைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள், "இலட்சியம்" என்ற சொல்லை அறிந்தவர்களே தவிர, இலட்சியம் என்றால் என்ன என்பதை உணர்ந்து கொண்டோரல்லர்! உணர்ந்தால்தானே அதன்படி நடக்கிறோமா? நடக்கவில்லையா? என்பதைப் பகுத்தறிந்து அதற்கேற்ப நமது வாழ்வை வகுத்துக் கொள்ள முடியும்.

நாம் யார்? - நமது இனம் யாது? நமது மொழி எது? மொழிக்காக இழப்புகள் பலவற்றை ஏற்றவர்கள், உயிரையே விட்டவர்கள்,

மொழியைக் காத்திடும் போருக்கு இளைஞர்களை, மாணவர்களை, மக்களைத் தயாரித்தவர்கள், அதற்காகக்கடும் அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்டவர்கள்- அவர்களைப் பற்றியெல்லாம் நினைத்துப் புகழ்ந்துரைத்தால் மட்டும் போதுமா? நாமும் அவர்களைப் போல தியாகச் சிந்தை - உறுதி உள்ளம் பெற வேண்டாமா?

உடன்பிறப்பே, நான் முதன் முதலாகப் பொது வாழ்வில் எப்படி அடியெடுத்து வைத்தேன் என்பதைத் தெரிந்து கொள்வதே; இளைஞர்களுக்கும் - மூத்தவர்களுக்கும் - தேவையானதும் - இன்றியமையாததுமான ஒன்றாகும் - இதற்குப் பொருள் "நான் காட்டிய வழியில் செல்" என்பதல்ல! காட்டப்பட்ட கடுமையான தியாகிகளின் வழிகளை நான் பின்பற்றியது போல, உன் போன்ற இளைஞர்களும், மாணவர்களும் பின்பற்ற வேண்டுமென்பதுதான் என் விருப்பம்.

நெல்லை மாநாடு தொடங்கும் வரையில் நிறைய எழுதப் போகிறேன் - இது முதல் கடிதம்தான் - இளைஞர்களே கூடி மாநாடு நடத்தினால்தான் எனக்கு மகிழ்ச்சி! ஏற்புடையதுமாகும்! மூத்தோர் ஆதரவாளர்களாக விளங்கட்டும்.

மாநாடு தொடக்கத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஏடுகளில் கண்டேன் - இளைஞர்கள் பெரும்பாலும் இருப்பதற்கு மாறாக, அகவை முதிர்ந்த அமைச்சர்களே அந்தப் புகைப்படத்தை அடைத்துக் கொண்டு நிற்கின்ற காட்சி, சிறிது ஏமாற்றத்தை எனக்குத் தராமல் இல்லை!

இளைஞர்கள், மூத்தோர்களாக ஆகாமல் இருக்க முடியாது - ஆக வேண்டும் - அதே சமயம், இளைஞர்களுக்கு வழி விடாமல் அந்த மூத்தோர் அடைத்துக் கொள்ளவும் கூடாது.

அவரவர்க்குரிய பணிகளை - அவரவர்கள் பகிர்ந்து கொண்டு ஆற்றிட வேண்டும்.

அதனால்தான் இளைஞர்களுக்கு வழி விடுவோம் என்ற தலைப்பில், இந்தத் தொடர் கடிதத்தைத் தொடங்குகிறேன்.

அன்புள்ள,

**மு.க.**

7-11-2007

# 3290. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (2)
# பண்பாடும் வைராக்கியமும்!

**உடன்பிறப்பே,**

"இளைஞர்களுக்கு வழி விடுவோம்" என்ற தலைப்பு என் சிந்தனையில் உதித்ததமைக்குக் காரணமே, என்னிடம் பற்றும் பாசமும் கொண்டு இளமைப் பருவத்தில் என்னை ஊக்கப்படுத்தி யவர்கள், இயக்கப் பணிகளை ஆற்றுவதற்கு எனக்கு வழிவிட்டு - என் பணிகள் கண்டு பாராட்டிய அந்த இன்பமான நிகழ்வுகள்தான் - நெருக்கடி நிலையின்போது, தம்பி ஸ்டாலின், ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டு அங்கு நையப் புடைக்கப்பட்டதைவிட, அவரை அதற்கு முன்பே இந்த இளம் வயதில் இவ்வளவு கழக ஆர்வமா? - கழகக் கொள்கைகளைக் கலை நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்துவதில் அவ்வளவு அக்கறையா? என்ற வியப்புக்குரிய கேள்விகள், சுற்றியிருப்போருக்கு ஸ்டாலின் மீது பற்று பாசத்தை ஏற்படுத்திவிட்டன என்பதே சரியான காரணம் ஆகுமெனலாம்.

ரஷ்யாவில், ஸ்டாலின், தனது தலைவனாக ஏற்றுக் கொண்ட லெனின், அவரது பார்வையில் பட்ட ஒரு பருவ இளைஞனிடம் எப்படிப் பரிவு காட்டினார் என்பதையும் - அந்தப் பரிவையும் தாண்டிக் கொண்டு அவரிடம் ஒரு வைராக்யமும், பண்பும் எப்படித் தலை தூக்குகின்றன என்பதையும் அவர் வாழ்க்கையில் ஒரு சம்பவம் விளக்குகிறது.

நமது அண்ணா அறிவாலயம், பேராசிரியர் நூல் நிலையத்தில் கிடைத்த ருஷ்யா பற்றிய புத்தக மொன்றில் படித்தேன். அதை உனக்கும் சொல்வதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி!

அந்தப் புத்தகத்தில் உள்ளபடியே அந்த நிகழ்ச்சியை உனக்கு நினைவூட்டுகிறேன்.

> "லியோன்கா என்ற இளைஞன் பக்ரா நதியில் நீந்திக் கொண்டிருந்த பொழுது லெனின் ஆற்றங்கரைக்கு வந்தார். அவர் கோர்க்கி கிராமத்துக்குச் சென்று

ஓய்வெடுக்க வேண்டும் என்று அவருடைய மருத்துவர் கண்டிப்பாக உத்தர விட்டிருந்தார்.

லெனின் லியோன்காவை உற்றுப் பார்த்தார். அவன் சிறுவனாக இருந்தாலும் நல்ல நீச்சல்காரன், தண்ணீரில் மேலேயிருந்து குதிப்பது, குட்டிக் கரணம் போடுவது அவனுக்குக் கை வந்த கலை. மல்லாக்க நீச்சலடிப்பதும், நீரோட்டத்தோடு சேர்ந்தும், அதற்கு எதிராக நீச்சலடிப்பதும் அவனுக்குப் பிடிக்கும். ஒரு கரையிலி ருந்து மறுகரைக்கு நீச்சலடித்துப் போவதும், உடனே திரும்பி வருவதுமாக அவன் ஆற்றில் விளையாடிக் கொண்டிருந்தான்.

லியோன்காவும் லெனினைப் பார்த்தான். ஆனால் அவர் யார் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் கோர்க்கி கிராமத்துக்குச் சமீபத்தில்தான் வந்திருந்தான். அந்த ஊரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று லெனினை நினைத்துக் கொண்டான்.

அவன் தண்ணீரை விட்டு வெளியே வந்த பொழுது லெனின் அவனோடு பேசினார்.

“தண்ணீர் எப்படி இருக்கிறது?”

“தண்ணீரா? ஈரமாக இருக்கிறது” என்று லியோன்கா குறும்பாக பதில் அளித்தான்.

“ஈரமாக இருக்கிறதா?” என்று லெனின் பலமாகச் சிரித்தார். அவருக்கு அவனை மிகவும் பிடித்து விட்டது.

விளதீமிர் லெனின் ஆற்றங்கரையில் உட்கார்ந்து முதலில் தண்ணீரையும் பிறகு லியோன்காவையும் பார்த்தார். மறுபடியும் அப்படியே செய்தார். கடைசியில் அவனோடு பேச ஆரம்பித்தார்.

“வேகமாக நீந்துவது யார் என்று பார்ப்போமா?”

“ஓ! தாராளமாக!” என்று லியோன்கா பதில் அளித்தான்.

லியோன்கா நன்றாக நீந்தக் கூடியவன். ஆனால் லெனினும் அவனுக்குச் சளைத்தவரல்ல. என்ன இருந்தாலும் அவர் வோல்கா பிராந்தியத்தைச்

சேர்ந்தவராயிற்றே! நீச்சல் அடிக்கும்பொழுது யாராவது லெனினை முந்தி விட்டால் அது அபூர்வமான சாதனையே.

விளதீமிர் இலியீச்சும், லியோன்காவும் போட்டியிட்டு நீந்தினார்கள். ஆனால், லியோன்கா சீக்கிரத்தில் லெனினை முந்தி விட்டான். அவர் சற்று மனத் தாங்கலோடு தான் விடுதிக்குத் திரும்பினார்.

"அவன் என்னைத் தோற்கடித்து விட்டானே! இது நல்ல அறிகுறியல்லவே! எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் இருந்த உடல் பலம் போய் விட்டது."

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், லியோன்கா அன்று முழுவதும் லெனினுடைய மன நிலையைக் கெடுத்து விட்டான். ஆனால், லியோன்காவுக்கு மிகவும் குஷி. அவன் கோர்க்கிக்குத் திரும்பியதும் பக்ராவில் ஒரு பெரிய மனிதரை நீச்சல் போட்டியில் தோற்கடித்ததை எல்லோரிடமும் சொன்னான்.

"அவர் யார்?" என்று அவனுடைய நண்பர்கள் அவனைக் கேட்டார்கள்.

"அதிகமான உயரமில்லை. நடுத்தரம்"

"தாடி வைத்திருந்தாரா?"

"ஆமாம்"

"மீசை வைத்திருந்தாரா?"

"ஆமாம், மீசை வைத்திருந்தார்"

"உயரமான நெற்றியா?"

"ஆமாம்"

"அந்தப் பெரியவர் லெனின்" என்று குழந்தைகள் பலமாகக் கத்தின.

லியோன்கா ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தான். அன்று நடைபெற்ற சம்பவங்களை நினைத்த பொழுது அவனுக்குச் சங்கடமாக இருந்தது. அவன் லெனினிடம் குறும்பாகப் பேசியதோடு, நீச்சலிலும் அவரைத் தோற்கடித்து விட்டான். அடுத்த தடவை அவரைப்

பார்க்கும் போது அதற்குப் பரிகாரம் செய்வதென்று முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் அவன் ஆற்றங்கரைக்குப் போனான். மாலை வரையிலும் அங்கேயே இருந்தான். ஆனால், லெனின் அங்கே வரவில்லை. இப்படியே ஒரு வாரத்துக்கு மேல் அவன் தினமும் ஆற்றங்கரைக்குப் போனான். நல்லவேளையாகப் பத்தாவது நாளன்று லெனினை மறுபடியும் அங்கே பார்த்தான்.

"என்ன, தண்ணீர் எப்படி இருக்கிறது?'' என்று விளதீமிர் இலியீச் கேட்டார்.

"வெதுவெதுப்பாக இருக்கிறது. நல்ல வெதுவெதுப்பு. நீங்கள் நம்பக் கூட மாட்டீர்கள், விளதீமிர் இலியீச்!.''

"அப்படியானால் தண்ணீர் உண்மையிலேயே வெதுவெதுப்பாகத் தான் இருக்க வேண்டும்'' என்றார் லெனின்.

எப்படியாவது லெனினைத் தண்ணீரில் குதிக்கச் செய்ய வேண்டுமென்று லியோன்கா விரும்பினான்.

"தண்ணீரில் நீந்துவது சுகமாக இருக்கிறது. இறகு மெத்தையில் படுத்திருப்பது போல இருக்கிறது'' என்றான் லியோன்கா.

**லெனினும், லியோன்காவும் மறுபடியும் நீச்சல் போட்டியில் ஈடுபடுவதென்று முடிவு செய்தார்கள். ஒரு குச்சியைத் தண்ணீரில் தூக்கி எறிந்தார்கள். உடனே இருவரும் தண்ணீரில் குதித்தார்கள். லியோன்கா இந்தச் சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தான்.**

லியோன்கா நீந்தியது மாதிரித் தோன்றினாலும் அவன் உண்மையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அது மட்டுமல்ல. தன்னுடைய தந்திரம் வெளியே தெரியாமல் மறைத்துக் கொண்டான். ரொம்பவும் சிரமப்பட்டு மூச்சு விடுவது போல நடித்தான்.

ஆனால் லெனின் இதை கவனித்து விட்டார். லியோன்கா பக்கம் திரும்பினார்.

"என்ன தந்திரம் செய்கிறாய்?"

"விளதீமிர் இலியீச்! ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?" என்று லியோன்கா மறுப்புத் தெரிவித்தான். அவன் லெனினிடம் பொய் சொன்னான்! அதிலும் சிறிதும் வெட்கப்படாமல் பொய் சொன்னான். அவன் பொய் சொல்கிறான் என்பதை லெனின் புரிந்து கொண்டார். அவனுக்குச் சவால் விடுவதென்று தீர்மானித்தார்.

விளதீமிர் இலியீச் தன்னுடைய வேகத்தைக் குறைத்தார். அவர் திரும்பிப் பார்த்தார் - லியோன்காவும் வேகத்தை குறைத்து விட்டான். லெனின் மேலும் வேகத்தைக் குறைத்தார். ஆனால், அப்பொழுதும் லியோன்கா, அவரை முந்தவில்லை. அவர்கள் அந்தக் குச்சிக்கு அருகில் வர வர அவர்களுடைய நீச்சல் வேகமும் குறைந்தது. இப்பொழுது அவர்கள் நீச்சலை நிறுத்தி விட்டு மிதந்து கொண்டிருந்தார்கள்.

லெனின் லியோன்கா பக்கம் திரும்பினார். "இப்பொழுது என்னிடம் மாட்டிக் கொண்டாய்" என்றார்.

தன்னுடைய தந்திரம் அம்பலமாகி விட்டது என்பதைப் புரிந்து கொண்ட லியோன்கா, அவமானத்தால் தலையைக் குனிந்தான்.

"லியோன்கா! இது சரியில்லை" என்றார் லெனின். அப்பொழுது அவர்கள் கரைக்குப் பக்கமாக இருந்தார்கள். "நாம் மறுபடியும் போட்டியை ஆரம்பிக்க வேண்டியது தான்."

மறுபடியும் அவர்கள் குச்சியைத் தண்ணீரில் விட்டெறிந்தார்கள். மறுபடியும் இருவரும் தண்ணீருக்குள் குதித்தார்கள். தன்னுடைய மோசடி பலிக்காதென்று லியோன்காவுக்குப் புரிந்தது. எனவே, இப்பொழுது அவன் தன்னுடைய முழு பலத்தோடும் நீந்தினான். அவன் என்ன பாடுபட்டும் லெனினைத் தொட்டு நீந்த முடிய வில்லை. அவரை முந்திவிட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தான். கைகளை மாற்றி மாற்றி வேகமாகப் போட்டான். ஆனால் பலனில்லை. இப்பொழுது அவனுக்கு உண்மையாகவே

மூச்சு வாங்கியது. அவனால் லெனினைத் தொடர்ந்து நீந்த முடியவில்லை.

லியோன்கா போட்டியில் தோற்று, முக வாட்டத்தோடு வீட்டுக்குத் திரும்பினான்.

ஆனால் விளதீமிர் இலியீச், மகிழ்ச்சி பொங்க விடுதிக்குத் திரும்பினார்.

"நம்முடைய அணி பலமிழந்து விட்டதாக நினைக்க வேண்டியதில்லை என்பதை இது காட்டுகிறது. நம்மிடம் பலமிருக்கிறது...."

அவர் போகும் வழியில் இப்படி சிந்தித்தார். "இன்றைக்குப் பெரிய வெற்றியே. இனி மேல் நான் ஓய்வெடுக்க வேண்டியதில்லை என்று தெரிகிறது. பழைய வெடிமருந்துக் கிடங்குதான். ஆனால் இன்னும் வெடிமருந்து இருக்கிறது."

பாவம்! லியோன்கா. பரிதாபமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் லெனினுக்கு முதல் இடம் கொடுப்பதற்குத்தான் விரும்பினான். அவன் விரும்பிய படியே நடந்தது. ஆனால்..... போட்டி வளர்ச்சியடைந்த பொழுது இப்படி முடிவு ஏற்படும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை."

உடன்பிறப்பே, இந்த நிகழ்வு எதை உணர்த்துகிறது? அல்லது எந்தப் பாடத்தை அறிவுறுத்துகிறது? தோல்வியைத் தாங்கிப் பழகிடாத ஒரு வைராக்கிய உள்ளத்தையும் - தோற்றவர், துவண்டுவிடாமல் இருக்க வேண்டுமே என்ற ஓர் நல்ல எண்ணத்தையும் புலப்படுத்துகிறது! லெனின் வாழ்க்கையில் சுட்டிக்காட்டப்படும் இந்த நிகழ்வு, இரு விதமான இயல்பும் இளைஞர்களுக்கும் வாய்த்திட வேண்டும் என்று எண்ணுகிறோம் அல்லவா? அந்த இனிய இயல்பு லியோன்காவுக்கு அமைந்துள்ளது போல நமது இளைஞர்களுக்கும் அமைய வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அப்போதுதானே அகவையில் மூத்தோர் பாராட்டுவர்! புகழ்வர்!

அன்புள்ள,

**மு.க.**

8-11-2007

# 3291. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (3)

# சிங்கத்தின் குகையில் சிலந்தி கூடுகட்டுவதா?

**உடன்பிறப்பே,**

நெருக்கடி கால நெருப்பின் "ஜ்வாலை" அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அனற் பிழம்பாய்க் கொதித்த போது, இப்போது குடும்பக் கட்சி என்று குதர்க்கம் பேசுகிற குள்ளநரிக் கும்பல், இந்தக் குடும்பம் இருக்கும் திசையின் பக்கம் கூடத் திரும்பிப் பார்த்தது கிடையாது. நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு. கழகச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, 1976ல் ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிப்பு - அடுத்த நாள் காலை முதல் அதிகாரிகள் படையெடுப்பு - முன்னாள் அமைச்சர்கள் - நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள், சட்டமன்றக் கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் என்று ஆயிரம் பேர் கைது - எந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல்கூட தெரியாத நிலைமை - தம்பி மாறனையும், தம்பி ஸ்டாலினையும் வீட்டுக்குள் நுழைந்து போலீஸ் அதிகாரிகள் கைது செய்தது தான் தெரியும். அவர்களை எந்த ஊர் சிறைக்குக் கொண்டு சென்றார்கள் - எங்கே அடைத்துள்ளார்கள் என்று தெரியாது - இருபது நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் சென்னைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் - சென்னை சிறையில் அடைபட்டுள்ள கழகக் கண்மணிகள் அனைவரையும் சிறைக் கூண்டுகளுக்குள்ளேயே காவலர்கள் கடுமையாக அடித்து உதைத்துச் சித்ரவதை செய்தார்கள் என்பதும் காட்டுத் தீ போல் மூலை முடுக்குகள் எல்லாம் செய்தியாகப் பரவியது.

சென்னைச் சிறையில் இருந்தவர்களை - சிறையில் நேர் காணலுக்கே, எனக்கும், என் குடும்பத்தாருக்கும் நாற்பது நாட்களுக்குப் பிறகே அனுமதி கிடைத்தது - அதுவும் சிறை வாசலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்த பிறகே - அந்த அனுமதியும் வழங்கப்பட்டது. இந்தக் கொடுமை ஓராண்டு நீடித்தது. அந்த ஓராண்டு காலமும்

அது வரையில் நெருங்கிப் பழகிய நண்பர்கள், கழகத்தின் சார்பில் பெரும்பதவிகளை அனுபவித்தவர்கள், "அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள், மனித உருப்பெற்று வந்தால் எப்படிக் காட்சியளிப்பர்" என்பதை, எனக்கும், இந்த இயக்கத்திற்கும் அனுபவ ரீதியாக உணர்த்தி விட்டனர் என்றே சொல்லலாம்.

அவர்களில் சிலர், நெருக்கடி காலம் நீங்கி, "ஜனநாயக" மறுமலர்ச்சி ஏற்பட்டபோது, கழகத்தையும், என்னையும் நாடித் திரும்பியதை மறந்துவிட முடியாது. அவர்கள் யார் என்பதை அவர்களே அறிவார்கள் என்பதால் இப்போது அதை நான் நினைவூட்ட விரும்பவில்லை.

ஒரு நிகழ்ச்சி - உனக்குச் சொல்லியாக வேண்டும். உயிருக்குயிராக என்னுடன் பழகிய தோழர் - அவரும், அவருடன் நான்கைந்து பேரும் - நெருக்கடி காலம் முழுதும் என்னிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றிருந்தவர்கள் - சிரித்த முகத்துடன் என்னைச் சந்திக்க வந்தார்கள் - வாசலில் அடியெடுத்து வைத்ததுதான் தாமதம் - "அட, துரோகிகளா! இப்பத்தான் இந்த வீடு அடையாளம் தெரிந்ததா? - எல்லோரும் செத்து விட்டோம் என்று இதுவரை நினைத்து வராமல் இருந்தவர்கள், இப்ப மட்டும் எங்கே வந்தீங்க?"

என்று உரத்த குரல் ஒன்று கேட்டு, வெளியே ஓடிப் போய்ப் பார்த்தால் என் மகன் மு.க. அழகிரியின் குரல்தான் அது!

"என்னப்பா அழகிரி! ஏன் அவுங்களை விரட்டுறே?"

"அப்பா - எமர்ஜன்சின்னு எங்கேயோ ஓடிட்டு - இப்ப வந்திருக்காங்க - இவுங்களை நான் உள்ளே விடமாட்டேன்."

தம்பி அழகிரி, இனிய இயல்புடன் கழகத்தினரிடம் அன்புடன் பழகுவதையும் கண்டிருக்கிறேன் - பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன் - நன்றிக்குப் பொருள் தெரியாதவர்கள், கழகத்தை வெறும் பதவி பிடிக்கும் கருவியாக மட்டும் கருதுகிறவர்கள் மீது, கடுமையான வெறுப்பு உமிழ்வதையும் கண்டுணர்ந்திருக்கிறேன் - அளவோடு இருந்தால் இரண்டு சுபாவங்களுமே இளைஞர்களுக்கு இன்றி யமையாத் தேவைகள்தான்.

உடன்பிறப்பே, என்னுடைய பிள்ளைகள், பெண்கள் இன்று கழக ஆர்வலர்களாக இருப்பதால், வயிறெரிந்து வசை

பாடுகிறார்களே! வார ஏடுகள், நாளேடுகளில் கூட "வாரிசு" - "குடும்பம்" என்றெல்லாம் விஷத்தைக் கக்கிய வண்ணம் இருக்கிறார்களே! அவர்கள் நான், நேற்று எழுதிய இளம் வயது லெனின் பற்றிய கட்டுரை தீட்டிட நான் படித்த லெனின் வரலாற்றைப் படித்தால் அறிந்து கொள்ளக் கூடும்; "வில்தீமிர் உலியானவ் எனப்படும் லெனின் மற்றும் ஆன்னா, அலெக்ஸாந்தர், ஓல்கா, திமீத்ரிய், மரீயா எனும் ஆறு பேர் சகோதரர்கள்! அந்த நூலாசிரியர் கூறுகிறார்! மொத்தம் அந்த ஆறு பிள்ளைகளும் புரட்சிக்காரர்களாக விளங்கியது தற்செயல் அல்ல" என்பதாக! அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள் எல்லோருமே இயல்பாகவே புரட்சிக் கருத்துக் கொண்டவர்களாக விளங்கியதால் பெருமையடைந்தனர் பெற்றோர் - ஆனால், இன்னமும் இங்கேதான் வாரிசு, குடும்பம் என்று வயிறு எரிந்து வக்கணை பேசிக் கொண்டிருக்கின்றனர். என் குடும்பத்துப் பிள்ளைகள் ஆறு பேரும் இயக்க ஆர்வம் படைத்தவர்கள் - இலட்சியம் காப்பவர்கள் - தொண்டர்க்குத் துணை நிற்பவர்கள்.

என் குடும்பத்திலாகட்டும், இயக்க முன்னோடிகள் வீட்டுப் பிள்ளைகளாகட்டும், தந்தை வழியில் தன்மானம் போற்றித் தமிழகம் காத்திடும் ஆக்கப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது எவ்வாறு தவறாகும்? அவர்கள் போற்றுதலுக்குத் தகுதி படைத்தவர்களன்றோ?

நான், 1957 ஆம் ஆண்டு, குளித்தலையில் போட்டியிட்டபோது, முதலில் என்னை வரவேற்று வாழ்த்தியவர், அந்த ஊர்ப் பெரியவர்களில் ஒருவரான வையாபுரிச் சோழகர் - அவர் பழுத்த காங்கிரஸ்காரர் - அவர் மூத்த மகன் திராவிடர் கழகம் - அவருக்கு அடுத்த மகன் தி.மு. கழகம் - அவர்களுடைய பிள்ளைகுட்டிகள், பேரன், பேத்திகள் மொத்தம் குடும்பத்தினர் பதினைந்து பேர் இருக்கும். ஆளுக்கொரு கட்சி! அப்படியும் ஒரு குடும்பம் - எல்லாப் பிள்ளைகட்கும் திராவிட முன்னேற்றக் கழகப் பற்று என்பதாக இப்படியும் ஒரு குடும்பம்.

இதிலும் என் குடும்பத்து பிள்ளை - என் பிள்ளை என்பதால் ஸ்டாலினுக்குச் சிறப்பா? அவர் அல்லும் பகலும், ஓடியாடி, அலைந்து திரிந்து, இயக்கப் பணியை ஓய்வின்றி ஆற்றுவதால்தானே உடன்பிறப்புகளாம் உன் போன்றோர்

இதயத்தில் இடம் பெற்றுள்ளார் - நெருக்கடி கால நெருப்பாற்றைக் கடந்து வந்தது சாதாரணமா, இதோ! "சிட்டிபாபுவின் சிறை டைரி" என்ற நூலில் சிங்க ஏறு சிட்டிபாபுவே தன் கைப்பட ஸ்டாலினைப் பற்றி எழுதியுள்ள வாக்கியங்கள்! இன்று வார ஏடு நடத்தும் சிலர் வயிறெரிந்து பாடுகிறார்களே, அது வசைபுராண வரிகளா? அல்லது வாழ்த்துக் கீதங்களா? அதுவும் தனது ஆருயிரைக் காராக்கிரகக் கொடுமைக்குக் காவு கொடுத்த கழகக் காளை - என் அருமைத் தம்பி - சிட்டிபாபுவின் இதயமல்லவா எழுத்துகளைக் குருதியில் நனைத்துக் கொட்டி அடுக்கியிருக்கிறது!

இதோ - அந்தக் கண்ணீரும் செந்நீரும் - கலக்க காராக்கிரகக் கொடுமையைப் படிப்போம் உடன்பிறப்பே, படிப்போம்!

"வெறிக் கூட்டம் முரசு பறை அறைவது போல் இரு கைகளால் அடிகொடுத்து கொண்டிருந்தன. ஒரு புறத்தில் இக்காட்சி, பள்ளிக்கூட மாணவன் பெஞ்ச் மீது நிற்பது போல் இரும்பு ஏணி அருகில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கதறும் "வி.எஸ்.ஜி." ஒரே குத்துத்தான் நீலத்துக்கு (நீலநாராயணன்). குள்ள உருவம் நீலம். மேலே நிமிர்ந்து பார்த்திட மார்பகத்தில் மற்றொரு குத்து! முதுகில் இரண்டு தடி அடி! அவ்வளவுதான்! குலை நோயில் கேவிக் கொண்டு கீழே விழும் நோயாளி போல் சுருண்டு விழுவதைக் கண்டேன். கால் எடுத்து வைத்து கை கொடுக்க முடியுமா என்று அசைந்தேன். தொண்டையில் ஓர் குத்து எனக்கு! மீண்டும் சுவற்றில் தள்ளப் பட்டேன். அய்யோ! என்று சாய்ந்தேன் நான்.

அருகே என் அன்புத் தம்பி! ஆமாம், ஸ்டாலின்தான், தமிழகத்து முதல் அமைச்சரின் மகன் என்று நேற்று வரை அறிந்த அந்த ஆசிரியன் (சுருளிராஜன்) தன் கால் பூட்ஸால் அவன் அழகிய முகத்தைச் சுவைபார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள் பட்டையில்! காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான், கண்டேன் காட்சியை! இவர்கள் இவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

மற்றவர்கள் தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள். என்ன செய்வது? எனக்கென்று ஓர் துணிவு! திடீர் என்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியை தள்ளிக் கொண்டே தடிகள் கழுத்தில்!

அவைகள் அடிகள் அல்ல. உலைக்களத்தில் பழுத்துக் காய்ச்சிய இரும்பை தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாற்றி விடும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது. கழுத்தில் அத்தனையும் தாங்கிக் கொண்டேடன். அன்புத் தம்பி அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது.

வீராசாமியைத் தூக்கி நிறுத்தி ஒரு குத்து விட்டு உள்ளே தள்ளினர். நீலம், மூச்சுத் திணற வி.எஸ்.ஜி.யை தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார். தம்பியோ, தான்பட்ட அடி மறந்து தன் உடன் பிறப்புகளை உள்ளே அழைத்துச் செல்லும் காட்சி கண்டேடன். அவர்களைப் படுக்க வைக்க தன் தோள் துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களைத் தாங்கி படுக்க வைத்த காட்சி கண்டேடன். என்னை ஒருவன் வாடா தம்பி வா என்று வாயில் ஓர் குத்துவிட்டு உள்ளே தள்ளினான்."

சிறையில் நடந்த மிசாக் கொடுமையைத்தான் சிட்டிபாபு இப்படிக் கண்ணீர்க் காவியமாக்கிக் கைப்பட எழுதியுள்ளார்.

கழகக் குடும்பத்தினருக்கு அன்பு அரவணைப்பாகவும், மாறுபட்டவர்க்கு அங்குசமாகவும் விளங்கிடும் அழகிரியும் - தியாகத் தீயில் புடம்போட்ட தங்கமாக ஒளிர்ந்திடும் ஸ்டாலினும் என் ஒரு குடும்பத்தில் மட்டுமல்ல - உன் போன்ற உடன்பிறப்புகள் பலரது குடும்பங்களிலும், அண்ணன், தம்பிகளாக இருக்கின்றார்கள் - அல்லது தணற் காட்டைத் தாமரைப் பொய்கையாக மதிக்கும் தன்மானச் சிங்கங்களாக இருக்கிறார்கள். இருப்பதால்தான் இத்தனை புயல், வெள்ளம், பூகம்பங்களுக்கு ஈடு கொடுத்து இந்த இயக்கத்தின் கொள்கைகள், திட்டங்கள் பூத்துக் குலுங்குகின்றன.

இந்த நறுமணமிக்க நந்தவனத்தில் நுழைந்து, பூக்களையும், செடிகொடிகளையும் நாசப் படுத்தலாமா என்று கணக்கிடுவோரை -

அவர்தம் காரியம் கை கூடாமல் தடுத்து விரட்டிட இன்னும் இளைஞர்கள் பல்லோர், நமது நந்தவனத்து வேலிகளில் அமைந்துள்ள வேல் கம்புகளாக விளங்கிட விரைந்து வாரீர் என அழைக்கின்றேன். கருதிப் பார்த்து கடமையைச் செம்மையாகச் செய்திடுவீரானால், சிங்கத்துக் குகையில் சிலந்திகள் கூடு கட்டிட முடியாது! நமது புலிப்போத்துகள் முன்னே, புத்திகெட்ட நரிகள் நடத்திட முனையும் பிரித்தாளும் சூழ்ச்சி, வீழ்ச்சியில்தான் இடறி வீழ்ந்து முடியும் என்பது திண்ணம்!

அன்புள்ள,

**மு.க.**

10-11-2007

# 3292. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (4)

## மறையாத வடுக்களும்; மரத்தின் நிலையான வளர்ச்சியும்!

**உடன்பிறப்பே,**

எழுச்சி முரசமும், எமக்கினிய தோழரும் திராவிடர் இயக்கத்தின் "திருஞான சம்பந்தர்" என்று அறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டவரும், பெரியார் அவர்களின் பேரன்புக்குப் பாத்திரமானவருமான தமிழர் தலைவர் எனப் போற்றப்படும் வீரமணி அவர்கள், நமது பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காட்டார், தம்பி துரைமுருகன், தம்பி வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த என் வீட்டுக் கூடத்தில் ஒன்று சொன்னார்.

"இளைஞர்களுக்கு வழி விடுவோம்" என்று முரசொலியில் வருகிற கடிதங்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. ஒருமுறை சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு உவமை சொன்னீர்கள்! அந்த உவமையை எப்படியாவது மீண்டும் இந்தக் கடிதக் கட்டுரையில் நினைவுபடுத்துங்கள், அற்புதமான உவமை அது! கட்டுரைக்கும் பொருத்தமாகவும் இருக்கும்!" என்று புகழ்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார்.

1981ஆம் ஆண்டு நான் எழுதி வெளிவந்த "பேசும் கலை வளர்ப்போம்" என்ற நூல் வரிசையாக எட்டுப் பதிப்புகள், "பாரதி பதிப்பக"த்தின் வாயிலாக வெளிவந்தன. அவற்றில் முதல் பதிப்பிலேயே நான் "பேசும் கலை" வளர்த்தவர்களின் பட்டியலிலே வீரமணியார் அவர்களையும் இணைத்து எழுதியிருந்தேன். அதில் ஒரு பகுதி வருமாறு :-

> "இப்போது வயது நாற்பத்தி ஆறு. தோற்றம் வயதைத் தெரிவிக்காது என்றாலும், நன்கு முதிர்ச்சி

பெற்ற கருத்துகளை மேடைகளில் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். சற்றுக் குனிந்து வளைந்து, ஆனால், யாருக்கும் வளையாத கொள்கைகளை அள்ளித் தருகிறார். கறுப்புச் சட்டை மேனியை அலங்கரிக்கிறது. கையிலே சொற்பொழிவுக்கான குறிப்புகள். அருகேயுள்ள மேஜையிலே அன்றைய பேச்சுக்கான ஆதாரங்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பான பெரிய பெரிய புத்தகங்கள். "இங்கே தான் நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அதுதான் முக்கியமானது, மிக மிக முக்கியமானது" என்ற சொற்றொடர் அடிக்கடி பேச்சிடையே வந்து கொண்டிருக்கிறது. மணிக்கணக்கில் பேசுகிறார். யார் இவர்? வேறு யாருமல்ல! தனது பத்தாவது வயதிலேயே திராவிடர் இயக்க மேடைகளில் பேச ஆரம்பித்தவர் – இன்றைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் – விடுதலை நாளிதழின் ஆசிரியர் – வீரமணி அவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

பத்து வயது முதற்கொண்டே பெரியாருடன் பணி புரிந்து கொண்டு – பள்ளியிலும் பயின்று – கல்லூரியிலும் பட்டம் பெற்று – திராவிடர் கழகத்தின் ஓய்வறியாத் தொண்டராகவும் விளங்கிய வீரமணி, இளந்தளிர்ப் பருவத்திலே மேடையிலே பேசுகிற வியப்புமிகு நிகழ்ச்சியைக் காணப் பெருங்கூட்டம் திரளும்."

இன்னும் சில நாட்களில் 75 வயது நிறைவடைய இருக்கும் அந்தப் பெரியாரின் பெருந்தொண்டரை, என் இனிய இளவல் தமிழர் தளபதி வீரமணியை விழா மேடையில் வாழ்த்த இருக்கிறோம் – எப்படி? அந்த இளைஞருக்குப் பெரியாரின் தலைமையில் உள்ள பேரியக்கம் வழி விட்டு, வாழ்த்திப் போற்றியதால்தானே, இன்று திராவிடர் இயக்கத்தை சமுதாயப் புரட்சி இயக்கமாகத் தூக்கி நிறுத்திடத் துணை நிற்க முடிந்தது!

உடன்பிறப்பே, என்னை விட்டு விட்டு, சற்று சுற்றுமுற்றும் கொஞ்சம் அண்ணாந்து பார்த்தால் இப்போது பேராசிரியர் மட்டும்தானே, பொதுச் செயலாளர் எனும் புகழ் மகுடம் – பொறுப்பு மகுடம் தாங்கி புன்னகை சிந்திக் காணப்படுகிறார் – அவர் எப்படிக் கிடைத்தார் இந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராக?

திருவாரூரில் திராவிடர் இயக்கத் தொண்டனாக நான் அறிமுகமாகியிருந்தபோது, திருவாரூர் விஜயபுரம் சிக்கந்தர் விழாவுக்கு வந்த அண்ணா அவர்கள், "நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவர் ஒருவரை அழைத்து வந்துள்ளேன். அவர் முதலில் பேசுவார்" என்றார். இளைத்த உருவத்தினராய், இனிய குரலெடுத்து அன்பழகனார் அப்போது ஆற்றிய உரை, "இந்த இளைஞர்களுக்கெல்லாம் இந்த இயக்கம் வழி விட வேண்டியதுதான்!" என்பதை நிலைநாட்டிடும் வண்ணம் அமைந்தது. அண்ணா கண்டெடுத்த அற்புத வைரமணி அன்பழகன் என்ற உண்மையும் - அனைவரையும் ஆரத் தழுவியது!

அந்த வரிசையில் மற்றும் எத்தனை எத்தனை இளைஞர்கள் - நெடுஞ்செழியன், மதியழகன், முரசொலி மாறன் - ஈ.வெ.கி. சம்பத், கண்ணதாசன் - ஆசைத் தம்பி - எஸ்.எஸ். தென்னரசு - எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் - தங்கபாண்டியன் - தா. கிருட்டிணன் - கம்பம் ராஜாங்கம் - கம்பம் நடராசன் - பொன். முத்துராமலிங்கம் - அக்னிராஜ் - மேலூர் மலைச்சாமி - ரகுமான்கான் - ஜின்னா - என்.வி.என். சோமு - சாதிக்பாட்சா - திருமதி சற்குணம் - ரெத்தினவேல் பாண்டியன் - அழகிய நம்பி - ஏ.எல். சுப்பிரமணியம் - எம்.சி. பாலன் - செ. மாதவன் - இளம்பரிதி - ஏ.பி. சனார்த்தனம் - தவமணி ராசன் - கருணானந்தம் - இளம்வழுதி - நாஞ்சில் மனோகரன் - சி.டி. தண்டபாணி - சத்தியவாணி முத்து - அரங்கண்ணல் - வில்லாளன் - பொற்செல்வி - வெங்கடாசலம் - கே.ஏ. கிட்டு - டி.கே. சீனிவாசன் - எஸ். டி. சோமசுந்தரம் - எல். கணேசன் - வைகோ - துரைமுருகன் - முரசொலி செல்வம் - அறிவழகன் - ஆலடி அருணா - மைனர் மோசஸ் - பெ. சீனிவாசன் - காளிமுத்து - காமராசன் - செஞ்சி ராமச்சந்திரன் - கண்ணப்பன் - உ. பில்லப்பன் - உ. திருஞானம் - ஜீவா கலைமணி - நாவளவன் - ராஜா முகமது - வேங்கடபதி - உடையப்பன் - தஞ்சை சுல்தான் - முல்லை சத்தி - வி. மாயவன் - நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி - பண்ருட்டி ராமச்சந்திரன் - ஜெ.எஸ். ராஜி - செ. கந்தப்பன் - க.பொன்முடி - புதுக்கோட்டை ராமனாதன் - எம். கமலநாதன் - கவிஞர் வேழவேந்தன் - சபாபதி மோகன்.

இப்படி வீறுநடை போட்டு வந்த இளைஞர் பட்டாளம்! அதில் ஒரு சிலர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும் - ஒரு சிலர் அறிஞர் அண்ணாவுக்கே பகைவராக மாறியும் - வேறு முகாம் சென்றனர் -

அல்லது விலக்கப்பட்டனர். ஒருசிலர் மறைவெய்தியும் விட்டனர். பெரியாரிடமிருந்து பிரிந்திட நேர்ந்தபோது, அண்ணா அவர்கள், பெரியாரிடம் வைத்திருந்த மதிப்பு மரியாதையை என்றைக்கும் குறைத்து ஒரு வார்த்தை கூறியதில்லை. ஆனால் அண்ணா தலைமையைப் பிரிந்த இவர்களில் சிலர், அண்ணாவை ஏசிப் பேசிட என்றுமே தயங்கியதில்லை. அத்துணை நன்றியையும், அரசியல் நாகரிகத்தையும் தம்மை வளர்த்த இயக்கத்திடமும், தலைமையிடமும் காட்டி நடந்து கொண்டனர் என்பதை நாடறியும்.

இப்படி, இளைஞர்கள் குவிந்த வேளையில் தான் கொள்கைப் பற்றும், லட்சிய வெறியும் கொண்டு கழகத்தைக் கண் போல் காத்தோர் ஒரு புறம் - கட்டுப்பாடு மீறி காட்டிக் கொடுத்தோர் ஒரு புறம் - கட்சியைப் பயன்படுத்தி வளர நினைத்தோர் ஒரு புறம் - எனினும், பெரும்பான்மை இளைஞர் பட்டாளத்தினர் வலிவு பெற்று வளர்ந்தது இந்தக் கழகம்.

ஒரு நிகழ்ச்சியில் நமது வீரமணி எனக்கு நினைவூட்டிய அந்த உவமையைப் பற்றிச் சொன்னேன் அல்லவா! என்ன உவமை அது?

“ஒரு தென்னங்கன்றை நட்டுத் தினந்தோறும் நீர் ஊற்றி வளர்க்கிறோம். மூன்று நான்கு மாதங்கள் சென்று ஒரு மட்டை காய்ந்து உலர்ந்து மரத்திலிருந்து விழுந்து விடுகிறது. தென்னையிலிருந்து மட்டை விழுந்தாலும், அந்த மட்டையிருந்த இடத்தில் ஏற்பட்ட “வடு” மறைவதில்லை. அந்த வடுவும் கால் வைத்து ஏறிடத் தோதாகவே அமைகிறது. இப்படி ஒவ்வொரு மட்டையாக வளர்ந்து வளர்ந்து, தென்னை மர வளர்ச்சிக்கும் பயன்பட்டு; இறுதியாக உலர்ந்து விழுந்து விட்ட போதிலும், அந்த மரத்தில் ஏறுவதற்கு உதவிடும் படிகள் போல அந்த வடுக்கள் அமைந்து உதவிடுகின்றன அல்லவா?”

இதைத்தான் நான் ஒரு நிகழ்ச்சியில் உவமையாகத் தெரிவித்து விளக்கினேன். அதற்குப் பொருள், ஒரு இயக்கத்தின் வளர்ச்சி என்பது, அந்த இயக்கத்தின் முன்னோடிகள் தந்திடும் உழைப்பும், தியாகமும் தான் - அவர்கள் அமைத்த படிக்கட்டுகள் தான், தென்னை மரத்தின் வடுக்கள் போன்றவை. மட்டை விழுந்தாலும் மரத்தை வளர்க்கிறது என்பதை, அந்த மறையாத

வடுக்கள் சாட்சியாக இருந்து நிரூபிக்கின்றன அல்லவா? இதனை உணர்ந்தால் எப்போதுமே இளைஞர்களும், மூத்தோர்களும் ஓர் இயக்க வளர்ச்சிக்கு இரு வகையில் தேவை என்பதை உணர முடியும்.

குறுந்தொடராக வரும் இந்தக் கடிதத் தொகுப்பில் கொள்கைக் குறிக்கோளுடன் நமது திராவிடர் இயக்கம் வளர்ந்த நிலையையும், அதன் தொடக்கத்தையும் தெரிந்து கொள்வோம்.

1936ஆம் ஆண்டு திருவாரூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார். அவர் தனது அறையில் உட்கார்ந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். பன்னிரண்டு வயதுள்ள ஒரு பையன் திடீரென்று அவரது அறையினுள்ளே ஓடுகிறான். வாயிலில் "பங்கா" இழுத்துக் கொண்டிருந்த "பியூன்" தடுத்தும் கேட்கவில்லை. தலைமை ஆசிரியர் அந்த இளைஞனைக் கண்டு திகைக்கிறார்.

"யார்? யாரப்பா? என்ன வேணும் நோக்கு?" என்று கேட்டபடி எழுகிறார்.

"சார், என்னை எப்படியாவது இந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்கிறான் பையன்.

"எந்த வகுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும்? எதில் சேருவதானாலும் பரிட்சை எழுதியாக வேண்டும்"

"பரிட்சை எல்லாம் எழுதிவிட்டேன் சார். முதலில் இரண்டாம் படிவப் (II Form) பரிட்சை எழுதினேன். பிறகு முதல் படிவப் பரிட்சை எழுதினேன். இப்போது ஐந்தாம் வகுப்பில் கூட எனக்கு இடமில்லை என்கிறார்கள்."

"ஏன் இப்படி மேலேயிருந்து கீழே எழுதிக் கொண்டு வந்தாய்?"

"என் கிராமத்து ஆசிரியர் என்னை இரண்டாம் படிவத்தில் (II Form) சேர்ப்பதாக உறுதியளித்து அழைத்துவந்தார். அதை நம்பி என் தந்தையும் வந்தார். ஆனால் கிராம ஆசிரியர் அளித்த பயிற்சி அப்படி!"

"அதற்கு நான் என்ன செய்வது தம்பி?"

"உயர்நிலைப் பள்ளியில் சேராமல் ஊருக்குத் திரும்பினால், எல்லோரும் கேலி செய்வார்கள். எப்படியாவது ஐந்தாம் வகுப்பில் என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள்!"

"இடமில்லை என்று சொன்ன பிறகு எப்படியப்பா முடியும்? முடியாதப்பா முடியாது!"

"முடியாதா? இதோ உங்கள் கண் முன்னாலேயே எதிரே உள்ள தெப்பக் குளத்தில் விழுந்து சாகப் போகிறேன்!"

இதைச் சொல்லியபடி பையன் கண் கலங்க நின்றான். தலைமை ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. அவருடைய நினைவில் எதிரேயுள்ள கமலாலயம் என்ற புகழ் பெற்ற தெப்பக்குளம் சுழன்றது. கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி என்று பாராட்டப் பெறும் திருக்குளம் அது. அதன் பாசி பிடித்த படிக்கட்டுகளில் வழுக்கி விழுந்து எத்தனையோ பேர் முழுகிப் போயிருக்கிறார்கள். வேண்டுமென்றே பலர் அந்தக் குளத்தில் விழுந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டுமிருக் கிறார்கள். அப்படிப்பட்ட குளத்தைப் பற்றிப் பையன் சொன்னதும் தலைமை ஆசிரியர் அதிர்ச்சியடைந்துதான் போனார். சிறிது யோசித்தார். பிறகு பையனைத் தட்டிக் கொடுத்தார். ஐந்தாம் வகுப்பில் அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. "வெற்றி" என்றபடி வெளியே ஓடி வந்தான். ஆசையோடு நின்று கொண்டிருந்த அவனது அருமைத் தந்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினான். ஐந்தாம் வகுப்பில் முதன்மையான மார்க்குகள் பெற்று அந்த ஆண்டு அந்தப் பையன் வெற்றி பெற்றான். அவன் வேறு யாருமல்ல! நானே தான் என்பதைக் கூறத் தேவையில்லை!

என்னுடைய உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையின் ஒரு தொடக்கச் சம்பவம்தான் அது. ஐந்தாம் வகுப்பில் "பனகல் அரசர்" என்ற தலைப்புள்ள (Non-Detail) புத்தகம் துணைப் பாடக் கட்டுரையாக எங்களுக்கு வைக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ ஐம்பது பக்கங்கள் இருக்கும். வகுப்பிலே நான் ஒருவன்தான், அந்தச் சிறு நூல் முழுவதையும் அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிப்பேன். அந்தப் பனகல் அரசர் என்ற புத்தகம் தான் எனக்கு அரசியல் அரிச்சுவடியாகக் கூட அமைந்தது எனலாம்.

திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமையேற்று, அவர்களது தளையகற்றப் பெரும்பணியாற்றி, அரசியல் சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்கு இடமளிக்க சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் நடேச முதலியார், டாக்டர் டி.எம். நாயர், பனகல் அரசர் ஆகியோர் ஒன்று கூடி, 1916ஆம் ஆண்டு நவம்பர்

திங்கள், சென்னையில், "தென்னிந்திய நல உரிமைச் சங்கம்" எனும் பெயரால் ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்தனர். அந்தக் கட்சியின் கொள்கைகளை வெளியிடவும், பரப்பவும், டாக்டர் நாயரை ஆசிரியராகக் கொண்டு "ஜஸ்டிஸ்" என்ற பெயருடன் ஓர் ஆங்கில நாளிதழும், பக்தவத்சலம் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு "திராவிடன்" என்னும் தமிழ் நாளிதழும், ஏ.சி. பார்த்தசாரதி நாயுடுவை ஆசிரியராகக் கொண்டு "ஆந்திரப் பிரகாசினி" எனும் தெலுங்கு இதழும் தொடங்கப் பெற்றன. மெல்ல மெல்ல ஆங்கிலப் பத்திரிகையின் பெயரிலேயே கட்சியின் பெயரும் "ஜஸ்டிஸ்" கட்சி என்று அழைக்கப்படும் நிலை பெற்று விட்டது.

இந்திய வைஸ்ராய் செம்ஸ்ஃபோர்டு பிரபுவும், இந்தியா மந்திரி மாண்டேகு பிரபுவும், 1917ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் சென்னை வந்த போது, ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள், திராவிடர்களின் நிலையை விளக்கி ஓர் அறிக்கையை முன் வைத்தனர். அப்போது நடந்த "ஹோம்ரூல்" இயக்கத்தின் திட்டங்களை விட, ஜஸ்டிஸ் கட்சியினர் விடுத்த அறிக்கையே திராவிட சமுதாயத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தியது. பின்னடைந்த, தாழ்த்தப்பட்ட சமுதாயங்களின் அவல நிலையை அந்த அறிக்கைதான் விளக்கியது. இந்த அறிக்கைக்குப் பிறகு, தாழ்த்தப் பட்ட மக்கள் ஜஸ்டிஸ் கட்சி என்ற நீதிக் கட்சியில் இணைந்து செயல் புரிந்தனர்.

என். சிவராஜ், எம்.சி. ராஜா, இரட்டைமலை சீனிவாசன் போன்ற பெருந் தலைவர்கள் எல்லாம் நீதிக் கட்சியின் மூலமாக நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஒளியேற்றிட முன் வந்தனர். 1919ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 17ஆம் நாள், டாக்டர் நாயர் லண்டன் மாநகரத்தில் மறைவு எய்தினார். இந்த இழப்பால் நீதிக் கட்சி பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியது. 1920 நவம்பர் 2-ம் நாள் இந்தியாவில் முதல் பொதுத்தேர்தலை நடத்தும்படி மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தம் கூறியது. அந்தத் தேர்தலில் கலந்து கொள்வது என்று நீதிக் கட்சி முடிவு செய்தது. அன்னிபெசண்ட் அம்மையார் நடத்திய "ஹோம்ரூல்" இயக்கம் நீதிக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டது. காந்தியடிகள் காங்கிரசைத் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை.

அப்போதைய சென்னை மாநிலத் தேர்தலில், நீதிக் கட்சி, மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. கட்சித் தலைவரான தியாகராயரை அழைத்து, மந்திரிசபை அமைக்குமாறு மாநில கவர்னர் வெலிங்டன் பிரபு கேட்டுக் கொண்டார். தியாகராயர் தனக்கு அமைச்சர் பதவி வேண்டாமெனக் கூறிவிட்டு, ஏ.சுப்பராயலு ரெட்டியாரை முதல் மந்திரியாகவும், பனகல் அரசரை இரண்டாவது மந்திரியாகவும், சர். கே.வி. ரெட்டியாரை மூன்றாவது மந்திரியாகவும் நியமித்தார். சர். பி. ராசகோபாலாச்சாரியார் சட்ட சபைத் தலைவராக கவர்னரால் நியமிக்கப்பட்டார். இதுதான் சென்னையில் முதன் முதல் தோன்றிய மந்திரிசபை.

அன்புள்ள,

**மு.க.**

11-11-2007

## 3293. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (5)

# அண்ணா பேச்சு, குற்றால அருவி!
# கொஞ்சு தமிழ்ச் சிந்து!

**உடன்பிறப்பே,**

இந்த மாநில ஆட்சிக்கான சட்டமன்றம், 1921-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டதாகும். அதனையடுத்து, முதல் மந்திரி சுப்பராயலு இயற்கை எய்தி விட்டதால், பனகல் அரசர் முதன் மந்திரியாகவும், சர். கே.வி. ரெட்டி, சர். ஏ.பி. பாத்ரோ ஆகியோர் துணை மந்திரிகளாகவும் பதவியேற்றனர். பனகல் அரசரின் ஆட்சிக் காலத்தில், திராவிடர்களுக்காக உருவாக்கப்பட்ட சாதனைகளைச் சொல்வது தான் எனக்கு ஐந்தாம் வகுப்பில் வைக்கப்பட்ட "பனகல் அரசர்" என்ற சிறு நூலாகும்.

நீதிக்கட்சி சென்னை மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தபோது, சென்னையில் நடைபெற்ற மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஆறு தொழிலாளர் உயிரிழந்தனர். தொழிற்சங்கத் தலைவர்களான திரு.வி.க., பி.பி.வாடியா, சக்கரைச்செட்டியார், நடேச நாயக்கர், இ.எல். அய்யர் ஆகிய ஐவரையும், நாடு கடத்தும்படி கவர்னர் லார்டு வெலிங்டன் ஓர் அவசர ஆணை பிறப்பித்தார். இது கண்ட நீதிக்கட்சித் தலைவர் சர்.பி. தியாகராயர் கொதித்தெழுந்தார். தொழிற் சங்கத் தலைவர்களை நாடு கடத்தும் உத்தரவைக் கவர்னர் திரும்பப் பெறவேண்டும் என்றும், இல்லையேல் நீதிக்கட்சி மந்திரிசபை பதவி விலகும் என்றும் முடிவெடுத்து, இதனைக் கவர்னருக்கு அறிவித்ததோடு, மந்திரிகளின் பதவி விலகல் கடிதத்தையும் கவர்னர் கையிலே கொடுத்தார். நீதிக் கட்சியின் போராட்டத்தையும், நாட்டில் தோன்றிய கொந்தளிப்பையும் கண்டு, லார்டு வெலிங்டன், தொழிற்சங்கத் தலைவர்களை நாடு கடத்தும் ஆணையை உடனடியாகத் திரும்பப் பெற்றார்.

1923-ஆம் ஆண்டு நவம்பரில் இரண்டாவது பொதுத் தேர்தல் வந்தது. இதிலும் நமது நீதிக் கட்சியே வெற்றி பெற்றது. பனகல் அரசரை முதல்வராகக் கொண்டும், சிவஞானம் பிள்ளை, ஏ.பி. பாத்ரோ ஆகிய இருவரையும் துணை அமைச்சர்களாகக் கொண்டும் அமைச்சரவை உருவாக்கப்பட்டது. பேராசிரியர் எம். ரத்தினசாமி சட்டசபைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

மூன்றாவது பொதுத் தேர்தலுக்கு முன்பே,

1925-ஆம் ஆண்டு சூன் திங்கள் 29-ஆம் நாள், திராவிடர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த தியாகராயர் இயற்கையின் மடியில் நீங்காத் துயில் கொண்டார். அதன் பின்னர், பனகல் அரசர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1926-ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாம் பொதுத் தேர்தலில், எஸ்.சீனிவாச ஐயங்கார் தலைமையில், சுயாட்சிக் கட்சி என்னும் பெயரில் காங்கிரஸ் கட்சி, நீதிக் கட்சியை எதிர்த்தது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வென்றது. ஆனால், மந்திரி சபை அமைக்க அது முன்வரவில்லை. பெரும்பான்மையற்ற நிலையில், பிறர் உதவியுடன், மந்திரி சபை அமைக்க பனகல் அரசரும் மறுத்து விட்டார். எனவே, டாக்டர் சுப்பராயனுடைய மந்திரி சபை அமைந்தது.

மாநிலங்களுக்கு முழு சுயாட்சி தரப்பட வேண்டும் என்று ஆங்கிலேய அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றைப் பனகல் அரசர் தலைமையில் நீதிக்கட்சி நிறைவேற்றியது. ஆனால், கட்சிக்கும் நாட்டிற்கும் பேரிழப்பாக 1928-ஆம் ஆண்டு டிசம்பர் 16-ஆம் நாள் பனகல் அரசர் உயிர் துறந்தார். இவரது பிரிவால் நாடு கண்ணீர் வடித்தது. நாயரும், தியாகராயரும், பனகல் அரசரும் வரிசையாக மறைந்துவிட்டதால் நீதிக்கட்சி கலகலத்து நின்றது.

பனகல் அரசருடைய காலத்தில்தான் அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கிடையில், காங்கிரசை வளர்க்கும் பெரும் தூணாய் இருந்த தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், 1926-ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். 'குடியரசு' என்னும் வார ஏட்டின் மூலம் பகுத்தறிவுச் சுடர் விடும் ஆயிரக்கணக்கான கட்டுரைகள் வெளிவந்தன.

ப.ஜீவானந்தம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சௌந்திரபாண்டியன், குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார், சிங்காரவேலர், கைவல்யசாமி, எஸ்.ராமநாதன் போன்ற பலர் பெரியாருக்குத் துணையாக நின்று சுயமரியாதைக் கருத்துக் களைச் சூறாவளி வேகத்தில் தமிழகத்தில் பரப்பி வந்தனர். 1930-ஆம் ஆண்டில், சென்னையில், 'சுயமரியாதை இளைஞர் கழகம்' ஒன்று தொடங்கப் பெற்றது. அப்போது பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்த அண்ணா அவர்கள், இந்த இளைஞர் மன்றத்தில் வாரந்தோறும் சொற்போர் பட்டியலில் இடம் பெற்றுக் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கி வந்தார்.

1930-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று, திவான் பகதூர் முனுசாமி நாயுடு தலைமையில் பி.டி. இராசன், குமாரசாமி ரெட்டியார் இருவரையும் துணை மந்திரிகளாகக் கொண்ட அமைச்சரவை அமைக்கப் பெற்றது. இந்தச் சமயத்தில்தான் பெரியார் அவர்கள், தமிழர்களின் அரசியல் முன்னேற்றம் கருதி ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதை நீதிக் கட்சி ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நிபந்தனை விதித்தார். அதனை அந்தக் கட்சியும் ஒப்புக் கொண்டதால் பெரியார், நீதிக் கட்சியுடன் இணைந்து பணிபுரியத் தலைப்பட்டார்.

1932-ல் நீதிக் கட்சித் தலைவர் முனுசாமி நாயுடு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் தொடர்பாகத் தஞ்சையில் கூடிய மாநாட்டில் பொப்பிலி அரசர் கட்சியின் தலைவராகவும், முறைப்படி முதல் மந்திரியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். மூன்று ஆண்டுக் காலமே இந்த மந்திரி சபை நடைபெற வேண்டுமெனினும் சைமன் கமிஷனுடைய அறிக்கை வெளிவரக் காலம் தாழ்ந்ததால் இந்த மந்திரி சபையின் உயிர் ஏழு ஆண்டுகள் நீடித்தது. அந்தக் காலத்தில்தான் செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியாரும், தஞ்சைத் தங்கம், தமிழ்ச் சிங்கம், சர் ஏ.டி.பன்னீர் செல்வமும் இடையே அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

1936-ல் சைமன் கமிஷன் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின்படி நடந்த பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி அடியோடு வீழ்ச்சியடைந்து விட்டது.

1937-ல்தான் காங்கிரஸ் மந்திரிசபை முதன் முதலாகச் சென்னை மாநிலத்தில் பதவி ஏற்றுக் கொண்டது. இந்தப் பொதுத்

தேர்தலில் காங்கிரஸ் கட்சி நேரிடையாகப் பங்கு கொண்டதால் சுயராஜ்யக் கட்சி மறைந்து ஒழிந்தது. காங்கிரஸ் அமைச்சரவை ராஜாஜி அவர்களை முதல்வராகக் கொண்டு அமைக்கப்பட்டது. ராஜாஜி தமிழக முதல்வரானதும் இந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கினார். "இந்தி கட்டாயம்" என்று சட்டம் வந்தவுடன், அதனை முன்னாலே அறிந்து எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி வந்த தமிழ்ப் பற்றுடையோரும், புலவர் பெருமக்களும் வீறிட்டெழுந்தனர். கிளர்ச்சிகள் நடத்தினர். கட்டாய இந்தி வேண்டாமென்று முடிவுகள் எடுத்து அரசுக்கு அனுப்பினர். செந்தீயென எழும் தங்கள் கண்டனங்களைச் செய்தித்தாள்களின் வாயிலாக வெளியிட்டுக் குவித்தனர். தமிழகத்தின் நகரங்கள், பட்டி தொட்டிகள், சிற்றூர்கள் எங்கணும் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி! எதிர்ப்புக் கண்ட ராஜாஜி, மேலும் வன்மையாக இந்தியைத் திணிக்கத் தொடங்கினார்.

காங்கிரசிலே உள்ள தமிழர்கள் கட்டாய இந்தியை உள்ளூர விரும்பவில்லை. அதற்கு நல்ல எடுத்துக் காட்டாக, நாவலர் சோமசுந்தர பாரதியார், காங்கிரசை விட்டு விலகி இந்தி ஆதிக்க எதிர்ப்புக்குச் சிம்மக் குரல் கொடுக்கத் தொடங்கினார். சட்ட மன்றத்திலே பேசிய ராஜாஜி, "இந்தியை எதிர்ப்பவர்கள் யார்? இரண்டே இரண்டு பேர்தான்! ஒருவர் ராமசாமி நாயக்கர், மற்றொருவர் பசுமலை பாரதியார்" என்றார்.

எதிர் வரிசையில் அமர்ந்திருந்த பன்னீர் செல்வம் உடன் எழுந்து, "எதிர்ப்பவர் இருவர். ஆனால் இந்தியைக் கொண்டு வருபவர் நீங்கள் ஒருவர்தான், ஆகவே, பெரும்பான்மை எதிர்ப்பின் பக்கம்தான்," என்று பதில் கூறினார். அந்தப் பதில் உரைகேட்டுத் தமிழகமே பன்னீர் செல்வத்தைப் பாராட்டி மகிழ்ந்தது.

இந்தி ஆதிக்க எதிர்ப்பில் பல்லாவரத்தார் பழந்தமிழ்ப் பேச்சாளர் பண்புமிக்க மறைமலையடிகளாரும் குதித்திட்டார். "அந்தோ! வடமொழி வந்து தமிழைப் பெரிதும் வீழச் செய்து விட்டதே! அதைக் குற்றுயிராக்கி விட்டதே ஆங்கிலம்! இனி இந்தி வந்தால் தமிழ் அழிதல் திண்ணமே. அய்யகோ! என் செய்குவோம்" என்று ஏங்கிய மறைமலையடிகளாருக்கு இந்தி ஆதிக்க எதிர்ப்பு இயக்கம் பெரும் ஆறுதலை அளித்தது. 1938ஆம் ஆண்டு, சூன் திங்கள் 3-ஆம் நாள், சைதாப் பேட்டையில் கூடிய இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டிற்கு மறைமலையடிகள் தலைமை தாங்கினார்.

ஆம்! நான் பிறந்த சூன் திங்கள் 3-ஆம் நாளில், தமிழ் காக்க, இந்தி ஆதிக்க எதிர்ப்பு முதல் போருக்கு மக்களைத் திரட்டியெழுப்பும் மாநாட்டில் மறைமலையடிகளார் தலைமை தாங்கினார் என்பதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

1938-ல் தொடங்கிய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போருக்குப் பெரியார் தலைமை தாங்கினார். அறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மற்றும் புலவர் பெருமக்கள், தமிழ்ச் சான்றோர்கள் இந்தி எதிர்ப்புப் படையில் முன்வரிசையில் அணிவகுத்து நின்றனர். இந்தியைக் கட்டாயமாக வைத்துள்ள பள்ளிகளின் வாயில்களில் மறியல் நடைபெற்று, ஆடவரும் பெண்டிருமாய் ஆயிரம் பேருக்கு மேல் சிறைக் கோட்டம் சென்றனர். தாளமுத்து, நடராசன் என்ற இரு தமிழ் வீரர்கள் இந்தியை எதிர்த்துச் சிறை புகுந்து, சிறைக் கோட்டத்தில் பிணமாயினர். தமிழன், மொழிப் போராட்டத்தின் கொடியை, அந்த வீரர்களின் குருதியிலே தோய்த்து விண்முட்டப் பறக்கவிட்டான்.

1938-இல் தான் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், பண்டித நேரு, ஓய்விற்காக ஐரோப்பா சென்று விட்டார். அந்த ஆண்டு முழுவதும் நேரு இந்தியாவில் இல்லை!

நீதிக் கட்சியின் உதவியோடு சென்னை மாநிலத்தில் முதலமைச்சராக ஆட்சி நடத்திய டாக்டர் சுப்பராயன், 1938-இல் ராஜாஜி மந்திரி சபையில் கல்வி அமைச்சராக இருந்தார். அவரது அறையில்தான் 1938 பிப்ரவரி 25 ஆம் நாள் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் பிப்ரவரி 27-இல் காஞ்சிபுரத்தில் கான்பகதூர் கலிபுல்லா சாகிப், எம்.எல்.ஏ அவர்களால் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்பிற்கான கொடி உயர்த்தப்பட்டது. இந்த மாநாட்டில்தான் சோமசுந்தர பாரதியார், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைப் பெரியார் திறந்து வைத்ததும் இந்த மாநாட்டில்தான். 'பொதுமக்கள் பணத்தைக் கொண்ட சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் அவசியமற்ற இந்தி மொழி ஆதிக்கத்திற்காகப் பணம் செலவழிக்கக் கூடாது' என்று இந்த

மாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தை ஆதரித்துத் தமிழவேள் உமாமகேஸ்வரன் பிள்ளையும், சிதம்பரம் என். தண்டபாணியும் முழக்கமிட்டனர். தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் யார் தெரியுமா? அவர்தான் பேரறிஞர் அண்ணா! அன்றைக்கு சி.என். அண்ணாதுரை எம்.ஏ.

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்தில் அண்ணாதுரை என்ற ஒரு புதிய பெயர் தமிழ்நாட்டு மூலைமுடுக்கெல்லாம் எதிரொலிக்கத் தொடங்கியது.

"எப்படிப் பேசுகிறார் மனுஷன்!"

"சங்கீதம் கேட்பது போல் இருக்கிறதே."

"ஆட்ட பாட்டமில்லாமல், அசைவில்லாமல் மெல்லச் சுழன்று மேடையிலே தமிழ்ச் சொற்களை மாதுளை முத்துக்கள் போல் உதிர்க்கிறாரே!"

"என்ன உவமை! என்ன அழகு!"

"குள்ளமான உருவம்! கள்ளமில்லாப் பார்வை! மடை திறந்தாற் போல் பேச்சு."

"ஆணித்தரமான வாதங்கள். யாரும் மறுக்கவொண்ணாத புள்ளி விவரங்கள். அடடா! பேச்சா அது! குற்றாலத்து அருவி! கொஞ்சு தமிழ்ச் சிந்து!"

இப்படியெல்லாம் அவர் பேச்சுக்குப் படித்தவர் மத்தியிலும், பாமரர் மத்தியிலும் பாராட்டுரைகள் குவிந்தன.

அண்ணாவின் வருகை, இந்த இயக்கத்திற்கும், குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் மத்தியிலும், எத்தகைய மாறுதலையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது என்பதை விவரிக்கவே இயலாது.

வாலிப வசந்தத்தை, தியாகப் பொது வாழ்வு எனும் கடுங்கோடையிலே வாட்டிக் கொண்டு, ஏழை எளிய மக்கள் வாழ்வில் வளம் குவிக்கப் பாடுபடும் தொடர் பணித் தொண்டராக அண்ணா அவர்கள், இளைஞர்களின் மத்தியில் எழுஞாயிறாகவும் வைகறை விடியலாகவும் தோன்றிய பிறகு, அவரது எழுத்து நடையும், மேடைப் பேச்சு நடையும் எல்லோரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டு, இயக்கத்திற்குப் புது பொலிவும் - புதிய

வலிவும் வழங்கத் தொடங்கியது. அவரது ஆதாரபூர்வமான வாதங்களையும், அடுக்கடுக்காக அள்ளித் தரும் அசைத்திட முடியாத சான்றுகளையும் கண்டும், கேட்டும் படித்த இளைஞர்கள் மீண்டும் மீண்டும் அந்தப் பேச்சினைக் கேட்க, எழுத்தினைப் படிக்கத் துடித்து எழுந்தனர். இயக்கத்தின் பகுத்தறிவுப் பாதையிலே - இளைஞர் குழாம்! அரசியல் அரங்குகளிலே இளைஞர் எழுச்சி - வெகு விரைவில் "அண்ணா" என்ற சொல் தமிழர்களுக்கும், தரணிவாழ் அறிஞர்களுக்கெல்லாம் தாரக மந்திரமாயிற்று!

பெரியாரின் தளகர்த்தராக - சுயமரியாதைச் சுடராக - திராவிட இயக்கத் தென்றலாக, புயலாக அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்ட, தமிழர் உரிமைகள் காத்திட, மொழி காத்திட, அடக்குமுறை எதிர்த்து சிறைப்பட்ட அடலேறாக விளங்கிய அண்ணா அவர்கள், 1949ஆம் ஆண்டு வரையில்தான் திராவிடர் கழகத் தளபதியாக விளங்கினார். பின்னர் தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளரானார். திக்கெட்டும் தெளிவான அரசியல் உணர்வை தெளித்திட்ட அறிஞர் பெருந்தகை ஆனார் - அவர் வந்தார் - அண்ணா வராமல் இருந்திருந்தால், இந்த இயக்கத்தை இவ்வளவு ஒளி கப்பியிருக்குமா? என்ற வினாவுக்கு விடை அவ்வளவு எளிதில் கிடைக்கத்தானில்லை.

அன்புள்ள,

**மு.க.**

12-11-2007

## 3294. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (6)

# இளமை முழக்கிய பொதுமை முரசம்!

**உடன்பிறப்பே,**

இளைஞர்களைப் பற்றி இப்போதுதான் எனக்கு அக்கறை ஏற்பட்டுள்ளது போலக் கற்பனை செய்து கொண்டு, இறுமாப்பு, கர்வம், ஆணவம் இவற்றின் இறுக்கமான பிடியில் சிக்கியுள்ள, அரசியலுக்குப் புதிய வரவுகள் சிலர், எடுத்த எடுப்பிலேயே, தங்களை ஏணி மீது ஏற்றி, செங்கோலைக் கையிலே கொடுத்து விடுவார்கள் மக்கள் என நம்பிக் கொண்டு, எனக்கு ஏன் இளைஞர்கள் மீது திடீர்க் கவலை என்று கேட்டுள்ள கிறுக்குத்தன மான கேலியைச் சில ஏடுகள் வெளியிட்டிருப்பதைக் கண்டு வியந்தேன். சிரிப்பையும் அடக்க இயலவில்லை.

பழுத்த பழமாம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பகுத்தறிவுப் பிரச்சாரத்தை இளமைப் பருவத்திலேயே தொடங்கிவிட்டதை நாடறியுமே!

அந்தத் தென்னாட்டுச் சாக்ரடீசின் தன்னிகரற்ற தளபதியாக விளங்கிய அறிஞர் அண்ணா, தனது 29வது வயதில் பெரியாரின் பேரன்பைப் பெற்று, திராவிடர் இயக்கத்தின் தளபதியாகவே போற்றப்பட்டது, அவரது நல் இளமைக் காலத்தில் தானே!

அவர் எழுதத் தொடங்கி இடையில் நிறுத்தியுள்ள திராவிட இயக்க வரலாறு, என் தம்பியினால் தொடர்ந்து எழுதப்படும் என எந்த இளைஞனைச் சுட்டிக் காட்டினார்? அன்னையென அவரை நேசித்த என்னையல்லவா? அவரது ஆணைக் கேற்ப இந்த இயக்கத்தில் தொடர் அத்தியாயங்களை உன் போன்ற உடன்பிறப்புகளின் உறுதுணையோடு எழுதிக் கொண்டிருக்கிறேன். அதனால், என்னைப் பார்த்து எவ்வளவு தான் மக்கள் புகழ் மாலைகளைக் குவித்துக் கொண்டிருந்தாலும், அடக்கமான போக்குத்தான் அரசியலில் அனைவருக்கும்

இணக்கமான போக்கு என்பதை உணர்ந்து நடப்பவன் மட்டுமல்ல, என் உடன்பிறப்புகளும் அவ்வாறு நடக்க வேண்டுமென்று விழைபவன் நான்.

ஒரு முறை சென்னைக் கடற்கரையில், ஐந்து லட்சம் பேர் நிறைந்த கூட்டத்தில், அண்ணா பேசும்போது குறிப்பிட்டார் - "பண்டித நேரு, கட்டி முடிக்கப்பட்ட கோபுரம் - நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்!" என்பதாக! அந்த உரை அண்ணாவை கோபுர உயரத்துக்கு மட்டுமல்ல! இமயக் கொடு முடி உயரத்துக்கு ஏற்றி விட்டது.

அந்த அண்ணனின் அடக்க சுபாவத்தில் அணுவளவாவது பெற்றிருக்க வேண்டுமென்ற என் அவாவின் அடையாளமே, 1940-ல் நான் அண்ணாவின் "திராவிட நாடு" இதழில் எழுதிய "இளமைப்பலி!" - அடுத்து, நடிகவேள் நாடக மன்றத்துக்கு எழுதித் தந்த நாடகம் "இளைஞன் குரல்!" - "இளமைத் துடிப்பு" என்ற தலைப்பில் மாநாடுகளில் நான் நிகழ்த்திய சிறப்புச் சொற் பொழிவுகள்.

இதோ, உலகில் தோன்றிய புரட்சிக்காரர்கள் - தலைவர்கள், மேதைகள் எனப்படும் புகழேந்திகள், மறைந்தும் மறையாத மாவீரர்கள், கொள்கைக் குன்றங்கள் - அனைவருமே இளம் வயதினர் - அவர்கள் இயற்றிய சாதனைகளுக்கு, அவர்தம் இளமையும் ஒரு துணைக் காரணமென்பேன் - இதோ, என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்வீர் - நெஞ்சில் நிறுத்திக் கொள்வீர்! - நான் இக்கடிதங்கள் வாயிலாகத் தருகின்ற பட்டியலை!

இன்றைக்குப் பாடுபடும் பாட்டாளி வர்க்கம் - ஏழையர் சமுதாயம் - நடுத்தர மக்கள் கூட்டம் - எந்தக் கொள்கையின் வெற்றிக்காக, கொடியேந்தி நெடிய பயணம் நடத்துகிறதோ, அதற்கான விடியலை வழங்கிட விரிவான தத்துவக் கருவூலம் எழுதித் தந்தாரே! அந்தக் காரல் மார்க்ஸ், பதினேழாவது வயதில் பள்ளிக் கல்வி முடித்து, இருபத்தி நான்காவது வயதில் பத்திரிகை ஆசிரியராகி பல எதிர்ப்புகளைத் தாங்கி கொள்கை முழக்கிய இளைஞர்தான்.

அந்த இளமைக் காலத்திலே தான் "வேலையைத் தேர்ந்தெடுப்பது குறித்த ஓர் இளைஞனின் மனப்பதிவுகள்" என்ற ஆய்வுக் கட்டுரையில், அற்புதமான, ஆழமான, இயற்கை

யான தனது சிந்தனையின் வெளிப்பாடாகப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

"நாம் எந்தத் தொழிலை விரும்புகிறோமோ, எந்தத் தொழிலில் தகுதியை வளர்த்துக் கொள்கிறோமோ அந்தத் தொழிலை அடைய முடியாமலேயே போய்விடலாம். ஏனெனில், சமுதாயத்தோடு நமக்குள்ள உறவு ஏற்கெனவே தீர்மானிக்கப் பட்டதாகவே உள்ளது . . . மனித குலத்தின் நன்மைக்காகப் பணியாற்றுவதன் மூலம் தம்மை உயர்தகுதி உடையவர்களாக்கிக் கொண்ட மனிதர்களைத்தான் வரலாறு மகத்தான மனிதர்கள் என அழைக்கிறது. மக்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபடும் மனிதனே மிகவும் மகிழ்ச்சியான மனிதன்."

மொத்த மனிதகுலத்தின் விடுதலையோடு தொடர்புடையதே யூதர்களின் விடுதலையும் என மார்க்ஸ் முழங்கினார். முதலாளித்துவ சமூக அமைப்பு என்ற எல்லைக்குள் அரசியல் விடுதலை மிகப்பெரிய முன்னேற்றம்தான். ஆனால், மனிதகுல விடுதலை அதற்கும் மேலானது என்று வாதிட்டார் மார்க்ஸ். மனிதர்கள், தங்களது சொந்த சக்தியை ஒரு சமூக சக்தியாக அறிந்து கொண்டு, அமைப்புரீதியாகத் திரண்டால்தான் விடுதலை என்பது சாத்தியம் என்றார் அவர். மார்க்ஸின் இரண்டாவது கட்டுரை "சட்டம் பற்றிய ஹெகலின் தத்துவம் குறித்த விமர்சனம்." இந்தக் கட்டுரையில் முதலாளித்துவத்தைத் தூக்கி எறியும் புரட்சிகர வர்க்கம் பாட்டாளி வர்க்கமே என்று அடையாளம் காட்டிய மார்க்ஸ், அந்த பாட்டாளி வர்க்கத்திற்குத் தத்துவம் என்ற ஆயுதம் தேவை என்றார். "தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தை பாட்டாளி வர்க்கத்திடம் பெறுகிறது. அதுபோலவே பாட்டாளி வர்க்கம் தத்துவத்திடமிருந்து தனது ஆன்மிக ஆயுதத்தைப் பெறுகிறது . . . வெறும் விமர்சனங்களால் பொருளாயத சக்திகள் வீழ்த்தப்படுவதில்லை. பொருளாயத சக்திகள் பொருளாயத சக்திகளால்தான் வீழ்த்தப்பட வேண்டும். ஒரு கருத்து மக்களைச் சென்றடைந்து அது அவர்களின் மனதில் பதிந்துவிடுமானால், அதுவே பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது" என்ற புகழ்பெற்ற மார்க்சிய நிலையை, இந்தக் கட்டுரையில்தான் மார்க்ஸ் வரைந்தார்.

கார்ல் மார்க்ஸ், தமது இருபத்தி ஒன்பதாவது வயதில், ஏங்கல்ஸ் எழுதிய "கம்யூனிசத்தின் கோட்பாடுகள்" என்ற அறிக்கையின் அடிப்படையில், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை எழுதி

இறுதிப்படுத்தும் பணியை மேற்கொண்டார். தமது முப்பதாவது வயதில், அதாவது 1848, பிப்ரவரியில் "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை" வெளியிட்டார். இதுதான் இன்றுவரை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு முதலாவது வேலைத்திட்ட அறிக்கையாகும். இதன் அடிப்படைகள் மீதுதான் உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். "கட்சி அறிக்கை" என உலகெங்கிலும் அழைக்கப்படும் இந்த அறிக்கை, மார்க்சியத்தின் அடிப்படைகளை விளக்குகிறது. முதலாளித்துவத்தின் தோற்றுவாயையும், வளர்ச்சியையும், அதன் எதிர்காலப் போக்கையும் துல்லியமான அறிவியல் தன்மையோடு விளக்குகிறது. இந்த அறிக்கை மூலதனத்திற்கு எதிரான கம்யூனிசத்தின் கம்பீரமான பிரகடனமாகும். "பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர, இழப்பதற்கு ஏதுமில்லாதவர்கள்; அவர்கள் வெற்றி பெறுவதற்கென்று அனைத்துலகும் இருக்கிறது. உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!" என்ற காவிய மணம் தோய்ந்த போர்ப் பிரகடனத்துடன் கட்சி அறிக்கை நிறைவு பெறுகிறது.

மார்க்சியத்தை உருவாக்குவதற்கு அந்தப் பேரறிவாளனோடு இணைந்து நின்று உதவிய மற்றொரு சிந்தனையாளர் பிரெடரிக் ஏங்கல்ஸ். உண்மையில் அந்தச் சிந்தனையாளர் இல்லாவிட்டால் மார்க்சியம் என்று ஒன்று, இன்று உருவாகியிருக்குமா என்பது சந்தேகம்தான். மார்க்ஸோடு இணைந்து மார்க்சியத்தின் பல கூறுகளை உருவாக்கிய பெருமை ஏங்கல்சுக்கு உண்டு. மார்க்சியம் என்று அழைக்கப்படுவது கார்ல் மார்க்சின் பெயரில் இருந்தாலும், உண்மையில் அது ஏங்கல்ஸ், மார்க்ஸ் ஆகிய இருவரது கூட்டு உழைப்பு, ஆய்வு, சிந்தனை ஆகியவற்றின் விளைவு ஆகும். உலக வரலாற்றிலேயே இருவர் இணைந்து ஓர் உலகப் பொதுவான தத்துவத்தை உருவாக்கியுள்ளனர் என்றால் அது மார்க்சியம்தான்.

ஏங்கல்ஸ், தமது பத்தொன்பதாவது வயதிலேயே, அதாவது 1839ஆம் ஆண்டு "உப்பர்டால் கடிதங்கள்" என்ற தலைப்பில் பல கடிதங்களை எழுதினார். அவை மதத்தையும், அரசனையும் எதிர்த்து எழுதப்பட்டவை ஆகும். அதனால், பல இடங்களில் பரபரப்பை ஏற்படுத்தின. அவரது இருபத்தி இரண்டாவது வயதில், ஏங்கல்சிற்கு "ரெயின்லாந்து கெஜட்" என்ற பத்திரிகையின் தொடர்பு கிடைத்தது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக

கார்ல் மார்க்ஸ் பொறுப்பேற்றிருந்தார். அப்போது ஏங்கல்சிற்கு மார்க்சைத் தெரியும். ஆனால் சந்தித்தது இல்லை. மார்க்ஸ் புரட்சிகரமான கருத்துகளை இந்தப் பத்திரிகை மூலம் பரப்பினார். பொதுவுடைமைக் கருத்துகளைப் பற்றி அதிகம் எழுதினார். ஏங்கல்ஸ் இக்கருத்துகளை ஏற்றுக் கொண்டார். அவர் தமது இருபத்தி நான்காவது வயதில், 1844ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஜெர்மனி செல்லும் வழியில் பாரீசில் தங்க நேரிட்டது. இந்த ஆண்டில்தான் ஏங்கல்ஸ் மார்க்சை சந்தித்தார்.

இது ஒரு முக்கியமான சந்திப்பாகும். அதுமட்டுமல்லாமல், உலகத்தையே மாற்றிய ஒரு தத்துவத்தை உருவாக்குவதற்கு இந்தச் சந்திப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்தச் சந்திப்பைப் பற்றியும், மார்க்சிய சிந்தனைகளைப் பற்றியும் திரு. வெ. சாமிநாத சர்மா அவர்கள், அவருடைய, "கார்ல்மார்க்ஸ்" என்ற நூலில், "உலகில் எத்தனையோ சந்திப்புகள் ஏற்படுகின்றன. எத்தனையோ சிநேக ஒப்பந்தங்கள் அழியாத மையினால் எழுதப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுகின்றவர்களும், பெரிய மனிதர்களாயிருந் திருக்கிறார்கள். ஆனால் மார்க்ஸ், ஏங்கல்ஸ் சந்திப்பு, நட்பு, ஒப்பந்தம், உலக சரித்திரத்தை மாற்றியமைத்ததைப் போல வேறு யாருடைய சந்திப்பும், நட்பும், ஒப்பந்தமும் மாற்றியமைக்க வில்லை. இருவருடைய சுபாவங்களும், அனுபவங்களும் வேறுவேறாயிருந்த போதிலும் ஒன்றுக் கொன்று துணை செய்வனவாயிருந்தன. எப்படி குடும்பமெனும் கப்பலை இயக்கிக் கொண்டு போவதற்கு மனமொத்த தம்பதிகள் அவசியமாயிருக்கிறதோ, அப்படியே சமதர்மமெனும் கப்பலை, கொந்தளிப்பான சமுத்திரத்தில் மிதக்க விடுவதற்கு ஒரே பார்வையுடைய இரண்டு பேர் அவசியமாயிருந்தது" என்று வர்ணனை செய்துள்ளார்.

பிரெடரிக் ஏங்கல்ஸ், தமது இருபத்தி ஐந்தாவது வயதில், 1845ஆம் ஆண்டு மார்க்சுடன் சேர்ந்து இருவரும் கூட்டு முயற்சி ஒன்றை மேற்கொண்டனர். அதாவது, ஹெகலுக்குப் பிந்திய கால ஜெர்மானியத் தத்துவத்தைப் பற்றியது அந்த நூல். அந்த நூலின் பெயர் "ஜெர்மானியக் கருத்தியல்." இந்த நூல் மார்க்சிய இலக்கியத்தில் மிக முக்கியமானதாகும். இந்த

நூலில் வரலாற்று இயல் பொருள் முதல் வாதம் என்பது பற்றி விளக்கம் இடம்பெறுவதைக் காணலாம். வரலாறு என்பது பொருளியல் தன்மை உடையது என்பதை மார்க்சும், ஏங்கல்சும் விளக்குகின்றனர். அதாவது உற்பத்தி (மனிதனுக்கும், இயற்கைக்கும் உள்ள உறவு) பரஸ்பர உறவு (ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் உள்ள உறவு) என்பவைதான் மனிதனது செயலுக்குரிய இரு பகுதிகள் என்பதை விளக்குகின்றனர். இந்தப் பொருள் உற்பத்தியானதுதான் மனிதனது வாழ்வைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. அதாவது, உற்பத்தி முறையானது வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கிறது. இந்த உற்பத்தி முறை சமூக உறவுகளையும், அரசியல் உறவுகளையும் தீர்மானிக்கிறது.

"கம்யூனிஸ்ட் அறிக்கை" வெளியான பின்னர், மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரது வாழ்க்கை முழுவதும் புரட்சிகர இயக்கங்களில் பங்கெடுக்கும் போக்கில் மாறியது. அவரது இருபத்தி எட்டாவது வயதில் ஏங்கல்ஸ் ஜெர்மனிக்குச் சென்றார். அங்கு புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அங்கு நிலவிய சீர்திருத்தவாதப் போக்கினை எதிர்த்துப் போராடினார். 1849ஆம் ஆண்டு, அதாவது தமது இருபத்தொன்பதாவது வயதில், ஏங்கல்ஸ், "ஜெர்மனியில் விவசாயிகள் போராட்டம்" என்ற நூலை எழுதினார். மார்க்சிய கொள்கை வளர்ச்சியில் இது மிக முக்கியமான ஒரு நூல். வரலாற்றியல் பொருள்முதல் வாதத்தினைப் பயன்படுத்தி, வர்க்கப் போராட்டம் பற்றிய விளக்கத்தை ஏங்கல்ஸ் இதில் அளிக்கிறார். மதம் பற்றியும், மதத்தின் பங்கு பற்றியும் இதில் ஒரு விரிவான விவாதம் இடம் பெறுகிறது.

அன்புள்ள,

**மு.க.**

13-11-2007

## 3295. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (7)

# இளைஞர்கள் - புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகள்!

**உடன்பிறப்பே,**

இந்தத் தொடர் கட்டுரை வரிசையினை, நான் ஒன்றும் இளைஞர்களைப் பற்றி எழுத வேண்டுமென்ற திடீர் அக்கறை காரணமாக எழுதவில்லை. இளைஞர்களால்தான் இலட்சிய வெறியோடு எதையும் சாதிக்க முடியும் என்பதை, அவர்கள் இந்த, பரந்த உலகில் பல்வேறு நாடுகளில் இளம் வயதில் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள் என்ற சான்றுகள் என் நெஞ்சில் நிழற் படங்களாக விரிந்து கொண்டிருப்பதால் தான் அவற்றை இது போன்ற நேரங்களில், நெல்லையில் மாநில இளைஞர் அணி மாநாடு நடைபெறுகின்ற இந்த மகத்தான சமயத்தில் நினைவுபடுத்துவதும், அந்த அடிப்படையில் நான் தரும் சரித்திரக் குறிப்புகள் வளரும் இளைஞர் சமுதாயத்திற்கு புதிய ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளிப்பதோடு, ஏற்கெனவே வளர்ந்து விட்ட மூத்த முன்னோடிகளுக்கு நாட்டின் அல்லது சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பற்றி முழுமையான நம்பிக்கையையும் ஊட்ட வல்லது என்பதால் தான், இன்றைய இளைஞர் சமுதாயம் சிலிர்த்தெழவும், மூத்த முன்னோடிகள் உறுதியுடன் நிமிர்ந்து நடக்கவும் பயன்படும் என்றும் - பயன்பட வேண்டுமென்றும் தணியாத ஆசையுடன் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றேன். அந்தத் தங்க நிகர் வீரர்களின் தன்மானம் குன்றா தகைவுறு வரலாறுகளை!

அந்த வரிசையில் எத்தனை எத்தனை தலைவர்கள் - எத்தனை எத்தனை வித்தகர்கள் - எத்தனை எத்தனை மேதைகள் - எத்தனை எத்தனை விற்பன்னர்கள் "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதைப் போல, தங்கள் வாழ்க்கையை எதிர்கால இளைய தலைமுறையினருக்கு வயலாகவும், எருவாகவும்

ஆக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதை நான் மட்டுமல்ல! நீயும், உன் போன்ற உடன்பிறப்புக்களும் அறிந்து கொள்வதற்காக - உனக்கிருக்கும் காலம் கருதி, நேரம் கருதி விரிவாகத் தர விரும்பாமல், அந்தக் கொள்கை சீயங்கள் கடந்து வந்த கல்லும் முள்ளும் நிறைந்த வழிகள், காட்டாறுகள், கள்ளிக்காடுகள், வீசிய புயல்கள், அதிர்ந்த பூகம்பங்கள் - இவற்றையெல்லாம் கடந்து நடத்திய தீரமிகு பயணங்களை - அந்த உலகம் போற்றும் உயர்ந்த மனிதர்களை - வெற்றியாயினும், தோல்வியாயினும் தலை வணங்காமல் அவர்கள் சந்தித்த நெஞ்சு நிமிர்த்திடும் நிகழ்வுகளாயினும் - அனைத்தையும் இந்த நேரத்தில் உன் போன்ற உடன் பிறப்புகளுக்கு - ஒரு கிண்ணத்தில் உள்ள பாலையோ, தேனையோ அப்படியே பிள்ளையின் வாயில் கொட்டிவிட வேண்டுமென்று எண்ணுகின்ற தாயைப் போல் இல்லாமல், படிப்படியாக மனதில் பதிய வைக்கின்ற பாடங்களாக விளங்க வேண்டும் என்பதற்காகத் தான் - வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையின் உண்மைக் கதைகளை உங்கள் செவிகளுக்கு மட்டுமே எட்டும்படியாக இல்லாமல் - சிந்தையிலும் பதிந்து நிற்கும்படியாக ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி வரைகின்றேன், சுருக்கமாக! ஆனால் சுவையாக! நான் எழுதுகின்ற அதே உணர்வுடன் நீங்களும் படிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்!

அந்த உலக நாயகர்களில் மகத்தான மனிதர்கள், கார்ல் மார்க்ஸ், ப்ரடரிக் ஏங்கெல்ஸ், லெனின் ஆகிய இவர்களைப் பற்றியெல்லாம் எழுதியிருக்கிறேன்; ஏட்டில் அல்ல, இளைஞர்களின் இதயங்களில்! அந்த வரிசையில் இதோ! ஒரு சின்னஞ்சிறிய நாட்டில் சிங்கக் குட்டியாக உலவி பெருமைக்குரிய புரட்சித் தலைவனாக வளர்ந்த பிடல்காஸ்ட்ரோ நான் மறக்க முடியாத மாவீரர்களில் ஒருவர். கியூபா மண்ணின் நெஞ்சம் நிறைந்த அந்தத் தலைவனைப் பற்றியும், அவன் நடத்திய போராட்டத்திற்குத் துணை நின்ற தளபதிகளாக இருந்தோர், பொறுமை காத்து பொறுப்பேற்றோர் ஆகிய இவர்களைப் பற்றியும், அந்தக் கியூபா நாட்டின் பெருமை போற்றும் விழா ஒன்று 2006ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் சென்னையில் நடைபெற்றபோது, அந்த மாநாட்டில் நான் வழங்கிய கவிதையில் சில வரிகளை மட்டும் இந்த நேரத்தில் நினைவூட்டிட விரும்புகின்றேன்.

உயிரோடிருக்கும் உலகத் தலைவர்கள் வரிசையில்
உங்களைக் கவர்ந்த ஒருவரின் பெயரைக் கூறுக என்றார்!

உயிரோடிருப்பவர் மட்டுமல்ல! என் உயிரோடும் மூச்சோடும்
கலந்துள்ள
ஒரு தலைவர் உண்டு! அவர் தான் பிடல் காஸ்ட்ரோ
என்றேன்.

இளம் பிராயத்திலேயே அவர் எழுச்சி முரசு! புரட்சிக் கனல்!
இனங்கண்டு எதிரிகளை வீழ்த்திக் காட்டும் மூளைக்குச்
சொந்தக்காரர்!

இருளில் சர்வாதிகாரியாகவும், வெளிச்சத்தில் ஜனநாயக
வாதியாகவும்
இரட்டை வேட அரசியல் நடத்திய 'பாடிஸ்டா' எனும்
பசுத்தோல் வேங்கை!

அந்த விலங்கின் வேஷத்தைக் கலைக்கத் துணிந்து,
அதற்கோர்
அணியைத் தயாரித்துப் போரிட்டுத் தோல்வியுற்று,
சிறைப்பட்டு,

நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்ட போது தான்
"வரலாறு என்னை விடுதலை செய்யும்" எனும்
வைர வரிகளைச் சரித்திரப் புத்தகத்தில்
வையம் புகழ் சித்திரமாகப் பதிய வைத்தார், காஸ்ட்ரோ!

பாடிஸ்டா ஆட்சியில் பிடலுக்கு பதினைந்தாண்டு சிறை
என்றதும் –
பற்றி யெரிந்த மக்களின் புரட்சி நெருப்புக்கு,
ஈடு கொடுக்க முடியாமல் இரண்டே ஆண்டுகளில்
சிறைக் கதவு திறந்தது, சிங்கம் வெளியே வந்தது – அந்த
சிங்கத்துக்கோர் சிறுத்தை துணை சேர்ந்தது!
அதன் பெயர்தான் சேகுவேரா!

தங்கத் தம்பியாம் ராவ் காஸ்ட்ரோவையும்,
தம்பி போன்ற சேகுவேராவையும்,
அங்கம் வகிக்கச் செய்து ஆர்த்தெழுந்து போரிட்டு
முன்னேறவே,

பங்கமுற்ற பாடிஸ்டா பயந்து நடுங்கி – இனி
கியூபா மக்களிடம் தன் சேட்டைகள் செல்லாதென்று

நீயும் வா என்று ஆணவத்தையும் அழைத்துக் கொண்டு,
நாட்டை விட்டே ஓடி விட்டான்! நல்லாட்சி மலர வழி
விட்டு!

கேட்டைக் களைந்தெறிந்த காஸ்ட்ரோ, தலைமை வழி
காட்டியானார்!
கடமையும் பொறுப்பும் வந்தவுடன்

கடந்த காலத்தை மறந்து விடாமல்,
சோதனைகளைச் சந்தித்து மறைந்த

ஜோஷ் மார்ட்டியின் தலைமைக்கும்,
சாதனைகள் புரிந்து மறைந்த

சிபாசின் வழிகாட்டுதலுக்கும்,
மதிப்பும் மரியாதையும் அளித்திட

மறக்காத மாவீரர் தான் பிடல் காஸ்ட்ரோ!
'கியூபா' சின்னஞ் சிறிய நாடு!

ஆயிரக்கணக்கான தீவுகள் கொண்ட அழகிய தேன் கூடு!
தேன் கூடென்று ஏன் சொல்கிறேன் தெரியுமா?

தெரியாமல் அமெரிக்கா கை வைக்கும் போதெல்லாம்
கொட்டி விடும் தேனீக்கள் கியூபாவின் மக்கள் – அந்தக்

கூடு காக்கும் காவல்காரர் தான் பிடல் காஸ்ட்ரோ!
நல்வாழ்வுச் சட்டங்கள் பலவும் – மக்கள்

நலம் பெருக்கும் சாதனைகள் பலவும்
இல்வாழ்வையும் துறந்து

இலட்சியத்துக்காக வாழ்ந்திடும் காஸ்ட்ரோவின்
புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகளாய்

புதிய புதிய பக்கங்களாய்ப் புரண்டு கொண்டேயிருக்கின்றன.
உலகின் சர்க்கரைக் கிண்ணம் எனப் பேசுமளவுக்குக்

கரும்பு வயல்களைக் கொண்ட கியூபாவில்
சர்க்கரை வாங்குவதையே நிறுத்தி, பொருளாதாரச்

சரிவு ஏற்படுத்த அமெரிக்கா ஆயத்தமானபோது,
சீனாவும், சோவியத்தும் தான் சிநேக நாடுகளாய்க்

காஸ்ட்ரோவுக்குக் கை கொடுத்த கதை உலகறியும்!

“வாழை, தென்னை மரங்களை வலிமைமிகு துதிக்கையால்
யானை முறித்துப் போட்டு விடும்
அந்த யானை போன்றதே அமெரிக்கா” என்றனர்.

அதற்கு காஸ்ட்ரோ அஞ்சி நடுங்கவில்லை.

வாழை மரம், தென்னை மரங்களை, யானை,
வாயிலே போட்டுக் கொள்ளலாம் எளிதாக!
ஆனால், அங்குசத்தை யானை விழுங்க முடியுமா?

அங்குசந்தான் கியூபா! அமெரிக்க யானைக்கு!
வெள்ளி விழா ஐ.நா. சபைக்கு நடந்த போது – பல
நாடுகளின் தலைவர்களுக்கு மத்தியில்
முப்பத்திரண்டு வயது நிரம்பிய சிவப்பு நட்சத்திரமாக
முதுபெரும் தலைவர்களால் பாராட்டப் பெற்றவர்
பிடல் காஸ்ட்ரோ

முதற்கட்டமாக ஸ்பெயின் நாட்டின் காலனி கியூபா –
அடுத்த கட்டம் அமெரிக்காவின் காலுக்கு அணியாக
ஆக வேண்டும் கியூபா என்று ஆதிக்கபுரியினர் முனைந்த
போது,

அது தான் முடியாது! அந்தக் காலையே
முடமாக்குவோமென்று –

மக்களைத் திரட்டினார் பிடல் காஸ்ட்ரோ –
மலைப்புற்ற ஏகாதிபத்தியவாதிகள்,

பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடினர் என்றால், அது
பிடல் காஸ்ட்ரோவின் உறுதிக்கும் – அவரைப்

பின்பற்றும் மக்களின் மகத்தான சக்திக்கும்,
பின்பலமாய் மார்க்சின் தத்துவம் இருப்பதற்கும் –

அடையாளம் என்பதை இந்த அவையோரும் அறிவீர்
அடியேனும் அறிவேன் –

இவ்வாறு அந்த மாநாட்டில் என்னால் புகழப்பட்ட பிடல் காஸ்ட்ரோ, அவரது இருபத்தோராவது வயதில், ஹவானா தன்னாட்சிப் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்லூரியில் பயின்று வந்தார். பிடல் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும், உயரம் தாண்டுவதிலும் பிறரைத் தோற்கடித்தவர். எனவே, மாணவர்கள் மத்தியில் கவர்ச்சியுள்ள ஒருவராகவே இருந்தார். ஆனால், நான்கு பேரோடு சேர்ந்து வேலை செய்யும் பக்குவம் பெறாதவராக இருந்ததால், அவர் தனித்தே நடமாடிக் கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் மாணவர்கள் உட்பட எல்லோரும் அவருடன் நட்பாகப் பழகுவது வழக்கம். பிடல் சட்டக் கல்லூரியில் இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, ஏராளமான புத்தகங்களை வாங்கிப் படிக்கும் வழக்கமுடையவராக இருந்தார். இந்த பருவத்தில் அவர் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் நூல்களை நிறையப் படித்தார்.

ஆர்த்தோடக்சோ கட்சி அலுவலகத்திற்கு நாள்தோறும் பிடல் போய் வந்தார். இளைஞர்கள் கூட்டம் இவரைச் சுற்றியே வளையமிட்டது. "இந்தத் தேர்தல் நாடகங்கள் மூலம் கியூபாவை என்றைக்கும் விடுவிக்க முடியாது. இப்போதுள்ள அரசியல் சட்டத்தை வைத்துக் கொண்டு, எந்த அடிப்படை மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. புரட்சி ஒன்றுதான் வழி. புரட்சியின் மூலம் அமையும் அரசினால்தான் ஏழைகளை வாழ்விக்க முடியும்" என்று பேசி வந்தார். ஆர்த்தோடக்சோ கட்சியின் முக்கியப் பிரச்சாரகர்களில் இவரும் ஒருவராக ஆனார். பின்னர், ஆர்த்தோடக்சோ கட்சியை விட்டு விலகி, புரட்சிகர இளைஞர் குழுக்களை உருவாக்கினார். சான்டியாகோ நகரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த, மொன்கடா இராணுவ முகாமை 123 போராளிகளுடன் தாக்குதல் நடத்தியபோது பிடல் காஸ்ட்ரோவுக்கு இருபத்தி ஏழு வயதுதான். அந்த தாக்குதல் தோல்வியுற்று மலைகளில் தலைமறைவாக அலைந்தபோது, கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவர் தானே வழக்கில் வாதாடினார். காஸ்ட்ரோவை விசாரிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நீதிமன்றம் ஒரு இராணுவ நீதிமன்றம். இவர் நீதிமன்றத்தில், "நீதிபதி அவர்களே, இப்பொழுது நடைபெறும் அரசு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல. இது சட்டவிரோத அரசு. நானும், எனது தோழர்களும் இதனை எதிர்க்கிறோம். பள்ளியில் படிக்கும்போது தாய்நாட்டை

நேசிக்கும்படி கற்பிக்கப்பட்டோம். சட்டம் பயிலும்போது சட்ட மீறுதலை எதிர்க்கக் கற்பிக்கப்பட்டோம். இதன்படி சட்ட விரோத அரசை, தூக்கியெறியப் போராடினோம். எங்களுக்கு இராணுவ சர்வாதிகாரியை தூக்கியெறிய வழியில்லாமல் போய்விட்டது. தேர்தல் நடந்திருந்தால் தேர்தல் மூலம் தோற்கடிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கும். தேர்தலை ரத்து செய்துவிட்டார். நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, இராணுவத்தின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். நாட்டையும், மக்களையும் காக்க நாங்கள் போராடுகிறோம்" என்று பிடல் காஸ்ட்ரோ வாதாடியது இன்றைக்கும் புகழ்பெற்று விளங்குகின்றது.

நீதிமன்றத்தில் காஸ்ட்ரோ வெளிப்படுத்திய கருத்துகளால் அவரது புகழ் கியூபா முழுவதும் பரவியது. பலர் விடுதலை பெற்றனர். ஆனாலும், காஸ்ட்ரோவுக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினர். சிறை அமைந்த பைன்ஸ் தீவு, கியூபாவின் கடலில் இருந்து 50 மைல் தொலைவில் அமைந்திருந்தது. தன்னையும், தனது தோழர்களையும் தயாரித்துக் கொள்ளும் இடமாக இந்தச் சிறை வாழ்க்கையை பிடல் மாற்றி அமைத்துக் கொண்டார். மக்களிடம் ஏற்பட்ட மாபெரும் எழுச்சியால், பிடல், 1955ஆம் ஆண்டில், அதாவது அவரது இருபத்தொன்பதாவது வயதில் விடுதலை செய்யப்பட்டார்.

பைன்ஸ் தீவுச் சிறையிலிருந்து மீண்ட பிடல் காஸ்ட்ரோ மெக்சிகோ சென்றார். அங்கிருந்தபடியே புரட்சிக்குத் தயார் செய்தார். ஆள் வசதி, பண வசதி எதுவுமின்றி, தன்னம்பிக்கையுடன் இயங்கி கியூபாவிலிருந்தும், பிற பகுதிகளிலிருந்தும் நிதியையும், ஆட்களையும் திரட்டினார். கியூபா, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய மூன்று இடங்களில் ஆயுதப் பயிற்சி பெற்ற குழுக்களை உருவாக்கினார். 1956, நவம்பர் 26-ல் கிரான்மா என்ற படகில் 81 பேர் ஆயுதங்களுடன் கியூபா வந்து சேர்ந்தனர். இராணுவ முகாமைத் தாக்கி பாடிஸ்டா இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை விளைவித்தார். பாடிஸ்டா இராணுவத்தினரே பிடலுக்கு ஆதரவாக திரண்டனர். பிடல் காஸ்ட்ரோ தலைமையிலும், அவரது தம்பி ரால் காஸ்ட்ரோ, ஆருயிர் நண்பன் சேகுவாரா ஆகியோர் தலைமையிலும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து போரிட்டு சான்டியாகோவைக் கைப்பற்றி ஹவானா நோக்கி முன்னேறினர். 1958, டிசம்பரில் பாடிஸ்டா நாட்டை விட்டு ஓடினார். புரட்சி

வெற்றி அடைந்தது. பிடல் தனது முப்பத்தி இரண்டாவது வயதில் பிரதமராகப் பொறுப்பேற்றார். இவ்வாறு அந்தச் சின்னஞ்சிறிய நாட்டில், புரட்சிக்காரராக மலர்ந்து மணம் கமழத் தொடங்கினார். அந்த மாவீரன் இன்று வாழ்கிறார் என்றாலும், வாடிக் கொண்டுதான் இருக்கிறார் அவருடைய உடல்நலிவு காரணமாக! நலிவு நீங்கி நாடு மதித்திட, நானிலம் போற்றிட அவருக்கு வாழ்த்துச் சொல்லி, அவரது உயிருக்குயிராய் இருந்த உத்தமத் தோழர் சேகுவாராவின் வாழ்க்கை வரலாற்றின் சில பக்கங்களைப் புரட்டிக் காட்டாவிட்டால் கியூபாவின் புரட்சி வரலாறு முழுமையானதாக ஆகாது என்பதால், அந்த உத்தமத் தோழரைப் பற்றியும் ஒருசில வார்த்தைகள் நாளை!

அன்புள்ள,

**மு.க.**

14-11-2007

## 3296. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (8)

# கரும்பு வெட்டும் தொழிலாளி;
# இரும்பு நெஞ்சப் போராளி!

**உடன்பிறப்பே,**

பேரறிஞர் அண்ணா அவர்கள், "இளைஞர்கள் ஒரு இயக்கத்தின் ஈட்டி முனைகள்" என்று கூறியதை வைத்து, 1999ஆம் ஆண்டு, சென்னை கலைஞர் அரங்கத்தில், தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது, பேசிய நான், இளைஞர்கள் ஈட்டி முனைகளாக இருப்பதோடு, இயக்கத்திற்கு ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டிடும் முனைகளாகவும் இருக்க வேண்டுமென்று கூறியிருந்தேன். ஆனால் அரசியலுக்கு வந்துள்ள சில புதிய வரவுகள், நான் ஏதோ இப்போதுதான் இளைஞர்களுக்காக எழுதுவதைப் போல சொல்லிக் கொண்டு திரிகின்றன. 1966ஆம் ஆண்டு இன்று என்னிடம் செயலாளர்களில் ஒருவராக இருக்கும் தம்பி ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்., உள்ளிட்டோர் எடுத்த முயற்சியின் காரணமாகத் தஞ்சையில் மாணவர் அணியின் சார்பில் மாநாடு ஒன்று நடைபெற்றபோது, அண்ணா அவர்கள் மேடைக்கு வந்தார்கள். மேடையில் கழகத்தின் மூத்தவர்கள் எல்லாம் அமர்ந்திருந்தார்கள். உடனே அண்ணா, கழகத்தின் மூத்த தலைவர்களையெல்லாம் பார்த்து, இது மாணவர்கள் நடத்தும் மாநாடு, எனவே நீங்கள் எல்லாம் எதிரே சென்று அமர்ந்து கொள்ளுங்கள் என்று கூறி அந்த இடத்தில் மாணவர் அணியினைச் சேர்ந்தவர்களையெல்லாம் அமரச் சொன்னார்.

மேலும், அங்கே கழகத்தின் மூத்த தலைவர்கள் யாரும் உரையாற்ற வேண்டாமென்றும், மாணவர் அணியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பேச வேண்டுமென்றும், அவர்களின் உரையைக் கேட்பதற்காகத் தான் வந்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். நாற்றங்கால் வளமாக இருந்தால்தான் பயிர்கள் செழிப்பாக

வளர்ந்திட முடியும். ஒரு இயக்கத்தின் நாற்றங்கால்தான் இளைஞர் சமுதாயம். இளைஞர் சமுதாயம் எந்தவொரு இயக்கத்தில் பலமாக இருக்கின்றதோ, அந்த இயக்கம்தான் வலுவாக வளர இயலும். நான் தொடர்ந்து எழுதி வருவதைப் போல, அகில உலகத் தலைவர்கள் எல்லாம் இளைஞர்களாக இருந்த போது சாதித்த சாதனைகள்தான், அவர்கள் வயது முதிர்ச்சியுற்ற பிறகு ஆற்றிய சாதனைகளை மிஞ்சியவை ஆகும்.

அந்த வரிசையில்தான் பிடல் காஸ்ட்ரோவின் அருமைத் தோழன் சேகுவாராவைப் பற்றி இன்றைய கடிதத்தில் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தேன்.

சேகுவாராவைப் பற்றி மட்டும் எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும், எத்தனை கடிதங்கள் வேண்டுமென்றாலும் எழுதிக் கொண்டேயிருக்கலாம். இதைத்தான் எழுத்தாளர் காப்ரியில் கார்சியா மார்கோஸ் “இலட்சக்கணக்கான பக்கங்களில், ஆயிரம் வருடங்கள் வேண்டுமானாலும் எழுதிக் கொண்டிருக்கலாம்” என்று குறிப்பிட்டார்.

நள்ளிரவில் அரண்மனையைவிட்டு வெளியேறினான் புத்தன். அவனுக்கு ஞானத்தின் கதவுகள் திறந்தன. ஒரு முப்பதாண்டுக் காலம் இயேசுவும் உலகம் முழுவதும் சுற்றி வந்ததாகக் கூறப்படுவதுண்டு. தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய அண்ணல் காந்தியடிகளுக்கும், இந்திய மக்களின் இதயத்துடிப்பை அறிந்திட ஓர் இரண்டாம் வகுப்பு இரயில் பயணம் தேவைப்பட்டது. மாசேதுங்கின் சீனப்புரட்சி ஒரு நீண்ட பயணமாகவே நிகழ்த்தப்பட்டது. அதைப்போலவே, இருபத்தி மூன்று வயது நிரம்பிய சேகுவாரா மோட்டார் சைக்கிளில் பசிபிக் கடலோர நாடுகளுக்குப் பயணம் சென்றார். அந்தப் பயணத்தைப் பற்றி அவர் தனது அன்னையாருக்கு எழுதிய கடிதத்தில், “ஒரு புரட்சிக்காரனின் தேவைகள் என்ன? வலிமை வாய்ந்த கால்கள், எளிமையான சுமை, ஒரு பிச்சைக்காரனின் வயிறு!” பயணம் சென்றபோது இலத்தீன் அமெரிக்காவின் அழகோடு, அதன் மக்களை, அதன் உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளைத் தனது சொந்தக் கண்களால் நேரடியாக அறிந்து கொண்டார் சேகுவாரா என்கிற அந்த இலட்சிய இளைஞர். பிற்காலத்தில் எதேச்சாதிகாரத்திற்கும், அதிகார துஷ்பிரயோகத்திற்கும், எளியோர் உரிமைகளைப் பறிக்கும் தன்னல ஆட்சியாளர்களுக்கும் எதிராகப் போராடுகின்ற புரட்சியாளர்களுக்கும், போராளிகளுக்கும் தள

நாயகனாக மாறப்போகிற சேகுவாராவின் எதிர்காலப் போராட்டக் கூறுகளுக்கு முன்னோட்டமாக இந்தப் பயணம் அமைந்தது. இந்தப் பயணத்தைப் பற்றி சேகுவாரா எழுதுகையில், நமது மக்களின் ஏழ்மையை, பசியை, அவர்களைப் பீடித்திருக்கும் நோய்களை நெருக்கமாகச் சென்று பார்த்ததாலேயே, தன்னால் இந்த அரசியல் சூழலில் ஒரு முழுநேர மருத்துவராக மனசாட்சிப்படி பணியாற்றவே முடியாது என்பதையும், மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்கு முன் அவர்கள் வாழ்வைக் கவ்வியிருக்கும் நாசகாரச் சக்திகளை ஒழிப்பதுதான் முதல் வேலையாக இருக்க வேண்டும் என்பதை தான் உணர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது இருபத்தி ஆறாவது வயதில், தலை மறைவாயிருந்த கியூபா புரட்சியாளர்களைச் சந்தித்தார் சேகுவாரா. 1955இல் பிடல் காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டதும், சேகுவாரா காஸ்ட்ரோவைச் சந்தித்தார். இருபத்தொன்பதாவது வயதில் சேகுவாரா புரட்சிப்படையின் மூன்றாவது அணிக்குத் தலைவராக அறிவிக்கப்பட்டார். முதல் அணிக்கு காஸ்ட்ரோவே தலைவராக இருந்தார். அவரது முப்பதாவது வயதில் புரட்சிப்படை வெற்றி அடைந்தது. கியூபா விடுதலைக்கு அவர் ஆற்றிய பணிகளை கவுரவித்து, முப்பத்தொன்றாவது வயதில், கியூபக் குடிமகனாக அறிவிக்கப்பட்டார். கியூபா நிர்வாகத்தில் பங்கு பெற்று வந்த சேகுவாரா 1961-இல், அதாவது, அவரது முப்பத்து மூன்றாவது வயதில் கியூபாவின் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் அமைச்சராக இருந்தபோது பெற்ற மகிழ்ச்சியை விட, கரும்பு வெட்டுகிற தொழிலாளியாக வேலை செய்தபோதுதான் அதிக மகிழ்ச்சியாக இருந்திருக்கிறார். அமர்ந்திருந்தது அமைச்சர் நாற்காலியில் என்றாலும், அவர் மனமோ களம் தேடி அலைந்து கொண்டிருந்தது என்கிறார்கள் அவர் வரலாறு தீட்டியோர்.

அமைச்சராக இருந்து கொண்டே களம் தேடிய அவரால், இயல்பான குடும்ப வாழ்க்கையை நடத்த முடியவில்லை. அலெய்டா மார்க்சை அவர் காதலித்துத் தான் திருமணம் செய்து கொண்டார். அவர் சாதாரண இல்லத்தரசியாக மட்டும் இருக்கவில்லை, அவரது செயலாளராகவும், சக போராளியாகவும் திகழ்ந்தார். ஆனால் அவருக்கு, வரிசையாக நான்கு குழந்தைகள் பிறந்தன. அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு அலெய்டா மீது மட்டுமே விழுந்தது. நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்க நடந்தோ, பேருந்திலோ போய் வர வேண்டிய நிலைமை.

ஓரிரு முறை சேகுவாராவின் அரசு வாகனத்தை மருந்து வாங்கி வர அலெய்டா எடுத்துச் சென்றதை பெரும் தவறு என்று சேகுவாரா கண்டித்தார். "இந்தக் கார் யார் கார் தெரியுமா? மக்கள் வரிப் பணத்தால் வாங்கப்பட்டது. அதில் மக்கள் பணத்தால் வாங்கப்பட்ட பெட்ரோல் ஊற்றப்பட்டிருக்கிறது. அதை காய் கறி வாங்க நாம் எப்படி பயன்படுத்தலாம்?" என்று சேகுவாரா கேட்க, மனம் வருந்தி அலெய்டா குழந்தைகளைக் கைகளில் தூக்கிக் கொண்டு பேருந்தில் போய் வந்தார்.

சேகுவாரா தொழில் துறைக்கு அமைச்சராக இருந்தபோதிலும், வங்கிகளைக் கையாளும் பொறுப்பும் அவரிடம்தான் இருந்தது. அவரிடம் பொருளியல் அறிவு இல்லை என்று கூற முடியாது. எனவே, அந்தத் துறையையும் அனைவரும் பாராட்டும் வகையிலே நடத்தினார்.

ஆனால் பிறகு எல்லாவற்றையும் ஒருநாள் துறந்து விட்டு, துப்பாக்கியோடு காடுகளை நோக்கிப் புறப்பட்டு விட்டார். உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு உலகத்தைப் படைக்க வேண்டுமென்ற வேட்கையுடன் தொடங்கிய அந்தப் பயணத்தில், காட்டுப் பூச்சிகள் அவரைக் கடித்ததால் உடம்பு முழுவதும் வீங்கி விட்டதாம். சாப்பிட எதுவும் கிடைக்காமல், கிடைத்த குதிரை மாமிசத்தைச் சாப்பிடுகிறார். அதன் காரணமாக வயிற்று வலி, ஆஸ்த்துமா தொல்லை வேறு. இவ்வளவிற்கும் இடையே ஏகாதிபத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற வேள்வியில் ஈடுபடுகிறார். தன்னைக் காவு கொடுத்துக் கொண்டாவது, மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டுமென்ற வெறி அவரது கண்களில் எப்போதும் ஒளிவிட்டுக் கொண்டே இருந்தது.

*"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்*
*உருள்பெருந்தேர்க்கு*
*அச்சாணி அன்னார் உடைத்து"*

என்றார் அய்யன் வள்ளுவர். உருவத்தின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது என்பதுதான் இந்தக் குறளின் மையக் கருத்து. நேற்று நான் எழுதியதைப் போல கியூபா ஒரு சின்னஞ்சிறிய நாடு. அதன் மக்கள் தொகை அறுபது லட்சம். அந்த நாட்டின் எல்லையைக் கொண்டோ, மக்கள் தொகையைக் கொண்டோ அதனை மதித்து விட முடியாது. உலக அளவில்

சிந்திக்கக் கூடிய ஒரு நாடாக இடம் பெற காரணமாக இருந்த - இருக்கிற பிடல் காஸ்ட்ரோ, பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தலைவராக இருந்தபோது அந்த நாட்டின் வெற்றிக்கான விதையை விதைத்தார். மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவிற்குப் பக்கத்திலே மிகச் சிறிய நாடான கியூபா இருந்து கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கு அடி பணிய மாட்டேன் என்று குரல் எழுப்பி, உலக மக்களையெல்லாம் வியந்து நோக்கச் செய்யும் அளவிற்கு கடந்த ஐம்பதாண்டு காலமாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது. பிடல் காஸ்ட்ரோவும், அவரது ஆருயிர்த் தோழரான சேகுவாராவும் 1955ஆம் ஆண்டு ஜூலை அல்லது ஆகஸ்டில்தான் முதன் முதலாக சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி சேகுவாரா எழுதும்போது, "குளிர் நிறைந்த ஒரு நாள் இரவு, மெக்சிகோ நகரில், அவரை நான் சந்தித்தேன். முதலில் உலக அரசியல் நிலவரங்கள் குறித்து பேசினோம். பொழுது விடியும் முன்பாகவே எனது அடுத்த பயணத்தைப் பற்றிய முடிவுக்கு நான் வந்து விட்டேன். அறிவுக் கூர்மைமிக்க, தன்னம்பிக்கை நிறைந்த, அசாத்திய துணிச்சல் வாய்ந்த இளைஞரை நான் பார்த்தேன். கண்ணீரை நிறுத்தி விட்டு, போராட வேண்டிய நேரம் வந்து விட்டது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்து காஸ்ட்ரோ என்ன எழுதினார் தெரியுமா? "ஒரே நாள் இரவில் நடைபெற்ற உரையாடலில் சேகுவாரா கிராண்மா நோக்கிச் செல்லும் படையில் ஓர் உறுப்பினராகி விட்டார்" என்கிறார் பிடல் காஸ்ட்ரோ. அப்போது தொடங்கிய சந்திப்பு, இருவரையும் நண்பர்களாக, தோழர்களாக, போராளிகளாக, சகோதரர்களாக, கியூபாவின் வெற்றிக்கு வித்திட்டவர்களாக உலகத்தின் முன் நிலை நிறுத்தியது.

தொடக்கத்தில் ஒரு குழப்பமான சமுதாய அமைப்பைக் கொண்ட நாடாக விளங்கிய கியூபாவில், புரட்சியை வெற்றிகரமாக நடத்தியதுதான் பிடல் காஸ்ட்ரோவின் வெற்றி. இவரது அன்பு காரணமாக, சேகுவாரா, உலக நாடுகள் பலவற்றுக்கும் பயணம் மேற்கொள்ளவும், ஆப்பிரிக்க நாடுகளின் மீது கவனம் செலுத்தவும் முடிந்தது. எகிப்து நாட்டின் அதிபராக இருந்த கமால் அப்துல் நாசர், நெக்ருமா, சிகோதேர, நயாரரே போன்ற பல உலகத் தலைவர்களுடன் சேகுவாரா நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். தனது புரட்சிகரமான எண்ணங்களை இவர்களிடமெல்லாம் அவ்வப்போது பகிர்ந்து கொண்டார். சீனாவின் அதிபரான

சூ-என்-லாய் இவருக்கு அளித்த ஊக்கம் அயர்வு போக்கும் அருமருந்தாயிற்று! அடிக்கடி ஊக்கமளித்து வந்தார். கியூபாவின் விடுதலைக்காகத் துப்பாக்கியை கையிலே தூக்கிக் கொண்டு, இவர் பயணம் செய்த தூரம் மிகவும் அதிகம்.

மிக இளம் பருவத்தில், சேகுவாரா, கரும்பு வெட்டும் கூலித் தொழில் புரிவதற்காக சென்றார் என்றறிந்த தாய் செலியா, "என் மகனே, இறுதியாக கரும்பு வெட்டும் தொழிலுக்குத்தான் அருகதையானவன் என்று கருதிவிட்டாயா? மரணத்தை எதிர்த்துப் போராட தகுதியானவன் அல்லவா நீ? அந்த இடம்தான் உனக்குரியது" என்று கூறியதாக அந்த நூலாசிரியர் எழுதியிருப்பதை நான் படித்தபோது, புறநானூற்றில் இடம் பெற்ற தமிழ்க் குல தாய்மார்களின் குரல்தான் என் செவிகளில் எதிரொலித்தன. அதே தாய், சில நாட்கள் கழித்து, தன்னுடைய மகனை ராணுவப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளாமல் விலக்களித்து விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாளாம். அப்போது அவளை பாசம் கவ்விக் கொண்டது போலும். அப்போதும் அந்தத் தாய், "நல்லவேளையாக என் மகன் தப்பி விட்டான்! ராணுவப் பயிற்சி என்ற பெயரால் என் மகனை ஏதாவது ஒரு சார்ஜண்டின் மனைவி, காய்கறி வாங்க பையோடு சந்தைக்கு அனுப்பியிருப்பதிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டான் அவன். ஆனாலும், அவன் போராடுகின்ற காலம் வந்தே தீரும்" என்றும் கூறினாராம்.

இந்தத் தாயின் வார்த்தைகள் பின்னர் எப்படி மெய்ப்பிக்கப்பட்டன என்பதை பிடல் காஸ்ட்ரோவின் இளவலும், சேகுவாராவின் நண்பனுமான ரால் காஸ்ட்ரோ - "சேகுவாராவின் டைரியை படித்த போது ஒரு உன்னதமான புரட்சிக்காரனுடைய குருதியால் இது தீட்டப்பட்டுள்ளது என்பதை உணருகிறேன். அவரது தைரியம், உறுதி, இறுதிவரை போராடுகிற மனோதிடம் ஆகியவற்றின் மீது நான் அபிமானம் கொண்டேன். கொரில்லா குழுவிற்கு தோல்வி ஏற்பட்டது பற்றி எழுதும்போதும் அவர் பெரும் நம்பிக்கையோடு இருந்திருக்கிறார். இறுதிவரை பணிந்து போகாத வீரராக இருந்திருக்கிறார்" என்று எழுதியிருப்பதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

சேகுவாராவின் தனி மனித வாழ்க்கை முறையைப் பார்த்தால் கூட, இளம் வயதில் அவர் சாதாரண சராசரி மனிதர்களைப் போல இருக்கவில்லை. சியாராமீஸ்ட்ராவில் காடுகளில்

பதுங்கியிருந்தபோதும், விவசாயிகள் மத்தியில் கிராமங்களில் அவர் இருந்தபோதும், போராளிகளாக இருந்த அவரது நண்பர்கள், சூழ்நிலைகள் காரணமாக காம வேட்கை நிறைந்தவர்களாக மாறி, சில கிராமப் பெண்களுடன் உறவு கொண்டதாக அறிந்த சேகுவாரா அவர்களையெல்லாம் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். அது இரண்டு ஆண் பெண்களுக்கு நடுவிலே எழும் உறவு முறை சம்பந்தப்பட்டதல்ல, அவர்கள் புரட்சிக்காரர்களாகத் தான் கிராமங்களுக்குள் சென்றார்கள். அப்படியே தான் செயல்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக அவர்கள் செயல்பட்டால், அது புரட்சியைப் பாதிக்கும் என்று கூறியிருக்கிறார்.

புரட்சிக்காரனான சேகுவாரா தன் குழந்தைகளுக்கு தன் மறைவுக்கு முன் எழுதிய மடலை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

“என் பிள்ளைக்கனி அமுதங்களாம்,

பிரியத்திற்குரிய ஹில்டிடா, அலெய்டா, காமிலோ, செலியா, ஏர்னஸ்டோ ஆகியோருக்கு.

இந்தக் கடிதத்தை நீங்கள் எப்போதாவது படிக்கிறபோது, நான் உங்களுடன் இல்லை என்பது தெரிந்து விடும்.

என்னை நீங்கள் அதிகம் நினைத்திருக்க மாட்டீர்கள். சின்னஞ்சிறார்களுக்கோ என்னைப் பற்றி நினைத்துப் பார்க்க எதுவும் இருக்காது.

உங்கள் தந்தை தன் கருத்துகளுக்கு ஏற்பச் செயலாற்றியவன். அவன் தன் நம்பிக்கைக்கேற்ப வாழ்ந்தவன்.

நீங்கள் நல்ல புரட்சிக்காரர்களாக வளர வேண்டும். நன்றாகப் படியுங்கள். இயற்கையைக் கட்டுப்படுத்த தொழில்நுட்பத்தைத் தன்வயப்படுத்திக் கொள்ளுங்கள். புரட்சிதான் மிக முக்கியமானது என்பதை நினைவில் கொள்க. நாம் ஒவ்வொருவரும் அதில் தனித் தனியாக ஒரு துளி தான்.

இந்த உலகத்தில் எங்கு அநியாயம் இழைக்கப்பட்டாலும், அதுகுறித்து பிரதிபலிப்பைக் காட்ட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அதுதான் ஒரு புரட்சிக்காரனின் பாராட்டத்தக்கத் தன்மையாகும்.

விடைபெறுகிறேன், குழந்தைகளே.... உங்களை மீண்டும் பார்ப்பேன் என நம்புகிறேன்.

உங்கள் அப்பா அரவணைத்து, ஒரு பெரும் முத்தத்துடன்.

அப்பா "சே"

சேகுவாரா தன் புரட்சியை கியூபா நாட்டின் வெற்றியுடன் முடித்துக் கொள்ளவில்லை. பக்கத்திலே உள்ள பொலிவியா நாட்டிலும் புரட்சி விதையை ஊன்றிட விரும்பிச் சென்றான். "கியூபா புரட்சியில் எனக்கு அளிக்கப்பட்டிருந்த கடமைகளை நிறைவேற்றி விட்டேன் என நினைக்கிறேன். நான் உங்களிடமிருந்தும், தோழர்களிடமிருந்தும், என்னுடையவர்களாகி விட்ட மக்களிடமிருந்தும் விடைபெறுகிறேன்" என்று பிடல் காஸ்ட்ரோவிற்கு மடல் வரைந்து விட்டு, பொலிவியழூ புரட்சியிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பொலிவியா நாட்டின் புரட்சியின் வெற்றிக்காக முழு முனைப்புடன் பாடுபடும் சேகுவேராவின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஏகாதிபத்தியம் முயற்சித்தது. சேகுவாராவைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 4200 டாலர்கள் சன்மானம் அளிக்கப்படும் என்று விலை நிர்ணயிக்கப்பட்டது. ஒருநாள், சேகுவாரா, உலகத்திலிருந்து காணாமல் அடிக்கப்பட்டார் என்று செய்தி வருகிறது. அவர் இருக்கிறாரா? இல்லையா? என்ற கேள்விகள் எல்லாம் எழுப்பப்படுகின்றன. உண்மை உலகத்திற்குச் சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், அமெரிக்க ஆவணங்களில் பின்னர் வெளிவந்த தகவல்களின்படி, அவர் கொல்லப்பட்டார் என்பது தான் செய்தி. அந்த மரணத்தின் முனையிலே கூட, சேகுவாரா, தன்னைச் சுடுவதற்காக வந்த ராணுவ தளபதியிடம் "நீ எதற்கு வந்திருக்கிறாய் என்று தெரியும். நான் தயார். ஒரு மனிதனைத் தானே கொல்லப் போகிறாய். கோழையே சுடு" என்றாராம். அவனும் சுட்டான். சேகுவாரா சுவரில் சாய்ந்து விழுந்தார். ஆனால், சாயாமல் நிமிர்ந்து நிற்கிறார் இன்றளவும் நம் நெஞ்சங்களில்!

அன்புள்ள,

**மு.க.**

15-11-2007

# 3297. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (9)

## வெள்ளை இருட்டை விலக்க வந்த கறுப்பு நிலா!

**உடன்பிறப்பே,**

1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் காலை திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மகிழ்ச்சி பொங்கிட துள்ளிக் குதித்துக் கொண்டு மேடையிலிருந்த ஒலி பெருக்கியின் முன்னால் நான் வந்து நின்றேன். அலைகடலெனக் குழுமியிருந்த தமிழ் மக்களைப் பார்த்துச் சொன்னேன்.

**“தமிழ்ப் பெருங்குடி மக்களே!**
**கழக உடன்பிறப்புகளே!**
**எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி!**
**27 ஆண்டுக் காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தென்னாப்பிரிக்கா நாட்டின் கறுப்பர் இனத்தலைவன் நெல்சன் மண்டேலா, விடுதலை செய்யப்பட்டு விட்டார் – இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட மாநாட்டுப் பந்தலில் குழுமியிருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கையொலி செய்யுங்கள்!”**

இந்தக் கருத்தமைந்த என் வேண்டுகோள் கேட்டு, மண்டேலா விடுதலையால் மகிழ்ச்சியில் ஆழ்ந்தோர், மாநாட்டில் “நான் போதும் போதும்” என்று கையமர்த்தும் வரையில், கடலில்லா திருச்சியில் கடலலைகளின் முழக்கத்தைச் செய்தனர்.

உத்தமர் காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் மனித உரிமைப் போர் நடத்தியபோதே நமது தென்னக மக்களின் ஆதரவையும் – அனுதாபத்தையும் பெற்றார் என்பதுபோல, மண்டேலா நடத்திய போராட்டத்தின்போதும் – தென்னிந்தியாவின் தமிழ் மக்களின்

அனுதாபம் அவரது இயக்கத்திற்கு இருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு எடுத்துக்காட்டியது.

உலகமே அந்த ஒரு மனிதனின் சிறைவாசத்தைப் பற்றித்தான் அப்போது பேசிக் கொண்டும், கண் கலங்கிக் கொண்டுமிருந்தது. காந்தியடிகள் நடத்திய அந்தப் போராட்டத்தில் இந்திய நாட்டின் தமிழ் நிலத்துக்குச் சொந்தக்காரர்களான நாகப்பன், நாராயணசாமி என்ற வாலிபர்களும், தில்லையாடி வள்ளியம்மாள் என்ற பெண்மணியும், சிறை புகுந்து, உடல் நலிந்து, உயிர் விட்டார்கள் என்பது வரலாறு - அந்த வரலாறு என்றும் நினைக்கப்படும் வண்ணம், கழக ஆட்சியின் கைவண்ணத்தால் உருவான அரிய சின்னங்கள், இன்றும் அழியாச் சின்னங்களாக தஞ்சை தில்லையாடியில் விளங்குகின்றன. தென்னாப்பிரிக்காவிலும் கூட நமது இந்தியப் பிரதமராக நமது அணியின் நாயகராக விளங்கிய திரு. குஜ்ரால் அவர்கள், 1997 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் நாள், அந்தத் தியாகிகளின் நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார் என்பது உணர்ச்சிமிக்க ஓர் நிகழ்ச்சியாகும்.

அந்தத் தென்னாப்பிரிக்காவில் கறுப்பர் இன விடுதலைக்காக, வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா; பின்னர் விடுதலைக்குப் பிறகு, அந்த நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றது பற்றியும் - அவரது துணைவியார்கள் அவரது தியாகப் போருக்குத் துணை நின்றது பற்றியும் - அவரின் வாழ்க்கை வரலாறு கூறும் ஏற்றத் தாழ்வுகள் பற்றியும் - எதுவும் விளக்க வேண்டிய அவசியமின்றி, அந்த மாவீரனின் வைர நெஞ்சம் - அவன் வளர்ந்த சூழ்நிலை - ஏற்றுக் கொண்ட அடக்குமுறை - கட்டிக்காத்த தன்மான உணர்வு - வழுக்கல் இல்லாத பொதுவாழ்வு - இவையனைத்தும் அவனது இளமைக் காலத்திலேயே வாய்க்கப் பெற்றவனாக இருந்ததை எண்ணி, வியப்பு அடைகிறோம் - அவ்வழி வளரும் இளைஞர்கள் எவராயினும், வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

1918 ஜூலை 18 மண்டேலா பிறந்த நாளாகும் - கறுப்பின மக்களிடையே நெல்சன் மண்டேலா குடும்பத்தினர் ஃகோஸா இன வகையைச் சேர்ந்தவர்கள். அக்குலத்தின் தலைவராக மண்டேலாவின் தந்தை இருந்தார். அவர் பெயர் ஹென்றி கான்யிஸ்

வா காட்லா என்பதாகும். அவருக்கு நான்கு மனைவிகள் - பனிரெண்டு குழந்தைகள் - மூன்றாம் மனைவியின் மகன்தான் நெல்சன் மண்டேலா.

குடிசையில் பிறந்து, குடிசையில் வளர்ந்தவர் - குடும்பத்துக்கு மொத்தம் மூன்று சின்னஞ்சிறு குடில்கள் - ஒன்று சமைத்திட! ஒன்று பொருள்களை சேமித்திட! ஒன்று உறங்கிட! பாய்களில்தான் படுக்கை அவர்கள் அனைவருக்கும்!

ஆரம்ப வயதில் ஆடுமாடுகள் மேய்க்கிற வேலை மண்டேலாவுக்கு - அவர் அன்னை எழுதப் படிக்க தெரியாதவர் - ஆயினும், மகனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி வைத்தார்.

1928ஆம் ஆண்டுக்குள் மண்டேலாவின் தந்தை இறந்து விடவே, அந்தத் தந்தையின் மைத்துனரான "ஜோன்கின்டாபா" என்பவர், மண்டேலாவின் படிப்பைக் கவனித்துக் கொண்டார்.

க்யூனு எனப்படும் மண்டேலா பிறந்த ஊரில், ஓய்வு நேரங்களில் பெரியோர்கள் கூறும் தமது இனத்தவர் பற்றிய பழைய கதைகளையும், வெள்ளையர்களால் தம்மின வரலாறுகள் மறைக்கப்பட்டதையும், வெள்ளையர் நுழைவுக்கு முன்பு அங்கிருந்த கலை, கலாச்சாரம், வாழ்க்கை முறைகளையும் பெரியோர்கள் கூறிடக் கேட்டு புத்துணர்ச்சி பெறும் மண்டேலா, படிப்பையும் விடவில்லை! ஆடு மாடு மேய்க்கும் வேலையையும் தொடர்ந்தார்.

அதே சமயம் தமது இனத்தாரின் துயர் துடைத்து, உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டுமென்று அந்த இளம் வயதிலேயே அழுத்தமான உறுதி பூண்டார் மண்டேலா.

1938ஆம் ஆண்டு அவரது உறவினர் ஜோன்கின்டாபா முயற்சியினால், மண்டேலா, முதலில் "கெல்ட் டவுன்" கல்லூரியிலும் - பிறகு "போர்ட்ஹேர்" கல்லூரியிலும் சேர்க்கப்பட்டார்.

அப்போதுதான் அவரது முதல் போராட்டத்துக்கான துளிர் விடத் தொடங்கியது. அங்கே வெளிப்பட்ட இன வேற்றுமைக் கொடுமையை எதிர்த்து, இளைஞர் மண்டேலா தலைமையில் வேலை நிறுத்தம் அறிவிக்கப்படவே, கல்லூரி நிர்வாகம்

மண்டேலாவை வெளியேற்றியது. ஆம் - மண்டேலாவுக்கு அவர் நடத்திய உரிமைப் போரில் கிடைத்த முதல் தண்டனை அது!

மன்னிப்பு கேட்டுக் கொண்டால் மீண்டும் கல்லூரியில் சேரலாம் என்று கூறப்பட்டது. அதை மானப் பிரச்சினை என்று கூறி மறுத்து விட்டார் மண்டேலா.

பின்னர் தனது மாமன் மகன் ஜஸ்டிஸ் என்பவருடன் சேர்ந்து ஜோகன்ஸ்பெர்க் நகருக்குச் சென்று தங்கச் சுரங்கத்தில் வேலை பார்த்தார். அங்கிருந்தும் அவரது உறவினர் தூண்டுதலால் வெளியேற்றப்பட்டதால், மண்டேலா, சட்டம் படித்திட முனைந்தார். 'லாசா சிடிங்ஸ்கி' என்ற வெள்ளைக்கார வழக்கறிஞரிடம் சட்டக் கல்வியில் பயிற்சி பெற்று திறமையாளரானார்.

மண்டேலா வாழ்க்கை, கட்டுப்பாடுமிக்கது என்றும், அதிகாலையில் எழும் வழக்கமுடையவர் என்றும் - நாளும் தவறாமல் நடைப் பயிற்சி மேற் கொண்டவர் என்றும் - எளிமையான உணவே அருந்தி, எப்போதும் சுறுசுறுப்புடன் பணியாற்றுபவர் என்றும் - பெண்களுக்குத் துணையாக அடுக்களை வேலைகளில் கூட ஈடுபடுவார் என்றும் - அவரது சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

கறுப்பர் இன மக்களுக்கும், வெள்ளையருக்குமிடையே கடுமையான புகைச்சலும் - மோதுதல்களும் இருந்தபோதிலும், மண்டேலா, இரு தரப்பு மாணவர்களிடமும் பரந்த மனத்துடனும், பண்பாட்டுடனும் நேசமாகப் பழகி, அமைதியாக காந்திய வழியிலே அறப்போர் நடத்தி, இன வேற்றுமைக் கொடுமையை அகற்ற நினைத்தார்!

1948ஆம் ஆண்டு, மண்டேலா, இளைஞர் அணியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால கட்டத்தில், கறுப்பின மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் அவர் கண்களை உறுத்தின. "காஃபிர்" என்ற இழிந்த வார்த்தையினால் கறுப்பின மக்கள் அழைக்கப்பட்டதையும் - தெருக்களில் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டதையும் - மண்டேலாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதுமட்டுமா? கறுப்பின மக்களின் நிலங்களை வெள்ளையர் பறித்துக் கொண்டனர் - வெள்ளையர் கறுப்பரிடையே காதல் மற்றும் கலப்பு மணங்கள் - சட்ட விரோதமாயின - இனப்பகை, பெரும் பகை - கறுப்பினத்தாருக்கு

வேலைகள் மறுக்கப்பட்டன - கேளிக்கை இடங்களில் அவர்களுக்கு அனுமதியில்லை - மீறினால் கடும் தண்டனை.

இந்தக் கொடுமைகளை எதிர்த்து, 1948-ல் இளைஞர் அணியின் செயலாளரான மண்டேலா, 1949-ல் கூட்டிய மாநில மாநாடு ஒன்றில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தத் தீர்மானம் நிறைவேற்றினார்.

அதைத் தொடர்ந்து, அவர், 1951-ல் இளைஞர் அணியின் தலைவராகவே தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது முப்பத்தி மூன்று தான்! ஆம், வெள்ளை இருட்டை விலக்க கறுப்பு நிலாவின் பிறையாக அந்த இளைஞர் அணி தோன்றியது!

வெள்ளையர் வெறித்தனத்தை எதிர்த்து அமைதியாக அரும்பிய மண்டேலாவின் அறப்போர், புரட்சி மலராகவும் பூத்திடத் தவறவில்லை.

கறுப்பு இன மக்களின் மாணவர் போராட்டமும் தொடங்கியது.

புரட்சிகள் - கிளர்ச்சிகளின் விளைவாக - சிறைப்பட்ட மண்டேலாவை, நாட்டை விட்டு வெளியேறுவதாக இருந்தால், விடுதலை செய்வதாக தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு கூறியது.

அதற்கு மண்டேலா மறுப்புரைத்து, "எங்களுக்கு சுதந்திர உரிமை இல்லையென்றால், நான் அடைபட்டுள்ள சிறைச்சாலையே திருப்தி அளிக்கக் கூடியது" என்று கூறிவிட்டார். அவர் நடத்திய போராட்டங்களின் தொடர்ச்சியாக, நீண்ட கால சிறை வாழ்க்கையைத்தான் அவர் ஏற்றுக் கொள்ள நேர்ந்தது. சிறையில் ஆரம்ப நிலையில் கேவலமான உணவு, அதுவும் பசியை அடக்கக் கூடியதல்ல - கல் தரையின் மீது உறங்குவதற்கு ஒரு பாய் - நாளேடுகள் வைத்திருந்தால் சிறை சட்டப்படி தண்டனை - நாள் முழுவதும் வேலை - ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் உடைகள் அவிழ்க்கப்பட்டு சோதனை - இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்த மண்டேலா, இளமை முதல் அவர் கொண்ட வைராக்கியத்தின் எதிரொலியாக சிறைக் கொடுமைகளைப் பற்றி அவர் சொன்ன வாசகம் பின் வருமாறு :-

**"சிறைக் கொடுமை என்னை இன்னலுக்கு**
**ஆளாக்கவில்லை.**
**சிறைக்கு வெளியே என் மக்கள்**
**அனுபவிக்கும் துன்ப துயரங்களை எண்ணித்தான்**
**நான் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல்**
**இருக்கிறேன்"**

என்பதாகும்.

மண்டேலாவின் இந்தத் தியாக வாழ்க்கை தென்னாப்பிரிக்க நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமல்ல, இந்தப் பூமிப் பந்தில் வாழ்ந்து கொண்டு புத்துலகம் காணத் துடிக்கின்ற ஏறுநடை இளைஞர்களுக்கெல்லாம் இதய கீதமாகும்.

1959ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதி, மண்டேலா உள்ளிட்ட விடுதலை இயக்க வீரர்களின் வழக்கில் இவர்களுக்கு எதிராக வாதாடிய அரசு வழக்கறிஞர் பிரோ என்பவர், நோயால் சிக்குண்டு மறைந்து விட்டார் என்ற செய்தி வானொலியின் மூலம் அறிவிக்கப்பட்டது. அந்தச் செய்தியினை அறிந்த போராட்ட வீரர்கள் மன மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக, அவர் அரசு வழக்கறிஞராக தனக்கு அளிக்கப்பட்ட பணியினை சிறப்பாகச் செய்தார் என்ற வகையிலும், இன்னும் சொல்ல வேண்டுமேயானால், மனிதநேய மிக்க மனிதராகத்தான் அவர் செயல்பட்டார் என்ற வகையிலும், மறைந்த அந்த வழக்கறிஞருக்கு அஞ்சலி செலுத்த வேண்டியது தங்கள் கடமை என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

தேச விடுதலைப் போராட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டு சுமார் 27 மாதங்களுக்குப் பிறகு தான் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்காகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும், தாங்கள் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை என்று மறுப்பு தெரிவித்தனர். அவர்களுக்குத் தரப்பட்ட குற்றப் பத்திரிகை மட்டும் 2000 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. 210 சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டதில், 200 பேர் காவல் துறையைச் சார்ந்தவர்கள்.

வழக்கு விசாரணை, தொடர்ந்து திருச்சபை அமைந்துள்ள பழைய காலக் கட்டிடம் ஒன்றிலே நடைபெற்றது. அந்தத் திருச்சபையின் பாதிரியாருடைய அறைதான் உணவருந்தும்

இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் திருமதி தையநாயகி பிள்ளை என்ற ஒரு அம்மையார்தான் தொண்டர் அணியினருடன் இணைந்து இந்திய முறைப்படி உணவுப் பொருட்களைத் தயாரித்து, விசாரணைக் கைதிகளுக்கு அளித்து வந்திருக்கிறார். முற்பகலில் வடையும், தேநீரும் என்றும், பிற்பகலில் அதுபோலவே ஏதாவது சிற்றுண்டியும், தேநீரும் என்றும், மதியம் இந்திய முறைப்படியான உணவு என்றும் அந்த அம்மையார் பரிமாறியிருக்கிறார். இவ்வாறு தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்ட வீரர்களுக்கு வழக்கு நடைபெற்ற நாட்களில் எல்லாம் உணவளித்து உபசரித்த அந்த திருமதி தையநாயகி பிள்ளை என்பவர் யார் தெரியுமா? அவர் தமிழ்நாட்டில் பிறந்த ஒருவரின் வழி வந்தவர் என்பதை, நெல்சன் மண்டேலா பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் பக்கங்களில் காணும்போது, நம்மையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி நம் உள்ளத்தில் ஏற்படத்தான் செய்யும்.

இளம் வயதிலேயே புரட்சிக்காரராக மாறி, தென்னாப்பிரிக்காவின் விடுதலைக்காகப் பாடுபட்ட நெல்சன் மண்டேலாவைப் பற்றி நமது இளைஞர்களுக்கு நினைவூட்டுகின்ற இந்த நேரத்தில், அவர் கூறிய சில வரிகளோடு இன்றைய கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

"The Indian campaign became a model for the type of protest that we in the youth league were calling for"

(இளைஞர் இயக்கத்தின் சார்பில் நாங்கள் நடத்தி வரும் எதிர்ப்புப் போராட்டத்திற்கு, இந்தியர்கள் நடத்திய இயக்கமே முன் மாதிரியாக இருந்தது.)

அன்புள்ள,

**மு.க.**

16-11-2007

# 3298. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (10)

## சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்

**உடன்பிறப்பே,**

விடுதலைப் போராட்ட வீரர்கள், தியாகிகள், தீரர்கள் ஆகியோரைப் பற்றியும், அவர்கள் தங்கள் இளமைக் காலத்தில் இயற்றிய சாதனைகளைப் பற்றியும் இந்தக் கடிதத் தொடரில் விவரித்து வருகின்றேன்.

கி.மு. ஐந்தாவது நூற்றாண்டில் வாழ்ந்த அரசியல் மேதைகள், தத்துவ ஞானிகள் பற்றியும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு, கி.மு. 470ஆம் ஆண்டுவாக்கில், கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரத்தில் அழகு குறைந்த ஒரு மனிதர், அறிவு செறிந்த கருத்துகளை இந்த அவனிக்கு வழங்க முன்வந்தார். அதற்கென அயராது பாடுபட்டார். ஆவி தரவும் முற்பட்டார். அவர் அலைந்து திரியாத இடமே இல்லை. அப்போது அவர் குரலைக் கேட்காத மனிதர்கள் கிடையாது. அரசியல் மேதாவிகள், தத்துவ ஞானிகள், அறிஞர்கள் ஆகியோர் வரிசையில், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரை வைத்து எண்ணப்படுவதைப் போல, இந்த மனிதரின் பெயரும் இவர்களுக்கு முன்னர் வைத்து எண்ணப்பட்டது. அந்தப் பெயர்தான் சாக்ரடீஸ்.

அவர் புகழ் பரவப் பரவ, அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமைக்காரர்கள் சிலர், அவர் வாழ்வையே முடித்துவிட வேண்டுமென்று திட்டமிடும் வஞ்சகர்களாகத் தோன்றினர். அனிடஸ், லைகான், மெலிடஸ் என்ற அந்த மூவரும்தான் ஏதென்ஸ் நகரத்து நீதி மன்றத்தில் சாக்ரடீசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.

“தெளிவற்ற வார்த்தைகளையும், குழப்பமான வாதங்களையும் எடுத்து வைத்து, இளைஞர்களைக் கெடுக்கிறார் என்பதும், தேச மதத்திற்கும், தேசத்திற்கும் எதிரான குற்றங்களைச் செய்தார் என்பதும், பக்தியின்மையைப் பரப்புகிறார் என்பதும் அவர்மீது

சாற்றப்பெற்ற குற்றச்சாட்டுகளாகும்.

பிளேட்டோ எழுதிய "அபாலஜி" என்ற நூலில், சாக்ரடீஸ் கடவுள் நம்பிக்கை இல்லாதவர் (Agnostic) ஆகக் காட்டப்பட்டுள்ளார். அவரே எழுதிய "ரிபப்ளிக்" என்ற நூலில் "தத்துவஞானி மன்னர்" என்ற கருத்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசியலில் அமெச்சூர்களுக்கு எந்த இடமுமில்லை எனக் குறிக்கப்படுகிறது. ஏனென்றால், அரசாங்கம் என்பது ஒரு நுட்பக் கலையாகும், மற்றும் கட்டிடக் கலை, கப்பல் கட்டும் கலை, போன்ற மற்ற ஏனைய கைவினைகளைப் போலவே, " அரசியலும் நிபுணத்துவ அறிவை சார்ந்து இருக்கின்றது என்ற அடிப்படையில் எழுதப்பட்டதுதான் "ரிபப்ளிக்" நூலாகும். அதனால்தான் அந்த நூலில் அமெச்சூர்களுக்கு அரசியலில் இடம் இல்லை என்ற கருத்தை பிளேட்டோ வலியுறுத்தியிருக்கிறார்."

சாக்ரடீஸ் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் மன்னிப்பு கேட்டுக் கொண்டாலோ அல்லது நீதி மன்றத்தின் ஆணையை ஏற்று நாட்டை விட்டு வெளியேறிவிட்டாலோ மன்னிக்கப்பட்டிருக்கக் கூடும். மானம் கருதி, அந்தக் கொள்கை உறுதியாளர், தமது வாய்மையையும், வலிமையையும், வாதத் திறமையையும் நம்பி நீதி மன்றத்தைச் சந்தித்தார்.

நீதி மன்றத்தில் அவர் ஆற்றிய உரையையும், நீதி மன்றம் செல்வதற்கு முன்பிருந்த அவரது குடும்பத்தின் நிலையையும் விளக்கிவிட்டு, பிறகு என்னுடன் உங்களையும் நீதிமன்றத்தில் சாக்ரடீசைச் சந்திக்க அழைத்துச் செல்கிறேன்.

நீதி மன்றம் செல்வதற்கு முன்பு அவருடைய வீட்டில் வழக்கமாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி இதோ :-

**காட்சி - 1**

சாக்ரடீசின் வீட்டு வாயில்

(தெருவில் மக்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். சாக்ரடீஸ் சப்தமிட்டு அவர்களை அழைக்கிறான்.)

**சாக்ரடீஸ்** :- ஏற்றமிகு ஏதென்சு நகரத்து எழில் மிக்க வாலிபர்களே! நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க - இதோ சாக்ரடீஸ் அழைக்கிறேன்! ஓடி வாருங்கள்! பச்சை ரத்தம்

பாய்ந்தோடக் கச்சைக் கட்டிக் களம் செல்லும் காளையரே! உங்களைத்தான் கூவி அழைக்கிறேன்.... கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்து வாருங்கள்! வீரம் விலைபோகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்! தீட்டிய வாளும், தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும் மாத்திரம் போதாது தீரர்களே! இதோ நான் தரும் ஆயுதத்தை எடுத்துக்கொள்ளுங்கள்! அறிவாயுதம்! அறிவாயுதம்! இருட்டு மேனியும், குருட்டு மதியும் கொண்ட மடமைப் பைசாசத்தை ஒரே நொடியில் ஒழித்துக் கட்டும் புதிய போர்க் கருவி! புலி நிகர் இளைஞர்களே! என்னோடு புறப்படுங்கள்! பகைவன் நம் நாட்டுக்குள்ளே புகுந்து விட்டான் - படை எதுவுமின்றி!.... பாமரரின் உள்ளத்தைக் கொள்ளை அடித்துவிட்டான்.... அறியாமை அந்தகாரத்திலே ஏதென்சு நகரத்தை மூழ்கடித்துவிட்டான், மூட நம்பிக்கை எனும் அந்தப் பகைவன்! எழில் மிகுந்த ஏதென்சு அறிவுப் பொழிலாக மாற, ஆற்றல் நிறை தோழர்களே, அணிவகுத்துப் புறப்படுங்கள்!

(வாலிபர்கள், போர் வீரர்கள் சூழ்ந்து நின்று சாக்ரடீசின் உபதேசத்தைக் கேட்கின்றனர். சாக்ரடீசின் மனைவி எக்ஸேந்திபி என்பவள் கணவனின் போக்கிலே கசப்புக் கொண்டு வீட்டு வாயிற் படியிலிருந்தபடியே வெறுப்புடன் பார்த்து நிற்கிறாள்..... சாக்ரடீசின் நண்பன், வயதான தோழன் கிரிட்டோ வருகிறான். அவனைக் கண்டதும்.....)

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! வந்து விட்டாயா? வா, வா!.... இதோ வயதான காலத்திலே வாலிபர்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும் கடமையிலே விரைந்து நடக்கிறேன் நான்!..... எனக்கு வாய்த்த இளம் மனைவி, இரண்டாம் தாரம்.....எக்ஸேந்திபி, எத்துணை ஆத்திரத்தோடு என்னைத் தடுக்கிறாள் பார்! பார்! பார்! அவள் கனல் பொழியும் விழிகளைப் பார்! விழிகளா அவைகள்?..... பயங்கரமான மின்னலப்பா! மின்னல்!.....

**எக்ஸேந்திபி** :- (கோபமாக) ஆமாம்! மின்னல்தான் .....இந்தக் கிண்ணாரக் கிழவருக்கு மனைவியின் கண்கள் மின்னலாகத்தான் தெரியும்.....!

**சாக்ரடீஸ்** :- என் செய்வது....? நானோர் கற்பனைக் கவியாக இருந்தால், உன் பருத்த இடையைப் பார்த்து ஆகா, மின்னல் இடை என்பேன்!.... கிரிட்டோ.....சாக்ரடீஸ்தான் பொய் சொல்ல

மாட்டானே; உண்மை சொல்கிறேன்..... மின்னலின் ஒளியை என் மனைவியின் கண்களில் காண்பதால்! ..... இல்லையா நண்பா....!

**எக்ஸேந்திபி** :- போதும்! போதும்! ..... வீதியில் போகிறவர் வருகிறவர்களோடு இருக்கட்டும், உமது விவாதங்களும், விளக்கங்களும், விளக்கெண்ணெய்த் தத்துவங்களும்! உமது முதல் மனைவி மிர்டோ, அவளைப் பிடித்த நல்ல காலம் செத்து விட்டாள்! நானிருக்கிறேன் இப்படிக் கஷ்டப்பட..... குடும்பம்! குடும்பத்திலே மனைவி - மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற கவலை வேண்டாமா மனிதனுக்கு?

**சாக்ரடீஸ்** :- (சூழ்ந்துள்ள இளைஞர்களைக் காட்டி.....) இதோ, இந்தப் பிள்ளைகளுக்கும் சேர்த்துத்தான் நான் பாடுபடுகிறேன்..... அன்புள்ளவளே! சூரியன், பூமிக்கும் அதைச் சுற்றியிருக்கும் கடலுக்கும், அவைகளிலே வாழுகின்ற எல்லா உயிர்களுக்கும் கடமையைச் செய்து வருகிறான்!.....

**எக்ஸேந்திபி** :- இப்படி விண்ணைப் பற்றியும், மண்ணைப் பற்றியும் பேசிக்கொண்டு, உம்மை நம்பி வந்த பெண்ணை நட்டாற்றில் விட்டு விடும். . (தனக்குத் தானே கோபமாக) அடி, எக்ஸேந்திபி உனக்கு ஏண்டி இந்தவம்பு!..

எப்படியாவது கெட்டுத் தொலை! .... ஒழிந்து போ! .... இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டை விடச் சுடுகாடு எவ்வளவோ மேல்! . . . இந்தத் தர்க்கவாதியை கட்டிக் கொண்டு அழுவதை விடக் கழுத்தில் ஒரு சுருக்குக் கயிற்றைக் கட்டிக் கொண்டு சாகலாம்! சாகலாம்! சாகலாம்!....

(பேரிரைச்சல் போட்டபடி உள்ளே போகிறாள். அவள் போனதும் சாக்ரடீஸ் சிரித்துக் கொண்டே, மற்றவர்களைப் பார்த்து.....)

**சாக்ரடீஸ்** :- அப்பாடா, இடி இடித்து ஓய்ந்தது. . . . மின்னல் வரும்போதே தெரியும், இப்படி இடி இடிக்கும் என்று!..... இளைஞர்களே!.... இலட்சியவாதிகளுக்கு இப்படி எத்தனையோ இடையூறுகள்!... வீட்டிலே இது போல்! நாட்டிலோ, கேட்கத் தரமில்லை! அரசியல்வாதி அனிடஸ் தன் அக்கிரமங்களைச் சுட்டிக்காட்டும் சூழ்நிலை எதுவுமே முளைக்கக் கூடாது எனக் கருதுகிறான். கற்பனை உலகத்தைச் சிருஷ்டித்துக் களிப்படையும் மெலிடஸ்! கற்களிலே, உலோகங்களிலே சிலைகளை

வடித்துக் காட்டிச் சிறப்படையும் லைகன்! இவர்களெல்லாம் எனது அறிவுப் பிரச்சாரத்தால் அஸ்திவாரமே ஆட்டம் கொடுக்கிறதென ஆத்திரப்படுகிறார்கள்.... கிரேக்கத்தின் கீர்த்தி, புவனமறியாததல்ல! அதற்காக இங்கு விழுந்திருக்கும் கீறல்களை மறைத்திட முயல்வது, புண்ணுக்குப் புனுகு தடவும் வேலையைப்போன்றது! ..... அதனால்தான் தோழர்களே! சிந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள் என சிரந்தாழ்த்தி உங்களை அழைக்கிறேன். அறிவு! அகிலத்தின் எந்த மூலையிலிருந்தாலும் அதைத் தேடிப் பெறுவதற்காக உங்களை அழைக்கிறேன்!... "உன்னையே நீ அறிவாய்!" இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காக என் உயிரினுமினியவர்களே! உங்களை எல்லாம் அழைக்கிறேன்....

(அப்போது எக்ஸேந்திபி ஒரு பாத்திரத்திலே தண்ணீரைக் கொண்டு வந்து, சாக்ரடீசின் தலையில் கொட்டுகிறாள்)

**கிரிட்டோ** :- ஆ! என்ன இது? என்ன இது?....

**சாக்ரடீஸ்** :- பதறாதே கிரிட்டோ! . . . . ஒன்றுமில்லை!... முதலில் மின்னல் கண்டாய்! பிறகு இடி இடித்தது, மழையும் பெய்கிறது. . . . அவ்வளவுதான்!. . .

(இளைஞர்களும், கிரிட்டோவும் சிரிக்கிறார்கள். எக்ஸேந்திபி கோபத்தோடு உள்ளே போகிறாள்.)

## காட்சி - 2

(அனிடஸ், மெலிடஸ், லைகன் மூவரும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருக்கிறார்கள்)

**அனிடஸ்** :- குமுறும் எரிமலை! கொந்தளிக்கும் கடல்! இவைகளை விடப் பயங்கரமானவன் சாக்ரடீஸ்! . . . . அறிவாயுதமாம்... அனைத்துலகும் அடி பணியும் அஸ்திரமாம்!..... அந்த ஆயுதம் கிரேக்கத்தில் தயாராகுமானால், நாம் தலை தூக்கவே முடியாது மெலிடஸ்! என்ன சொல்கிறாய், லைகன்?

**லைகன்** :- நான் கல்லுக்குக் கடவுள் உருவம் தரும் சிற்பி!... ஒரு காலத்திலே இந்தச் சாக்ரடீசும் என்னைப் போலச் சிற்பிதான்! ... இப்போதோ அவன் சிந்தனைச் சிற்பியாக மாறிவிட்டான்.. பரவாயில்லை. கல்லைக் கடவுளாக்கும், நானும் கற்பனை மூட்டைகளுக்குத் தெய்வீக மெருகு தரும் கவிஞனாம் மெலிடசும், அரசியல் நிபுணனாம் நீயும் ஒன்று சேர்ந்து விட்ட பிறகு. . . . சாக்ரடீஸ் - சமுத்திரத்துத் துரும்புதானே, அனிடஸ். . .!

**மெலிடஸ்** :- சபாஷ் லைகன், சபாஷ்.... ! பொது மக்கள் கழுதைகளாயிருந்தால் தான் நாம் தூக்கி வைக்கும் பொய் மூட்டைகளைச் சுமப்பார்கள்! குருடர்களாய் இருந்தால்தான் நாம் காட்டுகிற வழியிலே நடப்பார்கள்! நாம் கீறிய கோட்டைத் தாண்டாத கிரேக்க மக்களுக்கு அந்தக் கிழவன் அறிவுக் கண் வழங்குவதற்குள் அவனை நாம் அழித்துவிட வேண்டும் ....

(மூவரும் ஒரு முடிவோடு புறப்படுகிறார்கள்)

**காட்சி - 3.**

(சந்தை வெளியிலே சாக்ரடீஸ் பேசிக் கொண்டிருக்கிறான்)

**சாக்** :- சந்தையிலே பொருள் வாங்கும்.... விந்தை மனிதர்காள்! அங்கெல்லாம் கிடைக்காத அரும் பொருள், நானொன்று வைத்திருக்கிறேன். விலை மதிக்கவொண்ணா வைரம்!.... ஆராய்ச்சி என்னும் ஆழ்கடலில் குளித்தெடுக்கும் ஒளி முத்து! அங்காடிக் கடையிலே அகப்படாத பொருள்! அறிவு! அறிவு! இந்த அதிமதுரப் பொருளை வாங்க வாரீர்! வாரீர்!

(கிரேக்கத்துச் சிப்பாய் வருகிறான்)

**சிப்பாய்** :- நிறுத்து உன் பிரசங்கத்தை!. . . .

**சாக்** :- நான் நிறுத்தினாலும் அதைத் தொடர்ந்து நடத்த என் தோழர்கள் பலர் இருக்கிறார்களே!

**சிப்பாய்** :- தெகிடுதத்தம் பேசாதே! நீ வாலிபர்களைக் கெடுக்கிறாய்! நடுத்தெருவில் பைத்தியம் போல் புலம்புகிறாய்!

**சாக்** :- உன்னை, என்னிடம் அனுப்பியவர்களிடம் போய்ச் சொல்..... ஆடு மேய்ந்து அழிந்து விடும் அருகம்புல் அல்ல, புத்துலகு சமைப்போரின் போதனை என்பதை! கருத்தொளி காட்டுக் குதிரையல்ல தம்பி, அதிகாரக் கடிவாளமிட்டதும் அடங்கி ஒடுங்கி விட! . . . .

**சிப்பாய்** :- அதிகப் பிரசங்கியாரே! உமது பேச்சை நாளை நீதி மன்றம் கேட்கட்டும்! வாரும் என்னோடு, இப்போது!

(இழுக்கிறான், சாக்ரடீசை)

**கிரி** :- இது என்ன அக்கிரமம்! எங்கு இழுத்துச் செல்கிறாய், தள்ளாத வயதில் ..... எங்கள் அறிவுத் தங்கத்தை.... விடு வீரனே, விடு!.....

**சாக்** :- வேண்டாம் நண்பனே, வேண்டாம்....! நான் எங்கே போகிறேன்? நீதி மன்றத்திற்குத் தானே! கொலைக் களத்திற்கு அல்லவே!... என்னைப் போகவிடு! கருத்திலே தெளிவும், கொள்கையிலே வலிவும் இருக்கும் வரை விசாரணைக்கும், வழக்கிற்கும் விவேகிகள் பயப்படத் தேவையில்லை. போகிறேன். அறிவுப் பாதை காட்டுவோரை அழிவுப் பாதைக்கு விரட்டும் அநியாயக்காரர்களை நேரடியாகச் சந்தித்துப் போர் தொடுக்கப் போகிறேன்.

(சிப்பாய், சாக்ரடீசை இழுத்துச் செல்கிறான்)

**காட்சி - 4**

நீதிமன்றம் ( ஐநூறு பேர் கொண்ட ஏதேனிய நீதிமன்றம் கூடியிருக்கிறது. மரத்தினால் செய்யப்பட்ட பெஞ்சுகளில் நீதிபதிகள் அமர்ந்திருக்கிறார்கள். ஒருசில பலகைகள் பாயினால் மூடப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளையும், பொது மக்களையும் இடையிலே அமைக்கப்பட்டுள்ள சிறு சிறு கம்புகள் பிரிக்கின்றன. மன்றத்தின் வலது புறத்திலே நீதிமன்றத் தலைவரின் ஆசனம் இருக்கிறது. அதன் பக்கத்திலே ஒரு ஆசனம்.

அதில்தான் இரண்டு கட்சிக்காரர்களும் பேசவேண்டிய போது வந்து பேசவேண்டும். இடது புறத்தில் தனித்தனியே உள்ள இரண்டு ஆசனங்களில் கட்சிக்காரர்களும் - அவர்களின் சாட்சிகளும் காட்சி தருகிறார்கள். 'Hedge Log' என்ற பெட்டியிலேயுள்ள முத்திரை உடைக்கப்பட்டு, குற்றப் பத்திரிகைகள் கொட்டப்படுகின்றன. குற்றப் பத்திரிகைகளைக் குமாஸ்தா படிக்கிறான்.)

"பித்தன்ஸ்பேட்டைச் சேர்ந்த மெலிடியசின் குமாரன் மெலிடியஸ், அலோபீகில் உள்ள சோபரன்னிஸ்கோவின் குமாரன் சாக்ரடீஸ் மீது பின்வருமாறு குற்றம் சாட்டுகிறான். இந்த நாடும், இந்த அரசாங்கமும் ஒத்துக்கொண்ட கடவுள்களை, சாக்ரடீஸ் ஒத்துக் கொள்வதில்லை. இளைஞர்களை உபதேசம் செய்து கெடுக்க முயலுகிறான். கெடுத்தும் வருகிறான். அவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும்."

(அனிடஸ், லைகன் இருவரும் மெலிடசைப் போலவே சாக்ரடீஸ் மீது குற்றம் சுமத்துகிறார்கள்)

**அனி** :- சாக்ரடீஸ்!.... நாட்டில் நடமாடக் கூடாத ஓர் ஆத்மா!.... ஜனநாயக அரசாங்கத்தைக் குறை கூறும் அந்த ஜந்து, உடல் முழுவதும் விஷம் கொண்டது. . . . கேட்டார்ப் பிணிக்கும் சொற்களால் - கேளாரும் வேட்ப மொழியும் வார்த்தைகளால் - கேடு மலியும் கருத்துகளை அள்ளி வழங்கி, அரசாங்கத்திற்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக இளைஞர்களைத் தூண்டி விடும் இழிகுணக் கிழவன்!

(சாக்ரடீஸ் சிரிக்கிறான், கலகலவென்று)

**நீதி மன்றத் தலைவர்** :- என்ன சிரிப்பு? என்ன காரணம்?

**சாக்** :- ஒன்றுமில்லை, தலைவ!... ஆத்திரத்திலே அனிடஸ் ..... தன்னை மறந்து என்னைப் பார்த்துக் கிழவன் எனக் கேலி புரிகிறார். அதை நினைத்தேன் ..... சிரித்தேன்! கடல் நுரை போல் நரை விழுந்து விட்ட தலை, எனக்கும் - அனிடசுக்கும்! ..... இல்லையா, சபையோர்களே! என்ன அனிடஸ், உண்மை தானே?

**மெலி** :- சாக்ரடீஸ்!. . . வழக்கும் விசாரணையும் உங்கள் இருவரின் தலையைப் பற்றி அல்ல! . . . அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**சாக்** :- மிகவும் நன்றி, மெலிடஸ்! ஆனால் ஒன்று! எண்சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம் போல்..... இந்த வழக்கிற்கும் தலையே பிரதானம்! என் தலையிலேயிருந்து சுடர் விட்டுக் கிளம்பும் அறிவு - அதை அழிக்க உன் தலையி லேயிருந்து புறப்படும் அர்த்தமற்றக் கற்பனைகள் - அனிடசின் தலையிலேயிருந்து பீறிட்டெழும் அரசியல் ஆணவம் - இந்த மூன்றுக்குமிடையே நடைபெறும் மும்முனைப் போராட்டம் - அதன் விளைவுதான் மெலிடஸ், இந்த வழக்கு!

(இந்த ஓரங்க நாடகம் நாளை தொடரும்)

அன்புள்ள,

**மு.க.**

17-11-2007

# 3299. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (11)
# “சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்” (2)

**உடன்பிறப்பே,**

வைர நெஞ்சம் படைத்த உலகப் புரட்சியாளர்களின் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்திற்குரியவர் தத்துவ மேதை சாக்ரடீஸ் - ஏதென்ஸ் வழங்கிய ஈடற்ற மேதை - கிரேக்கத்து அறிவுக்கிழவர்!

அவர் தயாரித்த பிளேட்டோ, இன்றைய அரசியல் கருத்துகள் பலவற்றிற்குத் தந்தையாக இருக்கிறார்.

கார்ல் மார்க்சும், பிரடரிக் ஏங்கல்சும் தயாரித்து, லெனின் - ஸ்டாலின் போன்றோரால் புடம் போட்டு எடுக்கப்பட்ட பொது உடைமைத் தத்துவம், பிளேட்டோ என்னும் சிந்தனை உலைக் கூடத்தில் தயாரானது தான்.

ஹெகெல் என்னும் ஜெர்மன் நாட்டுத் தத்துவ ஞானி, பிளேட்டோவின் உலைக் கூடத்தைப் பயன்படுத்தித்தான் புளித்துப் போன நாஜிசக் கருத்துகளுக்கு ஜாடை காட்டினான். அந்தக் கட்டாரியைக் கொண்டு தவறான வழியில் பயன்படுத்தி தலைகொய்யப் புறப்பட்டனர், இட்லர் - முசோலினி போன்ற எதேச்சாதிகாரிகள்!

இதுபோன்ற நல்லனவற்றிற்கும், தீயனவற்றிற்கும் மூலப் பொருள் உதவியவர் பிளேட்டோ. அந்தப் பிளேட்டோவைத் தயாரித்ததோ சாக்ரடீஸ்.

வரலாறு கூறுகிறபடி, சாக்ரடீஸ், சாவுக்குப் பயப்படாத முதல் மனிதன் மட்டுமல்ல, இதுபோன்ற பல தகுதிகளுக்கும் உரிமையாளர்.

அறிவுலக ஒளிச்சுடராகச் சாக்ரடீஸ் நடமாடியதை, இந்தச் சிறு நாடகம் மூலம் இங்கே சித்திரித்திருக்கிறேன். நேற்றையதினம் விடுபட்ட இடத்திலிருந்து தொடர்ந்திடுக!

## காட்சி 4 (தொடர்ச்சி)

**நீதிபதி** :- சாக்ரடீஸ்! உம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு நீர் சொல்லும் சமாதானமென்ன?

**சாக்ரடீஸ்** :- என் சமாதானங்களைக் கேட்டு, இளகாத சட்டம் கூட இரக்கம் காட்டலாம் - ஆனால், இந்தச் சபை எனக்காக இரங்குமா?

**அனிடஸ்** :- பார்த்தீர்களா! சட்டத்தையும், சபையையும் அவமதிக்கிறான்! இப்படித்தான் இளைஞர்களையெல்லாம் கெடுத்தான்!

**சாக்ரடீஸ்** :- இளைஞர்களை ஒரு கிழவன், எப்படியப்பா கெடுக்க முடியும்?.... நானென்ன, வாலிபர்க்கு வலை வீசும் விலை மாதா?....பருவ விருந்தளிக்கும் பாவையா?

**மெலிடஸ்** :- மாதரிடம் இல்லாத மயக்கு மொழி....வாலிபர்க்கு வலை வீசும் வனிதையரும் பெற்றிடாத வசீகரச் சொல் அலங்காரம் - வார்த்தை ஜாலம் - அடுக்குத் தொடர் - இப்படிப் பல மாயங்கள் கற்றவர் நீர்!. . . .

**சாக்ரடீஸ்** :- மந்திரவாதி என்றுகூடச் சொல்வாய்! . . . . அன்புள்ள இளைஞனே! . . . . இளைஞர்களை நான் கெடுக்கிறேனா? இல்லை அவர்களாக வந்து கெடுகிறார்களா?

**மெலிடஸ்** :- நீரே வலியச் சென்று கெடுக்கிறீர்!. .. . .சந்தை கூடும் இடங்களிலே, சந்து முனைகளிலே, சாலையோரங்களிலே, நடுத்தெருக்களிலே, நாலு பேர் சேருகிற மர நிழல்களிலே உமது பிரசங்கம் நடைபெறாத நேரமே கிடையாது!

**சாக்ரடீஸ்** :- ஏதென்சு நகரத்தில் நான் ஒருவன் தான் இளைஞர்களைக் கெடுக்கிறேன். . . . இல்லையா?

**மெலிடஸ்** :- ஆமாம்.

**சாக்ரடீஸ்** :- நீ கெடுக்கவில்லை!

**மெலிடஸ்** :- இல்லை!

**சாக்ரடீஸ்** :- அனிடஸ்?

**மெலிடஸ்** :- இல்லை!

**சாக்ரடீஸ்** :- சிற்பி லைகன்?

**மெலிடஸ் :-** இல்லை!

**சாக்ரடீஸ் :-** இந்த நீதிபதிகள்?

**மெலிடஸ் :-** இல்லை!

**சாக்ரடீஸ் :-** யாருமே இளைஞர்களைக் கெடுக்கவில்லை! எல்லோரும் இளைஞர்களுக்கு நன்மையே செய்கிறார்கள், என்னைத் தவிர!....

**மெலிடஸ் :-** ஆமாம் - ஆமாம்!

**சாக்ரடீஸ் :-** இவ்வளவு பேரும் - ஏன் - ஏதேன்சு நகரமே இளைஞர்களைத் திருத்தும் போது, நான் ஒருவன் அவர்கள் பாதையைத் திருப்பிவிட முடியுமா?.....

**மெலிடஸ் :-** ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்! .....

**சாக்ரடீஸ் :-** ஏன், இப்படியும் சொல்லலாமே ..... இருண்ட வீட்டுக்கு ஓர் ஒளிவிளக்கு!..... என்ன மெலிடஸ் திகைக்கிறாய்? அனிடசின் அரசியல் மேதாவிலாசத்தாலும், உன்னுடைய அளவுக்கு மீறிய கற்பனைக் கவிதைகளாலும் கவர முடியாத காளைகளை நான் கவருகிறேன் என்றால் - அந்தப் பெருமை எனக்கல்ல! என்னையும், ஏதென்சு நகரத்தையும் வாழ்விக்கத் தகுந்த அந்தக் கொள்கைகளுக்கே அந்தப் பெருமை!... சபையோர்களே!.... வாலிபர்கள் என்னைச் சுற்றி வானம்பாடிகள் போல் வட்டமிடக் காரணம், என்னுடைய வார்த்தை அலங்காரம் அல்ல! வளங்குறையாத கருத்துகள் - தரங்குறையாத கொள்கைகள் இந்தத் தரணிக்குத் தேவையான தங்கம்நிகர் எண்ணங்கள்!.....

அழகு மொழியால், அலங்கார அடுக்குகளால், அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிறார்களே, அவர்களைக் கேட்கிறேன், அந்த மொழி எனக்கு மட்டும் சொந்தமல்லவே - அனிடசும், மெலிடசும் அதைப் பேசக்கூடாது என்று நான் தடை போட்டது கிடையாதே! பேசிப் பார்க்கட்டுமே அவர்களும் - பாவம், பேசித் தோற்றவர்கள்! மொழியிலே அழகு குறைந்ததால் அல்ல - எண்ணத்தில் இழுக்கு நிறைந்து விட்டதால்! இருள் படிந்து விட்டதால்!

நாட்டிலே நீண்ட நாட்களாகச் சூழ்ந்திருக்கும் இருளை விலக்க முயல்கிறேன், குறுகிய காலத்தில்! அதற்குப் பரிசு,

'சாக்ரடீஸ் தீமை செய்பவன் - விண்ணிலும், மண்ணிலும் என்ன இருக்கிறது என்று தேடிப் பார்க்கும் நாத்திகன் - பொய்களை உண்மையாக்கும் புரட்டன்' - இப்படியெல்லாம் பட்டங்கள் - குற்றச்சாட்டுகள்! பரவாயில்லை! எழுபது வயதுக்கு மேல் முதன்முதலாகக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் எனக்கு, எப்படியும் மரண தண்டனை அளித்து விட வேண்டுமென்று மெலிடஸ், அனிடஸ் போன்றவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்.

இன்னும் சில வருடங்களில் - சில மாதங்களில் - அவர்களது ஆசை தானாகவே நிறைவேறி விடலாம்! அவ்வளவு கிழவனாகி விட்டேன் நான்! அதற்குள் அவசரப்பட்டு, சாக்ரடீசைக் கொன்றோம் என்ற அநியாயப் பழியை ஏன் தேடிக் கொள்கிறார்களோ, தெரியவில்லை.

**நீதிபதி** :- சாக்ரடீஸ், பேச்சை நிறுத்தும்! மரண தண்டனை - சிறைவாசம் - நாடு கடத்தல் - அபராதம் வசூலித்தல் - இப்படிப் பல தண்டனைகள் உமக்குத் தரப்படலாம். அவைகளில் நீர் எதை விரும்புகிறீர்?

**சாக்ரடீஸ்** :- நான் சாவதாக இருந்தால், ஏதென்ஸ் நகரத்திலே, முப்பது பேர் கொண்ட சபையின் ஆட்சி நடைபெற்றதே - அதில் நான் ஒரு நிர்வாக அங்கத்தினனாகப் பதவி வகித்து, ஆர்ஜீனா போர்க் களத்தில் மாண்ட வீரர்களின் சவங்களையும், உடைந்த போர்க் கப்பல்களையும் எடுத்து வராத குற்றத்திற்காகத் தளபதிகள் விசாரணை செய்யப்பட்டபோது, அந்தச் சபையின் அநீதியைக் கண்டித்து வெளியேறினேனே? அன்றே கொல்லப்பட்டிருப்பேன்! அதைத் தொடர்ந்து, லீனான் என்பவனைக் கொலை செய்து வர என்னையும் மற்ற மூவரையும் சபை அனுப்பியபோது, அதை மறுத்து வீட்டுக்குப் போய் விட்டேன். அப்படி மறுத்ததற்கே எனக்கு மரண தண்டனை கிடைத்திருக்கும், அப்போதே! நல்லவேளை அந்தச் சபை கிரேக்க நாட்டு நீதிமன்றம், சாக்ரடீஸின் பிணத்தைக் காண வேண்டுமென்று விரும்பினால், அதற்கு நான் தடையாக இருக்க முடியாது!

சிறைவாசம் அனுபவிக்கிறேன் எனக் கேட்கலாம் - அதிகாரிகளின் நிரந்தர அடிமையாகச் சிறையில் கிடப்பதை விடச் செத்து மடிவது மேல்!

அபராதம் கட்டினால் விட்டு விடுவீர்கள்! ஆனால், அந்த அளவுக்கு நான் பணக்காரனாக இருந்திருந்தால், அபராதங் கட்டக்கூடிய பணவசதி உள்ள அளவுக்குப் போதுமான குற்றங் களைச் செய்திருப்பேன்! நாடு கடத்தலை ஏற்கலாம் - வேறு நாட்டில் சுதந்திரமாகத் திரியலாம் - ஆனால், என்னுடைய கொள்கைகளை என்னுடைய சொந்த நாடே ஏற்க மறுக்கும்போது, பிற நாடுகளில் வரவேற்பார்கள் என்று என்ன நிச்சயம்? இதனால், எனதருமை ஏதென்ஸ் நகரத்துப் பெருமக்களே! நான் செய்த காரியங்களுக்குத் தண்டனையாக ஒலிம்பியாவில் நடக்கும் குதிரை ரதப் போட்டியில் ஜெயித்தவனுக்கு வீரமானியம் கொடுப்பது போல் எனக்கும் கொடுத்து, என்னை ஆனந்தமாக வாழ விடுங்கள்! என் இலட்சியப் பிரச்சாரத்திற்குத் தேவையான வசதிகளை இடைவிடாது செய்து தாருங்கள்! அதுதான் நீங்கள் எனக்கும், என் கொள்கைக்கும் காட்டுகிற மரியாதையாகும்!

(சபையோர் திகைப்பு)

**நீதிபதி** :- அலட்சியமான பேச்சு!.... அவமதிப்பு!.... வாக்கெடுப்பு நடைபெறட்டும்! சாக்ரடீசுக்கு மரணமா?..... மன்னிப்பா?..... என்று சங்குகள் மூலம் வாக்களியுங்கள்!

(வாதியிடம் உள்ள பலகையிலும், பிரதிவாதிக்கு நேரே உள்ள பலகையிலும் நீதிமன்றத்தினர் தங்கள் இஷ்டப்படி "சங்கு"களை அடுக்குகிறார்கள். வாக்கெடுப்பு முடிகிறது. "சங்கு"கள் எண்ணப்படுகின்றன. 'மரணம்' என்று 281 சங்குகளும், 'மன்னிப்பு' என்று

220 சங்குகளும் கணக்கிடப்படுகின்றன. சபை, சாக்ரடீஸின் முகத்தைப் பார்க்கிறது. அவனது கண்களிலே புதிய ஒளி பிறக்கிறது)

**நீதிபதி** :- மன்னிக்கும்படி 220 வாக்குகள்! மரண தண்டனை அளிக்கும்படி 281 வாக்குகள்! வாக்கெடுப்பின்படி, சாக்ரடீசுக்கு விஷம் தரப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்!

**சாக்ரடீஸ்** :- ஏதென்ஸ் நகரத்து நீதிமன்றம், பெருமைக்குரிய தீர்ப்பை அளித்து மௌனப் புன்னகை புரிகிறது! உலக சரித்திரத்திலே இடம் பெறுகிற இந்த ஏதென்சுத் தீர்ப்புக்கு ஆளாகிவிட்ட பெருமை, முதன்முதலாக எனக்குக் கிடைத்திருக்

கிறது! 'அறிவு விளக்கைக் கையிலே ஏந்து' என்று கூறியதற்கு அழிவைப் பரிசாகத் தரும் புண்ணிய காரியத்தை நிறைவேற்றி விட்டார்கள்! 281 - 220! ..... முப்பத்தொரு வாக்குகள், இப்படித் திரும்பி விழுந்திருந்தால் சாக்ரடீஸ் காப்பாற்றப்பட்டிருக் கலாம்! அந்த வாக்குகளும் ஆயிரக்கணக்கான நாணயங்கள் செலவிடப்பட்டு வாங்கப்பட்டவை என்பதைக் கூறாமலிருக்க முடியாது! கவலையில்லை! இந்த மன்றத்தின் முறைப்படிப் பேசிச்சாவது எவ்வளவோ மேன்மையானது!..... எனக்குத் தெரியும்; ஒரு மனிதன் - எதையும் பேசி, எதுவும் செய்து, மன்னிப்புக் கேட்கத் தயாராயிருந்தால் இதுபோன்ற தண்டனைகளிலேயிருந்து நிச்சயம் மீளலாம்! களத்திலே எதிரியின் காலில் விழுகிற போர் வீரனாக மாறிவிட நான் நினைத்ததில்லை. அதனால் மரணத்தைப் பரிசாகப் பெற்றிருக்கிறேன்.

**காட்சி - 5**

சிறைச்சாலை

(சாக்ரடீஸ் காலிலே சங்கிலி பூட்டப்பட்டுச் சிறிய இடத்திலே அங்குமிங்கும் உலவிக் கொண்டிருக்கிறான். கதவு திறக்கப்படுகிறது - கிரிட்டோ வருகிறான்.)

**சாக்ரடீஸ் :-** கிரிட்டோ! என் அருமை நண்பா!

வா வா .....

(வெளியே வந்து பார்த்து) ..... ஓ ..... அது யார்?

**கிரிட்டோ :-** உன் மனைவி ..... குழந்தைகள்!

(பெரிய குழந்தைகள் இருவரும், கைக் குழந்தையை ஏந்தியபடி எக்ஸேந்திபியும் உள்ளே வருகிறார்கள் கண்ணீர் வடித்தபடி .....)

**சாக்ரடீஸ் :-** எக்ஸேந்திபி! .....

(அவள் அழுகிறாள், குழந்தைகள் அழுகிறார்கள், பச்சைக் குழந்தையும் வீறிட்டு அழுகிறது.)

**சாக்ரடீஸ் :-** அன்புள்ளவளே!..... பார்த்தாயா?..... பயனற்ற தத்துவ விசாரணையில் காலத்தைக் கழிக்கிறேன், தர்க்கவாதம் புரிந்து தொல்லைப்படுகிறேன் என்றெல்லாம் கோபித்துக் கொண்டாயே! இப்போது பார், உன் கணவன் அகிலம்

புகழும் வீரனாக, தேசம் புகழும் தியாகியாக மாறிவிட்டான்!.... எக்ஸேந்திபி! நீ பாக்கியசாலிதான்! படைபலம், பணபலம் அத்தனை பலத்தையும் எதிர்த்து நின்று, யாருக்கும் பணியாத பெருமையோடு, விழிகளைக் கடைசியாக மூடப்போகும் கர்மவீரனுக்கு நீ மனைவி!..... குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்! அவர்கள் பெரியவர்களாக மாறி, நேர்மை தவறி நடந்தால், நான் உங்களைத் திருத்த முயன்றது போல், நீங்களும் அவர்களைத் திருத்த முயலுங்கள்! போ..... நேரமாகிறது..... காவலர்கள் கோபிப்பர்!..... கிரிட்டோ, இவர்களை அனுப்பி வை!

(கிரிட்டோ அவர்களை வெளியே அழைத்துச் செல்கிறான். பிறகு கிரிட்டோ மட்டும் உள்ளே வருகிறான்.)

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! உனக்குத் தெரியுமல்லவா?..... முப்பது நாள் சிறைவாழ்வு இன்றோடு முடிவடைகிறது! நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி.... விஷம் சாப்பிட்டுச் சாக வேண்டிய நன்னாள் இன்றுதான்!

**கிரிட்டோ** :- சாக்ரடீஸ்! தத்துவ வாதங்களால் அழிக்க முடியாத உன்னை, விஷம் அழிக்கப் போகிறது!.....

ஒரு யோசனை நண்பா!..... இன்னும் நேரமிருக்கிறது! என்னிடமோ மின்னும் தங்கமிருக்கிறது! காவலர்களை வசப்படுத்திக் கொண்டு எப்படியாவது தப்பிவிட்டால்.....?

**சாக்ரடீஸ்** :- வெட்கப்படுகிறேன் கிரிட்டோ! ..... சாக்ரடீஸ் சாவுக்குப் பயந்தவனல்ல..... நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளைப் பற்றி நான் சர்ச்சை செய்ததும், அபராதங்கட்டத் தயாராக இருப்பதாகக் கூறியதும், தேசப் பிரஷ்ட உத்திரவு பற்றி வியாக்யானம் கூறியதும், என் பிரச்சாரத்தின் நோக்கம் பற்றிப் பெரியதோர் பிரசங்கம் செய்ததும் - மரணத்திற்கு பயந்து அல்ல! இவ்வளவுக்கும் தயாராக இருந்தும், கிரேக்க நாட்டு நீதிமன்றம் வீணாக சாக்ரடீசை அழித்துவிடும் வெறிச் செயலில் ஈடுபட்டது என்பதை நிரூபிப்பதற்காகத்தான்! அதை வைத்து நான் சாவுக்கு அஞ்சுகிறேன் என்று கணக்கிட்டுவிடாதே கிரிட்டோ! ..... பிளேட்டோ, கிரிட்டோ, அப்போலடோரஸ் முதலிய நண்பர்களையும், மனைவி, மக்களையும், எனதருமை ஏதென்ஸ் நகரத்தையும் விட்டுப் பிரியும் நேரம் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. உள்ளே எனக்காக விஷம் தயாராகிக்

கொண்டேயிருக் கிறது! இன்னும் கால் நாழிகையில் காவலன் வந்து விடுவான், கடும் விஷத்தோடு!

**கிரிட்டோ** :- அருமை நண்பா! மலை குலைந்தாலும் மனங்குலையா மாவீரா! உன் ஒளிவீசும் சுழற்கண்களை, துடிக்கும் அகன்ற புருவங்களை, தொகை தொகையாகப் பகைவரினும் துவளாது தத்துவ விளக்கம் கொட்டும் உணர்ச்சிமிக்க உதடுகளை இனி ஒரு சாக்ரடீஸ் உருவத்திலே நான் காணப் போகிறேனா?

**சாக்ரடீஸ்** :- அழாதே நண்பா! அதோ வந்து விட்டது அமுதம்! அறிவுப் படைக்கு இந்த அரசாங்கம் வைக்கும் விருந்து! தள்ளாத கிழவனுக்கு இந்தப் பொல்லாத நாடு தரும் பரிசு! அதோ வந்து விட்டது!

(காவலன் விஷக் கிண்ணத்துடன் வருகிறான்)

**சாக்ரடீஸ்** :- சிறைக்காவலா! இதை என்ன செய்ய வேண்டும்? முறைகளைச் சொல்லு!

**காவலன்** :- (சாக்ரடீசின் விலங்குகளை அவிழ்த்து விட்டு அழுதபடி) பெரியவரே! விஷத்தை முழுவதும் குடிக்க வேண்டும்..... பிறகு இங்குமங்கும் நடந்து கொண்டேயிருக்க வேண்டும்! கால்கள் மரத்துப் போகும் வரையிலே அப்படி நடக்க வேண்டும்..... பிறகு உட்காரலாம்..... கொஞ்சம் கொஞ்சமாக உடம்பு சில்லிட்டுக் கொண்டே வரும். பிறகு படுத்துவிடலாம்.

**சாக்ரடீஸ்** :- ஆனந்தமான நித்திரை! கனவு மங்கையாலும் கலைக்க முடியாத நித்திரை! ..... காவலா! கொடு இப்படி!

(விஷக் கிண்ணத்தை வாங்குகிறான்)

**கிரிட்டோ** :- நண்பா!..... சிறிது நேரம் பொறுத்துக் கூடச் சாப்பிடலாம்! சிறைச் சாலையிலே அதற்கு அனுமதி உண்டு.

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! உனக்கு மிகவும் அற்ப ஆசை! விஷத்தை இன்னும் இரண்டு நாழிகை கழித்துச் சாப்பிடுவதாக வைத்துக் கொள்! அதற்குள் திடீர் என்று இருதயம் வெடித்து நான் இறந்துவிட்டால்..... கிரேக்க நாட்டு நீதிமன்றத்தின் தண்டனையை எப்படி நிறைவேற்றுவது?..... புதிய சாக்ரடீசா பிறந்து வருவான்? கூடாது! கூடாது!..... இப்போதே சாப்பிடுகிறேன்.....

**கிரிட்டோ** :- நண்பா! கடைசியாக எனக்கு ஏதாவது சொல்லு!

**சாக்ரடீஸ்** :- புதிதாக என்ன சொல்லப் போகிறேன் - உன்னையே நீ அறிந்து கொள்! எதையும் ஏன், எப்படி, எதற்காக என்று கேள்! அப்படிக் கேட்டதால்தான் சிலைவடிக்கும் இந்தச் சிற்பி சிந்தனைச் சிற்பியாக மாறினேன். "அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம் - எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்!" இதைத்தான் உனக்கும், இந்த உலகத்திற்கும் சொல்ல விரும்புகிறேன்.

**கிரிட்டோ** :- ஏதென்சின் எழுச்சிமிக்க சிங்கமே! எங்கள் தங்கமே!..... கிரேக்கப் பெரியாரே! எம்மையும், உம்மையும் இந்த விஷம் பிரிக்கப் போகிறதா?..... அய்யகோ, நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே! சாக்ரடீஸ்..... உனது சவத்தை எப்படி அடக்கம் செய்ய வேண்டும்?.....

**சாக்ரடீஸ்** :- புதைப்பதாயிருந்தால், இந்த நாட்டில் உலவும் புளுகு மூட்டைகளையும் என்னோடு போட்டுப் புதைத்து விடு!..... எரிப்பதாயிருந்தால், ஏமாற்றுக்காரர்களின் சுவடிகளையும் என்னோடு சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கித் தண்ணீரில் கரைத்து விடு!..... விடை கொடு. விஷம் அழைக்கிறது!..... என் தேசத்துப் பெருமக்களிடம் விடைபெற்றுக் கொள்ளப் போகிறேன்.....

எனதருமை ஏதென்சு நகரத்துப் பெருமக்களே! இதோ சாக்ரடீஸ் சந்தோஷமாகச் சாகப் போகிறான்!..... கிரேக்க நாட்டு நீதிமன்றம், கூடைக்கணக்கிலே அவன் மீது குற்றங்களைக் கொட்டிக் கோப்பை நிறைய நஞ்சையும் நிறைத்துப் பருகடா இந்த உயிர் பருகும் பாயாசத்தை! என்று உத்தரவிட்டிருக்கிறது!..... விஷக் கோப்பையின் விளிம்பிலே, உபதேசங்களை உதிர்த்த சாக்ரடீசின் உதடுகள் பதியப் போகின்றன! இன்னும் ஓரிரு விநாடிகள்! அதன் பிறகு சாக்ரடீசின் உடல், உயிர் எல்லாமே அதனதன் தொடர்பை அறுத்துக் கொண்டு, வாழ்க்கைத் தொடர்கதைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும்! வருகிறேன் கிரேக்கமே!..... வருகிறேன்! எனதருமை ஏதென்ஸ் நகரமே, வருகிறேன்!..... நான் ஆடியோடி ஆவேசமாகப் பேசுவதற்குத் துணை புரிந்த ஏதென்சு நகரத்து எழில் வீதிகளே! வீதியோரத்து மர நிழல்களே! வீட்டோரத்து திண்ணைகளே! உங்கள் அனைவரிட

மிருந்தும் இந்தக் கிழவன் விடைபெறுகிறான்! பீடுநடையும் பெருமித நோக்கும் கொண்ட இளைஞர்களே! நாடு காக்கும் நல்லதம்பிகளே! பேரன்பு கொண்டோரே! பெரியோரே! பெற்ற தாய்மாரே! நல்இளஞ்சிங்கங்காள்! உங்கள் அனைவருக்கும் சாக்ரடீசின் இறுதி வணக்கம் உரித்தாகுக! இந்தக் கிழவன் கிரேக்க இளைஞர்களைக் கெடுத்ததாக, யாராவது உண்மையாக, உளமார நினைத்தால், அவர்கள் என்னை மன்னித்து விடட்டும்! மன்னித்து விடட்டும்! வருகிறேன். வணக்கம், வணக்கம். சிந்திக்கத் தவறாதே! ஏ, ஜெகமே! சிந்திக்கத் தவறாதே! உன்னையே நீ அறிவாய்! அறிவாய்!

(சாக்ரடீஸ் விஷத்தைச் சாப்பிட்டு முடிக்கிறான். கால்கள் தடுமாறுகிற வரையில் நடக்கிறான். பிறகு படுக்கிறான். உடல் சில்லிட்டுப் போகிறது! காவலன், போர்வையை இழுத்துச் சாக்ரடீசின் முகத்தை மூடுகிறான், சில வினாடிகளுக்குப் பின், சாக்ரடீஸ் போர்வையை முகத்திலிருந்து விலக்கி)

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! ஒன்று சொல்ல மறந்தேன்..... பக்கத்து வீட்டு அங்கிளிப்பியசுக்கு ஒரு கோழிக் குஞ்சு கடன் கொடுக்க வேண்டும். அதை மறக்காமல் கொடுத்துவிடு.....

(அத்துடன் கிரேக்கப் பெரியவரின் மூச்சு நின்றது. கிரிட்டோ அழுதான். சின்னாள் சென்று கிரேக்கம் அவன் கல்லறையைக் கண்ணீரால் குளிப்பாட்டியது)

உடன்பிறப்பே, இத்தகைய மாமேதையின் வாழ்க்கை வரலாற்றை இளைஞர் சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமல்லவா?

அன்புள்ள,

**மு.க.**

18-11-2007

## 3300. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (12)

# பூக்கள் நூறு பூக்கட்டுமே!

**உடன்பிறப்பே,**

இருபதாம் நூற்றாண்டின் புரட்சியாளர்களின் வரிசையில் ரஷ்ய நாட்டு லெனினைப் போலவே, சீன நாட்டு மாசேதுங்கும் சிறப்பான இடம் பெறுகிறார். அவர் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து - சீன நாட்டின் மாற்றத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினை அந்த நாட்டின் பின்னணியோடு சுருக்கமாகவேனும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவின் காரணமாகவே இந்தக் கடிதம்.

உலகிலேயே மிகப்பெரிய நாடு சீனா. உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒருவர் சீன நாட்டைச் சேர்ந்தவர். பழமை வாய்ந்த நாகரிகம் சீனாவிற்குச் சொந்தமானது. சீனாவின் வரலாறு இந்தியாவைப் போலவே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டது.

இந்தியாவில் அசோக மன்னனின் ஆட்சி தோன்றுவதற்கு பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்பு, “சின்” வம்சம் சீனாவில் ஆட்சிக்கு வந்தது. இந்த “சின்” என்பதிலிருந்துதான் சீனா என்ற பெயரே உருவானது என்பர். அதற்கடுத்து வந்த “ஹான்” வம்சத்தினர் நானூறு ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அப்போதுதான் புத்த மதம் சீனாவிற்கு வந்தது. மர எழுத்து கட்டைகளைக் கொண்டு அச்சுக்கலை முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. “ஹான்” வம்ச காலத்தில்தான் அரசாங்கப் பணிகளுக்கு தேர்வு முறையில் தேர்ந்தெடுப்பது அறிமுகப்படுத்தப்பட்டது. “ஹான்” வம்ச வீழ்ச்சிக்குப் பிறகு, மூன்று இராஜ்ஜியங்களாகப் பிளவுபட்ட சீனா ஏழாம் நூற்றாண்டில் “டாங்” வம்சத்தின் ஆட்சியில் ஒன்றிணைக்கப்பட்டது. இது சீனாவின் பொற்காலம் என்று

குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டிலேயே உலகிலேயே மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை சீனா எட்டியிருந்தது.

சீனாவின் பண்பாட்டுடனும், வரலாற்றுடனும் இணைந்து பிணைந்து வளர்ந்த மாமனிதர் மாசேதுங். அவர் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் 1893, டிசம்பர் 26ஆம் நாள் ஷாவோஷான் என்ற கிராமத்தில் பிறந்தார். ஏழு வயதிலேயே மாசேதுங் வயலில் வேலை செய்யத் தொடங்கினார். எட்டாவது வயதில் படிக்கத் தொடங்கி, பதிமூன்றாவது வயதில் பள்ளியை விட்டு விலகி மீண்டும் விவசாயத்திற்கே திரும்பினார். 1840-ல் நடந்த "அபின் யுத்தம்", 1850 முதல் 1864 வரை நடைபெற்ற கலகங்கள் ஆகியவற்றைப் பற்றி யெல்லாம் மாவோ கற்றறிந்தார். விவசாயப் பெருங்குடி மக்கள் லட்சோப லட்சம் பேர் இந்த கலகங்களில் எல்லாம் பங்கேற்றது மாவோவின் ஆர்வத்தைத் தூண்டியது. பதினேழாவது வயதில் ஒரு மத்தியதரப் பள்ளியில் சேர்ந்தார். அப்போது டார்வின், ஜேம்ஸ் மில், ரூசோ ஆகியோரது நூல்கள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. ஒரு சக மாணவரிடமிருந்து கிடைத்த "உலகத்து வீரர்களும் மேதைகளும்" என்ற நூல் அவரைப் பெரிதும் ஆட்கொண்டதால், மாவோ அந்த நூலிலிருந்து வாஷிங்டன், நெப்போலியன், பீட்டர் தி கிரேட், மகாராணி கேத்தரைன், வெலிங்டன், கிளாட்ஸ்டன், ரூசோ, மான்ட்டெஸ்க்யூ, ஆப்ரகாம் லிங்கன் ஆகியோரின் வாழ்க்கை பற்றிய விவரங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டார்.

1911ஆம் ஆண்டு டாக்டர் சன்யாட்சென் தலைமையில் மன்னர் ஆட்சியை எதிர்த்து ஜனநாயகப் புரட்சி நடைபெற்று, மன்னராட்சிக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. அப்போது எழுபத்துஇரண்டு புரட்சி வீரர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி மக்களிடையே உணர்ச்சிப் பிரவாகத்தை ஏற்படுத்தியது. ஒருநாள் மாசேதுங் படித்து வந்த பள்ளியில், ஒரு புரட்சியாளர், மாணவர் கூட்டம் ஒன்றை நடத்தி உணர்ச்சி ஊட்டக்கூடிய வகையில் உரையாற்றினார். மன்னராட்சியைத் தகர்த்து, குடியரசு அமைக்கப்பட வேண்டுமென அறைகூவல் விடுத்தார். இந்த உணர்ச்சியூட்டும் உரைதான் மாசேதுங் புரட்சிப் படையில் சேருவதற்கு காரணமாயிற்று.

சரித்திரம், பூகோளம், தத்துவம், இலக்கியம் ஆகியவற்றை மாவோ மிகவும் விரும்பிப்படித்தார். சார்லஸ் டார்வினின் "உயிர்களின் தோற்றம்", தாமஸ் ஹக்ஸ்லியின் "பரிணாம வாதமும் அறநெறிகளும்", ஜே.எஸ்.மில்லின் "தர்க்க சாஸ்திர முறை", ஹெர்பர்ட் ஸ்பென்சரின் "சமூக இயல் ஆய்வு", மான்டெஸ்க்யூவின் "சட்டத்தின் சாரம்" ஆகிய நூல்களையும், ரூசோ எழுதிய நூல்கள், கிரேக்க, ரோம இதிகாசங்கள் ஆகிய பலதரப்பட்ட நூல்களையும் மாவோ கவனத்துடன் பயின்றார். சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பிரபலமான நூல் எதையும் அவர் படிக்காது விடவில்லை.

மாணவர் சங்கம் ஒன்றை அமைத்து, அமைப்புரீதியான இயக்கத்தில் உள்ள தனது அக்கறையையும், ஆற்றலையும் மாவோ வெளிப்படுத்தினார். 1918-ல் மேற்படிப்புக்கு பீகிங் புறப்பட்டுச் சென்றார். மாவோ மீது அன்பு வைத்திருந்த பேராசிரியர் ஒருவரின் பரிந்துரையில், பீகிங் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் உதவியாளராக மாசேதுங் நியமனம் பெற்றார். மாவோ 1919ஆம் ஆண்டு இறுதியில் ஹுனானுக்குத் திரும்பினார். 1921ஆம் ஆண்டு தொடக்கத்தில் சாங்ஷாவில் ஒரு கம்யூனிஸ்ட் அமைப்புக் கிளையை அமைக்க மாவோ உதவினார். பிறகு ஹுனான் மாகாணக் கட்சியின் செயலாளரானார்.

விவசாயிகளின் புரட்சிகரத் தன்மையின் காரணமாக, அந்த வர்க்கத்தின் மீது கம்யூனிஸ்ட் கட்சி பிரதான கவனம் செலுத்த வேண்டும் என மாசேதுங் வலியுறுத்தினார். ரஷ்யப் புரட்சியின்போது, லெனின், தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து மிகப்பெரும் மாற்றத்திற்கு வழி வகுத்தார். ஆனால், மாசேதுங் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டிப் போராட வேண்டும் என்று விரும்பினார். 1927-ல் அகில சீன விவசாயச் சங்கத்திற்கு தலைவரானார்.

கோமின்டாங் வலதுசாரி தலைவர்கள் இராணுவ நடவடிக்கையின் மூலம் கம்யூனிஸ்ட் தொழிலாளர் இயக்கச் செல்வாக்கை அழிப்பது என்று முடிவு செய்தனர். அதன் தொடர்ச்சியாக, 1927, மார்ச் மாதத்தில் சியாங்கே ஷேக் இராணுவத்தினர், ஷாங்ஹாய் மாநகரத்துக்குள் நுழைந்து சீனர்களின்

குடியிருப்புப் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். சியாங்கே ஷேக் ஒரு போட்டி அரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். இதற்கு உலக ஏகாதிபத்தியங்கள் அங்கீகாரம் அளித்தன. தனது சொந்த அரசையே உதறித்தள்ளி, போட்டி அரசாங்கம் அமைத்த சியாங்கே ஷேக், ஷாங்ஹாய் மாநகரில் கம்யூனிஸ்ட் மீதும் தொழிற்சங்கங்கள் மீதும் போர் தொடுத்தார். இவர்கள் அனைவரையும் வேட்டையாடி, நூற்றுக்கணக்கானவர்களைச் சுட்டுத் தள்ளி, ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து மாபெரும் துரோகத்தை அரங்கேற்றினார். சியாங்கே ஷேக் கட்டுப்பாட்டில் வந்த கோமின்டாங் அரசாங்கம், சன்யாட்சன் வகுத்தளித்த கொள்கைகளான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஆகியவற்றிற்குத் துரோகம் செய்து, ஏகாதிபத்திய வாதிகளுடன் கைகோத்துக் கொண்டது.

சீனச் செம்படையும், கம்யூனிஸ்ட் கட்சியும் தீரமிக்கப் போர் நடத்தியும்கூட, சியாங்கே ஷேக்கின் "சுற்றி வளைத்துத் தாக்குவது" என்ற உத்தியை எதிர்கொள்ள முடியவில்லை. முழுமையாக அழிக்கப்படுவதிலிருந்து தப்புவதற்காக, 1934, அக்டோபரில் முற்றுகையிடப் பட்ட தளங்களிலிருந்து முற்றுகையை உடைத்துக் கொண்டு, செம்படையும், கம்யூனிஸ்ட்டுகளும் வெளியேறி வரலாறு கண்டிராத நீண்ட நெடும் பயணத்தைத் தொடங்கினர்.

மாசேதுங், சூ என்லாய் தலைமையில் செம்படையின் பிரதான பிரிவுகள் 85,000 வீரர்கள், கம்யூனிஸ்ட் கட்சியினர் 15,000 பேர் சியாங்ஸி மாகாண முற்றுகையிலிருந்து துணிந்து வெளியேறி, வடமேற்கே 3000 கி.மீ. தொலைவிலுள்ள ஸ்ஜெசுவான் பிரதேசத்தை நோக்கிப் பகலிலும், அதிகமாக இரவு நேரத்திலும் மழை, இடி, மின்னல், வெயில் என்று பாராமல் ஓராண்டு நடைபயணத்தை மேற்கொண்டனர். ஆண்டு முழுவதும் நாளொன்றுக்கு நடந்த தூரம் 26 மைல்கள் ஆகும். நிரந்தரமாகப் பனி மூடியிருந்த 5 மலைத் தொடர்கள் உள்ளிட்ட 18 மலைத் தொடர்களையும், 24 ஆறுகளையும், 62 மாநகரங்கள் மற்றும் நகரங்களையும் அவர்கள் கடந்து சென்றனர். இது உலக வரலாற்றில் ஈடு இணையில்லா நிகழ்ச்சி! வேறுசில பிரதேசங்களிலிருந்தும் செம்படையினர் வடக்கு ஷான்க்சி வந்து சேர்ந்தனர்.

முதல் மாதத்திலேயே 25 ஆயிரம் பேர் மரணமடைந்தனர். பதினோரு மாகாணங்கள் வழியாக சுமார் 10 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் காடு, மலை, வனாந்திரப் பிரதேசங்களைக் கடந்து, வரும்வழியில் பலர் மாண்டும், புதிதாகப் பலர் சேர்ந்தும், கிராமப்புறப் பிரச்சாரத்தில் இருபது கோடி மக்களைச் சந்தித்தும், இறுதியில் வெற்றிகரமாக வந்து சேர்ந்து, உலக வரலாற்றில் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் இணையற்ற வீரகாவியம் படைத்தனர்.

நெடும்பயணத்திற்காகவே மாவோ தன்னுடைய கைப்பெட்டியைத் தூக்கியெறிந்து விட்டார். நெடும்பயணத்தில் புகைப்பிடிப்பதென்பது ஒரு ஆடம்பரம் என்று கருதப்பட்டதால் மாவோ தான் வழக்கமாக புகைப்பிடிக்கும் சிகரெட்டுகளை துறந்தார். அவர் பயணம் தொடங்கியபோது அவர் மலேரியாவிலிருந்து ஓரளவு குணமாகிக் கொண்டிருந்தார். அவருடைய வீரர்களில் ஒருவர், அவர் நலிந்து, மெலிந்து போயிருந்தார் என்று விவரித்தார். மாவோ ஓய்வுக்காக ஒரு தூக்குப் படுக்கையில் எடுத்துச் செல்லப்பட்ட நேரம் தவிர, மற்ற நேரங்களில் எல்லாம் தனது சக தோழர்களோடு நடந்தே சென்றார். பயணம் சென்றவர்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் இருந்தனர். அவர்கள் கட்சி மற்றும் அரசின் உயர்ந்த பதவிகளில் இருந்தோரின் மனைவியர் ஆவர். பிற பெண்களும், மாவோவின் இரு குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளும் விவசாயக் குடும்பங்களிடையே விட்டுச் செல்லப்பட்டனர். அவர்களைப் பிறகு கண்டு பிடிக்கவே முடியவில்லை. பயணம் தொடங்கிய போது, மாவோவின் துணைவியார் ஹோ ஜூ சென் கருவுற்றுச் சில மாதங்கள் ஆகியிருந்தன. பயணத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே அவர் குண்டு தாக்குதலில் காயமடைந்தார். அவருடைய உடலில் 25 குண்டுத் துகள்கள் இருந்தன.

லி ஃபு சன்னின் மனைவி சாய் சேங், சௌ என் லாயின் மனைவி டெங் யிங் காவோ ஆகியோர் நெடும் பயணத்தில் இருந்த புகழ் பெற்ற பெண்மணிகள் ஆவர். இருவரும் காச நோயால் துன்புற்றனர்.

படை வீரர்களில் ஒருவர் இந்த நெடும்பயண வழியைப் பற்றி பின்வருமாறு நினைவு கூர்கிறார் :

"நாங்கள் குறுகிய, அபாயமிக்க பாதைகள் வழியாக, குறுகிய கணவாய்கள் வழியாக, குறுகிய பாலங்கள் வழியாகக் கடந்து செல்லும்போது அல்லது பனி சில்லிடும் நீரோட்டங்களை நீந்திக் கடக்க வேண்டியிருந்த போது, மிக மோசமான சோதனைகளை எதிர்கொண்டோம். அதுபோன்ற சமயங்களில் எங்களது முன்னோடிப் படை வேகம் குன்றும். பின்புலப் படையோ ஓரடி முன்வைத்தால் பத்தடி நின்று கொண்டேயிருக்கும். எங்களால் முன்னேறிச் செல்ல முடியாது அல்லது அமர்ந்து ஓய்வெடுக்க முடியாது. சில வீரர்கள் நின்றவாறே உறங்கி விடுவார்கள். சில சமயங்களில், சீற்றத்துடன் வரும் புயல் காற்றினூடே எங்கள் உடல்களின் மீது மழை சாட்டையாய் விளாச, நாங்கள் அணிவகுத்துச் சென்றோம். இந்தச் சூழ்நிலைகளில் நாங்கள் எங்கள் கைவிளக்குகளைப் பயன்படுத்த முடியாது. பாதைகளோ வழுக்கிக் கொண்டு அபாயகரமானவையாக இருந்தன. சில சமயங்களில் நாங்கள் இரவில் குறைந்த தூரமே நடந்தோம். மழையில் நனைந்து இரவெல்லாம் வெட்டவெளியில் கழிக்க நேரிட்டது. மலைப் பாதையின் அகலம் இரண்டடிக்கும் மேல் எங்குமே இல்லை. ஒருவர் எப்படியாவது அந்தப் பாதையில் படுத்துவிட்டு, திரும்ப முனைவாரானால் மலைச் சரிவில் உருண்டு செல்வதைத் தவிர்க்க முடியாது. எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய கற்பாறைகள் துருத்திக் கொண்டிருந்தன. பாதைகூட கூரிய கற்கள் நிறைந்ததாக இருந்தது."

அசைக்க முடியாத இலட்சிய வெறியோடும், உறுதியான மனநிலையோடும் நெடும்பயணத்தில் கலந்து கொண்ட வீரர்களுக்கு, கொடிய அனுபவங்களாக நேர்ந்த உடல் உபாதைகள் குறித்து நெடும்பயணத்தில் கலந்து கொண்ட மருத்துவர் நெல்சன் ஃபு என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார்;-

"நெடும்பயணத்தின்போது எங்களில் மிகப் பலருக்கு இதய நோய் வந்தது. மேலும் பலருக்கு அதிக மனஅழுத்தத்தின் காரணமாக நரம்பியல் கோளாறுகள் ஏற்பட்டன. நெடும்பயணம் முடிவுற்ற உடனேயே எங்களில் எண்ணற்றோருக்கு கால்களிலும், பாதங்களிலும் புண்கள் ஏற்பட்டன. மோசமான நிலைமைகள் காரணமாகவும், காயங்கள் காரணமாகவும், பொதுவானரத்தசோகை

காரணமாகவும் அப்புண்கள் ஏற்பட்டன. நெடும்பயணத்திற்காக ஆயிரம் டாலருக்கு மட்டுமே மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகளை எங்களால் வாங்க முடிந்தது. க்யாங்சி, க்வாங்டங் மற்றும் ஹுனானில் மலேரியா, வயிற்றுப்போக்கு ஆகியவை முதன்மையான துன்பங்களாக இருந்தன. ஸ்ஜெகவான், கான்சு மற்றும் ஷென்சியில் வயிற்றுப்போக்கு, டைபாய்டு மற்றும் இன்ஃப்ளுவென்சா ஆகியவையும், சிகாங்கில் மலைநோய், செரியாமை, டைபாய்டு மற்றும் ஒருவகைக் கண்நோய் ஆகியவையும், ஷென்சியில் காலரா, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களும், யூனானில் அயோடின் குறைவால் தைராய்டு தொல்லைகளும் பெருந்துன்பங்களாய் அமைந்தன.”

அமெரிக்க செய்தியாளர் எட்கர் ஸ்நோ என்பவர், “சீனாவின் மீது ஒரு சிவப்பு நட்சத்திரம்” என்ற தனது நூலில் நெடும்பயணத்தின் சில பகுதிகளை பின்வருமாறு விளக்குகிறார்:-

“சாகசம், ஆராய்ச்சிப் பயணம், கண்டுபிடிப்பு, மனிதத் துணிச்சல் மற்றும் கோழைத்தனம், களிப்பு மற்றும் வெற்றி, துன்பம், தியாகம் மற்றும் விசுவாசம், இவையெல்லாம் கடந்து மனிதனிடமோ, இயற்கையிடமோ, கடவுளிடமோ, மரணத்திடமோ தமது தோல்வியை அனுமதிக்காத ஆயிரக்கணக்கான இளைஞர்களின் சவாலைப் போன்ற மங்கா மனவெழுச்சி, இறவா நம்பிக்கை மற்றும் வியத்தகு புரட்சிகர நன்னம்பிக்கை இவையெல்லாமும், இன்னும்கூட பலவும், நவீன காலங்களில் இணையற்றதானதொரு இந்த நெடும்பயணத்தின் வரலாற்றில் புதைந்து கிடப்பதாகத் தெரிகிறது.”

“நீண்ட பயணத்தின் சோதனைகளைக் கண்டு
செஞ்சேனை அஞ்சவில்லை!
ஆயிரம் மலைகளையும் நதிகளையும்
அது ஒரு பொருட்டாகக் கருதவில்லை!”

- என்று நெடும்பயணத்தின்போது இயற்றிய கவிதை ஒன்றில் மாவோ குறிப்பிட்டிருந்தார்.

நெடும்பயணத்தின் வழியில், 1935, ஜனவரி மாதத்தில் கட்சியின் தலைவராக மாசேதுங் நியமிக்கப்பட்டு, மத்தியக் கமிட்டி

மற்றும் செஞ்சேனை ஆகியவை மாசேதுங் தலைமையில் கொண்டு வரப்பட்டன.

பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்துடன் மாசேதுங், சியாங்கே ஷேக்குடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். 1946, ஜூலைக்குப் பிறகு சீனாவில் உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தை அடைந்தது. "ப்ளா" எனும் மக்கள் விடுதலை இராணுவம் பல முனைகளுக்குச் சென்று, எதிரிகளின் இராணுவத்தை ஒன்றன்பின் ஒன்றாக தகர்த்தது. சியாங்கே ஷேக் இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டு, போர்க் கைதிகளாக நடத்தப்படுவதற்குப் பதிலாக, அவர்களின் விருப்பத்துடனேயே மக்கள் விடுதலை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, கோமின்டாங் இராணுவத்தை எதிர்த்துப் போரிட வைத்தனர்.

1948-ல் படைபலத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஜூலை 1946-ல் கோமின்டாங் இராணுவம் 43 லட்சம் பேர், "ப்ளா"வில் 12 லட்சம்தான். ஆனால், 1949 இறுதியில் கோமின்டாங் படைபலம் 29 லட்சமாக குறைந்தது. ஆனால், சேஞ்சேனை "ப்ளா" 30 லட்சத்திற்கும் அதிகமாக வளர்ந்துவிட்டது. இராணுவ பலம், மக்கள் பலம், கொள்கை பலம் ஆகிய மூன்றும் சீனக் கம்யூனிஸ்ட்டுகளுக்குச் சாதகமாக மாறியிருந்ததாலும், சோஷலிச நாடான சோவியத் யூனியனின் ஆதரவும், உதவியும் இருந்ததாலும், புரட்சி வெகு விரைவில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தது.

1949, ஜனவரியில் "ப்ளா" பீகிங் மாநகரத்தைப் போரிடாமலேயே கைப்பற்றியது. அதைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களையும் வளைத்துப் பிடித்தது. சியாங்கே ஷேக்கின் இராணுவம் பல பகுதிகளில் நிலைகுலைந்து போரைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஆர்வத்தை இழந்தது. இவ்வாறு நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் சீனப் புரட்சி, சீரிய தளபதி மாசேதுங் தலைமையில் மாபெரும் வெற்றியினைப் பெற்றது. 1949, அக்டோபர் முதல் நாளன்று பீகிங்கை தலைநகராகக் கொண்டு மாசேதுங் தலைமையில் சீன மக்கள் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது.

**“நூறு பூக்கள் மலரட்டும், நூறு கருத்துகள் முட்டி மோதட்டும் என்பது கலை வளர்வதற்கும், அறிவியல் முன்னேறுவதற்கும், நமது நாட்டின் சோஷலிச கலாச்சாரம் செழித்தோங்குவதற்கும் உரிய கொள்கையாகும். கலையில் பல்வேறு வடிவங்களும், கருத்துகளும் சுதந்திரமாக வளரலாம். அறிவியலில் பல்வேறு கருத்துகளும் சுதந்திரமாக முகிழ்த் தெழலாம். கலையின் குறிப்பிட்ட ஒரு நடையை அல்லது ஒரு சிந்தனை முறையைத் திணித்து, இன்னொன்றைத் தடை செய்ய நிர்வாக நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டால், அது கலை, அறிவியல் வளர்ச்சிக்குத் தீங்கு பயக்கும் என நாம் கருதுகின்றோம்.”**

என்ற மாவோவின் கருத்து இன்றளவும் விவாதிக்கப்பட்டு வருகிறது!

அன்புள்ள,

**மு.க.**

19-11-2007

# 3301. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (13)

# வரலாறு காட்டும் வானவில் வண்ணங்கள்!

**உடன்பிறப்பே,**

உலக வரலாற்றில் புரட்சியாளர்கள், சாதனையாளர்கள் வரிசையில் இடம் பெற்ற ஒரு சிலரின் வாழ்க்கை வரலாற்றினை வருங்கால இளைஞர் சமுதாயம் தெரிந்துகொண்டு, பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு நாளும் பல புத்தகங்களைப் படித்து அவற்றைச் சுருக்கமாகத் தொகுத்து அளித்து வருகிறேன். அதைப் பாராட்டி, ஒவ்வொரு நாளும் பலர் தொலைபேசி மூலமாகவும், நேரில் சந்திக்கும் போதும், இதனைத் தொடர்ந்து எழுத வேண்டு மென்று கேட்கிறார்கள். அதற்கான நேரம் எனக்கில்லை என்றபோதிலும், நெல்லை இளைஞர் அணி மாநில மாநாட்டினையொட்டி முடிந்த வரை இந்தத் தொடரினை வழங்கும் முயற்சியில் ஈடுபடுகிறேன்.

இந்த வரிசையில் நான் குறிப்பிட்டிருந்தவாறு தத்துவ ஞானி சாக்ரடீஸின் வரலாற்றைத் தொடர்ந்து, அவருடைய மாணவர் பிளேட்டோ எழுதிய நூல்களில் முதன்மையானது “ரிபப்ளிக்” என்பதாகும். சட்ட வரம்புக்கு உட்பட்டு ஒருவர் ஆள்வதை முடியாட்சி (Monorchy) என்றும், சிலர் ஆள்வதை பிரபுக்களாட்சி (Aristocracy) என்றும், பலர் ஆள்வதை மிதமான மக்களாட்சி (Moderate Democracy) என்றும், சட்டத்தைத் துச்சமாக மதித்து யதேச்சாதிகாரமாக ஒருவர் ஆட்சி புரிவதை கொடுங்கோலாட்சி (Tyranny) என்றும், சிலர் ஆள்வதை சுயநலப் பணக்காரர்களாட்சி (Oligarchy) என்றும், பலர் ஆள்வதை மித மிஞ்சிய மக்களாட்சி (Extreme Democracy) என்றும் பிளேட்டோ விளக்கம் அளித்திருப்பது ஒன்றிலிருந்தே அவரது சிந்தனையாற்றலை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிளேட்டோவிடம் 17 ஆண்டுகள் கல்வி கற்ற அரிஸ்டாட்டில், கிரேக்க அறிஞர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்களில் ஒருவர். ஆளுபவருக்கும், போர் வீரர்களுக்கும் பொதுவுடைமையைப் போதித்தவர் பிளேட்டோ. அதற்கு மாறாக, சொந்த சொத் துரிமையும், குடும்ப நிறுவனமும் இயற்கையாக மனிதருக்கு இருக்க வேண்டிய உரிமைகள் என்று வாதாடியவர் அரிஸ்டாட்டில். அரசாங்கம் மாறும் போதெல்லாம் அரசும் மாறுவதில்லை, அரசு என்பது நிலையானதொரு ஸ்தாபனம் என்று முதன் முதலாக இந்த விளக்கத்தை வழங்கியவர் அரிஸ்டாட்டில் தான். பிளேட்டோவின் நூல்களை விட மேலை நாடுகளில் அரிஸ்டாட்டிலின் நூல்கள் தான் பெரிதும் பேசப்பட்டன. அரசியல் நூலின் தந்தை என்றுதான் இன்றளவும் அரிஸ்டாட்டில் போற்றப்படுகிறார்.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம், அரச பயமின்றி, பிரபுக்களின் தலையீடின்றி நடக்கும் தேர்தல்கள், அச்சமின்றி உண்மைகளை உரைக்கத் தயங்காத பத்திரிகைகள், அரசியல் உரிமைகளில் எல்லோருக்கும் சமத்துவம் ஆகிய ஏற்பாடுகளைக் கொண்ட நாட்டில்தான் ஜனநாயகம் செழித்து வளரும் என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர்தான் பேனா முனையால் புரட்சி செய்த வால்டேர். அந்த எழுத்து வேந்தர் இறந்து பத்தாண்டுகளுக்குப் பிறகு தான் பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. 14-7-1789 அன்று கிளம்பிய அந்தப் புரட்சிப் படையின் முழக்கம் “வாழ்க வால்டேர்” என்பதுதான். இதிலிருந்தே அவரது பேனா முனையின் வலிமையை உலகம் உணர்ந்திருந்தது எனலாம்.

வால்டேர் என்பது அவர் தனக்குத்தானே சூட்டிக் கொண்ட பெயர். அவருடைய பெற்றோர் வைத்த பெயர் பிரான்சிஸ்மரே அருவே என்பதுதான்.

அவர் இளைஞராக இருந்தபோது அரசவையின் அன்றாட நிலவரங்களைக் கவனித்து வந்தார். அது 15ஆம் லூயி மன்னனின் காலம். மன்னன் சிறுவனாக இருந்ததால், அவனது பிரதிநிதியாக; ஆர்லியன்ஸ் பிரபு என்பவர் ஆட்சி நிர்வாகத்தை நடத்தி வந்தார்.

மக்களை வாட்டி வதைக்கும் மதக்குருக்கள், பாட்டாளிகளின் வயிற்றில் அடிக்கும் அரசு, இதனை கண்டு உள்ளம் நொந்த

இளம் கவிஞரான வால்டேர் உண்மை நிலவரங்களை தன் கவிதையால் சாடினார். இரு பொருள் தரத்தக்க வசனங்களை அவரது நாடகங்களில் அரங்கேற்றினார். ஆட்சி வெகுண்டெழுந்து அடக்குமுறையை வீசியது. வால்டேர் எழுதிய புத்தகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. அவர் அதை உடைத்தெறிந்தார். அதன் காரணமாக, ஆட்சியாளர் ஆர்லியன்ஸ் பிரபுவினால் உடனடியாக அழைக்கப்பட்டார். வால்டேர் நேரில் சென்று சந்தித்தார். அப்போது ஆர்லியன்ஸ் "நீ இதுவரை காணாத ஒன்றைக் காணப் போகிறாய்" என்றார். அது என்னவென்று வால்டேர் கண்களால் கேட்டபோது, "பாஸ்டில் கோட்டை" என்றார் ஆர்லியன்ஸ். பாஸ்டில் கோட்டை என்பது பாரீஸ் நகரிலே உள்ள பயங்கரச் சிறைச் சாலை. அதற்குள் 6-4-1717 அன்று 23 வயதேயுடைய வால்டேர் எந்தவிதமான விசாரணையுமின்றி தள்ளப்பட்டார். அவர் சிறையிலே இருந்தபோது எழுதியதையெல்லாம் "வால்டேர்" என்ற பெயரில் எழுதினார். சிறையிலிருந்து வெளிவந்த பிறகு வால்டேர் என்ற பெயரால் அழைக்கப்பட்டு, அப்பெயரே, சரித்திரத்தில் இடம் பெற்றது.

வால்டேர் வரலாற்றில் இதோ ஒரு சம்பவம்! மத துவேஷங்களும், வெறியும் தலைதூக்கி நின்ற அந்தக் காலத்தில் பிராட்டஸ்டண்ட் மதத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் சாலையில் பிணமாகக் கிடந்ததைக் கண்டு, அவன் கத்தோலிக்க மதத்தில் சேர விரும்பினான் என்றும், அதற்காக அவனுடைய கிழத் தந்தையான ஜீன்கலாஸ் என்பவரே தனது மகனைக் கொன்று விட்டார் என்றும், வைதீகக் குருமார்கள் மறைந்தவனின் தந்தை மீதே பழி சுமத்தி, அவரை எதிர் வழக்காட விடாமல் செய்துவிட்டார்கள். ஜீன்கலாஸ் உயிரைப் பலிவாங்கி விட்டார்கள். இந்தக் கொடுமையை அறிந்த வால்டேர், 1763இல் அந்த ஜீன்கலாஸ் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று எண்ணினார். அதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டார். வால்டேரின் முயற்சிக்கு ஆதரவு அளித்த ஆங்கில அரசி, ருஷிய அரசி, சுவிட்சர்லாந்த் நாட்டு மக்கள், பெருநிதி குவித்தனர். வால்டேரின் செல்வாக்கு, விடாமுயற்சி, நா வளம், மக்களின் எழுச்சி நீதி மன்றத்தின் தீர்ப்பையே மாற்றியது. கொல்லப்பட்ட ஜீன்கலாஸ் குற்றமற்றவன் என்று தீர்ப்பு கூறச் செய்தார் வால்டேர். ஜீன்கலாஸ்

மறைந்த பிறகும், அவர் மாசற்றவர் என்ற நீதியரசரின் மதிப்புரை, நீதிமன்ற தீர்ப்பாயிற்று.

வால்டேரின் மனித நேயச் சம்பவத்திற்கு ஓர் உதாரணம். இந்தியாவைச் சம்பந்தப்படுத்தும் நிகழ்ச்சியாகவே அதனை எடுத்துக் காட்டுகிறேன். 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவைக் கைப்பற்றுவதில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டியடிக்கும் முயற்சியில் பிரெஞ்சு நாடு முற்பட்ட போது, பிரெஞ்சு அரசு லாலி என்ற தளபதியை அந்த முயற்சியிலே ஈடுபடுவதற்காக அனுப்பி வைத்தது. லாலி உண்மையான மாவீரன். போர்த் தளபதி. ஆனால், ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றி பெறும் அளவிற்கு படை பலம் அவர்களிடம் இல்லை. அதனால் அந்த முயற்சியில் அவன் வெற்றி பெற முடியவில்லை. எனவே பிரெஞ்சு அரசாங்கம் லாலியின் மீது குற்றம் சுமத்தி, அவனுடைய சொத்துக்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டதோடு, மரண தண்டனையும் விதித்தது. லாலியின் மகன் தன் தந்தைக்கு இழைக்கப்பட்ட அநீதியை வால்டேரிடம் முறையிட்டான். அக்கிரமமாக இவ்வாறு லாலி தண்டிக்கப்பட்டதை, புரட்சியாளர், சிந்தனையாளர் வால்டேரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உடனடியாக பேனாவை எடுத்தார் வால்டேர். லாலிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் பக்கம் பக்கமாக கட்டுரைகளாகத் தீட்டினார். இறுதியாக, அந்த முயற்சியில் வெற்றி பெற்று, லாலியின் மகன் தந்தையின் சொத்துக்களை மீண்டும் பெற்றான். லாலியும் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டார்.

வால்டேரின் குணநலன்களை விளக்கும் மற்றொரு சம்பவம்! ஒருநாள் அவர் வீதிவழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது ஒருவன் இவரை வழி மறித்துகடனாக கொஞ்சம் பொருள் உதவி தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தான். உடனே வால்டேர் கோபமடைந்து, கடன் கேட்பது உனக்கு இழுக்காகத் தெரிய வில்லையா? என்று கேட்டு ஓங்கி அறைந்து விட்டாராம். அதனால், அந்தக் கடன்காரன் மிகவும் வருந்திய நிலையிலே இருந்த போது, அவனுடைய நண்பர் அவனைத் தனியாக அழைத்துச் சென்று, இவ்வளவு பெரிய சிந்தனையாளரிடம் நீ அடி வாங்கியதே உனக்கு

பெருமையைத் தரக் கூடிய செயல். நீ மிகப் பெரிய பாக்கியவான், இந்தப் பேறு வேறு யாருக்குக் கிடைக்கும் என்று சமாதானம் செய்தானாம். அந்த அளவிற்கு வால்டேரிடம் அடி வாங்குவதுகூட பெருமைக்குரிய செயலாகக் கருதப்பட்டது.

1777ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் ஒரு நாள், வால்டேர் தனது தாயகமான பாரிஸ் நகருக்கு ஒரு மூடு வண்டியில் வந்துகொண்டிருந்தார். இடையில் ஒரு சுங்க அதிகாரி வண்டியை நிறுத்திச் சுங்க வரி விதிக்கப்பட வேண்டிய சரக்கு ஏதாவது வண்டிக்குள் இருக்கிறதா என்று சோதனையிட விரும்பினார். அப்போது அந்த வண்டிக்குள்ளிருந்து ஒரு குரல் "வண்டிக்குள் சட்ட விரோதமான சரக்கு என்னைத் தவிர, வேறு எதுவும் இல்லை" என்றது!. கதவை கோபத்துடன் திறந்து பார்த்த அந்தச் சுங்க அதிகாரி, வண்டிக்குள் அமர்ந்திருந்தது மாமேதை வால்டேர் என்பதை அறிந்து வியந்தார். உணர்ச்சிப் பெருக்கோடு வால்டேரை வரவேற்று, ஊருக்குள் அழைத்துச் சென்றார். பாரிசுக்கு வந்த வால்டேரை மாநகர மக்கள் எல்லாம் தங்கள் ஆனந்த கண்ணீராலும், பாசப் பிணைப்பாலும் திணறச் செய்து விட்டனர்.

பல முறை நாடு கடத்தப்பட்ட காரணத்தால், வால்டேரின் வாழ்க்கையின் பெரும் பகுதி வேற்று நாடுகளில்தான் கழிந்தது. தாயகம் திரும்பிய பிறகு, பாரீஸ் மாநகரில் இளைஞர்களை நோக்கி, "வயதில் சிறியவர்களாகிய நீங்களே பாக்கியவான்கள், ஏனெனில், நீங்கள் பெரும் பெரும் நிகழ்ச்சிகளைக் காண்பீர்கள்" என்றார். அவர் இவ்வாறு கூறிய 11 ஆண்டுகளுக்குள்தான் அந்த நாட்டில் புரட்சி வெடித்தது. அவர் கூறியது போலவே இளைஞர்கள் புரட்சியை நேரில் கண்டதுமின்றி, அவற்றில் பங்கும் பெற்றார்கள்.

பிரெஞ்சுப் புரட்சியினின்றும், ருஷ்யப் புரட்சியினின்றும் நாம் எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்விரு புரட்சிகளுக்கும் சமமான, மக்களுடைய உண்மையான புரட்சிகள், மக்களின் வாழ்க்கையின் கொடூரமான உண்மைகளின் மீது கோரமான வெளிச்சத்தைச் சொரிகின்றன. விண்ணிலே தோன்றும் மின்னலானது பூமிப் பந்து முழுவதையும் குறிப்பாக, அதன் இருண்ட மூலை முடுக்குகளையும் நமக்கு தெளிவாகப் புலப்படுத்துகிறது. அது போல புரட்சியை விதைப்போர், தங்கள்

இலட்சியத்தை நோக்கி அம்பைப் போல் விரைகிறார்கள். அவர்கள் எந்தப் பக்கமும் திரும்பிப் பார்ப்பது இல்லை.

17ஆம் நூற்றாண்டில் பேரரசனாக இருந்த 14வது லூயி "அரசாங்கமா? அது நான் தானே?" (I am the State) என்றான். அதற்கு அடுத்த நூற்றாண்டில் பதவிக்கு வந்த 15வது லூயி, "உலகத்தில் பிரளயம் என்ற ஒன்று தோன்றுவதாக இருந்தால் அது எனக்குப் பின் வரட்டும்" என்று கூறினான். ஆனால் உண்மையிலேயே பிரளயம் கிளம்பிய போது, அது மன்னன் 16வது லூயியையும், அவனுடைய அதிகார கும்பலையும் அந்தகாரத்தில் கொண்டுபோய் தள்ளி விட்டது.

"என்னுடைய தொழில் நான் சிந்திப்பதைச் சொல்வது தான்" என்று வால்டேர் சொன்னார். அவர் சிந்தித்ததையெல்லாம் கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், நாடகங்களாகவும், நவீனங்களாகவும், அறிக்கைகளாகவும், கடிதங்களாகவும் - வால்டேர் தனது 84 வயது வரை இடைவிடாது அவர் எழுதிய 99 நூல்களில் இடம் பெறச் செய்துள்ளார். அப்படி 84 வயது வரை வாழ்ந்தவரின் சரித்திரத்தைத் தான் இன்று நான், என்னுடைய 84வது வயதில் உங்களுக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன்.

"பொது மக்களே, கண் விழித்துப் புறப்படுங்கள்! உங்கள் கை விலங்குகளை உடைத்து எறியுங்கள்!" என்ற வால்டேரின் சுதந்திரக் குரல் பிரெஞ்சு மக்களைத் தட்டி எழுப்பியது. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற அந்தப் புரட்சியின் புதுமை முழக்கம் உலகம் முழுவதையும் அதிர்ச்சியடையச் செய்தது.

மதவிரோதி என்று மத வெறியர்கள் வால்டேருக்கு பெயர் சூட்டினர். ஏனென்றால், "ஆலயத்தின் நிழலில் அநீதி மன்றம் நடத்தாதே, மூடக் கொள்கைகளை நம்பாதே" என்று அவர் முழக்கமிட்டது தான். வால்டேரை நாத்திகன் என்றும் சிலர் விமர்சித்தார்கள். ஆனால் வால்டேர், "நல்லதொரு கடவுளை நம்பு! நல்லவனாயிரு" என்று தான் சொன்னார்.

1777ஆம் ஆண்டு தாயகம் திரும்பிய வால்டேரை, அவர் புகழ் பெற்ற பல நாடகங்களை நாட்டுக்குத் தந்தவர் என்ற முறையில் - நாடக நடிகர்கள் எல்லாம் இணைந்து மிகப் பெரிய

வரவேற்பு ஒன்றினை நல்கிட வேண்டுமென்ற எண்ணத்தோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். ஒரு காலத்தில் அந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட அந்தப் பெருமகனுக்கு, அங்கே வாழ்க்கையிலே யாரும் கண்டிராத அளவிற்கு வரவேற்பு நிகழ்ச்சிகள் செய்யப்பட்டிருந்தன. அந்த நிகழ்ச்சிக்கு வால்டேர் வந்தபோது, அவரது திருவுருவச் சிலை ஒன்றினை செய்து வைத்து, அவரது கண்ணுக்கு நேராகவே அதற்கு முடி சூட்டப்பட்டதைக் கண்டு வால்டேர் உள்ளம் நெகிழ்ந்தார். அன்று அந்த மேடையில் அவரது கடைசி நாடகம் அரங்கேற்றப்பட்டது. அதைக் காண வந்திருந்த மக்கள் கூட்டம், பல மணி நேரம் காத்திருந்து வரிசையாக நின்று அவருடைய கைகளை குலுக்கிய வண்ணம் இருந்தார்களாம். இது ஏற்பட்டபோது அவரால் கை கொடுத்து மாளவில்லை. அந்த நிகழ்ச்சி காரணமாகவே அவர் மிகவும் சோர்வடைந்து போய் விட்டார். அதுவே அவர் இறுதி மூச்சு விடுவதற்கு காரணமாக அமைந்தது. சாகும் நிலையில் அந்த மாபெரும் மனிதன் எழுதிய வார்த்தைகள், இன்றளவும் அவரது கொள்கைகளை முழக்கும் முரசங்களாகத் திகழ்கின்றன.

“நான் நல்ல கடவுளையும், என்னுடைய நண்பர்களையும் போற்றியது போலவே, என் எதிரிகளையும் போற்றினேன். என் எதிரிகள் மீது எந்தவிதமான விருப்பு வெறுப்பும் இல்லாத அளவில், மூட நம்பிக்கைகளை எப்போதும் போல எதிர்த்துக் கொண்டே நான் சாகிறேன்” - இவ்வாறு எழுதி, அதன் கீழே வால்டேர் என்று கையெழுத்திட்டார்.

இத்தனை அறிவுக் கருவூலமானவரும், புதுமை விரும்பியுமான முற்போக்கு சிந்தனையாளர் வால்டேருக்கு சரியான மரியாதை தரப்படவில்லை என்ற குறைபாடு, அந்நாட்டு மக்களிடம் இருந்து கொண்டே வந்ததால், அவர் மறைந்த பிறகு மூன்று ஆண்டுகள் ஓடிய நிலையிலும் கூட, 1791ஆம் ஆண்டு, அவரது கல்லறையைத் தோண்டி, உடலினை பாரீஸ் நகரத்திற்குள் மிகப் பெரிய ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். எந்த இடத்தில் வால்டேர் பாஸ்டில் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தாரோ, அதே இடத்தில் அவரது உடல் மரியாதை செலுத்தப்பட்டு, ஓர் இரவு முழுவதும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த இறுதி யாத்திரைப் பயணத்தில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு சென்று, அவர்

உடலை அடக்கம் செய்தார்கள். அந்தக் கல்லறையிலே இன்றளவும் காணப்படும் வாசகம் இரண்டே இரண்டு வார்த்தைகள்தான்! ஆம், "இதோ வால்டேர்" என்ற அந்த இரண்டு வார்த்தைகள்தான் அவரின் புகழினை உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டுள்ளது!

வால்டேர் தனது புரட்சியில் கையில் ஆயுதம் ஏந்தவில்லை. ஆயிரக் கணக்கான படை வீரர்களைக் கொண்டு சேனையை நடத்தி யுத்தம் புரியவில்லை.

தலையிலே சிந்தனை!

கையிலே பேனா!

நெஞ்சிலே உறுதி!

இவைகளையே போர்க் கருவிகளாகக் கொண்டு, 80 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துப் போர் நடத்திய ஈடு இணையற்ற அந்த சிந்தனையாளர் - தன் இரு விழி மூடி இந்தத் தரணியில் உள்ள மாந்தர்தம் விழிகளையெல்லாம் திறந்து வைத்தார் என்பதுதான் மறையாத வரலாறு!

அன்புள்ள,

**மு.க.**

20-11-2007

## 3302. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (14)

# உள்ளம் உலைக்களம்; உறுதி போர்க் கருவி!

**உடன்பிறப்பே,**

வாள் தூக்கிப் போர் புரிந்தவர்கள் அல்லர் - வரிசைப்படுத்திய படைகளை அணிவகுத்திடச் செய்து அதிகார வரம்பை அதிகப்படுத்திக் கொண்டவர்களும் அல்லர்.

பேனாவே போர்வாள் - சிந்தனையே சைன்யம் - ஆம்! 18 ஆம் நூற்றாண்டில் - 1694 முதல் 1778 வரையில் வாழ்ந்த வால்டேர், 1712 முதல் 1778 வரையில் வாழ்ந்த ரூசோ, இந்த எழுத்து வேந்தர்கள், அமெரிக்கப் புரட்சிக்கும், பிரஞ்சுப் புரட்சிக்கும் அடித்தளம் அமைத்த இரட்டையர்கள் என்றே வரலாற்று ஏட்டில் வர்ணிக்கப்பட்டார்கள். இருவரின் எழுத்துகளும் - எடுத்து வைத்த கருத்துகளும் சிலபல வேளைகளில் மோதிக் கொள்ளும் இயல்புடையவை ஆயினும், இருவருமே மனித சமுதாயத்தை மையமாக வைத்தே தங்கள் எழுத்துப் பணியை ஆற்றினார்கள். உலகப் புகழ்பெற்ற அந்த இருவரில் ஒருவரான ரூசோ, அவர் பிறந்த கதையைப் பற்றி அவரே எழுதியிருப்பது கண்ணீரில் தோய்த்து வழங்கப்பட்டதாகும்.

இது, அது :-

“நான் 1712ஆம் வருடம், ஜெனிவா நகரில், ஐசக்ரூஸோ என்பவருக்கும், சூசான் பெர்னார்ட் என்ற பெண்மணிக்கும் மகனாகப் பிறந்தேன். மிதமான பிதுரார்ஜிதச் சொத்து, பதினைந்து பிள்ளைகளுக்கிடையில் பங்கிடப்பட்டதால், அவர்களில் ஒருவரான என் தந்தைக்கு கிடைத்த பங்கு மிகச் சொற்பமே! அவர் கடிகாரத் தொழிலை தம் பிழைக்கும் தொழிலாகக் கொண்டார். அதில் அவர் மிகவும் கெட்டிக்காரராகவே இருந்தார். என் தாய் நல்ல நிலையில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதிலிருந்தே இருவரும் நெருங்கிப் பழகி வந்தவர்கள். இவர்கள்

இருவரின் ஆசைப் பிணைப்பை வெட்ட முனைந்த ஒரு சூழ்நிலை, இவர்களின் பாசப் பிணைப்பை இறுக்கிடவே உதவியது. தான் விரும்பியவள், தனக்கு கிடைக்க மாட்டாள் என்று தந்தை சோக சாகரத்தில் ஆழ்ந்தார். இந்த நேரத்தில் என் தாயின் சகோதரன், என் தந்தையின் சகோதரி ஒருத்தியை மணக்க ஆசைப்பட்டார். அவர் செய்த தந்திரத்தால் என் தாயின் தந்தை, என் தாய் தந்தையரின் மணத்துக்கு ஒப்புக் கொண்டார். மணமாகி முதல் குழந்தை பிறந்த பிறகு என் தந்தை பிழைப்பு காரணமாக கான்ஸ்டான்டிநோபிள் பட்டினத்துக்குச் சென்றார். என் தந்தை வெளியூருக்குப் பிரிந்துபோன பிறகு, என் தாயின் அழகும், புத்தி சாதுரியமும், அவளுடைய பாட்டு, படிப்பு, ஓவியம், கவிதை முதலான கலைத் திறமைகள் எல்லாம் பல ரசிகர்களை உண்டாக்கியது. ரசிகர்களில் ஒருவர் ரசிகத் தன்மையை அளவு மீறிக் கொண்டு போனதால் என் தாயை அடைய ஆசை கொண்டார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என் அம்மாவுக்குக் கற்பைவிட, என் தந்தையின் மீது அளவற்ற அன்பு இருந்ததால், தந்தையை உடனடியாக ஊர் திரும்பும்படியாகக் கடிதம் எழுதினாள். தந்தையும் திரும்பி வந்தார். அந்தக் கூடலின் அறுவடையாக, துன்பக் கனியாய், அவர் திரும்பி வந்த பத்து மாதங்களுக்குப் பிறகு, பலவீனமான குழந்தையாகப் பிறந்தேன். என் பிறப்பு என் தாயின் உயிரை விழுங்கியது. எனது துன்பங்கள் அனைத்திலும் என் முதல் துன்பம் என் பிறப்புதான்!”

இவ்வாறு தனது முதல் துன்பம் தனது பிறப்புத் தான் என்று குறிப்பிடும் ரூசோ, 2-7-1778 அன்று உயிர் விட்டபோது அவருக்கு இழைக்கப்பட்ட - அல்லது இயற்கையாகவே அமைந்த கடைசித் துன்பம் என்ன என்பதை அறிவிக்காமலே மறைந்து விட்டார் என்பதா? அல்லது மறைத்து விட்டனர் என்பதா?

அதற்கிடையே அவர் வரலாற்றுக்குள் நுழைந்து பார்ப்போம் -

1725ஆம் ஆண்டில் ரூசோ, தனது 13வது வயதிலேயே தடை செய்யப்பட்ட நூல்களையெல்லாம் வாங்கிப் படிக்கத் தொடங்கினார். இளைஞர்கள் அமைப்பு ஒன்றில் தன்னை இணைத்துக் கொண்டார். சிறு வயது முதலே ரூசோ தன் பெயரை எழுதும்போது, “ஜீன் ஜேக் ரூசோ - ஜெனிவாவின் குடிமகன்” என்று குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்த அளவிற்கு இவர் ஜெனிவாவின் மீது பற்று கொண்டிருந்த போதிலும், அவருடைய நூல்கள் அந்த நாட்டில் பகிரங்கமாகத் தீயிட்டுக்

கொளுத்தப்பட்டன. ஜெர்மனியிலே பிறந்த கார்ல் மார்க்சுக்கு எப்படி ஜெர்மனியிலே இடமில்லையோ, இத்தாலியிலே பிறந்த மகாகவி தாந்தேவுக்கு எப்படி இத்தாலியிலே இடமில்லையோ அதைப் போலவே, ஜெனிவாவிலே பிறந்த ரூசோ அந்த நாட்டிலிருந்தே வெளியேற்றப்பட்டார்.

ரூசோ எழுதிக் குவித்தது ஏராளம் என்ற போதிலும், சுதந்திரத்தைப் பற்றி அவர் அதிகமாகவே குறிப்பிட்டுள்ளார். சுதந்திரத்தைப் பற்றி கூறும்போது, "நான் சுதந்திரத்தை வழிபடுபவன். கட்டுப்பாட்டையும், சங்கடத்தையும், பிறரைச் சார்ந்திருத்தலையும் அடியோடு வெறுப்பவன். அமைதி நிறைந்த அடிமைத்தனத்தைவிட ஆபத்துடன் கூடிய சுதந்திரமே மேலானது. மனிதன் சுதந்திரத்தோடுதான் பிறக்கிறான். ஆனால் எங்கு நோக்கினும், அவன் அடிமைத்தளைகளில் பிணைக்கப்பட்டே காட்சி அளிக்கிறான். சுதந்திரத்தைப் புதியதாகச் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால், இழந்த சுதந்திரத்தை மீட்பது அரிது. தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டி முயல்பவனும், தன் மனச்சாட்சியின் பிரகாரம் காரியங்களைச் செய்பவனுமே உண்மையான சுதந்திர மனிதன் ஆவான். தன் சுதந்திரத்தைப் உறுதிப்படுத்திக் கொண்டாலும், தன் பிள்ளைகளின் சுதந்திரத்தைப் உறுதிப்படுத்தும் உரிமை மனிதனுக்குக் கிடையாது. ஒரு மனிதன் தனது சுதந்திரத்தை இழந்து விட்டான் என்று சொன்னால், அவன் தனது மனிதத் தன்மையையே இழந்து விட்டான் என்றுதான் அர்த்தமாகும். மனித சமுதாயத்தின் அங்கத்தினன் என்ற முறையில் அவனுக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் கூட அவன் இழந்தவனாகிறான்.

உண்மையான சுதந்திரத்தை அனுபவித்து வாழும் மனித சமுதாயத்திலே, மனிதர்கள் தங்கள் தேக உழைப்பிலே வாழ்வார்கள். சுதந்திரம் என்ற பழச்செடி எல்லாவிதமான சீதோஷ்ண நிலைகளிலும் வளருவதில்லை. இதனால் எல்லா மக்களினங்களாலும் சுதந்திரத்தை அடைந்து விட முடியாது."

நான் முதலில் குறிப்பிட்டது போலவே வால்டேர், ரூசோ ஆகிய இருவருமே ஒருகாலத்து சிந்தனையாளர்கள் என்றபோதிலும், கருத்து ரீதியாக இருவருக்குமிடையே ஒரு பனிப் போராட்டம் இருந்து கொண்டுதான் வந்தது. வால்டேர்

விவேகம், பகுத்தறிவு ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு, சொற்களாலும், எழுத்துக்களாலும் மக்களைச் சீர்திருத்தி விடலாம் என்று நம்பினார். ஆனால் ரூசோவோ, வார்த்தைகளைக் கொண்டு மட்டும் எழுத்துகளாலும், பேச்சுகளாலும் எதுவும் செய்து விட முடியாது, நடத்தை ஒன்றின் மூலமாகத்தான் எதிலும் வெற்றி பெற இயலும் என்று திட்டவட்டமாக நம்பினார், கூறினார்.

ரூசோ எழுதிய "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூல், "சட்டங்களைத் தூக்கிப் போடு, மனிதனுக்கு சுதந்திரமான சமுதாய வாழ்வு கிடைக்கும்" என்பதை வலியுறுத்துகிறது. ஆனால், வால்டேருக்கு சமுதாயப் புரட்சி என்பது பிடிக்காத ஒன்று. என்றாலும், வால்டேர் விட்ட இடத்திலிருந்து ரூஸோ தொடங்கினார் என்ற பழமொழியை உலகம் தொடர்ந்து சொல்லி வருகிறது. இந்த "சமுதாய ஒப்பந்தம்" என்ற ரூசோவின் புத்தகத்தைப் படித்து விட்டு வால்டேர் கருத்து கூறும்போது, "மனிதனுக்கும், குரங்குக்கும் உள்ள ஒற்றுமைதான் ரூசோவிற்கும், தத்துவ ஞானிக்கும் இடையே இருக்கிறது என்று இப்போதாவது தெரிகிறதா?" என்று கேலியாகக் கூறினாராம்.

ரூசோ எழுதிய மற்றொரு நூல் - "ஏற்றத்தாழ்வு பேதங்களின் மூலத்தைப் பற்றிய ஆராய்ச்சி" என்பதாகும். இந்த நூலை எழுதி முடித்ததும், அதனை வால்டேருக்கு அனுப்பி வைக்க ரூசோ தவறவில்லை. அந்த நூலில் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றி வரும் நாகரீக வளர்ச்சிகளை வன்மையாகக் கண்டித்ததோடு, மக்கள் அனைவரும் பழங்கால மக்களைப் போலவும், விலங்குகளைப் போலவும் கட்டுப்பாடுகள் அற்ற நிலைக்குச் சென்றிட வேண்டுமென்றும் எழுதியிருந்தார். இந்த நூலைப் படித்து விட்டு வால்டேர் தன் கருத்தை ரூசோவுக்குத் தெரிவிக்கும்போது, "மனித இனத்திற்கு விரோதமாக நீங்கள் எழுதிய புதிய புத்தகம் கிடைத்தது. நன்றி. மக்களையெல்லாம் மாக்களாக மாற்றுகின்ற முயற்சியிலே உங்களைப் போல வேறு யாரும் இந்த அளவிற்கு அறிவுத் திறன் வாய்ந்தவர்களாக இருந்ததில்லை. உங்கள் நூலைப் படித்தபோது, நான்கு கால்களின் உதவியால் நடக்க மாட்டோமா என்று நினைத்தேன். அந்தப் பழக்கத்தை விட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே துரதிருஷ்டவசமாக அதனை என்னால் இப்போது பின்பற்ற இயலாது" என்று எழுதினாராம்.

ரூசோவின் எழுத்துகளை வால்டேர் இவ்வாறு விமர்சித்தபோதிலும், ஏராளமான உலக அறிஞர்கள் பாராட்டியே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றை மட்டும் கூறவேண்டுமேயானால், அண்ணல் காந்தி அடிகளால் பாராட்டப்பட்ட ரஷ்ய மேதை டால்ஸ்டாய், ரூசோவின் எழுத்துகளைப் படித்து விட்டு, இளம் வயதிலேயே அவரது உண்மையான பக்தனாகவே மாறி விட்டதாகவும், ரூசோவின் உருவம் பதித்த பதக்கம் ஒன்றினை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும், ரூசோவின் எழுத்துகளைப் படிக்கும்போது, தானே அவற்றை எழுதிய உணர்வு தனக்கு ஏற்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ரூசோ நிரந்தர வருமானமின்றி அலைந்து திரிந்த நாட்களில், ஒருமுறை, ஒரு ஓட்டலில் தங்கியிருந்தார். அந்த ஓட்டலின் உரிமையாளர் ஒரு பெண். அவருக்கு உதவிக்கென தெரஸ் என்ற இளம் வயது பெண்ணை பணியிலே அமர்த்தியிருந்தார். அந்த ஓட்டலின் அனைத்துப் பணிகளையும் தெரஸ்தான் பார்த்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டுதான் தெரஸ் தன் பெற்றோரைக் காப்பாற்றினார். தெரஸின் பணிகள் ரூசோவை பெரிதும் கவர்ந்தன. ஓட்டல் உரிமையாளரான பெண்மணியும், அந்த ஓட்டலுக்கு வரும் விருந்தினர்களும், தெரஸை வேலை வாங்கும்போது கோபிப்பதைக் கண்டு ரூசோ வருந்துகிறார். அந்த நேரத்தில் எல்லாம் ரூசோ அந்தப் பெண்ணுக்காகப் பரிந்து பேசி, ஓட்டலுக்கு வரும் பெரிய மனிதர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாவதும் உண்டு. தெரஸ் என்ற அந்த இளம் வயதுப் பெண்ணுக்கு ரூசோவின் ஆறுதல் வார்த்தைகள் மிகவும் பிடித்தது. காலப்போக்கில் இது காதலாகப் பரிணமித்து, இறுதியில் தெரஸை ரூசோ தன் வாழ்க்கைத் துணைவியாகவே ஆக்கிக் கொண்டார்.

1749ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்திலிருந்து ரூசோ தன் நண்பரைக் காண்பதற்காக வின்சென்னஸ் என்ற ஆறு மைல் தூரத்தில் இருந்த ஊருக்கு கையிலே காசு இல்லாத நிலையில் நடந்தே சென்று கொண்டிருந்தார். நல்ல வெயில், சோர்வடைந்த நிலையில் மர நிழல் ஒன்றில் தங்கிய ரூசோ, தன் கையில் இருந்த ஒரு பத்திரிகையைப் படித்தபோது, அதிலே டிஜான் கலைக் கழகம் சார்பில் கட்டுரைப் போட்டி ஒன்றுக்கான விளம்பரத்தைக்

கண்டார். அதைப் படித்ததும் தானும் அந்தப் போட்டியிலே கலந்து கொள்வதென்று தீர்மானித்தார். வீடு திரும்பியதும் அந்தக் கட்டுரை தயாரிப்புப் பணியில் அதிக நேரம் எடுத்துக் கொண்டு, அந்த முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டார். மனைவி தெரஸின் தாயாரை, எழுத்து சம்பந்தப்பட்ட பணிகளுக்காக உதவியாக வைத்துக் கொண்டார். காரணம் தெரஸ்க்கு எழுதப் படிக்கத் தெரியாது.

கட்டுரைப் போட்டியில் டிஜான் கலைக் கழகம், ரூசோவின் கட்டுரையைத் தேர்ந்தெடுத்ததோடு, மிகப் பெரிய சாதனைக் கட்டுரையாக அங்கீகரித்தது. கட்டுரைக்கான பரிசும் ரூசோவிற்கு அளிக்கப்பட்டது. பல பெரிய மனிதர்களின் நட்பும், எதிர்பாராத புகழும் ரூசோவை வந்தடைந்தது. அவர் இந்தக் கட்டுரையை எழுதி பரிசு பெற்றபோது அவருடைய வயது 38 ஆகும். ரூசோவின் கட்டுரையைப் புத்தகமாக வெளியிடும் பணியினை அவருடைய நண்பர்களில் ஒருவரான டிடராட் என்பவர் ஏற்றுக் கொண்டார். அதற்குப் பாராட்டுகள் ஒரு பக்கம் வந்தாலும், சிலர் ரூசோவின் கட்டுரையிலே குறை கண்டுபிடிக்கத் தவறவில்லை. அதற்கெல்லாம் ரூசோ அவ்வப்போது பதில் அளித்தார்.

தவறு கண்டவர்களில் ஒருவர் மன்னர் ஸ்டானிஸ்லாஸ். அவரது கருத்துகளைக் கண்டவுடன் ரூசோ வெகு காட்டமாக அதற்குப் பதிலடி கொடுத்தார். அதைப் பார்த்த மக்கள் ரூசோ விரைவில் பாஸ்டில் சிறைக்கு அனுப்பப்படுவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. மாறாக மன்னர் ஸ்டானிஸ்லாஸ் ரூசோவை பாராட்டினார். மேலும் மேலும் புகழ் ரூசோவை வந்தடைந்தது.

ரூசோவின் எழுத்துகளை அறவே வெறுத்து அஞ்சி நடுங்கிய அரசாங்கம், பாஸ்டில் சிறைச்சாலையைக் காட்டி பயமுறுத்தியது. அப்போது ரூசோ சொல்கிறார் - "இன்றில்லையாயினும் இன்னொரு நாள், நாளையோ நாளை தவறினால் என்றோ ஒரு நாள் - நான் உயிரோடு இருக்கும்போதோ அல்லது என் விழிகள் மூடிய பின்னரோ - பாஸ்டில் சிறைச்சாலை உடைக்கப்படும்" என்றார். அதுபோலவே அவர் மறைவுக்குப் பின்னர் அந்த பாஸ்டில் சிறைச்சாலை உடைக்கப்பட்டது. குற்றவாளிகளாக அதற்குள் வைக்கப்பட்டிருந்தவர்கள் "வாழ்க ரூசோ, வாழ்க வால்டேர்" என்று முழங்கியபடி வெளியுலகம் காண வந்தார்கள்.

வால்டேரோ, ரூசோவோ நேரில் இருந்து மக்களைத் தூண்டி விட்டு அதன் பின்னர் அந்தப் போராட்டம் நடைபெறவில்லை. ஆனாலும், என்றைக்கோ அவர்களின் பேனா முனையினால் எழுதிக் குவிக்கப்பட்ட ஒவ்வொரு வரியும் மக்களை உந்தித் தள்ளும் மகத்தான சக்திகளாக விளங்கின.

மற்ற சிந்தனையாளர்களுக்கு ஏற்பட்ட கதியைப் போலவே, ரூசோ எழுதிய புரட்சி எழுத்துகளைக் காரணமாகக் காட்டி அரசுப் பொறுப்பில் இருந்தோர், இவரை பெர்ன் நகரத்தை விட்டே வெளியேறுமாறு ஆணை பிறப்பித்தனர். அந்த நகரத்திலே பல புரட்சியாளர்கள் இருந்தபோதிலும், தன்னை மட்டும் வெளியேற்றுவது ஏன் என்று ரூசோ கருதினார். பல ஊர்களில் சென்று தங்க ரூசோ முற்பட்ட போதிலும், ஓர் இடத்திலும் அவரை நிலையாகத் தங்கவிடவில்லை. இறுதியாக, ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான செயிண்ட் பியர்ஸ் தீவிலே சென்று ரூசோ தங்கினார். அங்கும் அவரால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அந்த நாட்டு அரசு, கடிதம் கிடைத்த 24 மணி நேரத்திற்குள் ரூசோ அந்தத் தீவிலிருந்து வெளியேற வேண்டும் என்றும், அது அரசாங்க ஆணை என்றும் தெரிவித்தது. செல்வதற்கு வேறு இடம் தெரியவில்லை என்றும், அரசாங்கம் விரும்பினால் தன்னைக் கைது செய்து சிறையில் வைத்து விடலாம் என்றும் அரசுக்குத் தெரிவித்தார் ரூசோ. ஆனால், அரசு அவரது வேண்டுகோளை ஏற்க மறுத்து, நாட்டை விட்டு வெளியேறும்படி மீண்டும் கட்டளை பிறப்பித்தது.

இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார். அங்கே வரவேற்பு கொடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவரால் எழுதப்பட்ட நாடக நூலான எமிலியும், சமுதாய ஒப்பந்தம் என்ற நூலும் பிரெஞ்சு அரசினால் தடை செய்யப்பட்டு, நீதி மன்ற வாயிலிலேயே இந்த நூல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆனால், இதே நூல்களை பலபட பாராட்டிய இங்கிலாந்து மக்கள், அந்த நூல்களை எழுதிய ரூசோவின் கைகளுக்கு முத்தமிட்டுப் புகழ்ந்தனர்.

2-7-1778 அன்று, ரூசோ தான் தங்கியிருந்த அறையில் முகமெல்லாம் வீங்கிய நிலையில் பிணமாகக் கிடந்தார். அவரது மறைவுக்கு உண்மையான காரணம் என்னவென்பது உலகத்தின் கண்களுக்கு மறைக்கப்பட்டது. அவருக்கு நேர்ந்தது இயற்கை

மரணமா? செயற்கையான நிலையில் கொல்லப்பட்டாரா என்ற உண்மை இறுதி வரை தெரியாமலே போய்விட்டது.

ரூசோ தான் மறைந்தவுடன் எந்த இடத்தில் தன்னை அடக்கம் செய்ய வேண்டுமென்று கூறியிருந்தாரோ, அதே இடத்தில் அவர் புதைக்கப்பட்டார்.

வால்டேருக்குச் செய்ததைப் போலவே, ரூசோ மறைந்து பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர், பிரெஞ்சுப் புரட்சி உலகத்தையே குலுக்கிக் கொண்டிருந்த நேரத்தில், ரூசோவின் கல்லறை மீண்டும் தோண்டப்பட்டு, அவரது உடலை பாரீஸ் நகரத்திற்குள் ஊர்வலமாக எடுத்துச் சென்று, வழக்கமாக பெரிய பிரமுகர்கள் அடக்கம் செய்யப்படும் இடத்திலே புதைத்தார்கள். அவரது உடல் சவமாக எடுத்து வரப்பட்ட நேரத்தில் - அவர் எழுதி ஒரு காலத்தில் பாரீஸ் மாநகரில் எரிக்கப்பட்ட "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூல், புனித நூலாகக் கருதப்பட்டு ஊர்வலத்தில் அனைத்து மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டது.

வால்டேரும், ரூசோவும் எந்த உலைக் களத்திலும் வடித்தெடுத்துக் கொடுத்த ஆயுதங்களை ஏந்தி, ஆயிரக்கணக்கில் இளைஞர்களும், வாலிபர்களும் பயங்கரமான பாஸ்டில் சிறையை உடைக்கவில்லை; அந்தச் சிங்க இளைஞர் கூட்டம், தங்கள் அஞ்சா நெஞ்சம் எனும் உலைக்களத்தில் உருவான உறுதியையே "பாஸ்டில்" சிறைச்சாலையை உடைக்கும் கருவியாகக் கொண்டு பொடிப்பொடியாக்கினர், அந்தப் பொல்லாத சிறைக் கூடத்தை! புரட்சி என்பதற்குப் பொருள் புரியாமல் புலம்பிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்தப் புலி நிகர் மாந்தர் புரிய வைத்தனர், புரட்சி எப்படி வரும்? ஏன் வரும்? எப்போது வரும்? என்பதை!

அன்புள்ள,

**மு.க.**

21-11-2007

## 3303. இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (15)

# தன்னை வென்றவன்; தரணியை வென்றவன்!

**உடன்பிறப்பே,**

சேலம் இரும்பு, நெய்வேலி நிலக்கரி, சேது சமுத்திரத் திட்டம் போன்ற தமிழகத்தின் வளம் பெருக்கும் திட்டங்களுக்காக, அறிஞர் அண்ணா தலைமையில், தி.மு. கழகம் குரல் கொடுத்தபோது, அந்தக் குரலைச் சட்ட மன்றத்திலும் ஒலிப்பதற்கு எங்களுக்கு 1957ஆம் ஆண்டு வாய்ப்புக் கிட்டியது. சட்டமன்ற உறுப்பினர்களாக எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்திருந்த நாங்கள், நிதி நிலை அறிக்கை மீது பேசும்போது தமிழகத்தை வாழ வைக்கக்கூடிய - வளப்படுத்தக் கூடிய திட்டங்களுக்காக இங்குள்ள மாநில காங்கிரஸ் ஆட்சி எங்களோடு சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ் நாட்டிற்காக, அதன் எதிர்கால முன்னேற்றத்திற் காக நிறைவேற்றித் தர வேண்டும் என்பதற்காக - டெல்லியில் வாதாட வேண்டும் என்று வலியுறுத்த வேண்டுமென்றும் பேசியபோது அப்போது தமிழகத் தொழில் அமைச்சராகக் காங்கிரஸ் அமைச்சரவையில் வீற்றிருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் குறுக்கிட்டு, "சேலம், சேலம் என்று சொல்கிறீர்கள், நீங்கள் சொல்கிற சேலத்தில் இரும்பு இருப்பதாகவும், அதை எடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் கூறுகிறீர்கள், சேலம் என்பது தமிழகத்திலே உள்ள ஒரு நகரம் மாத்திரமல்ல, அமெரிக்காவிலும் ஒரு சேலம் இருக்கிறது. எந்தச் சேலத்து இரும்பை எடுக்க வேண்டுமென்று கூறுகிறீர்கள் என்பது தெரியவில்லை'' என்பது போல கருத்தமைந்த கேலி மொழியில் விளக்கமளித்தார்.

ஆப்ரகாம் லிங்கனைப் பற்றி இன்று எழுதலாமெனக் கருதி, அதற்கான ஆதாரங்களை நான் புத்தகங்களில் தேடும்போது, அன்று திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொன்ன சேலத்தைக்

கண்டேன். எங்கே கண்டேன் தெரியுமா? ஆப்ரகாம் லிங்கனைப் பற்றிய வரலாறு அடங்கிய ஒரு பெரிய நூலில் சேலத்தைக் கண்டுபிடித்தேன். அந்தச் சேலம் அமெரிக்காவிலே உள்ள ஒரு நகரம். அந்த நகரத்திற்கு அருகிலே உள்ள ஒரு கிராமத்திலேதான், மரப் பலகைகளினால் உருவான ஒரு குடிலில் ஆப்ரகாம் லிங்கன் பிறந்தார் என்ற குறிப்பு வருகிறது. சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை வர இயலாது என்பதற்காக அன்றைக்கு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் எடுத்துச் சொன்னது தவறு என்பதும், ஆனால், அமெரிக்காவிலும் ஒரு சேலம் இருக்கிறது என்பதும் தற்செயலாக நமக்குக் கிடைத்த செய்தியாகும்.

குடிசையில் பிறந்த ஒருவர் குடியரசுத் தலைவராக வரமுடியும் என்பதற்கு - அதுவும் அமெரிக்கா போன்ற ஒரு பணக்கார நாட்டிற்குக் குடியரசுத் தலைவராக வரமுடியும் என்பதற்கு உதாரணமாக விளங்கிய பெருமகன்தான் ஆப்ரகாம் லிங்கன். தந்தையோ மரத்தை வெட்டி வியாபாரம் செய்த ஏழைக் குடிமகன். ஊரில் மற்ற குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் சென்று படித்துக் கொண்டிருந்தபோது, லிங்கன் ஏழு வயதிலேயே பிழைப்பதற்காக உழைக்கத் தொடங்கினார். ஏழு வயது முதல் பன்னிரண்டு வயதுவரை மரம் வெட்டும் பணியிலேதான் ஆப்ரகாம் லிங்கன் ஈடுபட்டார். பள்ளிக்குச் சென்று முறையாகப் படிக்காவிட்டாலும், இலவசமாக இவருக்குக் கிடைத்த புத்தகங்களை யெல்லாம் படிக்கத் தவறவில்லை இவர்.

1809ஆம் ஆண்டு - ஆம் - நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த 1909ஆம் ஆண்டுக்கு சரியாக நூறாண்டுகளுக்கு முன்பு, பிப்ரவரி திங்கள் 12ஆம் தேதியன்று தாமஸ் லிங்கன் - நான்சி தம்பதிகளுக்கு இரண்டாவது குழந்தையாக ஆப்ரகாம் லிங்கன் பிறந்தார். இளம் வயதில் பெற்றோர்களாலும், சகோதரியாலும் "ஆபி" என்ற பெயரில்தான் ஆப்ரகாம் லிங்கன் அழைக்கப்பட்டார். ஆபி ஒன்பதாவது வயதைத் தொட்டபோது, அன்னை நான்சி மறைந்தார். தந்தை மூன்று குழந்தைகளுடன் இருந்த விதவை சாலியை இரண்டாவது மனைவியாக மணந்தார். சிற்றன்னை கொடுமை இருக்குமோ என்று எதிர்பார்த்து அஞ்சிய நிலையில் இருந்த ஆபியும், சகோதரி சாராவும் எண்ணியதற்கு மாறாக, சாலி இந்தக் குழந்தைகளிடமும் அன்பு செலுத்தினாள்.

ஆப்ரகாம் லிங்கன், தனது 21வது வயதில், பள்ளிக்குச் செல்லாமலே படித்து பள்ளி இறுதி வகுப்பில் தேறினார். சர்வே துறையில் வேலை கிடைத்தபோது, அங்கே உயர் அதிகாரியாக இருந்த ஜான் கலோவன், அப்போது ஆளுங்கட்சியாக அங்கிருந்த பெடரல் கட்சியின் ஆதரவாளராக இருந்த போதிலும், லிங்கனிடம் நீங்கள் எனக்கு உதவியாளர் என்பதற்காக என் கட்சிக் கொள்கை களை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்பதில்லை என்று தெரிவித்ததோடு, சட்ட புத்தகங்களை யெல்லாம் கொடுத்துதவி படிக்கச் செய்தார்.

லிங்கன் தனது 23வது வயதில், இல்லினாய்ஸ் மாநில சட்டப் பேரவை தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக, அந்தக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட போதிலும், அதில் வெற்றி வாய்ப்பினை இழந்தார். மீண்டும் 1834ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு தனது 25வது வயதில் சட்டப் பேரவை உறுப்பினராக ஆனார். மீண்டும் 1836ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்றார். அந்த நேரத்தில் இல்லினாய்ஸ் மாநிலத்தின் தலைநகரம் மாற்றப்பட்டதால், தான் வசித்து வந்த சேலம் நகரிலிருந்து இரவல் குதிரை ஒன்றைப் பெற்று, அதிலே தனது புத்தகங்களையும், பொருட்களையும் ஏற்றிக் கொண்டு புதிய தலைநகரமான ஸ்பிரிங் ஃபீல்டுக்கு கையில் ஏழு டாலர்கள் மட்டுமே உள்ள நிலையில் பயணமானார் லிங்கன்.

அமெரிக்காவில் நீக்ரோ அடிமைகளைக் கொடுமையாக நடத்துவதை அறிந்தும், நீக்ரோ மகளிரைக் கூட விற்பனைப் பொருட்களாக சந்தையிலே நிறுத்தி வியாபாரம் செய்கிறார்கள் என்றும் செவி வழிச் செய்தியாக தன் இளம் வயதிலேயே அறிந்து அதிர்ச்சியடைந்த ஆப்ரகாம் லிங்கன், ஒரு நாள் அந்தக் காட்சியை நேரிலே கண்ட போது தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து தேம்பித் தேம்பி அழுதார்.

ஏழ்மையான குடும்பத்திலே வறுமை வாட்டும் நிலையிலே வாழ்ந்த போதிலும், பணம் சம்பாதித்துச் செல்வந்தராக வேண்டுமென்ற ஆசை எப்போதும் ஆப்ரகாம் லிங்கனுக்கு ஏற்பட்டதில்லை. பணத்தை விட, ஒரு மனிதனுக்கு நல்ல ஒழுக்கமும், நேர்மையான தன்மையும்தான் முக்கியம் என்றே அவர் நினைத்தார்.

ஆப்ரகாம் லிங்கன் வசித்த கிராமத்திற்கு அருகில் "சேலம்" நகரில் ஹெர்டன் என்பவர் நடத்தி வந்த மதுக்கடை ஒன்றினை லிங்கனிடம் கொடுத்து அதனை நடத்தும்படியும், அதற்கான தொகையை தவணை முறையில் தருமாறும் கூறியதன் பேரில் அதனை லிங்கன் நடத்தத் தொடங்கினார். அந்த சேலம் நகரில் இலக்கிய விவாத சங்கம் என ஒன்று இருந்தது. அங்கிருந்தவர்கள் லிங்கனை முதலில் மதிக்காவிட்டாலும், லிங்கனின் தீப்பொறி பறக்கும் பேச்சுகளைக் கேட்ட பிறகு பாராட்டத் தொடங்கினார்கள்.

இதற்கிடையே மதுபானக் கடை நட்டத்தில் இயங்கியதால், அதன் உரிமையாளர் வேறொருவருக்கு விற்றுவிட, லிங்கன் அடைக்க வேண்டிய கடன் தொகையை கொஞ்சம் கொஞ்சமாக பல ஆண்டுகளில் செலுத்தினார். அதன் மூலம் லிங்கன் ஒரு நேர்மையான மனிதர் என்ற பெயர் நிலைத்தது. மதுக்கடையை நடத்தியபோதும் லிங்கன் ஒரு போதும் மது அருந்தியதில்லை.

லிங்கன் தனது 21வது வயதில், ரட்லஜ் என்ற பெண்ணை காதலித்த போதிலும், அதனை யாரிடமும் வெளிப்படுத்தவில்லை. ரட்லஜ்க்கும், வேறொரு இளைஞனுக்கும் திருமணமானபோது லிங்கன் தனக்குத்தானே வருந்தினார். ஆனால், ரட்லஜ்ஜை மணந்தவன் எங்கோ ஓடி விட்டான். அதன் பின்னர், அவளுடைய பெற்றோர் லிங்கனிடம் அவளை மணக்க விருப்பமா என்று கேட்டபோது, இவர் அளித்த ஒப்புதலின் பேரில் திருமணம் உறுதி செய்யும் விழா நடைபெற்றது. ஆனால் திருமணம் நடைபெறுவதற்கு முன்பே, ரட்லஜ் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகிறாள். லிங்கனால் அவளை மறக்க முடியவில்லை. அவளது கல்லறைக்குச் சென்று தனது இனிய இதயம் அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறது என்றார்.

ஆப்ரகாம் லிங்கன் தனது 33வது வயதில் 21 வயதான மேரிடாட் என்பவரை மணந்தார். ஆனால், அதற்கு முன்பு நடைபெற்ற சம்பவம்? மேரி டாட் லிங்கனின் நெருங்கிய நண்பரான எட்வர்ட் என்பவரின் மைத்துனி. அவளை லிங்கனுக்கு மணமுடிக்க எட்வர்ட் விரும்பிய போதிலும், அவருடைய மனைவிக்கு அதிலே விருப்பமில்லை. எனினும் எட்வர்ட் தன் மனைவியை ஒப்புக் கொள்ளச் செய்து, திருமண உறுதி விழாவும் நடைபெற்றது. ஆனால் அதன் பின்னர், அப்போது அமெரிக்காவில்

மிகப்பெரிய அரசியல்வாதியாக திகழ்ந்த ஸ்டீபன் டக்ளஸ் என்பவர், தன் மனைவியை இழந்த நிலையில் மேரி டாட்டை மணக்க விரும்பினார். இதைக் கேள்விப்பட்ட லிங்கன், தனக்கு திருமணமே வேண்டாமென்று ஒரு கடிதத்தை மேரி டாடிற்கு எழுதினார். எனினும் நண்பன் ஜோசுவா கூறியதின் பேரில், அவளை நேரில் பார்க்கச் சென்ற போது, மேரி டாட், திருமண உறுதி செய்த பிறகு, நான் மற்றொருவரை மணக்க மாட்டேன் என்று அழுது கொண்டே கூறியபோது, லிங்கன் மகிழ்ச்சி அடைந்தார்.

எனினும், தனக்குத் தானே ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்குகிறோமோ என எண்ணி, தற்கொலை செய்து கொள்ளக் கூடத் துணிந்தார். அவரது நண்பர்கள் எல்லாம் அவருடன் கடுமையாக விவாதித்து, அவரது தாழ்வு மனப்பான்மையைப் போக்கிக் கொள்ளுமாறு செய்தனர். அந்த நேரத்தில் தன் வருங்கால மனைவிக்கு லிங்கன் எழுதிய உருக்கமிகு கடிதத்தில் "நான் எப்போதும் ஏழையாகவே இருந்துவிட மாட்டேன். எளிய குடும்பத்திலே பிறந்தவனாக இருந்தாலும், வாழ்க்கையிலே எதிர் நீச்சல் போட்டுத்தான் முன்னேற வேண்டு மென்பதை நான் அறிவேன். இல்லாவிட்டால் ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடும். சாதனை புரிய வேண்டும் அல்லது சாக வேண்டும். சாவது சாதனையாக ஆகிவிடாது. கடுமையாக உழைத்து முன்னேறுவதுதான் சாதனை. அதுவே என் இலட்சியம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின்னர் தான் அவர்களது திருமணம் நடைபெற்றது.

லிங்கன் - மேரி டாட் தம்பதிகளுக்கு நான்கு ஆண் குழந்தைகள். அவற்றில் ஒன்று இறந்த போது, லிங்கன் பெரிதும் வருந்தினார். காடுகளில் சென்று தனிமையில் நேரத்தை கழித்தார். அந்த நேரத்தில் அவர் எழுதிய ஒரு கவிதையின் தொடக்கம் இவ்வாறு அமைந்தது.

காதில் விழும் ஒலி எல்லாம்
இடி முழக்கம் ஆகிறது!
பார்வையில் தென்படும் நிலம் எல்லாம்
கல்லறைகளாக ஆகின்றன!
இதமான காற்றும்
கடும் புயல் ஆகிறது!

நான் சிந்தும் கண்ணீர்
மழை ஆகிறது!

ஆப்ரகாம் லிங்கன் ஒரு நாள் வழக்கறிஞர் உடையை அணிந்து கொண்டு நீதி மன்றத்திற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் வெள்ளைப் பன்றி ஒன்று, வேலி ஒன்றில் தலையை நுழைத்துக் கொண்டு வெளியே வர முடியாமல் தவித்ததைக் கண்டு, வண்டியிலிருந்து இறங்கி பன்றியை விடுவித்தார். விடுபட்ட பன்றி மகிழ்ச்சியில் வாலைச் சுழற்றிய போது, அது சேற்றிலே பட்டு, லிங்கன் உடைகளை யெல்லாம் நாசப்படுத்தி விட்டது. உடை மாற்றுவதற்காக லிங்கன் வீடு திரும்பியபோது, உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை என்று மனைவி கேட்க, அதற்கு லிங்கன், "பன்றியைத் தப்புவிக்காமல், நான் நீதி மன்றத்திற்குச் சென்றிருந்தால், என் மனம் அதையே நினைத்து வேதனைப்படும். விசாரணையில் மனம் சென்றிருக்காது" என்று கூறினாராம்.

வழக்கறிஞர் தொழிலில் லிங்கனின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஜேம் ஆம்ஸ்டிராங் என்பவர் மீது கொலைக் குற்றச்சாட்டு. வழக்காட வசதியற்ற நிலையில், இலவசமாக அவருக்காக லிங்கன் வாதாடினார். அவர் செய்த கொலையை நிலவொளியில் நேரில் கண்டதாகவும், அப்போது இரவு மணி 11 என்றும், நிலா வானில் உச்சியிலே இருந்தது என்றும் ஆறு பேர் நீதி மன்றத்தில் சாட்சியம் அளித்தனர். ஆனால் லிங்கன் வாதிடும்போது, கொலை நடைபெற்றது, பௌர்ணமிக்குப் பின்னர் எட்டாவது நாள் என்றும், அன்றையதினம் இரவு 12 மணிக்குப் பிறகு, தான் நிலவு தோன்றியது என்றும், எனவே இரவு 11 மணிக்கு நிலவொளி இருந்ததாகவும், அதில் கொலையை நேரில் பார்த்ததாகவும் சாட்சிகள் கூறுவது உண்மைக்கு மாறானது என்றும் தெரிவித்த பிறகு ஜேம் ஆம்ஸ்டிராங் குற்றவாளியல்ல என்று நீதிமன்றம் விடுதலை செய்தது. லிங்கனின் வாழ்க்கை வரலாற்றில் இப்படி எத்தனையோ சம்பவங்கள் உண்டு.

1852 முதல் 1855 முடிய வழக்கறிஞர் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததோடு, அரசியல் மேடைகளிலே பங்கேற்று உரையாற்றிய லிங்கன், அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட வேண்டு மென்பதை வலியுறுத்தினார். 1858ஆம் ஆண்டு லிங்கன் செனட்டர் தேர்தலில் போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து

ஸ்டீபன் டக்ளஸ் போட்டியிட்டார். அவர் லிங்கனை மட்டம் தட்ட வேண்டுமென்ற நோக்குடன், தேர்தல் பிரச்சாரத்தில் லிங்கன் மதுக்கடை நடத்தியதைப் பற்றிக் குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த லிங்கன், டக்ளஸ் கூறுவது உண்மைதான். அப்போது நான், கடை வைத்திருந்தபோது, என் கடையில் தான் டக்ளஸ் சிகரெட்டும், மதுப் பாட்டில்களையும் வாங்குவது வழக்கம். ஆனால் நான் பல ஆண்டுகளுக்கு முன்பே கடையை மூடி விட்டேன். ஆனால் நண்பர் டக்ளஸ், இன்னமும் மது அருந்துவதை நிறுத்த வில்லை என்று கூறியபோது கூட்டத்தினர் பாராட்டி வரவேற்றனர். ஆனால் அந்தத் தேர்தலில், லிங்கன், வெற்றி வாய்ப்பினை இழந்து விட்டார்.

1860ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நான்கு முனைப் போட்டி என்றாலும், ஜனநாயக கட்சி அல்லது குடியரசுக் கட்சியின் வேட்பாளர்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற இருமுனைப் போட்டி எனும் நிலைமைதான் இருந்தது. குடியரசு கட்சியின் சார்பில் லிங்கனா? செவார்டா? என்ற போட்டி கட்சிக்குள் எழுந்த போது, செவார்டு தன்னைவிட அரசியல் அறிவு முதிர்ந்த ஆப்ரகாம் லிங்கனை தலைவராக ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். ஜனநாயக கட்சியின் வேட்பாளராக ஸ்டீபன் டக்ளஸ் போட்டியிட்டார்.

லிங்கன் தேர்தல் பிரச்சாரத்தில் கடுமையாக ஈடுபட்டிருந்த நேரத்தில், கிரேஸ் என்ற ஒரு சிறுமி லிங்கனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், அவர் உடனடியாக கிருதா வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் அவரது கன்னத்தில் குழி விழுவது தெரியாது என்றும், தோற்றம் நன்றாக அமையுமென்றும் எழுதியிருந்தாள். ஏதோவொரு சிறுமி எழுதிய கடிதம் ஆயிற்றே என்று அதனை ஒதுக்கிவிடாமல், லிங்கன் கிருதா வைத்துக் கொண்டார்.

வெற்றி பெற்று நன்றியறிவிப்புக்காக கிரேஸ் வாழ்ந்த நகரத்திற்குச் சென்றபோது, அந்தக் கூட்டத்தில் அந்தப் பெண் இருக்கிறாளா என்று வினா எழுப்ப, கிரேசும் தன் தந்தையுடன் லிங்கன் அருகே சென்றபோது, அவளுக்கு நன்றி கூறி அந்த சிறுமியை தன்னுடைய சின்னஞ்சிறிய சிநேகிதி என்று கூட்டத்தில் அறிவித்தார்.

1861ஆம் ஆண்டில் அமெரிக்காவின் 11வது குடியரசுத் தலைவராக ஆப்ரகாம் லிங்கன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது இளமைக் காலத்தைப் பற்றி பத்திரிகையாளர்கள் அப்போது கேட்டபோது, ஒரு ஏழை மனிதனின் வாழ்க்கையிலே நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சி எதுவும் இருக்காது என்று பதில் கூறினார்.

அவருக்கு நல்ல நகைச்சுவை உணர்வு உண்டு. அவர் குடியரசுத் தலைவராக ஆனபிறகு, அரசுப் பணி கேட்டு ஏராளமான பேர் மனு கொடுத்த போது, லிங்கன் ஓர் கதையைச் சொன்னாராம்.

"மன்னர் ஒருவர் வேட்டைக்குச் செல்ல விரும்பிய போது, அமைச்சரை அழைத்து அன்று மழை வருமா என்று கேட்டிருக்கிறார். அமைச்சர் மழை வராது என்று கூறினார். மன்னர் வேட்டைக்குப் புறப்பட்டு சென்று கொண்டிருந்த போது, மேகங்கள் திரண்ட நிலையில் எதிரே வந்த விவசாயி ஒருவரிடம், மழை பெய்யுமா என்று கேட்க, நிச்சயமாக மழை பெய்யுமென்று பதிலளித்திருக்கிறார்.

விவசாயி கூறியதைப் போலவே மழையும் பெய்தது. அரசர் வியப்படைந்து அமைச்சரை பதவியிலிருந்து நீக்கி விட்டு, அந்த விவசாயியை அமைச்சராக நியமித்தார்."

புதிய அமைச்சரிடம் மழை பெய்யும் என்று உங்களால் எப்படி உரைக்க முடிந்தது என்று மன்னர் கேட்ட போது, தான் வீட்டில் ஒரு கழுதையை வளர்ப்பதாகவும், மழை வருவதற்கு முன்பு அந்தக் கழுதையின் காதுகள் நேராக விறைப்பாகி விடும் என்றும், அதன் மூலம் மழை வருவதைத் தன்னால் புரிந்து கொள்ள முடியுமென்றும் அந்த விவசாயி பதிலளிக்க, உடனே அந்த மன்னர் இந்த விவசாயியை விட, அவரது கழுதைதான் புத்திசாலி என்று கூறி, அமைச்சர் பதவியிலிருந்து அந்த விவசாயியை நீக்கி விட்டு, கழுதையை அமைச்சராக நியமனம் செய்தாராம். அடுத்த நாள் ஊரிலே உள்ள கழுதைகள் எல்லாம் திரண்டு வந்து மன்னரைப் பார்த்து, தங்களையும் அமைச்சராக்க வேண்டு மென்று குரல் கொடுத்தனவாம். அதைப் போல தன்னிடம் வேலை கேட்கிறவர்களிடம் ஆப்ரகாம் லிங்கன் இந்த வேடிக்கை கதையைக் கூறியதாக அவரது வாழ்க்கை வரலாற்று நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

1865 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவராக இருந்த ஆப்ரகாம் லிங்கன், கேட்டீஸ் பர்க் நகரத்திற்கு அதற்கு நான்கு திங்கள்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு சண்டையில் உயிரிழந்த போர் வீரர்களின் நினைவிடங்களில் அஞ்சலி செலுத்துவதற்காக வந்தார். அப்போது சில நிமிடங்கள் பேசியபோது தான் உலகம் முழுவதும் இன்றளவும் மறக்கப்படாத ஒரு சொற்றொடரான "மக்களுக்காக - மக்களால் அமைக்கப்பட்ட மக்களின் அரசாங்கம்" (Government of the People, for the people, by the People) என்ற மக்களாட்சித் தத்துவச் சுடரை மாணிக்கப் பரிதியாக ஏற்றி வைத்தார்.

அவர் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்பதற்கு முன்பே, அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்கி விட்டது. அது நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. அமெரிக்காவில் அடிமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்த ஆப்ரகாம் லிங்கன் மீது ஆத்திரமுற்று, அடிமைத்தனத்துக்கு விடை கொடுத்துவிட்டு, ஆதிக்கச் சக்திகளின் முதுகெலும்பை உடைப்பது, ஆண்டவனுக்கே ஆகாது எனக் கருதிய ஒரு நடிகர், ஆப்ரகாம் லிங்கனின் ஆவி போக்கவே திட்டமிட்டார். அவர் பெயர் ஜான் வைக்ஸ்பூத். அந்தக் கொடிய மனிதரின் திட்டம் ஒரு நாடகக் கொட்டகையில் நிறைவேறியது. ஆம்! லிங்கன் அவரது மனைவியின் விருப்பத்திற் கிணங்க வாஷிங்டன் நகரில் உள்ள ஒரு தியேட்டருக்கு நாடகம் பார்ப்பதற்காகச் சென்றிருந்த போது, நாடகம் நடந்து கொண்டிருக்கும் போதே, குடியரசுத் தலைவர் வீற்றிருந்த இடத்தில் குண்டு வெடிக்கும் பயங்கர ஒலி எழுந்தது. நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மேடையிலேதான் துப்பாக்கி சூடு நடப்பதாகக் கருதிக் கொண்டார்கள். தலையில் பின்புறம் குண்டு பாய்ந்ததால் ஆப்ரகாம் லிங்கன் கீழே விழுந்தார். அனைவரும் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தபோது, கொலையாளி பூத் அந்தத் தனி அறையின் பின்புற பலகையிலே ஏற்கெனவே அமைத்திருந்த துவாரத்தின் வழியாக உள்ளே நுழைந்து, அவன் நினைத்ததைச் சாதித்திருக்கிறான்.

உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இரவு முழுவதும் சிகிச்சை அளித்தும் பயன் இல்லாமல், மனிதனை மனிதனாக நடத்த வேண்டுமென்று துடித்த அந்த மாமனிதனின் இதயத் துடிப்பு நின்று விட்டது - குடிலில் பிறந்தார், கோபுரமாக உயர்ந்தார் - சமத்துவ முழக்கமிட்டார் - ஜனநாயகம் தழைத்திட

உழைத்த அந்த உத்தமர்! இன்றைக்கும் "வாஷிங்டன் நகரில்" நினைவு மண்டபத்தில் பளிங்குச் சிலையாக நமக்கும், நாட்டுக்கும், இந்த நானிலத்து மக்களுக்கும் காட்சி தருகிறார்.

அடிமைச் சங்கிலி உடைத்திட சுத்தியல் ஓங்கிய அந்தச் சுயமரியாதை வீரரைச் சுட்டு வீழ்த்தியவனும் அடுத்த மாதமே வீழ்த்தப்பட்டான் - ஆப்ரகாமின் ஆதரவாளர்களால்! பழிக்குப் பழி என்பது பரிகாரமாகுமா? ஆகாது என்பது போலத்தான் "ஆப்ரகாம்" சிலை காட்சி தருகிறது, அமெரிக்க நாட்டு வாஷிங்டனில்!

உடன்பிறப்பே, "ஸ்பிரிங் பீல்டு" என்ற நகரில், கணவன், மனைவி தங்கியிருக்கும்போது குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆப்ரகாம் லிங்கனுக்கு வெற்றி வாய்ப்பு என செய்திகள் வந்து குவிந்து கொண்டிருந்தன. லிங்கனுக்கும் - அவர் மனைவி மேரி டாட்டுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை "இர்விங் ஸ்டோன்" என்பவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளதைப் படித்தால்,

மனைவி மேரியின் இதயத்து இனிமையும் - லிங்கனின் எளிமையும் - நமக்குப் புலப்படும் - அந்தப் பகுதி வருமாறு :-

"இத்தடவை மேரியும், ஆப்ரகாமும் வாஷிங்டனுக்குச் செல்லும்போது அங்கே அவர்கள் ஓட்டல் ஒன்றுக்கும் போக வேண்டியிராது! அல்லது பன்றிப் பட்டியையும், கக்கூசுகளையும் நோக்கியிருக்கும் ஒரு பின்பக்க அறையை ஆக்ரமித்துக் கொள்ளவும் வேண்டியதில்லை. இத்தடவை அவள் நகரம் முழுவதும் சுற்றி, எப்பகுதி நல்லது, எங்கே தன்னால் கொடுக்கக் கூடிய வாடகைக்குள் வீடு கிடைக்கும் என்றெல்லாம் கண்டுபிடித்துச் சிரமப்பட வேண்டிய தில்லை. இத்தடவை நகரத்தின் தெற்கத்திய சமூகத்தால், அவள் அவமானப்படுத் தப்படவோ, ஒதுக்கப்படவோ மாட்டாள்.

நிம்மதியான தருணத்தில் அவள் ஆப்ரகாமின் கைகளைப் பற்றி - தாழ்வாரத்து சோபா ஒன்றில் அமர்த்தினாள்.

"ஆப்ரகாம்! நாம் எட்டு வருஷங்களுக்கு ஸ்பிரிங் பீல்டை விட்டு வெளியே இருக்கப் போவதால், இங்குள்ள நமது வீட்டை விற்று விடுவது நல்லதல்லவா?"

அவர் கோபம் கொண்டவர் போல் குதித்து எழுந்தார். பிறகு கேலியாக அவளை உற்று நோக்கி விட்டுச் சொன்னார். "மேரி,

ஜனாதிபதிகள் நான்கு வருஷப் பதவிக்காகத்தான் தேர்ந்தெடுக்க படுகிறார்கள் என்பது உனக்குத் தெரியாதா?"

"வாஷிங்டன், ஜெஃபர்ஸ், மாடிஸன், மன்ரோ, ஜாக்ஸன் ஆகிய எல்லா ஜனாதிபதிகளுமே இரண்டு தவணைகள் பணியாற்றியிருக்கிறார்கள். தட்டுமுட்டுச் சாமான்களுடன், நம் வீட்டிற்கு நாலாயிரம் டாலர் வாங்கித் தருவதாக ஜேம்ஸ் காங்கிளிங் கூறுகிறான். பிறகு வீட்டு ரிப்பேர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமிராது" என்றாள் மேரி.

"ஆனால் மேரி, இது நம் வீடு! நான் என் வாழ்வில் பெற்றிருக்கும் ஒரே வீடு! இதை நான் மிகவும் விரும்புகிறேன். தவிர, தட்டுமுட்டுச் சாமான்கள் இல்லாமலேயே இதற்கு வருஷத்துக்கு முந்நூற்றைம்பது டாலர் வாடகை தருவதாகவும் கூறுகிறார்கள். அதோடு பதவிக் காலம் முடிந்து திரும்பி வரும்போது நமக்கு வசிக்க ஒரு வீடு வேண்டாமா?"

"மறுபடியும் ஸ்பிரிங் பீல்டுக்கா? தலைநகரத்தில் பல வருஷங்களைக் கழித்த பிறகு, நிச்சயம் நீங்கள் ஒரு விரிந்த உலகத்தில்தான் வசிக்க விரும்புவீர்கள், இல்லையா?" என்று கேட்டாள் அவள்.

"வாஷிங்டனில் இருக்கப் போகும் நாட்களில், என் வீடு என்று நினைத்துக் கொள்ள ஓர் இடம் இல்லையானால், நான் உடமைகளை இழந்த ஒரு மனிதனைப் போல்தான் உணருவேன். இன்று ஆபீசுக்குச் சென்றபோது, அங்குள்ள நமது இடத்தையும் அப்படியே வைத்திருக்கும்படி பில்லியிடம் கூடச் சொல்லியிருக்கிறேன். நான் வாஷிங்டனிலிருந்து திரும்பும்வரை உயிர் வாழ்ந்தேனேயானால், திரும்பியதும் வழக்கப்படி, இடையே எதுவுமே நிகழாததுபோல் மீண்டும் சட்டத் தொழிலைத் தொடங்குவேன்" என்று கூறினார் ஆப்ரகாம்.

இந்த உரையாடலையும் - லிங்கனின் உயிரைக் குடித்த அந்தக் கொடிய நிகழ்வையும் நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் வெடித்து விடும் போல் தோன்றுகிறதல்லவா?

அன்புள்ள,

**மு.க.**

22-11-2007

# 3304. வரலாறு படைப்போம்; வாரீர் நெல்லைக்கு!

**உடன்பிறப்பே,**

இளைஞர் எழுச்சி குறித்தும் - இளைஞர்கள் புரிந்துள்ள இமாலய சாதனைகள் பற்றியும் - இன்றுடன் நான் எழுதிய பதினைந்து கடிதங்களை, வரலாற்றுக் கருவூலமெனப் போற்றிப் பாராட்டி, புகழ்ந்துரைத்து, உன் போன்றோர் பொழிந்துள்ள வாழ்த்துகளை முத்தமிட்டுப் பையில் திணித்துக் கொள்வதில் பெருமையுறுகிறேன். அதற்குள் சில ஆத்திரக்காரர்களுக்கு, அவசரக்காரர்களுக்கு ஏற்கெனவே அவர்தம் நெஞ்சில் நிரம்பியுள்ள அசூயை, கொதிப்பேறிப் பொங்கி வழிந்து, அத்துடன் நஞ்சும் கலந்து, ஏதேதோ "திருவாய்ச் சிந்து" பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

★ அவர்கள் என்ன! நேற்றைய நாளில் அரசு தலைமைச் செயலகத்தில், பதினெட்டுப் பச்சிளம் குழந்தைகளின் இருதய சிகிச்சைக்காக அரசு சார்பில் சிகிச்சை கட்டணத்தில் பெரும்பகுதியை, அதாவது 90 சதவிகித அளவிற்கு அரசே செலுத்துவதற்கு ஒப்புதல் அளித்து, நல் மனம் படைத்த மருத்துவமனை உரிமையாளர்கள் ஒவ்வொருவருடனும் ஒப்பந்தம் செய்து, அந்தக் குழந்தைகளுக்கு அதற்கான பதிவு அட்டைகள் வழங்கினேனே! அதைப் பற்றி நினைத்தார்களா?

★ நேற்றையதினமே, 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக அரசின் டிட்கோ நிறுவனமும், பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் பிரான்டியர் லைப்லைன் நிறுவனமும் இணைந்து, மருத்துவ கிராமம் ஒன்றினைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதே! அதைப்பற்றி இந்த அசூயையாளர்கள் அறிவார்களா?

★ அதுமாத்திரமல்ல, தமிழக அரசின் சார்பில் இந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கான

தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருந்து வருகின்ற நேரத்தில், நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில், மிகப்பெரிய தொழில் நிறுவனமான "போர்டு'' தொழிற்சாலையின் ஆசியா பசிபிக் மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளுக்கான செயல் துணைத் தலைவர் ஜான் பார்க்கர் அவர்கள் என்னைச் சந்தித்தபோது, மேலும் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழகத்திலே திட்டம் தொடங்கிட விருப்பதாகவும் அறிவித்துச் சென்றிருக்கிறார். அன்றாடம் அறிக்கை விட்டுக்கொண்டிருப்போர் அறியமாட்டார்களா இதனை?

★ தேர்தல் வாக்குறுதியாக அறிவித்து, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்க முடிவு செய்து அதற்காக வெளிப்படையான ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் கோரி, சட்டமன்றக் கட்சித் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு எனது தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு, 25 லட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 18-11-2007 வரை 23லட்சத்து,79 ஆயிரத்து, 721 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு, அவற்றில் 21 லட்சத்து 32 ஆயிரத்து 956 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளனவே! மேலும் 750 கோடி ரூபாய்ச் செலவில், 34 லட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்து வழங்குவதற்காக முடிவு செய்யப்பட்டு, வருகிற 27ஆம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர்கள் பங்கேற்று அவைகளை வழங்கப் போவதாக அறிவித்துள்ளோமே, அதைப்பற்றி பாராட்டுரை பகரப் போகிறார்களா?

★ இதுபோலவே, ஏழை எளிய தாய்மார்களுக்கு இலவசமாக எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கிடுவோம் என்று அறிவித்து, 16-11-2007 வரை 3 லட்சத்து ஓர் ஆயிரத்து 560 எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கப்பட்டு, தொடர்ந்து 27-11-2007 முதல் மேலும் எட்டு இலட்சம் எரிவாயு அடுப்புகள் வழங்கப்படவுள்ளனவே! இதனைப் பற்றி எரிச்சல்காரர்கள் புகழப் போகிறார்களா?

★ 1 இலட்சத்து 16 ஆயிரத்து 508 நிலமற்ற ஏழை விவசாயி - விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1 லட்சத்து 33 ஆயிரத்து 688 ஏக்கர் நிலம் இலவசமாக அரசின் சார்பில் அளிக்கப்பட்டுள்ளதே, இதுகுறித்துப் பாராட்டு வழங்கப் போகிறார்களா?

★ 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 71 லட்சம் குழந்தைகள், மாணவர்களுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டைகள் வழங்கப்படுகிறதே, அதைப் பற்றி கருத்து தெரிவிக்கப் போகிறார்களா?

★ 1 கோடியே 78 லட்சத்து 240 குடும்பங்களுக்கு கிலோ அரிசி 2 ரூபாய் வீதம், மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறதே, எரிச்சல்காரர்கள் அதுபற்றி என்ன சொல்லப் போகிறார்கள்?

★ 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு, சுமார் 7000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறோமே, இன்றைக்கு ஆர்ப்பாட்டம் செய்வோர் அதற்காக வரவேற்பு தெரிவித்ததுண்டா?

★ 10-11-2007 வரை 2 லட்சத்து 7 ஆயிரத்து 287 வீட்டு மனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டிருப்பதோடு, கடந்த 14-ந்தேதியன்று அதுபற்றி ஆய்வு நடைபெற்று, இலவச வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கிட எந்தவிதமான வருமான உச்ச வரம்பும் கிடையாதென்று அறிவித்திருக்கிறோமே! எது எதற்கோ வக்கணை பேசுவோர், அதைப் பற்றி பாராட்டு கூறியிருக்க வேண்டாமா?

★ 1 இலட்சத்து 60 ஆயிரத்து 531 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாயி - விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நல உதவித் திட்டத்தின்கீழ், 69 கோடியே 29 லட்சத்து 11 ஆயிரத்து 719 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதே, அதைப்பற்றி ஒரு வார்த்தை உண்டா?

★ கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் 73 ஆயிரத்து 665 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்காக 110 கோடியே 49 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்காக -

4 லட்சத்து 72 ஆயிரத்து 20 கர்ப்பிணி பெண்களுக்காக

206 கோடியே 14 லட்சத்து 33 ஆயிரம் ரூபாயும் நிதி உதவியாக வழங்கப் பட்டுள்ளதே, கேலி பேசுவோர் இதைப்பற்றி யெல்லாம் கனவிலாவது நினைத்தது உண்டா?

மக்களின் தேவைகளுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்கள் பற்றி அவர்களுக்கென்ன கவலை? இப்போது அவர்களது கவலையெல்லாம் திருநெல்வேலியில் விரைவில் நடைபெறவிருக்கும் மாநில இளைஞர் அணி மாநாட்டைப் பற்றித்தான்! அதற்காகத்தான் அந்த நண்பர்கள் பேசுகிறார்கள். கண்டனம் - கேலியென முழங்குகிறார்கள்.

உலகின் வரலாற்று நாயகர்களைப் பற்றி - தியாக சீலர்களைப் பற்றி - தீரர்கள், வீரர்கள் பற்றி எழுதினால்,

இப்போதுதானே இதெல்லாம் இளைஞர்களைக் கவர்ந்திழுக்க எழுதுகிறார் - என்று தங்களுக்கே உரிய நாராச நடையில் பொய், புளுகு, புரட்டுக்களை அறிக்கைகளாக்கி, என் எழுத்துக்கு உள்நோக்கம் கற்பித்து வெளியிட்டு மகிழ்கிறார்கள்.

இளைஞர்கள், இன உணர்வு பெற வேண்டுமென்றும் - இயக்கத்தின் இலட்சியங்களை உணர்ந்து இடையறாப் பணி ஆற்ற வேண்டு மென்றும் - என் உள்ளத்தில் என் இளம் பிராயத்திலேயே (1937-1938) 13 வயதிருக்கும் போதே "செல்வ சந்திரா" எனும் புதினம் எழுதி, அதன் முன்னுரையிலேயே



இவ்வாறு குறிப்பிடும் அளவுக்கு இலட்சிய தாகம் இருந்துள்ளது. மேலே வெளியிடப்பட்டுள்ள என் கையெழுத்து ஆதாரம் “கலைஞரின் கவிதை மழை”என்ற பெரிய நூலில் வெளியிடப்பட்டுள்ளதை, எப்போது வேண்டுமானாலும் எரிச்சல்கார நண்பர்கள் பார்த்துத் தெளிவு பெறலாம்.

அதைத் தொடர்ந்து 1942-ல் - அண்ணாவின் “திராவிட நாடு” இதழில், “இளமைப் பலி” என்ற எனது கட்டுரையும் வெளி வந்துள்ளது.

அதன் பிறகு 1945-ல் - நான் எழுதிய “கிழவன் கனவு” என்ற குறுங் கதைப் புத்தகம் வெளி வந்ததில் - “எங்கு பார்க்கினும் விடுதலை விருத்தம்! எங்கும் சமதர்ம சங்கநாதம்! தமிழொளியை அரசியலில் இணைத்து, திராவிடர் உரிமையோடு, உடைமையோடு, உண்மையோடு உள்ள எழுச்சியோடு உவகை

உந்த வாழ்ந்திடும் வரலாறு! ஒரு தமிழன் தன்மானமின்றி அய்யரைச் சாமி என்றழைத்ததற்காக ஆறு மாத கடுங்காவல்! சாது எனக் கூறி, சூது செய்த ஒருவன் சாகும் வரையில் சிறைப்பட்டான்! பட்டமும் பதவியும் நமது திட்டமென ஒரு பத்திரிகாசிரியன் எழுதியதற்காக மக்கள் மன்றத்திலே அவன் மண்டூகம் எனப்பட்டான். ஏழையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக ஏற்பட்டதாம் ஆநிரைகோ என்ற தமிழனுக்கு! சாதி, மதம், கடவுள்கள் என்ற கற்பனைப் பூச்சாண்டிகள் ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் உலவின என்று, உரநெஞ்சன் என்ற சரித்திர ஆசிரியர் ஒரு நூலில் குறிப்பிட்டிருந்தார். இந்தி எதிர்ப்பு! சிறைச்சாலை! தாளமுத்து, நடராஜன் களப்பலி! தமிழைக் காக்கச் சிறை சென்ற பெண்மணிகளின் புறநானூறு! மானங்காக்க மாணவர் செய்த கிளர்ச்சி! ஓமான் கடல் மறைத்த சர். ஏ. டி. பன்னீர் செல்வம்! - இதனை அந்தக் கிழவன் கனவாகக் கண்டான்" என்று குறிப்பிட்டிருப்பதைக் கருத்துக் குருடர் தவிர மற்றவர்கள் கண்டு மகிழ முடியும். அது என்ன! இப்போது எழுதியதா? 84 வயதில்? இல்லை! 1945-ல் - என் 21வது வயதில் எழுதியது! நூலின் பெயர் "கிழவன் கனவு" - அப்போது விலை ரூ.1.25 - அதை அப்போது எழுதிய இந்த இளைஞனுக்கு வயது, 21 தான்! பொல்லாங்கு பேசுவோர் இதைப் புரிந்து கொள்வது நல்லது!

1942ஆம் ஆண்டு, 18 வயதிலேயே அண்ணாவின் "திராவிட நாடு" வார இதழில் "இளமைப் பலி" என்ற கட்டுரை எழுதியவன் நான். எனவே இலட்சியத்துக்காக இளமையைப் பலி கொடுக்கவும், இதோ தயார்! என எழுந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவன்தான், இன்று முதிர்ந்த வயதில் மாநில இளைஞர் அணி மாநாட்டுக்காக - வரலாற்று நாயகர்கள் பற்றி 15 கட்டுரைகள் தீட்டி, அவர்களின் நாட்டுப் பற்று - சமுதாயப் பற்று - போன்ற கொள்கைக் கோட்பாடுகளை, இலட்சிய வேட்கைகளை நினைவூட்டி - புதியதோர் இளைஞர் எழுச்சி பூத்துக் குலுங்கிட எழுதுகோல் எடுத்து,

இளைஞனே
விழி! எழு!
நல் - எண்ணங்களை எங்கணும் நடு!
எனத் தீட்டிடுக!

தீரர்களுக்கான அழைப்பு என்று வீர இளைஞர்காள்! உமை வேண்டுகிறேன்.

மாநாட்டுத் தலைவரும், மாநில இளைஞர் அணிச் செயலாளருமான தம்பி மு.க. ஸ்டாலின், காற்றினும் கடிய வேகத்தில் மாநாட்டுக்கான ஆக்கப் பணிகள் அருமையாக அமைந்திட -

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும், சுற்றுப் பயணம் செய்கிறார்.

அவருடன், இளைஞர் அணியின் எழுச்சிப் படையும் அணிவகுத்திடக் கண்டு அக மகிழ்கிறேன்.

மாநாட்டுக்கான முதல் விளம்பர அழைப்பே, முத்துக் கோத்தது போல் நம்மை முறுவலித்திட வைக்கிறது!

மேலும், அடுத்தடுத்த சிறப்புகளை டிசம்பர்

15, 16 ஆகிய நாட்களில் நெல்லையில் காண்போம்.

அன்புள்ள,

மு.க.

23-11-2007

# 3305. இலட்சியக் கொடி ஏந்தி இளம் பிறைகளின் அணிவகுப்பு!

**உடன்பிறப்பே,**

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதியன்று, தி.மு. கழகத்தின் தொடக்க விழாக் கூட்டம் சென்னையிலே நடைபெற்றதென்றாலும், அதே ஆண்டு அக்டோபர் 17ஆம் நாள்தான், தமிழ் நாடெங்கும் கழக அமைப்புகளின் தொடக்க விழாப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. அதே நாளில் நெல்லை மாவட்டத்திலே தி.மு.கழகத்தை தொடங்கிடும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொறுப்பு, அண்ணா அவர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, கோயில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டேன்.

தூத்துக்குடி என்றதும் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் நினைவும், அவர் இழுத்த செக்கு, தமிழகத்தின் எங்கோவொரு மூலையில் கவனிப்பாரற்று கிடந்ததைக் கண்ட நான், கழக ஆட்சி மலர்ந்ததும் உடனடியாக அதனைத் தமிழகத்தின் தலைநகருக்குக் கொண்டு வந்து, அனைவரும் பார்க்கத் தக்க வகையில் அமைத்த நினைவும் என் நெஞ்சில் நிழலாடுவதைப் போல, கழகக் காளை கே.வி.கே. சாமியின் நினைவும் நெஞ்சிலே பீறிட்டு எழத்தான் செய்யும். தொண்டாற்றுவதற்கென்றே பிறந்த தம்பிதான் கே.வி.கே. சாமி. நான் அடிக்கடி கூறுவேனே, தன்னால் கட்சிக்கு என்ன இலாபம் என்று பாடு படுகிறவன்தான் கட்சியின் இரத்த நாளம், கட்சியால் தனக்கென்ன இலாபம் என்று நினைப்பவன் புற்றுநோய்க்கு சமமானவன் என்று - அதிலே இரத்த நாளமாக செயல்பட்ட அரிமா நெஞ்சினன்தான் கே.வி.கே. சாமி.

கே.வி.கே. சாமியைச் சந்திக்கும் போதெல்லாம் அண்ணா அவர்கள், “எங்கும் தனியாகப் போகாதே, எப்போதும் பத்து நண்பர்களுடன் இரு” என்று சொல்வார்கள். ஆனால் அண்ணா

பயந்தவாறே, தூத்துக்குடியில் கழக அலுவலகத்தில் கழகத் தோழர்களிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, வீட்டிற்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த தம்பி சாமியை, எதிரிகள் சூழ்ந்து கொண்டார்கள். இருட்டில் எப்படிச் செல்வதென்று திகைத்த நிலையில் இருந்தவரை, பாவிகள் கத்திகளாலும், கட்டாரிகளாலும் கொன்று குவித்தனர். மறைந்த அந்த மாவீரனின் உழைப்பும், அவர் ஆற்றிய தொண்டும், அவர் கொண்ட கொள்கை உறுதியும் அவருக்குப் பின் அந்த தூத்துக்குடி நகரிலே பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களை உருவாக்கிட துணை புரிந்தது.

தந்தை பெரியார் அவர்களால், "திராவிடத் தளபதி" என்று பெருமிதம் பொங்கிட அழைக்கப்பட்ட கே.வி.கே. சாமி, 20-9-1956 அன்று கொலையுண்ட நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து நீண்டதோர் கவிதையினை நான் எழுதி ஆறுதல் பெற்றேன். "தென் பாண்டிக் கடல் முத்தே! தீர்ந்ததோ உந்தன் வாழ்வு" என்று முரசொலியில் கடிதத்திற்கு தலைப்பிட்டு இரங்கல் கட்டுரை தீட்டியிருந்தேன். அத்தகைய மாவீரர்கள் உலவிய பூமியிலே தான் இளைஞர் அணியின் மாநில மாநாடு நடைபெறவுள்ளது.

18-2-1965! இது ஒரு நாள் என்பதுதான் அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த நாளில் தான், கட்டாய இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த குற்றத்திற்காக சென்னையிலே கைது செய்யப்பட்டு, நெஞ்சுவலியோடு லாரியிலே ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டு, நெல்லைச் சீமையிலே உள்ள பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலே தனிமைச் சிறைக் கைதியாக அடைக்கப்பட்டேன்.

1965, பிப்ரவரி திங்களிலே பாளைச் சிறைக்குள் நுழைந்த நான், ஏப்ரல் திங்கள் முதல் வாரத்தில் தான் விடுதலை செய்யப்பட்டேன். அந்தப் பாளைச் சிறைச்சாலை உள்ள சீமையிலேதான் தற்போது, தி.மு.கழகத்தின் மாநில இளைஞர் அணி சார்பாக மாநாடு நடைபெறவுள்ளது. அந்தப் பாளைச் சிறையிலே நான் அடைபட்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள், நேரில் சிறைச்சாலைக்கு வந்து என்னைப் பார்த்து, அதுபற்றி அங்கே நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும், பின்னர், காஞ்சி இதழிலும் உருக்கமாக எழுதியிருந்தார்கள். "தன்னை வெல்வான், தரணியை வெல்வான்" என்று சிறைச்சாலையிலே

உள்ள வாசகத்திற்கான விரிவுரை, தெளிவுரை அண்ணாவின் வாக்கிலிருந்து உருவானது என்பது அந்த நெல்லைச் சீமையிலேதான்!

அந்தச் சிறைச்சாலைக்கு என்று சில வரலாற்றுப் பெருமைகள் உண்டு. அந்தப் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலேதான் வெள்ளையருக்கு எதிராக வீரமுழக்கம் எழுப்பிய கட்டபொம்மனின் உடன் பிறப்பு ஊமைத்துரையும், தளபதி சுந்தரலிங்கமும், அவரது தோழர்களும் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

தங்கத் தரணி என்று பெயர் பெற்ற வங்க மண்ணிலே விடுதலை இயக்கம் வேர்விட்டு வளர்ந்திட உழைத்த மாவீரர்களில் முதன்மை வீரராகத் திகழ்ந்த தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், ஒரு காலத்தில் அடைக்கப்பட்டிருந்ததும் இந்தப் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலேதான்!

1953ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கல்லக்குடியில் நடைபெற்ற ரயில் நிறுத்தப் போராட்டத்தில் நான் கலந்து கொண்டபோது, நெல்லைச் சீமையிலும் ரெயில் நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு முதல் நாளே கே.வி.கே. சாமி, செல்லசாமி, ரத்தினம் ஆகியோர் காவலில் வைக்கப்பட்டுவிட்டனர். எனினும், எம்.எஸ். சிவசாமி மற்றும் 26 பேர் ரெயில் மறியல் செய்து கைதாகினர். அதனைக் கண்டித்து அங்கே மக்கள் போராட்டம் நடத்தியபோது, 17 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, அதிலே நான்கு பேர் களத்திலேயே மாண்டனர். இருபது பேருக்கு மேல் படுகாயமடைந்தனர். 68 பேர் மீது சதி வழக்கு தொடரப்பட்டது. குருதி சிந்திய அந்தக் கொள்கை வீரர்களின் பூமியிலேதான் வருகின்ற டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில், இளைஞர் அணியின் மாநில மாநாடு நடைபெறவுள்ளது.

செக்கிழுத்தச் செம்மல் வ.உ.சிதம்பரனார், ஒருமுறை சிறைபட்டுக் கிடந்ததும் இந்தப் பாளையங்கோட்டைச் சிறையிலேதான்!

அண்மையில் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டதே, பசும்பொன் தேவர் திருமகன். அவரும் ஒருகாலத்தில் அடைபட்டு இருந்ததும் இந்தப் பாளைச் சிறைச்சாலையிலேதான்!

இவற்றையன்னியில், நமது பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள, "தமிழ்க் கடல் அலை ஓசை" என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதைப் போல, கடந்த 19ஆம் நூற்றாண்டில் நமது நாட்டிற்கு கிறித்தவ சமயத் தொண்டாற்ற வந்த கால்டுவெல் என்ற பாதிரியார், தமிழகத்தின் தெற்குப் பகுதியில் தங்கி - தமிழைக் கற்றுத் தேர்ந்து, மொழி நூல் ஆராய்ச்சி முறைப்படி, தமிழின் இயல்பினையும், சிறப்பினையும் கண்டறிந்ததோடு, தன்னுடைய 24வது வயதில் அதாவது 1838இல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடையன்குடி என்ற ஊரில் தங்கி சமயப் பணியில் ஈடுபட்டு - விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்த குழுவினருள் ஒருவராகவும் இருந்தார். தமிழின் தனிச் சிறப்புகளை உள்ளங் கொண்டு, அதனை மேலும் ஆராய்ந்து காண்பதற்கு இன்றியமையாத் தென்னாட்டு மொழிகளான - தெலுங்கு, கன்னடம், மலையாளம் - ஆகியவற்றையும் பயின்று, அவைகளிடையே நிலவும் அடிப்படையான ஒற்றுமைகளையும், வடமொழியிலிருந்து அவை அடிப்படையில் வேறுபட்டு நிலவுவதையும் கண்டறிந்து, அவற்றுக்கான சான்றுகளை பல ஆண்டுகள் பாடுபட்டுத் திரட்டி, ஒப்புநோக்கி ஆய்வு செய்து, பல அரிய முடிவுகளைக் கண்டு, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற இணையற்ற நூலை இயற்றியதும் இந்த நெல்லைச் சீமையிலேதான். தென்னாட்டு மொழிகள் ஒரே மொழி குடும்பத்தைச் சேர்ந்தவை, அவை திராவிட மொழிகள் எனும் பெயர் உடையவை - என்பது கால்டுவெல் அவர்களால் நிலை நாட்டப்பட்டதும், சம்ஸ்கிருதத்திலிருந்து திராவிட மொழிகள் பிரிந்தன என்று கூறுவது முற்றிலும் முரண்பட்டதாகும் என்று திட்டவட்டமாகக் கூறியதும் கால்டுவெல்தான். அவர் வாழ்க்கையில் பெரும் பகுதியை மொழி ஆய்வுக்காக ஈடுபடுத்திக் கொண்டது நெல்லைச் சீமையில் இடையன்குடி வட்டாரத்தில்தான். தமிழை உயிராகப் போற்றி, பல மொழிகளோடும் ஒப்பிட்டு அதன் உயர்வை எடுத்துச் சொல்லிய அந்தத் தகைசால் பெரியவர், தமிழகத்திலே 1891ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவர் உலவி மகிழ்ந்து தமிழ் வளர்த்த தரணியாம் நெல்லைச் சீமையிலே இளைஞர் அணி மாநாடு நடைபெறுகிறது. 24ஆம் வயதிலேயே அவர் கொண்டிருந்த தமிழ் மொழி ஆர்வம் - அவர் நடத்திய மொழி ஆய்வுகள் - எந்த அளவிற்கு இளைஞர்களுக்குத் தேவையான அறிவாற்றல், ஆராய்ச்சி வளர்ச்சிக்கு பயன்பட்டிருக்கிறது

என்பதையும், இளைஞராக இருந்தபோதே கால்டுவெல் பயன்படுத்தினார் என்பதையும் விளக்குகின்ற வகையிலேதான், மாநில இளைஞர் அணி மாநாடு நெல்லையிலே நடக்கவிருக்கிறது என்பது, தமிழ் இளைஞர்களைப் பெருமிதம் கொள்ளச் செய்கின்ற ஒரு நிகழ்வாகும்.

அவரைப் போற்றிக் குறிப்பிடும் தமிழ் அறிஞர் ஆர்.பி. சேதுப் பிள்ளை அவர்கள், "நெல்லை நாடு கால்டுவெல்லை தன் மகனாக ஏற்றுக் கொண்டது" என்று குறிப்பிடுகிறார். அத்தகைய தமிழ் மகன் உலவிய பூமி - நெல்லை பூமி. அங்கே தமிழ் இளைஞர்களின் சங்கமம், இது எவ்வளவு பெருமைக்குரியதும், எழுச்சியூட்டக் கூடியதுமான செய்தி.

பாளையங்கோட்டையில் - தந்தை பெரியார் திடலில் - பேரறிஞர் அண்ணா நகரில் - இளைஞர் அணியிலே பொறுப்பேற்றிருந்த புலிப்போத்துகளாகக் கழகப் பணியாற்றிய மறக்க முடியாத மாவீரர்களாம் என் அன்புத் தம்பிகளின் பெயரில் அமைந்துள்ள அன்பில் பொய்யாமொழி பந்தலில் - கே.கே. கோட்டையப்பன் அரங்கத்தில் -

வே. ரூசோ முன் முகப்பில் - கு. பாலசுப்பிர மணியம் உள் முகப்பில் - இரா. அண்ணாதுரை செல்வன் மேடையில் - து.சொக்கலிங்கம் நுழைவு வாயிலில் - கோட்டை ரபீக் கொடி மேடையில் மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாட்டுத் தலைவர், இளைஞர் அணியின் செயலாளரும், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளருமான தம்பி மு.க.ஸ்டாலின், மாநாட்டிற்கான தேதியை உறுதி செய்துகொண்ட நாளிலிருந்து இன்னும் உறங்கவில்லையாம்! அநேகமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, மாநாட்டிற்கான அழைப்பிதழை அவரே நேரடியாக வழங்கி இளைஞர்கள் மத்தியில் எழுச்சியூட்டி வருகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் கலந்து கொண்ட பிறகு, அதுவரை கலந்து கொண்ட மாவட்டத்தை இந்த மாவட்டம் மிஞ்சி விட்டது என்று சொல்லிய வண்ணம் உள்ளார்.

முதல் நாள் மாநாடு பேரணியோடு தொடங்குகிறது. பேரணியைத் தொடங்கி வைப்பவரும், தொடர்ந்து முன்னிலையேற்று வருபவரும் மத்திய அமைச்சர் தம்பி ராஜா.

அன்று மாலையில், அண்மையில் வன்முறைகொடுமைக்கு ஆளான பூண்டி கலைச் செல்வன் பெயரால் அமைந்துள்ள அரங்கில் - தமிழர் தலைவர் அன்பு இளவல் கி. வீரமணி அவர்கள் தலைமையில், நம்முடைய கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் முன்னிலையில் - பேராயர் திரு. வின்சென்ட் சின்னதுரை அவர்கள் வழங்கும் "காவியக் கலைஞர் 84" ஒலி ஒளிக் காட்சியாக வழங்கப்படுகின்றது.

மாநாட்டின் திறப்பாளர் - கடலூர் கழகச் சிங்கம், மறைந்த ஆருயிர் நண்பர் இளம்வழுதி அவர்களின் அருமை மகன், மாணவர் அணியின் செயலாளர், தம்பி இள. புகழேந்தி, எம்.ஏ., பி.எல்.

கழகக் கொடியை ஏற்றவிருப்பவர், கழகத்தின் தள நாயகர்களில் ஒருவராக விளங்கி மறைந்த தம்பி தங்கபாண்டியனின் அன்புச் செல்வி, தமிழச்சி, எம்.ஏ., எம்.பில்.

மொழிப் போர் தியாகிகளின் படத்தை அன்புத் தம்பி, வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, பி.ஏ., பி.எல்., திறந்து வைத்து, தமிழுக்காக நாம் நடத்திய போராட்டங்களையும், புரிந்த தியாகங் களையும் விளக்கவிருக்கிறார்.

அன்புள்ள,

மு.க.

24-11-2007

1924 - 2018


நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

**கௌரா ஏஜென்ஸீஸ்**
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022